கலைஞரின் கடிதங்கள்

18

20.06.1988 - முதல்
23.07.1990 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 18

20.06.1988 - 23.07.1990

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

தலைவர் கலைஞர்

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549 / 97907 06548

நூல் கிடைக்குமிடம் : AVAILABLE @ :

கௌரா புத்தக மையம்
9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM
9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
எண்.1 சாமி தெரு,
(சாய் பாபா கோவில் பின்புறம்)
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES
NO : 1 SAMY STREET,
(SAI BABA TEMPLE BACK SIDE)
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ. **300.00** CODE : **2300**

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
(கலைஞரின் செயலாளர்கள்)
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

H2225
R894.8116
கலைஞ.18

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் ஆய்வக நூல் நிலையம்
சென்னை - 18
அண்ணா அறிவாலயம்

அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

"கலைஞரின் கடிதங்கள்" அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய - பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை - சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் "அணி"யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, “என்னுரை” என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள “கலைஞரின் கடிதங்கள்” ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த “என்னுரை”யில், “நண்பா” என விளித்துத் தொடங்கியும், “உடன்பிறப்பே” என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் “மறவன்” என முடித்தும் “அன்புள்ள மு.க.'' என முடித்தும், “மறவன் மடல்” வார இதழிலும், “நம் நாடு” வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை “முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே “கலைஞர் கடிதம்“ என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் “கலைஞரின் கடிதங்கள்” தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த “என்னுரை”யில்: “என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!”

“குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன”. அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!”

"எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, "அன்பு நண்பா !" என விளித்து, "ஜாக்குலின்கள்" என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”

“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

“நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!”

“எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?”

“கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!”

“ அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”

“இடர் எது வரினும், ஏற்பேன்“

“பறித்து வராத பாரிஜாதம்“

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)

14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
1570. தடைக்கற்கள் உண்டெனினும்; தடந்தோள் உண்டு!	20-06-1988	23
1571. மீண்டும் தமிழக எழுச்சியை உணர்த்திட எழுக!	27-07-1988	28
1572. அந்தோ பரிதாபம்; நமது ஆழ்ந்த அனுதாபங்கள்!	01-08-1988	35
1573. எக்ஸ்பிரசுக்கு ஏனோ இந்த அவசரம்?	02-08-1988	39
1574. இந்திய ஜனநாயகம் (?) அடியோடு வாழ்க!	03-08-1988	43
1575. நோய்க்கேற்ற சிகிச்சைதான் இது!	04-08-1988	47
1576. அண்ணாவின் உண்மைத் தம்பிகளே! அறைகூவல் ஏற்போம்!	06-08-1988	51
1577. டெல்லிப் பயணம் - மகிழ்ச்சிக்குரியதே!	09-08-1988	57
1578. வழிபார்த்துக் காத்திருக்கும் விழிகள்!	26-08-1988	64
1579. வந்திடுக சென்னை நோக்கி! வரவேற்பேன் இரு கரம் கூப்பி!	03-09-1988	69
1580. அன்புச் சுடரே! வருக! அருவித் தமிழே! வருக!	10-09-1988	74
1581. சாத்தான் ஓதினால் என்ன? காத்தான் ஓதினால் என்ன?	12-09-1988	80

1582. அய்யா அண்ணா வழங்கும் அன்புக் கட்டளை!	15-09-1988	85
1583. இது ஒரு தொடக்கம் (1)	21-09-1988	89
1584. இது ஒரு தொடக்கம் (2)	22-09-1988	94
1585. இது ஒரு தொடக்கம் (3)	23-09-1988	101
1586. இது ஒரு தொடக்கம் (4)	24-09-1988	109
1587. இது ஒரு தொடக்கம் (5)	25-09-1988	114
1588. இது ஒரு தொடக்கம் (6)	26-09-1988	119
1589. ஜான்சன் - ஜாக்கிரதை!	02-10-1988	127
1590. வெறி எது? விடையளிக்கட்டும் தமிழகம்!	04-10-1988	132
1591. திலீபன்களை உருவாக்கப் போகிறீர்களா?	05-10-1988	135
1592. கள்வர் கையில் கதிர்மணி சிக்காமல் காத்திட...	13-10-1988	142
1593. ஏழைக் குடிசைகளில் எத்தனை இருதயங்கள்!	15-10-1988	148
1594. நாடகமே உலகம்!	27-10-1988	151
1595. ஒரு பூனை, புலியான கதை!	03-11-1988	154
1596. தொடங்கிடுக தொய்வில்லாப் பணி!	05-11-1988	159
1597. சிந்திக்கிறாயா? நிந்திக்கிறாயா?	11-11-1988	163
1598. வாணியம்பாடிக்கும் வேலூருக்கும் இடையில்!	12-11-1988	168

1599. தேசபக்தியோ; தேசபக்தி!	13-11-1988	172
1600. அலெக்சாண்டரும் - சோலங்கியும்!	24-11-1988	177
1601. நேருவிழாவும் - நெஞ்சுக்கோர் ஆறுதலும்!	30-11-1988	181
1602. வீராங்கனை கையில் ஒரு வெற்றிப் பூங்கொத்து!	02-12-1988	188
1603. நிலையும் - நினைப்பும்!	09-12-1988	191
1604. சிறுதுளி! ஆனால்... கண்ணீர்த்துளி!	12-12-1988	196
1605. அன்புத் திருமுகம் காண வருகிறேன்!	23-12-1988	199
1606. தங்கங்களா? சருகுகளா?	27-12-1988	204
1607. உன் பார்வையே எனக்கு வாழ்த்து!	26-01-1989	209
1608. ஆக்கப் பணி! அதுவே எனக்கு ஊக்கப் பணி!	03-04-1989	212
1609. இதனை நீ புரிய வைத்தால் போதும்!	07-04-1989	215
1610. காஞ்சி விழாவில் கலந்து கொள்ளும்போது!	31-05-1989	218
1611. தென்பாண்டி மண்ணில் உன்னை சந்திக்க வருகிறேன்!	04-07-1989	223
1612. போற்றுவோரை வணங்கி - தூற்றுவோரை வாழ்த்தி!	08-07-1989	227
1613. நமது பொதுக்குழுவின் தீர்மானம்!	12-07-1989	231
1614. உறுப்புக்களை இயக்கும் உயிர்மூச்சு!	23-07-1989	235

1615. இரண்டு படத்தில் எந்தப் படம் பிடிக்கிறது?	09-08-1989	241
1616. சீரிய நோக்கம் வெற்றி பெற சிறப்புடன் அமையட்டும் முப்பெரும் விழா!	11-09-1989	244
1617. கோவையில் கூடுது கொள்கைப் பட்டாளம்!	17-09-1989	248
1618. அக்டோபர் ஏழு! அணிவகுப்போம் எழு!	02-10-1989	252
1619. நாளையும் எழுதுகிறேன்; நடக்கட்டும் உனது பணி!	04-10-1989	254
1620. மாநில முழுதும் மனிதநேயச் சங்கிலி!	05-10-1989	258
1621. எங்கணும் ஒலிக்கட்டும் உன் சங்கநாதம்!	14-10-1989	263
1622. எழுச்சி நாளுக்கிடையே ஒரு மகிழ்ச்சி நாள்!	16-10-1989	268
1623. கங்காருவைப் பழிக்கும் பங்காரு!	24-10-1989	271
1624. விட்டலாச்சார்யா வெளியிடும் படம்!	27-10-1989	276
1625. வெற்றி குவித்திட வேங்கையே எழுக!	31-10-1989	280
1626. ஒருக்கணமும் உறங்காது உன் பணி தொடர்க!	01-11-1989	282
1627. வருகிறேன்; சந்திக்கிறேன்!	07-11-1989	285
1628. திருச்சியில் தொடங்கிடும் திருப்பு முனை!	31-12-1989	288

1629. மார்க்சிஸ்டுக்கு மறுப்பல்ல - விளக்கம்!	02-01-1990	292
1630. எது வேண்டும்? கிரீடமா? தலையா?	03-01-1990	301
1631. வெள்ளையும் கறுப்பும் - நிலையும் நினைப்பும்!	04-01-1990	307
1632. மக்கள் சக்தியை மையமாகக் கொள்வோம்!	06-01-1990	312
1633. அரசியல் தேருக்கான அச்சாணிகள் அமைத்திட....!	08-01-1990	315
1634. ஈழத்தமிழர் பிரச்சினை - நமது அணுகு முறை!	12-01-1990	319
1635. கொள்கை மலைக்கோட்டை காண வருக!	17-01-1990	325
1636. இந்த இனத்துக்காக! இந்த நாட்டுக்காக!	06-02-1990	329
1637. அந்த நாம்தான் திருச்சியில் கூடுகிறோம்!	08-02-1990	331
1638. சமுதாய மறுமலர்ச்சி காண...!	10-02-1990	334
1639. வாழ்க! இந்த விபீஷணர்கள்!	18-02-1990	339
1640. வெற்றிக்கனி வழங்கிட உழைப்பீர்!	19-02-1990	344
1641. அவர்களை அடையாளம் காட்டுவோம்!	23-02-1990	346
1642. கழகத்தின் எஃகுத் தூண் செ. கந்தப்பன்!	12-05-1990	351
1643. யார் இவர்கள்? யார் இவர்கள்?	16-05-1990	354

1644. கழகம் காக்கும் காவல் தெய்வமே!	03-06-1990	357
1645. காஞ்சி விஜயமும் - கடுமொழியும்! - 1	09-06-1990	359
1646. காஞ்சி விஜயமும் - கடுமொழியும்! - 2	10-06-1990	363
1647. தங்க மாலையும் - தங்காத மாலையும்!	12-06-1990	368
1648. அண்ணா வழியில் அமைந்த பயணத்தில்!	17-06-1990	374
1649. ஆயுதக் கலாச்சாரத்தின் ஆதி பகவர் யார்?	22-06-1990	380
1650. வாய் நீளம் காட்டுவதா வல்லரசு?!!!	28-06-1990	386
1651. கண்ணீரைக் கவசமாக்கும் நாள்!	15-07-1990	389
1652. அனைத்துக் கட்சிகளும் ஓரணியில்!	19-07-1990	393
1653. ஒழித்திட நினைப்போர் உணர்வதற்கு!	23-07-1990	396

1573. தடைக்கற்கள் உண்டெனினும்; தடந்தோள் உண்டு!

உடன்பிறப்பே,

ஒன்றை என்னால் நன்கு உணர முடிகிறது - தமிழகத்தில் தேர்தல் நடைபெற்றால் தி.மு.கழகமே ஆட்சி அமைக்கும் என்ற நம்பிக்கை நமது மாற்று முகாமிலே உறுதியாகத் தோன்றியுள்ளது. அதனால்தான் அவர்கள் வசைபாடிகளாகவும், உபதேசிகளாகவும், புனிதர்களாகவும் பல்வேறு வேடங்களில் நம்மீது எரிச்சலைக் கக்கிய வண்ணமிருக்கின்றனர். நமது உடன்பிறப்புகள் பலரோ வெற்றி நமது அணிக்குத்தான் என்று விழுக்காடு கணக்கு போட்டுப் பார்த்துக்கொண்டு மதமதப்புக்கு ஆளாகியுள்ளனர். அல்லது மெத்தனமாக இருக்கின்றனர். ஒருசில இடங்களில் கட்டுக்கோப்பு குறித்துகூட கவலைப்படாது உள்ளனர். ஒருசிலர் பொதுவான நோக்கு விடுத்து தம்மைச் சுற்றி மட்டும் தீவிர கவனம் செலுத்துகின்றனர். தனக்கு மட்டும் தேவையான குடைக்கு ஒரு கம்பு போதும் - ஆனால் பலரும் பந்தல் அமைத்திட பல கம்புகள் வேண்டும் என்பதை மறந்துவிட்டால்; யாராயினும் அவர்கள் பொதுவாழ்வுக்குத் தகுதியுடையவர்களாக மாட்டார்கள்.

நான் இந்தக் கடிதம் எழுதும்போது அல்லது இது உன் கைக்குக் கிடைக்கும்போது தேர்தல் அறிவிப்பு வரலாம் - அல்லது தேர்தல் சில மாதங்களுக்குத் தள்ளியும் போடப்படலாம்!

நமது கழகப் பணியோ ஏதோ ஒரு வகையில் அண்ணா வழியில் அயராது நாள்தோறும் நடைபெற்றுக் கொண்டிருக்க வேண்டும். ஜனநாயகம் காத்திடும் போராட்டத்தில் ஆட்சியையே விலையாகக் கொடுத்து - சகிக்க முடியாத அவதூறுகள், சல்லடைக் கண்களாகத் துளைத்த அடக்குமுறைகள், மிசாக் கொடுமைகள், சோதனைகள், வேதனைகள், பத்தாண்டுக் காலமாகத் தொடர்ந்து பழிவாங்கும் படலங்கள் அனைத்தையும்

சந்தித்த கழகம்; வலிவு பெற்றுவிட்டது என்பதற்கடையாளமாக 1986 உள்ளாட்சி மன்றத் தேர்தலிலே பெருவெற்றியினைப் பெற்று - இன்று மேலும் வலிவும் பொலிவும் பெற்றுத் திகழ்கிறது என்கிறபோது இந்த மகத்தான சக்திக்குச் சிறிதளவு சேதாரமும் ஏற்படாமல் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டியது உண்மையிலேயே கழக உடன்பிறப்புகளாயிருப்போருக்குக் கடமையன்றோ?

நான் அடிக்கடி சுட்டிக்காட்டுவது போல கழகத்தால் தனக்கு என்ன ஆதாயம் எனக் கணக்கிடுவோர் கழகத்திற்கு நோய் போன்றோர் - தன்னால் கழகத்திற்கு என்ன ஆதாயம் என உழைப்போர்தான் கழகத்தின் இரத்தநாளமாவார்!

இதனையுணர்ந்து ஒவ்வொரு உடன்பிறப்பும் பணியாற்றினால் எத்தனை புதிய உபதேசிகள் புறப்பட்டாலும் - எத்தனை பேர் அறிவு ஜீவிகள் எனக் கூறிக்கொண்டு நம்மை ஏகடியம் செய்தாலும் - எத்தனை வசைபாடிகள் தமது வயிற்றெரிச்சலை வைத்து அறம் பாடினாலும் - நமது கழகத்தை எந்த விதத்திலும் அசைத்துவிட முடியாது.

கழகத்தின் காலை மிதித்தால்; மிதித்தவனின் தலையை மிதிக்கக் கூடிய ஆற்றல் கழகத்திற்கு உண்டெனினும் - நாம் கடைப்பிடிக்கும் கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு ஆகியவற்றால்; தன் தலையில் தானே கை வைத்து எரிந்துபோனதாகக் கூறப்படும் கதையைப் போலவே அந்த எரிச்சல்வாதிகளின் கதை ஆகிவிடும் என்பதே எனது கணிப்பு!

மொழி பற்றிய ஒரு கருத்தரங்கம் - சென்னையில் நடைபெற்றது. மாலையில் நான் கலந்துகொண்டு காலத்துக்கேற்ப அறிவியல் தமிழ் வளர்க்கப்பட வேண்டுமெனப் பேசினேன். பல ஆண்டுகளாக இந்தக் கருத்தைக் கூறுகிறேன். கழகத்தின் கருத்தும் இதுதான்! அறிஞர் அண்ணா அவர்கள் பலமுறை இதனை வலியுறுத்தியுள்ளார்கள். சென்னை கருத்தரங்கில் காலை நிகழ்ச்சியில் கலந்துகொண்ட திருவாளர் சி. சுப்பிரமணியம் அவர்கள் சங்க இலக்கியத்துக்குப் பதவுரைகள் எழுதுவதாலோ திரைப்படங்களுக்கு வசனங்கள் எழுதுவதாலோ தமிழுக்குச் சேவை செய்துவிட முடியாது என்று என்னை மறைமுகமாகத்

தாக்கிப் பேசியதாக தினசரி என்ற ஏடு கொட்டை எழுத்துச் செய்தி வெளியிட்டுக்களிக்கிறது. அன்று மாலையில் மொழிக்கருத்தரங்கில் அறிவியல் தமிழ் வளர்ச்சி குறித்து நான் என்ன பேசினேன் என்பது முரசொலியில் முழுமையாக வெளிவந்துள்ளது.

சிலருக்கு எந்த நிகழ்ச்சிக்குச் சென்றாலும் என்னை ஒரு பிடிபிடிக்க வேண்டும் எனத் தோன்றுகிறது! அப்படியொரு தினவு! பரவாயில்லை; வாழ்க அவர்கள்!

மொழித்துறை - கலைத்துறை - இலக்கியத்துறை; இவற்றிலேயே இப்படியொரு காழ்ப்பு இவர்களுக்கென்றால் அரசியல் துறை பற்றிக் கேட்கவா வேண்டும்!

சென்னையில் சுப்பிரமணியனார் தலைமையில் சில தூய்மையாளர்கள் (?) மயிலாடுதுறைப் பகுதியைச் சேர்ந்த ஒரு மாமேதை (?) தலைமையில் சில மகானுபாவர்கள் - ஒன்றிரண்டு வார ஏடுகள், நாளேடுகளில் எழுதப் புறப்பட்டுள்ள புடம்போட்ட தங்கக்கட்டிகள் (?) - இவர்கள் எல்லாம் இருபதாண்டுக் கால ஊழலை ஒழிக்கப் புறப்பட்டிருக்கிறார்களாம்!

1. திருச்செந்தூர் நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்த்து நின்ற வேட்பாளர்களை லட்சக்கணக்கில் ரூபாய் கொடுத்து விலைக்கு வாங்கி டி.டி. கிருஷ்ணமாச்சாரியார்; காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டது எப்போது? இருபதாண்டுக் காலத்திலா? அல்லது அதற்கு முன்பா?

2. காமராஜர் ஒரு சர்வாதிகாரி - ஊழல் பேர்வழி - காங்கிரஸ் டிரஸ்டின் கணக்கு வழக்குகள் ஒழுங்காக இல்லை என்று கூறி தனது ராஜினாமாவிற்கு விளக்கம் அளித்து அறிக்கை வெளியிட்டாரே; இதே சி. சுப்பிரமணியம் - அது எப்போது? இந்த இருபதாண்டுக் காலத்திலா? அல்லது கண்யமிக்க (?) காங்கிரஸ் அரசாண்ட போதா?

3. பாராளுமன்றத்தில் சி. சுப்பிரமணியத்தின் மீது அமீர்சந்த் பியாரிலால் விவகார ஊழல் சந்தி சிரித்ததே - அது எப்போது? இந்த இருபதாண்டிலா? அல்லது அதற்கு முன்பா? சென்னையிலா? டெல்லியிலா?

4. கிருஷ்ணகிரி இடைத்தேர்தலின் போது சி. சுப்பிரமணியம் எத்தனை சுயேச்சை வேட்பாளர்களை விலை கொடுத்து வாங்கி - தனது வெற்றியை சுலபமாக்கிக் கொண்டார் என்பது அப்போது அவரை ஆதரித்துப் பிரச்சாரம் செய்யப்போன எனக்கும் நண்பர் ராஜாராமுக்கும் அல்லவா தெரியும்!

5. அந்தத் தேர்தல் முடிந்து சென்னை சிண்டிகேட் வங்கியில் பல லட்ச ரூபாய் பணத்தைக் கொண்டு வந்து போட்ட விபரமெல்லாம் வங்கிப் பேரேட்டிலிருந்து பிரதியெடுத்து ஏடுகளில் பிரசுரிக்கப்பட்டது மறந்து போய் விட்டதா சுப்பிரமணியனாருக்கு?

6. அமைச்சர் பதவியை துர்விநியோகம் செய்து உயர்நீதிமன்ற நீதிபதிப் பதவியை வேண்டியவர் ஒருவருக்கு முறைகேடாக வழங்கிட எத்தகைய உறவுகளை சுப்பிரமணியனார் பயன்படுத்தினார் என்பது நாடறிந்த கதைதானே! இது இந்த இருபது ஆண்டிலா? அல்லது இதற்கு முன்பா?

7. 1977 வரையில் இந்திரா அமைச்சரவையில் அங்கம் வகித்தார் - இந்திரா கவிழ்ந்தவுடன் 1977ல் ஷா கமிஷன் முன் தோன்றி எல்லாத் தவறுகளும் இந்திரா காந்திதான் செய்தார் என்று சாட்சியம் கூறி, தனது அமைச்சரவைக் கூட்டுப்பொறுப்பைத் தட்டிக் கழித்தவர் இந்த சுப்பிரமணியமா? அல்லது அவர் வேறு சுப்பிரமணியமா?

இப்படிப்பட்ட புனிதர் - புதிய புனித யாத்திரை புறப்பட்டிருக்கிறார்!

இன்னொருவர் அமெரிக்காவில் இந்தியப் பயணத்துக்கு கார்டியனாக இருக்கும் பழனியின் சாமி ஒருவருக்குப் பக்கத்துணையாகவும் இருந்து - மோசடியில் பங்குதாரராகவும் விளங்கியவர் - கடந்த பத்தாண்டுக் காலமாக ஊழல் கதகதப்பில் உடல் வளர்த்தவர்; அவருக்கு திடீரென ஞானம் உதய(?)மாகி விட்டது - உபதேசிக்கக் கிளம்பி விட்டார்! நாட்டில் நிலையான ஆட்சியே வரக்கூடாதாம்! வீட்டில் நாலு ஓட்டு இருந்தால் அதை ஆளுக்கொரு ஓட்டாக நாலு பேருக்கும் போடு என்கிறார் - அடடா; அறிவோ அறிவு!

உடன்பிறப்பே; ஒன்று தெளிவாகப் புரிகிறது - இத்தகையோர் கழுகுப் பார்வை முழுவதும் கழகத்தின் மீது தான்!

தங்கள் சமூகங்களுக்கென கோரிக்கை எழுப்புகிறார்கள் - நாமும் அந்தக் கோரிக்கைக்கு இணக்கமாகவும், அனுதாபமாகவும், ஆதரவாகவும், அது குறித்துப் பரிசீலித்து நல்ல தீர்வு காண வேண்டுமெனவும் எண்ணங் கொண்டு செயல்படுகிறோம். ஆனால் அவர்களில் சிலரோ - தங்களின் கோரிக்கையில் அக்கறை காட்டுவதற்குப் பதிலாக, தேவையில்லாமல் நம் மீதல்லவா தனிப்பட்ட வெறுப்பு காட்டுகின்றனர்! அப்படியல்லவா அவர்கள் தூண்டி விடப்படுகின்றனர்!

தமிழகத் தேர்தல் நடப்பதற்குள்ளாக இப்படிப்பல சேட்டைகள், உபதேசிகள் வடிவத்தில் - புனிதர்கள் உருவத்தில் - அவ்வளவு ஏன்; அதிகாரிகளே மாறுவேடத்தில் அல்லது மன மயக்கும் விதத்தில் கழகம் குறித்த கசப்புகளை, அல்லது கழகத்திற்குள் கசப்புகளை உருவாக்கிட நடைபெறும்!

நமது வெற்றிப்பாதையில் எவை எவை தடைக்கற்கள் என்பதை உனது இயல்பான பகுத்தறிவால் எண்ணிப் பார்த்து தடைக்கற்கள் உண்டெனினும் தடந்தோள் உண்டெனச் சிரித்து வென்றிடத் தயாராகுக எனக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புடன்

மு.க.

20-06-1988

1574. மீண்டும் தமிழக எழுச்சியை உணர்த்திட எழுக!

உடன்பிறப்பே,

ஜூலை 29ந் தேதியிட்டு வெளிவரும் முத்தாரம் இதழில் கவிஞர்கோ அப்துல் ரகுமான் மும்மாரி என்ற தலைப்பில் சுட்டுவிரல் சொல்லோவியம் தீட்டியுள்ளார். அந்த வரிகள் முழுவதையும் அல்ல; முகப்பில் மட்டும் சில வரிகளை உனக்குக் குறிப்பிட்டுக் காட்டுகிறேன்.

நமக்கென்ன குறைவு
மாதம் மும்மாரி பெய்கிறது
கண்ணீர் மழை
வேர்வை மழை
ரத்த மழை

இந்தியத் திருநாட்டில் அதிலும் குறிப்பாக நமது தாய்த் தமிழகத்தில் கண்ணீர் மழையும், ரத்த மழையும் சற்று, விட்டு விட்டுப் பெய்தாலும்கூட வேர்வை மழைக்குக் குறைவேயிருந்ததில்லை.

ஆனால் அண்மைக் காலமாக ஒருநாள்கூட தவறாமல் இந்த மும்மாரி பஞ்சாப் மாநிலத்தில் பொழிந்துகொண்டிருக்கிறது. வெறும் உருட்டல் மிரட்டல்கள் தவிர பிரச்சினையைத் தீர்த்து முடிவுகாண இயலாத செயலற்ற அரசாக ராஜீவ் அரசு பஞ்சாப் விவகாரத்தில் திக்குமுக்காடுகிறது. காரணம் பிரச்சினையை உருவாக்கியவர்களே காங்கிரஸ்காரர்கள் அல்லவா? பிந்தரன்வாலே என்ற பூதத்தை வளர்த்து விட்ட பெருமைக்கு உரியவர்கள் அல்லவா? எனவே ஒப்பந்தங்களில் கால் வைப்பதும் வழுக்கி விழுவதும் அதில் பல் உடைவதுமான நிகழ்ச்சிகள் தொடர்கின்றன! இன்றைக்கு பஞ்சாப் ஸ்கோர் என்ன? என்று டெல்லியில் உள்ள அதிகார வட்டாரங்களில் மாலை நேரச் செய்தி கேட்பது வாடிக்கையாகிவிட்டது என்கிற அளவுக்கு

நாள்தோறும் அங்கே பத்து கொலைகளுக்குக் குறையாமல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உள்துறை அமைச்சரோ இங்கே தமிழ்நாட்டில் உலா வந்து தி.மு.க.வுக்குப் பூச்சாண்டி சிங்காக மிரட்டுகிறாரேயல்லாமல் பூட்டா சிங்காக பஞ்சாப்பில் கம்பீர நடை போட வக்கற்றுத் திக்கற்று நிற்கிறார். தனது ரத கஜ துரக பதாதிகளைக் கொண்ட படைபல பராக்கிரமத்தைப் பஞ்சாபில் காட்டுவதற்குத் திறனற்றுத் திண்டாடும் ராஜீவ் அரசு, அங்கே அடிபடும் வேகம் அனைத்தையும் ஒன்று சேர்த்து -

தமிழ் ஈழத்தில் அப்பாவித் தமிழ்க் குடும்பங்களின்மீதும் - விடுதலைப் புலிகளின் மீதும் கொட்டித் தீர்த்து வருகிறது!

அப்துல் ரகுமானின் மொழிப்படி கண்ணீர் மழை, வேர்வை மழை, ரத்த மழையென மாத மும்மாரியல்ல, ஒவ்வொரு நாளுமே பொழியக்கூடிய நிலை 1983 ஜூலை முதல் இலங்கையில்!

1983 ஜூலை 25ல்தான் சிங்கள வெறியர்களும் அவர்களுக்குத் துணையாக சிங்கள இராணுவமும் இணைந்து தமிழர்களை ஆயிரக்கணக்கில் இனப் படுகொலைக்கு ஆட்படுத்தியது. அந்நாளில்தான் வெலிக்கடை சிறையில் இருந்த வீரத் தமிழ்த் தலைவர்கள் தங்கதுரை, குட்டிமணி, ஜகன் ஆகியோரையும் தளபதிகள் வீரர்கள் என ஐம்பதுக்குமேற்பட்ட இளந்தமிழர்களையும் கூண்டுக்குள் வைத்தே சிங்கள வெறியர்களும் அதிகாரிகளும் கொன்று குவித்தனர்.

அன்றைக்கு இந்தத் தாய்த் தமிழகத்தில் பொழியத் தொடங்கிய மும்மாரிக்கு இன்னமும் முடிவே ஏற்படவில்லை!

இலங்கைத் தமிழர்கள்மீது நடத்தப்படுவது இனப்படுகொலை என்பதை இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி ஒத்துக் கொள்ளவே நீண்டகாலமாயிற்று!

அதற்கென தமிழகத்தில் இரண்டு கோடி கையெழுத்துக்கள் பெற்று ஐ.நா. மன்றத்துக்கு அனுப்ப வேண்டியிருந்தது! எத்தனை போராட்டங்கள்! எத்தனை முழு அடைப்புகள்! எத்தனை ரயில் நிறுத்தங்கள்! எத்தனை பேர் தீக்குளித்துச் செத்தனர்!

ஐந்து கோடி தமிழர்கள் அன்னைத் தமிழகத்தில் இருக்க - அனைத்து நாடுகளிலும் ஒரு கோடிக்கு மேற்பட்ட தமிழர்கள் வாழ்ந்திருக்க - அருகாமையில் உள்ள நமது

சொந்தச் சோதரர்கள் துடித்தழுது செத்திடவும் - மங்கையர் மானமிழக்கவும் - மழலைகள் மிதித்தொழிக்கப்படவுமான ஒரு கொடுமையை எப்படித்தான் சகித்துக் கொண்டிருக்க முடியும்? எவ்வளவு நாளைக்குத்தான் சகித்துக் கொண்டிருக்க முடியும்? அந்த இனஉணர்வின் வெளிப்பாடு - மனித உணர்வின் வெளிப்பாடு - கட்சி பேதமின்றித் தமிழகத்தில் ஐந்தாண்டுக்காலமாகத் தென்படத்தான் செய்கிறது!

மகனுக்கு நேராக தந்தை கொல்லப்பட்டு - மாதா கற்பழிக்கப்பட்டு - தாரம் பறித்தேகப்பட்டு - தவித்திடும் போது மானம் போற்றும் எந்த மகன் தான் கையில் படைக் கலன் ஏந்தாமலிருக்க முடியும்? மானம் போகும் போதுகூட பொறுமையாக இரு என மகாத்மா காந்தியடிகளே உபதேசித்தது கிடையாதே!

வேறு வழியின்றி - வேறு வழியேயின்றி தமிழீழ இளைஞர்கள் படைக்கலன்கள் ஏந்தினர்! படைகள் நிறுவினர்!

ஒரே ஒரு பெரும்படை மட்டுமே அமைந்திருப்பின் தமிழ் ஈழம் என்றைக்கோ உருவாகியிருக்கும்!

என்ன செய்வது, தமிழர்க்கிடையே அரிதாக இருப்பது ஒற்றுமையெனும் ஒரு குணம்தானே! அதன் விளைவு உட்பகை! ஏன்? யாரால்? எப்படி? விவாதிக்க விரும்பவில்லை - விவாதிக்கும் சமயமுமல்ல! வீடு பற்றியெரிகிறது! வீதியே பற்றியெரிகிறது! முதலில் அணைப்பதற்கு முனைவதே பொறுப்புடையோர் செயல்! எனினும், போராளிகள் தங்களுக்கிடையே வெறுப்புணர்வை இனியாகிலும் விடுத்திடுவது இனத்துக்கு நலம்பயக்கும் என்பதைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

விடுதலைப் புலிகள் அமைப்பிலும் ஏனைய போராளிகளின் அமைப்பிலும் எத்தனையோ இளந்தளகர்த்தர்கள் தம்முயிரைத் தமிழ் ஈழத்துக்காகத் தத்தம் செய்திருக்கிறார்கள். தம்பி பிரபாகரனைக் குறிவைத்துக் கொண்டு இந்திய ராணுவம் தனது வெறித்தனமான வேட்டையைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறது!

இப்போதுகூட செய்தி வருகிறது - அது செந்தீயாக நம்மைச் சுடுகிறது - உலகில் உள்ள மனித உரிமை அமைப்புகளின் நன்மதிப்பைப்பெற்றவரும் குடியுரிமைக் குழுக்கள், அரசு

சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் அன்புக்குரியவரும், எந்த அவப்பெயருக்கும் ஆளாகாமல் அமைதிக்கெனத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவரும், ஈழத் தமிழர்களின் எல்லா நலன்களிலும் நாட்டம் செலுத்தி அதற்கெனத் தொடர்ந்து துணை நின்றவருமான யாழ்ப்பாணம் கந்தசாமியெனும் பெரியவரை யாரோ கடத்திக் கொண்டு போய்விட்டனர்.

அந்தப் பெருமகன் உயிரோடு இருக்கிறாரா? இதுவே கேள்விக்குறி! கண்டுபிடித்திடுக என கண்ணீர் மல்கிட தமிழ் ஈழப் பெரியவர்கள் பலர் வேண்டுகோள் விடுத்த வண்ணமுள்ளனர். களத்தில் நிற்கும் விடுதலைப் புலிகளுக்காகக் குரல் கொடுத்துக் கொண்டும் - இந்திய அமைதிப்படையென்ற பெயரால் அழிக்கப்படும் அப்பாவித் தமிழ் மக்களுக்காக ஆதரவுக் கரம் நீட்டிக்கொண்டிருக்கும் - தாய்த் தமிழகத்தாரின் வழியில் இப்படிச் சிற்சில ஆதங்கங்களும் ஏற்படாமல் இருந்திருந்தால் எவ்வளவோ வலிமை ஒரு கடுகளவு சேதாரமும் இல்லாமல் கட்டிக்காக்கப்பட்டிருந்திருக்கும்.

அதற்காக தமிழ் இனம் நாளும் அழியும் அவலத்தைப் பார்த்துக் கொண்டிருக்க - கேட்டுக் கொண்டிருக்க முடியுமா?

விடுதலைப் போராளிகள் பக்கம் இருப்பது போலக் கடைசி நேரத்தில் காட்டிக் கொண்ட இந்திய அரசு, அந்தத் தந்திரத்தை ஜெயவர்த்தனாவுடன் நட்பு கொள்ள பயன்படுத்திக் கொள்ளும் சாதனமாக ஆக்கிக் கொண்டதேயல்லாமல் - அந்தத் தந்திரத்தால் இம்மியளவும் நன்மையும் ஈழத் தமிழர்க்கு வாய்க்கவே இல்லை என்பதை நெஞ்சில் கைவைத்து ஒத்துக்கொண்டே ஆகவேண்டும்.

கடந்த ஆண்டு ஜூலை 29-ஆம் நாள் இந்தியாவும் இலங்கையும் ஒப்பந்தம் செய்து கொண்டன! யாருக்காக? ஈழத்தமிழர்களுக்காக என்று விளம்பரம்! ஆனால் அந்தத் தமிழர்களின் பிரதிநிதிகள் யாராவது அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்களா? போராளிகளின் இயக்கத்தில் வலிவானதும் - களத்தில் நிற்பதுமான விடுதலைப் புலிகள் இயக்கமாவது அந்த ஒப்பந்தத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டதா? இல்லை!

குறைபாடுடைய ஒப்பந்தம் - எனினும் அதன் ஷரத்துக்களை நிறைவேற்றுவதில் இந்திய அரசு அக்கறை காட்டும் என இந்திய அரசின் மீது நம்பிக்கை வைத்து ஒப்பந்தம் நடைமுறைக்குவர ஒத்துழைப்போம் என விடுதலைப் புலிகளின் தலைவர் தம்பி பிரபாகரன் அறிவித்தார்.

ஆனால் நடந்தது என்ன?

வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்புக்கு பொது வாக்கெடுப்பு வைக்கப்படும் என்பதற்கு மாறாக - ஜெயவர்த்தனே அதனை எதிர்த்தே பேசத் தொடங்கினார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்கள அரசு இயந்திர உதவியுடன் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட சிங்கள குடும்பங்களை குடியமர்த்தத் தொடங்கியது.

சிங்கள ஊர்க்காவல்படை, உள்நாட்டுப் பாதுகாப்பு காவல்துறை பிரிவுகள் கலைக்கப்படவில்லை.

தமிழும் ஆட்சி மொழியாகும் என்பதற்கு அரசியல் சட்டத்தில் உத்திரவாதம் வழங்கவில்லை.

இலங்கையின் முப்படைகளும் 1987 மே 25ந் தேதி நிலைக்குத் தங்கள் முகாம்களிலேயே திரும்பி இருந்திட வேண்டுமென்பதற்கு மாறாக அக்டோபர் 3ந் தேதி 17 விடுதலைப் புலிகளைக் கைது செய்து சித்ரவதை செய்தனர்.

பாகிஸ்தான், சீனா, இங்கிலாந்து, அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகளின் உதவியை ஜெயவர்த்தனே பகிரங்கமாகவே கேட்டார்.

இவையனைத்தும் ஒப்பந்தத்திற்கு முரண்பாடான செயல் என்பது தெரிந்தும் - இந்திய அரசு, சிங்கள அரசை அறிவுறுத்தி ஒழுங்குபடச் செய்வதற்கு பதிலாக - தனது அமைதிப் படையை அப்பாவித் தமிழ் மக்கள் மீதும், விடுதலைப்புலிகள் மீதும் பாயவிட்டது! இன்னமும் பாய விட்டுக் கொண்டிருக்கிறது!

குறையுடைய ஒப்பந்தம்! அது கையெழுத்தாகியே ஓராண்டு முடிகிறது! ஜூலை 29ந் தேதியுடன்!

அதையே நிறைவேற்றி வைக்க இந்திய அரசுக்கு வக்கு இல்லை! வகை இல்லை! தெம்பு இல்லை! திராணி இல்லை!

ஒப்பந்தத்திற்கு முன்பை விட அதிகமான அழிவு - இந்திய ராணுவத்தினர் ஆயிரத்துக்கு மேல் - அப்பாவித் தமிழர்கள் விடுதலைப் புலிகள் என இரண்டாயிரத்துக்கு மேற்பட்டோர் மாண்டிருக்கிறார்கள்! இதற்குப் பெயர்தான் அமைதி ஒப்பந்தம்? இதற்குப் பெயர்தான் அமைதிப்படை? வெட்கக் கேடு! வேதனை!

ஆயுதங்களை ஒப்படையுங்கள் - இந்த ஒரு பல்லவியை பாடியே பழிதீர்த்துக் கொள்ள ராஜீவ் அரசு விரும்புகிறது! அதற்குப் பக்க பலம் சேர்க்க வானொலியில், தொலைக்காட்சியில் பொய்ப் பிரச்சாரங்கள்! அதற்கு ஏதுவாக எப்போதும் போல் சில எட்டப்பர்கள்!

ஆயுதங்களை ஒப்படைக்கிறோம் - பேச்சு வார்த்தைக்குத் தயார் - ஆனால் ஆயுதங்களை ஒப்படைப்பதற்குப் போர்நிறுத்தம் அவசியமில்லையா? அதுதானே நடைமுறைச் சாத்தியம்! போர் நிறுத்தம் செய்யாமலே தூதராக இருவரை அழைத்துச் சென்றதால்தானே ஜானி என்பவர் இந்திய வீரரால் வழியில் கொல்லப்பட்டார்- எனவே முதலில் போர் நிறுத்தம், பின்னர் ஆயுத ஒப்படைப்பு - தொடர்ந்து பேச்சுவார்த்தை என்று ஒப்புக் கொண்ட பிறகும் - இந்த நியாயத்தைத் தமிழகத்தின் சார்பில் இப் பிரச்சினையில் அக்கறையுடைய கட்சிகள் அனைத்தும் எடுத்துச் சொன்ன பிறகும் இந்திய அரசுக்கு தயக்கம் ஏன்?

அழிவது தமிழ் இனம் என்பதால் தானே!

இத்தகைய ஆணவப் போக்கை சுட்டிக்காட்டித் தமிழகத்தின் குரலை ஒருமுகப்படுத்திடத்தான்

ஜூலை 29

கழகப் பேரணிகள்! கழகச் சார்பில் பொதுக் கூட்டங்கள்!

இந்திய இலங்கை ஒப்பந்தமும்

இன்னமும் தீராத ஈழத்தமிழர் பிரச்சினையும் என்ற தலைப்பில் தமிழகம் முழுவதும் நடைபெறட்டும்!

சென்னையில் நான்
ஈரோட்டில் பேராசிரியர்
காஞ்சியில் சாதிக்
நெல்லையில் நாஞ்சிலார்

பல்வேறு இடங்களில் நமது கழகப் பாசறையின் முன்னணித் தளகர்த்தர்கள்! முன்னோடிகள்! கொள்கை விளக்க வீரர்கள்!

மீண்டுமொரு முறை தமிழக எழுச்சியை ராஜீவ் அரசுக்கு உணர்த்திட எழுக! வருக! வருக!

அன்புடன்
மு.க.
27-07-1988

1575. அந்தோ பரிதாபம்; நமது ஆழ்ந்த அனுதாபங்கள்!

உடன்பிறப்பே,

கவர்னர் அலெக்சாண்டர் அவர்கள் அறிவித்த கூட்டுறவு அமைப்புகளின் தேர்தல் இரண்டுமுறை தள்ளிப் போடப்பட்டுவிட்டது - இது குறித்து ஒரு செய்தி!

இருமுறை இந்தத் தேர்தல்கள் தள்ளிப் போடப்பட்டதாலும் தேர்தல் பற்றிய அட்டவணை அறிவிப்பு வெளியிடப்பட்ட இனத்தில் அஞ்சல் சான்று மூலம் அனுப்பும் வகையில் கூட்டுறவு அமைப்புகளுக்கு ஏற்பட்ட செலவு மட்டும் ஏறத்தாழ இரண்டரைக் கோடி ரூபாயைத் தாண்டும் என்று விசாரித்ததில் இருந்து தெரியவந்துள்ளது. இது கூட்டுறவு அமைப்புகளுக்கு ஒரு பெரும் சுமை என்றும் ஏற்கனவே நஷ்டத்தில் இயங்கி வரும் கிராமக் கூட்டுறவு அமைப்புகளினால் இந்தச் செலவைத் தாங்கிக் கொள்ள இயலாது என்றும் தெரிய வந்துள்ளது. இ.காங்கிரஸ் கட்சியினருடைய நிர்ப்பந்தம் காரணமாக இந்தத் தேர்தல்கள் இரண்டாம் முறையாகத் தள்ளிப் போடப்பட்டது என்றும், கிராமக் கூட்டுறவுச் சங்கத் தேர்தலில் போட்டியின்றி வெற்றி பெற்றவர்களில் மிகப் பெரும்பாலானவர்கள் காங்கிரஸ் கட்சி அல்லாத கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

இந்த விபரத்தை மீண்டும் ஒருமுறை படித்துப் பார்!

கூட்டுறவு இயக்கத்தின் தேர்தல்மீது மிகவும் அக்கறை கொண்டு கவர்னர் அலெக்சாண்டர் தேர்தல் தேதிகளை அறிவித்தார்.

பிறகு அவரே அந்தத் தேர்தலை இரண்டுமுறை ஒத்தி வைத்தார்.

அதனால் கூட்டுறவு அமைப்புகளுக்கு ஏற்பட்ட வீண் செலவு இரண்டரைக் கோடி ரூபாயைத் தாண்டும்.

ஏற்கனவே நஷ்டத்தில் இயங்கும் கூட்டுறவு அமைப்புகளுக்கு இது பெரும் சுமை.

இந்திரா காங்கிரஸ் கட்சியின் நிர்ப்பந்தம் காரணமாகவே இந்தக் கூட்டுறவுத் தேர்தல் இரண்டு முறை தள்ளிப் போடப்பட்டுள்ளது.

கிராமக் கூட்டுறவு சங்கத் தேர்தல்களில் போட்டியின்றி வெற்றி பெற்றவர்கள் காங்கிரசல்லாத கட்சிகளைச் சேர்ந்தவர்கள்.

இத்தனை தகவல்கள் அடங்கிய இந்தச் செய்தி, ஜூலை 31 சென்னைப் பதிப்பு தினமணியில் மூன்றாம் பக்கத்தில் கூட்டுறவுத் தேர்தல் தள்ளிவைப்பால் இரண்டரைக் கோடி ரூபாய் வீண் செலவு என்ற தலைப்பிட்டு வெளியாகியிருக்கிறது.

காங்கிரஸ் கட்சியின் வற்புறுத்தலுக்கு தலைவணங்கி கவர்னர் அலெக்சாண்டர் கூட்டுறவுத் தேர்தலை ஒருமுறைக்கு இருமுறை தள்ளி வைத்துவிட்டார். காரணம்; தேர்தல் நடந்தால் கூட்டுறவு இயக்க மேலமைப்புகளில் காங்கிரஸ்காரர்கள் வெற்றி பெற இயலாது - ஏனெனில் கிராமக் கூட்டுறவு சங்கத் தேர்தல்களில் காங்கிரசல்லாத கட்சிக்காரர்களே பெரும்பான்மையாக வெற்றி பெற்றிருக்கிறார்கள். எனவே காங்கிரஸ் வெற்றி பெறக்கூடிய சூழ்நிலை உருவாகிற வரையில் கூட்டுறவு அமைப்புக்கான தேர்தல்கள் நடைபெறாது!

இதே மாதிரி நிலையைத்தான் நேர்மையான (?) நமது கவர்னர் சட்டப் பேரவைத் தேர்தல் விஷயத்திலும் எடுத்திருக்கிறார். அதாவது காங்கிரஸ் கட்சிக்கு பலம் என்று ஒன்று ஏற்படுகிற வரையில் தமிழ் நாட்டில் சட்டப் பேரவைத் தேர்தலை நடத்துவதற்கு அமைதியாக சூழ்நிலை கிடையாது என்பதாக!

1983ஆம் ஆண்டு அசாம் மாநிலத்தில் நூற்றுக்குத் தொண்ணூறு மக்கள் தேர்தலைப் புறக்கணித்தார்கள். அப்போதுகூட தேர்தலை நடத்தியே தீருவோமெனத் தேர்தல் கமிஷன் அறிவித்து தேர்தல் நடைபெற்றது! ரத்த ஆறுகள்

வீதிகளில் பெருக்கெடுத்த சூழலில் அங்கே தேர்தலை நடத்தி ஜனநாயகத்தை (?) காத்தே தீருவோம் என்று தேர்தல் கமிஷன் சூளுரைத்துக் கிளம்கியது. ஒவ்வொரு தொகுதியிலும் நூறு வாக்குகள், இருநூறு வாக்குகள் மட்டுமே பதிவான நிலையிலும்கூட அந்த வாக்குகள் எண்ணப்பட்டு, தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன!

இப்போது தமிழ் நாட்டில் அமைதி இல்லையாம்! வன்முறை தாண்டவமாடுகிறதாம்! அதனால் தேர்தல் தேவையில்லையாம்! கவர்னர் அறிக்கை தருகிறார்! மத்திய அமைச்சர்கள் வெள்ளைக் காகம் மல்லாந்துகொண்டு பறக்கிறது என்கிறார்கள்! அதை நம்பாவிட்டால் தேசத்துரோகம் என்கிறார்கள்!

கூட்டுறவுச் சங்கத் தேர்தலுக்கே காங்கிரசின் நிர்ப்பந் தத்திற்குக் கட்டுப்பட்டு கவர்னர் நடந்துகொள்கிறார் என்றால், சட்டப் பேரவைத் தேர்தலுக்குக் காங்கிரசின் கட்டளைக்கு அவரால் கட்டுப்படாமல் இருக்க முடியுமா என்ன?

கூட்டுறவுச் சங்கத் தேர்தலைத் தள்ளி வைத்ததில் காங்கிரசின் பங்கு என்ன என்பதையும், அதனால் ஏற்பட்ட இரண்டரைக் கோடி ரூபாய் வீண் விரயத்தையும், மூன்றாம் பக்கத்தில் செய்தியாக வெளியிடுகிற தினமணி ஏடு, அதே தேதியில் முதல் பக்கத்தில் தமிழ் நாட்டில் சட்டப் பேரவைத் தேர்தலை தள்ளி வைத்தது நியாயமே என வாதாடிக் கட்டுரை தீட்டுகிறது. இன்னும் இரண்டு வருடத்துக்குக் கவர்னர் ஆட்சியே இருக்கட்டும் என்று அந்தக் கட்டுரையில் முத்தாய்ப்பு வேறு வைக்கிறது!

எந்தக் கவர்னர் ஆட்சி? தினமணியின் மூன்றாம் பக்கச் செய்திப்படி, காங்கிரசுக்குக் கட்டியக்கார வேலை பார்த்துக்கொண்டு கூட்டுறவுத் தேர்தலை இருமுறை தள்ளிவைத்து கூட்டுறவு இயக்கத்திற்கு இரண்டரைக் கோடி ரூபாய்க்கு மேல் வீண்செலவு வைத்த கவர்னர் ஆட்சி!

தினமணியின் ஜூலை 21 மூன்றாம் பக்கச் செய்தியின்படி நமது கவர்னர் பெருமான் எவ்வளவு அப்பழுக்கற்ற - கட்சிச் சார்பற்ற - ஜனநாயகவாதி - சற்குணசீலர் - நடுநாயகர் - யாருடைய நிர்ப்பந்தத்திற்கும் பணியாத பண்பாளர் - என்பதெல்லாம் தெளிவாகப் புரிகிறதல்லவா?

உடன்பிறப்பே, மத்திய தேர்தல் கமிஷனை பிரதமர் ராஜீவ் காந்தி, உதைத்துக் கீழே தள்ளி அது ஸ்மரணையற்றுப்போய் பல நாளாகிறது! ஸ்மரணையற்ற தேர்தல் கமிஷனுக்கு கவர்னர் அலெக்சாண்டர் அவர்கள் விஷ ஊசி போட்டு அதை ஒரேயடியாகப் பிணமாக்கி விட்டார்! இனி அந்தப் பிணத்துக்குக் கொள்ளி வைக்க வேண்டியது தான் பாக்கி!

அந்தோ; பரிதாபம்! தேர்தல் கமிஷனுக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்கள்!

அன்புடன்

மு.க.

01-08-1988

1576. எக்ஸ்பிரசுக்கு ஏனோ இந்த அவசரம்?

உடன்பிறப்பே,

ஜூலை 31 சென்னை பதிப்பு இந்தியன் எக்ஸ்பிரஸ் யூகச் செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தது. எந்தச் செய்தியும் பரபரப்பாகக் கிடைக்காவிட்டால் யூகமாக செய்திகளை வெளியிடுவது சில பத்திரிகைகளுக்கு இப்போதெல்லாம் வாடிக்கையாகிவிட்டிருக்கிற ஒன்று. அதிலும் தி.மு.க. பற்றி அப்படிச் செய்திகளை வெளியிடுவதில் அவற்றுக்குத் தனி ருசி!

ஆகஸ்டு முதல் வாரம் தமிழகம் வரும் பிரதமர் ராஜீவ் காந்திக்கு தி.மு.கழகம் கறுப்புக்கொடி காட்ட திட்டமிட்டிருக்கிறது. இதனைப் பெரும்பாலான கழகப் பொதுக்குழு செயற்குழு உறுப்பினர்கள் ஆதரித்து ஆலோசனை தெரிவித்திருக்கிறார்கள். கழகத் தலைவர் கருணாநிதி (29 ஜூலை) அண்மையில் நடந்த பொதுக்கூட்டத்தில் விரைவில் தி.மு.க. செயற்குழு பொதுக்குழுவைக் கூட்டி ஈழத் தமிழர் பிரச்சினைக்காக எத்தகைய போராட்டத்தை நடத்துவது என்று முடிவெடுக்குமென குறிப்பிட்டுள்ளார்.

இதுதான், எக்ஸ்பிரஸ் ஏடு ஜூலை 31 வெளியிட்டுள்ள செய்தி! அதற்குத் தலைப்பு "D.M.K. Plans to Show Black Flags to P.M." என்பதாகும்.

முதலில் ஜூலை 29 சென்னையில் நடந்த பொதுக்கூட்டத்தில் என்ன பேசினேன் என்பது ஏடுகளில் தெளிவாகவே வந்திருக்கிறது. ஈழத் தமிழர் பிரச்சினைக்காக மீண்டும் ஒரு போராட்டத்திற்கு ஆணையிட வேண்டுமென எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் உணர்ச்சி பொங்கிடக் கூறியிருக்கிறார்கள். நான் தனிப்பட்ட முறையில் ஆணையிடமாட்டேன். கழகத்தின் செயற்குழு,

பொதுக்குழுக்கள் கூட்டப்பட்டுத்தான் அதுகுறித்து முடிவு செய்யும். அந்தப் பொதுக்குழு செயற்குழுவில் அதற்கான தீர்மானத்தை நான் முன்மொழிவேன். பொதுக்குழு செயற்குழு முடிவுப்படிதான் அறப்போர் எதுவென அறிவிக்கப்படும். இந்தக் கருத்தைத்தான் சென்னை பொதுக்கூட்டத்தில் நான் வெளியிட்டேன். இதில் கறுப்புக் கொடி என்ற போராட்ட முறையோ அல்லது ஆகஸ்டு முதல் வாரம் தமிழகத்திற்கு ராஜீவ் காந்தி வரும்போது என்பதோ எங்கேயிருக்கிறது?

ஆனாலும் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகஸ்டு முதல் வாரம் தமிழகம் வரும் ராஜீவ் காந்திக்கு தி.மு.க. கறுப்புக் கொடி என்று செய்தி வெளியிட்டு - அந்தச் செய்தியைத் தாங்களாகவே வெளியிட்டது போல சில ஏடுகளும் மறு பதிப்புச் செய்துள்ளன.

ஈழத் தமிழர் பிரச்சினைக்காகவும் - தமிழகத் தேர்தலை வேண்டுமென்றே தங்கள் வசதிக்காகத் தள்ளிப் போட்டுக் கொண்டே போவதைக் கண்டித்தும் தி.மு.கழகம் செயற்குழு பொதுக்குழுவைக் கூட்டி மாநிலம் தழுவிய அறப்போராட்டம் நடத்த வேண்டுமென்பதில் அக்கறையுடனிருக்கிறது!

அந்தப் போராட்டம் ராஜீவுக்குக் கறுப்புக் கொடியென்றோ - அதுவும் ஆகஸ்டு முதல் வாரத்தில் என்றோ எந்த முடிவும் எடுக்கப்படவில்லை!

எந்தப் போராட்டமெனினும் முன்கூட்டியே தலைமைக் கழகம் உரிய முறையில் முடிவெடுத்து போதுமான கால அவகாசம் தந்து வெளிப்படையாக அறிவித்து விட்டுப் போராட்டத்தை நடத்துமேயல்லாமல் திடீரெனப் போராட்டத்தில் குதித்து விடாது. போராட்டங்களில் ரகசியத் திட்டங்கள் எப்போதும் இருந்ததில்லை! எக்ஸ்பிரஸ் பத்திரிகையின் ஒற்றர்கள் மட்டுமே கண்டுபிடித்து வெளியிடுகிற அளவுக்கு தி.மு.கழகம் தனது எந்தப் போராட்ட அறிவிப்பையும் ரகசியமாக வைத்துக் கொண்டதில்லை.

எக்ஸ்பிரஸ் வெளியிட்டது உண்மையா அல்லவா என்பதைத் தெரிந்து கொள்ளக்கூடிய ஆர்வம் கூட இல்லாமல் - உடனே தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர்கள் சிலர், ஆகா ஊஹு! ராஜீவ்

காந்திக்குப் கறுப்புக் கொடியா? காங்கிரஸ் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது என சவால் விட்டுப் பேசியிருக்கிறார்கள்.

ராஜீவ் காந்திக்கு மட்டுமல்ல, அவருடைய பாட்டனார் பிரதமர் பண்டித நேரு அவர்களுக்கே ஜனநாயக முறையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கறுப்புக்கொடி காட்டிய கட்சிதான் தி.மு.கழகம்! அதன் காரணமாக குதிரைப் பட்டாளத்தின் தாக்குதலுக்கு ஆளாகி - நூற்றுக்கணக்கானோர் படுகாயமுற்றதும் மொய்தீன் பிச்சை என்ற தோழர் உயிரிழந்ததும் கடந்த கால வரலாறு!

எனவே யாரோ மிரட்டுகிறார்கள் என்பதற்காக - தி.மு.கழகம் அஞ்சி நடுங்கிவிடாது!

ஆனால் ஒரு அறப்போராட்ட முடிவை - அது ஈழத் தமிழர் பிரச்சினைக்கெனினும் அல்லது தேர்தலைத் தள்ளிப் போடும் தில்லு முல்லுவைக் கண்டிக்கிற பிரச்சினைக்கெனினும் -செயற்குழு அல்லது பொதுக்குழுவைக் கூட்டித்தான் கழகம் அறிவிக்கும்.

இப்போது பிரதமர் ராஜீவ் வருகை திடீரென ஆகஸ்டு 4ந் தேதியென அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு வாரத்துக்குள் செயற்குழு பொதுக்குழுவைக் கூட்டி அறப்போராட்டம் குறித்து விவாதித்து முடிவு எடுத்திட கால அவகாசமே இல்லாதபோது ஏறத்தாழ முடிவு எடுத்துவிட்டது போல ஒரு செய்தியை எக்ஸ்பிரஸ் ஏடு வெளியிட்டதற்கு காரணம் எதுவாக இருக்க முடியும்?

இப்போதெல்லாம் தமிழ் நாட்டில் தினமணியும், எக்ஸ்பிரசும் வரிந்து கட்டிக் கொண்டு, காங்கிரசை ஆட்சியில் அமர்த்தப் பாடுபடுகின்ற ஏடுகளாக மாற்றம் பெற்றுள்ளன.

அதனால் ராஜீவ் வருகைக்கு முன் இப்படியொரு பரபரப்பு செய்தியை வெளியிட்டு - அவரது வருகைக்கான முக்கியத்துவத்தை அதிகப்படுத்த வேண்டுமென்ற ஆசையாக இருக்கக்கூடும்!

இனியும் தமிழ் ஈழத்தில் இந்திய அரசு நடத்திக் கொண்டிருக்கும் இந்திய ராணுவ நடவடிக்கைகளின்

கொடுமைகளைத் தமிழ்நாட்டு மக்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

அதேபோல கவர்னர் ஆட்சி என்ற பெயரால் தேர்தலைத் தள்ளிப்போட்டு விட்டுக் காங்கிரஸ்காரர்களின் ஆட்சியைத் தமிழகத்தில் நடத்திக் கொண்டிருப்பதை ஜனநாயகத்தில் அக்கறையுள்ளவர்கள் சகித்துக் கொண்டிருக்க முடியாது.

எனவே அது குறித்து கழகத்தின் செயற்குழு பொதுக்குழுக்கள் விவாதித்து உரிய முடிவுகளை எடுத்து அறிவிப்பது அவசியம்!

அதற்குள் எக்ஸ்பிரஸ் ஏடு அவசரப்படுவது என்ன அதிசயம்?

அன்புடன்

மு.க.

02-08-1988

1577. இந்திய ஜனநாயகம் (?) அடியோடு வாழ்க!

உடன்பிறப்பே,

எப்படியாவது தேர்தல் என்று ஒன்று வந்தால் தமிழ்நாட்டில் காங்கிரசை ஆட்சி பீடத்தில் ஏற்றி வைத்து விட வேண்டுமென்று சில பத்திரிகைக்காரர்கள் துடியாய் துடிக்கிறார்கள். மின்சாரக் கம்பியில் சிக்கி ஒரு காக்கை செத்துத் தொங்கினால் கூட இருபது வருஷமாக திராவிட ஆட்சியில் இப்படித்தான் நடக்கிறது என்று அந்த ஏடுகள் குறிப்பு எழுதத் தவறுவதில்லை. எந்தக் கோயிலிலாவது பிள்ளையாருக்கு முன்னால் இருந்த மூஞ்சூறு சிலை காணாமல் போய்விட்டால் கூட இருபது வருஷமாக இப்படித்தான் திராவிடர் ஆட்சியில் நடக்கிறது என்று தான் அந்தப் பெருந்தகை (?) ஏடுகள் எழுதுகின்றன! ஆனால் சிவபுரம் நடராஜர் சிலையை காங்கிரஸ் ஆட்சியில்தான் ஒரு மண்டல காங்கிரஸ்காரரும் அவரது மகன்களும் திருடி அமெரிக்காவுக்கு விற்பனை செய்தார்கள் என்பதும் - அந்தத் திருட்டு தி.மு.க. ஆட்சியில்தான் கண்டுபிடிக்கப்பட்டு சிவபுரம் நடராஜரை இந்தியாவுக்குக் கொண்டு வரும் ஏற்பாடுகள் தொடங்கப்பட்டன என்பதும் உலகறிந்த விவகாரம் என்பதை அந்த ஏடுகள் என்னதான் மறைத்தாலும் மறைக்க முடிவதில்லை. இருந்தாலும் இருபதாண்டு இருண்ட ஆட்சி என அவைகள் குறிப்பிட மறப்பதில்லை.

இருபது ஆண்டுகளில்தான் ஊழலே தோன்றியது என அந்த ஏடுகள் பிலாக்கணம் படிக்கவும் தவறுவதில்லை! தி.மு.க. ஆட்சி நடத்திய ஒன்பது ஆண்டுகளில் எங்கு தவறு நடைபெற்றாலும் - அந்தத் தவறு செய்தவர்கள் யாராயிருந்தாலும் - அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்ட வரலாறு உண்டு! அதை மறைத்து விட்டு தி.மு.க. ஆட்சியில் ஊழல் என்று ஒப்பாரி வைக்கும் எரிச்சல்காரர்களுக்கு இன்னும் என்னதான் விளக்கம் தர முடியும்?

சென்னை மாநகராட்சியில் மஸ்தர்ரோல் விவகாரம் சட்டசபையில் கூறப்பட்டவுடன், அதில் பூர்வாங்கமாக குற்றங்களுக்கு ஆதாரமிருக்கிறது எனக் கூறி, உடனடியாக மாநகராட்சி மன்றத்தைக் கலைத்து உத்தரவிட்டதோடு - தி.மு.க.வைச் சார்ந்த மேயர் உட்பட பலபேர் கைது செய்யப்பட்டதும், அவர்கள் மீது வழக்கு போடப்பட்டதும் - கழக ஆட்சியில் ஊழல் புகார்கள் மீது எவ்வளவு கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதற்கு எடுத்துக் காட்டல்லவா?

அறுபத்தி நாலு கோடி பீரங்கி ஊழலை - சுவிஸ் வங்கி ஊழலை பேர்பாக்ஸ் ஊழலை - இதோ இப்போது புறப்பட்டுள்ள ஆறரைக் கோடி ரூபாய் குழாய் பேர ஊழலை - காங்கிரஸ் அரசு மறைக்க முனைந்து ஏதேதோ சாக்குப் போக்குக் காட்டி சமாளிக்கப் பார்க்கிறதே அப்படியா கழக ஆட்சியில் நடைபெற்றது?

தவறுகள்; அரசின் கவனத்திற்கு வந்தாலும் - எதிர்க்கட்சியினர் சுட்டிக் காட்டினாலும் - உடனடியாகத் தவறு புரிந்தோர் யாராயினும் அவர்கள் மீது கடும் நடவடிக்கையைக் கழக அரசு மேற்கொள்ளத் தவறியதே இல்லை!

கெய்ரான் ஊழல் - முந்திரா ஊழல் - அமீர் சர்த் பியாரிலால் ஊழல் - எருக்கச்சேரி ஊழல் - என எண்ணிறந்த ஊழல்களின் ஊற்றுக்கண்ணாக இருந்த - ஏன், இன்றளவும் ஊழலிலேயே திளைத்துப்போய்க் கிடக்கிற காங்கிரசைத் தூக்கி நிறுத்தி அதற்குப் புனித ஆடை உடுத்திப்பார்த்து சிம்மாசனத்தில் உட்கார வைக்கத் துடிப்போர், தமது முதுகில் சுமந்து கொண்டிருக்கும் குப்பை மேட்டையும் சகதிக் கூடைகளையும் சாக்கடை நீர் வாளிகளையும் ஏனோ மறந்து விடுகிறார்கள் பாவம்! பரிதாபம்!

காமராஜர் ஆட்சியையே ஊழல் ஆட்சி என்றார் ராஜாஜி! உடனே காமராஜர் ராஜாஜியைப் பார்த்து நீங்கள் என்ன ஊழலே இல்லாத பரசுராமர் அவதாரமா? என்று கேட்டார் - இந்தச் செய்திகள் எல்லாம் அப்பொழுதே அச்சுவாகன மேறிய ஆதாரபூர்வமான செய்திகள்! நான் இட்டுக்கட்டிச் சொல்வதல்ல! தேவைப்படின் அந்த ஏடுகளை பிளாக் செய்து வெளியிடவும் தயார்!

காங்கிரசின் புனிதத்தைத் தமிழக மக்களுக்கு விரித்துரைக்க பிரதமர் ராஜீவ் காந்தி மாதம் ஒருமுறை தமிழகம் வரப்போகிறாராம்!

ஒவ்வொரு முறையும் அதற்காக மக்களின் வரிப்பணம் அரசாங்க மூலமாக கோடிக்கணக்கில் செலவு!

என்ன செய்வது; லட்சத்தீவில் ராஜீவ் ஓய்வு! அவருக்குக் கேரளாவிலிருந்து பாயசம் விமானத்தில் பயணம் செய்கிறது! பாயசம் விலை பத்துபணம் - அதன் பயணச் செலவோ பல லட்சம்! தரித்திர இந்தியா! அந்தத் தரித்திரம் போக்க இந்தத் தயாபரர்கள் இப்படி சரித்திரம் படைக்கிறார்கள்; கோடி கோடியாக சுற்றுப்பயணச் செலவு செய்து!

ஆகஸ்டு 4, 5, 6 தேதிகளில் தமிழகத்துக்கு ராஜீவ் வருவது குறித்து ஒரு நாளிதழ் எழுதுகிறது பார்!

ராஜீவ் வருகையை கிராம மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். அந்த ராசா எங்க ஊர் மேல கார்ல போகும்போது பாக்காம இருக்க முடியுமா? மகராசனை பாக்க கொடுத்து வைக்கணும்! காரை அவரே ஓட்டுவாராமே! என்று அந்த மக்கள் கூறுகிறார்கள். அவருக்கு பலத்த பாதுகாப்பு இருக்குமே. குண்டு துளைக்காத கார்ல போவாரே - நீங்க எப்படி பாக்க முடியும்னு கேட்டபோது, இது என்ன பஞ்சாப்பா? தமிழ் நாட்டு மக்கள் அம்மா பிள்ளை மேல அளவு கடந்த ஆசை வச்சிருக்கோம்.

இப்படி எழுதியுள்ள பத்திரிகை, அதே பக்கத்தில் மேலும் எழுதுகிறது!

பிரதமர் ராஜீவுக்கு பலத்த ஏற்பாடுகள் பாதுகாப்புக்காக நடைபெறுகின்றன. மாநிலத்தில் உள்ள போலீஸ் உயர் அதிகாரிகள் அனைவரும் தென்னாற்காடு மாவட்டத்துக்கு படையெடுத்துள்ளனர். செஞ்சி முதல் சிதம்பரம் வரையில் ராஜீவ் செல்லும் வழி முழுதும் ஆயுதம் ஏந்திய போலீசார் நிறுத்தப்பட்டுள்ளனர். பெரிய பாலங்கள் முதல் சிறிய மதகுகள் வரை விடிய விடிய போலீசார் காவல் புரிந்து வருகின்றனர். மாவட்டத்தில் உள்ள போலீசார் பாதுகாப்புக்கு போதாததால் வெளி மாவட்டங்களில் இருந்து ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதையும் எழுதிவிட்டு - அதே வர்ணனைப் பகுதியில், இது என்ன பஞ்சாபா? என்று கிராம மக்கள் கேட்கிறார்கள் என்றும் அந்தப் பத்திரிகை குறிப்பிடுகிறது!

ஒவ்வொரு மாதமும் பிரதமர்
தமிழக சுற்றுப்பயணம்!
ஒவ்வொரு பயணத்துக்கும்
கோடிக்கணக்கில் பணச்
செலவு!

இப்படி முன் கூட்டியே தேர்தல் பிரச்சாரத்தை முடித்துவிட்டுத்தான் - பிறகு கவர்னர் அலெக்சாண்டர் கண் ஜாடை காட்டினால்; ராஜீவ் காந்தி, மத்திய தேர்தல் கமிஷனுக்கு உத்திரவு போடுவார் - தேர்தலை நடத்தலாம் என்று!

வாழ்க இந்திய ஜனநாயகம்! (?)

அடியோடு வாழ்க! என்று

முழங்கத் தோன்றுகிறதல்லவா?

அன்புடன்

மு.க.

03-08-1988

1578. நோய்க்கேற்ற சிகிச்சைதான் இது!

உடன்பிறப்பே,

அருமை நண்பர் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். மறைந்த பிறகு அ.இ.அ.தி.மு.க. இரண்டாக உடைந்து, இப்போது மூன்று நான்காக உடைந்து சிதறியிருக்கிறதல்லவா? சென்ற மாதம் இவர்கள்தான் திராவிடர் இயக்கத்தின் மூத்த தலைவர்கள் என்று அறிக்கை வாயிலாகப் புகழ் பாடப்பட்டவர்களுக்கு இந்த மாதம் வழங்கப்பட்ட பட்டம் தெருநாய்கள் என்பதாகும்! அப்படிக் கூறப்பட்டு விரட்டப்பட்டவர்களில் ஒன்று தன்னை விரட்டியடித்த அணித் தலைமையின் மீது ஆத்திரங் கொண்டு குரைத்திடுமேயானால் அதை யாரும் தவறாக எடுத்துக் கொள்ள முடியாது! அடிபட்ட வலியில் அப்படிச் சத்தம் போட்டுத்தானே தீரும் என்று அதற்காக பரிதாபப்பட்டு விட்டுப் போகலாம்!

எங்கேயோ யாரோ அடிக்க அடிபட்ட அது என்மீது விழுந்து பிராண்டப் பாய்கிறது! தன்னை விரட்டியடித்த - தூ என்று இகழ்ந்து துரத்தியடித்த தலைமையை விமர்சிக்க அதற்கு உரிமையுண்டு! அதற்காக அந்தத் தலைமையைத் தாக்க அது பொறுக்கிய வாசகம் என்ன தெரியுமா?

சேலை கட்டிய கருணாநிதி என்ற வாசகமாகும்! எதற்காக அந்த வாசகத்தைத் தேர்ந்தெடுத்து அது அப்படிக் குரைத்திருக்கிறதாம் தெரியுமா? அதுவே காரணம் சொல்கிறது! என்ன காரணமாம்?

எம்.ஜி.ஆர்.; கருணாநிதியிடம் கணக்கு கேட்டதற்காக அவரை விரட்டி விட்டார். அதைப் போல நாங்களும் கணக்கு கேட்டோம். அதனால் விரட்டி விட்டார்கள் - எனவே சேலை கட்டிய கருணாநிதி என்கிறது அது!

கோவணம் கட்டத் தெரியாத சிறுவனுக்குக்கூடப் புரியும்; அப்போது எம்.ஜி.ஆர். கேட்ட கணக்கு என்ன என்பதும் - இப்போது இவர்கள் கேட்ட கணக்கு என்ன என்பதும்!

1972-ஆம் ஆண்டு வாக்கில் எம்.ஜி.ஆர்.தான் தி.மு.க. பொருளாளர்! கட்சிக் கணக்கு கட்சியின் பெயரில்தான் வங்கியில் அப்போதும் இருந்தது - இப்போதும் இருக்கிறது! எப்போதும் அப்படித்தான்! கட்சிக் கணக்கு விபரங்களை பொருளாளராக இருந்த எம்.ஜி.ஆர். அவர்களே பொதுக்குழுவில் படித்து - பொதுக்குழு கட்சியின் வரவு செலவுகளை ஏற்றுக் கொண்டுள்ளது! இதுதான் கழக வரவு செலவுகளைப் பற்றிய நடைமுறை! பொதுக்குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட தணிக்கைக்குழுவும் கட்சிக் கணக்கை ஆய்வு செய்து பொதுக்குழுவுக்கு அறிக்கை தரும் - இதுவும் 1972க்கு முன்பிருந்தே இருந்து வருகிற நடைமுறை!

எம்.ஜி.ஆர். கேட்டது கட்சிக் கணக்கை அல்ல! பொதுக் கூட்டத்தில் நின்று கொண்டு அவர் கேட்டது கழகத்தின் பதினெட்டாயிரம் கிளைக் கழகச் செயலாளர்களின் சொத்துக் கணக்கை! இப்படி எந்தக் கட்சியிலாவது அந்தக் கட்சியின் கிளை நிர்வாகிகள் பல்லாயிரக் கணக்கானவர்களின் சொத்துக் கணக்கு விபரங்கள் ஆண்டு தோறும் சோதிக்கப் பட்டதுண்டா? அல்லது எம்.ஜி.ஆர். ஆரம்பித்த அ.தி.மு.க. கட்சியிலாவது சுமார் 15 ஆண்டு காலத்தில் அவர் கட்சியின் கிளைக் கழக நிர்வாகிகளின் சொத்துக் கணக்கை அவர் கேட்டதுண்டா?

இதைப்பற்றியெல்லாம் அப்போது தி.மு.க. பொதுச்செயலாளராக இருந்த நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் விளக்கமாக அறிக்கை விட்டுத்தான் எம்.ஜி.ஆர். அவர்களை கட்சியின் கட்டுப்பாட்டை மீறியதற்காக விலக்குவதாக தெரிவித்தார் என்பதை இதுகள் ஏனோ மறந்துவிட்டன! அல்லது மறைக்கப் பார்க்கின்றன!

இப்போது இவர்கள் கேட்கிற கணக்கு என்ன? கட்சிப் பணத்தை ஏன் கட்சியின் பெயரால் வங்கியில் போடவில்லை? தனிப்பட்ட ஒருவர் பெயரால் வங்கியில் போட்ட பணம் மாயமாய் மறைந்தது எப்படி? கட்சிக் கணக்கு வரவு செலவை ஏன் கட்சிப் பொதுக்குழுவில் காட்டவில்லை? இப்படிக் கேட்கப்பட்ட கணக்கு இந்தக் கணக்கு! இவர்கள் கேட்கும் கணக்கு!

அன்று எம்.ஜி.ஆர். கேட்டது கட்சிக் கணக்கு அல்ல! கட்சியின் 18 ஆயிரம் கிளைக் கழகச் செயலாளர்களின் கணக்கு!

அப்போதும் சரி - இப்போதும் சரி - எப்போதும் சரி - கழகப் பணம், கட்சியின் பேரால்தான் வங்கியில் போடப்படுகிறது! பொதுச்செயலாளரோ அல்லது பொருளாளரோ செக்கில் கையெழுத்துப் போட்டுக் கட்சிப் பணிகளுக்காக அந்தப் பணம் எடுக்கப்படுமேயல்லாமல் தனிப்பட்ட முறையில் யாரும் கையெழுத்திட்டு எடுக்க முடியாது! திண்டிவனம் கூட்டத்தில் இது குறித்து கழக சட்டதிட்ட புத்தகத்தையே படித்துக்காட்டி விளக்கமளித்திருக்கிறேன் - அதற்குப்பிறகும் ஒன்றிரண்டுகள் விடாமல் குரைத்துக் கொண்டேயிருப்பதற்குக் காரணம்தான் புரியவில்லை!

யாரையோ தாக்குவதற்கு என்னை இழுப்பானேன்? சேலை கட்டிய கருணாநிதியாம்! இன்றைக்கு இப்படி அர்ச்சனை! இத்தகைய வர்ணனை!

ஆனால் போன மாதம் ஒரு பத்திரிகைப் பேட்டியில் இதே வாய் என்ன சொன்னது?

இருவருக்குமிடையே நான் பாலமாக இருந்தேன்.

இவர் கடிதம் கொடுப்பார் - அதைக் கொண்டுபோய் எம்.ஜி.ஆர். அவர்களிடம் கொடுப்பேன்.

இவரும் முதலமைச்சர் எம்.ஜி.ஆரும் அறைக்குள் இருப்பார்கள். நான் ஒரே கிளுகிளுப்புடன் அறைக்கு வெளியே உட்கார்ந்திருப்பது வாடிக்கை.

இவர் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களை டெலிபோனில் காரசாரமாகவும் கடுமையாகவும் திட்டுவார். அதை நானும் எம்.ஜி.ஆர். உத்திரவுப்படி டெலிபோனில் ஒட்டுக் கேட்டு ரசிப்பேன்.

இவர்தான் எம்.ஜி.ஆருக்கு இரண்டாவது!

இவர்தான் எனக்கு தலைவர்!

அந்த இவர் இப்போது இந்த இவரை வாலைப் பிடித்து வீசி, காதைப் பிடித்துத் திருகி வெளியே துரத்திவிட்டால் - அந்த இவரின் வீட்டு வாசலில் நின்று குரைப்பதை விட்டு விட்டு, என்மீது விழுந்து குதறப் பாய்வது ஏனோ?

சிலநேரங்களில் தெரு நாய்களுக்குப் பைத்தியம் பிடிப்பதும் உண்டு! முனிசிபாலிடி அல்லது கார்ப்பரேஷன் வண்டிகள் வந்து தூக்கிப் போட்டுக் கொண்டு போகும்வரையில் அவை பலரையும் கடிக்கப் பாயும் - ஓடும் - பறக்கும்! சேலை, வேட்டி என்று குரைத்துக் கொண்டிருந்தால் - சிறுவர்கள் கல் எடுத்து எறிவார்கள்! அதற்குள் கார்ப்பரேஷன் வண்டி வந்துவிட்டால் ஒரு வகையில் நல்லது!

உடன்பிறப்பே; இன்றைய கடிதம் - வழக்கத்துக்கு விரோதமாக சற்றுக் கடுமைதான்! நோய் அப்படி; அதனால் சிகிச்சை முறையும் கொஞ்சம் கடுமை!

அன்புடன்

மு.க.

04-08-1988

1579. அண்ணாவின் உண்மைத் தம்பிகளே! அறைகூவல் ஏற்போம்!

உடன்பிறப்பே,

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் ஒரு திரைப்படத்தில் பாடிய நகைச்சுவைப் பாட்டு :-

புலிக்குப் பயந்த பசங்கள் எல்லாம்
வந்தென் மேலே விழுங்களடா!
புலியை அமுக்கி பிடித்துக் கொண்டால்
அடித்து நொறுக்க மாட்டேனோ?

புலிக்குப் பயப்படாதவராம் - அந்தப் புலியை யாராவது அமுக்கிப் பிடித்துக் கொண்டால் அதை அடித்து நொறுக்குவாராம்! இப்படியொரு நகைச்சுவைப் பாடல் எப்போதோ கேட்டது இப்போது நினைவுக்கு வருகிறது!

தமிழ் நாட்டில் தேர்தலை சந்திக்க

இந்திரா காங்கிரஸ் பயப்படவில்லை

காரசாரமாகவும் - வீரதீரமாகவும் - ராஜீவ் காந்தி அவர்கள் சென்னை விமான நிலையத்தில் நிருபர்களுக்கு அளித்துள்ள பேட்டியைப் படித்த போது; கலைவாணரின் காமெடிப் பாட்டு நினைவுக்கு வந்ததில் ஆச்சரியமில்லையல்லவா?

பாவம்; புலியை அமுக்கிப்பிடிக்க சர்க்கார் செலவில் கோடி கோடியாக வாரி இறைத்து தேர்தல் பிரச்சார சுற்றுப் பயணங்கள் கடன் மேளாக்கள் - கட்சிகளைப் பிளக்கும் சூழ்ச்சிகள் - இத்தனையும் முடிந்த பிறகு புலியை அடித்து நொறுக்கப் போகிறாராம் ராஜீவ் காந்தி!

தமிழ் நாட்டில் எங்கேயோ ஒரு பட்டிக்காட்டில் இருக்கிற பாமர மனிதனுக்குக் கூடத் தெரிகிறது - காங்கிரஸ் கட்சி; தன்னுடைய

வசதிக்காகத்தான் தேர்தலைத் தள்ளிப்போடுகிறது என்ற உண்மை!

ஆனால் ராஜீவ் காந்தி, தமிழ் நாட்டில் அமைதி இல்லை எனச் சொல்லி தமிழ் மக்கள் அனைவரின் காதிலும் பூ சுற்றப் பார்க்கிறார்.

அமளிக் காடாகவும் - ரத்தம் பெருக்கெடுத்து ஓடும் பூமியாகவும் - விளங்கியபோது அசாம் மாநிலத்தில் 1983ல் தேர்தலை நடத்தியவர்கள், தொகுதிக்கு நூறு ஓட்டு இருநூறு ஓட்டுகூட விழாமல் மக்கள் தேர்தலையே அங்கு புறக்கணித்த போது தேர்தலை நடத்தியவர்கள் இப்போது தமிழ் நாட்டுத் தேர்தலை தள்ளி வைப்பதற்குக் கூறும் காரணம் வெறும் தகிடுதத்தம் தவிர வேறு என்னவாக இருக்க முடியும்?

சென்னை விமான நிலையப் பேட்டியில் வீரமுழக்கமிட்ட பிரதமர் ராஜீவ் காந்தி - விழுப்புரம் கூட்டத்தில் திராவிடர் இயக்க ஆட்சியை ஒரு பிடிபிடித்திருக்கிறார்.

"DRAVIDIAN RULE
HAS RUINED TAMIL NADU"

என்று எக்ஸ்பிரஸ் ஏடு ராஜீவ் பேச்சுக்குத் தலைப்புக் கொடுத்துள்ளது.

திராவிட ஆட்சி தமிழ்நாட்டை
முழுமையாக சீரழித்துவிட்டது
என்பது அதற்கு மொழிபெயர்ப்பு!

"Prime Minister Rajiv Gandhi on Thursday launched a diatribe against the 20 years of Dravidian Rule in Tamil Nadu as a result of which he said the State had lost its prominent place."

இருபது வருட திராவிட ஆட்சியில் தமிழ்நாடு முக்கியமான இடத்தை இழந்து விட்டது என்று உரத்த குரலில் குறிப்பிடவே (விழுப்புரம் கூட்டத்தில்) பிரதமர் ராஜீவ் காந்தி நீண்ட நேரம் செலவிட்டார் என்று செய்தி வெளியிடப்பட்டுள்ளது. ராஜீவ் குறிப்பிடும் இருபது ஆண்டுகளில் அறிஞர் அண்ணா

ஆட்சி நடத்திய இரண்டு ஆண்டுகளும் நான் முதல்வராகப் பொறுப்பேற்றிருந்த ஏழு ஆண்டுகளுமாக ஒன்பது ஆண்டுகள் அடங்கும்.

மீதமுள்ள பதினோரு ஆண்டுகள் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்து ஆட்சி நடத்திய காலமாகும்.

தி.மு.க. ஆட்சி நடைபெற்ற ஒன்பது ஆண்டுகளைப் பற்றியும் - 1947 முதல் 67 வரையிலான இருபதாண்டுக் கால காங்கிரஸ் ஆட்சியுடன் தி.மு.க. ஆட்சியை ஒப்பிட்டும் எத்தனையோ சான்றுகளை நான் ஏற்கனவே அளித்திருக்கிறேன்.

எம்.ஜி.ஆர். அவர்களின் 11 ஆண்டுக் கால ஆட்சியைப்பற்றி இப்போது உரத்த குரலில் முழக்கமிட்டுக் கண்டிக்கிற இந்த ராஜீவ் காந்தி என்பவர் யார்? இந்தியாவின் பிரதமர்!

எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது இந்திய இலங்கை ஒப்பந்த வெற்றிவிழாப் பொதுக் கூட்டத்தில் - எம்.ஜி.ஆர். பேசுவதற்கு வசதியாக எழுந்தோடிச்சென்று மைக்கைச் சரி செய்து கொடுத்தவர்!

அதைப் பார்த்து மைக்செட் பையன் கூட மூக்கிலே விரல் வைத்துக் கொண்டான் என்று கூட்டத்துக்குச் சென்றோர் பேசிக் கொண்டனர்.

அடுத்த நிகழ்ச்சி - நேரு சிலை திறக்க வந்தபோது - இதே பிரதமர் ராஜீவ் காந்திதான்; எம்.ஜி.ஆர். நடந்து செல்ல இடையூறாக இருந்த டீப்பாயை நகர்த்திப்போட்டு தனது பவ்யத்தையும் பணிவையும் காட்டிக் கொண்டவர்!

இந்திய இலங்கை ஒப்பந்த வெற்றி விழா நிகழ்ச்சியில் அவர்; எம்.ஜி.ஆர். அவர்களைப் பாராட்டிக்கூறிய வாசகங்கள் - அப்பப்பா; எம்.ஜி.ஆருக்காக நடைபெற்ற கவியரங்கத்தில் கூட கவிஞர்கள் அவரை அந்த அளவு புகழ்ந்திருக்க மாட்டார்கள்!

எம்.ஜி.ஆர். மறைந்தபோது ராஜீவும் மற்ற காங்கிரஸ்காரர்களும் அவரை திராவிட என்ற சொல்லுக்குள் அடக்கவில்லை! தேசியத் தலைவர் என்றே பல தடவை - பற்பல தடவை - பல்லாயிரம் தடவை - பலகோடி தடவை உச்சரித்துப் புகழ்ந்தனர்!

அந்தத் தேசியத் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சி, பதினோரு ஆண்டுக் காலம் நடந்ததே; அதுவும் சேர்ந்துதான் தமிழ்நாட்டை சீரழித்து விட்டது என்று இப்போது விழுப்புரத்தில் பேசியிருக்கிறார் ராஜீவ் காந்தி!

திராவிட ஆட்சி என்கிறார் - எம்.ஜி.ஆரை தேசியத் தலைவர் என்றார் - திராவிட ஆட்சிக்காலமான இருபது ஆண்டுகளில் அந்தத் தேசியத் தலைவர் ஆட்சியையும் சேர்த்து உதவாக்கரை ஆட்சி என்கிறார்! அதாவது தேசியத் தலைவர் ஆட்சியும் தமிழகத்தைத் தேய்த்து விட்டது என்கிறாரா?

பதினோரு ஆண்டுகால எம்.ஜி.ஆர். ஆட்சியைப் பாராட்டி பாரத ரத்னா பட்டம் தரப்பட்டது! இந்தியாவிலேயே மிக உயர்ந்த பட்டம் - ராஜீவ் காந்தியின் விழுப்புரம் பேச்சின் அடிப்படையில் பார்த்தால் தமிழ்நாட்டை சீரழித்து விட்டதும் தமிழ்நாட்டை பிரதான இடத்திலிருந்து தள்ளி விட்டதுமான - இருபதாண்டு திராவிட ஆட்சியில் ஒரு பகுதியான பதினோரு ஆண்டு கால ஆட்சி நடத்திய எம்.ஜி.ஆருக்கு அந்தப் பட்டம் தரப்பட்டிருக்கிறது! இப்போது அந்த ஆட்சியையும் சேர்த்துத்தான், தமிழ்நாட்டை அழித்து விட்ட ஆட்சியென்று ராஜீவ் காந்தி கூறுகிறார்.

காரியம் நடக்கிற வரையில்
காலைப்பிடி!
காரியம் முடிந்ததும்
கழுத்தைப் பிடி!

கிராமங்களில் இப்படியொரு பழமொழியுண்டு! ராஜீவ் காந்தி என்பவர், பிரதமராகப் போகிறார் என்பதை முன்கூட்டியே அறிந்து இயற்றப்பட்ட பழமொழிபோலும் அது!

காங்கிரஸ் ஆட்சியின் இருபது ஆண்டுகால வரலாற்றுச் சிறப்புகளை - நேரம் கிடைக்கும்போது, தொகுத்து எழுதுகிறேன்! ராஜாஜியின் ஆட்சியை காமராஜர் எப்படி சிலாகித்தார் - காமராஜர் ஆட்சியை ராஜாஜி எப்படி சிலாகித்தார் என்பதெல்லாம் கல்லின்மேல் எழுத்துக்களாக இன்றைக்கும் ஆதாரங்களாக இருப்பவை!

திடீரென அரசியலுக்கு வந்துவிட்ட ராஜீவ் காந்திக்கு அந்த விவகாரங்கள் தெரிந்திருக்க நியாயமில்லை - யாரும் சொல்லவுமில்லை போலிருக்கிறது!

இன்றல்லவா காமராஜர் புகழ் பாடுகிறார்கள்! அவரது நினைவு மண்டபத்து முகப்பில் வைத்த கைராட்டை சின்னத்தை தூக்கி எறிந்தவர்கள் யார் என்பதை நாடு மறந்துவிட்டதா? எமர்ஜன்சியில் கைது செய்யப்பட்ட தேசத் தலைவர்கள் அக்டோபர் 2ந் தேதி காந்தி பிறந்த நாளில் விடுதலை செய்யப்படுவார்கள் என நம்பி எதிர்பார்த்து ஏமாந்த காரணத்தால் மனமுடைந்து காமராஜர் அதே அக்டோபர் 2ந் தேதி பிற்பகல் மாரடைப்பால் காலமான வரலாறு; தமிழ்நாட்டு மக்களிடமிருந்து மறைக்கப்பட்டுவிட முடியுமா?

நேற்று பிரதமர் ராஜீவ் காந்தி ஆதிதிராவிடர்களுக்கான சில நூறு வீடுகளைத் திறந்தாரே - அந்தத் திட்டம் தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான் இந்தியாவில் முதன் முதலாக தொடங்கப்பட்டது என்பது ராஜீவ் காந்திக்கு தெரியுமா?

ஆதிதிராவிடர்க்கு இலவசமாக காங்ரீட்டு வீடுகள் எல்லாக் காலனிகளிலும் கட்ட திட்டமிட்டு - முதல்கட்டமாக 1974-75ஆம் ஆண்டுகளில் சுமார் நாற்பதாயிரம் வீடுகளைக் கட்டி இலவசமாக வழங்கியது கழக ஆட்சி! அப்போது அதுகுறித்து மத்திய அமைச்சர் ஜெகஜீவன்ராம் எப்படியெல்லாம் புகழ்ந்து பேசினார் என்பது ராஜீவுக்குத் தெரியாது; அவரது அன்னையார் இந்திரா அம்மையாருக்குத் தெரியும்!

இப்படி எத்தனை எத்தனை ஏழை எளியோர்க்கான திட்டங்கள் - சமூக நலத் திட்டங்கள் - தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர் நலத் திட்டங்கள் - தொழில் வளர்ச்சித் திட்டங்கள் - ஒன்பதாண்டு கால தி.மு.க. ஆட்சிக் காலத்தில் என்பதற்கு ஏராளமான சான்றுகள் இருக்க -

இந்தியாவின் பிரதமராக இருக்கிற ஒருவர் - வாய் புளித்ததோ; மாங்காய் புளித்ததோ என்ற முறையில் பேசுகிறார் என்றால்; அதிகாரக் கொடி பறக்கிறது என்பது ஒன்றைத்தவிர வேறு என்ன?

திராவிட இயக்கத்தின் சுவடு தெரியாமல் அழித்து விடுகிறோம் எனக் கங்கணம் கட்டிக்கொண்டு செயல்படக் காங்கிரஸ்காரர்கள் முனைந்துவிட்டார்கள் என்பதைத்தான் பிரதமரின் பேச்சு சுட்டிக்காட்டுகிறது!

அண்ணாவின் உண்மைத் தம்பிகளாக இருப்போர் அந்த அறைகூவலை ஏற்றுக்கொண்டு அணிவகுப்போம்! பணி தொடர்வோம்!

கிளம்பிற்றுக்காண் தமிழச் சிங்கக்

கூட்டமென முரசொலிப்போம்!

தேசியமெனும் திரைமறைவில் ஜனநாயகத்தைக் கருவறுக்கவும் - மொழி, இன உணர்வுகளை ஒழித்துக் கட்டவும் - மாநில மக்களின் சுயமரியாதையை மிதித்துத் துவைக்கவும் - இந்திரா காங்கிரஸ் பின்னுகிற சதி வலையைச் சுக்கு நூறாக்குவோம்! வாரீர்; வாரீர், என அழைக்கிறேன்!

அன்புடன்

மு.க.

06-08-1988

1580. டெல்லிப் பயணம் - மகிழ்ச்சிக்குரியதே!

உடன்பிறப்பே,

டெல்லியில் இத்திங்கள் ஆறு, ஏழு ஆகிய இருநாட்கள் ஏழு கட்சிகளின் கூட்டணி அமைப்பான தேசிய முன்னணி கலந்துரையாடல் கூட்டத்திற்குச் சென்று திரும்பியவுடன் இந்தக் கடிதம் எழுதுகிறேன். 5-ந் தேதி மாலையே அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நானும், தலைமைக் கழகச் செயலாளர் நண்பர் ஆற்காடு வீராசாமியும், தம்பி முரசொலி மாறனும் சென்னையிலிருந்து கிளம்பினோம். டெல்லியில் தம்பிகள் வை.கோபால்சாமியும், என்.வி.என். சோமுவும், வழக்கறிஞர் கணபதியும் எங்களுடன் முன்னணி கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

சென்னையிலிருந்து புறப்படும் பொழுதே விமானம் இரண்டு மணி நேரம் தாமதம் - ஐதராபாத் வழியாகச் செல்லும் அந்த விமானம் இரவு 11 மணிக்கு டெல்லியை அடைந்தது. அங்கிருந்து தங்குமிடத்துக்குச் சென்று உணவருந்தி உறங்கத் தொடங்கவே இரவு 12 மணி ஆயிற்று.

காலையில் டெல்லியில் உள்ள ஆந்திர அரசு மாளிகையில் முதல்வர் என்.டி.ஆர். அவர்கள் சிற்றுண்டிக்கான அழைப்பைத் தொலைபேசி மூலம் தெரிவித்தார். அதுவும் எப்போது? காலை எட்டு மணிக்கே! அங்கு சென்று அவருடன் முன்னணி குறித்து ஒருமணி நேரத்துக்கு மேலாகப் பேசிக் கொண்டிருந்துவிட்டுத் திரும்பினால் - வரிசையாக பத்திரிகைக்காரர்கள். ஒவ்வொரு பத்திரிகையாளரும் தனித் தனியாக சிறப்புப் பேட்டியே தேவையென வலியுறுத்தியதால் பகல் ஒன்றரை மணி வரையில் அந்தப் பணிக்கே நேரம் சரியாக இருந்தது. அதற்கிடையே டெல்லியில் உள்ள வேறு கட்சிகளின் தலைவர்கள் வந்து சந்தித்த வண்ணமிருந்தனர். பிற்பகல் 3 மணிக்கு முன்னணியின் கூட்டம் -

குறித்த நேரத்தில் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருந்ததால் இரண்டரை மணிக்கே எழுந்து குளித்துக் கொண்டிருந்தேன்.

குளிக்கும்பொழுதுதான் அந்தத் திகில்! தம்பி கோபால்சாமியும் தம்பி சோமுவும் நண்பர் சீனுவும் ஓடிவந்து குளியலறைக் கதவைத் தட்டினார்கள். நான் பதறிப்போய்க் கதவைத் திறந்ததுதான் தாமதம் அண்ணே! நிலநடுக்கம்! பூமி அதிர்ச்சி! கட்டிடம் ஆடுகிறது! என்று கூச்சலிட்டவாறே கோபால்சாமி, என்னை குளியலறையிலிருந்து இழுத்து வந்து விட்டார். ஒரு சிறிய துண்டைக் கட்டிக்கொண்டு வெளியே வந்தேன். அந்த ஓட்டலில் ஏழாவது மாடியில் நாங்கள் இருக்கிறோம் - ஒரு நிமிடத்துக்கு மேலாகத் தொடர்ந்து அந்தக் கட்டிடம் அதிர்ந்துகொண்டிருந்தது. அறையில் உள்ள பொருட்கள் அங்குமிங்கும் அசைந்து கொண்டிருந்தன.

ஆபத்தான நிலையில் ஏழாவது மாடியில் இருக்கிறோம்; என்ன செய்ய முடியும்; ஆனது ஆகட்டுமென அமைதியாகவே உடை உடுத்திக்கொண்டு கீழே இறங்கத் தொடங்கினோம். அசாம் பகுதியிலிருந்து ஆப்கானிஸ்தான் வரையில் ஏற்பட்ட அந்த நிலநடுக்கம் புதுடெல்லியில் நான் தங்கியிருந்த ஓட்டல் வழியாகத்தான் பயணம் நடத்தியிருக்கிறது.

பிறகு தேசிய முன்னணி கூட்டத்திற்குச் சென்றால் - கூட்டம் நடைபெறும் காம்பவுண்டுக்குள்ளேயே இந்திரா காங்கிரஸ் இளைஞர்கள் சுமார் நூறு பேர் ஆக்ரோஷமாகக் கூச்சல் போட்டுக் கொண்டு முன்னணிக் கூட்டத்திற்கு வரும் தலைவர்களை வழிமறித்துக் கேவலமாகத் திட்டுகிற பணியில் ஈடுபட்டிருந்தனர்!

சில தலைவர்களின் கார்களில் கம்புகளைக் கொண்டும் தாக்கினர். நான் காரிலிருந்து இறங்கியதும் என்னையும் வழிமறித்து வளைத்துக் கொண்டு எதிர்ப்புக் கூச்சலிட்டனர். எங்கே? டெல்லியில்! அதுவும் தேசிய முன்னணி கூட்டம் நடக்கும் காம்பவுண்டுக்குள் லாரிகளில் வந்து புகுந்து கொண்டு! காம்பவுண்டுக்கு வெளியே கூட அல்ல! அந்தக் கூட்டத்திற்குள் திரு. ராமராவ் அவர்களே நுழைந்து வந்து என்னைக் கட்டி தழுவி கூட்டம் நடக்கும் இடத்துக்கு அழைத்துச் சென்றார்கள்.

நான் போவதற்கு முன்பு உள்ளே சென்ற தலைவர்களை அவர்கள் வழிமறித்து மிக இழிவான கோஷங்களை எழுப்பியதாக உள்ளே சென்ற பிறகு கேள்விப்பட்டேன். உள்ளே கூட்டம் நடக்கும்

பொழுதே அவர்கள் வெளியே (ஆனால் காம்பவுண்டுக்குள்) சுமார் ஒரு மணி நேரம் இப்படிக் கூச்சல் போட்டவாறு அமளியில் ஈடுபட்டிருந்தும் ஒரு போலீஸ்கூட வந்து எட்டிப் பார்க்கவில்லை! போலீசுக்குத் தகவல் சொல்லியும் யாரும் வரவில்லை.

நில நடுக்கத்திலிருந்தே விடுபட்டு வந்துள்ளோம்; இது என்ன பெரிய காரியம் என்று சிரித்துக்கொண்டே மற்றவர்களிடம் நான் சொன்னேன் என்றாலும் ஒன்றை யாரும் மறந்து விடக் கூடாது -

பிரதமர் ராஜீவின் தமிழக சுற்றுப் பயணத்துக்கு மூன்று நாட்களும் பல்லாயிரக்கணக்கான போலீசார் - பெரிய போலீஸ் அதிகாரிகள் - அஃதன்னியில் பாதுகாப்பு ஏற்பாடுகள்! சரி; பரவாயில்லை!

இந்தியாவில் உள்ள ஏழு கட்சிகளின் தலைவர்கள், அக்கட்சிகளின் முன்னோடிகள், ஆந்திரா, அரியானா, கர்நாடகம், அசாம் ஆகிய மாநிலங்களின் நான்கு முதலமைச்சர்கள் கலந்துகொள்கிற இரண்டு நாள் நிகழ்ச்சி டெல்லியில் நடைபெறுகிறது என்பது தெரிந்தும் போலீசார் யாரும் அந்தப்பக்கம் வரவே இல்லை! இ.காங்கிரஸ் இளைஞர் பிரிவினர் திட்டமிட்டுக் கலவரம் செய்கிறார்கள் - காம்பவுண்டுக்குள்ளே புகுந்து தலைவர்களை வழிமறிக்கிறார்கள் - என்று கூறி போலீஸ் உதவி கேட்டபிறகும் போலீசார் வரவில்லையென்றால் காங்கிரஸ் ஆட்சியாளருக்கும் காங்கிரஸ் கார்ர்களுக்கும் ஜனநாயக மாண்பு குறித்துப் பேச அணுவளவு தகுதியாவது இருக்கிறதா என்றுதான் கேட்கத் தோன்றுகிறது!

இ.காங்கிரசார் நடத்திய அந்த எதிர்ப்பைத் துச்சமென மதித்து - பிற்பகல் 3 மணி முதல் இரவு 7 மணி வரையில் தேசிய முன்னணி பற்றிய கலந்துரையாடல் நடைபெற்றது.

அதன்பிறகும் எனக்கு ஓய்வில்லை. 10 மணி வரையிலே மீண்டும் பத்திரிகையாளர்கள் - செய்தி நிறுவனங்களின் நிருபர்கள் - அதன்பிறகு உறங்கச் சென்றாலோ; பிற்பகலில் ஏற்பட்ட நில நடுக்கம் மீண்டும் வரக்கூடுமோ என்ற சந்தேகம்! இருந்தாலும் அதே ஓட்டலில் அதே மாடியில் உறங்கியாயிற்று!

காலையில் 10 மணிக்கு மீண்டும் முன்னணிக் கூட்டம் - அதற்கிடையே, தங்கியிருந்த இடத்துக்கு வந்த தலைவர்களுடன் முன்னணி பற்றிய ஆலோசனைகள்!

10 மணிக்கு தொடங்கிய அந்தக் கூட்டம் இடைவேளையின்றி (உணவுக்காக கூட எழாமல்) பிற்பகல் 3 மணி வரையில் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில்தான் முன்னணியின் திட்டங்கள், செயல்பாடுகள், தலைவர், அமைப்பாளர், தலைமைக்குழு, மற்றும் ஏனைய குழுக்கள் பற்றிய பிரச்சினைகள் விரிவாக ஆராயப்பட்டு விவாதிக்கப்பட்டன. 11 பேர் கொண்ட தலைமைக் குழுவில் கழகத்தின் சார்பில் நானும் இடம் பெற்றுள்ளேன்.

முன்னணியின் திட்டங்கள் 50-க்கு மேற்பட்டவை - அதற்கான விபரம் விரைவில் அறிவிக்கப்பட இருக்கிறது! அவை குறித்து நீண்ட நேரம் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது.

நாகாலாந்தில் மத்திய அரசும், காங்கிரஸ் கட்சியும் நடத்துகிற ஜனநாயக விரோதச் செயலைக் கண்டித்து ஒரு தீர்மானம்.

தமிழ்நாட்டில் தேர்தலை நடத்தாமல் சாக்குபோக்கு சொல்கிற கூற்றைக் கண்டித்தும், உடனடியாக தேர்தலை நடத்த வலியுறுத்தியும் மற்றொரு தீர்மானம்.

இலங்கையில் இந்திய இராணுவத்தின் போர் நிறுத்தம் கோரியும் உடனடியாக விடுதலைப்புலிகளுடனும் மற்றவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்த இந்திய அரசு முன்வர வேண்டுமென வற்புறுத்தியும் இன்னொரு தீர்மானம்.

இந்த மூன்று முக்கியமான தீர்மானங்கள் தேசிய முன்னணியின் கூட்டத்திற்கு முத்தாய்ப்பு வைத்தது போல!

இந்த முன்னணி உருவாகப் பெரும் முயற்சியில் ஆரம்ப முதலே ஈடுபட்டு வெற்றி கண்டிருப்பவர் ஆந்திர முதல்வரும் தெலுங்கு தேசக்கட்சியின் தலைவருமான திரு.என்.டி.ஆர். அவர்கள்!

அவரைத் தொடர்ந்து அரியானா முதல்வர் தேவிலால் அவர்கள் இந்த முயற்சியில் பெரிதும் ஈடுபட்டுள்ளார்.

முன்னணி உருவாகியுள்ளது என்ற நற்செய்திக்கு திரு. வி.பி. சிங் அவர்களும் முக்கியமான காரணகர்த்தா என்றே கூற வேண்டும்.

மற்றும் தி.மு.க., ஜனதா, அசாம்கணபரிஷத், காங்கிரஸ் (எஸ்) ஆகிய கட்சிகளின் சிறந்த ஒத்துழைப்புடன் தேசிய முன்னணி அமைந்துள்ளது.

இந்த முன்னணிக்காக பூர்வாங்கக் கூட்டத்திற்குக் கழகச்சார்பில் நாடாளுமன்ற தி.மு.க. கட்சித் தலைவர் என்ற முறையில் முரசொலி மாறன் சென்று, கருத்தறிந்து வந்தார். தம்பி மாறன் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துச் சொன்ன அந்தக் கருத்துக்களையும் - முன்னணியின் திட்டங்களையும் - ஆராய்ந்து விவாதித்து முடிவெடுக்க கடந்த ஜூலை 24ந் தேதியன்று சென்னையில் தலைமைக்கழக நிர்வாகக் குழு கூடியது. காலையும் மாலையும் கலந்துரையாடி - அதன் அடிப்படையில் சில கருத்துக்களை முன்னணியின் ஆரம்ப அமைப்பாளராக செயல்பட்ட திரு. உபேந்திரா அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. நிர்வாகக் குழு கூடி, கழக சார்பில் அனுப்பி வைக்கப்பட்ட கருத்துக்கள் இப்போது டெல்லியில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

தெலுங்கு தேசக்கட்சி உபேந்திரா அவர்களை சும்மா சொல்லக் கூடாது! திறமைவாய்ந்தவர் மட்டுமல்ல; சுறுசுறுப்பாகச் செயல்படக்கூடிய ஒரு தேனீ அவர் - தெலுங்கு தேசக்கட்சிக்கு! பொறுப்பேற்றுக் கொண்ட காரியத்தை ஏதோ ஒப்புக்கு நிறைவேற்ற முனைபவராக இல்லாமல் - அந்தக் காரியத்துடனேயே தன்னை முழுமையாக ஐக்கியப்படுத்திக் கொண்டு அயராது பாடுபட்டு - வேறு சிந்தனையில்லாமல் கட்சிப்பணியாற்றுகிற கடமை வீரர் அவர்! அவரைப் பார்க்கும்போது என்.டி.ஆர். மீது எனக்குப் பொறாமையாகக்கூட இருந்தது!

உபேந்திரா அளவுக்கு ஆற்றல் - அறிவு - அனுபவம் - அனைத்தும் பெற்ற முன்னோடிகள் பலர் நமது கழகத்திலும் உண்டு! அவற்றைப் பயன்படுத்திப் பணியாற்ற இன்று பெற்றுள்ள ஆர்வத்தை மேலும் முழுமையாகப் பெற்று விடுவார்களேயானால் என் மகிழ்ச்சி இரட்டிப்பாகுமல்லவா?

ஒன்று சொல்கிறேனே! இரண்டு நாள் டெல்லியில் சில மணித்துளி ஓய்வு கூட இன்றி - பணி முடித்துவிட்டு, நேற்றிரவு (7.8.88) சுமார் 12 மணியளவில் சென்னை விமான நிலையம் வந்தடைந்தேன்.

சென்னை, செங்கை அண்ணா மாவட்டக்கழக முன்னணியினர், மற்றும் உடன்பிறப்புகள் தம்பி டி.ஆர். பாலு தலைமையில்

மகிழ்ச்சியுடன் வரவேற்று வீடு வரை கொண்டு வந்து விட்டுச் சென்றனர்.

12 மணிக்கு முரசொலிக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு, டெல்லியில் நடைபெற்ற முன்னணி கூட்டச் செய்திகள் வந்ததா என்று கேட்கிறேன். துணை ஆசிரியர்கள் பதில் சொல்கிறார்கள் ஒன்றுமே வரவில்லை என்று.

வராவிட்டால் நீங்களாவது பி.டி.ஐ., யு.என்.ஐ. செய்தி நிறுவனங்களை கேட்டீர்களா? என வினவினேன். இல்லை என்றார்கள்.

உடன் முரசொலி அலுவலகம் சென்றேன். அங்கு போய்ப் பார்த்தால் யு.என்.ஐ. செய்தி வரும் டெலிபிரிண்டர் இயந்திரத்தில் அந்தச் செய்திகள் முழுதும் மாலை 4 மணிக்கே அடித்திருக்கிறார்கள். அதனை துணையாசிரியர்கள் கவனிக்காமலே, தொங்கிக் கொண்டிருக்கின்றன.

பிறகு நானே இரவு ஒன்றரை மணி வரையில் முரசொலியில் உட்கார்ந்து வேலை பார்த்து முடித்து விட்டு - தினகரன் ஆசிரியர் பகுதியினரோடு தொடர்புகொண்டு அவர்களிடமும் செய்தியை சரிபார்த்துக் கொண்டு, வீடு வந்து சேர்ந்தேன். பிறகு உணவருந்தி இரண்டு மணிக்கு மேல் தூங்கினேன்.

ஆற்றல் - அறிவு - இருந்தால் போதாது, ஆர்வமும் தேவை என்பதற்காக சொல்கிறேன்!

பெரியாரின் குடியரசு அலுவலகத்தில் துணையாசிரியர்கள் குழுவில் ஒருவனாக இருந்த அந்தக் காலத்தையும் - அப்போது இருபது வயதில் பெற்றிருந்த அதே ஆர்வம், இப்போது 65 வயதிலும் குறையாமல் குன்றாமல் இருப்பதையும் எண்ணிக் கொண்டு - மற்றவர்களும் அந்த உணர்வைப் பெறவேண்டும் என எண்ணி ஏங்கியபடி தான் தூங்கினேன்.

தேசிய முன்னணி தொடக்க விழா நடத்தும் பொறுப்பை தி.மு.க. ஏற்றிருக்கிறது -

சென்னையில் வழக்கம்போல் செப்டம்பர் 15, 16, 17 - முப்பெரும் விழா!

செப்டம்பர் 15 அண்ணா பிறந்த நாள் விழா - அறிவாலயத்தில் நடைபெற இருக்கிற விழா நிகழ்ச்சிகளில் ஆந்திர முதல்வர் என்.டி.ஆர். அவர்கள் கலந்து கொள்கிறார்.

செப்டம்பர் 16ஆம் நாள் தேசிய முன்னணியின் தொடக்க விழா மாபெரும் பேரணிப் பொதுக்கூட்டத்துடன்! அதற்கான ஏற்பாடுகளை கவனிப்பது குறித்து ஆலோசிக்க - தலைமை நிர்வாகக் குழு விரைவில் கூடும்.

டெல்லிப்பயணம் மகிழ்ச்சியான ஒன்றுதான்!

மகிழ்ச்சிக்கிடையிலேயும் மனத்தில் அழுத்திக் கொண்டிருப்பதை மடல் வாயிலாகத் தெரிவித்திருப்பது - தேவையான ஒன்று என்பதற்காகத்தானே தவிர, வேறல்ல!

அன்புடன்

மு.க.

09-08-1988

1581. வழிபார்த்துக் காத்திருக்கும் விழிகள்!

உடன்பிறப்பே,

கடந்த பல ஆண்டுகளைப் போலவே இந்த ஆண்டும் கழகம் எடுக்கும் முப்பெரும் விழா!

செப்டம்பர் 15 அண்ணா பிறந்த நாள் - செப்டம்பர் 17 பெரியார் பிறந்த நாள் - தி.மு.கழகம் தோன்றிய நாள்!

செப்டம்பர் 15 அன்று அந்தந்த ஊர்களில் கழக நிர்வாகிகள், கழகத்தினர்; அண்ணா சிலைக்கு மாலை அணிவித்திட வேண்டுமென்பதற்காக - செப்டம்பர் 16 அன்று கடந்த ஆண்டினைப் போல தலைநகராம் சென்னையில் முப்பெரும் விழாவினை அண்ணா அறிவாலயத்தில் நடத்துகிறோம். திருமண மண்டபத் திறப்பு விழா - கண் மருத்துவமனைத் திறப்பு விழா - இந்த விழாக்களில் ஆந்திர முதல்வர் என்.டி. இராமராவ் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க இருக்கிறார்.

செப்டம்பர் 17 அன்று சென்னையில் தேசிய முன்னணி தொடக்க விழா நடைபெற இருக்கிறது!

மாலையில் அண்ணா அறிவாலயத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் - அந்த ஊர்வல மாட்சியினை முன்னணியின் தலைவர்கள் அண்ணாசாலையில் தனி மேடையில் நின்று காண இருக்கிறார்கள்.

ஊர்வல முடிவில் கடற்கரைச் சீரணி அரங்கில் பார் சிறுத்தலின் படை பெருத்ததோ - படை பெருத்தலின் பார் சிறுத்ததோ - என வியப்புறும் வண்ணம் பொதுக்கூட்டம் - தேசிய முன்னணித் தொடக்க விழாப் பேருரைகள்!

வெளியூர்களில் இருந்து வருகிற கழக உடன்பிறப்புகள் செப்டம்பர் 16ந் தேதி மாலையிலேயே சென்னைக்கு வந்து சேர்ந்துவிட வேண்டும் - 17ந் தேதி ஊர்வலத்திலும் பொதுக்கூட்டத்திலும் கலந்துகொண்டு 18ந் தேதியன்று ஊர் திரும்புகிற வகையில் - முன்கூட்டியே போக்குவரத்து வசதிகள், வாகன வசதிகளை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

16ந் தேதியே தலைநகர் சென்னையில் விழா ஆரம்பமாகிவிடுகிறது!

ஓராண்டுக் காலமாகக் கட்டப்பட்டு - சென்னையில் உள்ள மிகப்பெரிய திருமண மண்டபங்களில் ஒன்று எனப் புகழப்படும் எழிலார்ந்த மன்றத்தை நமது இனமானப் பேராசிரியர் தலைமையில் தெலுங்கு தேசக் கட்சியின் தலைவரும் - தேசிய முன்னணியின் தலைவருமான ஆந்திர முதல்வர் திறந்து வைக்கிறார் என்பதும் - அவரது தலைமையில் வெற்றிச்செல்வி அன்பழகன் இலவசக் கண் மருத்துவமனையை நான் திறந்து வைக்கிறேன் என்பதும் உன் இதயத்தில் பாசமழை பொழியும் நிகழ்ச்சிகள் அல்லவா? உன்னையும் என்னையும் - மன்னிக்கவும் - பிரித்துச் சொல்கிறேன் பார் - நம்மை உணர்ச்சி வெள்ளத்தில் இணைக்கும் நிகழ்ச்சிகள் அல்லவா?

இந்த நிகழ்ச்சிகள் மட்டுமல்ல; செப்டம்பர் 16 முப்பெரும் விழாவில் தான் நாம் ஆண்டுதோறும் தலைமைக் கழகச் சார்பில் வழங்கும் விருதுகளும் மூவருக்கு அளிக்கப்பட இருக்கின்றன.

1985ஆம் ஆண்டு பெரியார், அண்ணா, கலைஞர் விருதுகளை முறையே மன்னை அவர்களும், பேராசிரியர் அவர்களும், கவியரசு பொன்னிவளவன் அவர்களும் பெற்றனர்.

1986ஆம் ஆண்டு அந்த விருதுகளை முறையே அன்பில் அவர்களும், சி.வி.எம்.அண்ணாமலை அவர்களும், சாதிக்பாட்சா அவர்களும் பெற்றனர்.

1987ஆம் ஆண்டு அந்த விருதுகளை முறையே நீலநாராயணன் அவர்களும், நாஞ்சிலார் அவர்களும், திருமதி பொற்செல்வி இளமுருகு அவர்களும் பெற்றனர்.

இந்த ஆண்டு தந்தை பெரியார் விருதினைப் பெற இருப்பவர் - கழகத்தின் வீறுமிக்க விரிவுரையாளரும் சுயமரியாதைச்

சுடருமான இளம்பரிதி அவர்கள்!

அறிஞர் அண்ணா விருதினைப் பெற இருப்பவர் நிலைகுலையா நெஞ்சினர் நெல்லையின் கழகக் காவலர் டாக்டர் பத்மநாபன் அவர்கள்!

கலைஞர் விருதினைப் பெற இருப்பவர் இனஉணர்வுக் கவிமுரசாம் கவியரசு முடியரசன் அவர்கள்!

இந்த எழுச்சிமிகு விழா கண்டிடவும் அண்ணா அறிவாலய வளாகத்திற்குள் உன் போன்றோர் உழைத்தளித்த நிதியால் உயர்ந்துள்ள எழிலார் கட்டிடங்களின் திறப்பு விழாக்கள் கண்டிடவும் செப்டம்பர் 16ந்தேதி காலைமுதலே நீ வந்துவிட்டாயா என என் கண்கள் தேடுமன்றோ?

செப்டம்பர் 17ந் தேதி முழுவதும் ஊர்வலத்திலும் - முன்னணியின் தொடக்க விழாப் பொதுக்கூட்டத்திலும் கலந்துகொண்டு 18ந் தேதியன்று நீ எம்மிடம் விடைபெற்றுப் புறப்படும் வரையில் உன் மத்தியில் இருப்பதில் நான் எத்துணை இன்பங்கொள்வேன் - இதயம் பூரிப்பேன் - என்பதெல்லாம் நீ அறியாததா உடன்பிறப்பே!

தேசிய முன்னணி உருவாகியிருக்கிறது. இராமராவ் அவர்களைத் தலைவராகவும் - வி.பி. சிங் அவர்களை அமைப்பாளராகவும் கொண்டு!

தி.மு.கழகம், தெலுங்கு தேசம், அசாம் கணபரிஷத் ஆகிய மாநிலக் கட்சிகள் இந்த முன்னணியில் இடம் பெற்றுள்ளன.

இடம் பெற்றுள்ளன என்பதற்கும் இணைந்து விட்டன என்பதற்குமுள்ள வேறுபாட்டினை எவரும் எளிதில் புரிந்து கொள்வர்; எரிச்சலார் சிலரைத்தவிர!

முன்னணிக்கென ஒரு கொடியிருப்பினும் - அந்தந்தக் கட்சிகளின் கொடிகள் பறந்திட அந்தக் கொடி குறுக்கே நிற்காது!

தேர்தல் சின்னங்களும் அவ்வாறே!

எனவே நமது இருவண்ணக் கொடி - உதயசூரியன் சின்னம் - கழகத்தின் தனித்தன்மை - கொள்கை கோட்பாடு எதற்கும்

சேதாரமும் இல்லை!

அப்பேற்பட்ட பயங்கர எமர்ஜன்சி பயமுறுத்தலின் போதே திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தடை வருமென மிரட்டப் பட்டபோதே அனைத்திந்திய தி.மு.கழகம் எனப் பெயர் வைத்துக் கொள்ளலாம் எனச் சிலர் யோசனை கூறினர்; தடை மிரட்டல் கேட்டு அவர்கள் அப்போதே தடம் புரண்டும் விட்டனர்; அந்த நிலையிலும் கூட அசைந்து கொடுக்காத நமது மனஉறுதியும் - மாண்புறு இலட்சியமும் - நமது தனித்தன்மையும் - வேறு எந்த நிலையிலும் குலைந்து போகாது என்பதை நான் விவரிக்க வேண்டுமா என்ன?

ஒரு மாநிலக் கட்சியாக இருந்து மாநில உரிமைகள் அனைத்துக்காகவும் வாதாடுவோம் - போராடுவோம் - அதே சமயம் இந்திய நாட்டு ஜனநாயகம் காப்பதிலும், இந்திய நாட்டின் பாதுகாப்பைப் பேணுவதிலும் - தயங்காமல் ஈடுபடுவோம் என்பது கழகத்தின் கடந்தகால வரலாற்றை உணர்ந்தோர்க்குப் புரியவே செய்யும்! எனவே அவர்கள் உளறல்களைப் பொருட்படுத்திடார்!

தமிழ் ஈழத்தில் இந்திய ராணுவம் போர் நிறுத்தம் செய்து விடுதலைப் புலிகளுடனும் மற்றவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

மொழிப் பிரச்சினையில் நேருவின் உறுதிமொழி நடைமுறைப்படுத்தப்படும்.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கிடு மளவுக்கும் மத்தியில் உண்மையான கூட்டாட்சித் தத்துவம் அமைகிற அளவுக்கும் மறுபரிசீலனை நடத்தப்படும்.

மண்டல் கமிஷன் பரிசீலனைக்கு விடப்பட்ட விஷயங்களின் வரம்புக்கு உட்பட்டு வேலை வாய்ப்பு, கல்வி வாய்ப்புகளைப் பெற முன்னுரிமை அளித்திட - மண்டல் கமிஷன் அறிக்கை ஒரு காலக் கெடுவுக்குள் அமல் நடத்தப்படும்.

தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான திட்டங்கள் விரைவுபடுத்தப்படும்.

என்பன போன்ற தி.மு.கழகத்தின் தீர்மானங்களும் - முற்போக்குத் திட்டங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டு இடம்பெற்றுள்ள தேசிய முன்னணியின் தொடக்கவிழாதான் தமிழகத் தலைநகரில் நடைபெற இருக்கிறது!

விழாக்கள் காணவும் - கண்டு திரும்பிடவும் நான் குறிப்பிட்ட நாட்களை மனத்திற் கொண்டு, அதற்கேற்ப போக்குவரத்து வசதிகளுடன் - என் அன்பு உடன்பிறப்பே; இப்போதே பயணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்திடுக!

நீ வரும் வழி பார்த்துக் காத்திருக்கும் என் விழிகள்!

விழியினும் உயர்ந்தோய்! என்னுயிரினும் மேலான அன்பு உடன்பிறப்பே! விழிப்புற்றது தமிழகம் என வையத்திற்குணர்த்த எழுந்திடு; என் சிங்கமே!

அன்புடன்

மு.க.

26-08-1988

1582. வந்திடுக சென்னை நோக்கி! வரவேற்பேன் இரு கரம் கூப்பி!

உடன்பிறப்பே,

15 - 16 - 17 முப்பெரும் விழாவும் தேசிய முன்னணித் தொடக்க விழாவும் - நாட்கள் பறந்துகொண்டிருக்கின்றன! இடையில் இன்னும் சில நாட்களே உள்ளன! மாவட்ட அமைப்புகள், ஒன்றிய நகர அமைப்புகள் கலந்து பேசி சென்னைப் பயணத்துக்கான முறையான ஏற்பாடுகள் ஆங்காங்கு நடைபெறுவதறிந்து மகிழ்கிறேன். இரண்டு முழு நாட்கள் சென்னையில் தங்க வேண்டியுள்ளதே; வசதிகள் - செலவுகள் குறித்த கவலை உன்போன்ற உடன்பிறப்புகள் பலருக்குப் பெருமூச்சாக வெளிப்பட்டது எனவும் கேள்விப்படாமல் இல்லை நான்!

என்செய்வது; பணம் கொடுத்து ஆள் சேர்த்துப் பவனி நடத்தும் பழக்கம் என்றைக்கும் நமது கழகத்திற்கு இருந்ததில்லை! அந்தப் பண்பாடு பயின்றவர்களும் அல்லர் நமது உடன்பிறப்புகள்! எனவே இன்னல் இடையூறுகளைப் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்!

யாருக்கும் எந்த இடைஞ்சலும் தராமல் - எதையும் அமைதி வழி செயல்படுத்த வேண்டுமென்பதில் அதிக அக்கறை கொண்டது தி.மு.கழகம் என்பதால் அந்த அறவழியை என்றும் கடைப்பிடிக்க கடமைப்பட்டுள்ளது!

15ந் தேதி அண்ணா பிறந்த நாளன்று நீயும் ஏனைய உடன்பிறப்புகளும் அந்தந்த ஊர்களில் இருந்து அண்ணா சிலைக்கு மாலை அணிவிக்க வேண்டியிருப்பதால்தான் சென்னை முப்பெரும் விழாவை 16ந் தேதிக்கு அமைக்க வேண்டியதாயிற்று!

நீ உண்டியல் எடுத்து, கையேந்தி, பட்டி தொட்டிகளில் பம்பரமெனச் சுழன்று திரட்டித் தந்த சிறுதுளிகள் பெருவெள்ள

மென உருவெடுத்து - சென்னை அண்ணா சாலையில் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கிறது அண்ணா அறிவாலயமாக!

அண்ணன் புகழ்பாடும் அந்த அழகு மாளிகையை எழுப்பிட எத்தனை எத்தனை தடைகள்! ஒரு எதிர்க்கட்சி இந்தியாவில் எங்குமில்லாத அளவுக்கு இப்படியொரு மகத்தான கட்டிடத்தைக் கலை எழிலுடன் அமைத்திருப்பதைச் சொல்லி மகிழாதார் இல்லை! அப்போதெல்லாம் நான் எண்ணிக்கொள்கிறேன்; இந்தப் பெருமை முழுதும் என் உடன்பிறப்புகளின் அயரா உழைப்புக்கு அல்லவோ என்று!

வெயிலிலும் பனியிலும் ஓராண்டு காலத்துக்கு மேலாக 1986-87களில் மேற்பார்வையிட்டு - ஒவ்வொரு கல்லாகப் பார்த்து கவனித்துக் கட்டப்பட்ட அந்த கவின்மிகு அண்ணா அறிவாலயத்திற்குள்ளேதான் - பரந்து கிடக்கும் வளாகத்தில் எட்டுமாதப் பணியின் பயனாக திருமண மண்டபம் ஒன்றும், இலவசக் கண் மருத்துவமனை ஒன்றும் காட்சி தருகின்றன!

விரைந்து அந்த வேலைகள் முப்பெரும் விழாவுக்குள் முடிய வேண்டுமென்பதால்தான் சில வாரங்களாக வெளியூர் நிகழ்ச்சிகளுக்குக் கூடச் செல்ல இயலவில்லை!

உழைப்பின் பயனை நீ வந்து நேரில் காணத்தானே போகிறாய் - அப்போது சொல்வாய்! மகிழ்வாய்! உன் பூரிப்பு கண்டு புளகாங்கிதம் அடைவேன் நான்!

16ந் தேதி திறப்பு விழாக்கள் முடிவுற்று - 17ந் தேதியன்று தேசிய முன்னணியின் தொடக்க விழா! நாட்டின் ஜனநாயக முறைகளுக்கு எத்துணை விபத்துக்கள் தோன்றிக் கொண்டிருக்கின்றன என்பதனை உணர்ந்து கவலை கொள்கிற அனைவருமே இந்தத் தேசிய முன்னணியின் அவசியத்தை அறிவர்! ஆர்வத்துடன் ஆதரிக்க முனைவர்!

அண்மையில்தானே நாகாலாந்து நிகழ்ச்சி நடைபெற்றது! காங்கிரசல்லாதவர்கள் ஆட்சி அமைத்துவிடக் கூடாதென்பதற்காகவே அந்த கவர்னர் அஞ்ஞாதவாசம் போய்விட்டார் என்பது எந்த ஜனநாயக முறைக்கு உட்பட்டது? என்ன நியாயம்? இத்தகைய காட்டுமிராண்டித்தனமான எதேச்சாதிகார முறைகளை எதிர்க்கவும் தடுத்து நிறுத்தவும்

ஜனநாயகத்தின்பால் நம்பிக்கை கொண்டவர்கள் ஓரணியில் திரள வேண்டாமா? அதற்கான வழிகாட்டுதலே தேசிய முன்னணியின் தொடக்கம்!

பத்திரிகை சுதந்திரத்தைப் பறிக்க - இதோ, அவதூறுச் சட்டம் ஒன்று தயாராகிவிட்டது! நாடு முழுதும் அதனை ஏற்க மறுத்தும்கூட எதேச்சாதிகாரத்தின் ஆணவக்குரலே ஓங்கி ஒலிக்கிறது! அந்தக் குரலை ஒடுக்கிட எதிர்க்கட்சியினர் ஓரணி திரள வேண்டாமா?

பிரதமரைச் சந்தித்து மாநிலத் திட்டங்களை நிறைவேற்றக் கோரி மனு கொடுக்கவும் அனுமதி மறுத்து எதிர்க்கட்சி நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களைத் தாக்கிக் காயப்படுத்துகின்றது காங்கிரஸ் அரசின் போலீஸ் என்றால்; பிறகு யாருக்குத்தான் இந்த நாட்டில் குரலெழுப்ப உரிமையுண்டு? இந்த அநியாயங்கள் தொடராமல் இருக்க - அவசரத் தேவையன்றோ எதிர்க்கட்சிகளின் கூட்டணி! அதற்கோர் வழிகாட்டுதல்தானே தேசிய முன்னணி!

தி.மு.க.வின் கொள்கை, லட்சியங்கள் அனைத்தையும் தேசிய முன்னணி ஏற்றுக் கொள்கிறதா?

இப்படிச் சிலர் கேட்கின்றனர்!

தி.மு.க.வின் கொள்கை லட்சியங்கள் அனைத்தையும் தேசிய முன்னணி ஏற்றுக் கொண்டுவிட்டால் - பிறகு தி.மு.க. என்றும் தேசிய முன்னணியென்றும் இரண்டு தனித்தனி அமைப்புகள் எதற்கு?

அசாம் கணபரிஷத்துக்கென தனித்தன்மை தனிக் கொள்கை கோட்பாடு உண்டு! அவற்றை அந்த மாநிலக் கட்சி இழக்காமல் தேசிய முன்னணியில் சில பொதுப் பிரச்சினைகளில் உடன்பட்டு இடம் பெறுகிறது! இணைந்து விடவில்லை!

அதே போலத்தான் தெலுங்கு தேசமெனும் மாநிலக் கட்சியும் - தேசிய முன்னணியில் குறைந்த பட்ச திட்டங்களின் அடிப்படையில் இடம் பெற்றுள்ளது! இணைந்து விடவில்லை!

தி.மு.கழகம் எடுத்துள்ள நிலையும் அதுதான்! நமது கழகத்திற்கெனத் தனிக் கொள்கை, கோட்பாடு, குறிக்கோள்

உண்டு! அவற்றை இழக்காமலும் - கழகத்தின் தனித் தன்மைக்கு ஊறு வராமலும் தேசிய முன்னணியில் இடம் பெற்றுள்ளது! இணைந்து விடவில்லை!

முன்னணியில் உள்ள எல்லாக் கட்சிகளுக்கும் உடன்பாடான குறைந்த பட்ச திட்டங்களின் அடிப்படையில் அமைந்துள்ளதே தேசிய முன்னணி!

இலங்கையில் இந்திய ராணுவம் போர் நிறுத்தம் செய்து பேச்சு வார்த்தை நடத்த முன் வரவேண்டுமென, நாம் மட்டும் சொல்லிக் கொண்டிருப்பதை, நம்மைப்போல் தமிழ் நாட்டில் சில கட்சிகள் மட்டும் சொல்லிக் கொண்டிருப்பதை இன்று அனைத்திந்திய அளவில் தேசிய முன்னணியில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டிருப்பது; வரவேற்கத்தக்க ஒன்றல்லவா?

மொழிப் பிரச்சினையில் நேருவின் உறுதிமொழியை வலியுறுத்தித் தமிழகத்தில் நாமும் நம்மைப்போல் சில கட்சிகளும் குரல் எழுப்புவதும் - டெல்லியில் ஆளுவோர் தமிழகத்திற்கு வரும்போது அந்த உறுதுமொழியை உச்சரிப்பதுமான நிலை மாறி; தேசிய முன்னணியின் குறைந்த பட்ச திட்டங்களில் ஒன்றாக நேருவின் உறுதிமொழி அமல்படுத்தப்படுவதும் ஆக்கப்பட்டிருப்பது ஏற்கத்தக்கதும் மகிழத்தக்கதுமான ஒன்றல்லவா?

அதைப் போலவே மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்துவது குறித்து தேசிய முன்னணி அளித்துள்ள உறுதியும் போற்றத்தகுந்ததுதானே!

குறைந்தபட்ச திட்டங்கள் எழுபதுக்கு மேற்பட்டவைகளில் தி.மு.க.வுக்கு விரோதமானவை எதுவுமில்லை என்கிறபோது - அந்த முன்னணியில் எவ்விதத்திலும் தனது தனித்தன்மை, தனிக்கொடி, தனித் தேர்தல் சின்னம், எதனையும் இழக்காமல் இடம் பெற்றிருப்பது எரிச்சல்காரர்களுக்கு வேண்டுமானால் ஆத்திரத்தை ஏற்படுத்திடுமேயல்லாது - மற்றவர்க்கு எந்தக் குழப்பமும் வராது!

ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஜனநாயகம் காத்திடவும் - நாட்டின் பாதுகாப்பு பேணிடவும் - தமிழ்

மொழி தமிழின உணர்வு பண்பாடு போற்றிடவும் - தி.மு.க.வின் பணி என்றென்றும் தேவை என்று அண்ணா அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்ததை நெஞ்சிலிருத்தி நிமிர்ந்து நடைபோடுவோம்! எதேச்சாதிகாரம் தலையெடுக்காமல் தடுத்திடுவோம் என முழங்கிடுவோம்!

உன் வீரநடைகாண - உன் எழுச்சி முழக்கம் கேட்க - வரும் 16ந் தேதி மாலையும் 17ந் தேதி முழுவதும் எனக்கு நல்வாய்ப்புத்தான்!

அந்த வாய்ப்பினை வழங்க; கழகக் கண்மணியே! காலைக் கதிர் போல உன் தகத்தகாய முகம் காட்டி வந்திடுக சென்னை நோக்கி! வரவேற்பேன் நான் உன்னை இரு கரம் கூப்பி!

அன்புடன்

மு.க.

03-09-1988

1583. அன்புச் சுடரே! வருக! அருவித் தமிழே! வருக!

உடன்பிறப்பே,

சென்னையில் 16ந் தேதி நடைபெறும் பெரியார் - அண்ணா - கழகம் பிறந்த முப்பெரும் விழாவையும், 17ந் தேதி நடைபெறும் தேசிய முன்னணி தொடக்க விழாவையும் தலைமைக் கழகம்தான் நடத்துகிறது எனினும் அவற்றுக்கான பெரும் பொறுப்பேற்று சென்னை மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள் மற்றும் செயல்வீரர்கள் அனைவரும் மாவட்டச் செயலாளர் தம்பி டி.ஆர். பாலு எம்.பி. தலைமையில் பம்பரமெனச் சுழன்று பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

தலைநகர் சென்னையாகிவிட்டதால், அந்த மாவட்டத்திற்கு இப்படியொரு வாய்ப்பு கிட்டுகிறது - எங்கள் மாவட்டத்திற்கு அந்தப் பொறுப்பை அளித்துப் பாருங்களேன் என்று ஒவ்வொரு மாவட்டச் செயலாளரும் என்னை நிமிர்ந்து நோக்கி கம்பீரப் பார்வை பார்ப்பதை நான் உணராமல் இல்லை. அது உண்மையுங்கூட! அண்ணா அறிவாலய நிதி வழங்குவதிலும் - தேர்தல் நிதி வழங்குவதிலும் மாவட்டங்களிடையே போட்டி, ஒன்றியங்களிடையே போட்டி, நகரங்களிடையே போட்டி - கிளைகளுக்கிடையே போட்டி - எத்துணை ஆக்கப்பூர்வமாக அமைந்து தலைமையைப் பூரிப்படையச் செய்தன என்பதை மறந்துவிட முடியுமா?

கடந்த பனிரெண்டு ஆண்டுக்காலமாக நாம் எதிர்க்கட்சி வரிசையில் தான்!

எதிர்க்கட்சி என்றால் ஏதோ பெயரளவில் அல்ல! ஒரு எதிர்க்கட்சிக்குரிய கடமையைத் தனித்து நின்று பல நேரங்களிலும் - தோழமைக் கட்சிகளுடன் கூடி நின்று பல நேரங்களிலும் தமிழக மக்களில் பல்வேறு பிரிவினரின் பிரச்சினைகளுக்காகக்

குரல் கொடுத்தவர்கள் - இன்னமும் குரல் ஒலித்துக் கொண்டிருப்பவர்கள்! அடக்குமுறைகளை ஏற்று ஐம்பதாயிரம் பேர் லட்சம் பேர் என்று சிறை சென்றவர்கள்! இலங்கையில் தமிழ் இனப்படுகொலையைக் கண்டித்தும் இந்திய அரசின் துரோகத்தைச் சுட்டிக்காட்டியும் தமிழகத்தில் நாம் கண்ட களங்கள் எண்ணிலடங்கா! இருபது கழகக் காளையர் தீக்குளித்து மாண்டனர்! எதிர்க்கட்சித் தலைவர், துணைத் தலைவர் பதவிகளில் இருந்த நானும், பேராசிரியரும் சட்டமன்ற உறுப்பினர் பதவிகளையே துறந்து ஈழத்தமிழர் நலன் காக்கக் குரல் கொடுத்தோம்!

நேருவின் உறுதிமொழியை மீறி மத்திய அரசு இந்தி ஆதிக்க ஆணைகளைப் பிறப்பித்தபோது அண்ணா அவர்கள் 1963 - ல் எந்த அறப்போர் முறையை வகுத்தாரோ அதே அறப்போர் முறையை வகுத்து சிறை புகுந்தோம்! அந்தப் போர் முறை அண்ணா வகுத்த போர் முறையாக இருந்துங்கூட அண்ணாவின் பெயரைச் சொல்லிக் கொண்டு நடைபெற்ற அரசு நமது பேராசிரியர் அவர்களையும், மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களான மதுராந்தகம் ஆறுமுகம், கோவை ராமநாதன், ஆலந்தூர் ஆப்ரகாம், சு. பாலன், அ. செல்வராசன், பரிதி இளம்வழுதி, பொன்னுரங்கம், தர்மபுரி ஆர். சின்னசாமி, அரக்கோணம் ராஜூ, ஆகியோரையும் சேர்த்து பத்துப் பேரை சட்டப்பேரவை உறுப்பினர் பதவிகளையே ரத்து செய்து வெளியேற்றியது!

எமர்ஜன்சி கொடுமைகளைக் கண்டித்து இந்திராகாந்தி அம்மையாருக்குக் கறுப்புக்கொடி காட்டியதற்காக இன்னமும் நம்மீது 1978 முதல் பத்து ஆண்டுகளாக கொலை வழக்கு, சதி வழக்கு, கொலை முயற்சி வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது!

ஒரு ஜனநாயக இயக்கத்தின் கடமையாக பால் கமிஷன் அறிக்கையை வெளியிட்டேன் என்று என் மீதும் என் குடும்பத்தினா மீதும் 1981ம் ஆண்டு முதல் திருட்டுக் குற்ற வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மூடப்பட்ட தொழிற்சாலைகளைத் திறக்கக் கோரியும் - விலைவாசி உயர்வைக் கண்டித்தும் - ராஜீவ் அரசின் மக்கள் விரோதப் போக்குகளை எதிர்த்தும், இந்திய நாட்டு அளவில் நடத்தப்பட்ட முழு அடைப்பு, வேலை நிறுத்தம் போன்ற

அறப்போராட்டங்களில் தி.மு.கழகம் கலந்துகொண்டு எதிர்க்கட்சிக்குரிய கடமையை ஆற்றியிருக்கிறது!

விவசாயிகள், நெசவாளர்கள், தொழிலாளர்கள், ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள் கோரிக்கைகளுக்காகக் கழகம் தனியாகவும் - தோழமைக் கட்சிகளுடன் அணிவகுத்தும் அறப்போர்க் கொடி உயர்த்தியிருக்கிறது!

போராட்டங்கள் நடத்துவதே கருணாநிதிக்கு வேலையென்று கிண்டலும் கேலியும் செய்து எகத்தாளம் கொட்டி ஏகடியம் புரிந்த சில பத்திரிகைகளை நீ அறிவாய்! இன்றைக்கு அந்தப் பத்திரிகைகளின் சுதந்திரம் பறிக்கப்படுகிறது என அந்தப் பத்திரிகைகள் உட்பட நாடு முழுதும் உள்ள பத்திரிகைக்காரர்கள் நடத்துகிற போராட்டங்கள் - ஆர்ப்பாட்டங்களுக்கும் தி.மு.கழகம் பக்க பலமாக நின்று போர் முழக்கம் செய்துகொண்டிருக்கிறது!

எதிர்க்கட்சிக்குரிய ஜனநாயகக் கடமையை நிறைவேற்றும் பொறுப்பைத் தட்டிக் கழிக்காத கழகத்திற்கு எத்தனை எத்தனை சோதனைகள்!

எமர்ஜன்சி காலத்துச் சோதனைகளோடு முடிந்து விடவில்லையே!

அதற்குப் பிறகும் இந்தப் பனிரெண்டு ஆண்டுக் காலத்தில்; அப்பப்பா - எவ்வளவு வேதனைகள்!

கழகத்திற்கென ஒதுக்கப்பட்டிருந்த சட்டமன்றக் கட்சி அலுவலகத்திலிருந்து நாம் விரட்டப்பட்டோமே! அந்த அலுவலகத்திலிருந்து நம்மைக் கைது செய்து போலீஸ் வேனில் தூக்கிப் போட்டுக்கொண்டல்லவா போனார்கள்!

அதுவும் ஒரு நன்மையாகத்தானே முடிந்தது! இல்லாவிட்டால் 1971ஆம் ஆண்டு வாக்கில் சென்னையில் வாங்கப்பட்டு பதினான்கு ஆண்டுக் காலத்திற்கு மேலாகக் காலியாகவே கிடந்த தி.மு.க. அறக்கட்டளைக்குரிய மனையில் விண்ணோக்கி உயர்ந்து, வியத்தகு கலையம்சமுடன், விழிகளுக்கு விருந்தாக அண்ணா அறிவாலயம் எழுந்திருக்குமா? ஆங்கோர் திருமண மண்டபம் மற்றோர் கலைக்கூடமாக உருவாகி; வரும் 16ந் தேதி திறப்புவிழாவுக்காக காத்திருக்குமா? இலவசக் கண்

மருத்துவமனையொன்று தோன்றியிருக்குமா? இவற்றையும் உருவாக்குவதற்குள் இடையிடையே எத்தனை தடைகள்!

தடைக்கற்கள் உண்டெனினும் தடந்தோள்கள் உண்டெனச் சிரிக்கும் என் அன்பு உடன்பிறப்புகளாம் உன் போன்றோர் எடுத்த சபதமல்லவா - மளமளவென நிதி குவியவும் - கழக அறக்கட்டளைக்கென மாடமாளிகை எழுந்திடவும் காரணமாயிற்று!

வைத்த கண் வாங்காமல் நான் நாள்தோறும் - நாள்தோறுமென்ன; விநாடிக்கு விநாடி அண்ணா அறிவாலயத்தின் புதிய தோற்றங்களைக் காண்கிறேன்! ஒவ்வொரு கல்லிலும் - ஒவ்வொரு மண்துகளிலும் - என் கண் போன்ற உன்னைத்தான் காணுகிறேன்! நீயிருக்க பயமென்ன எனக்கு? வெட்டி வா என்றுரைத்தால் கட்டிவரும் வீரர் கூட்டம் இது; வெட்டிப் பேச்சுக்கும்பல் அல்ல - அதனால்தானே உன் பீடு நடை காண அழைக்கிறேன் சென்னைக்கு!

தி.மு.க.வை தலையெடுக்க விடக்கூடாது - அது ஆட்சிக்கு வந்து விடக்கூடாது என்றெல்லாம் தரை விட்டுக் கிளம்பி தகதகவெனக் குதித்துத் துள்ளிக் கீச்சுக்குரல் எழுப்புகிற ஒரு சிலர்; சென்னை விழாச்செய்திகள் கேட்டு கைபிசைகின்றனர்! கதறுகின்றனர்!

நாம் ஏன் தலையெடுக்கக் கூடாதாம் - ஆட்சிக்கு வரக்கூடாதாம் - புரிகிறதா? அருமை நண்பர் எம்.ஜி.ஆர். மறைந்து அவரது உடல் ராஜாஜி மண்டபத்தில் இருந்தபோதே எழுபது லட்சம் லஞ்சப் பணம் பெற்றவர்கள் - நமது ஆட்சி வந்தால் நடுத்தெருவில் நிறுத்தப்படுவார்கள் அல்லவா? அந்த பயம்? இப்படி ஒன்றா? இரண்டா? ஒருவரா? இருவரா? அவர்களுக்கு எலும்புக்குள்ளேயே இப்போது காய்ச்சல் அடிக்கத் தொடங்கிவிட்டது; அதனால்தான் தி.மு.க. ஆட்சிக்கு வந்து விடக்கூடாது என்று துடியாய்த் துடிக்கிறார்கள்!

இன்னொரு கூச்சல் - திராவிட இயக்க ஆட்சியே கூடாது! அது இருண்ட ஆட்சி! என அன்றாடம் ஒலிக்கின்ற கூச்சல்! இந்திரா காங்கிரஸ் வட்டாரத்துக்குரல்! கடந்த இருபது ஆண்டுக்காலமாக மாறி மாறி திராவிட கட்சிகளின் தயவுக்காக தவம் கிடந்தவர்கள்;

இப்போதும் தூதுகள் அனுப்பிக் கொண்டிருப்பவர்கள் - தோதாகிற வரையில் தேர்தல் இல்லையென முடிவு கட்டிக் கொண்டிருப்பவர்கள் - அவர்கள் ஒருபுறத்தில்!

பீகார் பூகம்பத்தைப் பற்றியோ - அசாம் வெள்ளத்தைப் பற்றியோ - தலையங்கமோ, கட்டுரையோ எழுதினால் கூட தி.மு.கழகத்தை அதிலே ஒரு பிடிபிடிப்பது என சங்கற்பம் செய்து கொண்டு செயல்படுகின்ற தினமணி போன்ற ஒருசில ஏடுகள்!

மற்றும் நாள்தோறும் டெல்லி மேலிடத்தினால் - அல்லது ராஜீவ் அரசின் தமிழக அதிகார வர்க்கத்தினால் மிரட்டப்படும் - தின ஏடுகளில் தி.மு.க.வைப் பற்றிய இருட்டடிப்பு - அல்லது திசை திருப்பும் செய்திகள் வருவதற்கான ஏற்பாடுகள்!

இத்தனைக்கும் மத்தியில்தான் என் உடன்பிறப்பே; நீ காட்டும் எழுச்சிக் கோலம் கண்டு களிக்கிறேன்!

மேலும் கண்டிடத் துடிக்கிறேன்! மதுரை சென்றிருந்தபோது அண்மையில் தென்பகுதி மாவட்டச் செயலாளர்களின் கூட்டத்தில் கலந்துரையாடினேன் - ஏனைய மாவட்டச் செயலாளர்களுடனும் தொடர்பு கொண்டுள்ளேன்.

16ந் தேதி மாலையே வந்து விடச் சொல்கிறாயே; 16, 17 - இரண்டு நாள் தங்கி சென்னையிலிருந்து 18ந் தேதி காலையில் திரும்பும் வரையில் சென்னையில் தங்கிட வசதிகள் வேண்டாமோ என்றனர் மாவட்டச் செயலாளர்கள்! அதற்கெனப் பல திருமண மண்டபங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன! மாவட்ட வாரியாக அவற்றில் தங்கிக் கொள்ளலாம்; ஏற்பாடுகளில் குறைகள் இருக்கலாம் - பொறுத்துக் கொள்வாய் என்பது எனக்குத் தெரியும்!

வாகனங்களில் சென்னைக்கு வரும் வழிகளைக் கூட மாற்றி அமைத்துக் கொண்டு - இடையில் யார் நடத்தும் நிகழ்ச்சிக்கும் நமது பயணத்தால் இடையூறு இருத்தலாகாது என்பதற்காகத்தான் சற்று சுற்று வழியாக இருந்தாலும் பரவாயில்லை என மாவட்டக் கழகங்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது.

16ந் தேதி மாலையோ இரவோ சென்னைக்கு வந்து சேர்ந்து விட வேண்டும் - 17ந் தேதி பகலும் இரவும் சென்னையில் இருந்திட வேண்டும் - 18ந் தேதி காலை திரும்பிட வேண்டும்!

சட்டம், ஒழுங்கு, அமைதி காத்திடக் கழகம் என்றும் அக்கறையுடையது!

அந்தக் கழகம் எடுக்கும் விழாக்கள் - சிலருக்கு எரிச்சலூட்டலாம்! எனினும் எதையும் தாங்கும் இதயத்துடன் நமது பயணம் தொடரவேண்டும்!

இந்த விழாக்களுக்கான பயணம் மட்டுமல்ல; வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் எழுச்சி கண்டிடும் பயணம் கூட!

அந்தப் பயணத்திற்கு அணிந்துரை எழுதுவது போன்றதே சென்னை விழாக்கள்!

அன்புச்சுடரே! வருக! அருவித் தமிழே! வருக! ஆர்வக்குன்றே! வருக! என்றுமே என் அழைப்பினைத் தட்டாத எழு ஞாயிறே! இள ஞாயிறே! பட்டாள நடை பயின்று; அண்ணன் கற்றுத் தந்துள்ள பண்பாட்டு நெறி பிறழாமல் பவனி நடாத்திட என் பாசமுள்ள உடன்பிறப்பே; வருக! வருக!!

அன்புடன்

மு.க.

10-09-1988

1584. சாத்தான் ஓதினால் என்ன? காத்தான் ஓதினால் என்ன?

உடன்பிறப்பே,

தேசிய முன்னணியில் தி.மு.கழகமும் இடம்பெற்றுள்ளது என்ற செய்தி வெளிவந்த நாள் முதலாக தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் நண்பர் மூப்பனார் அவர்கள்; ஆகா! கலைஞர் இந்திக்காரர்களுக்கு அடிமையாகிவிட்டார் - வடநாட்டுக் கட்சிகளோடு கூட்டு சேர்ந்து விட்டார் - இந்தி திணிப்புக்கு ஒப்புதல் வழங்கிவிட்டார் என்ற கருத்துப்பட வேண்டுமென்றே இட்டுக் கட்டிய பிரச்சாரத்தில் மும்முரமாக ஈடுபட்டுள்ளதையும் - அவரைப் பின்பற்றி தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள், மற்றும் காங்கிரஸ் பிரச்சார பீரங்கிகள் - கருணாநிதி தனது தமிழ்ப் பற்றையே வடநாட்டுத் தலைவர்களிடம் பறிகொடுத்துவிட்டார் என்று பேசியும் எழுதியும் வருவதையும் - நீ அறிவாய்!

காங்கிரஸ்காரர்களின் பிரச்சாரம் குறித்தும் வேறு சில காந்தாரிக் குணம் படைத்தோர் பிரச்சாரம் குறித்தும் மதுரைப் பொதுக்கூட்டத்தில் விளக்கங்கள் பலவற்றை நான் அளித்தேன்.

தேசிய முன்னணியின் குறைந்தபட்ச திட்டத்தில் மொழிப் பிரச்சினையில் நேருவின் உறுதிமொழி நடை முறைப்படுத்தப்படுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

மாநில உரிமைகளும் அதிகாரங்களும் வழங்கப் படுவதற்கேற்ப மறுபரிசீலனை நடத்தப்பட வேண்டுமென்பது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இலங்கையில் இந்திய ராணுவம் போர் நிறுத்தம் செய்துவிட்டு விடுதலைப் புலிகளுடனும் மற்றவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

இவையன்னியில் தி.மு.கழகத்திற்கு உடன்பாடான குறைந்தபட்ச திட்டங்கள் அந்த 71 அம்சத் திட்ட அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

மண்டல் கமிஷன் பரிந்துரைகளை காங்கிரஸ் ஆட்சி நடைமுறைக்குக் கொண்டு வராதது சுட்டிக்காட்டப்பட்டு அந்தக் கமிஷன் பரிந்துரைகளை ஒரு கால கட்டத்துக்குள் அமல்படுத்துவோம் என்றும் தேசிய முன்னணி உறுதியளித்துள்ளது.

இவற்றையெல்லாம் படித்துப் பார்க்க நேரமோ - மனமோ - இல்லாத மூப்பனார் போன்றவர்கள் ஏதோ தேர்தலை மட்டும் நினைத்துக்கொண்டு தி.மு.க. மீது புழுதி வாரித் தூற்றுகிறார்களே; நியாயமா? என்று கேட்டுவிட்டு - தி.மு.க. வருகிற தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கிக் கொள்ளத் தயாராக இருக்கிறது என்றும் - அதற்கு ஏற்ப மூப்பனார் அவர்கள் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி கழகத்தின் பின்வரும் மூன்று கோரிக்கைகளை மட்டும் நிறைவேற்றி வைத்தால் போதுமென்றும் மதுரைப் பொதுக்கூட்டத்தில் தெளிவுபடுத்தினேன்.

1) மத்திய ஆட்சி மொழியாக இந்தி மட்டுமல்லாமல் தமிழையும் மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆக்கிட அரசியல் சட்டத் திருத்தம் செய்ய வேண்டும்.

2) இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ள இந்திய ராணுவம் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்துவிட்டு - தனித் தமிழ் ஈழம் அமைந்திடத் தனது பணியைச் செய்திட வேண்டும்.

3) இந்தியாவில் மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்கிட அரசியல் சட்டத் திருத்தம் செய்திட வேண்டும்.

இந்த மூன்றையும் ராஜீவ் அரசு செய்தால்; வரும் தேர்தலில் தி.மு.க. நிற்காமல் - ஒதுங்கிக் கொள்ளும் என்றும் அந்தக் கூட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறேன்.

என் கருத்துக்கு பதில் அளிக்கிறேன் என்று கிளம்பிய மூப்பனார் அவர்கள் என்னை சாத்தான் என்று வர்ணித்து அவரது பூசாரிமார்களின் சபாஷ் பட்டத்தைப் பெற்றிருக்கிறார்! அதிலே அவருக்கு மகிழ்ச்சி என்றால் எனக்கும் மகிழ்ச்சியே!

இப்படியொரு பேச்சுக் கலையை வளர்க்க வேண்டுமென அவர் விரும்பினால் - அதற்குக் குறுக்கே நிற்க நான் யார்?

சாத்தான் என்று என்னை வர்ணிக்கும் மூப்பனார் அவர்கள், நான் வேதம் ஓதுகிறேன் என்பதையாவது ஒப்புக்கொண்டு சாத்தான் வேதம் ஓதுகிறது என்று கூறியுள்ளாரே, அது வரையில் எனக்கு ஆறுதல்தான்! தமிழும் மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக வேண்டியதையும் - தனித் தமிழ் ஈழநாடு உருவாக வேண்டிய அவசியத்தையும் - மாநில சுயாட்சி அளித்திட அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டிய தேவையையும் வேதம் என்று மூப்பனார் அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளதற்காக நான் நன்றி கூறுகிறேன் அவருக்கு!

வேதம், வேதமாக இருக்கிற வரையில் அதனை சாத்தான் ஓதினாலும் - காத்தான் ஓதினாலும் வேதத்தின் மகிமையொன்றும் கெட்டு விடாது!

எனவே, தமிழும் மத்திய ஆட்சி மொழி - தனித் தமிழ் ஈழம் - மாநில சுயாட்சி என்ற மூன்று மகிமை பொருந்திய வேதங்களையும் மூப்பனார் அவர்களே ஓதட்டும்!

இதைத்தான் நான் மதுரையிலே சொன்னேன்!

ஆனால் மூப்பனாரோ; என்னை சாத்தான் என்று சாடிவிட்டு - நான் வைத்த நிபந்தனைகளைப் பற்றி வாய் திறக்காமலே இருந்து விட்டார்.

எங்களுக்கு நிபந்தனை வைக்கிற கலைஞர் ராஜீவ் காந்தியின் தலைமையை ஏற்றுக் கொண்டால் - தமிழகத்தில் காமராஜர் ஆட்சியை ஏற்றுக் கொண்டால் காங்கிரஸ் தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கிக் கொள்ளும்.

என்றும் மூப்பனார் கூறியிருக்கிறார். தமிழும் மத்திய ஆட்சி மொழி - மாநில சுயாட்சி - இவற்றுக்கான அரசியல் சட்டத் திருத்தம்; தனித் தமிழ் ஈழம் ஆகிய மூன்று கோரிக்கைகளையும் ஏற்றுக்கொண்டால் ராஜீவ் காந்தியை என்ன - மூப்பனாரையே நான் தலைவராக ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேனே!

என்னைவிட இருபது வயது இளையவரான ராஜீவ் காந்தியைத் தலைவராக ஏற்பதைவிட - என்னை விட ஆறு ஏழு வயது மட்டுமே இளையவரான மூப்பனாரைத் தலைவராக ஏற்றுக் கொள்ளக் கூடாதா என்ன?

அதாவது நான் மதுரைக் கூட்டத்தில் குறிப்பிட்ட அந்த மூன்று கோரிக்கைகளையும் ஏற்றுக் கொண்டால்!

உடன்பிறப்பே, மூப்பனார் என்னைப் பார்த்து ஒரு விசித்திரமான கேள்விக்கணையும் விடுத்துள்ளார்! ஆனால் பாவம்; அது கூர் இல்லாத கணை! வில்லை விட்டு எழ இயலாத கணை! என்ன வினாக்கணை தெரியுமா அது?

இலங்கையில் தனி ஈழம் கேட்பவர்களை ஆதரிக்கும் தி.மு.கழகம், இங்கே திராவிட நாடு கோரிக்கையை ஏன் கைவிட வேண்டும்?

இதுதான் மூப்பனாரின் கேள்வி! இதற்கு ஒரு கேள்வி மூலமே மூப்பனாருக்குப் பதில் அளித்து விட முடியும்!

இலங்கையில் மட்டும் தனி ஈழம் கூடாதென்று கூறுகிற இந்திய அரசு; பாகிஸ்தானில் மட்டும் பங்களாதேஷ் என்ற தனி நாடு பிரிவதற்காக தனது படையை அனுப்பியது ஏன்?

அது மட்டுமா? உலகெங்கும் நடைபெறுகிற விடுதலைப் போராட்டங்களையெல்லாம் ஆதரிக்கிற இந்திய அரசு - இலங்கையில் தமிழர்கள் நடத்துகிற விடுதலைப் போராட்டத்தை மட்டும் நசுக்கிட முனைவது ஏன்?

பாகிஸ்தானில் பங்களாதேஷ் உருவாக இந்திய அரசுடன் தி.மு.க. ஒத்துழைத்த போது - அந்த யுத்த நிதிக்காக தி.மு.க. ஆட்சியில் ஆறு கோடி ரூபாய் வசூலித்து இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியிடம் அளித்த போது - திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்ட தி.மு.க.வினர், எதற்காக பாகிஸ்தானில் பங்களாதேஷ் பிரிவதை ஆதரித்தார்கள் என்று மூப்பனார் கேட்கவில்லையல்லவா?

தமிழ் ஈழம் இலங்கையில் இருக்கிறது என்பதையும் இந்தியாவில் இல்லை என்பதையும் மூப்பனார் உணர்ந்து கொண்டிருப்பது வரையில் எனக்கு மகிழ்ச்சிதான்!

திராவிட நாடு கொள்கையை தி.மு.க. கைவிட்டது என்னவோ; மூப்பனாருக்கு நீண்ட நாள் கவலையாக இருப்பதாகத் தெரிகிறது!

மதுரையில் நான் பேசியது குறித்து மூப்பனார் அளித்துள்ள பதிலில் திராவிட நாடு கைவிடப்பட்டது பற்றி தனது ஆதங்கத்தைத் தெரிவித்துள்ளாரே; அதைத் தவிர வேறு எந்தப் புதுமையும் இல்லை!

அன்புடன்

மு.க.

12-09-1988

1585. அய்யா அண்ணா வழங்கும் அன்புக் கட்டளை!

உடன்பிறப்பே,

அண்ணனுக்குப் பிறந்தநாள்!

தமிழாய் - தேனாய் - தங்கக்கனியாய் - அமிழ்தாய் - அன்பாய் - அழகுக் கலையாய் - எழிலாய் - அறிவாய் - எண்ணச் சுடராய் - பொழிலாய் - புகழாய் - பொன்னின் மணியாய் - திருவாய் - உருவாய் - திங்கட் குளிராய் - தருவாய் - நிழலாய் - நிழல் தருசுகமாய் - பொங்கு கடல் நடையும், பூவையரின் மென் நடையும் தன் புதுத் தமிழ்நடையில் காட்டிய நமது அண்ணனுக்குப் பிறந்தநாள்!

பொல்லாங்கு உரைப்போரை வாதத்தில் மாட்டியவருக்கு - பொடியெடுத்துப் போடும் நேரம் புன்னகையால் எதிரிகளைப் பொடியாக்கி வாட்டியவருக்கு - புழுதிக் குணம் படைத்தோரை ஓட்டியவருக்கு - பொன்மகுடம் தமிழ்த்தாய்க்குச் சூட்டியவருக்குப் பிறந்தநாள்!

எழுதுகோல் வைத்திருந்தார் அவர் - அது ஏமாந்த தமிழர்களின் தலையெழுத்தை மாற்ற தாளில் உழுதகோல் அன்றோ!

குதிகால்கள் பரதம் ஆடப் பேச்சரங்கில் கொய்யாத் தமிழ் எடுத்துக் கொடுத்த குணாளருக்கு - கொள்கைக் குன்றத்துக்கு - பிறந்த நாள்!

மக்களாட்சி மலர் குலுங்க
சமதர்மப் பூ மணக்க
தாய்மொழி தமிழே வாழ்வுப் பொழிலாக
ஆடிவரும் தென்றல்
நாடிவரும் பூ முடியே! புகழ்முடியே! உனைத்
தேடிவரும் வாழ்த்துக் குவியலிலே - தினம்

பாடிவரும் வண்டாக நான் பறப்பேன் - என
ஒரு கோடித் தமிழ் இளைஞர்
பாடி நின்ற பாட்டுக்குப் பெருந்தலைவன் -
ஆம் - காஞ்சிக் கருவூலத்துக்கு நமது
கண்ணின் ஒளிமிகு பாவைக்குப் பிறந்த நாள்!

இந்த நாளில் தமிழகமெங்கணுமுள்ள அண்ணனின் சிலைக்கு அணிவகுத்துச் சென்று மாலை சூட்டுகின்றோம்!

விழா எடுத்து மகிழ்வதுடன் வேலை முடிந்துவிடவில்லை!

ஜனநாயகம் காத்திட - சமத்துவமும் சமதர்மமும் பூத்துக் குலுங்கிட - பிறமொழி ஆதிக்கத்தால் நமது மொழிக்குக் கேடு சூழாமல் இருந்திட - தமிழர்கள் இரண்டாந்தர குடிமக்களாக ஆகி விடாமல் தடுத்திட - மாநில அரசுகள் அடிமைகளாகவும், மத்திய அரசு பழைய காலத்து ஆண்டான் நிலையிலும் இருந்திடும் நிலை மாற்றிட - சமூகத்தில் பின்னுக்குத் தள்ளப்பட்டுக் கிடக்கும் மக்கள் பெரும்பாலோருக்கு சமூகரீதியிலான கண்ணோட்டத்துடன் கல்வி, வேலை வாய்ப்புகள் மற்றும் சமூக அந்தஸ்து பெற்றுத் தந்திட - நாட்டு மக்கள் தொகையில் முக்கால் பகுதியினர் வறுமைக் கோட்டுக்குக் கீழே கிடக்கும் கொடுமையைக் களைந்திட - உலகெங்கும் பரவிக் கிடக்கும் தமிழ் மக்களின் இன்னல்போக்கிட - அருகாமையில் அனுதினமும் அழிக்கப்படும் தமிழர்களை இந்திய ராணுவத்தின் கோரப்பிடியிலிருந்து விடுவித்திட - தொடர்பணியாற்றி வரும் நமக்கு, விழா மாட்சியில் களிப்பது மட்டுமல்ல, அண்ணன் விட்டுச் சென்ற அருந்தொண்டினை அவர் வழியொற்றி வெற்றி பெறச் செய்வதும் தலையாய கடமையாகும்! இந்தச் சூளுரை மறவாத நாள் இந்த நாள்!

அண்ணனை நமக்கும் நாட்டுக்கும் அடையாளங் காட்டிய தந்தை பெரியார்க்கும் விழா - இந்த முப்பெரும் விழாவுடன் இணைந்தே வருகிறது!

எரிமலையாய்
சுடுதழலாய்
இயற்கைக் கூத்தாய்
எதிர்ப்புகளை நடுங்கவைக்கும்

இடிஒலியாய்
இன உணர்வுத் தீப்பந்தப்
பேரொளியாய்
இழிவுகளைத் தீர்த்துக்கட்டும்
கொடுவாளாய்
இறைவனுக்கே மறுப்புசொன்ன
இங்கர்சாலாய்
எப்போதும் பேசுகின்ற
ஏதென்சு நகர் சாக்ரடீசாய்
ஏன் என்று கேட்பதிலே
வைர நெஞ்ச வால்டேராய்

வந்துதித்த பெரியார் - அவர் வகுத்தளித்த கொள்கை - அதன் அடித்தளம் சிதையாது அன்றுமுதல் இன்று வரை அரசியலில் எழுச்சி மாளிகையை விண்முட்டக் கட்டுகின்றோம்! கலனேதும் விளையாமல் கவனிப்பதும் - கதிருலாவும் வானம் வரை அக்கட்டிடத்தை உயர்த்துவதும், நாம் - கண்போல் காத்திட வேண்டிய கடமை என்பதை உணர்ந்து செயல்பட உறுதி எடுத்துக் கொள்வோம்!

இந்த ஆண்டு முப்பெரும் விழா நாளில் இந்தியத் திருநாட்டுக்கே ஒரு புதிய திருப்புமுனை அமைகிறது!

ஆம் - தேசிய முன்னணியின் தொடக்க விழா - தமிழகத்தில்! தலைநகரில்!

மாநிலக் கட்சிகள் ஓரங்கட்டப்பட வேண்டியவை என்று நூதன தேசியங்கள் நெடுநாட்களாக ஆடிய ஆட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு - இன்றைக்கு மாநிலக் கட்சிகள் சம உரிமையுடன் அனைத்திந்திய கட்சிகளுடன் இடம் பெற்று அவற்றின் தனித்தன்மையிழக்காது உருவாகியுள்ளதே இந்த தேசிய முன்னணி!

காங்கிரஸ்காரர்களுக்கு மட்டுமே தேசிய உணர்வு உயில் எழுதி வைக்கப்பட்டதல்ல - தேசமென்றால் நாடு எனப் பொருள்! அந்த நாட்டுப் பற்றில் நாங்கள் யாருக்கும் இரண்டாவது இடத்தில் இருப்போர் அல்ல - முதலிடத்தில் இருப்போர்தான் - எனும்

உண்மையை உலகு அறிந்திடும் போது, பாவம் - சிலருக்கு ஜன்னி பிறந்த நிலை! அதனால் உளறல்! பிதற்றல்!

பரவாயில்லை, நமையீன்ற பெரியாரையும் அண்ணாவையும் தமிழன்னை ஈன்றளித்த இந்நாளில் இருவரும் இணைந்து நமக்குத் தந்துள்ள துணிவும் கனிவும் உடையோர் நாம் என்ற பெருமிதத்துடன் பீடு நடை போடுவோம்!

சலசலப்புகள் - சந்து முனை சிந்துகள் - சாய்க்கிறேன் பார் எனச் சதிகாரர் கட்டும் சல்லடங்கள் - உடன்பிறப்பே, இவையனைத்தும் அய்யா அண்ணா வழி நடக்கும் நமக்குக் காலில் குத்தும் நெருஞ்சில் முட்கள்!

அந்த முட்களுடன் வம்புக்குப் போக முடியாது! அடுத்து வருவோர் காலிலாவது அவை குத்தாமலிருக்கட்டுமென்று எடுத்துத் தொலைவில் வீசி விட்டு - பாதையைச் செம்மைப் படுத்தி நமது லட்சியப் பயணத்தைத் தயக்கமின்றி என்றைக்கும் தொடர்ந்து நடத்திக் கொண்டிருப்பதே,

அய்யா வாழ்க!

அண்ணா வாழ்க!

என ஒலித்திடும் வாழ்த்தொலிகள் நமக்கு வழங்கிடும் அன்புக் கட்டளையாகும்!

அன்புடன்

மு.க.

15-09-1988

1586. இது ஒரு தொடக்கம் (1)

உடன்பிறப்பே,

உனக்கு நன்றி கூறவே இந்தக் கடிதம்! திருவண்ணா மலையிலிருந்தும் மதுரை மாவட்டம் நத்தம் பகுதியிலிருந்தும் முன்னணியின் தொடக்க விழாவுக்கு வருகை தந்த ஏழெட்டு உடன்பிறப்புகளை இழந்து விட்டோமே விபத்தில் என்ற வேதனை; விழிகளை ஈரமாக்க இந்த மடல் தீட்டுகின்றேன் உனக்கு! விபத்தில் ஒரு சில உடன்பிறப்புகளுக்குத் தலையில் - கையில் - காலில் பலத்த காயங்கள்! வழியில் எவனோ ஒரு வெறியன் - தேசிய முன்னணியின் தொடக்கவிழா வெற்றி கண்டு வயிறு எரிந்து வீசிய கல்பட்டு ஒரு கண்ணையிழந்துவிட்ட கழகக் கண்மணியொருவர் - புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தவர், சென்னை மருத்துவமனையில்! காயமுற்றோரை மருத்துவமனை சென்று பார்த்தேன் - ஆறுதல் கூறினேன் - இழந்துவிட்ட உடன் பிறப்புகள் ஏழெட்டுப்பேர் ஆயிற்றே; என்னை எப்படி நான் தேற்றிக் கொள்வதெனத் தெரியாது திகைக்கிறேன்! கடமையைச் செய்திட வருக என அழைத்துக் கடிதம் எழுதியது கண்டல்லவா அந்தக் கழகமாமணிகள் வந்தனர் - விபத்தில் உயிரையே தந்தனர்!

இந்த உடலிலும் உயிர் ஒட்டிக் கொண்டிருக்கும் வரையில் கடமையைச் செய்திடுவேன் எனச் சூளுரைத்து உழைத்துக் கொண்டிருப்பவன்தானே நானும் - அதனால் என் கடமையைத் தொடர்கிறேன்; கண்ணீரைத் துடைத்துக் கொண்டு! கடமையாற்றிய உன் போன்ற உடன் பிறப்புகளுக்கு நன்றி கூறிக்கொண்டு!

வெறியன் ஒருவன் கல் எறிந்தான் - என்று குறிப்பிட்டிருக் கிறேனல்லவா! அவன் காழ்ப்புணர்ச்சியைக் காட்டிக் கொள்ள, அவன் கையாண்ட முறை அது! அவன் கல்வீசினான் - நமது உடன் பிறப்பு ஒருவனுக்குக் காயம் பட்டது என்பதால்; வீசியவன் வீரனுமல்ல - காயம்பட்டவன் கோழையுமல்ல! ஏதோ எரிச்சலில்

எடுத்தான் கல்லை - வீசினான் வேகமாக - தலைதெறிக்க ஓடி விட்டான் - கழகத்தம்பியோ காயத்தைப் பொத்திக்கொண்டான் - பொறுத்துக் கொண்டான் - கடமையாற்றிடத் தன்னை மேலும் தயார் படுத்திக் கொண்டான்!

கழகம் தொடங்கிய நாள் முதல் சுமார் நாற்பது ஆண்டுகாலமாக தொடர்ந்து நம்மீது சிலர் கற்களை வீசிக் கொண்டுதானிருக்கின்றனர்! கற்கள் அல்ல அவை! அவற்றுக்குப் பெயர் சொற்கள்!

இப்படியொரு கட்சியா? இதனைத் தலையெடுக்க விடலாமா?

இம்மாதிரி நாகரீக நடையிலே அல்ல - நரகல் நடையிலே - அணுகுண்டுகள் என்றும் விபூதிகள் என்றும் பயில்வான்கள் என்றும் அடைமொழிகளும் பட்டங்களும் சூட்டிக்கொண்டு காங்கிரஸ் மேடைகளில் அர்ச்சனைகள் நடைபெற்ற அந்தக் காலம் தொட்டு இந்தக் காலம் வரையில்; எரிந்து விழுவோர் - எதிர்த்தே பழகியோர் மட்டுமல்ல - இருந்து சென்றோருங்கூட; இன்னும் சொல்லப்போனால் இங்கிருந்து ஏதேதோ பெற்றிருந்தோர் கூட!

பயிரோடு இணைந்து பயன்பல பெற்று - பின்னர் களையெனத் தெரிந்ததும் - வயலில் உழைப்போன் எடுத்து வரப்பினில் போட - அடையாளம் தெரிந்து கொண்டனரே நம்மையென்று ஆத்திரப்பட்டு வாடிவதங்கும் அந்தப் போலிப்பயிருக்கு வாயிருந்தால் என்ன பேசும்? கையிருந்தால் எதை எடுத்து வீசும்?

அதுதான் நடக்கிறது உடன்பிறப்பே இன்று! நம்மை எதிர்ப்பதையே கடனாகக் கொண்டோர்; ஏன் அதனைச் செய்கின்றனர்? அண்ணா வழியில் கொள்கை முரசம் ஆர்க்கிறோம்! அவர் வழியில் களம் அமைக்கிறோம்! அவர் வழியில் அயராது உழைக்கிறோம்! அதனால்தான் அந்த அண்ணன் சந்தித்த அத்தனை விதமான எதிர்ப்புகளையும் இன்னமும் சந்திக்கிறோம்!

இன்றைக்கு எதிர்ப்பாளர்களும் - எரிச்சலாளர்களும் புதிய வியூகம் வகுத்துக்கொண்டு புறப்பட்டுள்ளனர் போர் முறைக்கு!

அது என்ன முறை என்கிறாயா? அது ஒரு விசித்திரமான முறை! விவேகம் அற்றுப் போனதால் விளைந்த பாணி!

மாநில உரிமைகள் பறிக்கப்படுகின்றன - மத்தியில் அதிகாரம் குவிந்து கிடக்கிறது - இது நாட்டுக்கு உகந்ததல்ல; என நாம் சொல்லும் பொழுது -

ஆகா! இது தேசவிரோதம்! தேசியத்துக்கு விரோதம்! ஒருமைப்பாட்டுக்கு விரோதம்! பிரிவினை வாதம்!

எனக் கூப்பாடு போட்டனர்!

இன்றைக்கு நாம் தேசிய முன்னணியில் இடம் பெற்று; மாநில உரிமைகள் குறித்தும் - மத்திய மாநில உறவுகள் குறித்தும் முற்றிலும் புதிதாகப் பரிசீலனை நடத்தி - உண்மையான கூட்டாட்சித்தத்துவம் உருவாகிட வேண்டுமென அந்த முன்னணியின் திட்டமாகவே வெளிப்படுத்தும்பொழுது அந்தக் கூப்பாட்டுக்குரலினர் - இப்பொழுது என்ன சொல்கிறார்கள்?

ஆகா! இவர்கள் வட நாட்டுக்காரர்களுக்கு அடிமைகளாகி விட்டார்கள் என்கிறார்கள்!

1971ஆம் ஆண்டு ராஜமன்னார் குழுவை அமைத்து - மத்திய மாநில உறவுகள் குறித்த அறிக்கையை அந்தக் குழுவிடம் பெற்று - மாறன் செழியன் குழுவினர் அதனை மேலும் ஆய்ந்து கருத்து தெரிவித்து - அமைச்சர்கள் கூடிப் பரிசீலித்துத் தீர்மானம் வடித்து; 1974ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழக சட்டப் பேரவையில் மாநில சுயாட்சித் தீர்மானத்தைத் தி.மு.க. அரசு நிறைவேற்றியபோது உண்மையான கூட்டாட்சித் தத்துவம் எது என நாம் அளித்த விளக்கத்திற்கு பிரிவினை என்ற வர்ணம் பூசிப் பார்த்தவர்கள் - இன்றைக்கு அந்தக் கூட்டாட்சித் தத்துவத்தை தேசிய முன்னணியில் உள்ள எல்லாக் கட்சிகளும் ஒத்துக் கொள்கிற மகத்தான மாறுதல் ஏற்பட்டிருக்கும்போது - பார்த்தீர்களா! பார்த்தீர்களா! கருணாநிதி வடநாட்டார் காலில் விழுந்து விட்டான் என்கிறார்கள்.

மாநில உரிமைகளுக்காக நாம் குரல் கொடுத்தால் - அது பிரிவினைக் குரல்! நாங்கள் மட்டுமல்ல; மொத்த இந்தியாவே; மாநிலங்கள் அதிக உரிமைபெறக் குரல் கொடுக்கிறது என்ற நிலையை ஏற்படுத்தினால் - தி.மு.கழகம்; வடநாட்டுக்கு அடிமையாகி விட்டது என்பதா? அடேடே! என்னே; இவர்களின் தேசிய ஒருமைப்பாடு!

மாநில சுயாட்சி வேண்டுமெனவும் மத்தியில் உண்மையான கூட்டாட்சித் தத்துவம் செயல்பட வேண்டுமெனவும் அண்ணா அவர்களே கூறிய கருத்துக்களை சட்டப்பேரவையில் எடுத்துக் காட்டியபோது - அதை ஏற்க மறுத்தனர்; அ.தி.மு.க. சட்டமன்றக் கட்சியினர்! அந்தக் கொள்கையில் நமக்கு என்றும் மாற்றமில்லை! மாநில உரிமைகளுக்காக நாடு முழுதும் ஆதரவு திரட்டுகிற வகையில் நமது பணி அமைய வேண்டுமென அண்ணா அவர்கள் விடுத்த வேண்டுகோளை நிறைவேற்றுவதில் நாம் ஏறியுள்ள படிக்கட்டுகளில் ஒன்றுதான் தேசிய முன்னணியில் ஐந்தாவது அம்சமாக இடம் பெற்றுள்ள மத்திய மாநில உறவுகள் பற்றிய திட்டமாகும்!

1967-68ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் முதலமைச்சராக இருந்த அறிஞர் அண்ணா அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:-

மத்திய மாநில அரசுகளுக்கிடையே உள்ள தொடர்புகள் பற்றிய மறு சிந்தனை தேவை என்பதை இப்பேரவை அறியும். வரிப்பங்கீடு, அதிகார வரம்பு, திட்டநிதி ஒதுக்கீடு ஆகியவற்றில் கிடைத்துள்ள அனுபவம் கசப்பு நிரம்பியதாக இருப்பதை யாரும் மறுத்திட இயலாது. இந்த நிலையைச் சுட்டிக் காட்டிய அண்ணா அவர்கள், மத்திய மாநில அரசு உறவில் மறு சிந்தனை தேவை என வலியுறுத்தினார்.

இப்போது அதே கருத்துத்தான் தேசிய முன்னணியில் 71 அம்ச குறைந்த பட்ச திட்டத்திலும் இடம் பெற்றிருக்கிறது!

தேசிய முன்னணி தொடக்கவிழாக் கூட்டத்தில் உரையாற்றிய தலைவர்களும் அதனையே வலியுறுத்திக் குறிப்பிட்டனர்.

“Centre-State relation will be re-examined de novo, so as to remove the imbalance in fiscal, legislative and administrative relations between the Union and the States, and to usher in an era of harmonious relations between the Union and the States in the true federal spirit.”

மத்திய மாநிலங்களுக்கிடையேயான பொது வரி விதிப்பு, கட்சி முறை, நிர்வாகத் தொடர்புகளில் உள்ள வேறுபாடுகள் களையப்பட்டு உண்மையான கூட்டாட்சி தத்துவத்துக்கு இசைவானபடி சுமுகமான உறவுமுறையைக் கொண்டு வரும்

பொருட்டு மத்திய மாநில உறவு முறைகள் பற்றி முற்றிலும் புதிதாக மறு சிந்தனை செய்யப்படும்.

தேசிய முன்னணியின் குறைந்தபட்ச திட்டப் பிரகடனத்தில் உள்ள இந்த ஐந்தாவது அம்சம் அண்ணா அவர்கள் வலியுறுத்திய மறு சிந்தனை என்ற கருத்தை அப்படியே ஏற்றுக் கொண்டுள்ளது.

தி.மு.கழகம் தனது மாநில உரிமைக் கொள்கைக்கு மாறாக தேசிய முன்னணியில் இடம்பெற்று தனித்தன்மையை இழந்து விட்டது என்று யாராவது கூறினால், அது அடிப்படையற்றது - அபாண்டமானது - ஆத்திரத்தின் விளைவு - எரிச்சலின் வெளிப்பாடு - என்பதைத் தவிர வேறென்னவாக இருக்க முடியும்! உடன்பிறப்பே; கடிதம் முடியவில்லை - இனியும் தொடரும்! நாளை!

அன்புடன்

மு.க.

21-09-1988

1587. இது ஒரு தொடக்கம் (2)

உடன்பிறப்பே,

மத்திய மாநில அரசுகளின் உறவு முறையில் முற்றிலும் புதியதாக மறுசிந்தனை தேவை என்ற அறிஞர் அண்ணாவின் கருத்தும் - அவர் வழியில் மாநில உரிமைகளுக்கான குரல் எழுப்பும் தி.மு.கழகத்தின் கோரிக்கையும் - தேசிய முன்னணியின் 71 அம்சத் திட்டங்களில் ஒன்றாக; அதுவும் ஐந்தாவது அம்ச திட்டமாகவே இடம்பெற்றிருப்பதை சுட்டிக்காட்டி விளக்கமளித்திருந்தேன், நேற்றைய மடலில்!

இன்று நான் விளக்க இருப்பது நமது மொழிக் கொள்கை தேசிய முன்னணியில் எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பது குறித்தாகும். 71 அம்சத் திட்டத்தில் ஏழாவது அம்சத் திட்டமாக -

"Implementation of Late Pandit Nehru's assurance regarding the language policy and promotion of Indian languages"

அதாவது:-

மொழிக் கொள்கையில் பிரதமர் பண்டித நேரு அவர்கள் அளித்த உறுதிமொழியை நிறைவேற்றுவது, மற்றும் இந்திய மொழிகளை வளர்ப்பது

என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இப்போது நமது நினைவுக்குக் கொண்டு வர வேண்டியது; பண்டித நேருவின் உறுதிமொழி என்ன? என்பதாகும்!

இந்தி பேசாத மாநிலத்து மக்கள் விரும்பும் வரையில் ஆங்கிலமும் மத்திய ஆட்சி மொழியாக நீடிக்கும்

இதுதான் நேரு அளித்த உறுதிமொழி! தி.மு.கழகத்தின் முழுமையான மொழிக் கொள்கைக்கு நேருவின் உறுதிமொழி பரிகாரமாகாது!

இந்தி ஆதிக்கப் பெருவெள்ளம் அரசின் துணையோடு இந்தி பேசாத மாநிலங்களில் உடைப்பெடுத்துப் பெருகாமலிருக்க அணை அமைப்பது போன்றதுதான் நேருவின் உறுதிமொழி!

இந்தி மட்டுமே ஆட்சி மொழியென்றிருந்தால் தமிழர்கள் இரண்டாந்தரக் குடிமக்களாகிவிடுவர் என்ற நிலையறிந்து கொதித்துக் குமுறிய தமிழகத்து மொழிப் புரட்சி கண்டு ஆங்கிலமும் ஆட்சி மொழியாக நீடிக்கலாம் என ஒரு ஏற்பாடு அறிவிக்கப்பட்டது -

இது 1959 செப்டம்பர் 4ஆம் நாள் நாடாளுமன்றத்தில் பிரதமர் நேரு அறிவித்த உறுதிமொழியின் அடிப்படையில் 1965ஆம் ஆண்டு இப்படியொரு ஏற்பாட்டுக்கு மத்திய அரசு தன்னை உட்படுத்திக்கொண்டது.

அப்பொழுது காஞ்சி இதழில் அண்ணா அவர்கள் தீட்டிய தலையங்கத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

இந்தி ஆங்கிலம் என இரு மொழிகளும் ஆட்சி மொழிகளாக சட்டப்படி இயங்கும் என்ற திட்டமும் தற்காலிக திட்டம்தான். ஆனால் முன்பு இருந்து வந்ததைவிட ஒருபடி முன்னேறிய திட்டம். இந்தி எதிர்ப்பாளர்களின் குரலை மதித்திட வேண்டுமென்ற நிலைக்கு இந்தியப் பேரரசு வந்திருக்கிறது - வரவேண்டியதாகிவிட்டது என்பதை எடுத்துக்காட்டும் திட்டம். ஒரே ஒரு மொழிதான் ஆட்சி மொழி என்ற கொள்கை தளர்த்தப்பட்டு இரண்டு மொழிகள் (இந்தியும் ஆங்கிலமும்) ஆட்சி மொழிகளாக இயங்கலாம் என்பது - கருத்து அளவுக்காவது - ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பது, பழைய பிடிவாதம் தகர்ந்து வருகிறது என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறது. இந்தி எதிர்ப்புப் போரின் அளவையும் உணர்ச்சி வலிவையும் அலட்சியப்படுத்த முடியாத நிலையில் இந்திய அரசு இருமொழிக் கொள்கை என்ற இந்த அளவுக்கு இறங்கி வந்துள்ளது.

மத்திய ஆட்சி மொழிகளாக, வளம் பெற்ற எல்லா தேசிய மொழிகளும் ஏற்கப்படும் வரையில் (மொழிப் பிரச்சினையில்) நிலையான திருப்திகரமான முடிவு ஏற்பட்டதாகக் கருத முடியாது.

1965 பிப்ரவரி திங்கள் இறுதி வாரத்தில் காஞ்சி இதழில் அண்ணா எழுதிய தலையங்கப் பகுதி இது!

அன்றைக்கே அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டிய சந்தேகத்தை உறுதிப்படுத்துவது போலத்தான் மத்திய அரசு, நாம் எப்போது ஏமாறுவோம் - அப்போது இந்தியைத் திணிக்கலாம் என்று நேரம் பார்த்துச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இரண்டொரு நாட்களுக்கு முன்புகூட பிரதமர் ராஜீவ் காந்தி ஒரு நிகழ்ச்சியில் பேசும்போது இந்தியைத் திணிக்கிறோம் என்பது தெரியாமல் அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று தந்திரம் வகுத்துக் கொடுத்திருக்கிறார். எனவே சற்று தூங்கினாலும்கூட நமது தொடையில் கயிறு திரித்துக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள்.

நேருவின் உறுதிமொழியையும் மீறி மொழிப் பிரச்சினையில் மத்தியில் உள்ள காங்கிரஸ் அரசு ஆணைகளைப் பிறப்பிப்பதும் அவற்றை எதிர்த்து தமிழகமும் - குறிப்பாகத் தி.மு.கழகமும் போர்க் குரல் கொடுப்பதும் - அதன் பின்னர் இந்தி ஆதிக்கத் திணிப்பு முயற்சி, சற்று ஒதுங்கிக் கொள்வதும் இன்றைய நிலையாக அமைந்துள்ளது!

இந்தி குறித்த அரசு ஆணைகளை எதிர்த்து 1987ஆம் ஆண்டு தி.மு.கழகம் அரசியல் சட்டத்தின் இந்தி ஆட்சி மொழி எனும் பிரிவில் ஒரு பகுதியைத் தாளில் எழுதிக் கொளுத்திப் பல்லாயிரவர் சிறை சென்றதும் - அ.தி.மு.க. ஆட்சியினர்; அந்தப் போரில் ஈடுபட்ட பேராசிரியர் உள்ளிட்ட பத்து சட்டமன்ற உறுப்பினர்களைப் பதவி நீக்கம் செய்து வெளியேற்றியதும் - என்னையும் எண்ணற்ற கழக உறுப்பினர்களையும் சிறையில் தள்ளி வாட்டியதும் - பத்துக் கழகக் கண்மணிகள் தீக்குளித்து மாண்டதும் - நாம் விழித்துக் கொண்டேயிருந்தால்தான் இந்தித் திணிப்புப் புயலில் இருந்து தமிழர்களைக் காத்திட முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டு! ஏன், இப்போதுகூட வானொலி, தொலைக்காட்சி சாதனங்கள் இந்திப் பிரச்சாரக் கருவிகளாகத்தான் இயங்குகின்றன! தொலைக்காட்சி என்பது எளிதாக எல்லோருக்கும் புரியும் என்றாலும்கூட தூர்தர்ஷன் என்ற சொல்தானே தமிழர்களின் காதுகளைத் துளைத்துக் கொண்டிருக்கிறது!

இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கிறோம் என்பதில் நமது உறுதியை எடுத்துக்காட்டும் வகையில்தான் அண்ணா அவர்கள்

முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் இனி தமிழ்நாட்டில் பள்ளிகளில் தமிழ் ஆங்கிலம் இரண்டும்தான்! இந்திக்கு இடமில்லை என்று அறிவித்தார்.

மத்திய அரசு மும்மொழித் திட்டமொன்றை ஏற்கனவே அறிவித்திருந்தது. அதன்படி வடமாநிலங்களில் இந்தியும் ஆங்கிலமும் மற்றும் இந்திய மொழிகளில் ஏதாவது ஒன்றும் இடம் பெறும் என்றும் எனவே தமிழ்நாட்டுப் பள்ளிகளில் இந்தியை இடம்பெறச் செய்ய வேண்டும் என்றும் ஆணை!

நடந்ததோ வேறு - இன்றைய அரியானா மாநிலத்தில் மட்டுமே தமிழுக்கு இடம்; வேறெந்த மாநிலங்களிலும் இல்லை - இருந்தாலும் ஒப்புக்காகவே! ஆனால் தமிழ்நாட்டில் இந்திக்கு பள்ளிகளில் கட்டாயமான ஆதிக்கம்! இதற்குப் பெயர்தான் மும்மொழித் திட்டம்! அதாவது மறைமுகமாக இந்தி ஆதிக்கம் தமிழகத்தில் வேர் ஊன்ற!

இந்த நிலை தெரிந்தோ தெரியாமலோ - தேசிய முன்னணியின் ஆய்வுக்கும் முடிவுக்குமெனத் தயாரித்து அனுப்பப்பட்ட முதல் அறிக்கையில் அந்த மும்மொழித் திட்டம் இடம் பெற்றிருந்தது! அந்த அறிக்கையை ஏடுகளில் கண்டவுடனேயே அது தி.மு.கழகத்துக்கு உடன்பாடானதல்ல என்று நிருபர்கள் கூட்டத்தில் சென்னையில் தெரிவித்தேன்.

அடுத்து ஒரு வாரத்திற்கெல்லாம் டெல்லியில் தேசிய முன்னணி அமைப்புக்கான கூட்டம் ஆகஸ்டு 6-7 நாட்களில் நடைபெற்ற போது, மும்மொழித் திட்டம் என்பது 71 அம்ச திட்டத்திலிருந்து அகற்றப்பட்டு நேருவின் உறுதிமொழி நிறைவேற்றப்படும் என்பது மட்டுமே இருந்திட வேண்டுமென்று கழகச் சார்பில் எடுத்து வைக்கப்பட்ட கருத்தை மறுப்பின்றி அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

இந்தச் செய்தியை ஆகஸ்டு 10ந் தேதி இந்து இதழ் பின்வருமாறு வெளியிட்டது. A.G.P., D.M.K. score points in Front's programme (அசாம் கணபரிக்ஷத்தும் தி.மு.க.வும் தேசிய முன்னணியில் தங்கள் கருத்துக்களுக்கு வெற்றி ஈட்டின) என்பதே இந்துவின் செய்திக்குத் தலைப்பாகும்.

"The formulation on language was modified to accommodate the D.M.K., which objected to a reference to the three language

Formula. The Original Draft referred to the "Implementation of the three language Formula and late Pandit Nehru's Assurance not to impose Hindi on the non-Hindi States." The final Document however confined itself to the "Implementation of Late Pandit Nehru's assurance regarding the language policy and promotion of Indian languages!"

இதன் தமிழாக்கமாவது:-

மும்மொழித் திட்டம் பற்றிக் குறிப்பிட்டிருந்ததற்கு தி.மு.க. ஆட்சேபம் தெரிவித்ததையடுத்து மொழிக் கொள்கை பற்றிய குறிப்பு தி.மு.கழகத்துக்கு இணக்கமான வகையில் மாற்றியமைக்கப்பட்டது. முதலில் இருந்த குறிப்பில் மும்மொழித் திட்டத்தை அமலாக்குவதும், மறைந்த பண்டித நேரு இந்தி பேசாத மாநிலங்கள் மீது இந்தித் திணிப்பு செய்யப்படமாட்டாது என்று கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றலும் கொள்கைகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தன. ஆனால் இறுதிக் கொள்கைக் குறிப்பில் மொழிக் கொள்கை தொடர்பாக பண்டித நேருவின் உறுதிமொழியை நிறைவேற்றலும், இந்திய மொழிகள் அனைத்தையும் முன்னேற்றலும் என்பதாக மட்டுமே குறிப்பிடப்பட்டது.

உடன்பிறப்பே, மீண்டும் மீண்டும் நான் நினைவூட்டுகிறேன் - 1938ல் கட்டாய இந்தியை எதிர்த்து நாம் போர் தொடங்கியது ஒரு கட்டம்! அது வெள்ளையர் காலத்தில் - இங்கே ராஜாஜி தலைமையில் காங்கிரஸ் ஆட்சி நடந்த போது! பின்னர் கட்டாய இந்தி விலக்கிக் கொள்ளப்பட்டது!

சுதந்திரம் பெற்ற இந்தியாவில் மீண்டும் இந்தி ஆதிக்கம் தமிழர்கள் மீது படையெடுத்தது! அன்று கட்டாய இந்தியை நுழைத்த ராஜாஜி அவர்களே, இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கிற அளவுக்குத் தமிழ்நாடு கொந்தளித்து எழுந்தது! பெரியார், அண்ணா, மறைமலையடிகளார், சோமசுந்தர பாரதியார் போன்றோர் கொட்டிய இந்தி எதிர்ப்பு முரசு, தனது முழக்கத்தை நிறுத்தவில்லை! தாளமுத்து நடராசனைத் தொடர்ந்து தமிழ் இளைஞர்களின் உயிர்கள் பலப்பல இந்தி ஆதிக்கத்துக்குப்

பலியாயின! மொழிப் புரட்சியில் தமிழகம் பிணக்காடு ஆனபோது அடக்குமுறை அரசாக விளங்கிய காங்கிரஸ் அரசுக்கு பாராளுமன்றத்திலே உள்துறை அமைச்சரான குல்சாரிலால் நந்தா நற்சான்று வழங்கிப் பாராட்டு தெரிவித்தார் - எதற்கும் அஞ்சாத மலை தமிழக முதலமைச்சர் என்று, 1965ல்!

இந்தி மட்டுந்தான் ஆட்சிமொழி என்ற நிலை 1965ல் ஏற்பட்டபோது எரிமலையான தமிழகத்தைச் சமாளிக்கத்தான் 1959ல் பிரதமர் நேரு வழங்கிய இந்தி பேசாத மாநில மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் நீடிக்கும் என்ற உறுதிமொழியின் அடிப்படையில் ஏற்பாடுகள் அறிவிக்கப்பட்டன. ஆட்சி மொழிச் சட்டம் இந்திப் பிரச்சினையில் தமிழகத்திற்கு விதிவிலக்குகள் அளித்து நிறைவேற்றப்பட்டது.

தி.மு.கழகத்தின் மொழிக்கொள்கையின் முழு வெற்றிக்கு நேருவின் உறுதிமொழியை நிறைவேற்றுவதோ - அல்லது அந்த உறுதி மொழியை அரசியல் சட்டத்தில் இடம்பெறச் செய்வதோ போதுமானதல்ல!

காரணம்; இந்திய அரசியல் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் உள்ள தமிழ் உள்ளிட்ட பதினைந்து தேசிய மொழிகளும் மத்திய ஆட்சி மொழிகளாக வேண்டுமென்பதே நமது கழகத்தின் மொழிக் கொள்கை!

இந்தியும், ஆங்கிலமும் என்ற இரு மொழிக் கொள்கை, ஒரு இடைக்கால ஏற்பாடு என்ற முறையில் அமைகிறது என்ற போதிலும், இதிலே முழுத் திருப்தி கொள்வது இயலாது. நிரந்தரமான நிலையான தீர்வு தேசிய மொழிகள் அனைத்தும் ஆட்சி மொழிகளாவதிலேதான் இருக்கிறது என்றாலும்; பெற்ற வெற்றி, பெறவேண்டிய வெற்றிகளுக்கு வழி அமைக்கிறது என்ற முறையில் இந்த இருமொழிக் கொள்கையைக் கொள்ள வேண்டியிருக்கிறது.

என 1965 பிப்ரவரி இறுதி வாரத்தில் அண்ணா அவர்கள் காஞ்சி இதழில் எழுதியுள்ள தலையங்கத்தின் உணர்வை, தி.மு.கழகம் என்றைக்கும் மறந்ததில்லை! மறக்கப்போவதுமில்லை!

உடன்பிறப்பே, ஒன்று தெரியுமா உனக்கு! இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரின் தளபதியாக விளங்கிய அண்ணா அவர்களையே

களங்கப்படுத்த அன்றைக்கு காங்கிரஸ் அமைச்சராக இருந்த சுப்பிரமணியனாரும், முதலமைச்சராக இருந்த பக்தவத்சலனாரும் இந்தியை ஆதரித்து அண்ணா கையெழுத்துப்போட்டு விட்டார் என்றும், இந்தியை ஆதரிப்பதாக அண்ணா டெல்லியில் நிருபர்களிடம் தெரிவித்து விட்டார் என்றும் மிகப் பெரும் பிரச்சாரத்தை முடுக்கி விட்டனர். அதுகுறித்து அண்ணா அவர்கள் அப்போது தந்த விளக்கமிருக்கிறதே, அது அவர்களுக்கு மட்டுமல்ல - நமது மொழிக் கொள்கை பற்றி அண்ணா நம் கரங்களில் தந்த ஒளி விளக்குமாகும்! அதனை நாளைக்கு எழுதுகிறேன்.

அன்புடன்

மு.க.

22-09-1988

42225
க894.8116
கலை.18
தி.மு.க. அறக்கட்டளை பேராசிரியர் ஆய்வக நூல் நிலையம் சென்னை-18 அண்ணா அறிவாலயம்

1588. இது ஒரு தொடக்கம் (3)

உடன்பிறப்பே,

இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கும் பாசறையாம் தி.மு.கழகத்தின் படைத்தலைமை பூண்டு களத்தில் நின்ற அறிஞர் அண்ணா அவர்களின் மன உறுதிக்கு மாசு கற்பிக்க முனைந்து, அண்ணா அவர்கள் இந்தியை ஆதரித்துக் கையெழுத்துப் போட்டுவிட்டார் என்று அமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்களும், டெல்லியில் நிருபர்கள் கூட்டத்தில் அண்ணா அவர்கள் இந்திக்கு ஆதரவு காட்டிவிட்டார் என்று முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களும் திசைதிருப்பும் பிரச்சாரத்தில் இறங்கியதையும் - அந்தப் பிரச்சாரத்தை மறுத்து அண்ணா அவர்கள் என்ன எழுதினார் என்பதையும் இன்றைய கடிதத்தில் குறிப்பிடுவதாக நேற்றைக்கு சொல்லியிருந்தேன்.

1938 ஜூன் திங்கள் மூன்றாம் நாள் இந்தி எதிர்ப்புப் போராட்டக் கொடி சென்னை மாநகரில் ஏற்றப்பட்டு போராட்டம் தொடர்ந்து நடந்தபோது படைத்தளபதிகளாகப் பொறுப்பேற்றவர்களில் அண்ணாவும் ஒருவர்!

தனது முப்பதாவது வயதில் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து அண்ணா அவர்கள், பெரியாரின் ஆணை பெற்றுச் சிறை புகுந்தபோது அவரைவிடப் பதினாறு வயது இளையவரான நான் - அதே நேரத்தில் திருவாரூர் வீதிகளில் இந்தி ஆதிக்க எதிர்ப்பு ஊர்வலங்களை நடத்திக் கொண்டிருந்தேன்.

இன்னமும் அந்த இந்தி ஆதிக்க எதிர்ப்பின் கூர்முனை எனக்கு மழுங்கி விடவில்லை என்கிறபோது - பெரியாரின் பெரும்படைத் தளபதியாக விளங்கி, என் போன்றோர் பலரை இந்தி ஆதிக்க எதிர்ப்புச் சிப்பாய்களாக வழிநடத்திய தன்மானத் தமிழ்க்குல தீபமாம் அண்ணா அவர்களின் இந்தி ஆதிக்க எதிர்ப்பு

உணர்வு பட்டுப் போய் விட்டதென்று பக்தவத்சலனாரும் சுப்பிரமணியனாரும் செய்தி பரப்பிய போது - அதை நம்புவதற்கு நாட்டில் யாருமில்லை எனினும்; உண்மை நிலையைத் தெரிவிக்க வேண்டுமென்ற கடமை உணர்வு அண்ணாவுக்கு இருந்த காரணத்தால் காஞ்சி இதழில் 1965ஆம் ஆண்டு தொடர் கடிதங்களே எழுதினார். இதோ அவற்றுள் சில பகுதிகள்:-

நமது வளர்ச்சி கண்டு மாற்றுக் கட்சியினர் தமது முறைகளை மாற்றிக் கொண்டனரா என்றால் இல்லை. வேகமாகி இருக்கிறது. அன்று போலவே இன்றும் இட்டுக் கட்டுவது, திரித்துக் கூறுவது நடந்தபடி இருக்கிறது. அன்று 1958ல் - நான் இந்தியை ஏற்றுக்கொண்டு கையெழுத்துப் போட்டுவிட்டேன் சட்டசபைக் கமிட்டிக் கூட்டத்தில் என்று, ஒரே புகார் - வதந்தி - தப்புப் பிரச்சாரம் - பரபரப்பு.

எனக்குத் தம்பி! அதிலே ஒரு மகிழ்ச்சி - என்னைப் பற்றி விஷமம் செய்யப்படுகிறதே என்பது குறித்து வரவேண்டிய எரிச்சல்கூட எழவில்லை. இந்திக்கு எத்தனை அளவு எதிர்ப்பு இருக்கிறது. அதனை எவராவது ஆதரிக்க முனைகிறார்கள் என்று கூறப்பட்டால், மக்கள் எத்தனை ஆத்திரம் கொள்கிறார்கள் என்பதனை அறிந்து மகிழ்ந்தேன். பொறுமையாகக் காத்துக் கொண்டிருந்தேன். கட்டிவிடப்பட்டதை உடைத்துப் போட கிடைத்தது வாய்ப்பு. 1958 பிப்ரவரி 12ஆம் நாள் சென்னை சட்டமன்றத்தில் இந்த நிகழ்ச்சி; அதுவரையில் விடாமல் மேடைக்கு மேடை ஒரு திங்கள் - அண்ணாதுரை இந்தியை ஏற்றுக் கொண்டு கையெழுத்துப் போட்டுவிட்டான் என்றுதான் பேச்சு!

இவ்வாறு எழுதுகிற அண்ணா அவர்கள் அன்றைக்கு சட்டமன்ற நிகழ்ச்சியையும் அப்படியே எழுத்து பிசகாமல் குறிப்பிடுகிறார் பார்!

கூட்டத்திற்கு தாங்களும் சென்று விட்டு அங்குக் கூறப்பட்ட கருத்துக்களையும் ஒத்துக் கொண்டுவிட்டு, கையெழுத்தும் போட்டு விட்டு வெளியே வந்து வேறு விதமாகச் சொல்கிறார்கள்

என்று பேசினார் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர்.

அதிலே கையெழுத்து போடப்பட்டது என்று சொல்வது தவறு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

என்று நான் குறுக்கிட்டுக் கூறினேன்.

அந்தக் கூட்டத்திற்கு யார் யாரெல்லாம் வந்திருந்தார்கள் என்று தெரிந்து கொள்வதற்காகக் கையெழுத்து வாங்கியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்

என்று மேலும் கூறினார் அந்தக் காங்கிரஸ் உறுப்பினர்.

அவ்விதமும் கையெழுத்து வாங்கவில்லை என்பதை அம்மையார் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று நான் கூறினேன்.

1958, பிப்ரவரி 12ஆம் நாள் சென்னை சட்டமன்றத்தில் இந்த நிகழ்ச்சி, அதுவரையில், விடாமல் ஒரு திங்கள் மேடைக்கு மேடை, அண்ணாதுரை இந்தியை ஏற்றுக் கொண்டு கையெழுத்துப் போட்டு விட்டான் என்றுதான் பேச்சு! பேச்சா! இடி முழக்கம்! கேலிப் படம்! கடாவுதல்! எல்லாம்!! தெரிந்த வித்தை அவ்வளவும்!! மறுநாளும் எனக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது சட்டசபையில்.

நம் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள், நான் கையெழுத்துப் போட்டு விட்டதாகச் சொன்னதாக நான் பத்திரிகையில் பார்த்தேன் (நான்)

நான் எந்தக் கூட்டத்திலும் கையெழுத்துப் போட்டதாகச் சொல்லவில்லை (அமைச்சர் சுப்பிரமணியம்)

நிதி அமைச்சர் சொன்னதாகப் பத்திரிகையில் வந்தது. பத்திரிகையிலே வந்தது மட்டுமல்ல, நேற்றையதினம் பேசிய கனம் அங்கத்தினர் அனந்தநாயகி அவர்கள் கையெழுத்துப் போட்டுவிட்டு இப்போது இல்லையென்று சொல்கிறாரே என்று ஆழ்ந்த வருத்தத்தோடு கேட்டார் (நான்)

திருத்திக் கொண்டேன் என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்கள் தெரிந்து கொள்வார்கள் என்று நினைக்கிறேன் (கனம் அனந்தநாயகி அம்மையார்)

புகார் கிளப்பிய இதழ்கள், அது பொருளற்றது என்பதை விளக்கிடும் சட்டசபை நிகழ்ச்சியை எடுப்பாக வெளியிட்டனவா? இல்லை! அதற்கா அவை? இட்டுக்கட்டுகளோ இருப்பதை மறைப்பவைகளோ இவைகளுக்கு இடம் கொடுத்தாகிலும் என்னைக் குறை கூற எண்ணுபவர்களுக்கு இடம் நிறைய!

இவை, 1965 காஞ்சி இதழில் அண்ணா அவர்கள் எழுதியவை!

உடன்பிறப்பே! அமைச்சர் சி.எஸ். அவர்கள் வெளியில் ஏதோ பேசிவிட்டு - சட்டமன்றத்தில் நேருக்கு நேராக அண்ணா கேள்வி எழுப்பியபொழுது தான் - இல்லை! இந்தியை ஆதரித்து அண்ணா கையெழுத்துப் போடவில்லை - என்பதை ஒப்புக்கொண்டார்.

அவரைப் போலவே முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் கிளப்பிய பிரச்சினைக்கும் 1965ஆம் ஆண்டு காஞ்சி இதழிலே கடித மூலம் பதிலளித்தார் அண்ணா!

அதில் சில பகுதிகளை படித்துப் பார் - பக்தவத்சலனாருக்கு பதில் மட்டுமல்ல; நமது கழகத்தின் மொழிக் கொள்கைக்கான விளக்கமும் காணலாம்!

தம்பி, டெல்லி நிருபர்கள் மாநாட்டில் எனது பேட்டியை - இந்து இதழ் வெளியிட்டிருக்கிற முறையிலிருந்து (1) சர்க்கார் இந்தியை ஆட்சி மொழியாக்குவதை விட்டுவிட வேண்டும் (2) இந்தியைப் பரப்ப சர்க்கார் முனையக் கூடாது - என்பவைகளை நான் வலியுறுத்தியிருப்பது நன்கு விளங்கும்! நமக்குத் தேவை இந்தியை ஆட்சி மொழியாக்கும் முயற்சியைச் சர்க்கார் கைவிட்டு விட வேண்டுமென்பது. இந்தியைப் பரப்ப சர்க்கார் தனி அக்கறை காட்டும் போக்கும் நிறுத்தப்பட வேண்டுமென்பது. இந்த இரண்டும் சர்க்காரால் கைவிடப்பட வேண்டும். இதனைச் செய்ய உம்மால் முடிந்து செய்துவிட்டு வந்தால் பிறகு இந்தி பரப்புவதற்கு உதவி கேளும் - செய்கிறேன் என்று நான் கூறியிருக்கிறேன், என்னிடம் அந்தக் கேள்வியைக் கேட்ட நிருபரிடம்! இதனை வைத்துக்கொண்டு முதலமைச்சர் பக்தவத்சலமாகட்டும் மற்றவர்களாகட்டும் வேடிக்கை பேச என்ன காரணம் இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை.

இந்தி எதிர்ப்பு இயக்கம் நடத்திடத் தொடங்கிய நாள்தொட்டு, நாம் தெளிவாக ஒன்று கூறி வருகிறோம். எங்களுக்கு எந்த மொழி மீதும் வெறுப்பில்லை - இந்தியை நாங்கள் அந்த விதத்தில் எதிர்க்கவில்லை - அது இந்தியாவின் ஆட்சி மொழியாக ஆக்கப்படுவதைத்தான் நாங்கள் எதிர்க்கிறோம் என்பதனை திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறோம். நமது கழகத்தின் தீர்மானம் தேசிய மொழிகள் அனைத்தும் ஆட்சி மொழிகளாக வேண்டும். அந்த மொழிகளில் இந்தியும் ஒன்று. இந்தியை அந்த

தேசிய மொழிகளில் ஒன்று எனக் கொள்ளக் கூடாதென நாம் சொன்னதுமில்லை. சொல்லப்போவதுமில்லை. சொல்லுவதில் நியாயமுமில்லை.

நாம் சொல்லி வருவதெல்லாம், இந்தி, இந்தியாவின் ஒரு பகுதியினரின் தாய்மொழி. அதனை இந்தியாவின் ஆட்சி மொழி என்று ஆக்குவது அடாது, ஆகாது, பெரும் தீது, அது இந்தி பேசாத மக்களை அநீதிக்கு ஆட்படுத்தும், இரண்டாந்தரக் குடிமக்களாக்கும், ஆகவே அதனை ஒப்ப மாட்டோம், எதிர்க்கிறோம், என்பதாகும்.

இந்த அடிப்படை மாறாது என்பது மட்டுமல்ல, நாம் மட்டுமே கூறிக்கொண்டு வருகிற இந்த அடிப்படையை இன்று வேறு பலரும் ஏற்றுக் கொள்ளத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

நான், மாநிலங்கள் அவையில் பேசியானதும், பிற்பகல், இந்தியாவின் தீவிரக்கட்சியான ஜனசங்கத்தைச் சார்ந்த வாஜ்பாய் பேசினார், அவர் என்னையும் நான் சொன்ன கருத்துக்களையும், பலமாகத் தாக்குவார் என்ற நப்பாசை பலருக்கு இருந்தது.

அவரோ, அண்ணாதுரை சொல்லுகிற பதினான்கு தேசிய மொழிகளும் ஆட்சி மொழிகளாக வேண்டும் என்ற திட்டத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன், என்று பேசினார்.

வாஜ்பாய், மாறுபட்டது எதிலே என்றால், 14 மொழிகளும் ஆட்சி மொழிகளாகக் காலம் பிடிக்கும், அதுவரை ஆங்கிலம் தொடர்ந்து இருக்கட்டும் என்பதிலேதான், அவருடைய கருத்து இப்போதே பதினான்கு மொழிகளும் ஆட்சி மொழிகளாகி விடட்டும், ஆங்கிலம் அகற்றப்படட்டும் என்பது.

இதிலே நமக்கு என்ன ஆட்சேபம்! நாளைக்கே நமது தமிழ் மொழி, இந்தியாவின் ஆட்சி மொழியாக அரியணை ஏறினால், ஆங்கிலம் நமக்கு ஆட்சி மொழியாக இருக்க வேண்டிய தேவை என்ன இருக்கிறது!

இந்தி இந்தியாவின் ஆட்சி மொழி ஆக்கப்பட வேண்டும் என்ற சர்க்கார் கொள்கை விடப்பட்டு, இந்திக்காகச் சர்க்கார் பணம் செலவிட்டு, பரப்பும் முயற்சியை நிறுத்திக்கொண்டு, பதினான்கு மொழிகளும் இந்தியாவின் ஆட்சி மொழிகள் என்று சட்டமாக்கப்பட்டு, அதன்படி நமது தமிழ் மொழி ஆட்சி மொழி என்ற நிலைபெற்று, பிறகு இந்தியைப் பரப்ப, மக்கள் அமைப்பு

முயற்சி எடுத்துக் கொள்ளும்போது என் உதவி கிடைக்குமா என்று என்னை ஒருவர் கேட்கும் போது, கிடைக்கும் என்று கூறுவதிலே என்ன தவறு காண்கிறாரோ முதலமைச்சர் எனக்குப் புரியவில்லை

உடன்பிறப்பே; இவ்வாறு எழுதியுள்ள அண்ணா இன்னும் அதே காஞ்சி இதழில் எழுதுகிறார் பார்!

தெரியுமா! தெரியுமா! உங்கள் அண்ணாதுரை என்ன சொன்னான் தெரியுமா! என்று சிலம்பு போடும் சிலர்கள், இந்தி ஆதரவாளர் லால்பகதூர் தமது பேரப்பிள்ளையை ஆங்கில மொழி மூலம் கற்பிக்கும் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பி இருக்கிறார், என்பதனைக் கூறவா செய்வார்கள்? எப்படி எதிர்பார்க்க முடியும்? சிலர் பசுவிடமிருந்து பால் பெறுகிறார்கள்; சிலர் கோமேயம் மட்டும் சிரமப்பட்டு, செம்புப் பாத்திரத்தில் பிடித்து வைத்துக் கொள்கிறார்கள். அது அவரவர்களின் விருப்பம்; தேவையைப் பொறுத்தது!

இந்தியைப் பரப்பும் காரியத்தை சர்க்கார் செய்யக்கூடாது. அதிகார பூர்வமற்ற மக்களின் அமைப்பு செய்ய வேண்டும் என்று கூறினேன். இதுதான் முதலமைச்சர் பக்தவத்சலம் கரத்துக்குப் பந்து ஆயிற்று! என்ன வேடிக்கையான இயல்பு!

இந்தியை ஆட்சி மொழி ஆக்கும் திட்டத்தைச் சர்க்கார் விட்டுவிட வேண்டும் என்றேனே, அது?

இந்தியைப் பரப்பும் வேலையில் சர்க்கார் ஈடுபடக்கூடாது என்றேனே, அது?

பதினான்கு மொழிகளும் ஆட்சி மொழிகளாக வேண்டும் என்றேனே, அது?

தொடர்பு மொழி என்று எதனையும் சர்க்கார் அறிவிக்கக்கூடாது என்றேனே, அது?

தொடர்பு மொழியாக, தொன்மையும் வளமையும் மிக்க தமிழ் ஏன் கொள்ளப்படக் கூடாது என்று கேட்டேனே, அது?

அவை ஒன்று கூட முதலமைச்சருக்கு, முக்கியமானவையாகப் படவில்லை!! ஏன் என்று கேட்க நான் யார்! அவரோ முதலமைச்சர்! நானோ கருணாநிதிக்கு அண்ணன்! நான் போய் கேட்கலாமா அவ்வளவு பெரியவரை, இந்த சங்கடமான கேள்வியை!

உடன்பிறப்பே, அன்று அண்ணாவைப்பற்றி யாரோ தெருவிலே போகிறவர்கள் அல்ல - திசை திருப்பக் கயிறு திரித்தவர்கள்; பெரும் பதவிப் பொறுப்புகளில் இருந்தவர்களே என்கிறபோது - இன்று நாம் தேசிய முன்னணியில் இடம்பெற்றுள்ளது கண்டு எரிச்சல் அடைந்திருப்போர் எதுவும் பேசுவர் என்பதில் ஆச்சரியம் என்ன இருக்க முடியும்!

சென்னை மாநகரில் எத்தனையோ அனைத்திந்திய தலைவர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள் நடை பெற்றிருக்கின்றன. அவற்றில் பலர் ஆங்கிலத்தில் உரையாற்றினாலும் ஓரிருவராவது இந்தியில் பேசியதுண்டு! அதிலும் குறிப்பாக அண்மையில் மறைமலை நகரில் நடைபெற்ற இந்திரா காங்கிரஸ் மாநாட்டில் பெரும் பகுதி இந்தியிலே தான் சொற்பொழிவுகள்!

நாம் நடத்திய தேசிய முன்னணி தொடக்க விழாவிலோ வடக்கேயிருந்து வந்த தலைவர்கள் யாருமே இந்தியில் உரையாற்றவில்லை.

இத்தனைக்கும் பிறகு தி.மு.கழகம் இந்திக்காரர்கள் பக்கம் சாய்ந்து விட்டது என இங்குள்ள சிலர் கூறும்பொழுது அண்ணா சொன்ன பசும்பால் - கோமேயம் உவமைகள் தானே நினைவுக்கு வருகின்றன! தவறா நான் சொல்வது?

மத்திய காங்கிரஸ் அரசு அரசியல் சட்ட இந்தி மொழி பெயர்ப்புக்கு மசோதா கொண்டு வந்தபோது தமிழிலும் மொழி பெயர்க்க வேண்டுமென மாநிலங்களவையில் கழகம் கொடுத்த திருத்தத்தை ஏற்க மறுத்து - அந்தத் திருத்தத்திற்கு எதிராக வாக்களித்தவர்கள் நம்மைப் பார்த்து இந்திக்காரர்களிடம் சாய்கிறோம் என்பது; இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற விநோதமன்றோ?

உடன்பிறப்பே, தேசிய முன்னணியின் 71 அம்ச திட்டத்தில் இடம் பெற்றுள்ள மொழிப் பிரச்சினையில் நேருவின் உறுதிமொழி நிறைவேற்றப்படும் என்பது; நான் நேற்றைய கடிதத்தில் குறிப்பிட்டிருப்பது போல் இந்தி ஆதிக்க வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தும் அணை போலத்தான்!

அந்த அணையை உடைத்துக் கொண்டு இன்றுள்ள மத்திய ஆட்சியினர் இந்தி வெள்ளத்தை நுழைய விடுகின்றனர். அந்த நிலை இருக்கக் கூடாது; நிச்சயம் இருக்காது என்பதைத்தான்; மொழி குறித்த தேசிய முன்னணியின் கருத்து உறுதிப்படுத்துகிறது!

ஒவ்வொரு கட்சிக்கும் தனித்தன்மை - தனிக்கொள்கை - தனிக் குறிக்கோள் உண்டு! அவற்றை விட்டுக் கொடுக்காமல் - அதே நேரத்தில் ஒரு பொதுவான குறைந்தபட்ச திட்டத்தின் அடிப்படையில் அணி அமைத்திடும் பொழுது, அந்தக் கட்சிகளின் கொள்கைகள், கோட்பாடுகள், குறிக்கோள் அந்த அணியில் முழுமையாக இடம் பெறாவிடினும் - அவற்றுக்கு முரண்பாடாக எதுவும் இருந்திடாமல் அமைவதே குறைந்தபட்ச திட்ட அடிப்படையில் அமையும் அணியாகும்!

அவ்வகையில் அமைந்துள்ள அணிதான் நமது கழகம் இடம் பெற்றுள்ள தேசிய முன்னணி என்பதற்கு இன்னும் சில விளக்கங்களை நாளை எழுதுகிறேன்.

அன்புடன்

மு.க.

23-09-1988

1589. இது ஒரு தொடக்கம் (4)

உடன்பிறப்பே,

ஒவ்வொரு கட்சிக்கும் தனித்தன்மை - தனிக்கொள்கை - தனிக் குறிக்கோள் உண்டு! அவற்றை விட்டுக் கொடுக்காமல் - அதே நேரத்தில் ஒரு பொதுவான குறைந்தபட்ச திட்டத்தின் அடிப்படையில் அணி அமைத்திடும் பொழுது, அந்தக் கட்சிகளின் கொள்கைகள், கோட்பாடுகள், குறிக்கோள் அந்த அணியில் முழுமையாக இடம்பெறாவிடினும் - அவற்றுக்கு முரண்பாடாக எதுவும் இருந்திடாமல் அமைவதே குறைந்தபட்ச திட்ட அடிப்படையில் அமையும் அணியாகும் என்பதை நேற்றைய கடிதத்தில் குறிப்பிட்டு, அவ்வகையில் அமைந்துள்ள தேசிய முன்னணியின் திட்டங்களை இன்று எழுதுவதாகக் கடிதத்தை முடித்திருந்தேன்.

நாட்டின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும், பாதுகாப்பையும் வலுப்படுத்துவதோடு வகுப்புவாதங்கள் பிரிவினை வாதங்கள் மற்றும் நாட்டைச் சீர்குலைக்க முனையும் சக்திகளை எதிர்த்து இந்த முன்னணி போராடும் என்று தேசிய முன்னணியின் செயல்திட்ட அறிவிப்பில் முதல் அம்சமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1962ஆம் ஆண்டு அண்ணா அவர்கள் காலத்திலேயே அதாவது 26 ஆண்டுகளுக்கு முன்பே தி.மு.கழகம் தனது பொதுக்குழுவைக் கூட்டி திராவிட நாடு பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டது என்பதை நம்மோடு தேர்தல் உடன்பாடு கொண்ட இந்திரா காங்கிரஸ் தலைவரும் பிரதமருமான இந்திரா காந்தி அவர்களே பல்வேறு நிருபர்கள் கூட்டத்தில் தெரிவித்து; அதனால் தி.மு.கழகத்துடன் தேர்தல் உறவு கொள்வது தவறாகாது என அறிவித்திருக்கிறார்கள். அப்போது இந்திரா அம்மையாருக்கு எதிராகவும் அவரைக் கொச்சைப்படுத்தியும் கொடி தூக்கிக் கொண்டிருந்தவர்களுக்கு அந்தப் பேட்டிகளைப் படிப்பதற்கு நினைப்பும் இருந்திருக்காது - நேரமும் இருந்திருக்காது! அதனால்தான் 26 ஆண்டுகளுக்கு முன்பே

கழகம் கைவிட்டுவிட்ட பிரிவினைக் கோரிக்கையை இன்றைக்கும் அவர்கள் மறக்காமல் ஆகா! தி.மு.க., திராவிடநாடு கொள்கையைக் கைவிட்ட கட்சி! என்று பிதற்றித் திரிந்துகொண்டிருக்கிறார்கள்! போகிற போக்கைப் பார்த்தால் அவர்களே ஒருவேளை திராவிடநாடு திராவிடருக்கே! என்று தெருக்களில் முழங்கத் தொடங்கி விடுவார்களோ எனச் சந்தேகம் ஏற்படுகிறது எனக்கு!

தேசிய முன்னணி தோன்றுவதற்கு முன்பே - தி.மு.கழகம்; என்றைக்கு பஞ்சாபில் காலிஸ்தான் கோரிக்கை எழுந்ததோ - அப்பொழுதே அதனை மறுத்துக் குரல் கொடுத்திருக்கிறது! பஞ்சாபில் பிந்தரன்வாலேயை உருவாக்கித் தனக்குச் சாதகமாக வளர்த்துவிட்டதும் - அவரைக் கொண்டே மாநிலக் கட்சியான வலிமை மிக்க அகாலி தளத்தை பிளக்க முற்பட்டதும் - இந்திரா காங்கிரஸ்தான் என்பதை நமது கழகம் பல்வேறு ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டியிருக்கிறது என்றாலும், பஞ்சாபில் நாள்தோறும் நடைபெறும் பயங்கரப் படுகொலைகளுக்கு ராஜீவ் காந்தியின் தவறான அணுகுமுறைகள்தான் காரணம் என்பதை கழகம் சான்றுகளுடன் சுட்டிக் காட்டியிருக்கிறது என்றாலும், பஞ்சாபில் எழும் காலிஸ்தான் பிரிவினைக் குரலுக்கு எதிராகத்தான் கழகம் கருத்து தெரிவித்துள்ளது.

திராவிடஸ்தானை விட்டுவிட்டீர்கள், காலிஸ்தானை ஆதரிக்கவில்லை - அப்படியானால் இலங்கையில் தமிழ் ஈழத்தை மட்டும் ஏன் ஆதரிக்கிறீர்கள்? என்று ஒரு கேள்வி!

தமிழ் ஈழம் விடுதலைப் போராளிகளின் குறிக்கோள்! நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகச் சிங்களவரிடமும், சிங்கள அரசிடமும் தமிழர்கள் படும் அல்லல் - இழந்த உரிமைகள் - உடைமைகள் - உயிர்கள் - இவற்றுக்குப் பிறகு தமிழ் ஈழம் தனிநாடாக ஆவது ஒன்றே பிரச்சினைக்குப் பரிகாரமாகும் என்பது அவர்களது கருத்து! கழகத்தின் சார்பில் நமது கருத்து திட்டவட்டமாக ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது; பேச்சு வார்த்தையில் இரு சாராருக்குமிடையே எந்தவொரு முடிவு ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் அதனைத் தி.மு.க. வரவேற்கும் என்பதாக!

அந்த முடிவு தனித் தமிழ் ஈழமாகவும் இருக்கலாம் - அல்லது அதற்கும் குறைவான சுயாட்சித் தன்மை கொண்ட தமிழ்த் தாயக மாநில அமைப்பாகவும் இருக்கலாம் - ஈழத்தில் அமைதி

நிலவிடவும், தமிழர்கள் அவதி நீங்கி வாழ்ந்திடவும் ஏற்ற முடிவு காண வேண்டுமென்பதே கழகத்தின் கருத்து எனப் பலமுறை தெளிவாக்கப்பட்டிருக்கிறது!

தனித் தமிழ் ஈழமொன்றே தமது இன்னல் போக்க வல்லது என ஈழத் தமிழர்கள் எண்ணுவார்களேயானால் - அதற்கு ஆதரவு தர இங்குள்ள தமிழர்கள் எண்ணுவது எப்படித் தவறானதாக இருக்க முடியும்?

பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷ் பிரிந்து போக ராணுவ உதவியளித்து - படையெடுத்துச் சென்று - இந்திய மக்களின் ஆதரவையெல்லாம் இந்திரா காந்தி அவர்கள் திரட்டியபோது அந்த பங்களாதேஷ் தனிநாடு கோரிக்கைக்கு தி.மு.கழகமும் ஆதரவளித்தபோது - இன்றைக்கு நம்மைக் கேலி பேசும் விசித்திர அரசியல்வாதிகள் அன்றைக்கு எங்கே போனார்கள்? ஒருவேளை அவர்கள் இந்திரா காந்திக்கு எதிரணியில் இருந்த காரணத்தால் நிலபுலங்களைக் கவனித்துக்கொண்டும் பினாமிகளை மிரட்டிக்கொண்டும் நாளேடுகளையும் படிக்காமல் - நாட்டில் நடப்பதையும் அறியாமல் நேரத்தை நகர்த்திக்கொண்டிருந்தார்களோ; என்னவோ!

உடன்பிறப்பே; தேசிய முன்னணியின் குறைந்தபட்ச திட்ட அறிவிப்பில் அயல்நாட்டுக் கொள்கை என்ற தலைப்பில் :

இலங்கையில் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்து எல்லாத் தரப்பினருக்கும், திருப்தி அளிக்கும் வகையில், பேச்சு வார்த்தை மூலம் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும்

"Effecting immediate cease-fire and negotiated settlement of Sri Lanka's Ethnic problem to the satisfaction of all parties"

எனத் தெளிவாக்கப்பட்டுள்ளது. இதற்குப் பெயர்தான் குறைந்தபட்ச திட்டம் என்பதாகும். இது எழுதப்பட்டுள்ள திட்டம்.

எழுதப்படாத திட்டமாக நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த போது தனித்தமிழ் ஈழத்தை ஆதரிக்கும் கட்சிகளையும் - ஆதரிக்காத கட்சிகளையும் அழைத்து அந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் சில பொதுவான குறைந்தபட்ச கோரிக்கைகளைக் கொண்ட முறையீட்டைத் தயாரித்து மத்திய அரசுக்கு அளித்ததை நினைவிற்கொண்டால் - ஒவ்வொரு கட்சிக்கும் தனித்தனி கொள்கை உண்டு, தனித்தன்மை உண்டு,

குறிக்கோள் உண்டு - ஆனால் குறைந்தபட்ச திட்டமென்பது பொதுவான பிரச்சினையில் முரண்பாடு இல்லாமல் உடன்பாடு கண்டு செயல்படுவது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

ஏன் இந்த உதாரணத்தைச் சொல்லுகிறேன் என்றால் - அந்த அனைத்துக் கட்சிக் கோரிக்கை தயாரித்த கூட்டத்தில் தமிழ்ஈழத் தனிநாடு ஆதரவுக் கட்சிகளும் - ஆதரிக்காத காங்கிரஸ் போன்ற கட்சிகளும் இடம்பெற்றிருந்தன என்பதைச் சுட்டிக்காட்டவும், குறைந்தபட்ச திட்டமென்றால் என்னவென்று விளக்குவதற்காகவுமே!

தி.மு.க.வை தேசிய முன்னணியிடம் அடகு வைத்து விட்டதாக - அடிக்கடி அடகுப்பொருள் ஆகிறவர்களும், விலை போய்விட்டதாக ஏற்கனவே எங்கெங்கோ விலை போய் விட்டவர்களும், பேசுகிறார்கள் அல்லவா?

ஆனால் உண்மை என்ன? தேசிய முன்னணி அமைப்பு டெல்லியில் ஆகஸ்டு 6, 7 தேதிகளில் உருவான போது அதன் முதல் தீர்மானமே தி.மு.க. சார்பில் முன்மொழியப்பட்டு அனைவராலும் வழிமொழியப்பட்ட இலங்கைப் பிரச்சினை குறித்த தீர்மானம்தான்!

அது குறித்து ஆகஸ்டு 8ஆம் நாள் இந்து இதழில் கே.கே. கட்யால் அவர்கள் எழுதிய செய்திக்குறிப்பு என்ன கூறுகிறது?

“Highlighting a spirit of mutual accommodation, the National Front of Opposition Parties today made its first gesture to the D.M.K., one of the seven constituents. This was in the form of a resolution calling for an immediate cease - fire in Sri Lanka and negotiations for a “satisfactory solution and durable accord”.

It was with this demand that the National Front, launched yesterday, opened its account today.

The resolution said : “This meeting of the National Front is deeply concerned about the attitude of the Government of India which has led to the tragic situation in Sri Lanka, not only taking a toll of many people but making a political settlment more difficult and complex. This meeting of the National Front, therefore, calls upon the Government of India to declare immediately a cease-fire in Sri Lanka and start negotiations with the LTTE and others for bringing about satisfactory solution and durable accord”.

இதன் தமிழாக்கம் வருமாறு :-

எதிர்க்கட்சிகளின் தேசிய முன்னணி தன்னுடைய கூட்டுக்கட்சிகளில் ஒன்றான திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தன்னுடைய முதல் நல்லெண்ண அறிகுறியை தெரிவிக்கும் வகையில் ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுக்கும் தன்மையோடு நடந்து கொண்டது. இலங்கையில் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்யப்பட்டு, பேச்சு வார்த்தையின் மூலம் ஒரு நிறைவான பரிகாரம் காணப்படவும் நிலையாக நீடித்திருக்கக் கூடிய ஒப்பந்தம் காணவும் வழி காணவேண்டுமென்ற தீர்மான வடிவிலே அந்தச் செய்கை வெளிப்பட்டது.

நேற்றையதினம் தொடங்கப்பட்ட தேசிய முன்னணி இன்று இந்தக் கோரிக்கையுடன் தன்னுடைய பணியினைத் தொடங்கியது. நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு :-

இலங்கையிலே அரசியல் தீர்வு என்பதை சிரமமான தாகவும், மேலும் சிக்கலானதாகவும் ஆக்கியதோடு, பலரின் சாவுக்கும் காரணமாக இருந்து ஒரு துயரமான நிலைமையை அங்கே உருவாக்கியுள்ள இந்திய அரசின் நடவடிக்கைகள் குறித்து தேசிய முன்னணியின் இந்தக் கூட்டம் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கின்றது. எனவே தேசிய முன்னணியின் இந்தக் கூட்டம் மத்திய அரசு உடனடியாக இலங்கையில் போர் நிறுத்தம் அறிவித்து விடுதலைப் புலிகளோடும், மற்றவர்களோடும் பேச்சுவார்த்தை நடத்தி நிறைவான பரிகாரம் காணவும், நிலையாக நீடித்திருக்கக்கூடிய ஒப்பந்தம் காணவும் வேண்டுமென்று வலியுறுத்துகின்றது

இவற்றையெல்லாம் மூடி மறைத்து கறைச்சேற்றால் தாமரையின் வாசம் போம் என்றும் காரிருள்தான் சூரியனை மறைக்குமென்றும் எண்ணிச் செயல்படுகிற குறைவேக்காட்டு மதியினர் வெற்றி பெறுவர் என எண்ணுகிறாயா? பாவம்; பரபரப்படைந்துள்ளார்கள்! பதறுகிறார்கள்! மற்றவை நாளை கடிதத்தில்!

அன்புடன்

மு.க.

24-09-1988

1590. இது ஒரு தொடக்கம் (5)

உடன்பிறப்பே,

1969ஆம் ஆண்டு ஜூலை திங்கள் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட நான் ஜூலை 14ஆம் நாளன்று இங்கிலாந்து நாட்டில் எனது சுற்றுப் பயணத்தைத் தொடங்கினேன் எனினும் ஜூலை 15ஆம் நாள் பிரான்சு நாட்டின் தலைநகர் பாரிசில் நடைபெற்ற மூன்றாவது உலகத் தமிழ் மாநாட்டைத் தொடங்கி வைக்க ஒருநாள் இடையில் சென்று திரும்ப வேண்டியதாயிற்று. எனினும் ஜூலை 14 அன்று லண்டன் மாநகரில் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களும் இந்திய நாட்டுப் பத்திரிகையாளரும் சூழ்ந்த ஒரு பெரும் நிருபர்கள் கூட்டத்தில் பேட்டியளித்தேன்.

இப்போது இதனை ஏன் நினைவுபடுத்துகிறேன் தெரியுமா? உலகம் சுற்றிய வாலிபர் ஒருவர் (?) திடீரென இப்போது உரத்த குரலில் கருணாநிதி ஒரு கிணற்றுத் தவளை என்று வர்ணனை செய்திருக்கிறார் அல்லவா? அவருக்கு முரசொலியில் நமது சின்னகுத்தூசி நண்பர் தியாகராசன் அவர்கள் பதிலளித்துள்ளது போல, நான் பம்பாய் திருநகருக்கும் சென்றுள்ளேன், ஐதராபாத்தில் என்.டி.ஆர். அமைச்சரவை மீண்டும் நிலைபெற்ற போது நடந்த விழாவுக்கும் சென்றுள்ளேன். அண்மையில் விஜயவாடாவில் நடந்த தெலுங்கு தேசக்கட்சி ஆண்டு விழாவிலும் கலந்து கொண்டேன். கல்கத்தாவில் நடந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் மாநாட்டிலும் (Conclave) பங்கேற்றேன். உத்திரப்பிரதேசத்தில் உள்ள அலகாபாத் பிற்படுத்தப்பட்டோர் மாநாட்டிலும் உரையாற்றினேன். பஞ்சாப்பில் குருநானக் ஐநூறாவது ஆண்டு விழா, அந்த மாநிலத்தில் லூதியானா கல்லூரியில் ஒரு கட்டிடத் திறப்பு விழாவிலும் உரையாற்றினேன். அமிர்தசரஸ் நகரமன்றத்தின் வரவேற்பையும் பெற்றுள்ளேன். அமெரிக்காவில் சிகாகோ பல்கலைக் கழக

ஆய்வு மாணவர் கருத்தரங்கிலும் பேசியுள்ளேன். மலேசியாவில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டிலும் கலந்துகொண்டேன். பாரிஸ், லண்டன், நியூயார்க், பான், ரோம் போன்ற பல இடங்களுக்கும் சென்றுள்ளேன் என்று பட்டியல் போட்டுக்காட்ட அல்ல!

லண்டன் மாநகரத்தில் நடைபெற்ற நிருபர்கள் கூட்டத்தில் நான் தெரிவித்த கருத்துக்கள் ஒன்றிரண்டைச் சுட்டிக்காட்டி - அந்தக் கருத்துக்களின் அடிப்படையைவிட்டு தி.மு.கழகம் என்றைக்குமே விலகியதில்லை, விலகாது என்பதைத் தெளிவாக்கிடவே இதனைக் குறிப்பிடுகிறேன்.

அந்த நிருபர்கள் கூட்டத்தில் ஒருவர் கேட்டார் :-

மாநில சுயாட்சி என்ற உங்கள் கோரிக்கையை ஏற்றால் இந்திய ஒற்றுமை கடுமையாகப் பாதிக்கப்படாதா?

அதற்கு நான் அளித்த பதில் பின்வருமாறு :-

உங்களுக்கு எதிரே சுவரில் தொங்கவிடப்பட்டுள்ள பல வண்ண ஓவியத்தைப் பாருங்கள் - ஒவ்வொரு வண்ணமும், தனது தனித் தன்மையுடன்தான் தோற்றமளிக்கிறது. இருந்தாலும் அனைத்தும் ஒருங்கிணைந்து சிறந்த எழிலோவியமாகத் திகழ்கிறது. இதுபோலத்தான் வேறுபாட்டுக்கிடையே ஒற்றுமை காண முடியுமென்று நான் நம்புகின்றேன்.

இன்னொரு நிருபர் அடுத்த கேள்வியைக் கேட்டார்.

மாநில சுயாட்சிக்குத் தனி முயற்சி தேவையில்லை. நாளாவட்டத்தில் தானே அது வருமென நீங்கள் நினைக்க வில்லையா?

இந்தக் கேள்விக்கு நான் அளித்த பதில் :-

மத்திய அரசை மையமாகக் கொண்ட அரசியல் சட்டத்தில் ஏற்படும் மாறுதல், காட்டாறு போன்று கட்டுப்பாடின்றி இருத்தலாகாது; சீரான அருவியைப் போல் இருக்க வேண்டுமென்பதற்காகவே மத்திய அரசை நாங்கள் எச்சரிக்கிறோம். விரைவில் அதிகாரங்களை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்க வற்புறுத்துகின்றோம். ஒரே கட்சிதான் பல

நூற்றாண்டுகளுக்கு - மத்தியிலும் மாநிலங்களிலும் ஆளும் என்ற அடிப்படையில் அரசியல் சட்டம் வகுக்கப்பட்டதாகவே நான் கருதுகின்றேன். ஆனால், தற்போது நிலைமை மாறிவிட்டது. பல்வேறு மாநிலங்களில் பல வேறுபட்ட கட்சிகளும், மத்தியில் வேறு ஒரு கட்சியும் இப்பொழுது ஆட்சி புரிகின்றன. மத்தியிலும் மாநிலங்களிலும் வெவ்வேறு அரசியல் கட்சிகள் ஆளும் நிலைமையை எதிர்கொள்ள நம்மை நாமே பக்குவப்படுத்திக் கொள்வது நல்லது. சந்தர்ப்ப சூழ்நிலைகளின் போக்கிற்கு இதை விட்டுவிடக் கூடாது என்று நான் கருதுகிறேன்.

உடன்பிறப்பே, இந்தப் பழைய செய்தியை நான் உனக்கு ஞாபகப்படுத்துவது ஏனென்றால்; இன்று நமது கழகம் இடம் பெற்றுள்ள தேசிய முன்னணியின் குறிக்கோளும் திட்டமுமாக அறிவிக்கப்பட்டிருப்பது;

"The National Front will ensure decentralisation of economic and Political Power in the true federal spirit"

அதாவது; உண்மையான கூட்டாட்சித் தத்துவம் எனும் உணர்வுடன் பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறையிலும் அதிகாரங்களை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளித்திட தேசிய முன்னணி உறுதி பூணுகிறது - என்பதாகும்!

இதோ செப்டம்பர் 17 சென்னையில் தேசிய முன்னணி தொடக்க விழாவில் உரையாற்றிய முன்னணியின் அமைப்பாளர் திரு. வி.பி. சிங் என்ன குறிப்பிடுகிறார்!

இந்த தேசிய முன்னணி, அதிகாரத்தைப் பரவலாக்குவதில் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளது. அரசியல் அதிகாரம் மட்டுமல்ல; பொருளாதார ரீதியான அதிகாரமும் சமுதாய ரீதியிலான அதிகாரமும் நிச்சயம் பரவலாக்கப்படும்.

வி.பி. சிங் எடுத்துரைத்த இந்தக் கருத்தினை யொட்டியேதான் அன்றைய தினம் தேசிய முன்னணித் தலைவர்கள் மாநில உரிமைகளுக்கான முழக்கமிட்டனர், சென்னை கடற்கரையில்!

குடியரசைத் தம் தனிச் சொத்தாக மாற்றிக்கொள்ள நினைத்து, அதைக் குழி பறித்துப் புதைக்கும் செயலில் ஈடுபட்டுள்ளனர்

என்று காங்கிரசாரைக் கடுமையாகச் சாடிய என்.டி.ஆர். அவர்கள்;

இன்றைக்கு டெல்லி தர்பாரிலே விமானத்தில் வட்டமிட்டு, டெல்லி பாட்சாக்களுக்குக் குலாம்களாக இருக்க வேண்டிய நிலைமை மாநில முதல்வர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

என்ற ஆதங்கத்தையும் தெரிவித்து; மாநில சுயமரியாதை காப்பாற்றப்பட வேண்டிய அவசியத்தை அந்தக் கூட்டத்தில் வலியுறுத்தினார்.

இந்த நாட்டின் கூட்டாட்சி (Federal) தத்துவத்தை எந்தக் காங்கிரஸ் அரசு குட்டிச்சுவராக்கிக் கேலிக் கூத்தாக்கியதோ - அந்தக் கூட்டாட்சி (Federal) தத்துவத்தை மீண்டும் நிலைநாட்டுவது தேசிய முன்னணியின் நோக்கமாகும்

என்று சென்னை விழாவில் குரலெழுப்பியவர் அரியானா முதல்வர் தேவிலால்!

உடன்பிறப்பே, சில வார இதழ்களில் ஏதோ துண்டு துணுக்குகளை வெளியிட்டுவிட்டு - தேசிய முன்னணித் தலைவர்கள் அரசியல் பொருளாதாரக் கருத்துக்கள் பற்றி எதுவுமே பேசவில்லை என்பது போலக் கேலி செய்துள்ளதைக் கண்டிருப்பாய்!

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தரப்பட வேண்டுமென்றும் - மத்தியிலே அதிகாரங்கள் குவிந்து கிடத்தலாகாதென்றும் - ஒரு காலத்தில் பண்டித நேரு சொன்னார்!

ஆனால் அதனை அவரே சீர்படுத்தத் தவறிவிட்டார்!

காங்கிரசார் அதனை மறந்துவிட்டது மட்டுமல்ல; மறுக்கவே தலைப்பட்டு விட்டனர் இப்போது!

மாநில அதிகாரங்களைப் பரவலாக்க சட்டப் பேரவையில் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றிய ஆட்சி தி.மு.க. ஆட்சி! 1974ல்!

அதற்கென ராஜமன்னார் குழுவை அமைத்து ஆய்வு நடத்திய ஆட்சியும் தி.மு.க. ஆட்சிதான் 1971ல்!

இன்று அந்த உரிமை முழக்கம் தேசிய அளவில் - அதாவது நாடு தழுவிய அளவில் - ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது!

இதோ - கேள்; இமயத்து ஓரத்தில் இருக்கும் அசாம் மாநிலத்தின் குரலை!

சென்னை கடற்கரையில் அந்த மாநில முதலமைச்சர் மொகந்தா ஒலித்த குரல்!

"The Front's programme envisages that all the states will have equal rights under a truly federal structure. Strong states can only make a strong centre. If the limbs are weak, the inevitable result is a cripple. The congress has not realised this and in their efforts to ruthlessly concentrate all powers in the centre, they have relegated the states to the status of district administrations."

இதன் தமிழாக்கம் வருமாறு :-

உண்மையான கூட்டாட்சி அடிப்படையில் எல்லா மாநிலங்களும் சம உரிமை பெற்றுத் திகழ வேண்டுமென்று முன்னணியின் குறிக்கோள் குறிப்பிடுகின்றது. பலமான மத்திய அரசை ஏற்படுத்த முடியும். கால்கள் பலகீனமாக இருந்தால் முடிவு வீழ்ச்சியாகத்தான் இருக்க முடியும். காங்கிரஸ் கட்சி இதனை உணர்ந்ததாகத் தெரியவில்லை. மேலும் மத்தியிலே அதிகாரங்களைக் குவித்துக்கொள்ள வேண்டுமென்ற அவர்களுடைய முயற்சி காரணமாக மாநிலங்களையெல்லாம் அவர்கள் மாவட்ட நிர்வாக அளவிற்கு குறைத்துவிட்டிருக்கிறார்கள்.

கன்யாகுமரி முதல் காஷ்மீர் வரையில் மாநிலங்களின் உரிமை முழக்கம் - அதே நேரத்தில் இந்திய ஒருமைப்பாடு, ஒற்றுமை, பாதுகாப்புக்கு ஒரு சிறிதும் சேதாரமில்லாத கூட்டாட்சி தத்துவக் கோரிக்கை - எழுந்துள்ளதைக் காணும் பொழுது; அந்தக் கொள்கைக்கெனத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டிருக்கிற தி.மு.கழகத்திற்கு எவ்வளவு மகிழ்ச்சி! எத்துணை பூரிப்பு!

இப்போது புரிகிறதா; சிலர் நம்மீது சீறி விழுவதற்குக் காரணம் என்னவென்று!

இன்னும் சில காரணங்கள் உண்டு; அவற்றை நாளைக்கு எழுதுகிறேன்.

அன்புடன்

மு.க.

25-09-1988

1591. இது ஒரு தொடக்கம் (6)

உடன்பிறப்பே,

நேற்றைய என் கடிதம்; சிலர் நம்மீது சீறி விழுவதற்குக் காரணம் என்னவென்று தெரிகிறதா? என்பதுடன் முடிந்திருந்தது.

அந்தச் சிலர் யார்?

அவர்கள் என்ன சொல்கிறார்கள்?

அந்தச் சிலர் இந்திரா காங்கிரசார் - அல்லது அவர்களது எடுபிடிகள் - இதனை நான் கூறாமலே மக்கள் மிகத் தெளிவாகப் புரிந்துகொண்டுள்ளனர். எடுபிடிகள் என்றால் இப்போது அப்படி ஆகிவிட்டவர்கள் மட்டுமா; அல்லது இனிமேல் ஆவதற்குப் பேரம் நடத்திக் கொண்டிருப்பவர்களுமா? அதையெல்லாம் என்னைக் கேட்காதே!

காலப்போக்கில் நாடு நன்கு உணர்ந்துகொள்ளப்போகும் உண்மைகளை நெடுநாளைக்கு மூடி மறைத்து வைத்துவிட முடியாது!

உண்மைகளிலும் இரண்டு விதம் உண்டு!

மல்லிகைப்பூவை என்னதான் மறைத்து வைத்தாலும் அதன் மணம் அனைத்தையும் மீறிக் கிளம்பிவிடும்! அது ஒருவித உண்மை!

கருவாட்டின் நாற்றமும் அப்படித்தான் - அதற்காக, மல்லிகை - கருவாடு இரண்டு ஒரேவிதமான உண்மைகள் அல்ல என்பதை எல்லோருமே அறிவர்!

இந்த இரண்டாவது வகை நிலைக்குரியோர் குறித்து நான் அவசரப்பட்டு எதுவும் கூறப் போவதில்லை! அது தேவையுமில்லை! இருப்பினும் கவனித்துக்கொண்டிருப்பேன் - அதில் தவறில்லை!

எனவே இந்திரா காங்கிரசாரும் அவர்தம் எடுபிடி ஏஜெண்டுகளாகி விட்டவர்களும் தேசிய முன்னணியின் தொடக்கம் பற்றி என்ன கூறுகிறார்கள் என்பதை எத்தனைமுறை திரும்பத் திரும்பப் படித்துப் பார்த்தாலும் - அவர்கள் என்ன சொல்ல நினைக்கிறார்கள் என்றே புரியவில்லை!

தி.மு.க.வை வீழ்ச்சியுறச் செய்வது தான் அவர்களது லட்சியம் என கோஷிக்கிறார்கள் ஒருபுறம்!

தேசிய முன்னணியில் இடம்பெற்றதால் தி.மு.க.வுக்கு சமாதி கட்டப்பட்டு விட்டது என்று திருவாய் மலர்கிறார்கள் மறுபுறம்!

தி.மு.க.வின் வீழ்ச்சியை - அழிவை - முடிவை - எதிர்பார்த்தவர்கள்; அதனை ஒழித்துக்கட்ட வாள் தூக்கியவர்கள், அந்தத் தி.மு.க. தேசிய முன்னணியில் இடம் பெற்றதால் தானாகவே செத்துப் போய் சமாதியாகிவிட்டது என்பது உண்மையானால் அதற்காக மகிழ்ச்சி அடைய வேண்டியதுதானே!

அதற்கு மாறாக; அடடா! தி.மு.க.வை கருணாநிதி அடமானம் வைத்துவிட்டார் - வடநாட்டுத் தலைவர்களுக்கு வால் பிடிக்கிறார் - என்று; ஆடு நனையாமல் இருக்கும்போதே இந்த ஓநாய்கள் ஆடு நனைகிறதே என்று அழுவதற்குக் காரணம் என்ன?

தமிழ்நாட்டில் இந்திரா காங்கிரஸ் பிழைக்குமா? என்ற கேள்விக்கு பதிலாக - இப்போது மொத்த இந்தியாவிலும் இந்திரா காங்கிரசுக்கு எதிர்காலம் உண்டா? என்ற அர்த்தமுள்ள கேள்வி எழுந்திருக்கிறது! இது; தேசிய முன்னணி தொடக்க விழாவின் எதிரொலி!

காங்கிரசைத் தவிர - அல்லது காங்கிரசின் எடுபிடிகளைத் தவிர வேறு எவரும் தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வரக் கூடாதென்றும் - அதேபோல மத்தியிலும் மீண்டும் காங்கிரஸ் ஆட்சியே ராஜீவ் காந்தியின் தலைமையிலே அமைந்தே தீரவேண்டும் என்றும் எதற்காக அவ்வளவு மும்முரமாகவும் - ஆவேசமாகவும் - அவர்கள் ஜனநாயக விரோதச் செயல்கள் புரியவும் தயாராகி விட்டிருக்கிறார்கள் என்பதை சற்று ஆழமாகவே சிந்தித்துப் பார்க்க வேண்டும்!

நாற்பது ஆண்டு கால சுதந்திர இந்தியாவை - அவர்கள் சுபீட்ச இந்தியாவாக மாற்றி வைத்திருந்தார்கள்; அதை எதிர்க்கட்சியினர் வந்தால் கெடுத்துவிடுவார்கள் என்றா?

எண்பது கோடி மக்களில் ஒருவர் கூட இந்தியாவில், இன்றைக்கு, வறுமைக் கோட்டுக்குக் கீழே இல்லை - எதிர்க்கட்சியினர் ஆட்சிக்கு வந்தால் திடீரென ஏழ்மை பெருகிவிடும் என்றா?

தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் இன்றைக்கு சுதந்திர இந்தியாவில் பெற வேண்டிய அனைத்து உரிமைகளையும், கல்வி, வேலை போன்ற அனைத்து வாய்ப்புகளையும் பெற்று காந்தியடிகளின் ஆசைப்படி, அம்பேத்கர், பெரியார், அண்ணா ஆகியோரின் விருப்பப்படி முன்னேறி உச்சியில் இருக்கிறார்கள் - அவர்களையெல்லாம் எதிர்க்கட்சி முன்னணி ஆட்சிக்கு வந்தால் படுபாதாளத்தில் தள்ளிவிடுவார்கள் என்றா?

உடன்பிறப்பே, தேசிய முன்னணி வகுத்துள்ள 71 அம்ச குறைந்தபட்ச திட்டங்கள் எதிலும் - இன்ன குறையென எடுத்துச் சொல்லி, இது நாட்டுக்குத் தீது - நாட்டு மக்களுக்கு ஆகாதது எனத் தெளிவுரை பகர முன்வந்தார்களா? முன் வருவார்களா? என்றால் இல்லை! வரமாட்டார்கள்! வர முடியாது!

சமூகம் மற்றும் பொருளாதார நீதியை உறுதிப்படுத்துதல்.

நாடாளுமன்ற முறை அமைப்புகளைப் பலப்படுத்துதல்.

வறுமை, மற்றும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்தல் - சம்பளங்கள், வருமானங்கள் ஆகியவற்றில் காணப்படும் பெருத்த ஏற்றத்தாழ்வுகளைப் போக்குதல் ஆகியவற்றின் வாயிலாக சோஷலிச சமுதாயத்தை உருவாக்கும் பொருளாதாரக் கொள்கையின் லட்சியத்தை நிறைவேற்றுவதோடு, பிராந்திய ஏற்றத்தாழ்வுகளை அகற்றுதல்.

நாட்டின் பொருளாதாரத்தை கடன் பொறியிலிருந்து மீட்பதற்கான நடவடிக்கை எடுத்தல்.

நேரடி மற்றும் மறைமுக வரிகள் சம்பந்தமாக ஒரு நியாயமான அறிவுப்பூர்வமான அணுகுமுறையை உறுதி செய்தல்.

கறுப்புப் பணத்தின் போட்டிப் பொருளாதார ஆதிக்கத்தை அகற்றி, எல்லா மட்டங்களிலும் ஊழலை ஒழிக்க நடவடிக்கை எடுத்தல்.

நாட்டுப் பொருளாதாரத்தில் அரசுத் துறை நிறுவனங்கள் உச்சநிலை வகிக்கும் வகை செய்தல்.

மத்திய மாநில திட்ட ஒதுக்கீடுகளில் விவசாயத்திற்கும் கிராம வளர்ச்சிப் பணிகளுக்கும் அரசுடன் தொடர்புள்ள சேவைகளுக்கும் ஐம்பது சதவிகிதத்திற்குக் குறையாமல் அளித்தல்.

விளைபொருள்களுக்கு லாபகரமான விலை உறுதி செய்தல்.

விவசாயத் தொழிலாளர்க்கு குறைந்தபட்ச ஊதிய திட்டமும் - அடிப்படை வசதிகள் செய்து தருவதும் நடைமுறைப்படுத்துதல்.

மற்றும் தொழிலாளர், மீனவர், நெசவாளர் எனப்படும் எல்லா வகைப் பாட்டாளிகளுக்கும் பல்வேறு முற்போக்கு திட்டங்களை நிறைவேற்றுதல்.

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடிப் பிரிவினருக்கு இழைக்கப்படும் கொடுமைபற்றி விசாரிப்பதற்காகவும், சிவில் உரிமை பாதுகாப்பு சட்ட மீறல்கள் பற்றி விசாரிப்பதற்காகவும் தனி நீதிமன்றங்கள் ஏற்படுத்துதல்.

தீண்டாமையை ஆதரித்துப் பிரச்சாரம் செய்வோர் மீது கடுமையான நடவடிக்கை எடுத்தல்.

1977 ஜனதா ஆட்சியில் அமைக்கப்பட்ட மண்டல் கமிஷன் இந்தியா முழுவதுமுள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக அளித்த அறிக்கையை இந்திரா அரசு 1980ல் பெற்றுக்கொண்ட போதிலும் அந்த அறிக்கையை 1982ல்தான் நாடாளுமன்றத்தில் வைத்தது. எட்டாண்டு காலமாக பிற்படுத்தப்பட்ட மக்கள் சார்பில் மண்டல் கமிஷன் அறிக்கையை நடைமுறைப்படுத்த கோரிக்கை வைக்கப்பட்டும் அதனை மத்திய காங்கிரஸ் அரசு காதில் போட்டுக் கொள்ளாத நிலையை கண்டிப்பதோடு - அந்த மண்டல் கமிஷன் அறிக்கையை ஒரு காலக்கெடுவுக்குள் நடைமுறைப் படுத்தல்.

சிறுபான்மை மக்களின் கல்வியிலும் பொருளாதாரத்திலும் மேம்பாடு காணுதல்.

உருதுமொழி வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தல்.

இந்திய மொழிகள் அனைத்தையும் வளர்த்திட ஊக்கமும் ஆக்கமும் வழங்குதல்.

பத்திரிகை சுதந்திரம் உறுதி செய்யப்படுவதோடு, 59வது அரசியல் சட்டத் திருத்தம், தபால் தந்தி மசோதா போன்ற மக்கள் விரோத சட்டங்களை ரத்து செய்தல்.

தொலைக்காட்சி, வானொலிக்கு சுயாதிகார கார்ப்பரேஷன் அமைக்கப்படுவதுடன், மாநிலங்களுக்குத் தனி அலை வரிசைகள் ஒதுக்கப்படுதல்.

மகளிர்க்கு சமூகப் பாதுகாப்பும் சம அந்தஸ்தும் அளித்தல்.

நாட்டின் நிர்மாணப்பணிகளுக்கு மாணவர்களையும் இளைஞர்களையும் திரட்டுதல்.

அடிமட்டத்திலிருந்து ஜனநாயக முறையில் அதிகாரத்தைப் பரவலாக்கி, உள்ளாட்சி அமைப்புகளுக்கு குறித்த காலத்தில் தேர்தல் நடைபெறுவதற்கு அரசியல் சட்டத்திலேயே திருத்தம் கொண்டு வருதல்.

உடன்பிறப்பே, ஏற்கனவே ஐந்து கடிதங்களில் நான் எடுத்துக்காட்டியுள்ள குறைந்தபட்சத் திட்டங்களும், இன்றைய கடிதத்தில் தொகுத்துத் தந்துள்ள குறைந்தபட்சத் திட்டங்களும் - மற்றுமுள்ள திட்டங்களும் நமது கழகத்திற்கு உடன்பாடானவை மட்டுமல்ல; இந்த திட்டங்கள் பல நிறைவேற்றப்பட வேண்டுமெனப் பல காலமாக நமது கழகம் குரல் கொடுத்து வந்திருக்கிறது என்பதையும் நீ அறிவாய்!

ஏதோ இந்திரா காங்கிரசை எதிர்க்கிறோம் என்று - காமா சோமா என ஒரு முன்னணியை அமைக்காமல் - 71 அம்ச குறைந்தபட்ச திட்டங்களுடன் ஒரு பேரணியன்றோ தேசிய முன்னணியாக உருப்பெற்றுவிட்டது எனக்கண்டு எதேச்சாதிகாரிகளும் அவர்தம் எடுபிடிகளும் எகிறிக்குதிப்பது இயற்கைதானே!

இ.காங்கிரசை ஆட்சி பீடத்திற்கு வராமல் செய்வது - ஆட்சி பீடத்திலிருந்து இறக்குவது மட்டுமல்ல; ஆக்கபூர்வமான செயல்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு - நாட்டின் எதிர்காலத்தை ஒளிமயமாக்குவதும் தேசிய முன்னணியின் தலையாய நோக்கம் என்பதை மக்கள் ஐயந்திரிபற அறிந்துள்ளதால்தான் நாட்டில் நடைபெற்ற எல்லாப் பேரணிகளையும்விட சென்னையில் நடைபெற்ற தேசிய

முன்னணித் தொடக்க விழாப்பேரணி மிகப் பெரியது என ஏடுகள் அனைத்தும் உண்மையை மறைக்க இயலாமல் எழுதியுள்ளன.

உடன்பிறப்பே, நீ நிமிர்ந்தால் சிங்கம் என்பதை நிரூபித்துவிட்டாய்! நீ காட்டிய கட்டுப்பாடு கண்டு அனைத்துத் தலைவர்களும் என் கையை குலுக்கிப் பாராட்டியபோது அண்ணாவை எண்ணிக் கொண்டேன் - அன்பு உடன்பிறப்பே, உன்னை எண்ணிக் கொண்டேன் - ஆனந்தக் கண்ணீர், அருவியாயிற்று!

பொறாமையிருக்காதா பொறுமிக் கொண்டிருப்பவர்களுக்கு! அச்சமிருக்காதா; நம்மை அர்ச்சிப்பதையே வேலையாகக் கொண்டவர்களுக்கு!

தேசிய முன்னணி வெளியிட்ட திட்டங்களில் ஒன்றை தேவிலால் அவர்கள் கடற்கரைக் கூட்டத்தில் சற்று விரிவாகவும் - அழுத்தம் திருத்தமாகவும் பேசினாரே; அதனை நீயும் கேட்டிருப்பாய்! ஆனால் நம்மீது சீறுவோர் - சினம் கொட்டுவோர் - மேலும் ஆவேசங்கொண்டு அலறுவதற்கு அதுவும் ஒரு முக்கிய காரணம் என்பதை அறிந்துகொள்!

இந்த நாட்டில் வரிசெலுத்துகின்ற சாதாரண சாமான்ய மக்களுக்கு தேசிய முன்னணி சார்பில் ஒரு உறுதிமொழி அளிக்கிறேன். வரிவிதிப்பு முறைகளை எளிதாக்குவோம். அதே நேரத்தில் இந்திய நாட்டில் கொள்ளையடித்து அந்தப் பணத்தை வெளிநாட்டு வங்கிகளில் போட்டிருப்பவர்களைப் பிடித்து, அந்தப் பணத்தை முடக்க, கடுமையான சட்டங்களைக் கொண்டு வருவோம்.

இது அரியானா முதல்வர் தேவிலால் ஆற்றிய உரையில் ஒரு முக்கியமான பகுதி! இது உரையாக மட்டுமல்ல; ஆகஸ்டு 6-7 தேதிகளில் டெல்லியில் அமைந்த தேசிய முன்னணியின் குறைந்தபட்ச திட்டங்களில் ஒன்றாகவும் வெளியிடப்பட்டுள்ளது. அது; இதோ :-

இந்தியப் பிரஜைகள் அயல்நாட்டில் தங்களுக்குள்ள சொத்துக்களையும், ரகசிய வங்கிக் கணக்குகளையும் பற்றிய தகவல்களை வெளியிடுவதைக் கட்டாயமாக்கும் சட்டங்கள் இயற்றப்பட்டு, கண்டிப்பாக அமல் நடத்தப்படும். அந்நியச்

செலாவணி சட்ட மீறல்கள் அனைத்தையும் பற்றியும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். அயல்நாட்டு வங்கிகளில் இந்தியர்கள் அல்லது அயல்நாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் பணம் பதுக்கி வைப்பது தேச விரோதச் செயலாகக் கருதப்படும்.

தேசிய முன்னணியின் பொருளாதாரத் திட்டங்கள் என்ற தலைப்பில் 10-வது அம்சமாக இந்தத் திட்டம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது!

மடியிலே கனம் உள்ளவர்கள் இந்தத் திட்டத்தை மறுத்தால் - பூனைக்குட்டி வெளியே வந்த கதையாகிவிடுமென்று பயந்து - தேசிய முன்னணியையே மறுக்கிறார்கள்!

தி.மு.கழகம் தேசிய முன்னணியில் கரைந்து விட்டது என பிரலாபிக்கிறார்கள்!

நேற்றும் இன்றும் வந்துள்ள செய்திகளின்படி - ஜனதா, ஜனமோர்ச்சா, லோக்தளம், காங்கிரஸ் (எஸ்) ஆகிய நாலு கட்சிகளும் சமாஜவாதி ஜனதா தளம் என்ற பெயரில் ஒரே கட்சியாக இனி இயங்கப் போவதாக அறிவிக்கப் பட்டுள்ளது!

அப்படி ஒரு கட்சி உருவானால் - அதில் இணையும் கட்சிகள் தனித்தனியாக இருக்காது!

தேசிய முன்னணி என்பது அப்படியல்ல!

இதில் இடம் பெறும் கட்சிகளின் தனித்தன்மை அப்படியே இருக்கும்! கொடிகளும் அந்தந்தக் கட்சிகளுக்கு உரிய கொடிகளேதான்! தேர்தல் சின்னம் கூட அந்தந்தக் கட்சிக்குரிய சின்னமேதான்!

இந்த ஏற்பாட்டின் அடிப்படையிலேதான் - தி.மு.கழகம் தேசிய முன்னணியில் இடம் பெற்றுள்ளது!

இது மாற்றாருக்கும் புரியாமல் இல்லை!

எப்படியாவது உன் மனதைக் குழப்பலாமா என அவர்களுக்கு ஒரு சபலம்!

பாவம், சபலத்தாலேயே பல நேரங்களில் சலனமடைந்தவர்கள்!

நீயோ, சமுத்திரமே பொங்கிவரினும் சஞ்சலம் கிஞ்சிற்றும் கொள்ளாமல் சரியான பாதையில் சலிப்பு சிறிதுமின்றி நடைபோடும் கழகத்தின் உடன்பிறப்பு!

அந்தப் பெருமை உனக்கும்
எனக்கும் உன் போன்ற
உடன்பிறப்புகளுக்கும்
என்றென்றும் உண்டு
என்ற பெருமிதப் பூரிப்புடன்
இந்த நீண்ட கடிதத்தை நிறைவு செய்கிறேன்.

அன்புடன்

மு.க.

26-09-1988

1592. ஜான்சன் - ஜாக்கிரதை!

உடன்பிறப்பே,

தமிழ்நாட்டில் தேர்தல் எப்போது வரும்? என்று சென்னையில் நிருபர்கள் பிரதமர் ராஜீவ் காந்தியைப் பார்த்துக் கேட்டார்கள். சில திங்களுக்கு முன்பு!

அவர் மின்னல் வேகத்தில் பதில் சொன்னார்; தேர்தல் எப்போது வரும் என்பதைப்பற்றி கவர்னர் அலெக்சாண்டரைப் போய்க் கேளுங்கள் என்று!

நிருபர்கள் விடுவார்களா? செய்தி சேகரிப்பது மட்டுமல்ல - ஜனநாயகத்தில் அக்கறையும் கொண்டவர்களாயிற்றே அவர்கள்; அதனால் கவர்னரைக் காண விரைந்தார்கள்!

தமிழ்நாட்டில் தேர்தல் எப்போது வரும்? என பிரதமர் ராஜீவ் காந்தியைக் கேட்டோம். அவர் தங்களைக் கேட்டறியச் சொன்னார் - எனவே நீங்கள் சொல்லுங்கள்; எப்போது வரும்? என வினவினர்!

ஆளுநர் அலெக்சாண்டரோ அரைநொடியும் தாமதிக்காமல் - தேர்தல் எப்போது என்பது பற்றித் தேர்தல் கமிஷன்தான் முடிவு செய்து அறிவிக்கும் எனப் பட்டென அறிவித்தார் ஒரு விடை!

அதற்குப் பிறகு பார்த்தால் ஆசிரியர் அரசு ஊழியர் போராட்டம் நடத்துவதால் தேர்தலைத் தள்ளிப் போட வேண்டியிருக்கிறது என அதே அலெக்சாண்டர் அவர்கள் சார்பிலே விளக்கம் வருகிறது! தேர்தல் தள்ளிப் போடப்பட்டு விட்டது!

ஆசிரியர், அரசு அலுவலர் போராட்டத்தால் எந்த அலுவலும் பாதிக்கப்படவில்லை! வழக்கம் போல் எல்லா அலுவலகங்களிலும் எல்லாப் பணிகளும் நடைபெறுகின்றன என்று நாள்தோறும் ஏடுகளுக்கு செய்திகள் கொடுத்துக் கொண்டிருந்ததும் கவர்னர் அரசுதான்; அவர்கள் போராட்டம் தேர்தலை நடத்த முடியாத அளவுக்கு பிரம்மாண்டமானது

என்று அறிவித்ததும் கவர்னர் அரசுதான்! கவர்னர் அரசு, நினைத்திருந்தால் ஆசிரியர் அரசு அலுவலருடன் மிகக் கால தாமதமாக நடத்திய பேச்சு வார்த்தையை முதலிலேயே நடத்தி முடித்துவிட்டுத் தேர்தலை நடத்தியிருக்கலாம்! தேர்தலை உரிய காலத்தில் நடத்த வேண்டுமென்ற எண்ணம் இருந்தால்தானே!

சட்டம், ஒழுங்கு, அமைதி பாதிக்கப்படமாட்டாதா? அவை தானாக பாதிக்கப்படாவிட்டாலும் பின்னணியிலிருந்து இ.காங்கிரஸ் தூண்டிவிடும் பணி வேகமாக நடைபெறாதா? காவல்துறையினர் அவற்றைக் கண்டுகொள்ளாமல் இருக்க மாட்டார்களா? தமிழ் நாட்டில் சாதிக் கலவரமோ; மதக் கலவரமோ ஏதாவது நடந்து பிறகு தொடர்ந்து தீப்பற்றி எரியட்டும் - தற்காலிகமாக அந்தத் தீயில் குளிர் காய்ந்து, தேர்தலைத் தள்ளி வைத்து - பிறகு மெள்ள நடத்தி - உருவான வன்முறைகளின் துணையுடனும்; ஜனநாயக விரோதச் செயல்களின் பக்கபலத்துடனும்; எப்படியாவது ராஜீவ் ஆட்சியைத் தமிழ் நாட்டில் அமைத்துவிட மாட்டோமா? என்று தவியாய்த் தவிக்கிற இந்திரா காங்கிரசாருக்கு இவைகள் எல்லாம் பொழுதுபோக்கு! ஏனெனில் இதுபோன்ற பாணியில்தானே மற்ற மாநிலங்களில் அரசியல் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள்!

இலங்கையில் இப்பொழுதே ரத்த ஆறு ஓடிக் கொண்டிருக்கிறது - இன்னும் அது அதிகமாகப் பெருகி ஓடக்கூடும் என்றும், எனவே வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான தேர்தலைத் தள்ளிவைக்க வேண்டுமென்றும் தமிழ் ஈழ மக்களின் சார்பில் பலரும் பலமுறை எடுத்துச் சொல்லியும்கூட அதனையும் கேட்காமல் - நிரந்தரப் போர் நிறுத்தம் செய்துவிட்டு விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி சுமுக முடிவு காண்பதற்கு இணங்காமல் - ஜெயவர்த்தனாவுடன் கூடிக்கொண்டு, அங்கு இப்போதே தேர்தல் நடத்த அவசரம் காட்டுகிற இந்திய அரசு - தமிழ் நாட்டில் தேர்தலை தள்ளி வைக்கச் சொல்லிய காரணங்களில் ஏதாவது ஒன்றாவது தமிழ் ஈழ நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கக் கூடியதா என்றால் இல்லை! நிச்சயமாக இல்லை!

இருப்பினும் இங்கே தேர்தல் எப்போது என்று முடிவாகவே இல்லை!

தமிழ்நாட்டிலே உள்ள உனக்கும் எனக்கும் மற்ற அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் தெரியாத ஒரு செய்தியை மிசோராம் மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் லால்டங்கா அவர்கள் நேற்றைக்கு (செப். 30) டெல்லிப்பட்டினத்தில் அறிவிக்கிறார்.

"Prime Minister Rajiv Gandhi has 'hinted' that elections to the legislative assemblies of three President-ruled states of Mizoram, Nagaland and Tamil Nadu will be held simultaneously some time before January next"

அதாவது வருகிற ஜனவரிக்கு முன்னர் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெறும் மாநிலங்களான மிசோராம், நாகாலாந்து, தமிழ்நாடு ஆகியவற்றின் சட்டப் பேரவைகளுக்கான தேர்தல் நடைபெறுமென்று பிரதமர் ராஜீவ் காந்தி குறிப்பாகத் தன்னிடம் தெரிவித்தார் என்கிறார் லால்டங்கா!

பார்த்தாயா; உடன்பிறப்பே! தமிழ் நாட்டில் எப்போது தேர்தல் நடக்கும் என்பதை மிசோராம் மாநிலத்தின் முன்னாள் முதல்வர் லால்டங்கா அல்லவா டெல்லியில் அறிவிக்கிறார்!

இங்கே சென்னையில் பிரதமரைக் கேட்டால் கவர்னரைக் கேளுங்கள் என்பது!

கவர்னரைக் கேட்டால் எலக்ஷன் கமிஷனரைக் கேளுங்கள் என்பது!

ஆனால் பிரதமர் ராஜீவ், தமிழ் நாட்டுத் தேர்தல் ஜனவரிக்குள் நடைபெறுமென்று லால்டங்காவிடம் அறிவிக்கிறார்!

தேர்தல் கமிஷன் என ஒன்று இருக்கிறதா? என ஏற்கனவே நாம் எழுப்பிய சந்தேகம்; மேலும் உறுதிப்படுகிறதா இல்லையா?

என் செய்வது; மாவட்டந் தோறும் மாதாமாதம் பல கோடி ரூபாய் அரசாங்க செலவில் பிரதமர் தமிழ் நாட்டில் கிராமம் கிராமமாகச் சுற்றுப் பயணம் செய்து - மற்றும் பிளக்க வேண்டியவற்றைப் பிளந்து - பிடிக்க வேண்டியவர்களைப் பிடித்து - ஜனநாயக விரோதச் செயல்களின் மொத்த வியாபாரமும் முடிந்த பிறகன்றோ - இந்திரா காங்கிரசார் தமிழ் நாட்டில் தேர்தல் களத்தில் இறங்குவதாக இருக்கிறார்கள்!

என்றைக்கு அந்தக் களம் உருவாயினும் - அக்களம் புகுந்து மக்களாட்சி தத்துவத்தின் மாண்பு காத்திட - உறுதியுடன் போராடக்

கூடிய பாசறை தி.மு.கழகம் என்பதை நாம் நிலை நாட்டத்தான் போகிறோம்!

எப்படியும் தேர்தலில் வெற்றி பெற வேண்டுமென இ.காங்கிரசார் எல்லாவிதமான எதேச்சாதிகார நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளனர்!

இச்சகம் பேசப்படுகிறது
ஒரு இடத்தில்!
எச்சரிக்கை விடுக்கப்படுகிறது
ஒரு இடத்தில்!
மிரட்டல் பாணங்கள்!
அச்சுறுத்தல் கணைகள்!
பாதாளம் மட்டும் பாயக்கூடிய
கரன்சி அஸ்திரக்கத்தைகள்!

பொதுவாக எத்தகைய சட்ட விரோதச் செயலுக்கும் தயார் அவர்கள்! ஜனநாயக விதிமுறைகளை மீறத் தயார் அவர்கள்!

அண்மையில் ஒலிம்பிக்கில் ஒரு நிகழ்ச்சி, ஏடுகளில் கண்டிருப்பாயே!

நூறு மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் உலக ரிக்கார்டுகளை யெல்லாம் முறியடித்து வெற்றி பெற்றான் கனடாவைச் சேர்ந்த பென்ஜான்சன் என்ற ஓட்டப் பந்தய வீரன்!

தடபுடல்! மகிழ்ச்சி! பாராட்டு! தங்கப் பதக்கம் பரிசு!

ஆனால் மறுநாள் வந்த செய்தி என்ன? பந்தய விதிமுறைகளுக்கு மாறாக அவன் போதை மருந்து அருந்தி, தங்கப்பதக்கத்தை தட்டிக் கொண்டு போய்விட்டான் என்ற உண்மை தெரிந்து - அளித்த பதக்கத்தைப் பறித்துக் கொண்டனர்!

எப்படியும் ஜெயித்திட - தங்கப் பதக்கம் வென்றிடத்தானே ஜான்சன் என்பான் விதிகளை மீறினான்!

இன்று அவமானத்தால் தலைகுனிந்து நிற்கின்றான்!

விதிகளையும் மீறுவோம் - வெற்றியும் பெறுவோம் - விஷயம் வெளியே தெரிந்தால் அதிகாரத்தால் மறைப்போம் - அதற்காக தலைகுனிய மாட்டோம்

என்பது இங்கே இந்திரா காங்கிரசார் கடைப்பிடிக்கும் இலக்கணம்!

அதுவே ஜனநாயக முறை என சாதிப்பர்!

எனவே ஜான்சனைப் போலவே, தேர்தல் பந்தயத் திடலுக்கு வருவர்!

ஜான்சனை தாமதமாகப் பிடித்தது போலவே - பிறகு பார்த்துக்கொள்ளலாம் என எண்ணி ஏமாந்துவிடக்கூடாது நாம்!

அது, தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிக்க முனைவதற்குச் சமம்!

எனவே இங்கு - ஜான்சன் வருவதற்கு முன்பே - அவன் விஷயத்தில் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்!

அன்புடன்

மு.க.

02-10-1988

1593. வெறி எது? விடையளிக்கட்டும் தமிழகம்!

உடன்பிறப்பே,

எங்களுக்கு இந்த உலகத்தில் இரண்டு எஜமானர்கள்தான் உண்டு - ஒன்று எங்கள் மனச்சாட்சி! மற்றது, இந்த நாட்டு மக்கள்!

இது அண்ணா அவர்கள் முழங்கிய வாசகம்! எங்கே தெரியுமா? திருவண்ணாமலையில்! எப்போது? 1957 செப்டம்பர் திங்கள் 21ஆம் நாள் - இந்தி எதிர்ப்பு மாநாட்டில்!

இந்தி ஆதிக்கத்தை ஏன் எதிர்க்கிறோம்? ஆங்கில மொழி நீடிக்க வேண்டும் எனினும், எதுவரையில் நீடிக்க வேண்டுமென்று கூறுகிறோம்? அப்படி ஆங்கிலம் நீடிப்பதற்கு நேருவின் உறுதிமொழி, சட்டமாக்கப்பட வேண்டுமென்பது இடைக்கால ஏற்பாடு தானே தவிர - இந்திய அரசியல் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் உள்ள எல்லா தேசிய மொழிகளும் மத்திய அரசின் ஆட்சி மொழிகள் என்ற முறையில் அரசியல் சட்டம் அமைவது ஒன்றே தி.மு.கழகத்தின் மொழிக் கொள்கைக்கு முழுமையான வெற்றி என்பதை இன்று நேற்றல்ல, எத்தனை ஆண்டுக்காலமாக எடுத்துக் கூறி வருகிறோம்?

இதில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்த குள்ள மனம் படைத்தோர்; எத்தனை எத்தனை படு குழிகள் வெட்டினும் - இறுதியில் அந்தப் படுகுழிகளில் அவர்களே வீழ்ந்து புதையுண்டு போவர் என்பது உறுதி!

அதனால்தான் அண்ணா அவர்கள் தெளிவாகத் தெரிவித்தார் திருவண்ணாமலையில், எவரும் எமக்கு வழி நடத்தும் எஜமானர்கள் அல்ல - எங்கள் மனச்சாட்சியும் மக்களும்தான் எங்களுக்கு எஜமானர்கள் என்று! மொழிக் கொள்கையில் தி.மு.க. நிலை என்னவென்று எவராவது கேட்பின் - இதோ நாங்கள் மொழிக் கொள்கையை முன் வைத்து எழுப்பிய கோரிக்கைகள் - இன்றைக்கும் எழுப்புகிற கோரிக்கைகள்! என்று திட்டவட்டமாக

- தெளிவாக - அழுத்தம் திருத்தமாக - ஆணித்தரமாக - தெரிவிப்பதற்கான சில கடந்த கால ஆதாரங்கள்!

இந்திய அரசியல் சட்டத்தில் எட்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய மொழிகள் எல்லாவற்றையும் மத்திய அரசின் ஆட்சி மொழிகளாக ஒப்புக்கொள்ளும் வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும். அது வரையில் மத்திய அரசு அலுவல்கள் அனைத்துக்கும் ஆங்கிலம் நீடிக்கப்பட வேண்டும்.

1963 ஆகஸ்டு 8ம் நாள் தி.மு.கழகச் சார்பில் தமிழக சட்டப் பேரவையில் மறைந்த சகோதரர் மதியழகன் அவர்கள் கொண்டு வந்த தீர்மானம் இது!

இந்தத் தீர்மானத்தைக் காங்கிரசார், தங்களுக்கிருந்த பெரும்பான்மை பலத்தால் அன்றைக்குத் தோற்கடித்தனர்.

மத்திய அரசின் ஆட்சிமொழி, அரசியல் அமைப்புச் சட்டத்தின் எட்டாவது, அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து மொழிகளாகவும் இருக்க வேண்டும். அத்தகைய நிலையை எய்தும்வரையில் மத்திய அரசுத் துறைகள் அனைத்திலும், மத்திய மாநில அரசுகளுக்கிடையே தொடர்பு கொள்ளவும், ஆங்கிலம் இருக்க வேண்டும்.

1974ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16ம் நாள் தமிழக சட்டப் பேரவையில் காங்கிரசார் மற்றும் அ.தி.மு.க.வினர் எதிர்ப்புக்கிடையே தி.மு.க. ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட மாநில சுயாட்சி தீர்மானத்தில் இடம் பெற்றுள்ள மொழிக் கொள்கைதான் இது!

தமிழ் உள்ளிட்ட இந்தியாவின் தேசிய மொழிகள் அனைத்தும் மத்திய ஆட்சி மொழிகளாக ஆக்கப்படவும், அதுவரையில் ஆங்கிலம் நீடிக்கவும் பண்டித நேருவின் உறுதிமொழி இடம் பெறவும் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பதே தி.மு.கழகத்தின் மொழிக் கொள்கை.

1986ல் கழகம் நடத்திய இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போர்க்களம் புகுந்து சிறைத் தண்டனை பெற்றோமே, பல்லாயிரவர் - எம்.எல்.ஏ. பதவிகளை இழந்தனரே பத்துப் பேர் - அப்போது சென்னை சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் குற்றவாளிக் கூண்டில் நின்று கொண்டு நானளித்த வாக்குமூலத்தின் ஒரு பகுதி இது!

அண்ணா காலத்தில் சட்டமன்றத்தில் எந்த தீர்மானம் கழகச்சார்பில் கொண்டு வரப்பட்டதோ; அந்தத் தீர்மானத்தின் மைய இழையிலே இருந்து மாறாமல்;

இன்றைக்கும் நமது மொழிக் கொள்கையாகப் பிரகடனப்படுத்தியிருப்பது -

நேருவின் உறுதிமொழி மட்டும் சட்டமாகாது; ஆங்கிலம் நீடிப்பதற்கும் - இந்தி ஆதிக்கத்திற்கு அணை போடுவதற்கும் - ஒரு இடைக்கால பாதுகாப்பு ஏற்பாடாகத்தான் இருக்க முடியும்! எனவேதான் தமிழ் உள்ளிட்ட தேசிய மொழிகள் அனைத்தும் மத்திய ஆட்சி மொழிகளாக இடம் பெறவும், அந்த நிலை ஏற்படும் வரையில் ஆங்கிலம் நீடிக்கவும் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்கிறோம்!

இவ்வாறு அரசியல் சட்டம் திருத்தப்பட்டால் அதனுள் நேருவின் உறுதிமொழியும் அடங்குமன்றோ!

நேருவின் உறுதிமொழி நிறைவேற்றப்படும் என்பது தேசிய முன்னணியின் குறைந்தபட்ச திட்டம்; அவ்வளவு தான்!

நேருவின் உறுதிமொழி அடிப்படையில் தமிழ் உள்ளிட்ட அனைத்து தேசிய மொழிகளும் மத்திய ஆட்சி மொழிகளாக வேண்டும் என்பது தி.மு.கழகத்தின் மொழிக்கொள்கை!

தமிழும் மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக வேண்டுமென்று நாம் கூறுவதை; ராஜீவ் காந்தி தமிழ் வெறி என்று இந்த சுற்றுப்பயணத்தில் சூசகமாகத் தெரிவித்துள்ளார்!

தமிழர், இரண்டாந்தர மக்களாவதை சுட்டிக்காட்டி இந்தி ஆதிக்கத்தை எதிர்த்தால் அது தமிழ் வெறியா?

தமிழினம் இலங்கையில் இந்திய ராணுவத்தினால் அழிக்கப்படுவதைக் கண்டித்தால் அது தமிழ் வெறியா?

இந்தக் கேள்விக்கெல்லாம்; தமிழகம் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது!

அன்புடன்

மு.க.

04-10-1988

1594. திலீபன்களை உருவாக்கப் போகிறீர்களா?

உடன்பிறப்பே,

இன்று அக்டோபர் திங்கள் ஐந்தாம் நாள்! இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் தமிழகத்தில் தேர்தல் பிரச்சார சுற்றுப்பயணம் மேற்கொண்டு - கொளுத்துகின்ற மத்தாப்புக்களையும், வெடிக்கின்ற சரவெடிகளையும் ஏடுகளில் படித்துக்கொண்டிருப்பாய்!

அரசாங்க விழாக்களில் காங்கிரஸ் கட்சிப் பிரச்சாரம் நடத்துகிறார்! இருபதாண்டு காலம் திராவிட இயக்க ஆட்சி இருண்ட ஆட்சி என்று வர்ணிக்கின்றார்! மக்கள் தரும் வரிப்பணத்தில் லட்சக்கணக்கில் பணம் செலவிட்டு லட்சத் தீவுக்குக் கேரளாவிலிருந்து விமான மூலம் பாயசம் கொண்டுவரச் சொல்லி பருகியது மட்டுமல்ல - அரசாங்க விழாக்களும் மக்கள் தரும் வரிப்பணத்தில்தான் நடைபெறுகின்றன என்ற அடிப்படை உண்மைகூடப் புரியாமல் - புரிந்தாலும் அது குறித்துக் கவலைப்படத் தேவையில்லையென எதேச்சாதிகாரத்தின் நுனிக் கொம்பில் ஏறிக்கொண்டு ஏதேதோ பேசுகிறார்! உன்னி கிருஷ்ணன் மறுத்துவிட்ட ஒரு செய்தியை அள்ளிப் போட்டுக்கொண்டு அலறுகிறார்! இந்தி மட்டுமல்ல, தமிழும் இந்தியாவின் மத்திய ஆட்சி மொழியாக வேண்டுமென்றும் தமிழ் உள்ளிட்ட தேசிய மொழிகள் அனைத்தும் மத்திய ஆட்சி மொழிகளாக வேண்டுமென்றும் கழகம் எழுப்பி வரும் குரலை தமிழ் வெறி என்கிறார்! அதாவது, உடன்பிறப்பே - தேர்தல் வெறியில் என்னவெல்லாமோ பேசுகிறார்!

தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடனே 1967-ல் அண்ணா அவர்கள் இந்திய விடுதலைத் தியாகிகளை மதிக்க வேண்டுமென்று, எடுத்த எடுப்பில் வீரவாஞ்சியின் துணைவியாருக்கு மாதாந்திர மானியத்

தொகை வழங்க ஆணையிட்டார். அந்தத் தொகையைப் பெற்றுக் கொள்வதற்கு முன்பாக அந்த அம்மையார் காலமாகிவிட்டார்.

அதன்பிறகு நான் முதல்வர் பொறுப்பேற்றவுடன் வாஞ்சிநாதனின் சகோதரர் அவர்களைத் தேடிப்பிடித்து அரசின் சார்பில் அவருக்கு நிதி வழங்கப்பட்டது. எம்.ஜி.ஆர். ஆட்சியிலும் வாஞ்சிநாதன் குடும்பத்தினருக்கு உதவியளிக்கப்பட்டது.

ஒன்றை உனக்கும் நாட்டுக்கும் நினைவூட்டுகிறேன் - கழக ஆட்சியில், நான் மத்திய அரசுக்கு ஒரு கடிதம் எழுதினேன் - நெல்லை மாவட்டம் மணியாச்சி ரயில் நிலையத்துக்கு வாஞ்சியின் பெயர் சூட்டவேண்டுமென்று! அதாவது 15 ஆண்டுகளுக்கு முன்பு! மத்திய காங்கிரஸ் அரசு கழக அரசின் அந்த வேண்டுகோளை மறுத்துவிட்டது! மணியாச்சி என்ற பெயரை முழுமையாக மாற்றி வீரவாஞ்சி பெயரை வைக்காவிட்டாலும் - வீரவாஞ்சி மணியாச்சி ஸ்டேஷன் என்று பெயரிடுவதற்கு ஒப்புதல் அளியுங்கள் என மீண்டும் மீண்டும் கழக அரசின் சார்பில் இந்திரா காந்தி அவர்களுக்குக் கடிதம் எழுதினேன். உள்ளூர்த் தலைவர்கள் பெயரை வைக்க ஒப்புதல் தர இயலாது என்று அன்றைய காங்கிரஸ் அரசு மறுத்துவிட்டது. அந்தப் பெயர் வைக்கக் கோரி அந்தப் பகுதியில் கிளர்ச்சிகள்கூட நடைபெற்றன. 15 ஆண்டுகளாக வீரவாஞ்சி பெயரைச் சூட்ட மறுத்துக்கொண்டிருந்தவர்கள் - அந்த தியாகியின் குடும்பத்தைப் பற்றிக் கவலைப்படாமல் இருந்தவர்கள் - அந்தக் குடும்பத்துக்கு நிதி உதவி அளித்த கழக ஆட்சியை இருண்ட ஆட்சி என அர்ச்சனை செய்து விட்டு - அந்தத் தியாகியின் பெயரை மணியாச்சி ஜங்ஷனுக்கு சூட்ட வேண்டுமென மத்திய அரசை வலியுறுத்திய கழக ஆட்சியின் கோரிக்கையை மறுத்துவிட்டு - 15 ஆண்டுகளாக சொல்லிவந்த விதிமுறைகள், தடைகள் அனைத்தையும் இன்றைக்குத் தூக்கி எறிந்துவிட்டு வாஞ்சியின் பெயரை திடீரென அந்த ரயிலடிக்கு பிரதமர் ராஜீவ் சூட்டியிருக்கிறார் என்றால் (அதை வரவேற்கிறோம் எனினும்) இதைவிடத் தேர்தல் ஸ்டண்ட் வேறொன்று இருக்க முடியுமா?

கழக ஆட்சியில் சிதம்பரனாருக்குச் சிலை வைத்த பிறகுதான் இ.காங்கிரசாருக்கு, சிதம்பரனார் நினைவே வருகிறது!

அவர் இழுத்த செக்கைத் தேடிப்பிடித்து சென்னையில் நினைவுச் சின்னமாகக் கழக ஆட்சியில் வைத்த பிறகு தான் வ.உ.சி.யின் தியாகமே இ.காங்கிரசுக்குப் புரிகிறது!

தி.மு.க. ஆட்சியில் - தில்லையாடி வள்ளியம்மை பெயரால் திருநகர் ஒன்று அமைத்த பிறகுதான் - அந்தத் தியாக திருவிளக்கின் நினைவே, இ.காங்கிரசுக்கு ஏற்படுகிறது.

அவ்வளவு ஏன்? பெருந்தலைவர் காமராசர் எரியூட்டப் பட்ட இடத்தில், கழக ஆட்சிக் காலத்தில் எழுப்பிய நினைவு மண்டபத்தின் முகப்பில் அமைத்த ராட்டையைத்தூக்கி எறிந்த இ.காங்கிரசாருக்கு இப்போதெல்லாம் அவர்மீது திடீர்ப் பாசம் பொங்கி வழிகிறது!

உடன்பிறப்பே, ராஜீவ் காந்திக்கு - தேர்தலை முன்னிட்டு; தியாகிகளின் மீது அன்பு பீறிடுகிறது! நமக்கு அப்படியல்ல; எந்த நேரத்திலும் தியாகத்தை மதிக்கக் கற்றவர்கள் நாம்! தியாகம் புரிந்தோர் எந்த முகாமிலிருந்தாலும் அவர்களைப் போற்றிப் புகழ்ந்து மதித்தவர்கள் நாம்! மதிப்பவர்கள் நாம்!

சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியில் அமர்ந்து கழக ஆட்சிக்கு எதிராகக் குரல் கொடுத்துக் கொண்டிருந்த கோமதி சங்கர தீட்சிதர் என்று ஒருவர்! அவரைப்பற்றி இப்போது ராஜீவ் காந்தியிடம் அதிகாரிகள் எழுதிக் கொடுத்திருக்க மாட்டார்கள்! கோமதி சங்கர தீட்சிதர் வீரவாஞ்சியின் தீவிரவாத அணியைச் சேர்ந்தவர்! ஆஷ் துரையைக் கொல்வது யார்? என்று இவரா? அவரா? என குலுக்குச் சீட்டுப் போட்டதில் வாஞ்சியின் பெயர் வந்ததால், கோமதி சங்கரர் மணியாச்சிக்கு அன்று செல்லவில்லை - அவ்வளவுதான்!

எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்த அந்த காங்கிரஸ் பெரியவருக்கு எண்பது வயது நிறைவுற்றபோது - ராஜாஜி மண்டபத்தில் விழா நடத்தி, அவருக்கு நான் பொன்னாடை போர்த்திப் பாராட்டியதும் கழக ஆட்சியில்தான்!

தியாகிகள் எங்கிருந்தாலும் - என்றைக்குமே மதிக்கக் கூடியவர்கள் நாம் என்பதற்காக மட்டும் இதனைக் கூறவில்லை! தியாகிகள் பெயரைத் தேர்தல் நேரத்தில் மட்டும் ராஜீவ் நினைத்துக் கொள்கிறார் என்பதை சுட்டிக் காட்டுவதற்காக மட்டுமல்ல!

பிறகென்ன? இன்றும் தியாகிகள் நாள்தான் என்பதை உனக்கும், உலகெங்கும் பரவிக் கிடக்கிற தமிழ்ச் சமுதாயத்திற்கும் ஞாபகப்படுத்திடத்தான்!

சில நாட்களுக்கு முன்புதான் திலீபனின் நினைவு நாள்! தண்ணீரும் அருந்தாமல் 12 நாட்கள் உண்ணா நோன்பிருந்து உயிர்விட்டான் அந்த இளந் தமிழன், ஈழத்தில்! ஏன்? தன்னையொத்த தமிழ்க் காளையர் பலர் இந்திய ராணுவத்தினால் அழிக்கப்படுவதைத் தடுப்பதற்காக! அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவிக்கும் இந்திய அரசின் கொடுமைக்கு அணை போடுவதற்காக! அவனைச் சாகவிட்டுச் சந்தோஷம் கொண்டாடினர் இந்திய அரசினர்! இந்திய அரசினருக்கு சபாஷ் கூறினர், இலங்கை அரசினர்!

இன்று அக்டோபர் 5 என்று கடிதத் தொடக்கத்தில் குறிப்பிட்டேனல்லவா? ஆம், இந்த நாள் ஒரு கண்ணீர்நாள்!

இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கு விரோதமாக இலங்கைக் கடற்படையினர், விடுதலைப் புலிகள் 17 பேரைக் கைது செய்து அவர்களைக் கொழும்புக்கு கொண்டுபோக முனைந்தபோது - அதனைத் தடுத்திருக்க வேண்டிய இந்திய ராணுவம் தடுக்காதது மட்டுமல்ல; இலங்கைப் படையினரைத் தட்டிக் கொடுத்துப் பாராட்டியது கண்டு - பலாலி முகாமில் சைனட் விஷம் அருந்தி மடிந்தனரே மாவீரர்கள்! அந்தக் கொடுமையான நாள்தான் இந்த நாள்!

மட்டக் களப்பு பகுதி விடுதலைப் புலிகள் தளபதி குமரப்பாவும் - திரிகோணமலை விடுதலைப் புலிகள் தளபதி புலேந்திரனும் - அந்தப் பதினேழு பேரில் இருந்தனர் என்பதும், அவர்களும் தங்களை அந்த வீரமரணத்துக்கு ஆட்படுத்திக் கொண்டனர் என்பதும் தியாகத்தின் உச்ச கட்ட மன்றோ?

இந்த நிகழ்ச்சிக்கு ஒரு திங்களுக்கு முன்புதான் குமரப்பாவின் திருமணம் நடைபெற்று - அந்த மணவிழாவில் இந்திய ராணுவத் தளபதிகளும் கலந்து கொண்டனர்! அதே குமரப்பாவைத் தான் அமைதிகாக்கச் சென்றதாகக் கூறிக் கொள்ளும் இந்திய ராணுவத்தினர் இலங்கை ராணுவத்தின் கையில் ஒப்படைத்தனர்! கொத்தாக இருந்த மலர்களின் வாழ்வைக் கொத்தித் தின்று ஏப்பமிட்டனர்!

இப்படி எத்தனை எத்தனை இளம் புலிகள்! இறப்புலகில் ஈழம் காண்போம்! என்று வீரச் சாவைக் களத்தில் தேடிக் கொண்டுள்ளனர். இதோ - சில நாட்களுக்கு முன்பு என் சிந்தை கலக்கிய செய்தி!

என்னை அண்ணனாக ஏற்றுக் கொண்டவரும் தமிழ் ஈழக் களத்திலிருந்து எனக்கு மடல் தீட்டியவரும் - எழுச்சிக் கவிஞருமான காசி ஆனந்தனின் இளவல் வள்ளுவன் என்கிற சிவஜெயம் - அந்தக் கட்டிளங்காளை - குமரப்பா, புலேந்திரன் வழியிலே தான் மரணத்தைத் தழுவிக் கொள்ள நேரிட்டிருக்கிறது!

அம்மவோ! என்னே வீரம்? என்னே உறுதி? என்னே விடுதலைக்கனல்? என்னே தியாகம்?

பகைவனுக்கு முன்னால் தலை குனிந்தால் பதவிகள் குவியும்! பண முடிச்சுகள் நிறையும்! ஆனால் மானம் அழியும்!

அந்த மானம் போற்றும் மறவர்களையன்றோ, தமிழ் ஈழமண் பெற்றெடுத்து, தாலாட்டி இன்று தடந்தோள் உயர்த்தி நிற்கும் தமிழச் சீயங்களாகத் தரணிக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறது!

வன்முறை மூலமும் விடுதலைப் பண் பாடலாம் என கர்ச்சித்த வாஞ்சிநாதன், பகத் சிங், ஆகியோர் அவர்கள் கொண்ட இலட்சியத்திற்காகப் பாராட்டப்படுகிறார்கள்!

தவறு என்று யாரும் கூறிடார்! ஆனால் அந்தப் பாராட்டு அளவுகோல் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு மட்டும் பொருந்தாதோ?

தமிழ் ஈழப்பகுதியில் மட்டுமல்ல; தஞ்சமென வந்த இடத்திலும் அல்லவா அவர்களை இன்னலுக்கு ஆளாக்குகிறது ராஜீவின் அரசு!

கடந்த ஐந்து ஆண்டுக் காலமாக இங்கே தங்கியுள்ள விடுதலைப் புலிகள் மீது திடீரென என்ன குற்றம் கண்டு, அவர்களை தேசப் பாதுகாப்பு சட்டப்படி கைது செய்து கூண்டிலே போட்டிருக்கிறது?

அவர்களில் யார் என்ன குற்றம் செய்திருந்தாலும் அதன்மீது நடவடிக்கை எடுக்க எத்தனையோ சட்டங்கள் இருக்கும்போது -

ஒட்டு மொத்தமாக அவர்கள் அனைவரையும் - சிறையில் தள்ள வேண்டிய அவசியம் என்ன வந்தது?

வீட்டுக் காவலில் இருந்த தளபதி கிட்டு உட்பட சுமார் இருநூறு விடுதலைப் புலிகள், என்.எஸ்.ஏ. சட்டப்படி காராக்கிரகத்தில் தள்ளப்பட்டிருப்பது என்ன நீதி? என்ன நியாயம்?

தங்கள் மண்ணின் உரிமை - இனத்தின் உரிமை - மொழியின் உரிமை - இவற்றுக்காகத் தியாகம் செய்வோர்; ராஜீவ் காந்தியின் அகராதிப்படி திருடர்களா? கொள்ளைக்காரர்களா? கொலைகாரர்களா?

இதைக் கேட்டால் - அப்படிக் கேட்கும் நாம்; தமிழ் வெறியர்களா?

நியாயத்தைக் கேட்பது தமிழ்வெறி என்றால்; அந்த வெறி என்றுமே தணியாது!

உடன்பிறப்பே, இந்தக் கடிதம் எழுதிக் கொண்டிருக்கும் போதே; ஒரு செய்தி!

சென்னைச் சிறையில் தேசப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் பூட்டப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான கிட்டு - ராஜீவ் அரசின் உரிமை நசுக்கும் போக்கைக் கண்டித்து சாகும் வரையில் உண்ணா நோன்பு கடைப்பிடிக்க முடிவு செய்து அதனை அறிவித்துள்ளதாகச் செய்தி வந்துள்ளது.

1. இந்திய மண்ணில் நாங்கள் ஏதாவது குற்றம் செய்திருந்தால் - குற்றம் என்னவென்பதை வெளிப்படுத்தி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர வேண்டும்.

2. அவ்வாறு வழக்குத் தொடர முடியாதாயின் எங்களை விடுதலை செய்து, தமிழ் ஈழத்தில் எமது போராளிகளிடம் ஒப்படைக்க வேண்டும்.

இந்தக் கோரிக்கை 10.10.88 அன்று காலைக்குள் நிறைவேற்றப்படாவிட்டால் அன்று முதல் சாகும் வரையில் தளபதி கிட்டு அவர்கள் உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும் - அவருக்குப் பின் அவரைத் தொடர்ந்து சிறையில் உள்ள விடுதலைப் புலிகள் உண்ணாவிரதம் இருக்கப் போகிறார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கோரிக்கையில் உள்ள நியாயத்தை எடுத்துச் சொல்லி - அவர்களை உடனே விடுதலை செய்திடுக என்று நாம் வலியுறுத்தினால் அது ராஜீவ் காந்திக்கு தமிழ்வெறியாகத் தோன்றுகிறது!

தமிழ்நாடு பெயர் வைக்கக் கோரி காமராசர் ஆட்சிக் காலத்தில் உண்ணாவிரதம் இருந்து உயிர் விட்ட காங்கிரஸ் தியாகி சங்கரலிங்க நாடாரின் தியாகத்தைக் கூட காங்கிரஸ்காரர்கள் தமிழ்வெறி என்றுதான் கேலி செய்தார்கள்!

இப்போதும் நம்மை அப்படித்தான் கேலி பேசுகிறார்கள்!

ஆனால் ஒன்று - தியாகங்கள் ஆரம்பத்தில் அலட்சியப் படுத்தப்படலாம்! புறக்கணிக்கப்படலாம்! வெறி என்று வீணர்கள் புலம்பலாம்! இறுதியில் வெற்றி பெறுவது தியாகமே!

அதிகாரமல்ல!
ஆணவமல்ல!

எடுத்தேன்
கவிழ்த்தேன் என்ற பேச்சல்ல!

இதை உணர்ந்து ராஜரீகம் நடத்துபவராகத் தெரியவில்லை ராஜீவ் காந்தி!

தமிழக சிறைச்சாலைகளில் திலீபன்களை உருவாக்கப் போகிறாரா?

அல்லது தமிழக மக்களின் குரலுக்குத் தலை வணங்கப் போகிறாரா?

அன்புடன்

மு.க.

05-10-1988

1595. கள்வர் கையில் கதிர்மணி சிக்காமல் காத்திட...

உடன்பிறப்பே,

இந்தத் திங்கள் ஏழாம் நாள் - சென்னை அண்ணா அறிவாலயம் - கழக அலுவலகத்தில் நடைபெற்ற தலைமை நிர்வாகக் குழு கூட்டத்தில் - தமிழகத்தில் தேர்தல் காரணங்களுக்காக சாதிப் போராட்டங்களைத் தூண்டிவிடும் கவர்னர் ஆட்சி குறித்தும் அதனை உசுப்பிவிடும் காங்கிரஸ் கட்சி குறித்தும் - விஷத்தைவிட வேகமாக ஏறிக்கொண்டிருக்கும் விலைவாசி உயர்வு குறித்தும் - தமிழகத்தில் இந்தியை திணிக்க நவோதயா பள்ளிகளைத் திறக்க மீண்டும் மத்திய அரசு முனைவதைக் குறித்தும் - வன்முறை வெறியாட்டங்களுக்குத் தலைவணங்கிக் கைகட்டிக் கொண்டிருக்கும் காவல் துறையின் கடமை மறந்த நிலைமை குறித்தும் - கழக முன்னணியினரைக் கொலை செய்யவே திட்டமிட்டுச் செயல்படும் வன்முறை வெறியர்களுக்கு மறைமுக ஆதரவும் ஊக்கமும் தருகிற ஆளுங்கட்சியாளரின் அராஜகப் போக்கு குறித்தும் - இலங்கைத் தமிழர் அவதி குறித்தும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை விளக்கி, வரும் 15ஆம் நாள் முதல் 21ஆம் நாள் முடிய தமிழக முழுதும் பிரச்சார விளக்கக் கூட்டங்கள் நடைபெறுவதற்கான முயற்சிகளைக் கழக அமைப்புகள் மேற்கொள்ள வேண்டுமென்று நிர்வாகக் குழுவிலேயே கேட்டுக்கொண்டு - மேலும் பல முக்கியமான நிலைமைகள் பற்றி விரிவாகப் பேசி, வேண்டுகோள் விடுத்து, அந்த வேண்டுகோளுக்குக் கழக முன்னோடிகள் செவிசாய்த்துச் செயல்பட வேண்டுமென்றும் உருக்கமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

மாற்றாரின் பேச்சுக்களும், அறிக்கைகளும், பேட்டிகளும், செயல்களும், அவற்றுக்கு உறுதுணையாகவும் - பக்கபலமாகவும் விளங்குவதோடு - அவற்றை தூண்டிவிட்டு உற்சாகப்

படுத்தினால்தான்; தி.மு.க.வை வீழ்த்த முடியும் என்று நாட்டின் எதிர்காலத்தைப் பற்றியே கவலைப்படாமல் - தற்காலிக ஆறுதலுக்கான ஒரு நிலையெடுத்துள்ள அரசாங்கத்தின் போக்கும் - என்னைப்போன்ற ஒரு சிலரின் உயிரையே பறிக்குமளவுக்கு வெறித்தனம் கொண்டுள்ளவைகளாக இருப்பதால் - அப்படிப் பலியாகிறவர்கள்; நானாக இருந்தாலும் அல்லது வேறு எந்த உடன்பிறப்பாக இருந்தாலும் - அதற்குப் பிறகும் கழகத்தின் வலிவுக்கும், பொலிவுக்கும், வெற்றிகளுக்கும் பொறுப்பேற்றுப் பணிபுரிய வேண்டிய கடமையுணர்வு - எஞ்சியுள்ள உன்போன்ற உடன்பிறப்புகள் எல்லோருக்கும் இருந்தாக வேண்டுமல்லவா?

அதனால்தான் இந்தக் கடிதத்தின் வாயிலாக - உரிமையுடன் - கழக வளர்ச்சி மேலும் பெருகிட, செயல்முறைத் திட்டங்கள் சிலவற்றை உன் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்!

இரண்டொரு நாட்களுக்கு முன்பு நீலகிரி மாவட்டம் சென்று திரும்பினேன். கோவையிலிருந்து உதகமண்டலம் வரையில் சாலையின் இருபுறமும் மக்களின் வெள்ளம்தான்! எழுச்சி பிரவாகம்தான்! எழிற்கோலம்தான்!

அதனைக் காணும் நமது கழகக் கண்மணிகள்; வெற்றிக்கனியே தானாகக் கனிந்து தமது கரங்களில் விழுந்து விட்டது போன்ற உணர்வைப் பெற்று உவகை பொங்கிடத் துள்ளிக் குதிக்கிறார்கள்.

அவர்தம் மகிழ்ச்சி கண்டு எனக்கும் மகிழ்ச்சிதான் எனினும் - கழனியில் வரப்பு கட்டி, நீர் பாய்ச்சி, மடைகோலி, உழவு செய்து, பரம்படித்து, நாற்று நட்டு, களையெடுத்து, காப்பு செய்து, கதிர் சாய்ந்திடப் பயிர்கள் வளர்ந்து நிற்பது கண்டு பூரிப்பதுடன் முடிவதில்லையே உழைக்கும் விவசாயியின் பணி!

அறுவடைக்கு முன்பு ஆடு மாடுகள் நுழையாமலும் - கள்வர்கள் கையில் கதிர்மணிகள் சிக்காமலும் - பாதுகாத்துக் களத்துமேட்டில் குவித்துப் பின்னர் பகிர்ந்தளிப்பதில் அல்லவோ உண்மை விவசாயிக்கு உளமார்ந்த மகிழ்ச்சி ஏற்பட முடியும்!

அதுதான் இன்றைய தமிழக அரசியல் நிலை!

வறண்ட நிலத்தை வளமாக்கிட, வைகையையே ஜீவநதியாக மாற்றினாலும் - அந்த முயற்சியால் கிடைத்த பயனை; ஏமாந்த

காரணத்தால் எவரோ அடைந்திடும் வண்ணம் வழியமைத்துக் கொடுத்துவிட்டு - வாய் பிளந்து நிற்கலாகாது அல்லவா?

பணமில்லை நம்மிடம் கோடி கோடியாக! அது எங்கேயோ குவிந்து கிடக்கிறது; பேழை பேழையாக!

அதிகார பலமில்லை நம்மிடம் - அதனைத் துஷ்பிரயோகம் செய்வதற்கென்றே மத்தியிலும் இந்த மாநிலத்திலும் அரசுகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன!

இவை இரண்டினாலும் வெற்றி கிட்டுமா? என்ற சந்தேகத்தில்தான் வன்முறைக்குத் தூப தீப நைவேத்யம் காட்டப்படுகிறது; குடியரசுத் தலைவரின் ஆட்சியில்!

பணம் - அதிகாரம் - வன்முறை - திட்டமிட்டப் பொய் பிரச்சாரம் - இத்தனையும் எதிர்த்து நமது கழகத்தின் கொள்கை விளக்கங்கள் - நாம் தொகுத்துச் சொல்லும் கடந்த கால அரசியல் வரலாறு - நமது குறிக்கோள், கோட்பாடு - தமிழகத்திற்கு நாம் செய்துவரும் தொடர்பணி - தமிழுக்காகவும் தமிழர்களுக்காகவும் நாம் ஏற்றுக்கொண்ட அடக்குமுறைகள் - புரிந்த தியாகங்கள் - இவை, அரசியல் தெளிவுள்ள நகர்ப்பகுதிகளிலும், நகரங்களை யொட்டிய புறநகர்ப் பகுதிகளிலும் மக்களின் நெஞ்சில் பதிந்துள்ளன.

பட்டிதொட்டிகள், சிற்றூர்கள், பேரூர்கள் - அங்கும் நமது கருத்துக்களும் நமது கழகமும் மக்கள் இதயத்தில் இடம் பெற்றுள்ளன எனினும்; இன்னும் பரவலாக - விரிவாக - ஆழமாக - ஆணித்தரமாக - மக்களின் கவனத்திற்கு நமது பிரச்சாரம் பெருகியாக வேண்டும்.

நிர்வாகக் குழு தீர்மானங்களை விளக்கியும் நாடு நிலையைத் தெளிவுபடுத்தியும் ஒரு வார காலம் கழகப் பிரச்சாரம் தீவிரப்படுத்தப்பட வேண்டுமென்ற தலைமையின் கருத்தையொட்டி, கழகத்தின் கொள்கைவிளக்க அணிச் செயலாளர் கந்தப்பன் அவர்களும் அமைப்புகளின் நிர்வாகிகளுக்கும், சொற்பொழிவாளர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

குக்கிராமங்கள், பட்டிதொட்டிகளில் நமது கொள்கைகள் பரவிட கிராமப்புறப் பிரச்சாரத்தை முடுக்கி விட வேண்டுமெனப் பல முறையும் நான் சுட்டிக் காட்டியுள்ளேன்.

அதனை மனதில் பதிய வைத்து மாவட்டக் கழகச் செயலாளர்கள் சிலரும், சொற்பொழிவாளர்கள் சிலரும், கழக முன்னணியினர் சிலரும் - இளைஞர் அணியினரும் - நமது பிரச்சாரத்தை கிராமப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தி, வேகப்படுத்தியிருக்கிறார்கள்.

கடந்த 7-ந் தேதி நடந்த நிர்வாகக் குழுவுக்கு வரும் மாவட்டச் செயலாளர்கள் தங்களின் மாவட்டங்களில் ஒன்றிய அளவில் கிராமங்கள் அளவில் நடத்தப்பட்ட சுற்றுப்பயண நிகழ்ச்சிகளின் பட்டியல்களைக் கொண்டு வர வேண்டுமென தலைமைக்கழக செயலாளர் ஆற்காடு வீராசாமி அவர்கள் எல்லா மாவட்டச் செயலாளர்களுக்கும் கடிதம் அனுப்பியிருந்தார் எனினும் - அந்த நிர்வாகக்குழுவில் அத்தகைய சுற்றுப்பயணப்பட்டியல் தந்தவர்கள், சேலம் - திருச்சி - வட ஆற்காடு (வடக்கு) - புதுக்கோட்டை - காமராசர் - நெல்லை கட்டபொம்மன் - நெல்லை சிதம்பரனார் ஆகிய ஏழு மாவட்டச் செயலாளர்கள் மட்டுமே!

மற்ற மாவட்டச் செயலாளர்கள் அந்தப் பட்டியலைக் கொண்டு வரவில்லை என்பதால் - அவர்கள், அத்தகைய பரவலான சுற்றுப் பயணங்களை மேற்கொள்ளவில்லையென்று நான் கருதவில்லை!

பட்டியல் தந்தோர் - தராதோர் - இருசாராருமே, இன்னும் பரவலாகவும் தீவிரமாகவும் விரைவாகவும் பட்டிதொட்டி முதல் பட்டினக்கரை வரையில் கழகப் பிரச்சாரப்பணிகளைத் தொடங்கித் தொய்வின்றி நடத்திட வேண்டும்.

மாவட்டக் கழக அமைப்புகளின் மூலமாக - நமது கழகத்தின் சொற்பொழிவாளர்களும், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒருவாரத்திற்குக் குறையாமல் ஒவ்வொரு நாளும் இருபதுக்குக் குறையாத நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிற வாய்ப்பை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

ஒருநாள் -

ஒரு கூட்டம் -

அல்லது இரண்டு கூட்டம் -

இப்படிக் கணக்குப் பார்த்துக் கலந்து கொள்வதை விடுத்து - ஒரு நாளில் இருபது சின்னஞ்சிறிய ஊர்களுக்காவது செல்வது; ஆங்காங்கு ஐம்பது அறுபது பேர் கொண்ட

கூட்டமாயினும் பேசுவது - விளக்கமளிப்பது - அந்த நிகழ்ச்சிகள் எல்லாவகையிலும் சிக்கனமான அளவில் நடைபெற நிர்வாகிகளும் சொற்பொழிவாளர்களும் ஒத்துழைப்பது -

இத்தகைய உள்ளுணர்வோடு கழகப் பணி ஆற்றிட முன்வர வேண்டும்.

ஏற்கனவே நமது கழகத்தின் முன்னணியினர் சிலரும், இளைஞரணித் தம்பிகள் சிலரும் கூட்டங்கள், கொடியேற்று விழாக்கள் என்ற வகையில் நாளொன்றுக்கு நாற்பது ஐம்பது நிகழ்ச்சிகளிலே கூட கலந்து கொண்ட செய்திகள் தலைமைக் கழகத்திற்கு வந்ததுண்டு! அது கண்டு என் மனம் பூரித்ததுண்டு!

அந்த ஆர்வம் தொடரவேண்டும் என்ற அவாவினைத் தெரிவிக்கவே இந்தக் கடிதம்!

இந்தக் கடிதம் எழுதும்போது என் கைக்குக் கிடைத்த துண்டு அறிக்கை ஒன்று!

வடஆற்காடு மாவட்டம் கீழ்வைத்தினாங்குப்பம் ஒன்றியக் கழக அமைப்பின் சார்பில் அக்டோபர் 13ந் தேதியும் 14ந் தேதியும் நடைபெறுகிற நிகழ்ச்சிகள் மாவட்டச் செயலாளர் தம்பி முகம்மது சகி அவர்கள் தலைமையில் மாணவர் அணிச் செயலாளர் தம்பி துரைமுருகன் நாற்பதுக்கு மேற்பட்ட கிராமப்புறங்களுக்குச் சென்று கழகக் கொடியினை ஏற்றி வைக்கிறார். ஆங்காங்கு உரையாற்றுகிறார்.

பசுமாத்தூர், ஐதர்புரம், நெட்டேரி, வேப்பூர், அம்மணாங்குப்பம், குடியாத்தம் ஆர்.எஸ்., சேத்துவண்டை, கோவிந்தாபுரம், சென்றாம்பல்லி, கீழ் ஆலத்தூர், நாகல், கே.ஏ. மோட்டூர், கொசவன் புதூர், அர்ஜுனாபுரம், ஆதியப்ப நாயுடுபுதூர், ஆலமரம் கூட்ரோடு, கெம்மங்குப்பம், தேவரசிகுப்பம், மேல் பழைய கிருஷ்ணாபுரம், மாச்சனூர், முருக்கம்பட்டு, காங்குப்பம், புருசணமூலை, கல்யாண பெரியாங்குப்பம், துரைமூலை, சென்னங்குப்பம், காவனூர், பி.கே.புரம், பெருமாங்குப்பம், கே.வி.குப்பம், நத்தைமேடு, கவசம்பட்டு, வேப்பங்கநேரி, வடுகந்தாங்கல், அங்கராங்குப்பம், கெங்கசாணிகுப்பம், சென்னறாம்பல்லி, கீழ்முட்டுகூர், ஆலங்கநேரி, மேல்மாயில், மேல்மாங்குப்பம், முடினாம்பட்டு, கீழ்விலாச்சூர், அக்கரை, கொத்தமங்கலம்

என இப்படி நீண்டு கொண்டு போகிறது பட்டியல்!

இதனை நான் சுட்டிக் காட்டுவதற்குக் காரணம் - எல்லா மாவட்டங்களிலுள்ள எல்லா ஒன்றியங்களிலும் - இதுபோன்ற சுற்றுப்பயண நிகழ்ச்சிகள் நடைபெற்றாக வேண்டும் - இது குறித்து மாவட்டச் செயலாளர்களும், ஒன்றியச் செயலாளர்களும் கலந்து பேச வேண்டும். அவர்களுடன் கழகச் சொற்பொழிவாளர்கள் எல்லா வகையிலும் நல்ல முறையில் ஒத்துழைக்க வேண்டும்.

சில டாக்டர்கள்; நான் பட்டினத்திலேயே இருப்பேன் - பட்டிக் காட்டுப் பக்கம் போக மாட்டேன் என்பது போல - கழகச் சொற்பொழிவாளர்களும் நடந்து கொண்டால்; கிராமப் புறங்களில் பரவியுள்ள நோய்கள் தீர்க்கப்பட முடியாதவைகளாகி விடுவதோடு; அந்த நோய்கள் விரைவில் நகர்ப்புறங்களிலும் பரவி ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிவிடும்.

எனவே - இனி உதவாது ஒரு தாமதம் என உரைத்து, மாவட்டக் கழகச் செயலாளர்கள், கழகச் சொற்பொழிவாளர்களைக் கலந்து பேசி - மாவட்டத்திலுள்ள கிராமங்கள் அனைத்திலும் கழகக் கொள்கைகளும் - குறிக்கோளும் பரவிட, பணிதொடர வேண்டுகிறேன்.

அலட்சியத்தால் - அக்கறையின்மையால் - அறுவடை நேரத்தில் கோட்டை விட்டு விட்டோம் என்று பிறகு வருந்திப் பயனில்லை!

அன்புடன்

மு.க.

13-10-1988

1596. ஏழைக் குடிசைகளில் எத்தனை இருதயங்கள்!

உடன்பிறப்பே,

ஒன்பது ஆண்டுக்காலம் ஆட்சிப் பொறுப்பிலும் - குறிப்பாக ஏழாண்டுக் காலம் முதலமைச்சர் பொறுப்பிலும் நானிருந்தபோது அந்த சகோதரியை நான் பார்த்ததில்லை. அந்த சகோதரியும் என்னைக் காணவந்ததில்லை. 1976ஆம் ஆண்டு எமர்ஜன்சிக் கொடுமையை தி.மு.க. எதிர்த்தது என்பதற்காகக் கழக ஆட்சி கலைக்கப்பட்டதல்லவா; அதன் பிறகு நான் நாள்தோறும் முரசொலி அலுவலகம் செல்வதை வாடிக்கையாக்கிக் கொண்டிருந்தேன்.

காலை 10 மணிக்கு முரசொலிக்குச் சென்று எழுதுவேன். எழுதப்பட்ட கடிதங்கள் அச்சுக் கோப்பதற்கு முன்பாக தணிக்கை அதிகாரிக்குச் செல்லும். அவர் கத்தரித்தது போக மீதிக் கடிதம் தான் முரசொலியில் வெளியிட தணிக்கை அதிகாரியின் அனுமதி கிடைக்கும். எஞ்சியதைப் படித்துப் பார்த்துவிட்டு - முரசொலியில் வெளியிடக் கொடுத்து விட்டு; 12 மணி அளவில் அங்கிருந்து கிளம்புவேன்.

முரசொலி அலுவலகத்தை அடுத்த நாலைந்து வீடுகளுக்கப்பால் ஒரு சிறிய குடிசை! அந்தக் குடிசை வாசலில் அதுவரையில் எனக்காகக் காத்திருக்கும் அந்தக் குடிசையில் வாழும் குடும்பம்!

எப்பா! என்று கண்கலங்க அருகே ஓடி வருவார் ஒரு மூதாட்டி! அவருக்குக் கண்கூடச் சரியாகத் தெரியாது! அண்ணே! இதைக் கொண்டு போய் வீட்டில் கொடுங்கள்! என்று ஒரு கட்டுக் காய்கறியை என் கையில் திணிப்பார் அந்த மூதாட்டியுடன் நிற்கும் அந்தச் சகோதரி! பெயர் இந்திராணி!

இப்படி ஒருநாள் இருநாள் அல்ல; பனிரெண்டு ஆண்டுக் காலமாக - நான் முரசொலிக்குச் சென்று திரும்பும் போதெல்லாம் என் கார் அந்தக் குடிசை வாசலில் நிற்கும்! நின்றாக வேண்டும்!

அந்த வட்டாரத்தில் கூட்டங்கள், நிகழ்ச்சிகள் என்றால் எப்போதும் அந்தக் குடும்பத்தை மேடையருகே காணலாம்!

ஒவ்வொரு ஆண்டும் பிறந்தநாள் விழாவுக்கு அந்தக் குடும்பமே மாலையுடன் வந்து விடும்! பாவம்; அந்தப் பார்வையற்ற மூதாட்டியையும் அழைத்துக்கொண்டு - குழந்தைகளையும் கூட்டிக்கொண்டு சகோதரி இந்திராணி என்னைக் கண்டு, பிறந்தநாள் வாழ்த்துக் கூறும்போது என்ன பாசம்! என்ன அன்பு! என்ன பூரிப்பு!

இந்தப் பனிரெண்டு ஆண்டுகளில் நாலைந்து முறை சிறை சென்றிருக்கிறேன்! கைதாகியிருக்கிறேன் - உடனே விடுவிக்கப்பட்டிருக்கிறேன்! தண்டனை பெற்றும் சிறையில் இருந்திருக்கிறேன்! எப்படித்தான் அந்தச் சகோதரிக்கு முதலில் செய்தி தெரியுமோ? எனக்கும் என்னுடன் சிறையில் இருப்பவர்களுக்கும் ரொட்டி, பழம் மற்றும் தன் வசதிக்கு முடிந்த பொருட்களை வாங்கிக் கொண்டு, அந்த மூதாட்டியையும் அழைத்துக் கொண்டு இன்ட்டர்வியூ பார்க்க வந்து விடுவார்!

தள்ளாத வயதில் அந்த பழுத்த பழம் - மங்கிப் போன கண்களால் என்னைப் பார்த்து; கரங்களால் அரவணைக்கும்போது என் அன்னை அஞ்சுகத்தம்மையாரே உயிர்பெற்று வந்தது போன்ற உணர்வு எனக்கு உதிக்கும்!

சகோதரி இந்திராணியோ எனது இரண்டு சகோதரிகளுக்கு இணையான மூன்றாவது சகோதரியாக என் எதிரில் நின்று பாசத்தைப் பொழிந்து என்னை உருக வைப்பார்!

அந்த அருமைச் சகோதரி நேற்று திடீரென இயற்கை யெய்தி விட்டார் என்ற செய்தி கேட்டு என் இருதயமே அதிர்ந்து போனது!

ஓடினேன் அந்தக் குடிசைக்கு! "அண்ணே! இந்தக் காய்கறிகளை வீட்டுக்கு எடுத்துகிட்டு போங்க!" என புன்னகை தவழ, பூரிப்பு பொங்க - என்னிடம் ஓடிவந்து வழங்கிடும் அந்த சகோதரி; அசைவற்றுப் போனார்! என் அடிமனம் தகர்ந்து போயிற்று!

அந்த மூதாட்டி எப்பா! பாரப்பா - உன் தங்கச்சியை! என்று கதறிய போதும் - அந்த வீடே அழுது குலுங்கிய போதும் - என்னையே என்னால் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை!

ஒரு ஏழைக் குடிசையில் அப்படி ஒரு இருதயம்! எனக்காக பிரார்த்தனை செய்து கொண்டிருந்த இருதயம்! இந்தக் கழகத்தின் சிட்டுக் குருவியாகப் பறந்து கொண்டிருந்த என் சகோதரி - இந்திராணி; இழந்து விட்டேன்!

அற்ற குளத்து அறு நீர்ப்பறவைகள் பலவற்றை என் வாழ்க்கையில் சந்தித்து வேதனைக்களமாக ஆகிவிட்ட என் உள்ளத்துக்கு - இதம் தரும் மலராக; ஆம் -அக்குளத்துடன் ஒட்டிக் கிடக்கும் மலராக; இருந்த பாசமலர் இந்திராணி! அந்த சகோதரியைப் பிரிந்த துயரம் நீங்காது; நீங்கவே நீங்காது!

எனினும் இந்திராணி காட்டிய அன்பைத் துணைக்கொண்டு - என் பணி தொடருவேன்!

ஏழைக் குடிசைகளில்தான் இப்படி எத்தனை இருதயங்கள்! எதையும் எதிர்பார்க்காமல் தொடர்ந்து அன்பு காட்டும் தூய இருதயங்கள்!

அன்புடன்

மு.க.

15-10-1988

1597. நாடகமே உலகம்!

உடன்பிறப்பே,

மீண்டும் ராஜீவ் காந்தி தமிழகத்தில் மின்னல் வேக சுற்றுப்பயணம்!

அரசு விழாக்களில் அரசியல் விமர்சனம் - காங்கிரசுக்கு ஓட்டு வேட்டை - எதிர்க்கட்சிகளைப் பற்றிக் காரசாரமான விமர்சனம்!

இந்த அரசியல் பண்பாட்டை - ஆகா! என்னவென்று சொல்வது? என்னவென்று சொல்வது?

எல்லா மக்களும் தருகிற வரிப்பணத்தில் அரசு விழாக்கள் - அந்த விழாக்களில் எதிர்க்கட்சிகளைப் பற்றிப் பேசுகிற அரசியல் அநாகரிகத்தை ஒரு நாட்டின் பிரதமரே துணிச்சலாகப் பின்பற்றுகிறார்! அவரது அரசியல் நேர்மையும், அலெக்சாண்டரின் அரசியல் நாணயத்தையும் நடுநிலையாளர்கள் புரிந்து கொண்டால் சரி!

இருபது ஆண்டுக்கால ஆட்சியின் வீழ்ச்சியை ஆளுநர் ஆட்சி சரிப்படுத்தியுள்ளது என்று ராஜீவ் காந்தி திருவாய் மலர்ந்துள்ளார் இப்போதும்!

அதை ஏற்றுக் கொண்டது போல அ.தி.மு.க. அணியினர் இருவரும் அவருக்கு வரவேற்பு வளைவுகள் அமைத்தும், வரவேற்பு சுவரொட்டிகளை ஒட்டியும் மகிழ்ந்தனர் என்று ஏடுகளில் கட்டம் கட்டிய செய்திகள்!

ஒருவேளை அந்த அணிகளின் தலைமைகளுக்குத் தெரியாமல் நடந்ததோ என்னவோ?

ராஜீவ் சேலம் நிகழ்ச்சியில் ஒரு சிரிப்பு வெடியை வெடித்துள்ளார்?

மத்திய காங்கிரஸ் ஆட்சி, மாநிலத்தில் ஆட்சி நடத்திய காங்கிரசல்லாத அரசுகளைக் கவிழ்த்ததே இல்லை என்று கையை உயர்த்திக் கர்ச்சனை செய்தார் ராஜீவ்காந்தி, சேலத்தில்!

இது எவ்வளவு மகத்தான உண்மையென்று நாகாலாந்து மக்கள், அங்கிருந்தவாறே கரகோஷம் செய்வார்கள்!

இந்திரா காந்தி, வங்கிகளை தேசிய மயமாக்கியபோது மோகன் குமாரமங்கலம் அவருக்கு உறுதுணையாக இருந்தவர் என்று கூறிய ராஜீவ் காந்தி, அதே வீச்சில் தனது முகத்தைத் திருப்பி தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரின் முகத்தைப் புன்னகை நெளியப் பார்த்தாராம்! ஏன் தெரியுமா? அப்போது அந்தத் தலைவர் வங்கிகள் தேசிய மயக் கொள்கையை எதிர்த்தவர் அல்லவா; அதனால்!

தமிழகத்தில் இந்தியை எதிர்த்துப் போராடும் தி.மு.கழகம், இப்போது தேசிய முன்னணியில் இந்தி வெறியர்களின் மடியில் அமர்ந்து விரல் சூப்புகிறது.

என்றும் ராஜீவ் கிண்டல் அடித்துள்ளார்!

இந்தப் பேச்சைப் பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை -

ஏனென்றால் சில நாட்களுக்கு முன்புதான் இதே ராஜீவ் காந்தி, உத்திர பிரதேசத்தில் ஒரு விழாவில் பேசும் போது, வடக்கேயுள்ள எதிர்க்கட்சிகள் இந்தியை பரப்புவதை விடுத்து, தமிழ் நாட்டில் உள்ள இந்தி எதிர்ப்பு இயக்கமான தி.மு.க.வின் மடியில் போய் அமரலாமா? என்று ஆதங்கத்தோடு பேசியது எல்லா ஏடுகளிலும் வெளிவந்துள்ளது!

அதாவது தமிழ் நாட்டுக்கு வந்தால் ஒரு பேச்சு! வடக்கே போனால் இன்னொரு பேச்சு! இதுதான் ராஜீவ்! ராஜீவ்!!

சென்ற மாதம்கூட அலுவலகங்களில் உள்ளோர் இந்தியில் நோட் எழுத வேண்டும் - இந்தியில் கையொப்பமிட வேண்டுமென சுற்றறிக்கையைத் தமிழக அலுவலகங்களுக்கு அனுப்பிடச் செய்தவர் தன்னை இந்தி வெறியர் அல்ல என்று கூறுவது எவ்வளவு பெரிய பொய்!

அண்மையில் ஐ.நா. மன்றத்தில் தென்னாட்டைச் சேர்ந்த மத்திய அமைச்சர் நரசிம்மராவ் அவர்களை இந்தியில் பேசுமாறு

செய்த ராஜீவ் காந்தி, இந்தி வெறியர் அல்லவாம்! பாவம்; அவரே சொல்லிக் கொள்கிறார்! கேழ்வரகில் நெய் வடிகிறதாம் - கேளுங்கள் தமிழர்களே! என்றுதானே கூற வேண்டியுள்ளது.

அதெல்லாம் போகட்டும் - ராசீபுரத்தில் இரண்டு குழந்தைகளுக்கு இலவச கண்சிகிச்சைக்கு ராஜீவ்காந்தி உத்திரவிட்டார் என்று பெரிய பெரிய விளம்பரம் செய்கிறார்களே; உடன்பிறப்பே! நாள்தோறும் நாற்பது அல்லது ஐம்பது கண்நோயாளிகள் நமது தி.மு.க. அறக்கட்டளை அண்ணா அறிவாலயத்தில் வெற்றிச் செல்வி அன்பழகன் கண் மருத்துவமனையில் இலவச சிகிச்சை பெறுகிறார்களே - அது தெரியுமா அவர்களுக்கு!

என்ன செய்வது; நாடகமே உலகம் என்று அந்தக் காலத்திலேயே பாடி வைத்திருக்கிறார்களே!

அன்புடன்

மு.க.

27-10-1988

1598. ஒரு பூனை, புலியான கதை!

உடன்பிறப்பே,

பூனையொன்று - கொழுகொழுவென்று இருந்தது! வீட்டில் அது எலிகளைப் பிடிப்பதில்லை - அடுக்களையில் நுழைந்து அங்குள்ள உரியில் தாவியும், பாத்திரங்களை உருட்டியும் குழந்தைகளுக்கென பத்திரப்படுத்தி வைத்திருக்கும் பால், தயிர், வெண்ணெய் போன்றவற்றைத் தானே உண்டு நன்றாக கொழுத்துவிட்ட அந்தப் பூனை - ஒருநாள் வீட்டுக் கூடத்தில் உலவிக் கொண்டிருந்தபோது அங்கே சுவரில் மாட்டப்பட்டிருந்த ஒரு படத்தைப் பார்த்து விட்டது!

அது ஒரு புலியின் படம்! ஒரு பெரும் புதரைக் கிழித்துக்கொண்டு அந்தப் புலி கம்பீரமாக வெளிவருவது போன்ற படம்! புலியின் ஓவியங் கண்டதும் பூனைக்கு ஒரு ஆசை! என்ன ஆசை? தானும் புலியைப் போல் ஆக வேண்டுமென்று! என்ன செய்தால் புலியைப் போல் ஆகலாம் என்று யோசித்தது! புலியின் உடலில் இருந்த அந்தக் கோடுகள் பூனையைக் கவர்ந்தன! ஓகோ! கோடுகள் இருப்பதால் தான் அது புலியாக இருக்கிறது - தனது உடலிலும் அதுபோலக் கோடுகள் இருந்தால், தானும் புலியாகிவிடலாம் என்று தீர்மானித்தது!

கோடு போட்டுக்கொள்ள வேண்டுமே - என்ன செய்வது? அந்த வீட்டில் ஒரு ஐந்து வயதுப் பையன் இருந்தான்! அவ்வளவு வெதர்னை உள்ளவனல்ல! அவனிடம் பூனை சென்றது! தம்பீ! தம்பீ! எனக்கு ஒரு உதவி செய்! என் உடம்பில் கோடுகள் போட்டு, என்னைப் புலியாக மாற்றி விடு! நான் உன் கூடவே உன் பக்கத்தில் இருப்பேன்! ஏ அப்பா! தம்பியின் அருகில் புலியிருக்கிறது என்று எல்லோரும் பயப்படுவார்கள்! என்று வெதர்னை அற்றவனிடம் அந்தப் பூனை வேண்டுகோள்விட்டது!

அவனும், உடனே - வீட்டு ஜன்னலுக்கு பூசுவதற்கு வைத்திருந்த தார் டின்னை எடுத்து அதில் ஒரு பெரிய பிரஷை

நனைத்து அந்தத் தாரினால் பூனையின் மீது கோடுகளைப் போட்டு விட்டான்!

உடனே பூனை உலா வரக் கிளம்பி விட்டது!
என்னைப் பார் என் அழகைப் பார்!
நான்தான் புலி!
நீ அடைந்திடுக கிலி!
நான் எழுப்புவது மியா மியா சப்தமல்ல!
வானிடிந்து வீழுகின்ற புலியின் உறுமல்!
நான்தான் புலி!

நீ அடைந்திடுக கிலி!

என்று அந்தப் பூனை பாட்டு வேறு பாட ஆரம்பித்து விட்டது! வெதர்னை அற்ற அந்தப் பையனும் அந்தப் போலிப் புலியுடன் சேர்ந்து கூத்தாடினான்!

உடன்பிறப்பே, என்ன திடீரென்று பூனை கோடு போட்டுக்கொண்ட கதை? என்று கண்சிமிட்டிக் கேட்கிறாய்! காண்கிறேன்! சரி - கதையை விட்டு விடு! இதோ ஒரு செய்தியைப் பார்ப்போம்!

ராஜஸ்தான் மாநிலத்தில் நத்வாரா என்ற இடத்தில் ஸ்ரீநாத் கோயிலுக்குள் தாழ்த்தப்பட்ட மக்களை அனுமதிப்பதில்லை. சில நாட்களுக்கு முன்பு அந்தக் கோயிலுக்குள் சென்ற தாழ்த்தப்பட்ட மக்களைத் தாக்கித் துரத்தியுள்ளது அந்த ஆலய நிர்வாகம்! நிர்வாகத்துடன் சேர்ந்துகொண்டு சில பழமைவாதிகள் தாக்குதலில் ஈடுபட்டனர். இப்போது அந்தக் கோயிலுக்குள் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் தாழ்த்தப்பட்ட மக்களை அழைத்துக் கொண்டு ஆலயப் பிரவேசம் செய்தாராம். வானொலி தொலைக்காட்சியில் ஏக விளம்பரம். சென்னையில் உள்ள சுவர்களில் எல்லாம் போஸ்டர்கள்! என்ன போஸ்டர்? அன்று பெரியார் வைக்கத்தில் போராட்டம் நடத்தினார்! இன்று இவர் ராஜஸ்தானில் போராட்டம் நடத்தினார். அதனால் இவர் பெரியாரைப் போல மற்றொரு வைக்கம் வீரர் ஆகிவிட்டார் என்பது போலப் பிரச்சாரம்! அந்தக் கருத்தில் பல வண்ணப் போஸ்டர்கள்!

பெரியார் எப்போது - எந்தக் காலத்தில் - வைக்கத்தில் போராட்டம் நடத்தினார்? 1924ஆம் ஆண்டு பெரியார் அவர்கள்

போராட்டம் நடத்தி முதலில் அருவிக்குத்தி சிறைச் சாலையிலும், மீண்டும் நடந்த போராட்டத்தில் திருவாங்கூர் மத்திய சிறைச்சாலையிலும் கடுங்காவல் கைதியாக அடைக்கப்பட்டார் என்பதுதான் வரலாறு!

ஆலயங்களில் தாழ்த்தப்பட்டோர் நுழையவும் - தெருக்களில் அவர்கள் நடந்திடவும் தடை விதிக்கப்பட்டிருந்த வெள்ளைக்கார ஆட்சியிலும், சமஸ்தானாதிபதி ஆட்சியிலும் அந்தத் தடைச் சட்டத்தை உடைக்க வேண்டுமென்ற உணர்வின் அடிப்படையில் பெரியார் அவர்கள் வைக்கத்திலே போர்க்கொடி உயர்த்தினார்! சிறைப்பட்டார்! வென்றார்! வைக்கம் வீரரானார்!

மூதறிஞர் ராஜாஜி தலைமையிலே கூட தமிழ் நாட்டில் ஆலயப் பிரவேச நிகழ்ச்சிகள் நடந்ததுண்டு!

ஆலயத்தில் ஆதிதிராவிட மக்கள் நுழைவதற்கு சட்டத்தின் பாதுகாப்பு இல்லாத போது இன்னும் சொல்லப் போனால் - சட்டமே அதற்குத் தடையாக இருந்த போது - அதனை மீறி ஆலயப் பிரவேசங்கள் நடத்த வேண்டியிருந்தன!

ஆனால் இன்று நிலைமை என்ன? அரசியல் சட்டம் என்ன சொல்கிறது?

"Untouchability" is abolished and its practice in any form is forbidden. The enforcement of any disability arising out of "Untouchability" shall be an offence punishable in accordance with law"

அதாவது :-

தீண்டாமை ஒழிக்கப்படுகிறது! அது எந்த வடிவத்தில் கடைப்பிடிக்கப்பட்டாலும் தடை செய்யப்படும்! தீண்டாமை ஒழிப்புக்கு எதிரான எந்த நடவடிக்கையும் சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டிய குற்றமாகும்

நாற்பதாண்டுக்கால சுதந்திர இந்தியாவில் - அரசியல் சட்டத்தில் இப்படியொரு கடுமையான பிரிவையும் தீண்டாமைக்கு எதிராக எழுதி நிறைவேற்றி வைத்துக்கொண்டு அந்த சட்டத்தை பிரயோகிக்கக் கூடிய இடத்தில் இருக்கும் ஆளுங்கட்சியான காங்கிரசார் ஆலயப் பிரவேசம் நடத்திக்காட்டி அதனை விளம்பரம் செய்து கொள்வது வெட்கக்கேடாக இல்லையா?

ராஜஸ்தான் மாநிலத்திலே இருப்பதும் காங்கிரஸ் அரசுதானே! ஆலயத்துக்குள் தாழ்த்தப்பட்ட மக்களை அனுமதிக்க முடியாது எனக் கூறி அரசியல் சட்டத்துக்கு எதிராக நடந்து கொண்டவர்கள் மீது அந்த அரசு நடவடிக்கை எடுத்து ஆலயத்தை எல்லா மக்களுக்கும் திறந்துவிட வேண்டியதுதானே!

அரசு நடவடிக்கை எடுக்கத் தயங்கியது என்றால் - அது எந்த அரசு? காங்கிரசல்லாத அரசா? அதனால் அந்தக் காங்கிரஸ் அல்லாத அரசுக்கு எதிராக - நம்மூர் காங்கிரஸ் தலைவர் அங்கே போய் வைக்கம் வீரரைப் போலப் போராட்டம் நடத்தினாரா? இல்லையே!

ஒரு உத்தரவின் மூலம் ராஜஸ்தான் மாநிலக் காங்கிரஸ் அரசு செய்து முடிக்க வேண்டிய காரியத்துக்கு - அந்த அரசை அவ்வாறு செய்யுமாறு பணித்திருக்க வேண்டிய மத்திய காங்கிரஸ் அரசு; அவ்வாறு பணிக்காமல் அமோக விளம்பரத்துடன் ஆலயப் பிரவேச நாடகத்தை நடத்தியிருப்பது வேடிக்கையாக இருக்கிறதல்லவா?

ராஜஸ்தான் முதல்வர், மற்றும் அகில இந்தியக் காங்கிரஸ்காரர்கள் பலர் இந்த ஆலயப் பிரவேச நாடகத்தில் கலந்து கொண்டும் கூட - அந்த ஊர்வலத்தில் கண்ணுக்குத் தெரியாத இடத்தில் வட்டம் போட்டுக் காட்ட வேண்டிய பின் வரிசையில் இருந்த தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் மட்டும் இப்படி ஹீரோ ஆக காட்டப்படுவது ஏன்?

காரணம் புரிகிறதா? தமிழ்நாட்டுத் தேர்தலில் ஆதிதிராவிட மக்களின் வாக்குகளைப் பெறுவதில் காங்கிரசுக்கு இப்போது மெத்த சிரமம் ஏற்பட்டு விட்டது!

அந்த மக்களை ஏமாற்றி ஓட்டுப் பெற முடியுமா? என்ற முயற்சிகளில் ஒன்றுதான் இந்த ஆலயப் பிரவேச நாடகம்! ஹீரோ விளம்பரம்!

ஆதிதிராவிட மக்களை அவ்வளவு ஏமாளிகளாகக் கருதிக் கொண்டார்கள் பாவம்!

அந்த மக்கள் இந்தப் பண்ணைகளில் கட்டி வைத்து சவுக்கால் அடிக்கப்பட்டதை மறந்து விடுவார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள்!

தீண்டாமை ஒழிப்புக்கு எதிராகச் செயல்படுவோரை சட்டம் தண்டிக்குமென அரசியல் சாசனம் கூறுகிறது!

அரசு நடத்துவோர் அந்த சட்டத்தைப் பயன்படுத்த வில்லை!

அதற்கு மாறாக அரசுக்கட்சியினரே ஆலயப்பிரவேசக் கூத்து நடத்திக் காட்டுகிறார்கள்!

இதற்கு விளம்பரமோ - விளம்பரம்! வானொலி, தொலைக்காட்சி இரண்டும் காங்கிரஸ் பிரச்சார பீரங்கிகளாகவே மாறிச் செயல்பட முடுக்கி விடப்பட்டுள்ளன!

தென்னாப்பிரிக்காவில் கிளர்ச்சி நடந்தால் நமது டெலிவிஷன் ஒளிபரப்புகிறது!

ரங்கூனில் போராட்டம் என்றால் நமது டெலிவிஷன் ஒளிபரப்பிக் கொண்டே இருக்கும்!

லண்டன் நகரில் - எதிர்க்கட்சியினர் மறியல் ஆர்ப்பாட்டம் என்றால் நமது டெலிவிஷன் ஒளிபரப்பத் தவறாது!

ஆனால் - டெல்லியில் உழவர் பேரணி லட்சக் கணக்கில் உழவர் கூட்டம் - காங்கிரஸ் அரசுக்கு எதிராக என்றால்; அதை நமது டெலிவிஷன் கண்டு கொள்ளாது!

காலை முதல் மாலை வரை ஏன் நள்ளிரவிலும் கூட - டெலிவிஷனைத் திறந்தால் ராஜீவ்! ராஜீவ்! காங்கிரஸ்! காங்கிரஸ்!

இப்படியொரு ஆலயப்பிரவேச நாடகத்தை நமது டெலிவிஷன் விடுமா என்ன?

எப்படியோ தொலைந்து போகட்டும் - அதற்காக தந்தை பெரியார் நடத்திய வைக்கம் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி; காங்கிரசார் போஸ்டர் ஒட்டுகிறார்கள் என்றால் தமிழ் நாட்டு மக்களின் அரசியல் விழிப்புணர்வை எந்த அளவு குறைத்து மதிப்பிடுகிறார்கள் என்றுதானே எண்ண வேண்டியிருக்கிறது!

என் செய்வது; பூனைகள் கோடு போட்டுக் கொண்டதாலேயே புலிகளாகி விட்டதாகக் கூறி ஏமாற்றும் காலமாகி விட்டது!

அன்புடன்

மு.க.

03-11-1988

1599. தொடங்கிடுக தொய்வில்லாப் பணி!

உடன்பிறப்பே,

தேர்தல் வந்துவிடும் என்கிறார்கள். தேவையில்லாமல் ஆளுநர் ஆட்சியை மேலும் ஆறுமாத காலம் நீட்டித்துக் கொண்ட பிறகும் தேர்தல் வருமா? வராதா? என்ற ஐயப்பாடு மக்களுக்கு ஏற்படுகிறதென்றால் - அது நமது நாட்டில் காங்கிரஸ் ஆட்சியில் ஜனநாயகம் எவ்வாறு செயல்படுகிறது என்ற லட்சணத்தை(?)யே உலகத்திற்குக் காட்டுகிறது!

காங்கிரசின் அணி இன்னமும் எதுவென ஸ்திரப்(?)படாத காரணத்தால் இப்படியொரு குழப்பம் என்கிறபோது - தேர்தல் என்பது தேர்தல் கமிஷனின் முடிவல்ல; காங்கிரஸ் ஆட்சியாளரான திரு. ராஜீவ் காந்தியின் முடிவைப் பொறுத்ததுதான் என்பது தெளிவாக்கப்பட்டுவிட்ட உண்மையாகும்.

தேர்தல் கமிஷன் என்பதெல்லாம் வெறுமனே சம்பிர தாயத்துக்குத்தானே தவிர வேல்ல என்பதும் வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டுவிட்ட பரம ரகசியமாகும் (?)

தேர்தல், ஜனவரி திங்களில் வருமென்ற நம்பிக்கையுடனேயே நம்முடைய கழக உடன்பிறப்புகள் தொடர் பணிகளை ஆற்றிக் கொண்டிருக்க வேண்டுமென மீண்டும் ஒருமுறை இக்கடித வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

பூத் கமிட்டிகள் என்றும் லோன் மேளாக்கள் என்றும் காங்கிரசார் கடும் வேகத்தில் கோடி கோடியாகச் செலவிட்டு தேர்தல் பணிகளை கிராமப் பகுதிகளில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நாற்பதாண்டுக் காலச் சுதந்திர இந்தியாவின் சுகஜோதி இதோ குடிசைக்குள் தெரிகிறது பாரீர் என்று பிரதமர் ராஜீவ் காந்தி ஒவ்வொரு தடவைக்கும் அரசுப் பணத்தில் ஏமு கோடி ரூபாய் வரையில் செலவழித்து ஐந்து தடவை தேர்தல் சுற்றுலாவைத் தமிழகத்தில் மேற்கொண்டு, குடிசைகளுக்குள் சர்ப்ரைஸ் விசிட்

செய்கிறார்! கோயில்களில் தொழுகிறார்! திருச்செந்தூர் கோயிலில் அவர் தொழுத அழகுதான் நாட்டுக்கே தெரியுமே!

மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் எந்த அரசாவது வந்து பார்த்துக் கொள்ளட்டும் - நமக்கென்ன வந்தது என்று ஆளுநர் அலெக்சாண்டர் அவர்கள், ராஜீவ் காந்தியை வைத்து அடிக்கற்களாக நாட்டி வருகிறார்! அவற்றுக்கோர் விழா! அந்த விழாக்களில் பிரதமரும் ஆளுநரும் இணைந்து எதிர்க்கட்சிகளுக்கு அர்ச்சனை! காங்கிரசுக்கு தேர்தல் பிரச்சாரம்! எல்லாம் அரசுப் பணத்தில்! மக்கள் வரிப் பணத்தில்!

சில கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக அறிவித்து விடுவது - அந்த அறிவிப்பு சட்டப்படி செல்லுமா செல்லாதா என்று கவலைப்படுவதில்லை - அரசியல் சட்டத்தைத் திருத்திச் செய்திட வேண்டிய அறிவிப்புகளை, அப்படித் திருத்தாமலே அறிவிப்பது - அதையொட்டித் தேர்தலை முடித்துக் கொள்வது - அதன்பிறகு அந்த அறிவிப்புகள் கோர்ட்டில் அடிபட்டுவிட்டால் நாங்கள் என்ன செய்வது? என்று கை விரித்து விடுவது! இப்படியொரு ஏமாற்று நாடகத்துக்கும் ஒத்திகை பார்க்கப்படுவதாகக் கேள்வி! அதாவது எப்பாடுபட்டாவது தமிழகத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றே தீர வேண்டும் - என்பதிலே எந்தவித மோசடிக்கும் அவர்கள் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள்!

உடன்பிறப்பே, நாம் மிக விழிப்புடன் இருந்து காங்கிரசின் மாய் மாலங்களை நாடு முழுதும் - பட்டினக் கரைகள், பேரூர், சிற்றூர், பட்டி தொட்டிகள் எங்கணும் எடுத்தியம்பி மக்களை எச்சரிக்கையுடன் செயல்படுவதற்கு கேட்டுக் கொள்ளும் பணிகளை இன்று முதலாவது வகுத்துக்கொள்ள வேண்டாமா?

காங்கிரசார் தேர்தல்களத்தில் கொட்டிடும் பணக்குவியலில் முன்னே நாம் பணத்தைப் பொறுத்தவரையில் எம்மாத்திரம் என்பது நீயும் நானும் அறியாததல்ல!

தமிழ் நாட்டுத் தேர்தலுக்கென்று ஆயிரம் கோடி ரூபாய் தனியாக எடுத்து வைத்துவிட்டது காங்கிரஸ் என்று டெல்லி வட்டாரத்திலே பேசப்படுகிறது!

அண்ணா அறிவாலய நிதி - தேர்தல் நிதியென ஒரு கோடி ரூபாய், இரண்டு கோடி ரூபாய் - நாம் திரட்டியபோதே; நம்மை நாம் ஒருமுறை ஒரு சுற்று சுற்றிப் பார்த்துக் கொண்டு நாமா இவ்வளவு

திரட்டினோம்? என்று நம்மைப் பற்றியே ஆச்சரியப்பட்டுக் கொண்டவர்கள் நாம்!

வரும் தேர்தலில் நம்மிடமுள்ள நிதி - காங்கிரசோடும் வேறுசில மாற்று அணிகளோடும் ஒப்பிடும் போது கடலில் கரைத்திடும் பெருங்காயத்தைப் போலத்தான்!

என்றும் நான் நம்பியிருப்பது பணத்தையல்லவே; உன் போன்ற உடன்பிறப்புகளின் பலத்தையல்லவோ?

அதனால்தான் மீண்டும் இந்த வேண்டுகோள்! பட்டி தொட்டிகள், குக்கிராமங்கள், நகரங்களில் உள்ள வார்டுகள், தெருக்கள் என்று அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் உன் பணி நடைபெற்றுக் கொண்டிருக்க வேண்டும். மக்களுக்கு விளக்கங்கள் வழங்கப்பட்டுக் கொண்டேயிருக்க வேண்டும்.

எத்தனை கூட்டங்கள் நடைபெற்றன என்ற கணக்கைவிட, அந்தக் கூட்டங்கள் எந்தெந்த இடங்களில் நடைபெற்றன என்ற குறிப்புகளே முக்கியம்!

நமது கழகச் சொற்பொழிவாளர்களில் கோவை மணியன் போன்றவர்கள் அன்று முதல் இன்றுவரையில் மாதந்தோறும் இருபது சிற்றூர்களிலாவது நமது கழகப் பிரச்சாரத்தில் ஈடுபடுகிறார்கள். எல்லோருடைய பெயரையும் குறிப்பிடக் கடிதத்தில் இடமில்லையே தவிர - அவர்கள் அனைவரும் என் கவனத்தில் இருப்பவர்களே! ஒரு சிலர்தான் அவ்வப்போது தாங்கள் சென்று உரையாற்றி வந்த இடங்களைத் தொகுத்து தலைமைக்கு விபரம் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்!

இதோ - 16.10.88 முதல் 31.10.88 வரையில் 15 நாட்களில் தம்பி கோபால்சாமி எம்.பி. நெல்லை கட்டபொம்மன் மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம், காமராசர் மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்களில் ஐநூறுக்கு மேற்பட்ட கிராமங்களில் சுற்றிச் சுழன்று கொடிகளை ஏற்றிக் கொள்கை முழக்கம் செய்திருக்கிறார்.

17.10.88 ஒரே நாளில் மட்டும் வன்னிக்கோனேந்தல், மேலாரிக்குடி, கூவாச்சிபட்டி, மூவிருந்தாளி, கண்டங்குறிச்சி, பன்னீர் ஊற்று, மேல இலந்தக்குளம், சொக்கநாச்சியார்புரம், மூர்த்தீஸ்வரம், வெங்கடாசலபுரம், தெற்கு அச்சம்பட்டி, வடக்கு அச்சம்பட்டி, கருப்பனூத்து, வெள்ளப்பனேரி, மடத்துப்பட்டி,

பனவிடலைசத்திரம், சொக்கலிங்கபுரம், கீழ நீலிதநல்லூர், மேலநீலிதநல்லூர், இலந்தக்குளம், கருத்தனூர், குருக்கன்பட்டி - என இருபதுக்கு மேற்பட்ட ஊர்கள்! இப்படி ஒவ்வொரு நாளும்! ஆக 15 நாட்கள்! எல்லா நாட்களுக்குமான ஊர்ப்பட்டியல் என்னிடமிருக்கிறது - இடமிருக்காது என்பதால் எழுதிடவில்லை! இது போன்ற பணிகளை இதயத்தில் எழுதி வைத்துக் கொண்டிருப்பவன் நான் என்பதை நீ அறிவாய்!

இப்படி நமது கழகத்தின் சொற்பொழிவாளர்களை எல்லாப் பகுதிகளிலும் நமது மாவட்டச் செயலாளர்கள், ஒன்றியச் செயலாளர்கள் அழைத்துச் சென்று பயன்படுத்திப் பணிபுரிவர் என்றே நம்புகிறேன்! திருச்சி மாவட்டச் செயலாளர் செல்வராஜும் இது போன்ற நீண்ட பட்டியல் ஒன்றை என்னிடம் நேரில் வந்து கொடுத்து, அவர் ஏற்பாடு செய்ய கூட்ட நிகழ்ச்சிகள் பற்றிய விபரங்களைக் கூறினார்.

ஓரிருவர் பெயர்களை மட்டுமே இக்கடிதத்தில் குறித்திருப்பதால் - மற்ற மாவட்டங்களில் இப்பணி நடைபெறவில்லையோ என எண்ணிடத் தேவையில்லை! இன்னும் விரைவாக - விரிவாக - ஓய்வின்றி நடைபெற்றாக வேண்டும் என்று கேட்டுக் கொள்வதற்காகவே இதனை எழுதுகிறேன்!

பத்தே வீடுகள் உள்ள பட்டிதொட்டிப் பகுதியாயினும் அங்கு நமது கழகக் கொடி பறந்திட வேண்டும்!

கழகக் கொள்கை விளக்கப்பட வேண்டும்!

கழகச் செயலகம் பணிபுரிந்திட வேண்டும்! அதற்கான திட்டங்களை வகுத்துக் கொண்டு செயல்வீரர்களாம் நமது மாவட்டச் செயலாளர்களும், ஒன்றிய, நகர, கிளை அமைப்புச் செயலாளர்களும், அணிகள், மன்றங்களின் நிர்வாகிகளும், கழக முன்னணியினரும் சொற்பொழிவாளர்களும், இசை நிகழ்ச்சியாளர்களும், கலை நிகழ்ச்சியாளர்களும் இணைந்து நின்று இன்றே தொடங்கிடுக, தொய்வில்லாப் பணி!

அன்புடன்

மு.க.

05-11-1988

1600. சிந்திக்கிறாயா? நிந்திக்கிறாயா?

உடன்பிறப்பே,

(76-ல் எழுதியது! இன்றைக்கும் பொருந்தும் என்பதால் மீண்டும் அதே கடிதம்!)

இன்று நான் எழுதும் மடலில் உனக்காகவும் சில விஷயங்கள்! 1961ஆம் ஆண்டில் நம்மிடம் இருந்து பிரிந்து சென்று வேறு முகாம்களில் இருந்தாலும் நம்மீது வெறுப்பு நெருப்பைக் கொட்டாத ஒரு சில உடன்பிறப்புகளுக்காகவும் சில விஷயங்கள்! 1972ஆம் ஆண்டிலும் அதனைத் தொடர்ந்து வெளியேறி வேறிடம் சென்று வேதனை வடிவங்களாக, மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவிக்கின்ற ஒரு சில உடன்பிறப்புகளுக்காகவும் சில விஷயங்கள்! அரசியல் முகாம்கள் வெவ்வேறாக இருப்பினும் இலட்சிய முழக்கத்தை உதடுவரையில் கொண்டு வர முடியாமல் உள்ளத்தில் பதிய வைத்துக் கொண்டிருக்கும் அந்த உடன்பிறப்புகளுக்கு நான் எழுதும் மொழி புரியும்!

அவர்களில் சிலர் என்னை ஆசானாகக் கொண்டவர்கள்! என்னோடு அமர்ந்து நாள்தோறும் உணவு அருந்தியவர்கள்! என் உள்ளமே அவர்களுக்கு இல்லமாக இருந்தது!

என்னைக் காணாவிட்டால் அவர்களுக்கு உறக்கம் வராது - அவர்களைக் கண்டு விட்டால் எனக்கும் இதயம் பூரிக்கும்! நான் எழுதுவதை மந்திரம் போல் மனப்பாடம் செய்தவர்கள் அவர்கள்! நான் எழுத, பேச, உடனிருந்து ஊக்கம் கொடுத்தவர்கள் அவர்கள். நான் காட்டிய அன்புக்கு அவர்கள் தங்களை என்னிடம் தந்திருந்தார்கள். நானோ அவர்களின் கொள்கைப் பற்றுக்கு தலை வணங்கி அவர்களை நேசித்தேன்.

கடந்த காலத்தில் அவர்கள் பல முனைகளில் சிதறி விட்டார்கள் என்றாலும் அவர்கள் எல்லோருமே அரசியலில்

தொழில் நடத்த வந்தவர்கள் அல்ல! அழுத்தமான கொள்கைப் பிடிப்பு கொண்டவர்களாகத்தானிருந்தார்கள்.

தப்பி ஓடும்போது நாடகமேடை ஒப்பனை அறைக்குள் நுழைந்தவன், அங்குள்ள ஏதோ ஒரு ஜிகினா உடையை அவசர அவசரமாக மாட்டிக் கொண்டு, தர்பார் காட்சியிலே போய் நிற்பதுபோல் இங்கிருந்து சென்ற சிலர் ஆகியிருக்கக் கூடுமேயல்லாது - அவர்கள் விரும்பி ஏற்றுக்கொண்ட பாத்திரமல்ல அது!

சந்தர்ப்பங்களின் கட்டாயத்தால் ஏற்பட்ட நிலைமை அது! அதில் அவர்களுக்கு நிம்மதி இல்லை. அது புரிகிறது எனக்குத் தெளிவாக! ஏனென்றால், அவர்களை முழுக்க முழுக்க அறிந்தவனல்லவா நான்!

சில நேரங்களில் அவர்கள் எடுத்த முடிவுக்கு என் சூழ்நிலை காரணமாக இருந்திருக்கலாம் அல்லது அவர்களின் அவசரம் காரணமாக இருந்திருக்கலாம்!

எப்படியோ நான் சில மணிகளை இழந்திருக்கிறேன்.

அவர்களும் என்னைப் பிரிந்திருக்கிறார்கள்!

இங்கு கிரீடத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்த மணிகள், இப்போது எங்கோ ஒளி மங்கிக் கிடக்கின்றன. பதவிப்பொறுப்பு என்று ஒன்று வராமல் இருந்திருந்தால், அவைகள் நமது கொள்கையெனும் உடைவாளின் கைப்பிடியில் ஜொலித்துக் கொண்டிருக்கும் மணிகள்தான்!

பதவிப் பொறுப்புக்கள் வரும் போது, தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் உருவாகின்றன.

என்றைக்கும் எந்த நிலையிலும் நம்மோடு இருக்கக் கூடியவர்களுக்குச் சொல்லிக் கொள்ளலாம், என்ற திட நம்பிக்கையில், சற்று தொலைவில் இருப்பவர்களை அருகே அழைக்க வேண்டிவருகிறது. இத்தனை நெருங்கியிருந்தும் நம் நெஞ்சத்தை உணர்ந்து கொள்ளத் தவறிய காரணத்தால் சிலருக்கு வேதனை! அதனால் விலகல்! அதன்பிறகு விலகலுக்குக் காரண காரிய விளக்கங்கள்!

மியூசிக் அகாடமியில் தெலுங்கு கீர்த்தனங்கள் - தமிழ் இசைச் சங்கத்தில் தமிழ்ப் பாடல்கள் - என்று வகுத்துக்கொண்டு

இரண்டு இடத்துக்கும் தகுந்தவாறு நடந்துகொள்கிற சில சங்கீத வித்வான்களைப் போல, அரசியல் கட்சி மேடைகளில் எல்லாவிதமான கட்சிக் கொள்கைகளையும் பேசுகிற பாடுகிற, பலசரக்கு அரசியல் வியாபாரிகளைப் பற்றி நான் என்றைக்கும் கவலை கொண்டவனல்ல!

இன்று நான் கேட்பதெல்லாம் எம்மைவிட்டு நெடுந்தூரம் சென்று விட்ட உடன்பிறப்பே! அல்லது எம்மிடமிருந்து விலகி சற்று தொலைவில் நின்றுகொண்டு, யாரும் காணாத நேரத்தில் இந்த இடத்தை நோக்கியவாறு கண்களைக் குளமாக்கிக் கொள்கிற உடன்பிறப்பே! உன்னைத்தான் கேட்கிறேன் - இப்போது நீ, எங்கு போய்க்கொண்டிருக்கிறாய், புரிகிறதா?

இங்கிருக்கும் என் இனிய உடன்பிறப்பே, நான் உன்னை விட்டுவிட்டு வேறு யாருடனோ பேசுகிறேன் என்று நினைத்துக் கோபம் கொள்ளாதே!

உரிமையுடைய சில உடன்பிறப்புகளைத்தான் உரக்கக் கூவியழைத்துப் பேசுகிறேன். அவர்கள் எங்கிருந்தாலும் அவர்களின் காதுகள் என் பக்கம்தான் இருக்கின்றன.

நான் எழுதக்கூடிய அளவுக்கு வசதியாகத்தான் அவர்தம் இதய ஏடுகள் என்னை நோக்கிக் கொண்டிருக்கின்றன. எனவே, அவர்களோடு பேசிட, எனக்கு அனுமதி கொடு! ஆமாம். கடித வாயிலாகத்தான்!

யாரையோ கடிந்துகொண்டு என்னிடமிருந்து சென்றவர்களே! இப்போது எங்கு சென்று கொண்டிருக்கிறீர்கள்? இல்லை! இல்லை!! எங்கே அழைத்துக் கொண்டு போகப்படுகிறீர்கள்?

தியாகத்தின் எழில் வடிவாய் எதிர் நின்றீர் - இன்று தேவைகளின் கட்டாயத்தால் தேய்ந்திடுதல் நியாயந்தானா?

கொள்கைக் குன்றின் விடிவிளக்காய் கொழுந்துவிட்டு எரிந்ததை மறக்கவில்லை - இன்றோ கொள்கைக்குக் குழிதோண்டும் பொல்லாச் செயல் புரிகின்றனர், எப்படித்தான் ஒப்புகின்றீர்?

செல்லக் கோபத்தால் சென்றுவிட்டீர் என்றாலும் உள்ளக் கோயில் கொண்ட கொள்கைத் தெய்வத்தை, வாழ்வு

மாளிகையின் வாசல் படிக்கட்டாய் மாற்ற மாட்டீர் என்ற நம்பிக்கை, உங்களில் சிலர்பால் நான் வைத்திருந்ததுண்டு - அதனால்தான் எங்கிருந்தாலும் வாழ்க என்று வாழ்த்திக் கொண்டிருந்ததுண்டு. கொள்கையை வாழவைக்க வாதாடச் சிலர் எங்கிருந்தால் என்ன என்ற நினைப்போடு!

அதற்கும் ஊனம் விளைகிறதே, ஒதுங்கிச் சென்ற உடன்பிறப்பே, நீ உணரவில்லையா, நமது கொள்கையின் உயிர் கொஞ்சம் கொஞ்சமாகப் போக்கப்படுவதை!

நீ உணருகிறாய் என்பதை நானறிகிறேன். இந்த ரகசியம் எனக்கு எப்படித் தெரிந்தது என்ற ஐயம் எழுந்து, உனக்குச் சங்கடம் விளையக் கூடும்! அந்தச் சங்கடத்தைச் சமாளிக்க நீ என்மீது சரமாரியாகக் கண்டனங்கள் பொழிவாய்!

பரவாயில்லை, உன் அம்பறாத் தூணியில் கணைகள் இருக்கும்வரையில் அவைகளைப் பயன்படுத்து!

அவைகளைத் தாங்கத்தான் என் இதயத்தைக் கவசமாக்கிக் கொண்டிருக்கிறேனே!

நீ என் தோளிலே அமர்ந்து தலையிலே குட்டியிருக்கிறாய்! என் மடியிலே அமர்ந்து மலஜலம்கூட கழித்திருக்கிறாய்! இப்போது நீ என் முகத்தில் துப்புவதையும் பன்னீர் தெளிப்பதாகத்தான் நான் கருதிக் கொள்வேன்!

ஒன்றை மறவாதே! இதெல்லாம் நான் எல்லோருக்காகவும் சொல்லவில்லை. என்னிடம் விட்டகுறை, தொட்டகுறை, எள்ளளவு அன்பு வைத்திருக்கிற உடன்பிறப்புகள் சில பேருக்குத்தான் சொல்கிறேன்!

நெருப்பிலே நிற்கும் கழகத்தின் சார்பில், நீலக் கடலோரத்தில் நிலவொளியில் கிளிஞ்சல் பொறுக்கப் போய் கைமுத்தை கடலில் தவறவிட்டு விட்டு தேடிக்கொண்டிருக்கும் உன்னைப் பார்த்து இதையெல்லாம் சொல்வது உனக்கு வேடிக்கையாகக்கூட இருக்கும்.

நெருப்பிலே கிடப்பதெல்லாம் கருகி விடுவதில்லை, சுடச்சுட ஒளிரும் தங்கம் நெருப்பிலிருந்துதானே வெளி வருகிறது. கருகிச் சாம்பலாகவா போய் விடுகிறது!

நெருப்பில் எல்லா சரீரங்களும் அழியக்கூடியவைதான்! ஆனால் அந்த நெருப்பில் எழுதப்பட்ட சரித்திரங்கள் சாகாவரம் பெற்றவையல்லவா? அதனால்தான் உள்ளமுடைந்து நிற்கும் உன்னை சிந்திக்கச் சொல்கிறேன்; நீ எங்கே போய்க்கொண்டிருக்கிறாய்?

எண்ணிப்பார், அதுபோதும் எனக்கு!

இந்தச் சிந்தனையை உன்னுடனிருக்கும் உடன்பிறப்புகளின் சார்பாக உன்பால் கிளறிவிடுகிறேன்!

சிந்திப்பதோ, அல்லது என்னை வழக்கம்போல் நிந்திப்பதோ - உன் பொறுப்பு!

அன்புடன்

மு.க.

11-11-1988

1601. வாணியம்பாடிக்கும் வேலூருக்கும் இடையில்!

உடன்பிறப்பே,

ஒரு தடவைக்கு ஏழு முதல் எட்டு கோடி ரூபாய் வரையில் செலவு!

எதற்கு?
தமிழ்நாட்டில் பிரதமர் ராஜீவ் சுற்றுப்பயணத்திற்கு!
இப்படி எத்தனை தடவை? இது வரையில்?
இது ஐந்தாவது தடவை! இன்னும் எத்தனை தடவையோ?

ஆகமொத்தம் அரசாங்க கஜானாவிலிருந்து இந்தச் சுற்றுப்பயணத்துக்காக காலி செய்யப்பட்ட தொகை நாற்பது கோடி ரூபாய்க்கு மேல்!

நடந்த நாலைந்து மாதங்களில்!

நாற்பது கோடி காலி!
அரசாங்க கஜானாப் பணம் என்றால் யார் வீட்டுப் பணம்?

மக்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் நாட்டுக்கான நலவாழ்வுத் திட்டங்களை எதிர்பார்த்து வரியாக வழங்கிய பணம்!

இப்போது அது எதற்காக செலவழிக்கப்படுகிறது?
ராஜீவ் சோனியா தம்பதியரின் தமிழகப் பவனிக்காக!
ஏன் இந்தப் பவனி?
இந்தியாவில் எந்த மாநிலத்

திலும் இல்லாத பவனி?
தமிழ்நாட்டில் மீது மட்டும்
அப்படியென்ன பிரதமருக்கு
இவ்வளவு திடீர் அக்கறை?

தேர்தலுக்காக!
காங்கிரஸ் கட்சியின்
தேர்தல் பிரச்சாரத்துக்காக!

ஒரு தடவைக்கு எட்டு கோடி ரூபாய் செலவழித்து கட்சிக்காக தேர்தல் பிரச்சாரம் நடத்தவும் - எதிர்க்கட்சிகளை ஏசிப் பேசவும் - ஒரு பிரதமர் கொஞ்சம் கூட வெட்கப்பட வில்லையே ஏன்?

தமிழன் சொரணை கெட்டவன் என்று ராஜீவ்காந்தி நினைத்துக் கொண்டிருக்கிறார்! அதனால்தான் அவர் வெட்கப்படவில்லை!

தேர்தல் எப்போது வரும்!
எப்போதோ வந்து நடந்து முடிந்திருக்க வேண்டும்!
அப்படியானால் ஏன் இன்னும் தேர்தல் நடக்கவில்லை?

அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற ஜார்ஜ் புஷ் அவர்களுக்கு நமது இந்திய ஜனாதிபதி ஆர்.வி. அவர்கள் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் இந்தியாவும் அமெரிக்காவும் மிகப்பெரிய ஜனநாயக நாடுகள் என்று அறிவித்திருக்கிறாரே, அதைப் படிக்கவில்லையா?

படித்தோம்!

படித்த பிறகுமா தமிழ்நாட்டில் ஏன் குறித்த காலத்தில் தேர்தல் நடக்கவில்லை என்று கேட்பது?

அமெரிக்காவுடன் ஒப்பிட்டு ஆர்.வி. அவர்கள் பாராட்டியுள்ள இந்த ஜனநாயக (?) நாட்டில் காங்கிரஸ் கட்சியானது தனது பலத்தை வளர்த்துக் கொள்ளும் வரையில் அல்லது தோதான கூட்டணி தெகையும் வரையில் தேர்தல் தேதியை அறிவிக்காது! இதுதான் காங்கிரஸ் ஜனநாயகம்!

யாரோடு கூட்டு சேரக்கூடும் எனக் கருதுகிறீர்கள்?

இந்தத் தடவை ராஜீவின் சுற்றுப் பயணத்தில் வாணியம்பாடி வரையில் அ.தி.மு.க.வின் இரண்டு அணிகளுடனும் கூட்டு இல்லை என்று தெரிந்தது!

அதை எப்படி யூகிக்க முடிந்தது?

வாணியம்பாடியில் ராஜீவ் பேசும் போது கடந்த இருபதாண்டுக் காலத்தில் தமிழகம் இருண்டு போய்விட்டது

என அண்ணா, கருணாநிதி, எம்.ஜி.ஆர். ஆகிய மூவர் ஆட்சியையும் வேகமாகத் தாக்கினார்!

வாணியம்பாடிக்கு பிறகு என்ன நடந்தது?

வாணியம்பாடியிலிருந்து வேலூருக்கு வருவதற்குள் அ.தி.மு.க. அணிகளில் ஒரு அணியினர் காங்கிரசுடன் கூட்டு சேர ஓரளவு தலையசைத்திருப்பதாக ராஜீவுக்குத் தகவல் அனுப்பப்பட்டது! தகவல் அனுப்பியது கவர்னர் மாளிகையென்றும் கேள்வி!

அப்படியொரு தகவல் அனுப்பப்பட்டதாக எதைக்கொண்டு அனுமானிப்பது?

அனுமானிப்பது மிகவும் சுலபம்! வாணியம்பாடியில் இருபது ஆண்டு இருண்ட காலம் என்று வர்ணித்த ராஜீவ் காந்தி, வேலூர் கூட்டத்தில் அப்படியே பிளேட்டைத் திருப்பி விட்டாரே!

என்ன திருப்பினார்?

அண்ணா மறைந்ததற்குப் பிறகும், எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வருவதற்கு முன்பும் கருணாநிதியின் ஏழாண்டு ஆட்சிதான் இருண்ட காலம் என்று ஒரேயடியாகப் பேச்சைத் திருப்பிவிட்டாரே!

ஓகோ! அப்படியென்றால் வாணியம்பாடிக்கும் வேலூருக்கும் இடையில் ஏதோ தகவல் வந்திருக்கத்தான் வேண்டும்!

ஏழாண்டுக் காலக் கருணாநிதி ஆட்சியில் பெண்களின் கற்புக்குப் பாதுகாப்பு இல்லையென்றும் ஒவ்வொரு குடும்பமும் அச்சத்துடன் வாழ்ந்தது என்றும் ராஜீவ் காந்தி வேலூரில் பேசியிருக்கிறாரே?

இந்திய ராணுவத்தை தமிழ் ஈழத்துக்கு அனுப்பி தமிழச்சிகளின் கற்பைச் சூறையாடச் செய்தவர், இன்னமும் அந்தப் பணிக்கு இந்திய ராணுவத்தை ஈழத்தில் முடுக்கி விட்டிருப்பவர் - இந்திரா கொல்லப்பட்ட போது டெல்லியில் ஐயாயிரம் சீக்கியர்களையும் சீக்கியப் பெண்களையும் பயங்கர அராஜகத்துக்கு ஆளாக்கியதை நியாயப்படுத்தி வாதிட்டவர் இதுவும் பேசுவார்! இதற்கு மேலும் பேசுவார்!

இருபது ஆண்டுக் காலம் தமிழ் நாட்டில் இருண்ட ஆட்சி என்று இனிமேல் ராஜீவ் காந்தி பேச மாட்டார் - இல்லையா?

அதை எப்படிச் சொல்ல முடியும்? வாணியம்பாடிக்கும் வேலூருக்கும் இடையே வந்த தகவல் உறுதிப்பட்டு - அ.தி.மு.க. அணிகளில் ஒன்றுடன் ஏற்படும் உடன்பாட்டைப் பொறுத்தது அது!

பொதுவாக ராஜீவின் பேச்சு எப்படியிருக்கிறது?

நாடாளும் ஒரு பிரதமரின் பேச்சைப் போல இல்லை! ஒரு நாலாந்தர நரகல் நடைப்பேச்சாளர் பாணி போல இருக்கிறது!

அன்புடன்

மு.க.

12-11-1988

குறிப்பு : இந்தக் கடிதத்துடன் இணைத்துள்ள படத்தைப் பற்றி ராஜீவ் காந்திக்குத் தெரியாது. அப்போது அவர் பைலட் ஆக இருந்தார்.

1602. தேசபக்தியோ; தேசபக்தி!

உடன்பிறப்பே,

ஈ மொய்ப்பது போல தீவுக்கூட்டங்கள்! பெயர் மாலத் தீவு! கயூம் என்பவர் அந்தத் தீவின் அதிபர்! மொத்த மக்கள் தொகை இரண்டு இலட்சம் பேருக்கும் குறைவு! அதாவது தமிழகத்தில் ஒரு சட்டமன்றத் தொகுதியின் வாக்காளர்களின் எண்ணிக்கை அளவு! சட்டமன்றத் தொகுதியொன்றின் மொத்த மக்கள் தொகை, வாக்காளர்கள் எண்ணிக்கையை விட அதிகமிருக்கும்!

இரண்டு லட்சம் மக்களுக்கும் குறைவான ஜனத்தொகை கொண்ட அந்த நாட்டை நமது பிரதமர் ராஜீவ் காந்தி மீட்டு விட்டாராம்! யாரிடமிருந்து? கயூமுக்கு எதிராக நுழைந்த கலகக்காரர்களிடமிருந்து!

மாலத்தீவை மீட்ட மாவீரரே! வருக! என்று ஜூலியஸ் சீசர், அலெக்சாண்டர், போன்றவர்களுக்கு அந்நாட்டு மக்கள் அளித்த வரவேற்பைப் போல - இவருக்கு தமிழ்நாட்டில் வரவேற்பு!

மாம்பலம் மன்னாரு என்ற ஒருவர்! மாம்பழக்கடைக்காரர்! தமாஷாகக் கேட்டாரோ; அல்லது தெரியாமல் கேட்டாரோ; புரியவில்லை!

ஏம்பா! மாலத்தீவை நம்ப ராஜீவ் காந்தி மீட்டு விட்டாராமே! அது எதுப்பா? இவரோட பாட்டனார் நேரு காலத்திலே சீனநாடு, இந்தியாவிலிருந்து கைப்பற்றிக்கொண்ட பகுதியா? அல்லது பாகிஸ்தான் ஆக்ரமித்த பகுதியா? அதையா நமது ராஜீவ் காந்தி திரும்ப மீட்டுவிட்டார்?

பலஆயிரம் சதுரமைல்கள் இந்தியப் பகுதியைப் பறிகொடுத்து விட்டுள்ள பரிதாபகரமான நிலையில், ஒரு பஞ்சாயத்து யூனியன் ஆபீசில் நடைபெற்ற கலவரத்தைப் போன்ற ஒரு நிகழ்ச்சியை

அடக்குவதற்கு போலீசை அனுப்புவதைப் போல ராணுவத்தை அனுப்பி - அதற்கு இன்னமும் தொலைக்காட்சியில் விளம்பரம் செய்து கொண்டு, வீராதி வீரர்! சூராதி சூரர்! ரணரங்க மார்த்தாண்டர்! மாவீரர்! எனப் புகழாரங்களைச் சூட்டிக் கொள்வதைப் பார்த்து, சிரிக்கத்தான் தோன்றுகிறது!

முஸ்லிம் நாடாம் அது! அதைக் காப்பாற்றி விட்டாராம்! முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் பெற அதை அழுத்தி அழுத்திப் பேசுகிறார்!

நட்புநாடு - அதனால் கலகத்தை அடக்கத் துணைபுரிந்தோம் என்றால் சரி! முஸ்லிம் நாடு - அதனால் உதவிக்குச் சென்றோம் என்றால் - பாகிஸ்தான் முஸ்லிம் நாடல்லவா? என்று யாராவது கேட்டால் அதற்கு ராஜீவின் பதில் என்ன?

இந்திய ராணுவத்தை பாராட்ட வேண்டாமா? பாராட்டாவிட்டால் அது தேச விரோதமல்லவா? ராஜீவ் கேட்கிறார்! இந்திய ராணுவத்தின் திறமையைப் பாராட்ட வேண்டிய நேரத்தில் எல்லாம் பாராட்டியிருக்கிறோம்! அது இந்திய நாட்டுக் குடிமகனின் கடமை! காரணம் இந்திய ராணுவத்தில் இருப்பவனும் இந்தியக் குடிமகனே! போலீசில் இருப்பவன் இந்தியக் குடிமகன் என்பதற்காக; கேடுபயக்கும் செயல்களில் ஈடுபட்டால் அவனைக் கண்டிப்பது எப்படி தேச விரோதமாகாதோ - அதைப் போலத்தான் இந்திய ராணுவத்தில் உள்ள வீரன் மனித நேயத்திற்கு முரணாக நடந்து கொண்டால் கண்டிப்பதும் தேச விரோதமாகாது!

தமிழ் ஈழத்தில் இந்திய ராணுவத்தினர் புரிந்த கொடுஞ் செயல்களை, அனைத்துலக மனித உரிமைக் கழகத்திற்கு ஈழத் தமிழர்கள் பட்டியல் போட்டே தேதி வாரியாகக் கொடுத்திருக்கிறார்கள். உலக நாடுகளில் உள்ள ஏடுகள் அனைத்தும் தமிழ் ஈழத்தில் இந்திய ராணுவத்தினர் நடத்திய அராஜகங்களை விவரித்திருக்கின்றன.

மாநிலங்களவையில் இதனைச் சுட்டிக்காட்டிப் பேசிய தம்பி கோபால்சாமியை தேச பக்தி உள்ளவரா என்று ராஜீவ் காந்தி கேட்கிறார்!

தேசபக்தியை இந்திரா காங்கிரசார் மட்டுமே மொத்தக் குத்தகைக்கு எடுத்துள்ளனரா?

தி.மு.க. தேசபக்தியற்ற தேச விரோதமான காரியம் எதைச் செய்தது?

தேசப் பாதுகாப்புக்கான போர்த் தளவாடங்கள் வாங்குவதில் ஊழல் நடத்தலாமா? என்று கேட்பது தேசபக்தியல்ல - தேச விரோதம்! என்று ராஜீவ் காந்தி அவர்கள் புதிய அகராதி ஏதாவது தயாரிக்கிறாரா?

தேசபக்தி என்பது 1967ல் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு - தேய்ந்து, கரைந்து, மறைந்து போய்விட்டது என்று பேசுகிற ராஜீவ் காந்தி அவர்கள், 1967க்கு முன்புதான் இருபது ஆண்டுக் கால காங்கிரசின் ஒளிமிகுந்த (?) ஆட்சியில், தேசபக்தி பீறிட்டுக்கொண்டு கிளம்பியது என்கிறார்! வேலூர் கோட்டை வெளி மைதானத்தில் நின்று கொண்டு தியாக சரித்திரத்தை நினைவுபடுத்துகிறார்!

ஆனால் அதே வேலூரிலிருந்து போகிற வழியில் ஜமதக்கினி (நாயக்கர்) என்ற மறைந்த தியாகியின் படத்தைத் திறக்குமாறு கேட்டு எழுதிய கடிதத்திற்கு பதில்கூட அனுப்பவில்லையாம் ராஜீவ் காந்தி!

ஜமதக்கினி சுதந்திரப் போரில் ஒன்பது ஆண்டுகள் சிறையில் வாடியவர்!

அவர் திருவுருவப் படத்தைத் திறந்திடுமாறு கோரி எழுதப்பட்ட கடிதம், கேட்பாரற்றுப் போயிற்று!

பாவம், ஜமதக்கினி என்ன மிட்டாவா? மிராசா? தஞ்சை நிலப் பிரபுவா? ஒன்பது ஆண்டு சிறையில் கிடந்தவர்தானே! அவர் மட்டுமா? அவர் துணைவியாருங்கூட தேசபக்தி கொண்டு சிறைக் கொடுமையைப் பல்லாண்டுகள் அனுபவித்தவர்!

தி.மு.க.வுக்கு தேச பக்தி இல்லை எனக் கூறும் ராஜீவ் காந்தியின் தேசபக்திக்கு இப்படியொரு சான்று!

அதேபோல 67க்கு முன்பு காங்கிரஸ்காரர்கள் சிலரிடம் பொங்கியெழுந்த தேசபக்திக்கு இதோ மற்றொரு வித்தியாசமான சான்று!

1952ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் சிவபுரம் கோயிலில் நிலத்தைத் தோண்டும் போது மிகுந்த

வேலைப்பாடுகள் நிறைந்த நடராஜர், சோமாஸ்கந்தர், சிவகாமி அம்மன், திருஞான சம்பந்தர், விநாயகர், ஆகிய சிலைகள் கண்டெடுக்கப்பட்டன. இந்த சிலைகள் கும்பகோணம் தாசில்தாரிடம் ஒப்படைக்கப்பட்டன. பின்னர் அவற்றை சென்னை அரசினர் கலைக்கூடத்துக்கு எடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டபோது, சிவபுரம் கோயில் தர்மகர்த்தாவும் தீவிர காங்கிரஸ்காரருமான முத்துசாமி அவர்கள் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி மேற்படி சிலைகளை சிவபுரம் கோயிலிலேயே இருக்கச் செய்தார்.

அந்த சிலைகளை குத்தாலம் காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் திலகரும் அவரது சகோதரரான சித்தரஞ்சனும் களவாடி வெளிநாட்டுக்கு அனுப்பினார்கள். களவாடப்பட்ட சிலைக்கு மாற்றாக கோயிலில் போலி சிலையையும் செய்து வைத்தார்கள். பம்பாயில் இருந்து கொண்டு இந்தக் குடும்பமே இந்த சிலை வியாபாரக் கம்பெனியை நடத்திக் கொண்டிருந்தது. அதில் நடராஜர் சிலை மட்டும் அமெரிக்காவில் 75 லட்ச ரூபாய்க்கு விற்கப்பட்டது.

உடன்பிறப்பே, இச்செய்தி 1972 மார்ச் 15ஆம் நாள் சட்டமன்றத்திலேயே என்னால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவுக்கு கடத்தப்பட்ட சிவபுரம் நடராஜர் சிலையை திரும்பக் கொண்டுவரும் முயற்சிகள் தி.மு.க. ஆட்சிக்காலத்தில் எவ்வளவு மும்முரமாக முடுக்கிவிடப்பட்டன என்பதும் அப்போது ஐ.ஜி.யாக இருந்த திரு. அருள் அவர்கள் அந்தச் சிலையைத் திரும்பப் பெறுவது குறித்து சர்வதேச போலீஸ் அமைப்பான இன்டர்போல் அமைப்பில் அரசின் சார்பில் முறையிட்டு வெற்றி பெற்றதும் நாடறிந்த செய்தியாகும்.

1952 என்பது எந்தக் காலம் தெரியுமா? ராஜீவ் காந்தி கீறல் விழுந்த கிராமபோன் ரிக்கார்டு போல திரும்பத் திரும்ப சொல்கிறாரே, அந்த ஒளிமிகுந்த (?) காங்கிரசாட்சியின் இருபதாண்டுக் காலம்தான்!

அந்த ஒளிமிகுந்த (?) காலத்தில் அந்த சிலைகளைக் கடத்திய காங்கிரஸ் குடும்பம் - அடடா! தனது தேச பக்தியை எப்படி வெளிப்படுத்தியிருக்கிறது பார்த்தாயா?

வெளிநாட்டுக்கு சிலைகளைக் கடத்துவது பழையநாள் தேசபக்தி - வெளி நாட்டு வங்கிகளில் கமிஷன் பணத்தைப் போட்டு வைப்பது இந்த நாள் தேசபக்தி என்று இலக்கணம் வகுத்துக் கொண்டவர்களிடம் நாம் தேசபக்தியைக் கற்றுக்கொள்ள வேண்டுமாம்!

காலம் எப்படிக் கெட்டுவிட்டது
பார்த்தாயா?

அன்புடன்

மு.க.

13-11-1988

1603. அலெக்சாண்டரும் - சோலங்கியும்!

உடன்பிறப்பே,

தமிழக ஆளுநர் அலெக்சாண்டர் அவர்கள் அக்டோபர் 7-ந் தேதி வெள்ளிக்கிழமை அன்று தலைமைச் செயலகத்தில் நிருபர்கள் கூட்டம் ஒன்றை கூட்டினார். அதில் தமிழகப் பொருளாதார நிலை குறித்து ஒரு நீண்ட அறிக்கை வெளியிட்டார். வானொலியில் - தொலைக்காட்சியில் அந்த நிருபர்கள் கூட்டத்திற்கு ஏராளமான விளம்பரங்கள்! அந்தக் கூட்டத்தில் தமிழகப் பொருளாதார நிலைமை மிகவும் மோசமாக உள்ளது என்ற தலைப்பில் பல புள்ளி விவரங்களை எடுத்துச் சொன்னார். அலெக்சாண்டர் போன்றவர்கள் தமிழகத்தினுடைய நிலைமைகளை விவரிக்கும்போது கடந்த கால தி.மு.கழக ஆட்சியை விமர்சிக்காமல் விட்டு விடுவார்களா என்ன? அலெக்சாண்டரிலிருந்து அமீர்சந்த் பியாரிலால் புகழ் சி. சுப்பிரமணியம் வரை இருபதாண்டுக் கால திராவிட இயக்க ஆட்சியை குறை கூறாவிட்டால் அவர்களுக்கு தலை வெடித்து விடுமல்லவா? அதனால் குறிப்பாக ஆளுநர் அலெக்சாண்டர் 1973ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டின் பொருளாதார நிலைமை கொஞ்சம்கூட மன நிறைவு அளிக்கத்தக்கதாக இல்லை என்று அன்றைய தினம் அறிவித்தார். அதற்கு அவர் தந்த புள்ளி விவரத்தில் 73-83ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட பத்தாண்டு காலத்தில் தமிழ் நாட்டில் தனி நபர் வருமானம் மிகவும் குறைந்துவிட்டது என்று குறிப்பிட்டார்.

அது மட்டுமல்லாமல், பீகார் போன்ற மாநிலங்களை விட தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்பவர்களின் சதவிகிதம் மிகவும் அதிகம் என்றும் ஆளுநர் அலெக்சாண்டர் அந்தக் கூட்டத்தில் தெரிவித்தார்.

தமிழகத்தின் தனி நபர் வருமானம், தனி நபர் தேசிய வருமானத்தோடு ஒப்பிடும்போது 1973 முதல் அதில் பாதி

கூட இல்லாமல் போய்விட்டது என்றும் அந்தக் கூட்டத்தில் அலெக்சாண்டர் அறிவித்தார்.

அது குறித்து அக்டோபர் 9ஆம் தேதி கோவையில் நிருபர்கள் என்னைச் சந்தித்தபோது அலெக்சாண்டரின் புள்ளி விவரம் தவறு என்று எடுத்துக் காட்டினேன்.

1965-66இல் தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சி இருந்த காலத்தில் தனிநபர் வருமானம் தேசிய அளவில் 426 ரூபாயாக இருந்த போது தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் 403 ரூபாய் தான். ஆனால் 1972-73ல் கழக ஆட்சி தமிழகத்தில் இருந்த காலத்தில், தேசிய அளவில் தனி நபர் வருமானம் 661 ரூபாய் என்று இருந்த போது, தமிழ் நாட்டின் தனி நபர் வருமானம் 688 ரூபாய்.

1973இல் தேசிய தனிநபர் வருமானம் 698 ரூபாய் என்று இருந்தபோது தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் 730 ரூபாய்.

1965-66ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் தனிநபர் வருமானத்தில் தேசிய அளவில் தமிழ்நாடு ஏழாவது இடத்தில் இருந்தது என்பதையும் 1972-73இல் கழக ஆட்சியில் அதனைப் படிப்படியாக நான்காவது இடத்திற்குக் கொண்டு வந்தோம் என்பதையும் குறிப்பிட்டு - எனவே கவர்னர் சொல்வது தவறு என எடுத்துக்காட்டி 1983ஐப் பற்றி கவர்னர் சொல்வதைப் பற்றி என்னிடத்தில் விவரம் இல்லை என்றும் கோவை நிருபர்கள் கூட்டத்தில் விளக்கமளித்தேன்.

கவர்னரோ அல்லது கவர்னரின் ஆலோசகர்களோ எந்தவிதமான மறுப்பு விளக்கமும் எனது கோவை பேட்டி குறித்து அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று (22.11.88) டெல்லி மாநிலங்கள் அவையில் தமிழகத்தைச் சேர்ந்த காங்கிரஸ் பெண் உறுப்பினர் ஒருவர் அக்டோபர் 7ந் தேதி தமிழ்நாட்டில் இருபதாண்டுக் காலத்தில் எல்லா நிலைமையும் தாழ்ந்துவிட்டது என்று கூறியிருக்கிறார். அதற்குப் பதிலளிக்கும் வகையில் விளக்கமளித்த மத்திய திட்ட அமைச்சர் சோலங்கி சில விவரங்களைத் தந்துள்ளார்.

1985-86இல் தமிழ்நாட்டில் தேசிய தனிநபர் வருமானம் 798 ரூபாய் என்றும் தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் 801 ரூபாய் என்றும் திட்ட அமைச்சர் சோலங்கி சுட்டிக் காட்டியுள்ளார்.

அது மாத்திரமல்ல; தமிழ்நாடு தான் பீகார் மாநிலத்தைவிட வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்பவர்களை அதிகமாகக் கொண்ட மாநிலம் என்ற ஆளுநர் அலெக்சாண்டரின் அறிக்கைக்கு மாறாக மத்திய திட்ட அமைச்சர் சோலங்கி அவர்கள் மாநிலங்கள் அவையில் தமிழ்நாட்டைவிட பீகார் மாநிலத்தில்தான் வறுமைக்கோட்டிற்கு கீழேயுள்ள மக்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்று நமது ஆளுநரின் முகத்தில் அடித்தாற்போல் புள்ளி விவரத்தை வீசியெறிந்துள்ளார்.

பத்திரிகைக்காரர்களை அடிக்கடி சந்திக்கிற வாய்ப்பு இருப்பதாலும் அவர்களும் கவர்னர் அறிக்கை என்றால் பக்கம் பக்கமாக பிரசுரிக்க வேண்டும் என்ற நிலைமைக்கு தள்ளப்பட்டிருப்பதாலும் - தொலைக்காட்சி, வானொலி போன்ற காங்கிரஸ் கட்சியின் பிரச்சார இயந்திரங்கள் கவர்னர் அறிக்கையை கடவுளின் அருள்மொழி போல் வெளியிட்டு விளம்பரம் தேட கங்கணம் கட்டிக்கொண்டிருப்பதாலும் புள்ளி விவரங்கள் என்ற பெயரால் எதை வேண்டுமானாலும் சொல்லலாம்! எப்படி வேண்டுமானாலும் பேசலாம்! தேர்தலுக்காக தமிழ்நாட்டு மக்களை ஏமாற்ற எத்தனை நாடகங்கள் வேண்டுமானாலும் போடலாம் என்றாகிவிட்டது.

எனவே காங்கிரஸ் நடத்தும் தேர்தல் பிரச்சார நாடகத்தில் காட்சி தவறாமல் வருகின்ற பாத்திரமாக கவர்னர் அலெக்சாண்டரும் வந்து வந்து போகின்ற கதாநாயகன் பாத்திரமாக பிரதமரும் பேசுகிற வசனங்கள் அனைத்தும் இப்படித்தான் முன்னுக்குப் பின் முரணாக இருக்கும் என்பதை அக்டோபர் 7ல் ஆளுநர் விடுத்த புள்ளி விவரங்களையும் நவம்பர் 22ல் திட்ட அமைச்சர் சோலங்கி மாநிலங்கள் அவையில் கொடுத்துள்ள புள்ளி விவரங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் எளிதாகப் புரிந்து கொள்ளலாம்.

பொருளாதார நிலைமை தமிழகத்தில் மோசமாக இருக்கிறது என்ற கவர்னர் அறிவிப்பில் எனக்கு இருவேறு கருத்துக்கள் இல்லை.

இத்தகைய பொருளாதாரச் சிக்கலில் இங்கே நடைபெறுவதென்ன?

ஒரு தடவைக்கு பத்து கோடி ரூபாய் செலவழித்து இதுவரை அறுபது கோடி ரூபாய் மக்கள் வரிப்பணத்தில் பிரதமரின் காங்கிரஸ் தேர்தல் பிரச்சார சுற்றுலா!

வரிச்சலுகைகள் என்ற பெயரால் தேர்தலை முன்னிட்டு கவர்னர் அறிவித்த சுமார் முப்பது கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு!

வரிச்சலுகைகள் வரவேற்கக் கூடியவை என்றாலும் தேர்தலை மனதில் வைத்துக்கொண்டு கவர்னர் அவைகளை அறிவிப்பானேன்? அறிவித்து விட்டு தமிழ்நாட்டுப் பொருளாதார நிலை தாழ்ந்து விட்டது என்று கண்ணீர் வடிப்பானேன்? முன்னுக்குப் பின் முரணாகப் பொய்யான புள்ளி விவரங்களைத் தந்து கடந்த கால ஆட்சியைக் குறை கூறுவானேன்?

மக்கள் கண்ணை மூடிக் கொண்டிருக்கிறார்கள் என்று கவர்னர் எண்ணுவாரேயானால் அவர் மக்களை ஏமாற்றுவதற்குப் பதிலாக தன்னையும் தனது அபிமானத்திற்குரிய காங்கிரஸ் கட்சியையும் ஏமாற்றத்திற்கு ஆளாக்கிக் கொள்ளப் போகிறார் என்பதுதான் உண்மை!

அன்புடன்

மு.க.

24-11-1988

1604. நேருவிழாவும் - நெஞ்சுக்கோர் ஆறுதலும்!

உடன்பிறப்பே,

பிரதமரும் - காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ராஜீவ் காந்தி அவர்கள், நேரு நூற்றாண்டு விழாப் பேரணிப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசினார்.

"The 100 minute speech, a major part of which was devoted to the political opposition"

என்று இந்து பத்திரிகை ராஜீவ் காந்தியின் பேச்சுக்கு முகப்புரை தீட்டியிருக்கிறது. நூறு நிமிடப் பேச்சில் எதிர்க் கட்சிகளுக்காகவே பெரும்பகுதி நேரத்தை செலவிட்டார் என்பது, இந்துவில் மட்டுமல்ல - எல்லா ஏடுகளிலும் வெளிவந்துள்ள ராஜீவின் உரையைப் படித்தாலே தெளிவாகத் தெரிகிறது.

நேருவைப் பற்றிப் பேசுவார்கள் - அவரது புகழ் பாடுவார்கள் - அவர் புரிந்த தியாகம் குறித்து விளக்குவார்கள் - அவர் கட்டிக் காத்த ஜனநாயக மாண்பு பற்றி உரை நிகழ்த்துவார்கள் - என்று எதிர்பார்த்து - இன்னமும் தியாகத்திற்கும் ஜனநாயகத்திற்கும் மதிப்பளிக்கிற பழைய காங்கிரஸ்காரர்கள் சிலர் இந்தப் பேரணிக்கும் கூட்டத்திற்கும் வந்து ஏமாற்றமடைந்து ஏக்கப் பெருமூச்சு விட்டுத் திரும்பியிருக்கின்றனர்.

பாவம்; அந்த நல்லவர்கள் சிலருக்காக இதோ இந்தக் கவிதை வரிகள்!

1970ஆம் ஆண்டு (நவ, 14) நேருவின் 81-வது பிறந்த நாள் நிறைவு விழா நிகழ்ச்சியில் சென்னையில் நடந்த கவியரங்கத்திற்கு நான் தலைமை வகித்துப் பாடிய கவிதை இது!

பூத்திருக்கும் தோட்டத்தில் புகுந்துவிட்ட என்றனுக்குக்
காத்திருந்த காட்சியொன்றைக் கவியாக்கித்
தருகின்றேன்,

சிரிக்கின்ற மல்லிகையின் காதுகளில்
செண்பகம்தான் ஏதோ சேதி தனைச் சொல்ல,
சேர்ந்திருவர் சாமந்தியிடம் ஓடி
அவள் செவியில் வாய் வைத்தார், பின்னர்
மூவருமே முல்லையிடம் முனகிவிட்டு அவளோடு
நால்வருமே நந்தவனம் முழுவதும்
நடைபோடத் தொடங்கிவிட்டார்.
யாரைத்தான் தேடுகின்றார் பூப்பெண்கள்? கட்டுதற்கு
நாரைத்தான் தேடியலைகின்றாரோ - என
எண்ணி நான் வியந்தேன்
தென்றலிலே மணம் பரப்பித் தேடுகின்றார்தேடுகின்றார்
தெரியவில்லை யாரை என்று!
முழங்காலை வலிக்குதடி என்றாள் முல்லை!
சிவந்ததடி என் பாதம் எனச் செண்பகம் இளித்தாள்
பல்லை!
சாமந்தி மல்லிகை இருவர்க்கும் பெருந் தொல்லை!
பூங்காவின் மூலையொன்றில் புலம்பல் ஒலி
கேட்டவுடன்
பூப்பெண்கள் அதோ, அதோ! எனச் சொல்லி
அந்த இடம் பறந்திட்டார்.

பூமானே! புகழ்க்குன்றே! போனாயோ என் தலைவா?
கோமானே! கொள்கை வேந்தே! உன்னைக்
கொள்ளையிட்ட கூற்றெங்கே?

எனையெடுத்து முத்தமீந்து இதயத்தில் ஏற்றிக் கொண்டாய் - இன்று

எனைவிடுத்து நீ மட்டும் நெடுந்தொலைவு போய்விட்டாய் என்ன நியாயம்?

இதழுக்குத் தேன் தருவாய் - பதிலுக்கு
நான் தருவேன் மறந்தா விட்டாய்?
மார்பகத்தில் அணைத்திருப்பாய்
மகிழ்ச்சி வெள்ளம் கரை புரளும்!
மங்கையென்னைப் பிரிவதற்கு உன் மனம் என்ன
கல்லோ?

எனக் கதறும் ஒலி கேட்டு
இனிய நறும் பூப்பெண்கள் அருகே சென்றார்
மடை திறந்த வெள்ளம் போல் கண்ணீர் கொட்டி
மயங்கிவிழும் நிலைமையிலே ரோஜா நின்றாள்
மல்லிகை முல்லை அருகே சென்று
என்னடி ரோஜா இன்னமும் அழுகை?
நல்லவர் இருந்தார் நானிலம் வாழ
வல்லவர் இருந்தார் வாரி அணைக்க
போனது வருமோ? புலம்பலை நிறுத்து!
பூக்களின் ராணி! புன்னகை காட்டு!
ஆறுதல் கூறினர், அழகு ரோஜா
தேறுதல் பெறாமல் தேம்பியழுதாள்.

இரவு உமிழும் எச்சில் என்பேன் பனித்துளியை - என்
இறைவனது புகழ் முத்தம் அமுதம் என்பேன்
அன்றமுகம் தந்தெனக்கு ஆசை காட்டி

இன்றென்னை எச்சில் பனித்துளியில் நனைத்துவிட்டார், என் செய்வேன்?

முடிசூடா மன்னரவர் இனி என்னைச் சூடார் என நினைக்கும்போதெல்லாம்

முள்ளாகக் குத்துதடி மேனியெல்லாம்!
வாழ்வில் சிரிப்பில்லா எனக்கு இந்த சிவப்பெதற்கு?
மனத்தில் மகிழ்வில்லா எனக்கு நறுமணந்தான் எதற்கு?
இந்தியச் சிம்மாசனத்தில் அவர் இருந்தார் - அவர்
இதயச் சிம்மாசனத்தில் நானிருந்தேன்
உறங்குகின்றார் விழித்தெழுவார், மாடி

இறங்கி வந்து பாவையெனை அழைப்பதற்குள் அவர் நெஞ்ச

அரங்குதனில் ஆடுதற்குச் சிவப்பாடை புனைந்து நின்றேன்
அதற்குள் காலக் குரங்கின் கை மாலை ஆகிவிட்டார்!

போய்விடுங்கள் எனை விடுத்துத் தனியாக
புனிதனவன் பிறந்தநாளில் கண்புனலை அவன்
காலடிக்குக் காணிக்கை யாக்குதலே என் கடமை
ரோஜாவின் சொற்கேட்டுச் சோர்ந்து போனேன், தன்
ராஜாவின் பிரிவாலே வாடுகின்ற அவளையெண்ணிப்
பேசாமல் திரும்பிவிட்டேன், இன்றென்
மனைவி கூந்தல், மணம் வீசாமல் போகட்டுமென்று
மலர் எதுவும் பறிக்காமல் வந்துவிட்டேன் - இன்று

மலர் பறித்தால், அது மாவீரன் நேருவுக்கு மாலை தொடுத்திடவே! நம்

மடி பறித்துச் சுதந்திரத்தை அபகரித்த வெள்ளையரின்

கொடி பறித்து விடுதலைக் கொடி பிடித்த கொள்கை வீரன்

அடி கொடுத்தால் வாங்கிக்கொண்டு
அடக்குமுறை தாங்கிக் கொள்ள
அண்ணல் வகுத்த வழி
அயராதுழைத்த சிங்கம்
இளமையின் எழிலை இருட்டுச் சிறையில்
கழித்த தியாகி!

எண்ணையிட்ட கடுகாய் வெடிக்கும் கோபம் எனினும்
எண்ணையிட்டார் விடுதலை வேள்விக் கென்போம்!

பணமலைக்கிடையே பிறந்தார் எனினும் ஏழையை அணைக்கும்

குணமலையாய்த் திகழ்ந்தார் என்போம்!
பணியின் விரைவைப் பம்பரம் என்பர்
பண்டிதர் பணியோ பம்பரம் தோற்கும்
இடி இடிக்கும் பேச்சில் - இளமை
துடி துடிக்கும் எழுத்தில் - தேன் ஒரு
படி இனிக்கும் பண்பில் - அதிர்
வெடி முழக்கும் செயலில் - விடாப்

பிடியிருக்கும் குணத்தில் - விடுதலைக்
கொடியிருக்கும் கையில் - கொஞ்சம்
முடியிருக்கும் தலையில் -

(இங்கென்ன வாழ்கிறதோ? எனக் கேட்காதீர் எனைப் பார்த்து)

நீதிக்கு எதிரானவற்றையெல்லாம்
நேர் நின்று எதிர்த்ததாலே நேருவானார் - இந்திய

நீள் எல்லைக் கோடு தன்னைப் பெரும் பகைவர் கடந்தபோது - என்ன

நேருமோ என்றேங்கி இருந்த மக்கள்
நெஞ்சின் துயர் துடைத்து, எதுவும்
நேராது நான் இருக்குமட்டும் எனச் சொல்லி
மேருவானார்.

துணி விருந்தால் உள்ளத்தூய்மையிருந்தால்
துன்பம் நேருமா? எனக் கேட்டார் குழந்தையிடம்!
இன்பமே நேரும் மாமா என்றது பிஞ்சும் பூவும் -
இதனால் நேரு மாமாவானார்.

மதம் கடவுள் நம்பிக்கை இவைகளிலே
அவர் கொள்கை தனி எனினும் பிறர்
மனம் புண்படாமல் நல்வழியில் ஆட்சி செய்தார் தன்
மரணத்தின் பின்னாலே மதச் சடங்கு வேண்டாமெனத்
தக்க

தருணத்தில் உயிலெழுதி உலகிற்கு ஒளி செய்தார்
நடுநிலைத் தன்மை நலமெனக் கொண்டு
நானிலம் போற்ற நமது பூங்குன்றனார் நவின்ற
யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற மொழிக்குத்
தோதாய்க் கொள்கை தொகுத்தே சொன்னார்.

காலத்தின் கோலம் காட்டுக்கு ராஜாவாய்க் கர்த்தபம் ஆகும்

ஏலத்தில் சில பேர் கோபுர உச்சியில் குந்திக் கொள்வர், இந்திய

ஞாலத்தின் தலைவராய் ஜவகர் ஆனது இவ்வித மல்ல!
அவர்

சேலத்து மாம்பழம் - சென்னைக் கடற்கரை -
கொற்கை முத்து - கொள்ளேகால் பட்டு -
தஞ்சைக் கோயில் - தண்புனல் காவிரி -
தறியில் காஞ்சி - தடந்தோள் பாண்டியன்!
கருத்து மாறுதல் கடுமையாய் இருந்தும்,
காலமானார் நேரு என்றதும்
கண்ணீர் உகுத்தார்
காராக்கிரகம் கிடந்த அண்ணா!
கண்ணிய அரசியலைப் போற்றிடும் நாட்டில்
கண் நிகர் நேருவைப் புகழ்வோம் பாட்டில்!

வாய் மடித்துக் கிடந்த தலைமகனை நோக்கி
மணியதரத் தேதேனும் வடுவுண்டாயோ? எனத்
தாய் அடித்து மோதி அழும் காட்சிகளைப்
பேய் ஆட்டம் போடுகின்ற போர் முகத்தை
நாய் நரிகள் தீனி தின்னும் கொடுமைக் கூத்தைக்
காய், பழம், பூ, பிஞ்சு, சாய்ந்து விழும்
சமர்க்களத்தை - நம்
கலிங்கத்துப் பரணி சொல்லும். அந்தக்
கலிங்கத்தில் அமைதி பூண்ட அசோக மன்னன்
கண்டெடுத்த அறவழியில் உலகு காக்க நேரு
பிரான்
கழுகுகளின் இறக்கை வெட்டி வெண்
புறாவைப் பறக்க விட்டார் விண்ணின் மேலே!

தலையாகிய அறமே புரி
சரி நீதி உதவுவாய்
சமமே பொருள் ஜனநாயகம்
எனவே முரசறைவாய் இது
அலை மோதிடும் புதுவையின்
கலைமேவிய பாவலன் - நம்

நிலை மாறிடப் பாடிய காவியம்!
ஜனநாயகம் ஜனநாயகமென
ஜவகரும் முழங்கிடச் - சிலர்தம்
தனி நாயகம் சிறந்திடச் செயல்படல் மறந்திடோம்!
பணநாயகம் கணநாழியில் தகர்ந்திடக்
குணநாயகர் நேருவும் உடன் முனைந்திடக்
காலந்தான் போதவில்லை
காலமுமே பொறுக்கவில்லை!

உடன்பிறப்பே,

ஆசையுடன் நேரு நூற்றாண்டு விழாவுக்கு வந்து - எதிர்க்கட்சிகளை வசைபாடுவதுதான் விழா நோக்கமென உணர்ந்து, கை பிசைந்து கண் கலங்கித் திரும்பிய உண்மைக் கதருடை காங்கிரஸ் தியாகிகளுக்கு - 1970ல் நான் எழுதிய இந்தக் கவிதை வரிகளாவது சிறிது ஆறுதல் வழங்குமானால் எனக்கு மகிழ்ச்சிதான்!

அன்புடன்

மு.க.

30-11-1988

1605. வீராங்கனை கையில் ஒரு வெற்றிப் பூங்கொத்து!

உடன்பிறப்பே,

1979ஆம் ஆண்டு பாகிஸ்தானில் ஜியாவுல் ஹக்கினால்; பூட்டோ தூக்கிலிடப்பட்ட போது 5.4.79 அன்று முரசொலியில் நான் எழுதிய கடிதம் இது! பாகிஸ்தானில் அந்தப் பூட்டோவின் மகள் பெனாசிர் ஜனநாயகப் பூங்கொத்துடன் வெற்றி தரும் வீராங்கனையாகக் காட்சி தரும் இந்த நேரத்தில் - அந்தப் பழைய கடிதத்தை நீயும் நானும் ஒருமுறை படித்துக் கொள்வதில் ஒரு நிம்மதி! அதனால் மீண்டும் அந்தக் கடிதம்!

நடந்துவிடக்கூடாது என்று நாடுகள் பல கோரிக்கை விடுத்துத் தடுக்க நினைத்த அந்தக் காரியம் நடந்தே விட்டது. பாகிஸ்தான் நிலப்பரப்பைக் கட்டியாண்ட புகழ்மிக்க மனிதன் பூட்டோ தூக்கில் தொங்கவிடப்பட்டு அவன் உடலைப் புதை குழிக்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். சர்வாதிகாரம் பேசியது பின்னணியிலிருந்து! அதற்கேற்ப நீதியின் உதடுகள் அசைந்தன! விளைவு, இஸ்லாமிய சமுதாயத்தின் ஏற்றமிகு விளக்கு ஒன்று அணைக்கப்பட்டு விட்டது. அவன் கடைசிவரையில் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள கருணை மனு போட முடியாது என மறுத்துவிட்டான். ஆனால் அவனுக்காக போடப்பட்ட கருணை மனுக்கள் அத்தனையும் எதேச்சாதிகாரத்தின் காலடியில் விழுந்து கசங்கி கிழிந்து உருத் தெரியாமல் போய் விட்டன.

ஒரு வகையில் அந்த மனிதனுக்கு நிம்மதிதான். இதோ! அதோ! என்று நாள்தோறும் அவனைச் சித்ரவதை செய்து கொண்டிருந்தார்கள். இனி அவனுக்கு எந்தப் பிரச்சினை பற்றியும் கவலையில்லை. மிரட்டல்கள் அவன் அடக்கம் செய்யப்படும் இடத்திற்குச் சென்று அவன் உள்ளத்தை உலுக்க முடியாது.

ஆட்சியாளர்கள் அதிகார வர்க்கத்தையும், ரதகஜ பதாதிகளையும் வைத்துக் கொண்டு யாரையும் பழி தீர்த்துக் கொள்ள முடியும் என்பதற்கு பாகிஸ்தானில் பூட்டோவுக்குக் கிடைத்த பரிசே சான்று!

பூட்டோ தலைசிறந்த இராஜதந்திரி! அற்புதமான நிர்வாகி! அவன் இதயத்தில் ஊறிய இரக்க உணர்வு; முஜிபுர் ரகுமானை மரணப் படுகுழியிலிருந்து காப்பாற்றிப் பங்களா தேஷின் அதிபராகவே ஆக்கியது!

அந்தக் கருணை மிகுந்த செயலுக்குக் கைமாறாகக்கூட பூட்டோவுக்குக் கருணை காட்டப்படாதது - நெஞ்சு வெடிக்கும் வேதனைச் செய்தியாகும்.

மனிதச் சோலையில் எத்தனையோ பூக்கள் மலர்கின்றன! அவற்றில் பல மணம் வீசாத அழகு மலர்களாகத் திகழ்கின்றன! அத்தர் தரும் ரோஜாவும், அரிய மணம் பரப்பும் மல்லிகை முல்லையும் - மயக்கும் மனோரஞ்சிதமும் - புவியெனும் பூஞ்சோலையில் குலுங்குகின்றன! அந்த மலர்களில் வாசமிகு மலராக விளங்கிய மனிதன்தான் பூட்டோ!

இன்று அந்த மலரைக் கசக்கி எறிந்து விட்டார்கள். அந்த மலர் தானாக வாடி உதிர்ந்திருந்தால் இத்துணை அதிர்ச்சி ஏற்பட்டிருக்காது.

படிப்படியாக வளர்ந்து உயர்ந்து பாகிஸ்தான் மக்களால் மட்டுமின்றி - பல்வேறு நாட்டு மக்களாலும் பாராட்டப்பெற்ற அந்தக் கீர்த்தி மிக்க மனிதன்; கடந்த இரண்டொரு ஆண்டுகளாகப் பட்ட வேதனை கொஞ்சமல்ல!

அயூப்கானும், யாகியாகானும் இந்தியா பாகிஸ்தானுக்கிடையே நல்லுறவை வளர்க்க நாட்டம் கொள்ளவில்லை. அந்த நிலையில் மாற்றம் வேண்டுமென பூட்டோ விரும்பியதுண்டு. பூட்டோவுக்குத் தூக்கு மேடையைத் தந்தவர்களுக்குக்கூட இந்தியா-பாகிஸ்தான் நல்லுறவில் விருப்பம் இருக்கலாம். ஏற்படலாம்.

நமது நெஞ்சில் இன்று பாய்ந்துள்ள ஈட்டிக்கும் அந்த நட்புறவுப் பிரச்சினைகளுக்கும் தொடர்பில்லை. அனைத்தையும் கடந்த மனிதாபிமான உணர்வுதான் தலைதூக்கி நிற்கிறது.

கடைசித் தடவையாக மனைவி மக்கள் தங்கள் குடும்பத்துத் தலைவனைச் சந்தித்து மூன்று மணி நேரம் உரையாடினார்களாம்!

சாவூருக்குச் செல்ல விடை தாருங்கள் என அவன் கேட்டிருப்பான். விழிகளை நீர் வீழ்ச்சிகளாக்கிக் கொண்டு அவன் வீட்டு விளக்குகள் திரும்பியிருக்கின்றன. அந்தச் சந்திப்பில் எந்த வகையான உணர்ச்சிகள் கொந்தளித்தன என்று யாரால் வர்ணிக்க முடியும்?

எத்தனையோ பேர் மரண தண்டனைக்கு ஆட்படுகிறார்கள்! தூக்கு கயிறில் தொங்குகிறார்கள்! அந்த உயிர்களில் ஒன்றாகப் பூட்டோவின் உயிரையும் கருதுகிற சமத்துவ முழக்கம் இப்போது எடுபடாது.

அண்டத்தில் கோடானு கோடி கோள்கள் இருக்கின்றன. எண்ணிமாளாத அளவுக்கு நட்சத்திரங்கள் இருக்கின்றன. அவற்றில் சில கோள்களைத் தானே - சில நட்சத்திரங்களைத் தானே - உலகம் அறிந்திருக்கிறது!

அப்படி உலகறிந்த ஒரு மனிதனுக்கு இப்படி ஒரு முடிவா?

கேள்விக்குறி இதயத்தைப் பிழிந்தெடுக்கிறது!

பூட்டோ - என்றைக்கும் வாழுகின்ற புகழ்மிக்க மனிதர்களிலே ஒருவராக ஆகிவிட்டார்.

தூக்கு மேடை - அவர் உறுதியைக் குலைக்கவில்லை!

சிறைக் கொடுமைகள் அவர் உடலைத்தான் இளைக்க வைத்ததே தவிர உள்ளத்தைக் களைக்க வைக்கவில்லை!

குறை இல்லாத மனிதர் என்று கூற முடியாவிடினும்; கம்பீரமாக நின்று கருணை கேட்காமல் மடிந்து விட்ட அந்த மாவீரனின் செயலைப் போற்றிப் புகழாமல் இருக்க முடியாது!

அன்புடன்

மு.க.

02-12-1988

1606. நிலையும் - நினைப்பும்!

உடன்பிறப்பே,

ஊர் கூடிச் செக்கு தள்ளுவது என்பதாக ஒரு பழமொழி உண்டே; அது போலத் தமிழ் நாட்டில் உள்ள எல்லாக் கட்சிகளும் (காங்கிரஸ் அணியைத் தவிர) எழுப்பிய குரலின் காரணமாக - ஒரு வழியாகத் தேர்தல் தேதி அறிவிக்கப்படுவதற்கான நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் மறைந்து - ஏறத்தாழ இந்த ஓராண்டுக் காலம் - உரிய நேரத்தில் ஜனநாயக ரீதியில் அறிவிக்கப்பட்டு நடைபெற்றிருக்க வேண்டிய தேர்தல்; காங்கிரஸ் கட்சியின் வசதி வாய்ப்புக்காகவே தள்ளித் தள்ளிப் போய்க் கொண்டேயிருக்கிறது என்ற உண்மையைப் பட்டிக்காட்டில் வாழும் ஒரு பாமர மனிதன் கூடத் தெளிவாகவே தெரிந்து கொண்டிருக்கிறான்.

எப்படியோ - மக்கள் வரிப்பணத்தில் அறுபது கோடி ரூபாய் அளவுக்குச் செலவிட்டு பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் சுற்றுப் பயணம் கிராமம் கிராமமாக ஏழெட்டு தடவை நடத்தப்பட்டு - அப்பாடா! பரவாயில்லை - கோமா ஸ்டேஜ் தாண்டி விட்டது! என்ற நம்பிக்கையுடன் தேர்தலை அறிவிக்க முன் வந்து விட்டார்கள்!

இதற்கு மேலும் ஆளுநர் ஆட்சி நீட்டிக்கப்படும் ஜனநாயக விரோதச் செயலைத் தமிழ் நாட்டு மக்கள் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள் என்று உணர்ந்து கொண்ட பிறகாவது தேர்தலைச் சந்திக்க முன்வந்துள்ள நிலையில் - தமிழகத்தில் உள்ள எல்லாக் கட்சிகளும் அதற்கான தயாரிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளன.

நமது கழகமும் வழக்கம் போல அமைப்பு ரீதியாகத் தனது தேர்தல் பணிகளை முறைப்படி தொடங்கி நடத்திக் கொண்டிருக்கிறது. இட ஒதுக்கீடுகள் குறித்து முதற்கட்டமாகத் தோழமைக் கட்சிகளுடன் கலந்து பேசியிருக்கிறோம். அதன்

விபரங்களை மாவட்டக் கழகச் செயலாளர்களுடன் விவாதித்து - தொடர்ந்து தோழமைக் கட்சிகளுடன் பேச இருக்கிறோம்!

நவம்பர் 15 முதல் 25 முடிய தலைமைக் கழகத்திற்கு அனுப்பப்பட்ட கழக வேட்பாளருக்கான விண்ணப்பப் படிவங்களை ஆய்வு செய்து - அந்த விண்ணப்பதாரர்களை டிசம்பர் முதல் தேதியிலிருந்து நேர்காணல் வாயிலாக நானும் நமது பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்களும் அண்ணா அறிவாலயம் தி.மு.க. அலுவலகத்தில் அழைத்துப் பேசி வருகிறோம், உடன் பொருளாளர் சாதிக்கும், துணைப் பொதுச்செயலாளர் நாஞ்சிலாரும், தேர்தல் பணிச் செயலாளர் தம்பி கோபால்சாமியும் உள்ளனர்.

மூவாயிரத்து ஐநூறுக்கு மேற்பட்டவர்கள் மனுச் செய்துள்ளார்கள். இந்தக் கடிதம் உனக்கு எழுதும் வரையில்;

நீலகிரி	**பெரியார்**
தர்மபுரி	**கோவை**
குமரி	**சேலம்**
மதுரை	**மதுரை அண்ணா**
காமராசர்	**பசும்பொன்**
ராமநாதபுரம்	**நெல்லை கட்டபொம்மன்**
சிதம்பரனார்	**புதுக்கோட்டை**
திருச்சி	

எனப் பதினைந்து மாவட்டங்களிலிருந்து கழக வேட்பாளராக நின்றிட விண்ணப்பித்துள்ள உடன் பிறப்புகளையும் - மாவட்டக் கழகச் செயலாளர்கள், நகரக் கழக - ஒன்றியக் கழகச் செயலாளர்கள், நகர்மன்றத் தலைவர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள் எனப் பொறுப்புகள் வகித்திடும் உடன்பிறப்புகளையும் தனித்தனியே சந்தித்து அவர்தம் கருத்துக்களைக் கேட்டு வருகிறோம்.

காலை ஒன்பதரை மணி அளவில் ஒவ்வொரு நாளும் தொடங்குகிற இந்த நேர்காணல் இரவு ஒன்பது மணி வரையில் இடையில் ஒருமணி நேரம் ஓய்வுடன் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது!

ஒரே இடத்தில் காலை முதல் இரவு வரையில் சுமார் முன்னூறுக்கு மேற்பட்டவர்களுடன் தனித் தனியாக உரையாடிக்

கருத்துக்களைத் தொகுப்பதென்றால் எவ்வளவு சிரமம் என்பது - அந்தப் பணியில் ஈடுபட்டால்தான் தெரியும்!

கழனியில் கலப்பை கொண்டு உழுதிடுவதால் ஏற்படும் களைப்பைவிட - சம்மட்டி கொண்டு உலைக்களத்தில் பாடுபடுவதால் உருவாகும் அயர்வை விட - ஒரே இடத்தில் அமர்ந்து ஒவ்வொரு நாளும் முன்னூறுக்கு மேற்பட்டோரிடம் ஒரே விதமான கேள்வியைக் கேட்டு - அதற்குக் கிடைக்கும் பதில்களில் காணக்கிடக்கும் பிரச்சினைகளை ஆழமாகச் சிந்தித்து ஒரு தோராயமான முடிவு எடுப்பதில்கூட எத்துணை களைப்பு; மூளைக்கும் ஏனைய உடலுறுப்புகளுக்கும் ஏற்படுகின்றன தெரியுமா! ஏ; அப்பா! அந்தக் களைப்பு முழுதும் உடன்பிறப்பாம் உன்னைக் காணுகிறோம் என்ற ஒரே ஆறுதலில்தான் மறைந்தோடுகிறது! களைப்புக்குப் பதிலாகக் களிப்பு துள்ளுகிறது!

தோ்தல் பணிச் செயலாளர் தம்பி கோபால்சாமி; தெரிவித்துள்ள புள்ளி விவரப்படி திருச்சி மாவட்டத்துடன் நேர்காணலில் நாங்கள் சந்தித்துக் கருத்துவிளக்கம் பெற்றோர் தொகை இரண்டாயிரத்து ஐநூறைத் தாண்டுகிறது! இனியும்,

தஞ்சை

தென் ஆற்காடு (வடக்கு)
தென் ஆற்காடு (தெற்கு)
வட ஆற்காடு (வடக்கு)
வட ஆற்காடு (தெற்கு)
செங்கை அண்ணா
சென்னை

என மாவட்டங்கள் இருக்கின்றன; இந்த நேர்காணல் நிகழ்ச்சிக்காக!

அண்ணா அறிவாலயத்து வளாகத்தில் கழக உடன்பிறப்புகள் குழுமியிருக்கும் காட்சியைக் காணுகிறேன்!

இந்த நேர்காணலுக்காக அறிவாலயத்தின் மாடியறைக்கு வருவதற்குள் எத்தனை கட்டங்கள்!

வளாகத்தில் குழுமியிருப்போர் ஒரு பகுதியினர்! மாவட்டத்தின் மொத்த விண்ணப்பதாரர்கள் ஒரு கூடத்தில்!

முதலில் அழைக்கப்பட இருக்கும் தொகுதியைச் சார்ந்தோர் ஒரு கூடத்தில்!

அடுத்தடுத்து அழைக்கப்பட இருக்கும் தொகுதிகளைச் சார்ந்தோர் அடுத்தடுத்த கூடங்களில்!

அந்த அற்புதமானதும் கட்டுக்கோப்பானதுமான காட்சியைக் காணும்பொழுது - அண்ணா அறிவாலயத்தை கற்கள் கொண்டு எழுப்பியதாகவே எனக்குத் தோன்றவில்லை!

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, கடின உழைப்பு எனும் கொள்கை வைரங்களால் இழைக்கப்பட்ட மகத்தான நாலு மாடி மாளிகையிது என்ற மகிழ்ச்சியே அருவியெனப் பொங்குகிறது எனக்கு!

அதனால்தானே; தேசிய முன்னணி விழாவுக்கு வந்த தலைவர்கள் எல்லாம் பனிரெண்டு ஆண்டு எதிர்க்கட்சியாக இருந்தும் இளைத்துப் போகாமல் - இமயமென நிமிர்ந்து நிற்கிறதே இந்த இயக்கம்! என வியப்பால் புருவங்கள் உயர்த்தினர்!

அவர்தம் புருவங்கள் உயர்ந்தன! காரணம்; உன் புஜங்கள் உயர்ந்ததால் அல்லவா, உடன்பிறப்பே!

எத்தனை எதிர்ப்பு - எவ்வளவு சோதனை - எத்தனை முறை சிறைவாசம் - மிசா - சித்ரவதை - பழிவாங்கும் பண்பற்ற செயல்கள் - துரோகம் இத்தனைக்கும் ஈடு கொடுத்து நெஞ்சுயர்த்திப் பீடுநடை போடுகிறாய்! அதுவும் அண்ணா அறிவாலய வளாகத்தில் நீ சிரித்த முகத்துடன் சூழ்ந்திடும்பொழுது - திருக்குளத்தில் செந்தாமரைப் பூக்கள் மலர்ந்தது போலன்றோ - கண்டு மகிழ்கிறேன் நான்!

களம் தயாராகிறது! ஜனநாயகக் களத்திற்குத் தேவையான படைக்கலன்களும் தயாராக வேண்டுமல்லவா? அந்தப் பணிதான் நேர்காணல் பணி!

எந்தக் களத்திற்கு எந்தப் படைக்கலன் - அதாவது நமது வேட்பாளர்; என்பது இன்னமும் அறிவிக்கப்படவில்லை!

சில நாளேடுகள் - வார ஏடுகள், இப்போதெல்லாம் செய்திகளைவிடக் கதைகளுக்குத்தான் அதிக முக்கியத்துவம் தருகின்றன! அவர் எந்த இடம்? இவர் எந்த இடம்? அவருக்கு யார் சிபாரிசு? இவருக்கு யார் சிபாரிசு? அவர் யார் ஆள்? இவர் யார் ஆள்? இவர் எந்தக் குழு? அவர் எந்தக் குழு?

இப்படிச் செய்திக் கதைகள் வெளியிடுகின்றன ஏடுகள்! வியாபார தந்திரம்! அந்தத் திறமையைப் பாராட்டலாம்; ஆனால் நம்பத் தேவையில்லை அந்தக் கதைகளை!

குழுக்கள் - ஆட்கள் - சிபாரிசுகள் - வேண்டியவர் - வேண்டாதவர் - நெருங்கியிருப்போர் - இல்லாதோர் - உற்றார் - உறவினர் இந்தப் பேச்சுக்கெல்லாம் இடமில்லை! சிபாரிசு பிடித்து வந்தால் கிடைக்கக் கூடிய இடமும் கிடைக்காமலே போய் விடும்!

கண்டிப்பு!
கண்டிப்பு!

கடமை - கண்ணியம் - கட்டுப்பாட்டில் - மிக மிகக் கண்டிப்பு!

ஜனநாயக முறையில் கழகப் பொறுப்பில் உள்ளோரின் கருத்துக்களை பொதுக் குழுவில் அறிந்து - இப்போது நேர்காணல் மூலமும் அறிந்து - அடுத்து நிர்வாகக்குழுவிலும் (14.12.88) அறிந்து - உரிய நேரத்தில் தலைமைக் கழகத் தேர்தல் அறிக்கையும் கழக வேட்பாளர் பட்டியலும் - தோழமைக் கட்சிகளுடன் பகிர்ந்து கொண்ட இடங்களும் வெளியிடப்பட இருக்கிறது!

அதற்குள் இவர்தான் வேட்பாளர் - அவர்தான் வேட்பாளர் என ஏடுகள் சில எழுதினாலும் - ஒரு சில உடன்பிறப்புகள் ஆம்! நானே தான் வேட்பாளர் இத்தொகுதிக்கு! எனக் கூறிக்கொண்டாலும் - அவை எதுவும் இறுதியானவை அல்ல!

இன்னும் நானும் பொதுச்செயலாளருமே எந்தத் தொகுதி என்று முடிவாகவில்லை!

எல்லாத் தொகுதிகளிலும் கழகம் நிற்பதாக எண்ணிச் செயல்படுவதும் - கழகத்திற்கென ஒதுக்கப்படும் தொகுதிகளில் உதய சூரியன் சின்னம்தான் வேட்பாளர் என நினைத்துப் பணிபுரிவதும்தான் உண்மையான உடன்பிறப்புகளின் நிலையாக இருக்க வேண்டும்!

நிறைய எழுத வேண்டும் உனக்கு! நேரமில்லை - இதோ நேர்காணலுக்காக ஏராளமானோர் காத்திருக்கிறார்கள்! பிறகு எழுதுகிறேன்!

அன்புடன்

மு.க.

09-12-1988

1607. சிறுதுளி! ஆனால்... கண்ணீர்த்துளி!

உடன்பிறப்பே,

பூமித்தாய் பெற்றெடுத்து - தனது மடியில் போட்டு மகிழ்ந்து கொஞ்சிக் கொண்டிருந்த மக்களில் சுமார் இரண்டு லட்சம் பேரை; திடீரென எடுத்து விழுங்கி விட்டாள்!

வாய்வழி விழுங்கினால் பசி அடங்கிடச் சில விநாடிகள் ஆகிடும் என எண்ணியோ என்னவோ; தனது வயிற்றையே கிழித்து அதற்குள் அத்தனை மக்களையும் திணித்து ஜீரணம் செய்து கொண்டாள்!

சோவியத் நாட்டில் அர்மேனியப் பகுதியில் நடந்த சோகக் கதையின் ஏடுகள் - அகக்கண் முன்னே புரளப் புரள நம் விழிகள் மழை பொழிகின்றன! பெருமூச்சு, புயல் மூச்சாகிறது!

தொலைக்காட்சியில் அந்தத் துயர நிகழ்ச்சியைத் தொடர்ந்து கண்டிடும் போது நம் இதயம் குலுங்குகிறது!

பாட்டாளிகளுக்காக - பாட்டாளிகளால் பரிபாலிக்கப்படும் அந்தப் பாட்டாளிகளின் நாட்டில் இப்படி ஒரு பரிதாபமா?

அதிர்ந்து நடுங்கி அழிவுற்றுத் தேம்பித் தவித்துக் கொண்டிருக்கும் அர்மேனியப் பகுதி மக்களுக்காக - ஆம்; அங்கே மிச்சமிருப்போருக்காக ஆதரவுக் கரம் நீட்டிட இந்தியா உள்ளிட்ட எல்லா நாடுகளும் ஒன்றையொன்று முந்திக்கொண்டு கடமை ஆற்றுகின்றன.

இயற்கையின் திடீர் தாக்குதல் எவ்வளவு பயங்கரமானது! எத்தனை நாடுகளின் அமைப்பையே அது மாற்றி அமைத்திருக்கிறது! எத்தனை நாடுகளின் எல்லைக் கோடுகளை அது அழித்துவிட்டு வேறு மாதிரியாக வரைந்து காட்டியிருக்கிறது! எத்தனை எத்தனை வரலாறுகளை -

இலக்கியங்களை - எதிர்காலத்தில் ஆராய்ச்சியாளர்களுக்கு வேலை கொடுப்பதற்காகவே - அது மண்மூடச் செய்திருக்கிறது!

செழித்துச் செறிந்துள்ள தருக்கள் - பூத்துக் குலுங்கும் கொடிகள் - சிரித்து மணக்கும் சின்ன மலர்ச்செடிகள் - இந்தப் பூங்கா, கண்மூடிக் கண் திறப்பதற்குள் ஒரு புயல் வீச்சில் அடியோடு அழிந்துவிட்டால்; அதனைக் காணும் நிலை நமக்கு ஏற்படும் பொழுதே நெஞ்சம் பதைக்கிறது!

மனித இனத்தின் ஒரு பகுதி - இரண்டு லட்சம் பேர்; இமைப்பொழுதில் - ஆடவர், பெண்டிர், சிறுவர், சிறுமியர், முதியோர், இளைஞர், ஆபத்து ஏதோ என உணர்வதற்குள் வானமிடிந்து தலையில் விழுந்தாற்போல் நசுங்கினர் - உடைந்தனர் - முறிந்தனர் - அம்மவோ; அழிந்தே போயினர் என்கிறபோது எப்பாடு படுகிறது நமது உள்ளம்!

அர்மேனியா மாநிலத்தின் ஸ்பிடாக் நகரம் முழுமையாகவே அழிந்துவிட்டது! அடுத்த பெருநகர்களான லெனினகானும் கிரோவகானும் முக்கால் பகுதிக்கு மேல் அழிந்துவிட்டன! இத்தகவலை சோவியத் அரசு தெரிவித்துள்ளது!

இந்த நூற்றாண்டின் மிக மோசமான பூமி அதிர்ச்சி இது! சோகம் கப்பிய நெஞ்சினராய் சோவியத் மக்கள் மட்டுமே உள்ளனர் எனக் கருதுவது தவறு!

யாதும் ஊரே யாவரும் கேளிர் எனும் பொதுநோக்கு படைத்த தமிழ்மக்கள்; அர்மேனியாவில் அவதிக்கு ஆளாகியோரும் - அழிந்துபட்டோரும் நமது கேளிர் என்ற உணர்வுடனேதான் துயரத்தில் ஆழ்ந்தனர்! இனியும் அங்கு நிலநடுக்கம் தொடருமாமே எனக் கேட்டு துயர் மிகக் கொண்டுள்ளனர்!

மூன்று நாடுகளுக்கான சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த சோவியத் அதிபர் கோர்பச்சேவ் பயணத்தை ரத்து செய்து விட்டு, திரும்பிவந்து, பாதிக்கப்பட்ட பகுதிக்குச் சென்று துயர் துடைப்புப் பணிகளை முடுக்கிவிட்டுக் கொண்டிருக்கிறார்.

தொலைதூரத்தில் இருக்கிற நாம்; நமது இரங்கலை - வேதனையை - சோவியத் நாட்டை நோக்கித் தெரிவித்துக் கொள்கிறோம்! நமது இரங்கல் - அளவில்; மற்ற நாட்டு மக்களின் இரங்கல் செய்திக்கு சமமானதுதான்!

ஆனால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வழங்கிடும் உதவியென்பது சோவியத்தில் செய்யப்படுவதோடு ஒப்பிட இயலாதது!

எனினும்; இந்த சோகத்தில் இந்தியாவும் - இரண்டறக் கலந்துள்ளது என்பதற்கேற்ப நிவாரண உதவிகள் அனுப்புவதற்காக மத்திய அரசு ஒரு குழு அமைத்துள்ளது. அந்தக் குழுவின் வழியாக இயன்ற உதவிகளை வழங்கலாமெனச் செய்திகள் வந்துள்ளன!

மனித சமுதாயத்திற்குற்ற இந்தப் பெரும் அவலத்தில் மனமுருகி நிற்கும் நாமும் நமது கடமையைச் செய்திடுவோம்!

இதோ - ஒரு சிறுதுளி! மத்திய அரசு அமைத்துள்ள குழுவின் வாயிலாக உதவி புரிவதற்கென நமது தி.மு.கழகத்தின் சார்பில் ஐம்பதாயிரரூபாய் நிதி அனுப்பி வைக்கப்பட இருக்கிறது! சிறுதுளிதான் எனினும்; சிந்தை நொந்து சிந்திடும் கண்ணீர்த்துளி இது!

அன்புடன்

மு.க.

12-12-1988

1608. அன்புத் திருமுகம் காண வருகிறேன்!

உடன்பிறப்பே,

டிசம்பர் முதல் தேதியன்று தொடங்கிய கழக வேட்பாளர் நேர்காணல் பனிரெண்டாம் தேதி வரை ஓய்வின்றி நடைபெற்று - அதைத் தொடர்ந்து நானும், பேராசிரியரும் வேட்பாளர் பட்டியல் தயாரிக்கவும், இடையிடையே தோழமைக் கட்சிகளுடன் கலந்து பேசவும் - மாவட்ட நிர்வாகிகளை அழைத்து மீண்டும் மீண்டும் தொகுதி நிலவரங்கள் அறியவுமாக இன்று வரை பத்து நாட்கள் அல்லும் பகலும் உழைத்து, பணியினை முடித்திருக்கிறோம்!

மூவாயிரத்துக்கு மேற்பட்ட கழக உடன்பிறப்புகள், போட்டியிட முந்திக் கொண்டு வந்திருந்தாலும் கூட தோழமைக் கட்சிகளுடன் பகிர்ந்து கொண்டது போக சுமார் இருநூறு இடங்களுக்குத்தானே நாங்கள் வேட்பாளர்களைத் தேர்வு செய்ய முடியும்!

வாய்ப்பு கிட்டாதோர்; சிலர் வருந்துவர்! ஒரு சிலர் சினந்திடுவர்! 1957 முதல் தேர்தல் பணியாற்றுவோர் வரிசையில் இடம் பெற்றுப் பழக்கப்பட்டவன் என்ற முறையில் வேட்பாளர் பட்டியல் அறிவிப்பதற்கு முன்பு தோன்றும் சிக்கல்களையும் - அறிவித்த பிறகு ஏற்படும் ஆதங்கங்களையும் உணர்ந்தே இருக்கிறேன்!

இந்த முறை இவர் நிற்கட்டும் எனக் கூறி; எனவே விட்டுக்கொடுத்து - வெற்றிக்குத் துணை நிற்பீர்! எனக் கேட்டுக் கொண்டவுடன் சிரித்த முகத்துடன் தலையசைத்து ஒப்புதல் அளித்து அணுச் சஞ்சலமின்றி; கழக வேட்பாளருடன் களங்காணப் புறப்பட்ட அடலேறுகளை எண்ணிப் பார்க்கிறேன்! அணையுடைத்துக் கிளம்புகிறது மகிழ்ச்சி! இவர்களாலன்றோ இக்கழகம் இத்தனை நாள் - எத்தனையோ நெருப்புச் சோதனைகளைத் தாங்கிக்கொண்டு தலை நிமிர்ந்து நிற்கிறது என்ற பெருமிதம் என்னை ஆட்கொள்ளுகிறது!

அதிருப்தி சிலருக்கு இல்லாமலில்லை! தொகுதியைத் தோழமைக் கட்சிக்குக் கொடுத்து விட்டார்களே; என ஒரு வகை அதிருப்தி!

ஒரு பெருமூச்சுடன் அந்த அதிருப்தி விடைபெற்றுக்கொள்ள வேண்டுமேயல்லாமல் - கழகம் கட்டிக்காக்கும் கட்டுப்பாட்டுக்குக் கடுகளவு குந்தகமும் அதனால் விளையக்கூடாது! தோழமைக் கட்சி உடன்பாடு தேவை - ஆனால் தமது தொகுதியை மட்டும் கழகமே வைத்துக் கொள்ள வேண்டும் என்பது வலுவான வாதமே அல்ல! சொல்லப் போனால் அது வாதமே அல்ல!

தோழமைக் கட்சிகளுடன் பகிர்ந்து கொண்டுள்ள இடங்களிலும் கழகமே போட்டியிடுகிறது என்ற உணர்வுடன் ஒவ்வொரு உடன்பிறப்பும் அந்தத் தொகுதியில் அயராது பாடுபட வேண்டும். உடன்பிறப்பே; இது உனக்குப் பொருந்துவது போல; தோழமைக் கட்சிகளின் செயல்வீரர்களுக்கும் பொருந்தும்!

பணம், பகட்டு, படாடோபம், அதிகார துஷ்பிரயோகம், ஆணவப் பேச்சுக்கள், அறைகூவல்கள், இத்யாதி! இத்யாதி! இவற்றுடன் மோத வருவோரை வீழ்த்துவது குறிக்கோள்! தமிழகத்தில் பண்பார்ந்த அரசியல் ஒளிவிளக்கை ஏற்றி வைக்க வேண்டுமென்பதே நமது கோட்பாடு!

இது நிறைவேற வேண்டுமானால் நெஞ்சில் துளியளவு கசப்பு உணர்வு படரவும் இடம் தராமல் கழகத்தினரும் தோழமைக் கட்சியினரும் தோளோடு தோள் நின்று தொண்டாற்றிட வேண்டும்!

தோழமைக் கட்சிகளுக்குப் போக எஞ்சியுள்ள இருநூறுக்கு மேற்பட்ட தொகுதிகளில் - விருப்பு, வெறுப்பு எதற்கும் இடம் தராத சூழலை அமைத்துக் கொண்டு - வெற்றி வாய்ப்புத் தகுதியும் பொது வாழ்வுக்கான பிற தகுதியும் ஆராய்ந்து பார்த்து - திரும்பத் திரும்ப யோசித்து, நானும் பேராசிரியரும் வெளியிட்டுள்ள வேட்பாளர் பட்டியல் உன் கரங்களிலே இருக்கிறது!

மூன்று மாதங்களுக்கு முன்பே கழகத்திலுள்ள நண்பர்கள் சிலரை, மாவட்ட வாரியாகப் பிரித்து - தொகுதி நிலைமைகளை அறிந்திடவும், வேட்பாளர்களாக யார் நிற்கலாம் என்பதைக் கணித்து வரவும், தலைமையின் சார்பில் அனுப்பி வைத்தோம்!

கழகத்தினர் மாத்திரமின்றி, சில பத்திரிகை நிருபர்களையும் இந்தப் பெரும் பணிக்காக ஒற்றர்களாகத் தமிழக முழுதும் அனுப்பிவைத்தோம்!

அவர்கள் குவியல் குவியலாகக் கொண்டுவந்த தகவல் அறிக்கைகளை கடந்த மூன்று மாதங்கள் இரவெல்லாம் கண்விழித்துச் சலித்து எடுத்துக் குறிப்புகளைத் தயாரித்து வைத்துக் கொண்டோம்!

மூவாயிரத்துக்கு மேற்பட்டோர் அளித்திருந்த மனுக்களில் காணப்பட்ட விபரங்களோடு திருப்தி அடையாமல் - நேர்காணலில் அவர்களைத் தேவைக்கேற்ப விசாரித்தோம்! மாவட்டக் கழக செயலாளர்களின் கருத்துக்களைத் தொகுத்தோம்! ஒன்றிய நகரக் கழகச் செயலாளர்களின் பரிந்துரைகளை ஆய்வு செய்தோம்! நகராட்சித் தலைவர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள் வழங்கிய யோசனைகளையும் பரிசீலித்தோம்!

அவர் சொல்லி இவரைப் போட்டிருப்பார்களோ? அல்லது இவர் சொல்லி அவரைப் போட்டிருப்பார்களோ? என்று யாராவது நினைத்தால் - அது முற்றாகத் தவறு என்பதற்கேற்ப; அனைத்தையும் அக்கு வேறு ஆணி வேறு என்பார்களே - அதுபோலப் பகுத்துப் பார்த்து நானும் நமது பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்களும் - எங்களுக்குக் கழகம் அளித்துள்ள ஆணைக்கேற்ப எடுத்துள்ள முடிவுகளின் தொகுப்புத்தான் வேட்பாளர் பட்டியல்!

நான் முன்பே ஒரு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளேன்; சிபாரிசுகளுக்கு யாராவது சென்றால் கிடைக்கக்கூடிய வாய்ப்பும் கிடைக்காமல் போய்விடும் என்று! அதை இப்போது அனுபவத்தில் அவர்கள் தெரிந்திருக்கக்கூடும்!

கழக நிர்வாகிகளின் பரிந்துரைகள் கூட நீண்ட நேர சிந்தனைக்குப்பிறகு மாற்றப்பட நேரிட்டதென்றால் ஏற்கனவே சிரமப்பட்டு நடுநிலையுடன் தயாரிக்கப்பட்ட குறிப்புகளின் அடிப்படையே அதற்குக் காரணம்!

எனவேதான் உடன்பிறப்பே!
எதிர்பார்த்தோம் என்பதற்கோ,
ஏமாந்துவிட்டோம் என்பதற்கோ,

சற்றும் இதயத்தில் இடம் தராமல் - எல்லா மலரும் இந்த நந்தவனத்து மலரே; அவற்றில் சிலவற்றை எடுத்து மாலை கட்டுவதால் - மற்ற மலர்கள், மாலை கட்டிடத் தகுதியில்லை என்று பொருளல்ல! மாலைக்குத் தேவையான மலர்களைத்தானே பறிக்க முடியும் - என எண்ணி ஆறுதல் பெற்று; எழுந்திடுக! எழுச்சி நடை போட்டிடுக! என்று வேண்டுகோள் விடுக்கிறேன்!

தேர்தல் பணிகள் தொடங்கிவிட்டன! எல்லாக் கட்சிகளுமே வேட்பாளர் பட்டியல்களை வெளியிட்டு விட்டன! ஓ! மறந்துவிட்டேன்; இந்தக் கடிதம் எழுதும் இந்நேரம் வரையில் (22.12.88 காலை 9 மணி) காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் பட்டியலைக் காணவில்லை.

அதற்குள் டெல்லியிலிருந்து ஒரு அமைச்சர்; அறிக்கையுடன் குதித்திருக்கிறார்! அறிக்கையா அது? இல்லை! அறைகூவலுடன் குதித்திருக்கிறார்!

காங்கிரஸ் நிற்கும் தொகுதியில் நான் போட்டியிடாமல் காங்கிரசின் தோழமைக் கட்சி நிற்கும் தொகுதியில் நான் போட்டியிடுகிறேனாம்! அது எனது பயத்தைக் காட்டுகிறதாம்! அதனால் எனக்குப் போர்க் குணம் இல்லையாம்!

இப்படி வந்துள்ள மத்திய அமைச்சரின் அறிக்கை கண்டு நான் வருத்தப்படவில்லை! தனது தோழமைக் கட்சி; அதாவது துறைமுகத்தில் போட்டியிடுகிற கட்சி - பலவீனமானது என்று அந்த அமைச்சர் குத்திக் காட்டுகிறாரே என்பதற்காகத்தான் வருத்தப்படுகிறேன்! பாவம்; காங்கிரசும் அதன் தோழமையும்!

அதுபோகட்டும்; தேர்தல் தொடர்பாகத் தலைமைக் கழகத்திலிருந்து ஆற்றிட வேண்டிய பணிகளை வகுத்தளித்துவிட்டு - ஜனவரி முதல் வாரத்தில் உன்னையும் உன் போன்ற உடன்பிறப்புகளையும் கண்டிட; நேரிலே வர இருக்கிறேன்!

அதற்குள் உனது பணிகள், ஒவ்வொரு தொகுதியிலும் கொடிகட்டிப் பறக்க வேண்டும்!

கழக ஆட்சி அமைப்போம் எனக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறாய்!

அதற்கு எதிராகத் தட்டுப்படுகிற எதுவும்; உன்னால் அலட்சியப்படுத்தப்பட வேண்டியது என்பதை மறவாதே!

ஒரு மாதத்துக்கு மேலாக ஒரே இடத்தில் அமர்ந்து ஓயாத பணியாற்றி - உடல் களைப்பு மட்டுமல்ல; உள்ளத்திலும் பெரும் அழுத்தம்!

அந்த அழுத்தம் அகன்றிட - கூண்டுக்குள் சிக்கிக் குச்சிகளால் குத்துண்ட பறவை, சிறகடித்துக் கும்மாளம் போட்டுப் பறப்பது போல - உன்னை நோக்கி ஓடி வருவேன்!

அண்ணா அறிவாலயத்தில் உன் முகம் அனுதினமும் கண்டேன்!

அந்த முகம் போல் ஆயிரம், லட்சமென அன்புத் திருமுகங்கள் கண்டிட - மனப் புயல்; மந்தமாருதமாக மாறிட - கோடை அனலில் இருந்து, குற்றால அருவியோரம் வருவது போல்;

குளிர்தருவே!

கொள்கைத் தங்கமே!

அன்பு உடன்பிறப்பே!

வருகிறேன்! வந்து காண்கிறேன் விரைவில்! விரைவில்!!

அன்புடன்

மு.க.

23-12-1988

1609. தங்கங்களா? சருகுகளா?

உடன்பிறப்பே,

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யும் நாள் முடிந்துவிட்டது. களத்தில் நிற்கிறாய். மன்னிக்க வேண்டும். களத்தில் நிற்கிறோம். சற்றொப்ப பதின்மூன்றாண்டுக் காலம் அனுபவித்த கடுஞ் சோதனைகளுக்குப்பிறகு - தமிழகத்தில் நல்லொளி பரவிட நமது ஜனநாயகப் போராட்டம் வெற்றி பெற்றாக வேண்டுமென அண்ணா தந்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் படைக்கலன்கள் ஏந்திப் போர்முனை புகும் இந்த நேரத்திலேகூட, சில உடன்பிறப்புகளுக்குக் கோபதாபங்கள்! வருத்தங்கள்! மனமாச்சரியங்கள்! மறைத்திட விரும்பவில்லை நான்!

அழுக்கான கந்தல் உடையில் கறை பட்டால் கண்ணுக்குத் தெரிவதில்லை! தூய வெள்ளை உடையில் ஒரு புள்ளியளவு கறை ஏற்படினும் அது கண்ணை உறுத்தும்! அந்த வெள்ளை உடைதான் நமது கழகம்! இங்கொன்றும் அங்கொன்றுமாக ஒரு சில புள்ளிக் கறைகள் விழும்போதுகூட என்னால் தாங்கிக்கொள்ள இயலவில்லை.

ஏற்கனவே பதவிகளில் தொடர்ந்து இருந்தோர் - இப்போதுகூட ஏதோ ஒரு பதவியில் இருப்போர் - இந்தத் தேர்தலில் வாய்ப்பு கிட்டாதபோது பதைக்கின்றனர்! கழகத்தின் கட்டுக்கோப்பைச் சிதைக்கின்ற வேலையில் ஈடுபடுகின்றனர். இத்துணை ஆசையைப் பதவி மீது வைத்துக் கொண்டு இதுவரை இருந்தனரோ இவர் என எண்ணி வியந்திடும் அளவுக்கு அவர்களின் அவதி! வேதனை! ஆர்ப்பாட்டம்!

இந்நாள் வரையில் - பதவிப் பக்கம் திரும்பிப் பார்க்காத உடன்பிறப்புகள் - கஷ்ட நஷ்டங்களை ஏற்றுக்கொண்ட கண்மணிகள் - இந்த முறை வாய்ப்பு கிட்டாது வருந்திடும் நிலை காண, எனக்கும் அளவில்லாத சங்கடம்தான்! ஆனால் அந்த

நிலை சில இடங்களில்தான்! தொகுதிகளின் வெற்றி வாய்ப்பைக் கணக்கிடும் பொழுது ஏற்படுகிற தவிர்க்க முடியாத நிலை அது! விருப்பமுள்ளோர்க்குள்ள வசதிக் குறைவு! இத்துடன் எல்லாமே முடிந்துவிட்டது போன்ற ஒரு மனக் கிலேசத்தில் விளைகின்ற விரக்தியினால் - சினம், சீற்றம், சாபம் - இவை அனைத்தும் என்மீதென்றால் இன்முகத்துடன் தாங்கிக் கொள்கிறேன்! கழகத்தின் மீது கோபம் காட்டப்படுமேயானால் கலங்கிடுவேன்!

நாம் வளர்த்த கழகம் -

நாம் தூக்கிப் பிடித்த கொடி -

நாம் போற்றிய கட்டுப்பாடு -

நம்மில் ஒருவருக்கு ஒரு வாய்ப்பில்லை என்பதற்காக நலிந்து போகட்டுமென எண்ணிச் செயல்படுவது ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல!

கட்டுப்பாடு மீறுவது என்பது கயிறை அறுத்துக்கொண்டு துள்ளிடும் கன்று போல ஆரம்பப் பரபரப்பு இருக்கும்! ஆனால் துள்ளிய கன்று தடம் புரியாமல் கேணியில் விழுந்தது போல பலரின் எதிர்காலம் ஆகியிருப்பதை, இன்றைக்குக்கூட பத்திரிகைகளில் படித்துக் கொண்டிருக்கிறோம்.

உடன்பிறப்பே, இந்த ஒரு சிலர் - அதுவும் மிகச் சிலர் - எண்ணிக்கையில் அதிகமில்லையெனினும் - என் இதயத்தில் என்றுமுள்ளோர் என்ற காரணத்தால், கனிவாகவும் கேட்டுக் கொண்டிருக்கிறேன்! உரிமை காரணமாக கடிந்தும் பேசியிருக்கிறேன்! அவர்கள் ஆறுதல் பெற்று - ஆர்வமுடன் கழக வெற்றிக்கான, கட்டுப்பாடு காத்திட முன்வர வேண்டும்! வர மறுப்பின் - அவரை விடுத்து மற்ற கழக உடன்பிறப்புகள் கழக வெற்றிக்குத் தங்களை ஒப்படைத்துக் கொள்ள வேண்டும்.

தோழமைக் கட்சிகளுக்கு இடம் ஒதுக்கியதிலேகூட சில இடங்களில் நமது உடன்பிறப்புகளுக்கு மனக்குறை! கூழுக்கும் ஆசை - மீசைக்கும் ஆசை என்ற பழமொழிதானே ஞாபகத்துக்கு வருகிறது! உடன்பாடு வேண்டும், ஆனால் இந்தத் தொகுதியை விடக்கூடாது என்பது விதண்டா வாதம்! அண்ணா காலத்திலிருந்து தொடருவதுதானே தோழமை அணி! இன்று திடீரென ஏற்பட்டதல்லவே! இதனைச் சிந்தித்து - இக்கணமே, எல்லாத்

தொகுதிகளும் கழகத் தொகுதிகளே என்ற மனப்பக்குவத்துடன் நமது அரசியல் நேர்மையை நிரூபித்திட வேண்டும்!

ஐந்து தொகுதிகள் - வேட்பாளர் பெயர்கள் அறிவிக்கப்பட்ட தொகுதிகள் - திடீரென ஜனதாதளக் கட்சிக்கென ஒதுக்கப்பட்டு - அறிவிக்கப்பட்ட நமது வேட்பாளர்களைத் திரும்பப் பெற வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது! அந்த வேட்பாளர்கள் உள்ளம் எவ்வளவு வேதனையுற்றிருக்குமெனக் கவலைப்பட்டேன்! ஆனால் அவர்களில் விருத்தாசலம் செல்வராஜ் அவர்கள் நேரிலேயே வந்தார்! கட்சிக்காக நான் போட்டியிலிருந்து விலகிக் கொள்கிறேன், என்று கூறினார்! அப்போது என் கண்கள் பனித்தன! தெலுங்கு தேசக்கட்சிப் பொதுச்செயலாளர் உபேந்திரா எம்.பி., அப்படியே செல்வராஜைத் தழுவிக்கொண்டு - அவரது கட்டுப்பாட்டுணர்வுக்குத் தலைவணங்குவதாகக் கூறி மகிழ்ந்தார்! இதனை நான் நமது நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தியிடம் இன்றைக்குத் தெரிவித்தபோது என் உடல் முழுதும் சிலிர்த்துவிட்டது! நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி இந்தத் தேர்தலில் தொகுதி கேட்டு மனுப் போடாதவர் என்பதும், மாவட்டத்தில் கழகத்தை வெற்றி பெறச் செய்ய பாடுபடுவேன் என்று கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேபோல் நமது எஸ்.கே. வடிவேலு; வெள்ளை உள்ளத்துக்குச் சொந்தக்காரர் - திருவரங்கம் தொகுதியில் பல்லாயிரவர் சூழ வேட்பு மனு தாக்கல் செய்தவர்; அதனைத் திரும்பப் பெற்றுக்கொள்வதாகத் தொலைபேசி மூலம் கூறியதோடு அங்கு ஜனதாதள வேட்பாளரை வெற்றி பெறச் செய்ய உழைக்கிறேன் என உறுதி கொடுத்து உரைத்தபோது - அந்தக் குரலில் எந்தத் தடுமாற்றமும் இல்லை! கழகத்திற்குள்ளேயே மறுபரிசீலனை காரணமாக திடீரென ஏற்பட்ட மாற்றத்தில் மற்றொரு வேட்பாளருக்காக விட்டுக் கொடுத்து, கழக வெற்றிக்குப் பாடுபடும் உடன்பிறப்புகளையும் காண்கிறேன்! கழகத்திற்கு மனுச்செய்து - போட்டியிட வாய்ப்பு பெறாத உடன்பிறப்புகள் பலரையும் காண்கிறேன்! எங்கே? எல்லோரும் தேர்தல் களத்தில்! தி.மு.கழகத்தின் வெற்றிக்காக!

கழகம் ஆட்சிக்கு வந்தால் போதும்! என அன்றைக்கு மேடைதோறும் முழங்கியதை இன்றைக்கும் மெய்ப்பிப்பவர்கள் அவர்கள்!

அவர்தம் கழகப்பற்றுக்கு - கொள்கைப்பற்றுக்கு - என் நெஞ்சில் நிரந்தரமான இடம் உண்டு! மறந்திடேன் அவர்களை; நான் மறையும் வரையில்!

வாய்ப்பு; ஒரு சிலருக்கு மட்டுமே சொந்தமன்று! பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய ஒன்று! சில நேரங்களில் சில விதிவிலக்குகள்! வியூகம் அமைக்கும்பொழுது; அந்தப் பொறுப்பை; தலைமையிடமே ஒப்படைத்து விட வேண்டும்!

பொதுக்குழு - செயற்குழு - நிர்வாகக் குழு - மாவட்ட, ஒன்றிய, அமைப்புகளின் நிர்வாகிகள் என எத்தனை மட்டத்தில் ஆய்வு செய்து தலைமையின் முடிவுகள் எடுக்கப்படுகின்றன என்பதை மறந்து விடக் கூடாது!

37 வழக்கறிஞர்கள்

26 பட்டதாரிகள்

11 டாக்டர்கள்

7 மகளிர்

இஃதன்னியில் பெரும்பான்மையான படித்த இளைஞர்கள், மூத்த முன்னோடிகள் - இப்படி அமைந்துள்ளது நமது கழகத்தின் வேட்பாளர் பட்டியல்! அனைவரும் பாராட்டுகின்றனர்! அக மகிழ்கிறோம்! இந்தப் பட்டியலில் இடம் பெற இயலவில்லையே என்ற ஆதங்கம் இருக்கலாம் - ஆனால் இதற்கு முன்பு இடம் பெற்றிருந்த பட்டியல்களை அவர்கள் நினைவுபடுத்திக் கொண்டும் - இதுவரையில் எந்தப் பட்டியலிலும் இடம் பெறாதோர், இதுவே கடைசி வாய்ப்பு எனக் கருதிக் கொள்ளாமலும் ஆறுதல் பெற்றிடல் வேண்டும்!

சோதனைகள்தான் ஒருவரை, அவர் இருக்கும் கட்சிக்கும் - நாட்டுக்கும் அடையாளம் காட்டக் கூடியவை!

நெருப்பில் காய்ச்சப்படும் இரும்புத் துண்டு வாளாகும்! வேலாகும்!

தங்கமோ அணிமணியாகும்!

சருகுகளாயிருப்பின்; அவை சாம்பலாகும்!

எனவே; இந்தப் பரிட்சையில் வெல்பவர் எவரோ அவரே என் உடன்பிறப்பாக ஒளிவிடுவர்!

எத்தனை இடர்வரினும் தாங்கிடும் இதயம் பெற்று - வெற்றி; அதுவே வந்து நமது வாசலில் நிற்கும் என மெத்தனமாக இராமல்; கடும் உழைப்பை நல்கி;

காரிருள் அகன்றிட

கதிர் வெளிச்சம் மேவிட

திட்டமிட்டுக் கட்டுப்பாட்டுடன் பணிபுரிந்திடுக!

அன்புடன்

மு.க.

27-12-1988

1610. உன் பார்வையே எனக்கு வாழ்த்து!

உடன்பிறப்பே,

குற்றாலத்துத் தேனருவியென கொட்டிக்கொண்டிருக்கிறாய் அன்பை - பாசத்தை - அதன் காரணமாக எழும் வாழ்த்துக்களை!

இன்று நேற்றல்ல, ஐம்பது ஆண்டுக் காலமாக என் இதயத்தில் ரணம் ஏற்படும் பொழுதெல்லாம் உன் பார்வையே எனக்கு மாமருந்து! நீ பொழியும் அன்பே என்னை வாழவைக்கும் அமுதம்!

பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்பு - ஜனநாயகத்தைக் காத்திட ஆட்சியையே விலையாகக் கொடுத்திடத் துணிந்தபோது இதே ஜனவரித் திங்கள் இறுதி நாள் மாலையில்தான் கோட்டையைவிட்டு வெளியேறச் சொல்லிக் கொக்கரித்தது டெல்லியின் எதேச்சாதிகாரம்!

பள்ளிவிழா ஒன்றுக்குச் சென்று விட்டு, வீட்டுக்குள் நுழைகிறேன்.

ஆட்சி கலைக்கப்பட்டது என்ற செய்தியை வீட்டார் சிரித்துக்கொண்டே சொன்னார்கள்.

அப்படியா எனக்கேட்டவாறு - அரசின் கார்களை வாயிலில் இருந்தவாறே தலைமைச் செயலகத்துக்கு அனுப்பிவிட்டு மாடிக்குச் சென்றேன்.

தொலைபேசியை எடுத்தேன்; விபரமறிவதற்காக! அதன் தொடர்பை அரசாங்கம் துண்டித்து விட்டிருந்தது!

சில விநாடிகளுக்கெல்லாம் போலீஸ் அதிகாரிகள் வீட்டுக்குள் சோதனையிட்டனர்! என்ன வேண்டும்? என்றேன்! மாறனும், ஸ்டாலினும் வேண்டும் - அவர்களை சிறைக்கு அழைத்துச்செல்ல வேண்டுமென்றனர். அவர்கள் வந்ததும் அனுப்பி வைக்கிறேன்

என்றேன்! வந்தனர்! அனுப்பி வைத்தேன்; ஓராண்டுக் காலம் மிசாக்கைதிகளாக!

இருவர் மட்டுமா? என்னுயிரனைய கழகக் கண்மணிகள் சுமார் நானூறு பேர் அன்று இரவுக்குள் காராக்கிரகத்தில்!

சென்னை சிறையிலோ - அடைபட்டிருந்த கழக மாமணிகள் அனைவர்க்கும் அடி! உதை! சித்ரவதை! அந்தக் கொடுமையான நிகழ்ச்சி தானே கொள்கைத் தங்கம் சிட்டிபாபுவைக் கொத்திக்கொண்டு போனது! அதேபோல சிறையில் மிசாக் கைதியாக பிணமானார் சாத்தூர் பாலகிருஷ்ணன்!

முடியவில்லை அராஜக வெறியாட்டம்! வீடுகள் சோதனை! இதோ இப்போது உட்கார்ந்து எழுதுகிறேனே; முரசொலி அலுவலகத்தில் இப்படி எழுதிக் கொண்டிருந்தபோது அதிகாரிகள் பலர் ஆர்ப்பாட்டமாக நுழைந்தனர்! நிமிர்ந்து பார்த்தேன்! அலுவலகம் சோதனை என்றனர்! ஆகட்டும் நடத்துங்கள் எனக்கூறிவிட்டு - நான் எழுதிக் கொண்டேயிருந்தேன்!

ஆம்; ஆட்சி ஏன் கலைக்கப்பட்டது என்பது குறித்து அன்று எழுதிக் கொண்டிருந்தேன்!

இப்போது - தமிழர்கள் மீண்டும் கழகத்தின் கரத்தில் ஆட்சியை ஒப்படைத்துள்ளனர் - இந்த நேரம் முரசொலி அலுவலகத்திலிருந்து இந்தக் கடிதம் எழுதுகிறேன்; உனக்கு!

தியாகத் தழும்புகளைத் தடவிக் கொண்டு நீயும் நானும் அகமகிழ்கிறோம்! அடக்குமுறையால் ஏற்பட்ட வடுக்களை வருடிக்கொண்டே கிடைத்த வெற்றி குறித்துப் பூரித்துப் போகிறோம்!

என் மீது துரும்பு படவும் பொறுத்துக் கொள்ள முடியாமல் துடிக்கும் தாயைப் போல உன் போன்ற உடன்பிறப்புகள் என்னைச் சுற்றிலும் நிறைந்திருப்பதால் - முகிலைக் கிழித்து வெளிக்கிளம்பிய கதிரொளியன்ன இந்த வெற்றிகண்டு உற்சாகப் பெரு வெள்ளத்தில் மிதக்கிறீர்கள்; புரிகிறது எனக்கு!

13 ஆண்டுகள் அத்துணை வேதனை! அவ்வளவு சோதனை! அனைத்தையும் பொறுத்துக்கொண்டு அண்ணா வழியில் முன்னேறியவர்கள் அல்லவா? அதனால் மகிழ்ச்சி; எல்லை மீறுவது இயற்கையே!

எனினும் அமுதங்கூட அளவுக்கு மீறினால் நஞ்சாகும் என்பரே!

அடக்கம்! அமைதி! ஆர்ப்பாட்டமின்றி மகிழ்ச்சி உணர்வு வெளிப்படுதல்!

தகத்தகாயமாகத் தங்கநிறக் குழந்தை! அழகே வடிவு! அற்புதத் தோற்றம்! குழந்தை என்பதால் அதிகம் குலுக்காமல் கொஞ்சிடுவதுதானே முறை! குழந்தையின் நலத்துக்கும் பாதுகாப்பு!

அதே குழந்தைதான் நீயும் நானும் பெற்றிருக்கும் இந்த வெற்றி என்பதை மறந்திடாதே!

தமிழ் மக்கள் எந்தப் பணிக்காகப் பெரும்பொறுப்பை நமது தலையில் ஏற்றி வைத்திருக்கிறார்களோ; அந்தப் பணியினை ஆற்றிட எமக்கு வழிவிடு! அந்தப் பணியின் வெற்றிக்கு உன் தூய்மையான ஒத்துழைப்பைத் தந்திடு!

என்னில் நீ இருக்கிறாய்! உன்னில் நான் இருக்கிறேன்!

என்னை நீ வாழ்த்தவில்லை; உன்னையே நீ வாழ்த்திக்கொள்கிறாய்!

இருவரும் இணைந்து நமது தாயை ஆம்; நமது தமிழ்க்குலத்தை வாழவைப்போம்! வா!

மணியே! என் மாமணியே! பணியாற்ற விடு! உன் பாசமறிவேன் நான்! என்றும் என் இதயத்தில் உன்னை வைத்துக் கொண்டு, உன் இதயத்தில் குடிபுகுந்திருக்கும் எனக்கு எதற்காக வாழ்த்து?

உன் பார்வையே எனக்கு வாழ்த்து! என் பணிக்கு ஊக்கம்!

அன்புள்ள,

மு. க.

26-01-1989

1611. ஆக்கப் பணி! அதுவே எனக்கு ஊக்கப் பணி!

உடன்பிறப்பே,

13 ஆண்டுகளுக்குப் பிறகு - எத்தனையோ வேதனைகள், சோதனைகள், மிசாக் கொடுமைகள், சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் இருந்து வெளியேற்றம், சட்டமன்ற உறுப்பினர் பத்து பேர் பதவி பறிப்பு, இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து ஐம்பதாயிரம் பேர் சிறையில் - அப்போதும் சிறைச் சாவுகள், இலங்கைத் தமிழருக்காக அறுபதாயிரம் பேர் சிறையில், அப்போதும் சிறைச் சாவுகள், தீக்குளித்து இருபது பேர் மரணம் - கழகத் தலைவர்கள் வீட்டுக் குடும்பப் பெண்களை விமான நிலையத்தில் கேவலப்படுத்திய நிகழ்ச்சிகள் - வீடுகள் சோதனைகள், திருட்டுக் குற்ற வழக்குகள், கொலை வழக்குகள், இத்தனை சேடிஸ்ட் சேட்டைகளுக்கும் ஈடுகொடுத்து, கழகத்தைக் கட்டிக் காத்து ஆட்சிப் பொறுப்பேற்று ஏழை எளிய மக்களுக்காக, மாணவருக்காக, மகளிருக்காக, தொழிலாளிகளுக்காக, தொழில் வளர்வதற்காக, தமிழ் வாழ - தமிழர் உரிமை பெற - வரவு செலவுத் திட்ட அறிக்கை படிக்க முற்பட்டபோது அந்த அறிக்கையைப் பிடுங்கியும், அதைத் தடுக்க முயன்ற என் முகத்தில் குத்தி மூக்குக் கண்ணாடியை உடைத்தும், அறிக்கையைக் கிழித்தும் - அதன் தொடர்பான பல அசம்பாவிதங்கள் நடந்தும்கூட, திரு. சி. சுப்பிரமணியம் போன்ற பெரியவர்கள், மற்றும் சில நடுநிலை நாளேடுகள், வார இதழ்கள் விடுத்த அறிவுரைகளை உடனடியாக ஏற்று, சட்டமன்றத்துக்கு எதிர்க்கட்சியினர் வருகை தரவேண்டுமென்று அழைப்பு விடுத்ததோடு, வன்முறைத் தொடர்பில்லாத வழக்குகள் திரும்பப் பெறப்பட ஆணையிடப்பட்டு, முன்கூட்டி கைதானவர்கள் விடுவிக்கப்பட்டு, முதல்வரை தாக்கியதைக் கண்டித்து 2-ந் தேதி முதல் 9-ந் தேதி முடிய மாநில முழுதும் அறிவிக்கப்பட்டிருந்த கண்டனக் கூட்டங்களைக்கூட மாற்றி அமைத்து, அந்த

கூட்டங்களை நிதிநிலை அறிக்கை சாதனைக் கூட்டங்களாக நடத்துமாறு தலைமைக் கழகம் அறிவிப்பு விடுத்த பிறகும்கூட - அ.தி.மு.க.வினரும், காங்கிரசாரும் தி.மு.க.வைக் கண்டித்துக் கூட்டங்கள் நடத்திடப் பட்டியல்களை வெளியிட்டுள்ளனர்.

தி.மு.க.வுக்கு அறிவுரை கூறிய சி.எஸ். போன்ற பெரியவர்கள், எல்லாக் கட்சிகளுக்கும்தான் அறிவுரை கூறினர். அதனை ஏற்பது நமது பொறுப்பு உணர்வைப் புலப்படுத்துகிற செயல்! ஏற்காமல் செயல்படுவோர் குறித்து நாம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை!

உடன்பிறப்பே, கழகத் தலைவன் என்ற முறையில் கேட்டுக்கொள்கிறேன். கடந்த 25-ந் தேதி நான் நிதிநிலை படிக்கத் தொடங்கும்போது அமளி நடத்தத் திட்டம் தீட்டப்பட்டது எனக்கு முன்கூட்டியே தெரிந்த காரணத்தால் நமது சட்டமன்ற உறுப்பினர்களை கோழைகள் போல அமைதியாக இருக்குமாறு கேட்டுக் கொண்டேன். கெஞ்சிக் கேட்டுக் கொண்டேன். ஆம், நிதிநிலை அறிக்கையும், அதன் பயன்களும் மக்களைப் போய்ச் சேர வேண்டும் என்பதற்காக!

என்னை கிரிமினல் என்று எதிர்க்கட்சித் தலைவி சொன்னபோதுகூட அவையில் நமது உறுப்பினர்கள், அச்சடித்த பதுமைகள் போல்தான் ஆடாது அசையாது அமர்ந்திருந்தனர்.

ஆனால், தங்களின் தலைவன் மீது தாக்குதல் நடப்பதை, அந்த உடன்பிறப்புகள் பொறுத்துக் கொள்ள முடியவில்லை!

நான் அவையில் சொன்னது போல நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும்! இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும்!

இந்த வாசகம் யார் சொன்னது தெரியுமா? எப்போது தெரியுமா?

1945-ல் புதுவைக் கழக மாநாட்டையொட்டி என்னை அடித்துத் துவைத்து செத்துவிட்டான் என்று தெருவிலே போட்டுவிட்டுப் போய்விட்டார்களே, அதனையொட்டி அந்த மாநாட்டில் அண்ணன் தளபதி அழகிரி சாமி அவர்கள் உருக்கமுடன் பேசிய வாசகம்தான் அது!

எனவே, நான் தாக்கப்பட்டது, இந்த ஒருமுறைதான் என்றல்ல! 1967 தேர்தலின்போது சென்னைக் கோட்டூரில்

என்மீது எவ்வளவு பெரிய தாக்குதல்! அன்று இரவெல்லாம் அண்ணா அவர்கள் விழித்திருந்து என்னைத் தேடியலைந்தாரே! இப்படி எத்தனையோ? ஆனால் முதன் முறையாக இப்போது சட்டசபையில்! அந்த அனுபவமும் வேண்டும்தானே!

என்னைக் காத்திட ஓடிவந்த தம்பிகள் வீரபாண்டிக்கும், சுப்பிரமணியம் எம்.எல்.ஏ.க்கும் காயங்கள்! ரத்த வெள்ளத்தில் மிதந்தனர்!

எதிர்க்கட்சியில் உள்ளோர் தாக்கப்பட்டதும் - ஆம், அந்த விரும்பத்தகாத நிகழ்ச்சிகளும் - தொடர் சம்பவங்களாகி, நல்லோர் நெஞ்சினைத் துளைத்திடத்தான் செய்கின்றன!

நான் தாக்குண்டதைவிட எனக்குள்ள பெருங்கவலை - பட்ஜெட் படிக்கும் நாளை அமைதியற்ற நாளாக ஆக்கிவிட்டார்களே என்பதுதான்!

எத்தனை இடையூறுகள் வரினும் நாம் நமது பணிகளைத் தொடருவோம்!

ஏப்ரல் 2 முதல் 9 முடிய மட்டுமல்ல; அதற்குப் பிறகும்கூட கழக அரசின் நிதிநிலை அறிக்கையை ஊர்தோறும் விளக்கிடும் ஆக்கப் பணிகளில் உடன்பிறப்புகள் அனைவரும் ஈடுபட வேண்டுகிறேன்.

அந்த ஆக்கப்பணிகள், செயல்வடிவம் பெற்று உரிய பலன்கள் மக்களைப் போய்ச் சேருகின்றனவா என்றறிந்து தெரிவிக்கும் வகையில் அமைதல் வேண்டும்.

அமைதி காத்திடவும் - கடுகளவு வன்முறையும் எழாமலும் - பொறுமையைப் பெரிதும் கடைப்பிடித்து - அண்ணா அடிக்கடி கூறுவது போல சந்துமுனை சிந்துபாடிகளின் பேச்சுக்கும் ஏச்சுக்கும் செவி மடுக்காமல் மக்களை அணுகி அவர்தம் குறைகள் களைந்திட ஆக்கப் பணி! ஆக்கப் பணி! அதுவே என்னை என் பணியில் உற்சாகப்படுத்தும் ஊக்கப் பணி! இதனை உணர்ந்து செயல்படுக, உடன்பிறப்பே,

அன்புள்ள,

மு. க.

03-04-1989

1612. இதனை நீ புரிய வைத்தால் போதும்!

உடன்பிறப்பே,

தமிழ்நாட்டில் காங்கிரஸ்காரர்கள் ஜனநாயகத்தைக் காத்திடப் புறப்பட்டிருக்கிறார்கள். யாரோடு சேர்ந்து தெரியுமா? அய்யோ! 1988 ஜனவரி 28ந் தேதி எங்கள் முதுகில் குத்தி விட்டார்கள் காங்கிரசார்! என்று அலறியவர்களுடன் சேர்ந்து!

இந்திரா காங்கிரஸ்காரர்களின் இருதயத்தை எடுத்து சூப்பு வைத்து சாப்பிடுவோம்! என்று சபதம் செய்து பகிரங்கமாக அறிக்கை விட்டவர்களுடன் சேர்ந்து!

மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் என்று பாரதியின் பாடலைப்பாடிக் கொண்டு - விம்மி விம்மி எழுமாம் உணர்வு அலைகள்! பொங்கிப் பொங்கி எழுமாம் கண்டனக் கணைகள்! தமிழக சட்டப் பேரவையின் ஜனநாயகம் காப்போம்! என்று ஒலியெழுப்புவார்களாம்! இப்படியொரு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஏடுகள்தோறும் ஒரு பக்க விளம்பரக் கூட்டங்களை அறிவித்து - மேற்சொன்ன வாசகங்களையும் வெளியிட்டிருக்கிறது!

சட்டமன்ற ஜனநாயகத்தை 1988 ஜனவரி 28ந் தேதி இவர்கள் எப்படிக் காத்தார்கள் என்பதற்கு - சட்டசபைக்கு வெளியே ஆளுக்கு ஒரு உடைக்கப்பட்ட மைக்கினைக் கையில் வாள் போல ஏந்திக் கொண்டு வந்தார்களே - அந்தப் புகைப்படங்கள் எல்லா ஏடுகளிலும் வந்ததே, அது ஒன்றே தகுந்த சான்றாகும்!

ரத்தம் சொட்டச் சொட்ட சட்டசபைக்கு வெளியே எடுக்கப்பட்ட டி.வி. காட்சிகள் அன்றைக்கே நாடு முழுதும் காட்டப்பட்டதே, அது போதாதா இவர்கள் சட்டமன்றத்தில் ஜனநாயகம் காத்திட்ட அழகுக்குச் சாட்சி சொல்ல!

இப்போதுதான் என்ன? கவர்னர் அறிவித்த நாளில் அரசியல் சட்ட விதியின்படி சட்டப் பேரவையில் பட்ஜெட் தாக்கல்

செய்யப்பட வேண்டும். அவ்வாறு 25.3.89 காலை 11 மணிக்கு முதலமைச்சராகவும் நிதியமைச்சராகவும் இருக்கிற நான், ஜனநாயக முறைப்படி - அரசியல் சட்ட விதிப்படி பட்ஜெட் தாக்கல் செய்ய அவைக்குள் நுழைகிறேன்.

நடந்தது என்ன? பட்ஜெட் தாக்கல் செய்ய வந்தவன் மீது தாக்குதல்! பட்ஜெட் புத்தகத்தின் மீதே தாக்குதல்! பிறகு அமளிகள் - அசம்பாவிதங்கள் இதோ நான் எழுதவில்லை - பின்வரும் வரிகளை இதயம் பேசுகிறது இதழ் எழுதுகிறது! காங்கிரஸ் கட்சிக்காரரான நண்பர் மணியன் அவர்களின் ஏடு அது!

தமிழக சட்டமன்றத்தில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்ட அன்று நடந்த கலவரங்களுக்கு காங்கிரஸ் கட்சி எம்.எல்.ஏ. குமரி அனந்தன்தான் பிள்ளையார் சுழியிட்டார் என்பதை யாரும் மறுக்க முடியாது. அதன்பின் காங்கிரஸ் கட்சி நடந்து கொள்கிற விதம் முன்கூட்டியே திட்டமிட்டு இப்படிப்பட்ட கலவரத்தைத் தூண்டி விட்டுள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்துகிறது. இது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தி.மு.க. அரசை, கவிழ்க்க தீட்டப்படும் சதித் திட்டங்களில் ஒரு பகுதி என்பதை மக்கள் தெளிவாக உணர்ந்திருக்கிறார்கள். இது காங்கிரசை மேலும் பலவீனப்படுத்த உதவுமேயல்லாமல் வளர்க்க உதவாது, காங்கிரஸ் இந்த ஆபத்தான அரசியல் அணுகுமுறையைக் கைவிடாவிட்டால், காங்கிரஸை மக்கள் நிராகரிப்பதை யாராலும் தடுக்க முடியாது.

உடன்பிறப்பே, காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சியில் ஆசையுள்ள - அக்கறையுள்ள - நண்பர் மணியனின் ஏடு எழுதும் கருத்து இது!

எதிர்க்கட்சித்தலைவி தனது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்து தனது கைப்படவே கடிதம் எழுதுகிறார். எதிர்க்கட்சித்தலைவி, தனது கைப்பட எழுதிய கடிதத்தைப் பயன்படுத்தி, அவரைப் பதவியிலிருந்து விலக்கியிருக்க முடியும். ஆனால் அப்படிச் செய்யவில்லை. அதற்கு மாறாக, எதிர்க்கட்சித் தலைவியிடம் விளக்கம் கேட்கப்பட்டு, விளக்கத்தைப் பெற்றபிறகு - ராஜினாமா ஏற்கப்படவில்லை என்று சபாநாயகரால் அறிவிக்கப்படுகிறது!

அதற்குப்பிறகும் பட்ஜெட் படிக்கிற நாளில் - பட்ஜெட்டைப் படிக்கவிடாமல் காங்கிரசும், அ.தி.மு.க.வும் சேர்ந்துகொண்டு அமளியை ஆரம்பிப்பதற்குப் பெயர் ஜனநாயகமாம்! அந்த

ஜனநாயகத்தைக் காத்திடத்தான் எல்லா ஊர்களிலும் கூட்டமாம்! ஏராள செலவில் ஏடுகளில் முழுப் பக்க விளம்பரமாம்!

மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் என்று பாரதி பாடிய அந்த எழுச்சி வரிகள், 1988 ஜனவரி 28-ந்தேதி சட்டசபையில் கடுமையாகவும் - கொடுமையாகவும் தாக்கப்பட்ட திருமதி யசோதா அம்மையாருக்குப் பொருந்தாதோ என்னவோ எனக்குப் புரியவில்லை. ஆவேசமாகவும் - ஆபாசமாகவும் - அவதூறாகவும் - அந்தக் கூட்டங்களில் கண்டபடி பேசிடக்கூடும்!

உடன்பிறப்பே, உன் போன்றோர் அதைக் காதில் போட்டுக் கொள்ளக்கூடாது! காதில் விழுந்தால்தானே உனக்கு இதயம் துடிக்கும்! அதனால் ஒதுங்கிப்போய்விடு! ஒதுங்கிப்போவது அச்சத்தின் காரணமாக என்று அறிவுடையோர் கூறமாட்டார்கள்!

அறிவுடையோர், அசிங்கம் கண்டால் ஒதுங்கித்தான் போவார்கள்!

நாட்டுக்கு, மக்களுக்கு - நாமும் நமது அரசும் ஆற்றிட வேண்டிய பணிகள் ஏராளமிருக்கின்றன!

அதனை நாமும் - நமது தோழமைக் கட்சிகளுடன் இணைந்தும் அமைதியான முறையில் ஆற்றிடுவோம்.

அவர்கள் மேற்கு வங்க சட்டமன்றத்தில் கவர்னரையே தாக்கியவர்கள் - இங்கு சட்டமன்ற ஜனநாயகம் பற்றிப் பேசிட கூட்டம் நடத்துகிறார்கள்!

அதுவும் யாருடன் சேர்ந்து என்பதுதான் முக்கியம்!

இதனை நீ, மக்களுக்குப் புரியவைத்தால் போதும்

நமதுவழி அண்ணாவழி - அமைதிவழி!

அன்புள்ள,

மு. க.

07-04-1989

1613. காஞ்சி விழாவில் கலந்து கொள்ளும்போது!

உடன்பிறப்பே,

இந்த ஜூன் 3ஆம் நாள் 66-ல் அடியெடுத்து வைக்கின்றேன்.

44ஆம் வயதில் அடியெடுத்து வைத்தபோது கலைவாணர் அரங்கில் (அன்றைய பாலர் அரங்கம்) நடந்த விழாவில் நான் கலந்துகொள்ளாமல் மன்னைக்கு ஓடி ஒளிந்துகொண்டேன்.

எனினும் அந்த விழாவில் அண்ணா அவர்கள் கலந்துகொண்டு ஆற்றிய பேருரையும் எனக்களித்த பிறந்தநாள் விழா பாராட்டும் என் வாழ்வில் நான் பெற்ற பெரும் பேறு! அண்ணா அன்றைக்கு ஆற்றிய உரையை என்றைக்கும் நான் - சிலம்பைப்போல், குறளைப்போல், சங்கத் தமிழைப் போல் சிந்தையில் வைத்துப் போற்றி வருவேன்! வருகிறேன்!

தண்டவாளத்தில் தலைவைத்துப் படு என்றாலும், அமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொள் என்றாலும் இரண்டையும் ஒன்றாகக் கருதுபவன் என் தம்பி கருணாநிதி

என அண்ணா 1968-ல் எனது 44வது பிறந்தநாளில் கூறியது என் மறைவுக்குப் பிறகும் மறையாமல் என் வாழ்க்கை ஏட்டில் வாழப் போகும் வாசகமன்றோ!

ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது வந்த பிறந்தநாள் விழாக்களில் எல்லாம் அரசுச் சார்பில் பல சமூக நலப்பணிகளை ஆற்றிட நிதி வழங்கிட வேண்டுகோள் விடுத்தேன். அளிக்கப் பெற்ற நிதியினைக் கொண்டு அப்பெரும் பணிகளை அரசின் வாயிலாக ஆற்றினேன்.

1976க்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பில் இல்லாதபோது நடந்த பிறந்தநாள் விழாக்களில் திரட்டப்பட்ட நிதிகள் அண்ணா

அறிவாலயத்திற்காக! கழக வளர்ச்சிக்காக! கழகம் ஈடுபட்ட தேர்தல் பணிகளுக்காக! தமிழ் ஈழப் போராளிகளுக்காக!

இப்போது மீண்டும் ஆட்சிப் பொறுப்பில் உன் உழைப்பினால் - தமிழ் மக்களின் ஆதரவினால் அன்பினால் அமர்த்தப்பட்டுள்ள நிலை!

அரசின் சார்பில் ஏழை எளியோர் ஆதரவற்றோர் எனப் பாதிக்கப்பட்டோர்க்கு உரிய உதவிகளைச் செய்ய முதலமைச்சர் நிவாரண நிதிக்கு வழங்கிடுக என இந்த ஆண்டு பிறந்தநாளில் கேட்டுக்கொண்டுள்ளேன். நீயும் வழங்கிடுவாய் என அறிய மாட்டேனா என்ன!

இன்று ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் நான் 13 ஆண்டுகளுக்கு முன்பு 1976ல் ஆட்சி கலைக்கப்பட்டபோது எமர்ஜன்சி காலத்துப் பிறந்தநாளில்; உடன்பிறப்பே! நான் எழுதிய கடிதத்தை முரசொலியில் முழுவதுமாக வெளியிட தணிக்கை அதிகாரி அனுமதிக்கவில்லை.

கழக மாமணிகள் நானூறுக்கு மேற்பட்டோர் மிசா கைதிகளாக சிறையில்!

பிறந்தநாள் செய்தி கடிதம்கூட முரசொலியில் வெளியிட சென்சார் அடக்குமுறை!

அதனை எதிர்த்து ஜூன் 2ஆம் நாள் காலை 10 மணிக்கு அண்ணா சாலையில் நானே அறப்போரில் ஈடுபட்டேன்! என்னுடன் நண்பர் இளமுருகு பொற்செல்வி! தடுத்தும் கேளாமல் என்னுடன் வந்துவிட்டார்! மற்றும் மருமகன் செல்வம் - மகன் தமிழரசு! அதாவது வெளியில் மிச்சமிருந்தோர் சிலரில் நாங்களும் கைது செய்யப்பட்டோம்! டெல்லிக்குச் செய்தி போனது! மறுநாள் பிறந்தநாள் என்பதால் எங்களை அன்று மாலை விடுவித்து விட்டார்கள்!

அந்தப் பிறந்தநாளின்போது நான் எழுதி, தணிக்கைக்கு உட்பட்டு எஞ்சிய அந்தக் கடிதத்துடன் இணைத்துத் தருகிறேன்! படித்துப் பார்! அந்தக் கடிதம் என்னையே காணிக்கையாக்குகிறேன் என்பதாகும்! இதோ அந்தக் கடிதம் :-

அண்ணனே!

ஜூன் மூன்றாம் நாள் இன்று! என் பிறந்தநாள்! நான் மகிழ்ச்சியோடு இருப்பேன் என்று எண்ணிக்கொண்டுதானே என்னை வாழ்த்துகிறாய்!

என் பிறந்த நாளில் என்றைக்கு நான் மகிழ்ச்சியாக இருந்திருக்கிறேன்; இந்த ஆண்டு மட்டும் மகிழ்ச்சியாக இருந்திட!

உனக்கு நினைவிருக்கும் அண்ணா; ஒரே ஒரு ஆண்டு மட்டும் விதிவிலக்கு! ஆம் 1968-ஆம் ஆண்டு!

அதற்குப் பிறகு, எனக்கு வந்த பிறந்த நாட்களில் நான் சுறுசுறுப்புடன் இருந்திருக்கிறேன். ஓடிவரும் உடன்பிறப்புகளைத் தழுவிக்கொண்டு அளவளாவியிருக்கிறேன். மலையெனக் குவிந்த மாலைகளுக்கிடையே இருந்திருக்கிறேன். சிரித்த முகத்தோடு இருந்திருக்கிறேன். ஆனால் அண்ணனே! முக மலர்ச்சியோடு இருந்தேனே தவிர, அக மலர்ச்சியோடு இருந்ததில்லை!

அப்படியானால் தம்பி, நடித்தாயா? என நீ கேட்கிறாய்! காதில் விழுகிறது!

ஆமண்ணா! நாடக மேடையேறியும் நடித்தும் பழக்கப்பட்டவன்தானே நான் - அதனால் கொள்கைத் தங்கங்களாம் என் இனிய உடன்பிறப்புகள் மனம் கோணலாகாதே என்று நடித்துக் கொண்டிருக்கிறேன் இப்போதும்!

அண்ணனே! சிற்றூர் ஒன்றில் மிகச் சாதாரணமான குடும்பத்தில் பிறந்தவன் நான்! அது தானே தம்பீ நமக்குப் பெருமை என்றிடுவாய் நீ! பெரியாரின் தொண்டனாக - உன் தம்பியாக - நீ இட்ட கட்டளைகளை நிறைவேற்றத் துடித்த கழகத்தின் ஓர் உறுப்பாக - இயக்க உடன்பிறப்புகளின் அன்புக்கு உரியவனாக - நான் இருந்தேன் என்பதையெல்லாம் நீ அறிய மாட்டாயா அண்ணனே!

ஊரில் சிலர் உறுமுவார்கள் என்னைப் பார்த்து!

தம்பீ! உள்ளம் நெகிழாதே! உன் வேலையைப் பார்! என்றிடுவாய் நீ!

தாக்குதல்களால் தழும்புகள் ஏற்றதுண்டு இந்த தேகம்! தாய்ப்பாசமெனும் தைலம் தேய்த்து அந்த வலி போக்கியிருக்கிறாய், நீ!

கட்சிக்குள்ளேயே காழ்ப்பாளர் அணி தோன்றியதுண்டு! ஏனப்பா, கலங்குகிறாய் - இந்தா கணையாழி, உன் கடின உழைப்புக்குப் பரிசு என்று கடற்கரையில் எனக்கு அணிவித்துக் களித்தவன் நீ!

அப்படியெல்லாம் நான் உன் மீது கொட்டிய அன்பு மழையின் நினைவுகள், உன் நெஞ்சைவிட்டு அகலாதிருந்தும், ஏன் தம்பீ, உற்சாகமற்று இருக்கிறாய்?

என்னதான் காரணமப்பா, இனிய நாளாம் பிறந்த நாளில் நீ உற்சாகமற்று இருப்பதற்கு? நம்மோடு இருந்தவர்கள், ஒரே இலையில் உண்டவர்கள், ஒரே பாயில் படுத்துறங்கியவர்கள், ஒரே குடும்பம் என உரைத்தவர்கள் - இன்று பிரிந்துவிட்டது மட்டுமல்ல; பித்தனுக்கு ஏன் பிறந்தநாள்? என்று எழுதி முழக்குகிறார்களே - அது கண்டா உற்சாகமிழந்துவிட்டாய்! சே! சே! இருக்கவே இருக்காது! என் காலத்தில் நம்மை விட்டுப் பிரிந்தவர்கள் என்னை ஏசியதை விடவா இப்போது உன்னை ஏசிவிடுகிறார்கள்? முன்பு பிரிந்தோரும் இப்போது பிரிந்தோரும் ஒன்றிணைந்து இழிமொழி கூறுகின்றனர் என்பதை அறிவேன் எனினும், சந்தனத்தைச் சகதியென்றால் மணமா மாறும்? என்று நீதானே தம்பீ கவிதை எழுதியிருக்கிறாய்! பிறகேன் உற்சாகக் குறைவு உனக்கு? உன் தோளில் ஏறி உன் தலையில் அமர்ந்திருந்த தோழர்கள் சிலர், இப்போது உன் காலை மிதித்துக் கடுஞ்சொல் பேசவும் ஆகிவிட்டதே என்ற துயரமா உனக்கு? இருக்கவே முடியாதே! என் தம்பிக்கு ஊராரே உற்றார்! உடன்பிறப்புகளே சொந்தபந்தங்கள்! அன்னை முகம் காண்பதிலும் இந்த அண்ணன் முகம் காண்பதே அவனுக்கு மகிழ்வூட்டும் நிகழ்ச்சி என்று நான் என் துணைவி - உன் அண்ணி ராணியிடம் எத்தனையோ முறை கூறியிருக்கிறேனே தம்பீ, வேறு எந்தக் காரணத்தினால்தான் வீழ்ந்து பட்டது உனக்கு உற்சாகம்?

அண்ணனே நீ இப்படியெல்லாம் கேட்பாய்! உன்னை அறிந்தவனல்லவா நான்!

அடையாறு மருத்துவமனையில் மரணப் படுக்கையில் நீ கிடந்தபோதும், மூச்சு தடைபடாமல் இருப்பதற்காக உன் தொண்டைக் குழியில் ஒரு ரப்பர் குழாயைப் பொருத்த மருத்துவர்கள் முனைந்தபோது, பக்கத்து அறையில் இருந்த என்னை கூப்பிடச் சொல்லி உனக்கு இஷ்டந்தானா கருணாநிதி?

என்று கேட்டு என்னைத் தேம்பித் தேம்பி அழவைத்த என் தெய்வமாயிற்றே நீ!

என்ன மூத்த உடன்பிறப்பே, நீ கேட்கிற எதுவுமல்ல காரணம், நான் உற்சாகம் இழந்திருப்பதற்கு! நான் இந்த ஆண்டு மட்டும் பிறந்த நாளில் மகிழ்ச்சியாக இல்லை என்று சொல்லவில்லையே; கடந்த ஆண்டுகளையும் சேர்த்துத்தானே கூறுகிறேன்!

ஜூன் மூன்று! இன்று என்னை மகிழச் சொல்கிறாயா?

நீ மறைந்த பிப்ரவரி மூன்றை வரலாற்று ஏட்டில் சோகச்சித்திரமாக நீ தீட்டி வைத்துவிட்டு - ஜூன் மூன்றில் நான் மகிழ்வது எங்ஙனம் சாத்தியமாகும்!

நீ இருக்கும் திக்கு நோக்கி வணங்குகிறேன்.

என் உடன்பிறப்புகளுக்கு என்னையே இந்த நாளில் காணிக்கையாக்குகிறேன்!

அன்புள்ள தம்பி

மு. கருணாநிதி (3.6.76)

உடன்பிறப்பே, அண்ணன் பிறந்த மாவட்டத்திற்கு அண்ணன் பெயர் சூட்டியமைக்காக நடைபெறும் விழா ஜூன் முதல் நாளன்று காஞ்சியில்! அதில் கலந்துகொள்ள இருக்கும் எனக்கு; இந்தப் பழைய கடிதத்தை வெளியிட வேண்டுமென்ற ஒரு துடிப்பு! அதனால் வெளியிட்டேன்!

அன்புள்ள,

மு. க.

31-05-1989

1614. தென்பாண்டி மண்ணில் உன்னை சந்திக்க வருகிறேன்!

உடன்பிறப்பே,

அண்ணா அறிவாலயத்தில் - பொதுத் தேர்தலுக்கு முன்பு நடைபெற்றது பொதுக் குழு! இப்போது தேர்தல் முடிவுற்று கழகத்தை ஆட்சிப் பொறுப்பில் அமர்த்திய களிப்புடனும் கழிபேருவகையுடனும் பொதுக்குழு கூடி சில முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. கழகம், தொடர்ந்து வலிவும் பொலிவும் பெற்றுத் திகழ்ந்திட ஆக்கபூர்வமான கருத்துக்களை அள்ளிப் பொழிந்தனர் ஆர்வ அருவிகளாக நமது உடன்பிறப்புகள்!

பொதுக்குழு தொடங்கி, எனது தலைமை முன்னுரையைத் தொடர்ந்து, இலங்கைப் பிரச்சினையில் தமிழ்ஈழ மக்களின் நிலையான நல்வாழ்வு, நிரந்தர அமைதி உருவாக்கிடக் கழகத்தின் கருத்து தீர்மான வடிவம் பெற்று ஒருமனதாகப் பொதுக்குழுவில் நிறைவேறியது. அடுத்து நமது பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் அறிக்கையொன்றினைப் படித்து பொதுக் குழுவில் உற்சாகமாகக் குழுமியிருந்த உன் போன்றோர் முகத்தில் கவலையின் சாயலைத் தோற்றுவித்துவிட்டார். பாசத்துடனும் நேசத்துடனும் என்னை அரவணைத்து கழகப் பணியிலும் நாட்டுப் பணியிலும் என்னை ஊக்குவித்து வரும் பேராசிரியரே கவலை தோய்ந்த நிலையில் இருப்பது காண நான் நெகிழ்ந்து போனேன்!

ஆறிலும் சாவு, நூறிலும் சாவு ஆனது ஆகட்டுமே! என்று பாடிய பாவலர் பாலசுந்தரம் திருவாரூர்க்காரர்! அண்ணன் அழகிரியின் நண்பர்! என்னைத் தம்பியென அன்பு பொழிய அழைப்பார்! அவர் எழுதிய இந்தப் பாடலை நான் அவர் முன்னால் அடிக்கடி முணுமுணுத்துக் கொண்டிருப்பேன் புதிய பூரிப்புடன்!

பெரியார் அவர்கள் திருக்குரல் திருவாரூர் வீதியிலே என்றைக்கு என் செவி நுழைந்து சிந்தையில் அழியா முரசாக

ஒலிக்கத் தொடங்கியதோ - தேன் மணக்கும் அண்ணாவின் தமிழ் என்றைக்கு என்னை அடிமைகொண்டு அவர்பால் அரசியல் மாணவனாகக் கொண்டுபோய் நிறுத்தியதோ - புரட்சிக் கவிஞரின் வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும்தோள் எங்கள் வெற்றித் தோள்கள் என்ற எழுச்சிக் கவிதைக்கு வடிவம் கொடுப்போரில் ஒருவனாக என்றைக்கு என்னை ஆக்கிக் கொண்டேனோ - கோடையிடிக் குரலோன் கொள்கைச்சிங்கம் அழகிரியின் துணிவுக்கு வியந்து அவரது தொண்டனாக என்றைக்கு என்னை உருவாக்கிக் கொண்டேனோ - அந்தப் பதினான்காவது பிராயம் முதற்கொண்டு இந்த ஐம்பதாண்டுகளுக்கு மேற்பட்ட பொது வாழ்வில், ஈட்டிகள், கத்திகள், கோடரிகள், வேல்கம்புகள், குண்டுகள், வெறிக்கும்பல்கள் என்று எத்தனையோ வன்முறையாட்டங்களுக்கு ஈடுகொடுத்து எதிர்நீச்சல் போட்டேதான் கழகம் வளர்ந்திட நானும் காரணமாக இருந்திருக்கிறேன்.

பாண்டிச்சேரியில் செத்துத் தொலைந்தேன் என்று அடித்துப் போட்டுவிட்டுப் போயினர், அன்று என் காயங்கள் தந்தை பெரியாரின் கரம்பட்ட மருந்துத் துளிகளால் ஆறின எனினும் இன்னும் வடுக்களாக வாழ்ந்து பெரியார் காட்டிய அன்புப் பரிவினை நினைவூட்டிக் கொண்டேயிருக்கின்றன!

கோட்டூரில் கொலைவாள்களுக்கு மத்தியில்! இரவு முழுதும் ஒரு குடிசையில்! அந்த ஆபத்திலிருந்து என்னை விடுவித்த போது என்னைத் தழுவிய அண்ணா என்னைக் கண்ணீரால் அன்றோ கழுவினார்! காப்பாற்றிய குடும்பத்தினரை அழைத்து மஞ்சள் குங்குமம் மலருடன் உடைகளும் பரிசளித்து மகிழ்ந்து நின்றாரே அந்தக் காட்சி இன்றைக்கும் என் மனத்திரை விட்டு அகலவில்லையே!

இப்படி எத்தனை எத்தனையோ நிகழ்ச்சிகள்! அத்தனையும் அன்று மாற்றார் முகாமிலிருந்து! இன்றோ, நம்முடன் இருந்தோர் - நஞ்சினில் தோய்ந்தோராகத் தம்மை மாற்றிக்கொண்டு புறப்படுகின்றனர், கருணாநிதியை விட்டேனா பார் என்று!

தமிழ்மக்கள் நமக்கிட்ட பணியை நாம் ஆற்றிக் கொண்டிருக்கிறோம்! ஆட்சியில் அமர்ந்துவிட்டதாகவே கனவு

கண்டவர்களால், அந்தக் கனவு பலிக்காத நிலையில் நம்மைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை!

சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்ற ஒரு சூழலைத் தமிழ்நாட்டில் உருவாக்கினால் கழக ஆட்சியைக் கலைத்து விடுவதாக மத்திய அரசு, இவர்களுக்கு உறுதியளித்திருப்பதாகச் சொல்லிக்கொள்கிறார்கள். மத்திய அரசின் பிரதமர் பொறுப்பில் இருப்பவர் அப்படி சொல்லியிருப்பதாக நான் நம்பவில்லை! ஆனால் இவர்கள், நமது கட்சியினரை நம்ப வைத்து, ஓடிவிடாமல் பார்த்துக்கொள்ள பலமான பொய்ப் பிரச்சாரம் செய்கிறார்கள்!

எனது மதுரை, முகவை சுற்றுப் பயணத்தில் எதிர்ப்பு எப்படியிருக்க வேண்டும் - ஏன் அப்படியிருக்க வேண்டுமென்பதற்கு ஒரு முன்னாள் அமைச்சரின் தமுக்கன் மைதானத்துப் பேச்சை இதோ அப்படியே தருகிறேன்.

அ.இ.அ.தி.மு.க. தொண்டர்கள் பயங்கர ஆயுதங்களுடன் வந்து, வன்முறையில் ஈடுபட்டாவது கறுப்புக்கொடி காட்டாமல் விடக் கூடாது. சட்டம் ஒழுங்கை குலைத்து கலைஞர் ஆட்சியை டிஸ்மிஸ் செய்ய இந்த செயல் மத்திய அரசுக்கு சாதகமாக இருக்கும்படி செய்ய வேண்டும். .... தமிழகம் ஸ்தம்பித்தது. போலீஸ் ஸ்தம்பித்தது என்று மத்திய அரசு முடிவு செய்து நடவடிக்கை எடுக்கும்.

முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர் ஏன் இப்படிப் பேசியிருக்கிறார் என்பது இப்போது புரிகிறதல்லவா?

இருப்பது ஒரு உயிர்! அது போகப்போவதும் ஒருமுறை! அந்த உயிர் ஒரு நல்ல காரியத்திற்காகப் போகட்டுமே!

என்று நமது அண்ணன் சொன்னதை என்றைக்கும் மறந்தவனல்ல நான்!

இந்த ஐந்து மாத காலத்தில் கழக அரசின் வாயிலாக எத்தனையோ நல்ல காரியங்கள் இயற்றிய எனக்கு அந்த நண்பர்கள் எந்தவொரு பரிசை வழங்கினாலும் எனக்கு மகிழ்ச்சியே!

ஆனால் உடன்பிறப்பே, தனிப்பட்ட நானல்ல - இந்தத் தமிழ்ச் சமுதாயம் வாழ்ந்திடவும் வலிமை பெற்றிடவும் - உரிமை பெற்றுத் திகழ்ந்திடவும் - தன்மான இயக்கத்தின் உரம் பெற்று வளர்ந்துள்ள

தி.மு.க. என்னும் அரசியல் ஆலவிருட்சத்தின் ஒரு விழுதினை, ஒரு கிளையினை, எவர் காயப்படுத்திடவும், அழித்திடவும் என்றைக்கும் இடம் தராதே!

ஏனெனில் அண்ணன் நமது கரத்தில் ஒப்படைத்துள்ள ஒளிவிளக்கு அது!

இவ்வுலகில் நான் இருப்பினும் - இல்லாமல் ஆக்கப்படினும் - முன்கூட்டி உன் காலடியில் வைத்திடும் வேண்டுகோள் இதுதான்!

கழகம்! கழகம்! அதைக் காப்பாற்று! ஆம், தமிழ் இனத்தைக் காப்பாற்ற!

அந்தப் பணிக்கு என்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள நான் தென்பாண்டி மண்ணில், உன்னைச் சந்திக்க வருகிறேன்!

அன்புள்ள,

மு. க.

04-07-1989

1615. போற்றுவோரை வணங்கி - தூற்றுவோரை வாழ்த்தி!

உடன்பிறப்பே,

தஞ்சை மாவட்டத்திலும், இராமநாதபுரம், மதுரை மாவட்டங்களிலும் எனது சுற்றுப் பயண நிகழ்ச்சிகள் வன்முறையாளர்கள் திட்டமிட்டபடி எந்தவித அமளிக்கும் இடம் தராமல் உன் போன்ற உடன் பிறப்புகள் காட்டிய கட்டுப்பாடு மிக்க அணி வகுப்பினால் அமைதியாகவும் - பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய மக்கள் நலிந்தோர் அரசின் உதவிகளைப் பெறவும் - நடந்தேறியது கண்டு மகிழ்கிறேன். இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்? என்ற வாசகத்தை நமது அண்ணன் அடிக்கடி பயன்படுத்துவாரன்றோ? அந்த வாசகத்தின் முழு வடிவத்தை முகவையிலும், மதுரையிலும், தஞ்சையிலும் சுடர்முகம் தூக்கி நெஞ்சகம் நிமிர்த்தி நீ போட்ட வீறு நடையிலே கண்டேன்! வியந்தேன்! விழிகளில் ஆனந்த அருவி!

எனக்குக் கவசமாய் - அரணாய் - பாதுகாப்புக் கேடயமாய் - நீ இருப்பதைக் காட்டிலும் நீயும் நானும் சூறாவளிச் சோதனைகளுக்கிடையே கட்டி வளர்த்த கழகத்தை ஊனம் வராமல் காப்பதே நமது கடமை என்று கடிதத்தில் நான் விடுத்திருந்த வேண்டுகோளுக்கு விளக்கமாக நின்றிருந்த உன் வீரத் திருவடிகளுக்கு இதோ உன் உடன்பிறப்பின் முத்தங்கள்! முத்தங்கள் மட்டுமல்ல; உன் பாத மலர்களில் நான் தூவிடும் அன்புப் பனி மலர்கள்!

தஞ்சை நகர் சென்றடைவதற்கு முன்பு திருச்சியிலிருந்து முப்பது கல் தொலைவு - இருமருங்கிலும் ஆடவரும் பெண்டிரும் இளைஞருமாக தமிழ்ப் பெருங்குடிமக்கள் வாழ்த்தி வரவேற்ற காட்சியும், தஞ்சையிலிருந்து ஒரத்தநாட்டில் நடைபெற்ற ஒளிமிகு விழா வரையிலும் அணி அணியாக சாலையின் இருபுறமும் நின்று

வாழ்த்திய மக்கள் கடலின் மாட்சியும், தஞ்சையின் வரலாறு காணாத பொதுக் கூட்ட நிகழ்ச்சியும், மதுரை முதல் முகவை வரையில் - அடுத்து இளையான்குடி வரையில் - கிராமப்புறத்துத் தமிழ்க்குலத்தினர் சாலையோரத்தில் திரண்டு வரவேற்ற ஆர்வமும் - மறுநாள் மதுரையின் வீதிகள், தெருக்கள், சந்துகள் அனைத்திலும் மக்கள்! மக்கள்!! மக்களே!!! எனும் விதத்தில் அலை மோதியதே; அந்த எல்லையற்ற எழுச்சியும் - என்னைப் பூரிப்பில் ஆழ்த்தின எனினும்; நம்மிடமும், நமது கழகத்திடமும், நமது கழக ஆட்சியிடமும் இந்த மக்களுக்கு எத்துணை எதிர்பார்ப்பு இருக்கிறது - அதனை நாம் நிறைவேற்றிட இன்னும் ஓய்வின்றி எவ்வளவு உழைத்திட வேண்டும் என்ற கவலையே மேலோங்கி நிற்கிறது.

மீண்டும் பொறுப்பேற்றுக் கொண்டவுடன் தமிழ் மக்களுக்கு விடுத்த செய்தியிலிருந்து அணுவளவும் மாறிடாமல் தொய்வில்லாத் தொண்டாற்ற வேண்டுமென்ற உணர்வைத்தான் இந்தச் சுற்றுப் பயணத்தில் - உடன்பிறப்பே; நீ மட்டுமல்ல - தமிழ்ப் பொது மக்கள் காட்டிய ஆர்வமும் எனக்கு ஏற்படுத்தியுள்ளன.

திசை திருப்பும் செய்திகள் - செயல்கள் எத்தனையோ இடையிடையே வரும்! போகும்! தீரனே! நீ அந்தத் திக்கு நோக்கித் திரும்பாமல் திருவிளக்காம் தி.மு.க.வை கையில் ஏந்தித் தொடர்ந்திடும் பயணத்திற்கான பாதையிலிருந்து வழுவாமல் நடந்திடுக!

மதுரை முகவைத் தஞ்சையில் மகத்தான காட்சி! மக்கள் சமுத்திரம்! ஆனால் ஒரு நாளேட்டுக்கு அந்தக் காட்சியெல்லாம் கண்ணில்படவில்லை! நாலு கம்புகளுடன் ஒரு கார்தான் தெரிகிறது! பெரிய அளவில் புகைப்படமெடுத்து வெளியிட்டு மகிழ்கிறது.

அவ்வளவு ஏன்; அறிவுரைகளையும் பண்பார்ந்த முறையில் கூறுவதை அண்மைக் கால வழக்கமாகக் கொண்டுள்ள ஆனந்தவிகடன் கூட, தலையங்கம் தீட்டிக் கேட்கிறது வீட்டு வசதி வாரியத்துறையை இன்னொரு அமைச்சருக்கு மாற்றியது ஏன்? என்று! அசிங்கம் என்று கூடக் குத்திக் காட்டுகிறது. ஊழல் நடந்ததா? என வினா எழுப்புகிறது.

திரு. கே.பி. கந்தசாமி அவர்களிடம் அறநிலையத்துறை, சுற்றுலாத்துறை, வனத்துறை என மூன்று பெரிய துறைகள் இருப்பதால் வீட்டு வசதித் துறையையும் சேர்த்து கவனிக்க இயலவில்லை, பளுவாக இருக்கிறது எனப் பல நாட்களாக என்னிடம் சொல்லி வருகிறார். நானும் கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள் என்று கூறி வந்தேன். பிறகு அவர் விடாப்பிடியாக நின்று அந்த இலாகாவை வேறு யாரிடமாவது ஒப்படைத்து விடுமாறு கேட்டுக் கொள்ளவே - எந்த அமைச்சரிடம் ஒப்படைக்கலாமென யோசித்து, அந்த அமைச்சர்களின் விருப்பத்தை அறிய ஒரு நாள் அவகாசமெடுத்துக் கொண்டு - திரு. கண்ணப்பனிடமிருந்த நெடுஞ்சாலைத் துறையை பொதுப்பணித் துறையுடன் இணைத்து துரைமுருகனிடம் அளித்து விட்டு, வீட்டு வசதித் துறையை கண்ணப்பன் அவர்களிடம் அளித்துள்ளேன். அவ்வளவுதான்!

அண்ணா காலத்தில் கூட நாவலர் அவர்கள் தன்னிடம் இரண்டு மூன்று துறைகள் அதிகமாக இருக்கின்றன எனக் கூறி அவராகவே முன் வந்து வீட்டு வசதித் துறை, தொழிலாளர் நலத்துறை ஆகியவற்றை வேறொரு அமைச்சருக்கு அளிக்குமாறு செய்தார்.

வேலைப்பளு என்று சொன்னால் நம்ப முடியாது! ஊழல் ஏதாவது நடந்ததா? என்று ஆனந்தவிகடன், தனக்குரிய - உயரிய தரத்திலிருந்து தன்னை கீழே இறக்கிக்கொண்டது ஏன் - என்று எனக்கு நானே கேட்டுக் கொண்டு வியப்படைகிறேன்!

வேலைப் பளுவாக இருக்கிறது எனக் கூறித்தான் வீட்டு வசதித் துறையை திரு.கே.பி. கந்தசாமி கொடுத்து விட்டார் என ஏற்கனவே நிருபர்களிடம் கூறிய பிறகும் - அதற்கு ஒரு நோக்கம் - அதுவும் தரமற்ற நோக்கம் ஒரு தரமான பத்திரிகையில் கற்பிக்கப்படுகிறது என்றால் என்ன செய்ய?

உடன்பிறப்பே! இப்படி எதிர்பாராத இடங்களில் இருந்தெல்லாம்கூட தாக்குதல்கள் திடீரென வரும்! வழக்கமாக நம் மீது சேறு வாரிக் கொட்டுவோர் - திடுமென அச்செயலில் ஈடுபடுவோர் - எவராயினும்; அவர் தொடுக்கும் கணை எத்தன்மையானது ஆயினும் - அனைத்தையும் நமது கழகத்திற்கும்

கழக ஆட்சிக்கும் வலுவேற்றக் கூடிய உரமாகவே கருதி, எவர் மீதும் எரிச்சலோ காழ்ப்போ கொள்ளாது -

எதையும் தாங்கும் இதயம் வேண்டும்! என்ற அண்ணாவின் மொழியை மறவாமல் போற்றுவோரை வணங்கி, தூற்றுவோரையும் வாழ்த்தி ஆயிரங் காலத்துப் பயிராம் நமது கழகம் காத்திட அடலேறே! அயராது உழைத்திடுவோம் வா!

அன்புள்ள,

மு. க.

08-07-1989

1616. நமது பொதுக்குழுவின் தீர்மானம்!

உடன்பிறப்பே,

இலங்கையிலிருந்து இந்தியப்படை திரும்பிட வேண்டுமென்பதில் தி.மு.கழகத்தின் கருத்து மிகத் தெளிவான ஒன்றாகும்.

அமைதிப்படை என்ற பெயரால் தமிழ் ஈழத்தில் இந்தியப் படையினர் சில மாதங்களுக்கு முன் வரையில் சிங்கள அரசின் சார்பாகவே இருந்து செயல்பட்டு வந்தனர். அதனால் ஆயிரக்கணக்கான இந்திய சிப்பாய்களும், ஆயிரக்கணக்கான விடுதலைப் புலிகளும், அஃதன்னியில் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்களும் தமிழ் ஈழத்தில் ரத்தம் சிந்தினர் - உயிர் நீத்தனர் - இந்த உண்மை நமது உள்ளங்களில் ஏற்படுத்தியுள்ள வடு, என்றைக்குமே ஆறாததாகும்.

எனவே இன்றுள்ள நிலையில் இந்தியப் படை திரும்புவதால் தமிழ் ஈழத்தில் நிலையான அமைதிக்கும், நிரந்தரமான நல்வாழ்வுக்கும் உடனடியாக ஒரு தொடக்கம் ஏற்பட்டு விடுமா? என்ற கேள்விக்கு விடை கண்டாக வேண்டியுள்ளது. காரணம்; இந்திய இலங்கை ஒப்பந்தம் என்பது முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றல்ல! அந்த அரைகுறை ஒப்பந்தமாவது இதுநாள் வரையில் சிங்கள அரசினால் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளதா எனில் இல்லை என்ற பதிலே கிடைக்கும். இந்த உண்மையை நாம் எடுத்துச் சொன்னபோது காதில் போட்டுக் கொள்ளாத இந்திய அரசு, இப்போது ஆமாம் என்று தொலைக்காட்சி, வானொலிகள் மூலம் நாள்தோறும் முழங்கிக் கொண்டிருக்கிறது.

1983-ல் இலங்கையில் தமிழ் இனப்படுகொலை தொடங்கிய காலம் முதல் இதுவரையில் அந்த இனப்படுகொலைக்கு எதிராகவும் - தமிழ்ஈழ மக்களின் உரிமைக் குரலுக்கு ஆதரவாகவும்

- தமிழ்இனப் பெண்களின் மானம் மரியாதையைக் காப்பதற்காகவும் - ஆயுதம் தாங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்குத் தள்ளப்பட்ட போராளிக் குழுக்கள் ஒரே அணியில் நின்று தனித்தமிழ் ஈழத்தை வென்றெடுக்க முடியாத நிலையை அந்தப் போராளிகளே தங்களுக்குத் தாங்களே உருவாக்கிக் கொண்டார்கள். பின்னணியிலிருந்தும் முக்கிய பொறுப்பில் இருந்தவர்கள் சிலர் அந்த விரும்பத்தகாத ஏற்பாட்டை வெற்றிகரமாகச் செய்துகொண்டிருந்தனர். இன்னமும் அவர்கள் அந்தத் திருப்பணி(?)யை நிறுத்தியதாகத் தெரியவில்லை.

குடிசெய்வார்க் கில்லை பருவம் மடிசெய்து மானம் கருதக் கெடும் என்ற குறளுக்கேற்ப - தி.மு.கழகம், இறுதியாகக் களத்தில் விடாப்பிடியாக நின்றிருந்த - இன்னமும் நிற்கிற விடுதலைப்புலி இயக்கத்திற்காகக் குரல் கொடுத்ததும், குரல் கொடுப்பதும் தமிழ் ஈழத்தின் மொத்தத் தமிழர்களின் நலன் கருதியேயாகும். அதே நேரத்தில் மற்ற போராளி இயக்கங்களும் எந்தவித மோதுதலுக்கும் உள்ளாகாமல் பெரும் இழப்பிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டுமெனத் தமிழினத்தின் ஒற்றுமையின்மீது அக்கறை கொண்ட நாம், வலியுறுத்தாமல் இருக்க முடியாது! காரணம்; அந்த உணர்வு நமது உதிர ஓட்டத்துடன் இணைந்து நீந்திக்கொண்டிருப்பதாகும் என்பதால்!

இதனை மனத்திற்கொண்டுதான் - கழகமும் சரி; கழகம் இடம்பெற்றுள்ள தேசிய முன்னணியும் சரி; இந்திய அரசு உடனடியாக விடுதலைப்புலிகள் உள்ளிட்ட அனைவருடனும் பேச்சு வார்த்தை நடத்தி - தமிழ் ஈழத்தில் நிலையான அமைதிக்கு வழிவகுக்க வேண்டுமெனத் தொடர்ந்து அறிவித்து வந்துள்ளன.

கழக அரசு பொறுப்பேற்றவுடன் அத்தகைய முயற்சியை விரைந்து மேற்கொண்டு அதன் நிமித்தம் இந்தியப் பிரதமர் அவர்களை நான் டில்லியில் நான்குமுறை சந்தித்துப் பேசினேன். இந்தியப் பிரதமர் காட்டிய அக்கறையும், அணுகுமுறையையும் எனக்கு மகிழ்ச்சியூட்டும் வகையில் அமைந்திருந்தன. ஆனால் கனியப் போகும் நிலையில் - எப்படியோ ஒரு கால தாமதம்; யாராலோ ஏற்படுத்தப்பட்டுவிட்டது!

அதன்பிறகு - நமது கழகப் பொதுக்குழுவின் ஜூலை இரண்டாம் நாள் தீர்மானத்தில் குறிப்பிட்டுக் காட்டியிருப்பதுபோல,

இப்போது விடுதலைப்படையினரும் (எல்.டி.டி.ஈ.) இலங்கை அரசும் இணைந்து நிற்பதும், இலங்கை அதிபர் பிரேமதாசா, ஜூலை 29-ம் தேதிக்குள் இந்தியப் படையினர் திரும்ப வேண்டுமென கூறியிருப்பதும் பிரச்சினைக்குரிய புதிய திருப்பங்களை ஏற்படுத்தியுள்ளன

என்ற புதிய நிலையைத் தோற்றுவித்துள்ளது!

நமது பொதுக்குழுவின் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள கவலையின் ஆழத்தை - தமிழ் ஈழத்தில் உள்ள நமது மக்களின் எதிர்காலத்தை அகக்கண்ணால் கண்டு எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஈழத் தமிழர்களின் நல்வாழ்வுக்காக தி.மு.க. மேற்கொண்ட நடவடிக்கைகளையும், ஈடுபட்ட போராட்டங்களையும் உலகெங்கும் வாழும் தமிழர்கள் அறிவார்கள். ஈழப் பிரச்சினைக்காக மேற்கொள்ளப்படும் எந்தத் தீர்வாக இருந்தாலும் அது வெற்றியைத் தருமா? அல்லது தோல்வியைத் தருமா? என்பதற்கான சோதனை, கீழ்க்கண்ட கேள்விக்குக் கிடைக்கும் பதிலைப் பொறுத்துத்தான் இருக்க முடியும்.

அந்தத் தீர்வு, இலங்கையில் நிரந்தர அமைதியையும் ஈழத் தமிழர்களுக்கு நிரந்தர அமைதியையும் ஈழத் தமிழர்களுக்கு நிரந்தர நல்வாழ்வையும் அமைத்துக் கொடுக்க வழிவகை செய்யுமா? ஆம் எனில் உலகெங்கிலுமுள்ள தமிழர்கள் அதனை வரவேற்கவே செய்வர்! சந்தேகத்துக்குரியது என்பது பதிலாக இருக்குமேயானால் அனைவருக்கும் கவலையேற்படுவது தவிர்க்க முடியாதது.

இந்தக் கவலையைத் தெளிவாக்கும் வண்ணம் நமது பொதுக்குழுவின் தீர்மானம்; இலங்கையில் என்ன நடக்கக் கூடும் என்ற அச்சத்தையும் வெளிப்படுத்துகிறது.

மீண்டும் சிங்கள இனவெறியர்களாலும் இலங்கை ராணுவத்தினாலும் ஒரு இனப் படுகொலை நடைபெறவும் - தமிழ்ச் சகோதரர்களே ஒருவரையொருவர் மாய்த்துக்கொள்ளும் சகோதர யுத்தம் (Fratricide) ஏற்படவும் - அந்த ரத்தக் களறியினால் ஈழத் தமிழர் அகதிகளாகி மீண்டும் தமிழகத்தில் தஞ்சம் புகவும் - என்கிற வேதனைகள் நிகழாமல் தடுக்கப்பட சம்பந்தப்பட்டோரிடமிருந்து நம்பத்தகுந்த உத்தரவாதம் பெறப்பட வேண்டும்

எனச் சுட்டிக்காட்டுகிற நமது பொதுக் குழு;

இந்தச் சூழ்நிலையில் இந்தியப் பிரதமர் தனது இலங்கை கொள்கையை மறு பரிசீலனை செய்து, பிரேமதாசாவுடன் கலந்துபேசி, மேற்சொன்ன உத்திரவாதங்களைப் பெற்று, படிப்படியாக இந்திய ராணுவத்தைத் திரும்பப் பெற வேண்டும்

என வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளது.

இந்திய அரசு, விடுதலைப்புலிகளுடனும் மற்றவர்களுடனும் கலந்து பேசி, நிரந்தர அமைதிக்கு வழிகாண வேண்டுமென நாம் வலியுறுத்தி வருவதை, விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகள் அல்லது ஆலோசகர்களுடன் தொடர்புகொண்டு, செயல்படுத்திடக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள இயலாமல், விடுதலைப்புலிகளுடன் தொடர்புகொள்ள முறையான செய்தித் தொடர்புகள் இல்லாத காரணத்தால் நமது முயற்சிகள் மேலும் தொடர இயலாத நிலை ஏற்பட்டுள்ளதையும் நமது பொதுக் குழு சுட்டிக்காட்டியிருக்கிறது.

இதில் எந்தவித அரசியல் நோக்கமும் இல்லாமல் ஆரம்பம் முதலே ஈழத்தமிழர்களின் அமைதியான நல்வாழ்வு ஒன்றே நமது குறிக்கோளாக இருந்து வருகிறது என்பதற்கு நமது பொதுக்குழு தீர்மானம் தக்க சான்றாகும்.

அன்புள்ள,

மு. க.

12-07-1989

1617. உறுப்புக்களை இயக்கும் உயிர்மூச்சு!

உடன்பிறப்பே,

1960 ஆம் ஆண்டுவாக்கில் நமது கழகத்துக்குள் பிளவு ஏற்படுத்தவும் - முன்னணித் தலைவர்களிடையே மோதல் உருவாக்கவும் - கூட இருந்து குழி பறித்த குடிலர்கள் சிலர் கொடியேந்திப் புறப்பட்டதும்; தென்னாட்டு பெர்னாட்ஷா அறிஞர் அண்ணா எனப்புகழ்ந்த வாயினால் அவர்கள் திருவாளர் அண்ணாத்துரை என்று தெருமுனைக் கூட்டங்களில் திசை திருப்பும் பேச்சுக்களைப் பேசியதும் - அது கண்டு வெகுண்டெழுந்த தி.மு.கழகத்தின் தீரர்கள் - அந்தச் சிலருக்கு பதில் அளித்து ஏடுகளில் மேடைகளில் முழங்கியதும் கழகத்தின் வரலாற்றுடன் சேர்ந்து வளர்பவர்களுக்கு நினைவில் இருக்கும் நிகழ்ச்சியே ஆகும்!

அப்போது அண்ணா அவர்கள் தம்பிக்கு எழுதிய கடிதங்கள் அனைத்துமே இந்தக் கழகம் தனது பணிகளுக்கான பாதையை எவ்வாறு வகுத்துக் கொள்ளவேண்டும் என்பதற்கான வழிகாட்டிகளாக கலங்கரை விளக்கங்களாக - அமைந்தன!

அன்று நாம் 1957-ல் சட்டப்பேரவையில் 15 பேராக நுழைந்திருந்த நேரம் - பாராளுமன்றத்தில் இருவர்!

ஆனால் இருபேரவை உறுப்பினர்கள், ஒரு பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் சில இடம் தேடிகள் அண்ணாவையும், கழகத்தையும் இழித்தும் பழித்தும் பேசிவிட்டு வெளியேறினர். புதுக்கட்சி கண்டனர். தேர்தலில் போட்டியும் இட்டனர். இதெல்லாம் பழங்கதை. அவர்கள் யார் யார் என்று கூட நினைவு படுத்தவோ; இப்போது எங்குள்ளனர் என அறிவிக்கவோ கூட நான் விரும்பவில்லை!

காரணம்; கலக மூட்டிகளைப் பற்றி உன் கவனத்தை ஈர்ப்பது இந்தக் கடிதத்தின் நோக்கமல்ல!

நமது கழகத்தை நாமே கவனமாகக் கட்டிக் காத்திட வேண்டுமென்பதற்காகவே இன்று இந்தக் கடிதம் எழுதுகிறேன்.

1960 ஆம் ஆண்டில் கழகத்தைச் சிதைத்திட நடந்திட்ட முயற்சியின்போது அண்ணா எழுதிய கடிதத்தில் சில பகுதிகள் - இப்போது நமது நினைவுக்கு!

அப்போது நாம் எதிர்க்கட்சி! இல்லை எதிர்க்கட்சி கூட அல்ல! சட்டசபையில் ஒரு குழுவினர்; அவ்வளவுதான்!

அந்த நிலையிலேயே கழகத்தைக் கவனமாகப் பாதுகாத்துக்கொள்ள அண்ணா கருத்தாரங்களைத் தொடர்ந்து வழங்கினார் என்றால் - இன்று கழகம்; ஆளுங்கட்சியாக இருந்திடும் நிலையில் இன்னும் எவ்வளவு எச்சரிக்கையும் கவனமும் தேவை என்பதற்கு அண்ணாவின் 1960ஆம் ஆண்டு கடிதங்களின் வாசகங்களே எவ்வளவு அருமையாகப் பொருந்துகின்றன! இதோ - அண்ணா எழுதுகிறார்! படிப்போம்!

தம்பி, திராவிட முன்னேற்றக் கழகம், ஈடுபடும் எந்தக் காரியத்தையும், எடுத்துக்காட்டும் எந்தப் பிரச்சினையையும், மேற்கொள்ளும் எந்த நடவடிக்கையையும், நாடு இன்று கூர்ந்து பார்த்து, இதற்கென்ன பொருள்? இது எதைக் காட்டுகிறது? இதற்கு என்ன நோக்கம்? இது எதன் விளைவு? என்றெல்லாம், ஆராய்ந்திடவும், உரையாடிடவும் காண்கிறோம்.

எங்கோ, எதுவோ, நடந்தது - என்ற முறையில் அல்ல, ஏன், இது, இவ்வண்ணம், இதுபோல நடைபெற்றது? என்று, நமது ஒவ்வொரு நடவடிக்கையையும், ஏற்படும் ஒவ்வொரு நிலைமையையும், அலசிப் பார்த்திட இன்று, எல்லா அரசியல் கட்சிகளுமே முயற்சிக்கின்றன. அலசிப் பார்த்து உண்மையை அந்தக் கட்சிகள் கண்டறிந்துவிட்டன, என்று கூறுவதற்கு இல்லை! ஆனால், முயற்சியிலே மட்டும், மும்முரமாக ஈடுபடுகின்றன.

இது நமது கழகம், இன்று பெற்றுள்ள வளர்ச்சிக்கு மிகச் சிறந்த சான்று.

தம்பி, நாம் கவனிக்கப்பட்டு வருகிறோம் - நமது நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் கவனிக்கப்பட்டு வருகின்றன - என்பதுதான் பொருள். அதிலே தொக்கி நிற்பது, சுவைதரும் மற்றோர் உண்மை. எவரும் அலட்சியப்படுத்த முடியாத

நிலையில், இன்று நம் கழகம் இருக்கிறது. அனைவரும் கூர்ந்து கவனிக்கிறார்கள் - திகிலுடன் சிலர், திடுக்கிட்டுப் போன நிலையில் சிலர், அருவருப்புடன் சிலர், பொறாமையுடன் வேறு சிலர் - அவரவர், தத்தமது நிலைக்கு ஏற்ற நினைப்புடன் - ஆனால், எவரும் கூர்ந்து கவனிக்கிறார்கள்.

அடவியில் சென்று கொண்டிருக்கிறான் ஒருவன் - கதிரவன் களைத்துப்போய், இளைத்துப்போய், மறையும் நேரம் - கால் கடுக்க நடக்கிறான் - சற்றுத் தொலைவில், மரம் அடர்ந்த இடத்தில், சிறு பொறி காண்கிறான் - உற்றுப்பார்க்கிறான் - பொறி பெரிதாகக் காண்கிறான் - நடையை நிறுத்திக் கொள்கிறான் - தீப்பந்தங்கள் போலத் தெரிகின்றன - அசைவற்று நிற்கிறான் - புலியின் கண்களே, அதுபோலத் தெரிகின்றன, என்று எண்ணுகிறான் - திகிலன்றோ அவன் நெஞ்சில் தீயெனப் புகும்.

மாலை வேளை! ஆற்றோரச் சோலை! அழகு தமிழ்ப்பாடலை இசைத்தபடி, நடக்கிறான், ஒரு இளைஞன்! யார்? என்றா, கேட்கிறாய்? என்ன தம்பி! நேரம், இடம், கூறினேனே - இதற்கு மேலுமா விளக்கம் வேண்டும்? - சொல்லிவிடட்டுமா அதனையும் - கெண்டை விழியாளைக் கண்டு, அவள் தனக்குச் செண்டு தந்து, பின்னர் இன்பம் மொண்டு உண்டிடச் செல்லும் காதலன், போதுமா! - சரி, அவன் செல்கையில், குக்கூ! குக்கூ! என்ற ஒலி செவியில் வீழ்கிறது. என்ன செய்வான்? முக மலர்ச்சியுடன் தருக்களைக் கூர்ந்து கவனிக்கிறான். எங்கு ஒளிந்து கொண்டு இன்னிசை எழுப்புகிறது, குயில் என்று கண்டறிய, திகிலுணர்ச்சி, அவனுக்கு - தித்திப்பு உணர்ச்சி!

அதேபோல, அவரவர் தத்தமது, நிலைமைக்கு ஏற்ப, எதிர்ப்படுவனவற்றைக் கூர்ந்து கவனிப்பர்.

வழியே கிடக்கும் எருக்கஞ்செடியினையும், எலும்புத் துண்டுகளையும், சோளக்கொல்லைப் பொம்மைகளையும், வயல் வளை வாழ் எலிகளையும், கத்திக் கத்திச் செத்த தவளைகளையும், காலில் உதையுண்டு சிதறிய ஒட்டாஞ் சல்லிகளையுமா, கூர்ந்து கவனிப்பார்கள். உலகம் என்ன அவ்வளவு விவரமறியாதவர்களின் இருப்பிடமாகவா, உளது! இல்லை, தம்பி! நிச்சயம் இல்லை! எதைக் கூர்ந்து கவனித்தாக வேண்டும் என்பது, மிக நன்றாக உலகுக்குத் தெரிகிறது - அதிலும் அரசியல் உலகு இருக்கிறதே,

அதற்கு இந்தத் துறையில் தனியானதோர் திறமை, மிக வேகமாக வளர்ந்து விட்டிருக்கிறது.

அத்தகைய அரசியல் உலகம், நமது கழகத்தின் ஒவ்வொரு அசைவையும், நமது பேச்சின் அசையைக்கூட, மிக உன்னிப்பாகக் கவனித்து வருகிறது, காரணம் தேடுகிறது, பொருளை ஆராய்கிறது, இயன்றால், எவ்வழியில் அதனைப் பயன்படுத்தி, நம்மை வீழ்த்தலாம், என்ற நினைப்புடன்.

நெடுந் தொலைவிலிருந்து வர இருக்கும் எதிர்ப்படை கண்ணுக்குத் தெரியுமுன்பே, தூசி கிளம்பிடக் கண்டதும், படை வருகிறது, என்பதனைக் கண்டறிய முடிகிறதல்லவா? மண் காற்று அடிக்கிறது - அதனைப் போய் இத்துணைக் கூர்மையாகக் கவனிக்க வேண்டுமா, என்று கருதுபவன், அந்தத் துறையிலே ஓர் மதியிலியன்றோ!

அதுபோலத்தான், நமது ஒவ்வொரு நடவடிக்கையும், மாற்றாரின் கண்களிலே, நடவடிக்கை உருவாகுமுன்பே, தூசி அளவாக இருக்கும்போதே, தெரிந்து விடுகிறது.

எனவே, தம்பி! நாமும் நமது நடவடிக்கைகள், திருப்பங்கள், முடிவுகள், முயற்சிகள், முகாம் அமைப்புகள் என்பவைகளை, எதிரிகள் கூர்ந்து கவனித்தவண்ணம் இருக்கிறார்கள் என்பதை அறிந்து அதற்கேற்ப, நமது செயல்முறைகளை மட்டுமல்ல, பேச்சுமுறைகளைக்கூட செம்மையானவையாக மட்டுமல்ல, ஆற்றல்மிக்கவையாக மட்டுமல்ல, எவரும் பாராட்டத்தக்கவையாக மட்டுமல்ல, எதிரிகள் கண்டு, இதற்கு இதுவா பொருள்? யாமறியாமற் போனோமே? இதற்கா இந்த நடவடிக்கை, எமக்கு முதலில் விளங்காமற் போய்விட்டதே? இவ்விதமாகவா முடிவு செய்தனர், இது திடீர் நடவடிக்கையாகவன்றோ இருக்கிறது? - என்று எண்ணித் திணறத்தக்கவிதமாகக், கூடுமான வரையில் அமைத்தல் வேண்டும் - ஆனால், இது இயற்கையானதாகவும் பலனளிக்கத்தக்கதாகவும், வளர்ச்சியைக் காட்டுவதாகவும், இருத்தலும் வேண்டும்.

உடன்பிறப்பே, ஒரு தாய்க்குள்ள பரிவுடன் - ஒரு தந்தைக்குள்ள பாசங்கலந்த கண்டிப்புடன் - ஒரு அண்ணனுக்குரிய வாஞ்சையுடன் குடும்பப் பொறுப்புகளை சுமந்திடவும் - குடும்ப கௌரவம் குலையா வண்ணம் நடந்திடவும் வளரும்

பிள்ளைகளுக்கு அறிவுரை கூறிக் கழகமெனும் குடும்பத்தின் புகழ் சிறக்க எத்துணை இதமான கருத்துக்களை அண்ணனின் கடிதம் 1960லேயே அள்ளிப் பொழிகிறது பார்த்தாயா?

எதிர்க்கட்சியாக இருந்தபோதே நம்மைக் கவனிப்போர் குறித்தும் - நாம் நடக்கும் வழி நல்வழியாக அமைந்திடல் வேண்டுமென்பது குறித்தும் கூறப்பட்ட அந்த வைரமணி வார்த்தைகள்; இன்று ஆளுங்கட்சியாக இருக்கும் நமக்கு வேதவரிகள் அல்லவா?

ஆட்சிக்கு எப்படியாவது வந்தாக வேண்டுமென்றோ - பதவிகளில் அமர்ந்தாக வேண்டுமென்றோ இந்தக் கழகம் தொடங்கப்படவில்லை. ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தமிழர்கள் மரபு, இலக்கியம், கலை, வரலாறு, மொழி, இனம், இவற்றைக் காத்து வளர்த்திடவும் - சமதர்ம சமத்துவ சமுதாயம் கண்டிடவும் - உரிமைகளுக்காகக் குரல் எழுப்பவும் - பகுத்தறிவு ஒளி விளக்கை ஏந்தி நிற்கவும் தி.மு.கழகம் நாட்டுக்குத் தேவையென்று சென்னை விருகம்பாக்கம் மாநாட்டில் அண்ணா அவர்கள் முழங்கினார்களே; அந்த முழக்கம் எந்த நிலையிலும் முடங்கிப் போகாமல் தமிழ் மக்கள் செவி புகுந்து சிந்தையில் பதிந்திட கழகம், மேலும் மேலும் வலிவு பெற வேண்டும்! அமைப்பு ரீதியாக வலிவு கொண்ட பாசறை இது! அதனால்தான் பதின் மூன்றாண்டு கால சோதனைகளில் புடம் போட்ட தங்கமாக ஆயிற்று!

இந்த ஆண்டு ஜூலை 12 ஆம் நாள் நமது பொதுச் செயலாளர் அவர்கள் கழக உறுப்பினர்கள் சேர்த்தல் - புதுப்பித்தலுக்காக விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது போல 35 ஆயிரம் கிளைக் கழகங்களையும், 30 லட்சம் உறுப்பினர்களையும் கொண்ட தி.மு.கழகம், கட்சியின் எட்டுத் தேர்தல்களை நடத்திவிட்டு 9-வது தேர்தலுக்கன்றோ இப்போது தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டுள்ளது. நமது கழகத்தின் திருத்தப்பட்ட சட்ட திட்டங்களின்படி 1.8.89 முதல் 15.9.89 வரையில் பழைய உறுப்பினர்களைப் புதுப்பித்தல், புதிய உறுப்பினர்களைச் சேர்த்தல் எனும் பணி தொடங்கி எல்லா அமைப்புகளும் பரபரப்புடன் இயங்கிடக் காண்கிறேன்!

ஆளுங்கட்சியெனும் மந்த நிலை என்றுமே நம்மை அண்டியதில்லை! இப்போதும் அந்த நிலை நம்மை அணுகாது

என்ற நம்பிக்கை ஒளி விடும் வண்ணம் உறுப்பினர் சேர்க்கும் உன் போன்றோர் ஆர்வம், என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறது! இளைஞர் அணிக்கான உறுப்பினர் சேர்த்திடவும் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்!

ஆட்சி என்பது மக்களுக்கு நற்பணியாற்றும் ஒரு வாய்ப்பு! அந்த வாய்ப்பு மீண்டும் கழகத்திற்குக் கிடைத்துள்ளது! அதனை நிறைவேற்றுவோம்! உடலுறுப்புக்களை வலிவாக்கிக் கொண்டு ஓய்வின்றி வேலை செய்கிறோம் - அது ஆட்சிப்பணி!

ஆனால் கழகப்பணி என்பது அந்த உறுப்புக்களை இயக்கும் உயிர்! உயிர் மூச்சு! இரு பணியும் தேவைதான் நாடு வாழவும் நலிவு தீரவும்! எனினும் கழகத்தைக் கட்டிக்காத்திட பெருக்கிடுக உறுப்பினர் எண்ணிக்கையை!

இளைஞரணித்தம்பியே! உனக்கும்தான் சொல்லுகிறேன்! மூத்தோர் இளைஞர் என முப்பது லட்சம் உறுப்பினர்களைத்தாண்டி - ஐம்பது லட்சத்தை எட்ட வேண்டும்!

எங்கே பார்க்கலாம் உன் திறமையை!

அன்புள்ள,

மு. க.

23-07-1989

1618. இரண்டு படத்தில் எந்தப் படம் பிடிக்கிறது?

உடன்பிறப்பே,

இவ்வளவு காலம் என்ன செய்தீர்கள்? ஏன் செய்யவில்லை? இப்போது திடீர் என்று அக்கறை வந்துவிட்டதா?

இந்தக் கேள்விகள், கேள்விகளாக இருக்க முடியுமே தவிர - இப்போதாவது செய்யும் எண்ணம் ஏற்பட்டதே என்பதை மறுத்துரைக்கும் வலிமை வாய்ந்தவைகள் அல்ல என்பதை நீயும் நானும் நன்றாகவே உணருவோம்!

ஆனால் ஒன்று - இவ்வளவு காலம் செய்யத் தவறியது என்று கூறிவிட்டு; இப்போது செய்யப் புகுந்துள்ள காரியம் அரக்கு மாளிகை இருட்டாக இருக்கிறதென்பதற்காக வெளிச்சத்திற்கான பலகணிகளை அமைப்பதற்கு பதில் தீப்பந்தங்களை அதன் சுவர்களில் சொருகி வைப்பது போலவும் ஆகிவிடக்கூடாதல்லவா?

ஜனநாயகம் என்பது கோபுரத்துக் கலசத்து உச்சிமுடியாக மாத்திரமின்றி - அந்தக் கோபுரத்தின் அடித்தளம் வரையில், பரவியிருத்தல் வேண்டும் என்பதுதான் உண்மையான ஜனநாயகவாதிகளின் கருத்து! கோபுர அமைப்புகளைக் காணாதவர்கள் யாரும் இருக்க முடியாது! எத்தனை அடி உயரக் கோபுரமோ அதற்கேற்றவாறு அஸ்திவாரம்! அதற்கு மேலே கோபுரத்தைத் தாங்கும் கட்டுமான மண்டபம்! அந்த மண்டபத்தின் மீது கோபுரமும் கோபுரக் கலசமும்! அஸ்திவாரம் பலமாக இருந்தால்தான் கோபுரம் நிற்கும் நிலையாக! சாதாரண உண்மை! சராசரி மனிதனும் உணர்வான்! அதற்காக அஸ்திவாரத்திலிருந்தே செங்குத்தாகக் கோபுரத்தை எழுப்பிவிட முடியாது!

அஸ்திவாரத்துக்கும் கோபுரத்துக்கும் இடையே கருங்கல்லால் ஆன வலிவுமிகுந்த மண்டபக் கட்டுமானம் அவசியம்! அதன்மீது கோபுரம் பரவலாக எழுந்து கூம்பலாக வானை நோக்கி

அமைந்தால்தான் அழகு, அழுத்தம், இரண்டும்! நம்முடைய பிரதமர் ராஜீவ்காந்தி சொல்கிறார் - கோபுர உச்சி; நேரடியாகவே - கீழேயுள்ள அஸ்திவாரத்தை பலப்படுத்துமென்று! அல்லது இப்படியும் சொல்கிறார், அஸ்திவாரம் பலமாக ஆக்கப்பட்டு - இடையில் உள்ள கல் மண்டபத்தின் தயவில்லாமலே கோபுரம் உயர்ந்து நிற்குமென்று! இதோ நான் படம் போட்டே காட்டுகிறேன் பார் இப்போது உனக்குப் புரிவது மட்டுமல்ல;

நீ மற்றவர்களுக்கு புரிய வைப்பாய் என்று நம்புகிறேன். பஞ்சாயத்து ராஜ் - நகர பாலிகா என்கிற வார்த்தைகளை விளம்பரப்படுத்திக் கொண்டு; மாநில அரசுகளின் அதிகாரம் என்ற கல் மண்டபக் கட்டுமானத்தைத் தகர்த்துவிட்டு - மத்திய அரசுக் கோபுரம், கிராமங்கள் நகரங்கள் என்ற அஸ்திவாரங்களை வலுப்படுத்தப் போகிறதாம்!

வடக்கே காங்கிரஸ் ஆளும் மாநிலங்கள் பலவற்றில் பஞ்சாயத்துக்கும் நகராட்சிகளுக்கும் தேர்தல்கள் நடைபெற்று பதினைந்து வருடங்களுக்கு மேலாகின்றன! அந்தக் காங்கிரஸ் கட்சியின் தலைமை, அந்தச் சீர்கேட்டை நீக்கிடத் தனது கட்சி ஆட்சி நடத்தும் மாநிலங்களுக்கு ஆணை பிறப்பித்துச் சரிப்படுத்த முன்வராமல் - அதாவது கல் மண்டபக் கட்டுமானத்தைச் செப்பனிட முனையாமல் - இந்தியா முழுமையும் உள்ள மாநில அரசு உரிமைகள் எனப்படும் கல்மண்டபக் கட்டுமானங்களைத் தகர்த்திடச் சட்டம் திருத்தம் கொண்டுவருவது என்ன நியாயமோ?

கழுத்தில் மரணக் கயிறை இறுக்கிக் கொண்டே, மஞ்சள் கயிறல்லவா கட்டுகிறேன் என்பதுபோல மாநில அரசுகளின் உரிமைக்கு எந்த ஆபத்துமில்லை என்று காங்கிரசார் புரிகிற வாதம் - உண்மையில் வாதமல்ல; வதம்! ஆம்; மாநிலங்களுக்கு பூரண சுயாட்சி வழங்க வேண்டுமென்றாரே ஜவகர் - அந்த ஜவகர் சொன்ன சுயாட்சிக் கொள்கையின் வதம்! அதுவும் ஜவகரின் பெயரால்!

கிராமப்புறத் தேவைகளை, நகர்ப்புறத் தேவைகளையோ அருகாமையிலிருந்து கவனித்து அந்தத் தேவைகளை நிறைவு செய்யக் கடமையும் உரிமையும் பெற்றுள்ள மாநில அரசுகளின் மீது நம்பிக்கையில்லை; மத்திய அரசுதான் உத்தம புத்திரன் என்று பிரச்சார சாதனங்களை முடுக்கிவிட்டு; முறையாகவும்

- அன்பாகவும் - சொல்லப்பட்ட கருத்துக்களையெல்லாம்கூட கால் தூசுக்குச் சமமாக மதித்துவிட்டு, மாநில அரசைத் தாண்டி கிராமப்புற நகர்ப்புற மக்களுக்குச் சுதந்திரமும் சுபீட்சமும் வழங்கப் போகிறார்களாம்! அதாவது; கல்மண்டபக் கட்டுமானத்தின் துணையின்றி கோபுரம் மட்டும் அஸ்திவாரத்துடன் நிற்குமாம்! அதாவது இந்தப் படத்தைப் பார்; இப்படி!

மண்டபம் இருக்காது! மக்கள் நுழைய நெடிய வாசல் இருக்காது! இந்த இரண்டு படத்தில் ராஜீவ் அவர்களுக்கு இரண்டாவது படம்தான் பிடிக்கிறது! உனக்கும் ஊராருக்கும் இரண்டு படத்தில் எந்தப் படம் பிடிக்கிறது?

அன்புள்ள,

மு. க.

09-08-1989

1619. சீரிய நோக்கம் வெற்றி பெற சிறப்புடன் அமையட்டும் முப்பெரும் விழா!

உடன்பிறப்பே,

செப்டம்பர் 15 நமது அண்ணன் பிறந்த நாள்! செப்டம்பர் 17 அந்த அண்ணனை நமக்குத் தலைவராக்கித் தந்த தலைவர் தந்தை பெரியார் பிறந்த நாள்! அதே நாளில்தான் கழகமும் பிறந்தது! இந்த மூன்று நாட்களையும் இணைத்து நடைபெறும் முப்பெரும் விழா வழக்கம்போல் இந்த ஆண்டு சென்னையில் நடைபெறுகிறது! இந்த ஆண்டின் மற்றொரு சிறப்பு! அய்யா பிறந்த 17-ஆம் நாளன்று கோவையில் இளைஞர் அணியினர் கழக ஆட்சியின் சாதனைப் பேரணி ஒன்றை நடத்துகின்றனர். நானும், பொதுச்செயலாளரும், பொருளாளரும், துணைப் பொதுச்செயலாளரும் மற்றும் கழக முன்னணியினரும் இளைஞரணித் தம்பிமார்களும் இருவிழாக்களிலும் கலந்து கொள்கிறோம்.

இடைக்காலத்தில் சில ஆண்டுகள் அண்ணா பிறந்தநாளன்று ஆட்சியின் சார்பில் காவல்துறையினருக்கு விருது வழங்கும் விழா நடைபெறாமல் போய்விட்டது. இந்த ஆண்டு செப்டம்பர் 15 மாலை அந்த நிகழ்ச்சி சென்னையில் உண்டு!

அண்ணன் பிறந்தநாளையொட்டி ஏழைகளுக்கு அரசின் சார்பில் ஐந்து கிலோ அரிசி இலவசமாக மாநிலம் முழுதும் வழங்கப்பட இருக்கிறது!

அண்ணா வழியில் அயராது உழைப்போம் எனச் சூளுரை மேற்கொண்டு தொடர் பணியாற்றும் நாம்; இந்த ஏழு மாத காலத்தில் எத்தனையோ இடையூறுகளைக் கடந்து ஏற்றமிகு சாதனைகளைப் புரிந்துள்ளோம்!

எனினும் சிலர் நம்மைத் தூற்றுவதையே தொழிலாகக் கொண்டுள்ளனர். அதுபற்றி வருந்திடவோ - வெகுண்டிடவோ

தேவையில்லை. காரணம் நான் அவர்களை மிக நன்றாகவே அறிவேன்! சில சங்கடங்கள் அவர்களுக்கு! அதனால் நம்மை எதிர்த்து சங்கு முழங்க வேண்டியிருக்கிறது.

ஒருவர் என் பழைய நண்பர் - வங்கிப் பாக்கியில் வகையாக மாட்டிக்கொண்டது மட்டுமல்ல; வெளிநாட்டுக்கு அனுப்பி வேலை வாங்கித் தருவதாக மோசடி செய்து அதிலே பல லட்சம் சுருட்டி விட்டதாக அவரது வாரிசுக்கு வலை வீசப்பட்ட காரணத்தால் விலை போய்விட்டார் வேறிடத்துக்கு! அதனால் கற்ற கலையெல்லாம் காட்டி நம்மைக் கடுமையாகத் தாக்குகிறார்! பெயரை அறியத் துடிக்கிறாய் - இப்போது சொல்வதாக இல்லை நான்!

இன்னொருவர் கல்லூரி தொடங்குவதாகக் கூறி அதற்கெனக் கூட்டாக வங்கியில் போட்ட பணத்தை முறைகேடாகத் தான் மட்டுமே தனியாக எடுத்து சிக்கிக் கொண்டார்! எனவே மிகச் சீற்றங்கொண்டு நம்மீது பாய்கிறார்!

இன்னொருவர் எதிரே கண்டால் - அடடா! என்ன வளைவு - என்ன பணிவு - மேடையிலோ நம்மீது நரகல் நடையில் தான் அர்ச்சனை! பாவம்; ராஜ்ய சபாக்களுக்கு அடிக்கடி தேர்தல் வருவதில்லை - வந்தால் போதும்; அவர் வந்து நிற்கும் வாசல் எதுவென்று எனக்குத் தெரியும்! சீட்டுக் கேட்க அல்ல - ஓட்டுப் போட - உரியதைப் பெற்றிட! இவர்கள் எல்லாம் நம்மீது புழுதிவாரி தூற்றும் போது நீ சினங்கொண்டு துடிக்கிறாய் - நானோ எனக்குள்ளாகவே சிரிக்கிறேன்! காரணம் - இவர்களை நான் முழுதும் உணர்ந்தவன்!

ஐம்பது ஆண்டுகாலம் பொதுவாழ்வில் ஓய்வே இன்றி உழைத்தவனுக்கு - அய்யாவின் பள்ளியில், அண்ணாவின் கல்லூரியில் அவர்களின் அருகிருந்தே பயின்றவனுக்கு - இந்த இயக்கம் வளரவும், வலிமை பெறவும் எத்தனை எத்தனை தியாக தீபங்கள் தேவைப்பட்டன என்பதும், ஏற்றுக்கொண்ட இன்னல்கள் எவ்வளவு என்பதும், கடந்து வந்துள்ள காட்டாறுகளின் எண்ணிக்கையும், பாயும் வேங்கைகள், பயமுறுத்தும் மலைப்பாம்புகள், சபலம் தூண்டும் சரசங்கள், சலனமூட்டும் சாகசங்கள் அனைத்தையும் மீறி அவர்கள் நிர்மாணித்துள்ள கொள்கைப் பாசறையாம் இந்தக் கழகம் ஓங்கி உயர்வதற்குத்

தடையாக நின்று தவிடு பொடியானவர்களின் சரித்திரமும் தெரியும்!

ஆட்சியைப் பிடிப்பது - அதிகாரம் செலுத்துவது ஒன்றே அய்யாவும், அண்ணாவும் நமக்குத் தந்த இலட்சிய விளக்கமென எவரேனும் எண்ணிடில் அவர்கள் விளக்கைக் கையில் வைத்துக் கொண்டே குழியில் வீழ்வோரேயாவர்! ஜனநாயகத்தைக் காத்திடும் ஒரே குறிக்கோளுக்காக கடந்தகாலத்தில் ஆட்சியையே விலையாகக் கொடுத்தவர்கள் நாம்!

இந்த ஆட்சி நம் கையில் இருத்தலாகாது - நமது கைக்கு வந்திடல் வேண்டும் - அப்போதுதான் மீண்டும் ஒரு சாராய சாம்ராஜ்யம் எழும்! அரசு நிலங்கள் கோடி கோடியாகப் பெறுமானமுடையவைகளைக்கூட ஆயிரம் பத்தாயிரத்துக்கு விற்றுக் களிக்கலாம்! நிர்வாகம் முடங்கினால் என்ன? நேர்மை கெட்டுத் தொலைந்தால் என்ன? இப்படிக் கணக்கிட்டுக் கனவு காண்போர் ஒரு புறம்!

பிறிதோர்புறமோ, உறவுக்குக் கை கொடுப்போம் உரிமைக்குக் குரல் கொடுப்போம்! எனும் நமது உறுதியான நிலைக்கு மதிப்பளிக்காத மத்திய அரசு; அரிசியையும், சர்க்கரையையும், பாமாயிலையும் போதுமான அளவுக்குத் தராமலே நமது ஆட்சிக்குக் கெட்ட பெயர் உருவாக்கலாமா எனத் திட்டம் தீட்டிப் பார்க்கிறது!

அரிசிக்கு, சர்க்கரைக்கு, பாமாயிலுக்கு எத்தனையோ கோரிக்கை கொடுத்துப் பார்த்து விட்டோம்! பலனில்லை! நேரிலும் முறையிட்டோம் பலமுறை! செவியேறவில்லை!

காவிரிப் பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விடுமாறு அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முடிவெடுத்து, கடிதம் எழுதியதற்கும் மத்திய அரசு மௌனமே சாதிக்கிறது!

மண்டல் கமிஷன் பரிந்துரையை நடைமுறைப்படுத்திடக் கேட்டு சட்டப் பேரவையில் தீர்மானமே நிறைவேற்றி அனுப்பி வைத்தோம்! டெல்லி அரசு அதனைக் கண்டு கொள்ளவே இல்லை! எத்தனை ஆண்டுகளாக! எட்டு ஆண்டுகளுக்கு மேலாக! இப்போதும் கேட்டோம்! இதற்கும் பே - பே தான்!

இந்த ஆண்டு முப்பெரும் விழாவோ இளைஞர் அணிப் பேரணியோ நமது ஆட்சியின் சாதனைகளை விளக்க

மட்டுமல்ல; நமது ஆட்சிக்கு வேண்டுமென்றே விளைத்திடும் சோதனைகளையும் மக்களுக்கு விரிவாக எடுத்துக் கூறப் பயன்பட வேண்டும்!

செப்டம்பர் 15 முதல் அண்ணன் புகழ்பாடுவது மட்டுமே நமது பணியாக இருந்திடாமல் - அந்த அண்ணன் வகுத்தளித்த மாநில சுயாட்சிக் கோட்பாட்டுக்கு; பஞ்சாயத்துராஜ், நகர்பாலிகா என்ற மாய்மாலத் திரைகளுக்குப் பின்னே மறைந்திருக்கும் ஆபத்தினையும் மக்களுக்குக் கூறிடவேண்டும்! கழக உறுப்பினர்கள் சேர்க்கும் பணியிலும் இந்த முப்பெரும் விழாவில் முனைந்து நிற்பாய் என்று எனக்குத் தெரியும்!

எவர் எவர் அலட்சியப்படுத்தப்பட வேண்டியவர்கள் - எது எது புறக்கணிக்கப்பட வேண்டியவை - எவற்றை எல்லா மக்களிடமும் எடுத்துச் சொல்ல வேண்டும்; தொகுத்துச் சொல்ல வேண்டும் என்பதனை கோடிட்டுக் காட்டியுள்ளேன்!

நமது விழி திறந்த பெரியார் - வழிகாட்டிய தலைவர் அண்ணா - மொழியும் இனமும் உரிமையும் காத்திடும் கழகம் - வகுத்தளித்த கொள்கைகளை, வழங்கிடும் திட்டங்களைச் செயல்படுத்துவோம்! முப்பெரும் விழா இந்தச் சீரிய நோக்கம் வெற்றிபெற நாடெங்கணும் சிறப்புற அமையட்டும்!

அன்புள்ள,

மு. க.

11-09-1989

1620. கோவையில் கூடுது கொள்கைப் பட்டாளம்!

உடன்பிறப்பே,

இந்த ஆண்டு விடுதலை இதழ் வெளியிடும் பெரியார் மலருக்கு எனது கருத்துரையாகப் பின்வருமாறு எழுதியனுப்பியுள்ளேன்.

அண்ட பகிரண்டத்தில் எத்தனையோ கோடானு கோடி ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நெருப்புக்கோள் தோன்றியது. அதைப் பகலவன் எனப் பகருகின்றோம். நூற்றிப் பதினோரு ஆண்டுகளுக்கு முன்பு ஈரோடு நகரத்தில் ஒரு நெருப்புக் கோள் தோன்றியது. அதைப் பகுத்தறிவு பகலவன் என நாம் கூறுகிறோம். நானிலமே கூறுகிறது.

இன்று விளைகின்ற இன உணர்வுத் தருக்களுக்கும், மலர்கின்ற பகுத்தறிவுப் பூக்களுக்கும், மணக்கின்ற தன்மான நந்தவனத்துக்கும் அவரின் ஒளியே உயிர் வழங்குகின்றது! நாம் எவ்வளவு உயரமான எழில் மாளிகை அமைத்தாலும் அதற்கு அவரது தத்துவமே அடித்தளம்!

அந்தப் பெரியார் பிறந்தநாள் இன்று! ஆம்; இன்றுதான் கோவை மாநகரில் இளைஞர் அணியினர் கழக ஆட்சியின் சாதனைப் பேரணி நடத்துகின்றனர்!

இளம்பிராயம் தொட்டு தந்தை பெரியாரின் பாசறையில் பயிற்சி பெற்று, பேரறிஞர் அண்ணாவின் அரவணைப்பில் வளர்ந்து, இன்று உடன்பிறப்பு உணர்வுடனும், தோழமைப் பண்புடனும் தலைமைக் கழகத்தையும் பல்லாயிரக்கணக்கான கழக அமைப்புகளையும் நடத்திச் செல்லும் நானும் பேராசிரியரும் சாதிக்கும் நாஞ்சிலாரும் மற்றும் கழகத் தளகர்த்தர்களாம் முன்னணியினரும் கோவைப் பேரணி காணவும், கருத்துரை கூறவும் வருகிறோம்.

இளைஞர் அணி ஆலுக்கு விழுது என்பதை இதன் தொடக்க விழா நடைபெற்றபோதே எடுத்துக்கூறியுள்ளேன். சேலத்து ஒட்டு மாஞ்செடி போல மூத்தோர் அனுபவமும் இளைஞர்தம் ஆற்றலும் கலந்து கழகத்திற்கும் - கழகத்தின் வாயிலாகத் தமிழ் நிலத்துக்கும் பயனளிக்க வேண்டுமென்றும் பலமுறை வலியுறுத்தியுள்ளேன். கழக அணிகள் எவையாயினும் கழகத்திற்குத் துணை அணிகளேயன்றி இணை அணிகள் அல்ல!

இந்த உண்மை நிலையிலிருந்து ஒரு அணுமுனையும் பிறழாது வீரநடை போட்டுத் தீரச் செயல் புரிந்துவரும் ஆயிரமாயிரம் இளைஞரணித் தம்பிமார்களை வாழ்த்துகிறேன்!

இளைஞர்களை ஈட்டியின் முனைகள் என வர்ணித்துள்ளார் பேரறிஞர் அண்ணா! ஈட்டியின் முனைகளே இருங்கள்! தீட்டிய கூர்வாட்களே திட்ட இதோ! கட்டிய நாய்களல்ல நாம் எட்டிய மட்டும் பாய்வதற்கு! விருப்ப முள்ளவராம் வெறும் பதவியில் - பலபேர்! அவர் வேண்டாம்; நெருப்பின் பொறிகளே! நீங்கள்தான் தேவை! இது நாற்பத்திஐந்து ஆண்டுகளுக்கு முன்பு ஈரோடு குடியரசுப் பத்திரிகைப் பாசறையிலேயிருந்து நான் எழுதிய வரிகள்!

சிங்க இளைஞனே! திற விழி! திருப்பு முகத்தை! இது புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் கவிதை முழக்கம்!

நெருப்பு, நிமிர்ந்து நின்றுதானே எரியும்; உண்மையான சுயமரியாதைக்காரனைப் போல! என்று 1984ஆம் ஆண்டு கரூர் கழக மாநாட்டுக்கு அண்ணா ஜோதி ஏந்தி வந்த இளைஞர் அணியினரைப் பற்றி முரசொலியில் கடிதம் எழுதியபோது குறிப்பிட்டிருக்கிறேன்.

அண்ணா சுடருடன் ஒரு இளைஞன் வியர்க்க வியர்க்க ஓடிக்கொண்டிருக்கிறான். வியர்வை அருவியெனக் கொட்டுகிறது! அந்த அருவியை பூமிக்கு அனுப்பும் மலைத் தோள்கள் அவனுக்கு என மகிழ்ந்தேன்!

இரவெல்லாம் பனியில் குளித்துக் கொண்டே தோரணம் கட்டுகிறான்! தெருவெல்லாம் கொடிக் கம்புகளை நடுகிறான்! அதோ அந்த வரவேற்பு வளைவுகள் அவனது உறக்கமின்மையின் படைப்புகள்! அந்தப் பதாகைகள் அவன் பட்டினி கிடந்து ஆற்றிய பணிக்குக் கிடைத்த பயன்!

நானும் அவனைப் போல் தொண்டனாக இருந்து தோரணம் கட்டியிருக்கிறேன். விளம்பரத் தாள்களில் பசை தடவிச் சுவர்களில் ஒட்டியிருக்கிறேன். அழைக்கப்பட்ட தலைவர்களின் வருகைக்காக ரயிலடியிலும், பேருந்து நிலையத்திலும் காத்திருந்து, அவர்கள் வந்தால் வாழ்த்து முழக்கமிட்டு - வராவிட்டால் மனமொடிந்து குமுறி, மறக்க முடியாத அனுபவத்தைப் பெற்றிருக்கிறேன். அதனால்தான் தொண்டர்களின் உணர்வைப் பிரதிபலிக்க முடிகிறது! இன்னமும் தொண்டனாகவே இருக்க முடிகிறது!

இப்பொழுதும் நினைத்துப் பார்க்கிறேன்; அன்றைக்குத் திருச்சி கரூர் சாலையில் தீபச் சுடருடன் ஓடிய தியாகசீலனாம் அந்த இளைஞன் இன்னமும் என் மனக்கண் முன்னே ஓடிக் கொண்டிருப்பதாகவே தோன்றுகிறது!

ஓர் இளைஞன்! ஒரு நூறு இளைஞர்கள்! ஓராயிரம் இளைஞர்கள்! ஒரு லட்சம் இளைஞர்கள்! ஒரு கோடி இளைஞர்கள்! அனைவரின் கரங்களிலும் அண்ணா சுடர் - அறிவுத் தந்தை பெரியார் சுடர் - கொள்கைப் பாசறையாம் கழகச் சுடர் - கரங்களில் மட்டுமா? இல்லை! அந்தக் கண்மணிகளின் களங்கமற்ற, கபடமற்ற கவின்மிகு உள்ளங்களிலும் அந்த ஒளிச்சுடர் காண்கிறேன்!

நம்மைப் போன்றோர் காலத்தால் வயதால் உச்சிக்கு வந்துவிட்ட சூரியன்கள்!

இளைஞர் அணியினரோ குங்கும வண்ணம் குறுநகை புரியும் கிழக்குக் கீழ்வானின் உதயசூரியன்கள்!

அந்தச் சூரியன்கள், அணிவகுக்கிறார்கள் கோவையில்!

அவர்களை வாழ்த்திட, பாராட்டிட, பணியாற்ற வேண்டிய முறைகளை விளக்கிட, எதிர்காலத்தில் நாம்விட்டுச் செல்லப்போகும் அரும்பணிகள் அனைத்தையும் கட்டிக்காத்து, கடமையுணர்வுடனும் கண்ணியம் போற்றியும், கட்டுப்பாட்டுடன் பின்பற்றி வெற்றிக் களங்கள் பல அமைக்க இளைய தலைமுறையினராம் ஆயிரமாயிரம் அரிமாக்களை நம்பியிருக்கிறோம் என்றுரைத்திட; கோவைக்குச் செல்வோம்! கொள்கை முழக்குவோம்!

வா; என் இளைஞனே வா! வண்ணத் தமிழே, வா! எண்ணக் கருவூலமே வா! எமை நமத்துவாய் என எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடேன் எனும் தன்மானத் தங்கமே, வா! கோவையில் காணுகிறேன் உன் குளிர்ந்த பார்வையை! அதனால் என் களைப்பு போகும்! களிப்பு பெருகும்! மேலும் உழைத்திட அதுவே எனக்கு உயர் மருந்தாகும்!

அன்புள்ள,

மு. க.

17-09-1989

1621. அக்டோபர் ஏழு! அணிவகுப்போம் எழு!

உடன்பிறப்பே,

அக்டோபர் 2- உத்தமர் காந்தியடிகள் பிறந்த நாள் - இந்த நாட்டுச் சுதந்திரத்துக்காக விடுதலை வேள்வி வளர்த்த அந்த தியாகச் செம்மல் உதித்த நாள்! இந்நாளில்தான் இந்தியாவில் ஜனநாயகம் பட்டுப் போகாமல் இருக்க வேண்டுமே என்ற ஏக்கத்துடன் கர்ம வீரர் காமராசர் நம்மை விட்டுப் பிரிந்த நாள்! இந்நாள் நினைவுடன் என்னையும் உன்னையும் அழைக்கிறது அக்டோபர் ஏழாம் நாள்!

ஆம், அக்டோபர் ஏழாம் நாள் மாலை தமிழக முழுதும் சிற்றூர், பேரூர், நகரம், மாநகரம் எங்கணும் அங்கிங்கெனாதபடி மனித நேயச் சங்கிலி!

சாதிமதபேதமெனும் சழக்கு அகற்றிடவும் சமத்துவம் சகோதரத்துவம் கடைப்பிடிக்கவும் உள்ளத்தால் ஒருவரே மற்று உடலினால் பலராய்க் காண்போம் என்ற உணர்வினைக் காட்சியாக்கிடவும் அக்டோபர் ஏழாம் நாள் மனித நேயச் சங்கிலியில் அணி வகுப்போம்!

மாநிலத் தேவைகளை மத்திய அரசு அலட்சியப்படுத்துகிறது! மாநில அரசு சட்டப் பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய மண்டல் கமிஷன் - மகளிர் சொத்துரிமை போன்ற தீர்மானங்களும், சட்டங்களும் நாலைந்து மாதங்களாகக் கிடப்பிலே போடப்பட்டுள்ளன டெல்லியில்!

தரவேண்டியதை தருக என நமது பற்றாக்குறையைத் தெரிவித்து அரிசிக்கும், சர்க்கரைக்கும், பாமாயிலுக்கும் எத்தனையோ வேண்டுகோள்! எத்தனையோ நேரடி சந்திப்பு!

மாநில அரசின் குரல் என்ன காரணத்தாலோ மத்தியிலிருப்போர் செவிகளில் விழவே இல்லை!

எனவே தமிழக மக்கள் அனைவரும் ஒரே குரலில் - ஒரே அணியில் - ஓங்கி ஒலித்திடுவோம் நமது கோரிக்கைகளையென்று தி.மு.க. வேண்டுகோள் விடுத்தது!

அதனையேற்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், ஜனதா தளம், முஸ்லிம் லீக், திராவிடர் கழகம், தமிழக முன்னேற்ற முன்னணி, பார்வர்டு பிளாக் - ஆகிய கட்சிகள் அனைத்தும் அறிக்கைகள் விடுத்தது மட்டுமின்றி அக்டோபர் 7-ல் மனித நேயச் சங்கிலியில் அணிவகுக்கின்றன!

கட்சிச் சார்பற்ற அமைப்புகள், மன்றங்கள், சங்கங்கள், பொதுப் பணி நிறுவனங்கள் அனைத்திலுமுள்ளோர் காந்தீய வழியில் நடைபெறும் இந்த அமைதி வழி அணி வகுப்புக்கு ஆதரவு தரவும் கலந்து கொள்ளவும் வேண்டுகிறேன்.

ஆங்காங்கு பட்டிதொட்டி முதல் பட்டினக்கரை வரையில் அனைத்துக் கட்சி நிர்வாகிகளுடன் கலந்து பேசிடுக! எல்லா நிறுவனத்தினருடனும் தொடர்பு கொண்டிடுக!

தமிழக மக்களின் குரல் டெல்லிக்கு எட்டட்டும்!

அத்துடன் தமிழகத்தில் சாதி மத அமளிக்கு வித்திடுவோர் யாராயினும் அவர் தம் விஷமம் கொட்டம் அடங்குவதற்கும் மனித நேயச் சங்கிலி பயன்படட்டும்!

உடன்பிறப்பே, தொடங்கட்டும் உனது பணி! அக்டோபர் ஏழு! மாலை நேரம் - மாநில முழுதும் மனித நேயச் சங்கிலி!

நமது மனக்குமுறலை வெளிப்படுத்தும் அறவழிப் போர் முறை அது! நமது அண்ணன் வழியில்! ஆம், இன்றே ஆயத்தமாகுக! அக்டோபர் ஏழு! அணி வகுப்போம் எழு!

அன்புள்ள,

மு. க.

(02-10-1989)

1622. நாளையும் எழுதுகிறேன்; நடக்கட்டும் உனது பணி!

உடன்பிறப்பே,

விரைந்து செயல்பட வேண்டும் என்று மத்திய அரசின் அமைச்சர்கள் நாள்தோறும் முழங்கிக் கொண்டிருக்கிறார்கள்! எட்டு ஆண்டுகளுக்கு மேலாக மண்டல் கமிஷன் பரிந்துரைகளின்மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் மத்திய அரசில் நல்ல உறக்கம்! அதுவும் கும்பகர்ண உறக்கம்! மத்திய அரசு அலுவலகங்களில் - மத்திய அரசு சார்புடைய நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு செய்யவேண்டும் என்பதே ஜனதா ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட மண்டல் குழுவின் பரிந்துரை! அந்தப் பரிந்துரை எட்டு ஆண்டுகளுக்கு மேலாகக் குறட்டை விட்டுக் கொண்டிருக்கிறது டெல்லியில்!

பஞ்சாயத்து ராஜ் - ஆம்; இன்றைய பாரதப் பிரதமரின் பாஞ்சஜன்யம் இதுதான்! ஒரு பஞ்சாயத்தோ, பஞ்சாயத்து யூனியனோ கலைக்கப்பட்டால் உடனடியாக ஆறு மாதத்திற்குள் அதற்குத் தேர்தல் நடத்துவதுதான் ஜனநாயகமென்றும் - பஞ்சாயத்து ராஜ்யத்தின் மூல நோக்கங்களில் அதுவும் ஒன்று என்றும் - டெலிவிஷன்கள் கோஷமிடுகின்றன! ரேடியோக்கள் குரல் எழுப்புகின்றன! அந்த ஜனநாயக மாண்பு சட்டசபைகளுக்கு மட்டும் கிடையாதாம்! தமிழ்நாட்டு ஆட்சி கலைக்கப்பட்டு ஆறு மாதத்திற்குள் தேர்தல் நடந்ததா? இப்போது கர்நாடகத்தில் கவர்னர் ஆட்சியின் கால நீட்டிப்பு செய்யப்படுகிறதே தவிர தேர்தலுக்கா தேதி வைத்திருக்கிறார்கள்? இதையெல்லாம் சுட்டிக்காட்டினால் தேச விரோதி என்று கூறிவிடுவார்கள்.

படிப்படியாக பஸ்களை தேசியமயமாக்குவது கழக அரசின் கொள்கை! இடையில் நடந்த ஆட்சியால் அந்தக் கொள்கை குழிதோண்டிப் புதைக்கப்பட்டது! அதற்கென மீண்டும் ஒரு சட்டம்

நடைமுறைக்குக் கொண்டுவரலாம் என்றால் டெல்லியின் ஒப்புதல் இன்னும் கிடைத்தபாடில்லை!

பெண்களுக்கும் சொத்தில் சம உரிமை எனப் பேரவையில் சட்டம் செய்து, மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்து மாதங்கள் நாலுக்கு மேலாகின்றது - விரைந்து செயல்பட வேண்டுமென அனைவர்க்கும் அறிவுரை கூறுகிற டெல்லிப் பட்டணத்து அரசு, அந்தச் சட்டத்திற்கு விரைந்து ஒப்புதல் தரவேண்டுமென ஏனோ எண்ணிடவில்லை!

அரசியல் கருத்து வேறுபாடுகள் இருப்பினும் நிர்வாக விஷயத்தில் மோதுதல் இருத்தலாகாது எனத் தெளிவாகத் தெரிவித்து, அவ்வாறே செயல்படும் ஒரு மாநில அரசின் கோரிக்கைகள் இவ்வாறு கிடப்பிலே போடப்படுவானேன்?

அரசியல் நோக்கம் டெல்லிக்கு இருக்கிறது போலும் என்றுதானே எண்ணிட வேண்டியுள்ளது! சட்டமன்றத் தேர்தல் நேரத்தில் காங்கிரஸ் கட்சி வெளியிட்ட தேர்தல் உறுதி மொழிகளில் காவிரி பிரச்சினைக்கு நடுவர் தீர்ப்பு வலியுறுத்தப்பட்டிருந்தது.

காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் கலந்துகொண்ட கூட்டத்தின் முடிவுப்படி அந்த நடுவர் தீர்ப்பு கேட்டு கடிதங்களும் பல எழுதிவிட்டோம்! நேரிலும் சொல்லிவிட்டோம்! ஒரே மௌனம்! ஆழ்ந்த மௌனம் டெல்லியின் கொலு மண்டபத்தில்!

மேலவையை மீண்டும் கொண்டு வர வேண்டுமென காங்கிரஸ் தேர்தல் அறிக்கையிலும் தெரிவிக்கப்பட்டது - பேரவைத் தீர்மானத்திற்கும் காங்கிரஸ் ஆதரவு அளித்தது! ஆனால்... ஆனால்... விதி முறைகளையே அலட்சியப்படுத்திக் கடந்த கால அரசு ஒரே ஒரு கடிதத்தின் மூலம் அன்றிருந்த மேலவையைக் கலைத்ததற்கு டெல்லி உடனே ஒப்புதல் அளித்தது! நாம்; எல்லா விதிமுறைகளையும் பின்பற்றி நிறைவேற்றிய மேலவை மீண்டும் அமைத்திடும் தீர்மானம் டெல்லியில் கோப்புக் குவியலின் அடித்தளத்தில் எடுத்து சொருகி வைக்கப்பட்டுவிட்டது.

* 1988 நவம்பரில் தமிழகத்திற்கு எண்பதாயிரம் டன் அரிசியும், டிசம்பரில் எண்பதாயிரம் டன் அரிசியும், ஜனவரியில் ஒரு லட்சம் டன் அரிசியும் மத்திய தொகுப்பிலே இருந்து வழங்கிய டெல்லி, ஜனவரி இறுதியில் நமது கழகம் ஆட்சிக்கு வந்தவுடன்

உடனடியாக அந்த அரிசியின் அளவை நாற்பதாயிரம் டன்னாகக் குறைத்துவிட்டது! நாமொன்றும் டெல்லியுடன் மோதிக் கொள்ளும் போக்கை நிர்வாகத்தில் கடைப்பிடிக்கவில்லையே! உடனடியாக டெல்லிக்குச் சென்று பிரதமரிடம் நேரிலேயே வேண்டுகோள் விடுத்தேன்! ஒரு முறையல்ல; இருமுறை! தொடர்ந்து அரசின் சார்பில் பல கடிதங்கள்! உணவு அமைச்சர்கள் மாநாட்டிலும் வேண்டுகோள்!

சில மாநிலங்களைக் காட்டி, தமிழ் மாநிலத்திற்குக் குறைத்தது நியாயம் என்கின்றனர்! இந்த மாநிலம் பெரும்பான்மையோர் அரிசி உணவு அருந்துவோர் என்பதை மறந்துவிடலாமா? என் செய்வது, நமது வாதத்தை ஏற்க மறுக்கின்றனர்! இங்கு நாம் சர்க்கரை ஆலை அதிபர்களை அழைத்துப் பேசி கிலோ சர்க்கரை ரூ. 7.50 என்று கூட்டுறவு அங்காடியில் விற்பனைக்கு ஏற்பாடு செய்கிறோம்! ஆனால் மத்திய அரசோ கிலோ சர்க்கரை ரூ. 8.50 முதல் ரூபாய் ஒன்பது வரையில் விற்பதற்கு அறிவிப்பு தருகிறது!

போதுமான சர்க்கரையாவது நமது மாநிலத்திற்கு ஒதுக்கப்படுகிறதா? கரும்பு விளைவது இங்கே! அதனைப் பிழிந்து சர்க்கரை தரும் ஆலைகள் இங்கே! ஆனால் ஒதுக்கிடும் அதிகாரம் அங்கே!

பாமாயில் ஒதுக்கித்தரும் அதிகாரம் படைத்ததும் மத்திய அரசேதான்! நமது தேவையில் பாதியளவு பாமாயில் கூட ஒதுக்கிட மத்திய அரசு முன்வரவில்லை! இதனால் குமுறிக் கொண்டிருக்கும் தமிழ்நாட்டு மக்கள்; தங்களின் மன நிலையை டெல்லிக்கு உணர்த்த தேர்ந்தெடுத்துள்ள அறவழி முறைதான் மனித நேயச் சங்கிலி! மனித நேயத்துடன் மத்திய அரசு தமிழ்நாட்டு மக்களுக்கு உதவிட வேண்டுமென அக்டோபர் ஏழாம் நாள் வலியுறுத்துவது தவிர்க்க முடியாதது!

* அது ஒன்று மட்டுமல்ல; மதம் சாதி இவற்றில் வெறிகொண்டோர் சிலரைப் பிடித்து அமைதிப் பூங்காவாம் தமிழகத்தை அமளிக் காடாக்க முனையும் கொள்ளி வாய்ப் பிசாசுகளின் கொட்டமடக்கிடவும் - சமத்துவம், சகோதரத்துவம் போற்றிக் காத்திடுவோம் எனச் சபதமேற்கவும் தமிழ்ப் பெருமக்கள் அனைவரும் அக்டோபர் ஏழாம் நாள் மாலை 5 மணி முதல் ஒரு அரை மணி நேரம் கைகோத்து நிற்போம்!

உடன்பிறப்பே, தோழமைக் கட்சிகளின் செயல்வீரர்கள், சமுதாய அமைப்புகளின் நண்பர்கள், பொதுப்பணியாளர்கள் அனைவருடனும் கலந்து பேசி ஆவன செய்திடுக! இன்றே முனைந்திடுக! அக்டோபர் ஏழு - மாலை நாலு மணிக்கே, சிற்றூர் பேரூர் நகரங்களில் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு மனித நேயச் சங்கிலியில் பங்கேற்போர் வந்திட வேண்டும் - நாலரை மணியளவில் அவரவர் நிற்குமிடங்கள் குறிப்பிடப்படவேண்டும் - ஐந்து மணிக்கு கைகோத்துக் கொண்டு ஐந்தரை மணி வரையில் நின்றிடல் வேண்டும்.

சென்னையில் மனித நேயச் சங்கிலியில் நான் முதலில் நின்று - பின்னர் ஜீப்பில் ஏறி - சங்கிலியின் தொடக்க முதல் முடிவு வரையில் சென்று - வரிசையில் நிற்போர் அனைவர்க்கும் வணக்கம் தெரிவித்து வாழ்த்து கூறுவதாக இருக்கிறேன்! ஒவ்வொரு ஊரிலும் இதுபோல ஏற்பாடுகள் இருக்கலாம்! அமைச்சர்கள், அனைத்துக் கட்சித் தலைவர்கள், தமிழர் நலனில் அக்கறை கொண்டுள்ள சான்றோர்கள், ஆடவர், பெண்டிர், தொழிலாளர், மாணவர், இளைஞர் எல்லோரும் நின்றிடுவர்! நின்றிடல் வேண்டும்; நமது கோரிக்கை வென்றிடல் வேண்டும் அதற்காக! நாளையும் எழுதுகிறேன் - நடக்கட்டும் உனது பணி!

அன்புள்ள,

மு. க.

04-10-1989

1623. மாநில முழுதும் மனிதநேயச் சங்கிலி!

உடன்பிறப்பே,

தமிழ்நாடு சட்டப் பேரவையில் காங்கிரஸ் கட்சித் தலைவராக விளங்குபவரும் - கருத்து வேறுபாடுகள் ஆயிரம் இருப்பினும் கண்ணியமும் கனிவுமிக்க அரசியல் பண்பாளர்களில் ஒருவராக இருக்கக் கூடியவருமான திரு. மூப்பனார் அவர்கள் கூறியதாக இன்றைய இந்து இதழில் ஒரு செய்தி படித்தேன்.

"Mr. Moopanar urged the Chief Minister Mr. M. Karunanithi, to devote his personal attention to this problem which hit the common man, and take immediate steps to make available adequate quantities of rice, sugar and edible oils at reasonable prices for the festival season. He said there is no point in blaming the Centre for all problems or depending on it for full allotments. The State Government must find a proper solution to the problem now faced by the people and I am sure they will have full cooperation from the Centre"

முதலமைச்சர் கருணாநிதி இந்தப் பொது மக்களைப் பாதிக்கும் அரிசி, சர்க்கரை, சமையல் எண்ணெய் ஆகியவை பண்டிகை காலத்தில் போதுமான அளவு அவர்களுக்கு கிடைக்கவும் - நியாயமான விலையில் கிடைக்கவும் தனது தனிப்பட்ட கவனத்தைச் செலுத்திட விரைந்து முனைய வேண்டும். அரிசி, சர்க்கரை, எண்ணெய் ஒதுக்கீடு குறித்து மத்திய அரசைக் குற்றம் கூறுவதோ, அல்லது முழுமையான தேவைக்கு ஏற்ற ஒதுக்கீட்டுக்கு மத்திய அரசையே எதிர்பார்த்திருப்பதோ சரியல்ல! மாநில அரசே அதற்குரிய பரிகாரங்களைக் கண்டறியுமானால் மத்திய அரசின் முழு ஒத்துழைப்புக்கு என்னால் உறுதி கூற முடியும்

திரு. மூப்பனார் அவர்களின் இந்தக் கருத்து, நாம் ஏதோ மத்திய அரசின் மீது வேண்டுமென்றே குறை கூறுவது போலக்

கற்பனை செய்து வெளியிடப்பட்ட கருத்தாகவே எனக்குத் தோன்றுகிறது!

மக்களுக்குத் தேவையான அத்யாவசிய உணவுப் பொருட்களை வழங்குவதில் மாநில அரசின் பொறுப்புகளைத் தட்டிக் கழிக்க நாம் தயாராக இல்லை. திரு. மூப்பனார் அவர்கள் கூறியிருப்பதைப் போல நானே இந்தப் பிரச்சினையில் தனிக்கவனம் செலுத்தி நாள்தோறும் உணவு அமைச்சர், மற்றும் அரசு அதிகாரிகளுடன் கலந்து பேசி அவ்வப்போது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதும் அனைவரும் அறிந்த ஒன்றேயாகும். இன்னும் இதில் இந்த அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டுமென திரு. மூப்பனார் அவர்கள் சுட்டிக்காட்டுவதை அலட்சியப்படுத்துகிற அளவுக்கு இது ஆணவம் பிடித்த அரசுமல்ல! எதிரணியிலிருந்து நாகரீகப் பண்பாட்டுடன் எடுத்துக் கூறப்படுகிற எந்த யோசனையையும் வரவேற்பதுடன் - குறையிருப்பின் அதனை உடனடியாகத் திருத்திக் கொள்ளக் கூடிய மனப்பக்குவமுடையதுதான் இந்த அரசு!

கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவமழை பொய்த்துவிட்டது! அதன் காரணமாகத் தமிழகத்தில் விளைச்சல் பெருமளவு குறைந்துவிட்டது!

இதற்கு மாநில அரசும் பொறுப்பல்ல! மத்திய அரசும் பொறுப்பல்ல! இயற்கையின் கைவிரிப்பு! அதனால் நமக்குத் தவிப்பு!

மழையில்லாவிடினும் - காவிரியிலிருந்து கிடைக்க வேண்டிய நீராவது நமக்குரிய முறைப்படி கிடைத்ததா? இல்லை!

அண்ணா முதல்வராக இருந்தபோது - பின்னர் நான் முதல்வர் பொறுப்பேற்றிருந்த போது - அதற்குப்பிறகு அருமை நண்பர் எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது காவிரிப் பிரச்சினையில் ஒரே மாதிரியான கொள்கையைக் கடைப்பிடித்து, அதேபோல இந்த மாநிலத்தில் உள்ள எல்லாக் கட்சிகளுமே குரல் கொடுத்து - காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பிரகடனத்திலேயும் இடம்பெற்ற நடுவர் தீர்ப்பு இன்னமும் அறிவிக்கப்படாததற்கு மத்திய அரசின் கவனம் இதில் முழுமையாகத் திருப்பப்படாததுதான் என்பது முக்கியமான காரணமில்லையா? மத்திய அரசு இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் என்ற நம்பிக்கையுடன்தானே

1968 முதல் 1988 முடிய மாநில அரசு, மத்திய அரசின் கருத்துக்களுக்கெல்லாம் மதிப்பளித்து வந்திருக்கிறது! இதனை மறந்துவிடலாமா?

தமிழ்நிலத்தில் மழையும் தேவையான அளவுக்கு இல்லை - காவிரி நீர் தாவாவும் தீர்ந்தபாடில்லை - எனவே இங்கு அரிசிப் பற்றாக்குறை!

இந்தப் பற்றாக்குறை நிலை கவர்னர் ஆட்சியின்போது எப்படிப் போக்கப்பட்டது?

மாதமொன்றுக்கு மத்திய தொகுப்பிலிருந்து எண்பதாயிரம் டன் அரிசி மாநில அரசுக்கு வழங்கப்பட்டது! தேர்தல் மாதமான ஜனவரி மாதத்தில் மத்திய தொகுப்பு, மாநிலத்துக்கு ஒரு லட்சத்து ஐயாயிரம் டன் அரிசியை வழங்கியது! மேதகு கவர்னர் அவர்கள் மத்திய அரசை அணுகிய முறைக்கு மாறுபட்ட முறையில் நமது அரசு மத்திய அரசை அணுகவில்லை!

ஜனவரியில் தேர்தல் முடிந்து கழக அரசு பதவி ஏற்ற மறுநாளே மத்திய அரசு அரிசி விலையை உயர்த்தி அறிவித்தது! இதை மூப்பனார் அவர்கள் அறிவார் என்றே நம்புகிறேன்! மத்திய அரசு ஏற்றிய அரிசி விலை உயர்வை மாநில அரசு அமல்படுத்தவில்லை! பழைய விலைக்கே ரேஷன் கடைகளில் கொடுத்தது! அடுத்து பிப்ரவரி மாதம் முதல் நாற்பதாயிரம் டன்தான் அரிசி தரமுடியும் என்று மத்திய அரசு கூறிவிட்டது!

நவம்பரில் எண்பதாயிரம் டன்னும், ஜனவரியில் ஒரு லட்சத்து ஐயாயிரம் டன்னும் கவர்னர் ஆட்சியில் வழங்கிய மத்திய அரசு - திடீரென நாற்பதாயிரம் டன்தான் எனக் கூறியவுடன்; அரிசி உணவு அருந்துவோரை அதிகமாகப் பெற்றுள்ள நமது மாநிலத் தேவையை எடுத்துரைக்க நானே பிரதமரைச் சந்தித்து கோரிக்கை வைத்தேன். வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். இந்தப் பிரச்சினையில் முதல்வர் தனிக்கவனம் செலுத்த வேண்டுமென மூப்பனார் அவர்கள் கூறியுள்ளாரே; அந்த தனிக்கவனம் பிப்ரவரி திங்களிலேயே பிரதமரைச் சந்தித்து நிலைமையை விளக்கியதிலிருந்து ஆரம்பமாகிவிட்டது! அதன்பிறகு எத்தனையோ வேண்டுகோள் கடிதங்கள் அதிக அரிசி கேட்டு!

பயனில்லை! பிறகுதான் அண்டை மாநிலங்களில் அரிசி வாங்கிக் கொள்ளவாவது அனுமதி கொடுங்கள் என மத்திய அரசைக் கேட்டு அந்த அனுமதியைப் பெற்றுள்ளோம்.

இதனால் எத்தனை கோடி அதிகச் செலவு அரசுக்கு என்பதைப் பலமுறை எடுத்துக் கூறியிருக்கிறது மாநில அரசு!

சர்க்கரை ஒதுக்கீட்டிலும் - விலை நிர்ணயித்த வகையிலும் ஏற்பட்ட குளறுபடிகள் குறித்து, ஜனதா தளத் தலைவர்களில் ஒருவரான சத்யபால் மாலிக் தெரிவித்துள்ள கருத்து டெல்லியில் மேலிடத்தின் கவனத்திற்குப் போயிருக்குமென்றே நம்புகிறேன். அதற்குரிய நடவடிக்கைகள் இனி எடுக்கப்பட்டாலுங்கூட; பொதுமக்கள் சர்க்கரைக்கு அதிக விலை கொடுக்க வேண்டிய நெருக்கடிக்கு ஆளானது யாரால்? எந்த அரசினால்? என்பதை மூப்பனார் போன்றவர்கள் உணர்ந்தே இருக்கக் கூடும்!

சர்க்கரையைப் போலவே பாமாயில் ஒதுக்கீடு செய்யும் அதிகாரமும் நமது மாநில அரசின் கையில் இல்லை!

இந்தச் சங்கடங்களை விளக்கி ஆறு மாத காலமாக மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்தும் பயனற்றுப் போனபிறகே!

பிரதமருக்கு தந்திகள் தபால்கள் குவியட்டும் தமிழ் மக்களிடமிருந்து என வேண்டுகோள் விடுத்தேன்! அவை டெல்லியில் மலையெனக் குவிந்தபிறகும் மத்திய அரசு மெத்தனம் காட்டிடும் காரணத்தினாலேதான் அடுத்த கட்டமாக;

மாநில முழுதும் மனித நேயச் சங்கிலி!

இரண்டு பிரச்சினைகளை வலியுறுத்தவே இந்த மனித நேயச் சங்கிலியில் அனைத்துக் கட்சிகள் பங்கேற்கின்றன!

* மாநில மக்களைப் பட்டினி போடாமல் - மத்திய அரசே! அரிசி, சர்க்கரை, பாமாயில் தருக!
* சாதி மத பேத சச்சரவு நீங்க சபதம் ஏற்போம்!

உரிமையைக் கேட்கிறோம் மத்திய அரசிடம்; நம்மால் முடிந்ததைச் செய்துவிட்டு - மத்திய அரசின் பொறுப்பினை உணர்த்துகிறோம்!

உறவினை வளர்த்திட - கசப்புகள், காழ்ப்புகள் சமூகங்களிடையே எழாமல் காத்திட; சகோதரத்துவம் சமத்துவம் நிலைநாட்டிட ஓரணியில் நிற்கிறோம்!

அக்டோபர் ஏழு! அணிவகுத்திட எழு!

உடன்பிறப்பே, அனைத்துக் கட்சியினர் கட்சிச் சார்பற்ற சமுதாய அமைப்புகள் ஆம், தமிழ்நாட்டு மக்கள் எல்லோருமே ஒவ்வொரு ஊரிலும் மனித நேயச் சங்கிலியில் பங்கேற்கும் வண்ணம் நமது தோழமைக் கட்சிகளுடன் கலந்து பேசி காரியமாற்றிடுக! அமைதி வழி! அறவழி! அதுவே அண்ணன் நமக்குக் கற்றுத் தந்த வழி!

அன்புள்ள,

மு. க.

05-10-1989

1624. எங்கணும் ஒலிக்கட்டும் உன் சங்கநாதம்!

உடன்பிறப்பே,

எந்தெந்த அதிகாரங்கள் மத்திய அரசுக்கு, எந்தெந்த அதிகாரங்கள் மாநில அரசுக்கு எனத் தெரிந்து கொள்ளாத மாமேதைகள் (?) சிலர் தமிழகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள்! தொடக்கத்தில் அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்ட மாநில அரசின் அதிகாரங்களைக்கூட டெல்லி அபகரித்துக் கொண்டுள்ளது என்ற விவரங்களை அந்த வித்தகர்கள் (?) அறியமாட்டார்கள்!

சுயநிதிக் கல்லூரிகள் என்ற பெயரால் நடைபெறும் கொள்ளை - முறைகேடு - வெறும் பெயர்ப் பலகைகளை மட்டும் மாட்டிக்கொண்டு பித்தலாட்டம் செய்யும் எத்தர்களின் சேட்டை - இவற்றையெல்லாம் நமது குடியரசுத் தலைவர் கூட சென்ற ஆண்டு வன்மையாகக் கண்டித்துக் கருத்துரை வழங்கினார். ஆனால் சுயநிதிக் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள் செம்மையாக நடைபெறக் கூடியவை எவை - அல்லாதவை எவை என ஆராய்ந்து அறிக்கை தருமாறு அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர் குழந்தைசாமி அவர்களின் தலைமையில் மாநில அரசு அமைத்த குழுவினர் தந்த அறிக்கை மத்திய அரசுக்குப் போதுமானதாக இல்லையாம்; புதியதோர் குழு அமைத்திருக்கிறார்கள். அதாவது கல்வித் துறையில் மாநிலங்களுக்கு இருந்த உரிமையிலும் மத்திய அரசு கை வைத்துப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. ஏன் தெரியுமா? சுயநிதிக் கல்லூரி என்ற பெயரால் பணத்தைச் சுருட்டும் சில மோசடிக்காரர்களுக்குத் துணை போக வேண்டும் டெல்லி; அதனால்தான்!

ஆசிரியர்களோ, சிப்பந்திகளோ நியமிக்கப்படாத கல்லூரிகள், நிலமே இல்லாத நிலையில் இயங்குவதாக வேஷம் போடும் கல்லூரிகள், பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சிக்கான வசதி வாய்ப்பு சாதனங்களே அமைக்கப்படாத கல்லூரிகள்,

பாலிடெக்னிக்குகள் - இவற்றின் நிர்வாகிகள், தாளாளர்கள், அல்லது பொறுப்பாளர்கள் டெல்லிக்கு ஆலவட்டம் சுற்றினால்; அது ஒன்றே போதும் அவர்களைக் கட்டிக் காத்துத் தட்டிக் கொடுக்க டெல்லி தர்பார், மாநில அரசின் உரிமைகளைக் காலிலே போட்டு மிதிக்க எதற்கும் தயாராகிவிடும்! மாநில அரசுக்கென ஒதுக்கப்பட்டிருந்த கல்வி குறித்த பட்டியலை மத்திய அரசு பொதுப்பட்டியலுக்கு மாற்றியதின் உள் நோக்கங்கள் இப்போது வெளிப்படையாக வெளிச்சத்துக்கு வரத் தொடங்கி விட்டன! அவற்றில் ஒன்றுதான் மாநில அரசு அமைத்த நிபுணர் குழுவின் அறிக்கையை மதிக்காமலே மத்திய அரசே ஒரு குழுவை அமைக்கப் போகும் செயலாகும்!

மாநில அரசின் உரிமைகள், தேவைகள் மத்தியிலே உள்ளவர்களால் இன்று மறுக்கப்படுகின்றன என்ற உண்மையை உணராதவர்கள் சிலர்! உணர்ந்தும்கூட அதனை வெளியில் சொல்லாமல் மாநில அரசின் மீதே பழிபோடும் மனச்சாட்சியற்றோர் சிலர்!

அப்படிச் சிலர், இப்படிச் சிலர் இருப்பதால்தான் பாமாயில் என்பது மாநில அரசுக்குரிய அதிகாரப் பொறுப்பில் இருப்பதாகவும் - ஆனால் மாநில அரசு அதனை மக்களுக்கு வழங்காமல் இருப்பதாகவும் தமிழ் மக்களை நம்ப வைக்கப் பார்க்கிறார்கள்!

பதின்மூன்றாயிரம் டன் பாமாயில் தர வேண்டியதற்குப் பதில் ஆயிரமோ அல்லது இரண்டாயிரமோதான் தமிழ்நாட்டுக்கு மத்திய அரசு தருகிறது!

மத்திய அரசு தராவிட்டாலும் நீ ஏன் பாமாயிலை இறக்குமதி செய்யக்கூடாது எனக் கேட்கும் புத்திசாலிகள்(?) கூட உண்டு!

அதுபோல ஒரு வெளிநாட்டுடன் தொடர்பு கொண்டு, தமிழ்நாட்டுக்கு வேண்டிய பாமாயிலையோ, சர்க்கரையையோ, அரிசியையோ இறக்குமதி செய்து கொள்கிற உரிமை மத்திய அரசுக்குத்தான் உண்டே தவிர, மாநில அரசுக்கு இல்லை என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டியது விவரம் தெரிந்தவர்களின் கடமையாகும்!

1988-ல் குடியரசுத் தலைவர் ஆட்சி தமிழகத்தில் நடைபெற்றபோது மட்டும் - மத்திய அரசு மாதந்தோறும் இந்த மாநிலத்தில் தேவைக்கேற்ப அத்யாவசியப் பண்டங்களை

வழங்கியதா இல்லையா? 1988-ல் ஒரே ஒரு மாதம்தான் நாற்பதாயிரம் டன் அரிசி - மற்ற எல்லா மாதங்களிலும் 50 ஆயிரம் டன், 65 ஆயிரம் டன், 80 ஆயிரம் டன், ஒரு லட்சம் டன் என்று மத்திய அரசு, மாநில அரசுக்குத் தாராளமாக அரிசி வழங்கியதற்குத்தக்க ஆதாரங்களைப் பலமுறை மக்கள் மன்றத்தில் வைத்திருக்கிறோம்!

நமக்குள்ள அதிகார வரம்புக்குள் பொதுமக்களின் தேவைகளை நியாயவிலையில் வழங்கிடப் பொழுதெல்லாம் கடமையாற்றி வருகிறோம்.

நியாய விலைக் கடையில் சர்க்கரை விலை ரூபாய் 5-ம் 25 காசும்! வெளிச்சந்தையில் மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலையோ ரூ. 8.50 முதல் 9 ரூபாய் வரையில்! ஆனால் நமது அரசு கூட்டுறவு அங்காடிகள் அமுதம் அங்காடிகள் மூலம் சர்க்கரையை ஏழரை ரூபாய்க்கு விற்கும் ஏற்பாட்டைச் செய்துள்ளது!

நாம் ஆட்சிக்கு வந்ததும் நியாய விலைக் கடைகளின் அரிசி விலையை மத்திய அரசு ஏற்றியது எனினும் நாம் உயர்த்தாத காரணத்தினால் நமது அரசுக்கு 25 கோடி ரூபாய் மேலும் அதிகச் செலவு! அரிசியை அதிக விலைக்கு அரசு வாங்கி, நியாய விலைக் கடைகள்மூலம் குறைந்த விலைக்கு விற்பதால் ஆண்டு ஒன்றுக்கு இந்த அரசுக்கு கைப்பொறுப்பாக 279 கோடி ரூபாய் மானியச் செலவு பெரும் சுமையாக ஆகிறது!

இவற்றையறியாத பாமரமக்களை ஏமாற்றலாமென்றுதான் மத்திய அரசினை நோக்கி நீட்டப்பட வேண்டிய விரலை மாநில அரசை நோக்கிச் சிலர் நீட்டுகிறார்கள்!

மத்திய அரசு, மாநில அரசின் தேவைக்கு அரிசி கொடுக்காதாம்! சர்க்கரை வழங்காதாம்! பாமாயிலும் தராதாம்!

ஆனால் மத்திய அரசை ஆளும் கட்சியினர் - இங்கே மாநில அரசை எதிர்த்து பாமாயில் கொடு! சர்க்கரை கொடு! அரிசி கொடு! என்று பயங்கரமாக முழங்குவார்களாம்! எப்படி ஒரு அரசியல் நடக்கிறது பார்த்தாயா?

* பயிரிடும் குத்தகைதாரர்களை 31.3.90 வரையில் நிலத்திலிருந்து வெளியேற்றக்கூடாது என ஒத்தி வைத்திட ஒரு சட்ட திருத்தம் கொண்டு வந்தோம்

சட்டப் பேரவையில் ஐந்து மாதங்களுக்கு முன்பு! அந்தச் சட்டத் திருத்தத்துக்கு இன்னமும் மத்திய அரசு, தனது ஒப்புதலை வழங்கவில்லை!

* பெண்களுக்குச் சொத்துரிமையில் சம உரிமை என ஒரு சட்டம் கொண்டு வந்தோம்! அந்தச் சட்டத்திற்கான சம்மதம் அளிக்கவும் மத்திய அரசு தயக்கம் காட்டுகிறது! இதுவரை ஒப்புதல் தரவில்லை!

* மாநில மேலவையைக் கலைக்கிற தீர்மானத்துக்கு - அது முறையற்று கொண்டு வரப்பட்டபோதிலும் - உடனடியாக நாடாளுமன்ற அங்கீகாரம்! ஆனால் முறைப்படி நிறைவேற்றப்பட்ட மேலவை மீண்டும் வேண்டும் என்ற தீர்மானத்தை மத்திய அரசு டெல்லியில் கிடப்பில் போட்டு வைத்திருக்கிறது! காங்கிரசார் உட்பட சேர்ந்து நிறைவேற்றிய தீர்மானத்தின் கதி இது!

* காவிரிப் பிரச்சினைக்கு நடுவர் தீர்ப்பு உடனடியாகத் தேவையென காங்கிரசார் உள்ளிட்ட அனைத்துக் கட்சியினர் விடுத்த வேண்டுகோளை டெல்லி மதிக்கவே இல்லை!

* பிற்படுத்தப்பட்டோருக்கு மத்திய அரசிலும், மத்திய அரசு நிறுவனங்களிலும் வேலை வாய்ப்புக்கான இட ஒதுக்கீடு வழங்க - மண்டல் கமிஷன் பரிந்துரை எட்டாண்டுகளாக டெல்லியில் உறங்குகிறது! அந்தப் பரிந்துரையை பரிசீலித்து நடைமுறைப்படுத்துமாறு மத்திய அரசை வேண்டி சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி எத்தனையோ மாதங்கள் உருண்டு விட்டன! டெல்லியின் கேளாச் செவிகளில் அது கேட்கவே இல்லை!

இப்படி ஓரவஞ்சகம் - பாரபட்சம் - டெல்லியின் கலாச்சாரமாக இருப்பதைச் சுட்டிக்காட்டத்தான் இத்திங்கள் 18-ஆம் நாள் முதல் தமிழகம் முழுதும் எழுச்சி நாள்; கழகத்தின் சார்பாக!

சிலவற்றை மட்டும் சுட்டிக் காட்டியுள்ளேன் இக்கடிதத்தில்! இன்னும் பல உள! மாநில அரசின் தேவைகளும், உரிமைகளும் எத்தனை எத்தனையோ டெல்லியின் முரட்டுப் பாதங்களினால் மிதியுண்டு கிடக்கின்றன!

மிதிபட மிதிபட புழுவே புலியாகுமெனில், புலி என்ன ஆகும்

இத்தகைய கேள்வியுடன்தான் 1967-இல் முதலமைச்சர் அண்ணா அவர்கள் தமிழகம் முழுதும் மாநில கோரிக்கைகளை முன்வைத்து - மத்திய அரசின் கவனத்தைத் திருப்ப எழுச்சி நாள் அறிவித்தார்! அந்த எழுச்சி நாள் கூட்டங்களில் தோழமைக் கட்சியினரும்கூட கலந்து கொண்டனர்!

அதுபோல ஆங்காங்கு, நமது தோழமைக் கட்சிகளின் வசதி வாய்ப்புக்கு ஏற்ப எழுச்சி நாள் கழகக் கூட்டங்களில் அக்கட்சிகளின் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளச் செய்யலாம்!

18 முதல் 22-ஆம் நாள் முடிய மாநில முழுதும் எழுச்சி நாட்கள்! நமது இதயக் குமுறலை வெளிப்படுத்தும் நாட்கள்! மத்திய அரசின் பாரபட்சப் போக்கை விளக்கிடும் நாட்கள்!

அரசியல் காரணங்களுக்காக தமிழக மக்களை அலட்சியப்படுத்தும் மத்திய அரசுக்கு நமது அதிருப்தியை வெளிப்படுத்தும் நாட்கள்!

காங்கிரசல்லாத ஆட்சிகளைக் கடுகு உள்ளத்துடன் நோக்கும் டெல்லித் துரைத்தனத்துக்கு நமது கண்டனத்தை வெளிப்படுத்தும் நாட்கள்!

தமிழக முழுதும் எழுக! எழுச்சிக் கொள்க! ஆதாரங்களுடன் விளக்கம் தருக! உடன்பிறப்பே! எங்கணும் ஒலிக்கட்டும் உன் சங்கநாதம்!

அன்புள்ள,

மு. க.

14-10-1989

1625. எழுச்சி நாளுக்கிடையே ஒரு மகிழ்ச்சி நாள்!

உடன்பிறப்பே,

எழுச்சிநாள் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கும் வேளையில் ஒரு மகிழ்ச்சி நாள் மலர்ந்துவிட்டது!

ஆம்; அக்டோபர் 13ஆம் நாளைத்தான் குறிப்பிடுகிறேன்! இந்தியத் திருநாட்டின் வரலாற்றில் வைர வரிகளாக ஜொலிக்கப் போகும் நன்னாள் அது!

அரசியல் சட்டத்திலே பஞ்சாயத்து ராஜ் - நகர் பாலிகா என்ற பெயர்களால் நடைபெற இருந்த விரும்பத்தகாத மாற்றத்தைப் புறக்கணிக்கும் நாள் அந்த நாள்!

மாநிலங்களவை; தனது பெயருக்கேற்ப மாநிலங்களின் உரிமைகளைக் காப்பாற்றிவிட்டது என்ற செய்தி சரித்திரப் புகழ் பெற்றுவிட்டது!

இதில் நமது கழகத்தின் பங்கு மகத்தானது என்கிறபோது நம்மையறியாமலே ஒரு பீடுநடை! பெருமிதம்!

இந்தியாவில் ஜனநாயக மாண்பு குடைசாயும் பொழுதெல்லாம் அதனைத் தூக்கி நிமிர்த்துகிற கரங்களில் நமது கரமும் ஒன்றாக இருந்திருக்கிறது!

அதன் தொடர் நிகழ்ச்சியாக; இதோ - இப்பொழுது மாநிலங்களவையில் எதிர்க்கட்சிகளுடன் கைகோத்து நின்று கழகத்தின் ஏழு உறுப்பினர்கள் ஆற்றியுள்ள ஜனநாயகக் கடமை ஜனநாயகக் காவலராம் நமது அண்ணனின் காலடிக்குக் காணிக்கையாகும்.

1958-ல் காமராஜர் அவர்கள் ஒழித்துக் கட்டிய ஜில்லா போர்டுகளும் புதிய ஜீவன் அளித்து - அண்ணா அவர்கள்

முதலமைச்சராக இருந்தபோது கொண்டுவரப்பட்ட ஊராட்சி மன்றங்களின் தலைவர்களுக்கு நேரடித் தேர்தல் என்ற முறையும் - அதனைத் தொடர்ந்து நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகளுக்கான தலைவர்களுக்கும் நேரடித் தேர்தல் என்ற முறையும் - அக்டோபர் 13-ந் தேதியன்று வேருடன் வீழ்த்தப்படுவதற்கு - மத்தியில் காங்கிரஸ் அரசினர் நடத்திய விபரீதச் செயலைத் தடுத்து நிறுத்திய பெருமையில் நமது கழகமும் பங்குபெறுகிறது என்கிறபோது எத்துணை மகிழ்ச்சி! எத்துணை உற்சாகம்!

இதில் ராஜீவ்காந்தியின் மசோதா தோற்கடிக்கப்பட வேண்டும் - ராஜீவுக்குத் தலைகுனிவு ஏற்படவேண்டும் என்பதல்ல நமது நோக்கம்!

இந்த ஒருமுறை அந்த மாற்றம் அரசியல் சட்டத்தில் ஏறிவிடுமேயானால்; பின்னர் அந்தத் தீமையை அரசியல் சட்டத்திலிருந்து நீக்கிட நாடாளுமன்றத்திலும் மாநிலங்களவையிலும் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் கிடைத்தாக வேண்டும். இப்பொழுது மாநிலங்களவையில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளுக்கு ஓரிரு வாக்குகள் குறைந்த காரணத்தினால்தான் வர இருந்த அபாயம் தவிர்க்கப்பட்டுள்ளது.

இல்லையேல் காலமெல்லாம் நமது காஞ்சித் தலைவர் அண்ணாவும் அவர் வழிநின்ற நாமும் - நம்மைப் போலவே நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் பலவும் வற்புறுத்தி வருகிற மாநில அரசுகளின் உரிமைகள் - மாநில சுயாட்சித் தத்துவம் மாய்க்கப்பட்டு மண்மேடிட்டுப் போயிருக்கும்!

நம்மைப் பொறுத்தவரையில் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்களுக்கு எத்தனையோ கனிவுடன் எடுத்துச் சொன்னோம்! கடிதங்கள் எழுதினோம் அவருக்கே - அவரது கவனத்தைக் கவருவதற்காக! உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை உரிய நேரத்தில் நடத்த வேண்டுமென்பதில் எமக்குக் கருத்து மாறுபாடில்லை - எனவே அதற்கான திருத்தம் மட்டுமே செய்வீர்களாக என்று கேட்டுக் கொண்டோம்!

காலை அரித்தால் கையால்தான் சொறிந்து கொள்ள வேண்டுமே தவிர, தலையால் சொறிந்து கொள்வது என்பது

ஏற்கத்தக்க செயல் அல்ல - கைகளாக விளங்கும் மாநில அரசுகளைப் புறக்கணித்து - தலையாக விளங்கும் மத்திய அரசு உள்ளாட்சி மன்றங்களைத் தனது நேரடிப் பார்வைக்குக் கொண்டுவர முனைவது எதிர்காலத்தில் பல கேடுகள் விளைவதற்கு வழிவகுக்கும் என எடுத்துக் காட்டினோம்!

டெல்லி நமது வேண்டுகோள் எதையுமே காதில் போட்டுக் கொள்ளவில்லை! மக்களாட்சித் தத்துவத்திற்கு எதிராக மறைமுகமாக திணிக்கப்படும் எமர்ஜன்சி இது எனவும் தொடக்கத்திலேயே எச்சரித்தோம்! கனிவான விளக்கம் - கடுமையான கண்டனம் - எதிலுமே பயன் ஏற்படாத நிலையில்; அக்டோபர் 13ஆம் நாள் மாநிலங்களவையில் ஓரணியில் எதிர்க்கட்சிகள் நின்று இந்தியாவின் எதிர்காலத்தைக் காப்பாற்றியுள்ளன!

அண்ணா தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர்களில் ஒருவரான திரு. ராஜாங்கம் அவர்கள் மட்டுமே - இந்த முக்கியமான கட்டத்தில், சோதனையான நேரத்தில் - அண்ணா தி.மு.க. என்ற பெயருக்கேற்ப அண்ணாவின் மாநில சுயாட்சிக் கொள்கையைக் காத்திடத் தனது கடமையை ஆற்றி நம்மையும் நாட்டையும் களிப்பில் ஆழ்த்தியுள்ளார்! பாராட்டலாம் அவரை!

மாநிலங்களவை வாக்கெடுப்பில் ஏற்பட்ட தோல்வியை - தனிப்பட்ட முறையில் தனக்குக் கிடைத்த தோல்வி என்று கருதி ஆத்திரப்படாமல் - தீமையிலும் ஒரு நன்மை என்பதுபோல இந்திய ஜனநாயகத்திற்கு வர இருந்த ஆபத்து முறியடிக்கப்பட்டது - அந்தப் பணி முடித்த எதிர்க்கட்சியினர் என்றும் பாராட்டுக்குரியவர் என்ற உண்மையை உணர்ந்துகொள்ள இதனை ஒரு நல்வாய்ப்பாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

உடன்பிறப்பே, எழுச்சி நாள் கொண்டாடும் நமக்கு - இடையே இது ஒரு மகிழ்ச்சி நாள்!

மாநில அரசுகள் எனும் தூண்கள் பலமாக இருந்தால்தான் மத்திய அரசு எனும் மைய மண்டபம் பலமாக இருக்க முடியும்!

அன்புள்ள,

மு. க.

16-10-1989

1626. கங்காருவைப் பழிக்கும் பங்காரு!

உடன்பிறப்பே,

* தேசிய முன்னணி ஒரு கங்காரு; அதன் மடியில் அமர்ந்திருக்கும் குட்டி கங்காரு தி.மு.க.! தாயின் மடியில் இருந்து குட்டி கங்காரு எந்த நேரத்திலும் வெளியே குதித்து விடலாம்.

* தி.மு.க. தனியாக ஒரு தேர்தல் அறிக்கை வெளியிட முடிவு செய்துள்ளதைப் பார்க்கும் போது, டில்லியில் தாம் கூற முடியாததை தனித் தேர்தல் அறிக்கை மூலம் சென்னையில் வெளியிட கருணாநிதி நினைக்கிறாரோ; என்னவோ?

மேலேயுள்ள மணிவாசகங்கள் இரண்டுக்கும் உரிய நாக்கழகர் வேறு யாருமல்ல; மத்திய அரசின் இணை அமைச்சராக தமிழகம் செய்த கடும் தவத்தால் (?) பொறுப்பேற்றுள்ள நண்பர் ப. சிதம்பரம் அவர்கள்தான்!

மனிதன் தலைகீழாகச் சிராசனம் போட்டுக் கொண்டு பார்த்தால் எல்லாப் பொருள்களும் தலைகீழாகத்தான் தெரியும் என்று நாடாளுமன்றத்திலேயே ஒரு விஞ்ஞான வெளிப்பாட்டைத் திடீரென எடுத்துக்கூறி அவையோர் அனைவரையும் திடுக்கிட வைத்தவர் அல்லவா அவர்!

மந்திரி சொல்கிறார் - அதுவும் மத்திய மந்திரி சொல்கிறாரேயென்று தமிழ்நாட்டில் உள்ள காங்கிரஸ்காரர்கள் சிலபேர் தலைகீழாக நின்று பார்த்து அப்படியொன்றும் எந்தப் பொருளும் தலைகீழாகத் தெரியவில்லையே என்று தலையைப் பிய்த்துக்கொண்டது வேறு விவகாரம்! இப்போது அவரது கங்காரு கதைக்கு வருவோம்!

இந்தக் கதையையும், தேசிய முன்னணி பற்றி அவர் பேசிய கேலியையும் ஏடுகள் வெளியிட்டது மட்டுமல்ல; திருச்சி

வானொலியார் ஒரு எழுத்துக் கூடப் பிசகாமல் அப்படியே ஒலி பரப்பித் தங்களது கட்சி விசுவாசத்தைக் காட்டிக் கொண்டார்கள் என்பதும் கவனிக்கத்தக்கது!

டெல்லியில் தேசிய முன்னணியில் தி.மு.க. சார்பில் என்னால் சிலவற்றைக் கூற முடியவில்லையாம்; அதனால் தி.மு.கழகம் தனியாக ஒரு தேர்தல் அறிக்கை வெளியிட நினைக்கிறதாம்! அந்த இளம் நண்பர் கூறுகிறார்!

* தேசிய முன்னணி உண்மையான கூட்டாட்சி தத்துவத்தில் நம்பிக்கை வைத்து அதை ஏற்றுள்ளது. ஆளும் கட்சியினால் ஏற்பட்டுள்ள அளவுக்கு மீறிய மத்திய அரசின் அதிகாரக் குவிப்பை மாற்றியமைக்கவும் பொறுப்பேற்றுள்ளது. மத்திய அரசிடம் குவிந்துள்ள அதிகாரங்களைப் பரவலாக்குவதின் மூலம், மாநிலங்கள் பயனடைவதுடன் மட்டுமன்றி; அதற்கேற்ப மாவட்டங்கள், வட்டங்கள், மண்டலங்கள், ஊராட்சிகள் அளவிலும் தேசிய பொதுக் கருத்தின் அடிப்படையில் அதிகாரங்கள் பரவலாக்கப்படும்.

* அரசியல் சட்டத்தின் 263-வது பிரிவின்கீழ் கூறப்பட்டுள்ள மாநிலங்களுக் கிடையிலான குழுவை (Inter-State Council) அமைக்க தேசிய முன்னணி பொறுப்பு ஏற்கிறது.

* மாநில அரசுகளையும் மாநில சட்டமன்றங்களையும் டிஸ்மிஸ் செய்வது சம்பந்தமாக உள்ள 356-வது பிரிவை அரசியல் நோக்கத்துடன் துஷ்பிரயோகம் செய்ய மாட்டோம். ராஜ்பவனங்கள் (கவர்னர் மாளிகைகள்) மாநிலங்களில் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவையின் பலத்தை சோதித்துப் பார்ப்பதற்கான களமாக விளங்காது!

* ஆளுநர்களின் பங்கு, அதிகாரங்கள், பணிகள் பரிசீலிக்கப்படுவதுடன் - இது சம்பந்தமாக வேறு ஏற்பாடுகள் செய்ய முடியுமா என்பது பற்றியும் பரிசீலிக்கப்படும்.

* மொழிக் கொள்கையில் பண்டித நேரு அளித்துள்ள உறுதிமொழி அமல்படுத்தப்படும்.

* அதிகாரத்தைப் பரவலாக்குவதாகச் சொல்லிக் கொண்டு மாநிலங்களைப் புறந்தள்ளுவதற்காகக் கொண்டுவரப்பட்ட பஞ்சாயத்துராஜ்-நகர்பாலிகா - மசோதாக்களுக்குப் பதிலாக, தேசிய பொதுக் கருத்தின் அடிப்படையில் உண்மையான ஜனநாயக ரீதியிலான அதிகாரப் பரவலுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

* ஈழத் தமிழர்களின் நலன் பாதுகாக்கப்படவும், அங்குள்ள அனைத்துத் தரப்பு மக்களிடையிலேயும் நிலையான அமைதி ஏற்படவும், தேசிய முன்னணி பாடுபடுவதுடன் இந்திய அமைதிப்படை திரும்பப் பெறப்பட்டு அந்த நாட்டுடன் நல்லுறவு நீடிக்கவும் பாடுபடுவோம்.

உடன்பிறப்பே, இவையும் - மற்றும் கிராமப்புறத்து மக்கள், நகர்ப்புறத்தினர், விவசாயிகள், நெசவாளர்கள், பாட்டாளிகள், மகளிர், இளைஞர், அனைத்து தரப்பாருக்கும் வழங்கப்பட வேண்டிய வசதி வாய்ப்புகளும் - தூய்மையான அரசும் நிர்வாகமும் அமையும் என்பதற்கான உறுதிமொழியும் - தெளிவான வெளிநாட்டுக் கொள்கையும் - வானொலி, தொலைக்காட்சிகளுக்கு சுயாட்சி உரிமையும் - விலைவாசி குறைவதற்கான பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கான விளக்கங்களும் கொண்டதாக; இந்தியத் திருநாடு தழுவிய அளவில் தேசிய முன்னணியின் தேர்தல் அறிக்கை தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

தி.மு.கழகம் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகிற - அறிஞர் அண்ணா நமக்களித்த கொள்கை கோட்பாடுகள், தேசிய முன்னணியின் தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ளதை; அண்ணாவையும், அவரது இலட்சியங்களையும் உணர்ந்தவர்கள் - அவரது எழுத்துக்களை - பேச்சுகளை இதயத்தில் பதிய வைத்திருப்போர் எண்ணிப்பார்த்து மகிழ்ச்சி அடைவர்!

டெல்லியில் தேசிய முன்னணியில் உள்ளவர்களிடம் சொல்ல முடியாததை கருணாநிதி சென்னையில் தி.மு.க. தேர்தல் அறிக்கையின் மூலம் சொல்ல நினைக்கிறார் என்கிற வாதம் மிகவும் சொத்தையானது சோடையானது என்பதை தேசிய முன்னணியின்

தேர்தல் அறிக்கையைத் தெளிவாகப் படித்தால் புரிந்து கொள்ள முடியும். தேசிய முன்னணியில் செயலாளர்களில் ஒருவராக இருக்கிற தம்பி முரசொலி மாறனும் உடனிருந்து டெல்லியில் தயாரிக்கப்பட்டு - அக்டோபர் 20-ஆம் நாள் டெல்லியில் கூடிய தேசிய முன்னணித் தலைவர்களால் இறுதி வடிவம் பெற்று வெளியிடப்பட்டது அந்தத் தேர்தல் பிரகடனம்!

பிறகு எதற்காக தி.மு.கழகத்திற்கு இன்னொரு தனித் தேர்தல் அறிக்கை? இப்படிக் கேட்பவர் யாராயிருப்பினும் - கேலி புரிவோர் எவராயிருப்பினும் - அவர்களுக்கு நான் அளிக்கும் பதில்; இந்திய நாடு முழுமைக்குமான பொதுப் பிரச்சினைகளையும் கொள்கை குறிக்கோள்களையும் உள்ளடக்கியது தேசிய முன்னணியின் தேர்தல் அறிக்கை! தமிழ் மாநிலத்தின் தேவைகளையும், உரிமைகளையும் மத்திய அரசிடம் வலியுறுத்திடவும் - நாடாளுமன்றத்தில் தமிழக ரயில் பாதைகளுக்காக, விமான நிலையங்களுக்காக, காவிரிப் பிரச்சினைக்கான நடுவர் தீர்ப்புக்காக, உருக்குத் தொழிற்சாலையாக ஆரம்பமாகிப் பிறகு உருட்டுத் தொழிற்சாலையாகிவிட்ட சேலம் தொழிற்சாலையை உருக்குத் தொழிற்சாலையாகவே ஆக்க வேண்டுமென்பதற்காக, காவிரி பட்டத்து எண்ணெய் மூலமும், மற்றும் பிற மாநில எரிவாயுவைக் கொணர்வதின்மூலமும் தமிழகம் தொழில்வளம் சிறக்கும் நிலமாக மாறிட வேண்டுமென்பதற்காக, இன்ன பிற கோரிக்கைகளுக்காக, குரல் கொடுத்திட தி.மு.கழகம் தயங்கியதில்லை என்பதையும், என்றும் தயங்காது என்பதையும் எடுத்துக்காட்டத்தான் தி.மு.கழகத்தின் தனித் தேர்தல் அறிக்கை! என்பதாகும்!

இதோ இந்த அக்டோபர் 18-ஆம் நாள் திருச்சியில் சின்தடிக் வைரக்கல் தொழிலுக்கான பெரும் பயிற்சி நிலையம் திறப்பதாக இருந்தது! அதன் மூலம் மூவாயிரம் கிராமப்புறத்து எளிய மக்கள் நாளொன்றுக்கு முப்பது ரூபாய் வரையில் ஊதியம் பெற முடியும்! ஆனால் மத்திய அரசின் ஒப்புதலுக்கான கோப்பு பலமுறை நினைவூட்டியும் கூட - அடிக்கடி தமிழகம் வந்து போகும் ஒரு மத்திய பெரிய அமைச்சரின் மேசையிலிருந்து நகரவே மறுத்துவிட்டது!

இதுபோன்ற காலதாமதங்கள், கவனிப்பற்றதன்மை, மத்தியில் உள்ளவர்களிடம் காணப்படும்பொழுது - டெல்லி

நாடாளுமன்றத்தில் கழகத்தின் குரல் ஓங்கி ஒலிக்குமென்று தமிழக மக்களுக்கு உறுதி வழங்கிடத்தான் தி.மு.கழகம் தமிழக அளவில் ஒரு தேர்தல் அறிக்கையை நவம்பர் மூன்றாம் நாளன்று அண்ணா அறிவாலயத்தில் வெளியிடுகிறது!

இலங்கைத் தமிழ் இனத்துக்காக டெல்லியில் நாடாளுமன்றத்திலும் - மாநிலங்களவையிலும் வீராவேசமாக ஒலித்த குரல் கழகத்தின் குரல் என்பதை தமிழர்கள் வாழும் இடமனைத்தும் அறியுமே இந்த அவனியில்!

நாடு தழுவிய தேர்தல் அறிக்கை தேசிய முன்னணியினுடையது! மாநிலத் தேவைகளை எடுத்துக்காட்டி - அவற்றுக்காகப் போராடும் சிப்பாய்களை நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுகோள் விடுப்பதே கழகத்தின் தேர்தல் அறிக்கை!

இதைப் புரிந்து கொள்ளாத கனம்கள் நம்மைக் கங்காருக் குட்டி என்கிறார்கள்! தேசிய முன்னணியின் மடியில் நாம் இருக்கிறோமாம்! பரவாயில்லை, அரசியல் அனுபவம் வாய்ந்த ஆற்றலாளர்களின் மடிதான் அது! ஆனால் கங்காருவைப் பழிக்கும் பங்காரு எந்த மடியில் அடைக்கலம் புகுந்திருக்கிறது என்பதை நாடு எண்ணிப்பார்த்துச் சிரிக்காது என்ற ஒரு நினைப்பு கங்காரு கதை சொல்லும் கனம் நண்பருக்கு இருக்கலாமா?

எண்ணிப்பார் உடன்பிறப்பே!

அன்புள்ள,

மு. க.

(24-10-1989)

1627. விட்டலாச்சார்யா வெளியிடும் படம்!

உடன்பிறப்பே,

சில நாட்களாகக் கடுமையான வேலை உனக்குத் தெரியும் - தமிழ்நாடு, புதுவை, கர்நாடக, கேரள, ஆந்திர மாநிலக் கழக அமைப்புகளின் நிர்வாகிகள், நாடாளுமன்ற வேட்பாளர்கள், கர்நாடகத்தில் சட்டமன்ற வேட்பாளர்கள், மற்றும் கழக முன்னணியினரைக் காலை முதல் இரவு வரையில் நமது அண்ணா அறிவாலயக் கழக அலுவலகத்தில் நானும், பேராசிரியரும் சந்தித்துக் கலந்துரையாடி - தேர்தலுக்கான வேட்பாளர்களை அறிவிப்பதற்கான முயற்சியில் இடைவிடாது ஈடுபட்டுள்ளோம் என்பது!

இதற்கிடையே ஏழைத் தாய்மார்களுக்கும் பெரியோர்களுக்கும் இலவச வேட்டி, சேலை ஐம்பது லட்சம் குடும்பங்களுக்கு வழங்கும் நிகழ்ச்சிகள்! நான்காவது தடவையாக இந்த ஆண்டில் ஐந்து கிலோ இலவச அரிசி; எண்பத்தி மூன்று லட்சம் குடும்பங்களுக்கு!

என்ன வேலையிருப்பினும் வழக்கம்போல் காலையில் அரைமணி நேரமாவது உலவிடச் செல்வதை நிறுத்தவில்லை! இன்று காலை உலவச் சென்றபோது எப்போதும் போல் என்னுடன் நடந்து வந்த ஒரு பல்கலைக் கழகத்துப் பொருளாதாரப் பேராசிரியர் சிரித்துக்கொண்டே என்னிடம் சொன்னார் என்னங்க; வரவர தமிழ்நாட்டு அரசியல் விட்டலாச்சார்யா படம் போல் ஆகிவிட்டதே! என்று! எனக்குப் புரியவில்லை அந்த உவமை!

நான் இதுபோன்ற உவமைகளைச் சொல்லக்கூடியவன் - அது மட்டுமல்ல; திரைப்பட உலக அனுபவம் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக எனக்கு உண்டு - அரசியலிலோ ஐம்பது ஆண்டுக்கால அனுபவத்தைத் தாண்டிவிட்டவன்! என்னைவிட வயதில் இளைய அந்தப் பொருளாதார பேராசிரியரின் உவமைக்கு என்னால் பொருள் புரிந்து கொள்ள முடியவில்லை!

புரிந்துகொள்ள முடியவில்லை என்பதைச் சொல்லி என் இயலாமையைக் காட்டிக் கொள்ள விரும்பவில்லை! - வெட்கம் தடுத்தது! சமாளித்துக் கொண்டேன்! எப்படி? ஏதோ புரிந்தவன்போல நடித்து சிரித்துக் கொண்டேன்! அந்தக் காலத்தில் அண்ணாவுடனும், சிவாஜியுடனும், நடிகவேளுடனும் நடித்தது - கொஞ்சம் கை கொடுத்தது! உண்மையிலேயே விட்டலாச்சாரியா படம் போல் தமிழ்நாட்டு அரசியல் ஆகிவிட்டதே! என்ற அந்த வாசகத்துக்கு எனக்குப் பொருள் புரியவில்லை! ஆனாலும் புரிந்து கொண்டவனைப்போல நடித்துச் சிரித்ததால் எனக்கு அந்த நயம் விளங்கிவிட்டதாகவே அந்தப் பொருளாதாரப் பேராசிரியர் நம்பிக்கொண்டு, வேறு பிரச்சினைகளுக்குப் போய்விட்டார்!

காங்கிரஸ் வேட்பாளர் முதல் பட்டியல் வந்துவிட்டதே! ராஜீவ்காந்தி நாமினேஷன் தாக்கல் செய்துவிட்டாரே; நமது கழகப் பட்டியல் எப்போது வரும்?

வந்துவிடும்! வராமலா போய்விடும்! நிச்சயம் வரும்!

பி.எச். பாண்டியன் சுப்ரீம் கோர்ட்டில் தொடர்ந்த வழக்கினால் - மத்திய அரசு, தமிழ்நாட்டுக்கு போதுமான அரிசி தராமல் இதுவரை வஞ்சித்தது என்ற உண்மை வெளிவந்துவிட்டதே!

ஆமாம்! கடந்த ஆண்டு மாதந்தோறும் 80 ஆயிரம் டன் கொடுத்த மத்திய அரசு இந்த ஆண்டு நாம் ஆட்சிக்கு வந்ததும் நாற்பதாயிரம் டன்னாகக் குறைத்துவிட்டது! நண்பர் பாண்டியன் தொடுத்த வழக்கினால் மேலும் பத்தாயிரம் டன் தமிழ்நாட்டுக்குக் கொடுக்க மத்திய அரசு முன்வந்துள்ளது. இதிலிருந்து நாம் மக்களிடம் எடுத்து வைத்த வாதம் நியாயமானது என்று சுப்ரீம் கோர்ட்டே தெளிவாக்கிவிட்டது!

தமிழ்நாட்டைவிட இந்தியாவில் காங்கிரஸ் ஆளுகிற எல்லா மாநிலங்களிலும் விலைவாசி விஷம் போல் ஏறிவிட்டதாமே! வடக்கேயிருந்து வருகிற ஆங்கில ஏடுகளில் எல்லாம் புள்ளிவிவரங்களோடு செய்திகள் வந்திருக்கிறதே, பார்த்தீர்களா?

பார்த்தேன்! படித்தேன்! உங்களைப்போல இருக்கிற பொருளாதாரம் படித்தவர்கள் மக்களுக்கு புரியும் வகையில் விலைவாசி ஏன் ஏறியது? இந்தியாவில் எந்த மாநிலத்தில் அதிகமாக ஏறியுள்ளது? என்பதையெல்லாம் எடுத்துச் சொல்லவேண்டும்!

அரசாங்க விமானங்களையும், ஹெலிகாப்டர்களையும் பிரதமர் மட்டுமே தேர்தல் பணிகளுக்காகப் பயன்படுத்தலாமென்றும், மாநில முதலமைச்சர்கள் பயன்படுத்தக் கூடாதென்றும் தேர்தல் கமிஷன் திட்டவட்டமாக அறிவித்துவிட்டதே!

மாநில அரசுகளின் சுயமரியாதைக்கு மத்திய அரசு சவால் விட்டுக் கொண்டிருக்கிற நிலையை மாற்ற வேண்டுமென்றுதானே இந்தியா முழுதும் இப்போது குரல் கிளம்பியிருக்கிறது!

இந்தியா என்றதும் இன்று பத்திரிகைகளில் வந்துள்ள விளம்பரம் ஞாபகம் வருகிறது! அது என்ன; இந்தியா படத்தை மட்டும் போட்டு - இந்திய திருநாட்டை இந்த நிலையில் காண்பது இதுதான் கடைசித் தடவையாக இருக்குமோ? என்ற கேள்வியுடன் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, விளம்பரம் செய்துள்ளது - அது ஏன் அப்படி?

அவர்கள் நடத்திய ஆட்சியில் இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கும், ஒற்றுமைக்கும் உலை வைக்கப்பட்டு - சிதறுண்டு சின்னாபின்னமாகும் நிலை ஏற்பட்டுவிட்டதோ என்ற சந்தேகம் அவர்களுக்கே வந்துவிட்டது! மரணப் படுக்கையில் இருப்பவனைப் பார்த்து உன் முகத்தைக் காண்பது இதுதான் கடைசித் தடவையாக இருக்குமோ? என்று கேட்பது போன்று அபசகுன வார்த்தையாக அல்லவா இருக்கிறது இந்த விளம்பரம்! அப்படியொரு நிலை வரக்கூடாது என்பதில் - வரவிடாமல் தடுப்பதிலும் - தி.மு.கழகம் முன்னணியில் நிற்கும் என்பதை நாடு முழுவதும் நன்றாக அறியும்!

தோழமைக் கட்சிகளுடன் தொகுதிப் பங்கீடு முடிந்துவிட்டதா? யார் யாருக்கு எத்தனை இடம்?

பேசிக் கொண்டிருக்கிறோம். எத்தனை இடங்கள் என்பது முக்கியமில்லை. தோழமைக்கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டுச் செயலாற்றுவதில்தான் தமிழ்நாட்டின் எதிர்காலம் மட்டுமல்ல; இந்தியாவின் எதிர்காலமே இருக்கிறது

உலவிடும்பொழுது இத்தனை பிரச்சினைகள் குறித்து உரையாடிக்கொண்டே நடந்து சென்றாலும்கூட - என் மனதில் மட்டும் அவர் சொன்ன விட்டலாச்சார்யா படம் உவமை ஓடிக் கொண்டேயிருந்தது! விட்டலாச்சார்யா புராணப் படங்கள்

எடுப்பார்! ஒருவேளை அரசியல் புராணக்கதை போல் ஆகிவிட்டது என்கிறாரோ! விட்டலாச்சார்யா மந்திர தந்திரப் படங்கள் எடுப்பார்!

ஒருவேளை, இப்போது அரசியல்வாதிகள் சிலர் மந்திரவாதிகளையும், ஆருடக்காரர்களையும் தேடி அலைகிறார்களே; அதைச் சொல்கிறாரோ - குழப்பம்! புரியவில்லை! ஒரு வழியாக விடைபெற்றுக்கொண்டு காரில் ஏறினேன்.

ஏறும்போது கேட்டே விட்டேன்! என்னய்யா - தமிழ்நாட்டு அரசியல் விட்டலாச்சார்யா படம்போல என்றீரே; என்ன? என்று! சிரித்துக்கொண்டே சொன்னார்;

விட்டலாச்சார்யா படங்களில்தான் உதிர்ந்த முடிகள் ஓடிப்போய் ஒட்டிக்கொள்ளும் - மனிதன் நாய் ஆவான்! பிறகு நாய் மனிதனாகும்! அந்த தந்திரக் காட்சிகளைத்தான் சொன்னேன்!

என்றார் அந்த இளைய பொருளாதாரப் பேராசிரியர்! நானும் சிரிப்பை அடக்கமுடியாமல் - பேசுவதற்குச் சற்றுத் திணறியவாறு - கைகளை அசைத்து விடைபெற்றுக் கொண்டேன்! கார் புறப்பட்டது!

அன்புள்ள,

மு. க.

27-10-1989

1628. வெற்றி குவித்திட வேங்கையே எழுக!

உடன்பிறப்பே,

நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் நமது கழகத்தின் வேட்பாளர்களும், நமது தோழமைக் கட்சிகளின் வேட்பாளர்களும் அணிவகுத்து விட்டார்கள்!

நீயும் உன்போன்ற உடன்பிறப்புகளும் பணிபுரியப் புறப்பட்டுவிட்டது கண்டு பூரிப்பு கொள்கிறேன் - புளகாங்கிதம் அடைகிறேன்! ஏன்; நானும் புறப்படுகிறேன் உன்னைச் சந்திக்க - உன் இனிய திருமுகம் காண - உன் உழைப்பில் பங்கேற்க - உன்னோடு தோளோடு தோள் நிற்க - நானும் பழைய தொண்டன்தானே! இன்றைக்கு உன்னால் தலைமைத் தொண்டன் என வேண்டுமானால் அழைத்துக்கொள்!

இன்றைக்கும் எனது மலரும் நினைவுகளில் 1940-ஆம் ஆண்டு திருவாரூரில் நடைபெற்ற திராவிடர் இயக்கமாம் நீதிக்கட்சி 15-வது மாநில மாநாட்டில் தொண்டர் படை வீரர்களில் ஒருவனாக இருந்தேனே அதனை மறந்ததில்லை! வீறு பாய்ச்சும் விரிவுரையாளர்கள் வருகை என்ற தலைப்பிட்ட சுவரொட்டிகளை திருவாரூர் சுவர்களில் பசை தடவி என் கையாலேயே ஒட்டினேனே; தமிழ் மாணவர் மன்ற ஆண்டு விழாவுக்காக - அந்த நினைப்பு பசுமையாகத்தான் இருக்கிறது! கரித்துண்டு கொண்டோ, கிடைத்தால் தூரிகை கொண்டோ சுவர்களில் எழுதித் தேர்தல் பிரச்சாரம் செய்த இளமைக்கால நினைவுகளை இப்போதும் அசைபோட்டுப் பார்த்து ஆனந்தம் அடைகிறவன்தான் நான்! ஒற்றை மாட்டு வண்டியில் ஒலிபெருக்கி கட்டிக் கொண்டு ஊர் ஊராகக் கிராமப்பகுதிகளிலும், வீதி வீதியாக நகரப் பகுதிகளிலும் கொள்கை முழக்கமிட்ட, தொண்டர்க்குத் தொண்டனான நான்; உடன்பிறப்பே! உன்னைத் தொண்டனாக - தோழனாக - உற்ற உடன்பிறப்பே - அடைந்திருப்பது நான் பெற்ற பேறு என எண்ணி மகிழ்பவன்!

எனவே என் உழைப்பில் தயக்கமிருக்காது; எனக்குத் தெரியும்! ஆனால் சில ஏடுகள் - நம்மைப் பார்த்தால் சிரித்துப் பேசிக்கொண்டே; ஆனால் உள்ளத்தில் எரிக்கும் நெருப்புத் துண்டங்களை மறைத்துக் கொண்டே - சமயம் பார்த்து நம்மைச் சாய்க்க எண்ணிடும் ஆசிரியர்களை, நிருபர்களைக் கொண்டவைகள் - இந்த ஆட்சியில் உனக்கு சம்பாதிக்க வழியில்லாமல் செய்து விட்டேனாம்; அதனால் உனக்குச் சோர்வாம்! கொள்ளையடிக்க முடியவில்லையே என்று உனக்குக் கோபமாம்! அதனால் நீ தேர்தல் வேளையில் சுணங்கிப் போய்விடுவாயாம்; எதிரிகள் வென்றுவிடுவார்கள் என்றெல்லாம் கதை கட்டுகின்றன!

யாரோ ஒரு சிலர் - தன்னால் கழகத்திற்கு என்ன ஆதாயம் என நினைக்காமல், கழகத்தினால் தனக்கு என்ன ஆதாயம் என நினைப்போர் - விரல் விட்டு எண்ணக் கூடிய அளவுக்கு ஓரிரு விபரீதவாதிகள் இருக்கக்கூடும்! அவர்களைப் பார்த்து அலட்சியப் பார்வையை வீசிவிட்டு - உன் குருதியால் - உன் வியர்வையால் - உன் மூச்சினால் - கட்டிக் காக்கப்பட்டுள்ள இந்தக் கழகத்தின் நிலையான உறுதிக்கும் - கழக ஆட்சி தொடர்ந்து நீடித்து, தமிழக மக்களின் கலங்கரை விளக்கமாகத் திகழ்வதற்கும் இருவண்ணக் கொடி உயர்த்தி, இன்றைக்கே எழுந்திடுவாய்; வெற்றி குவிக்க என்பது எனக்குத் தெரியும்!

வெற்றி குவித்திட வேங்கையே எழுக! என உன் சகோதரன் அழைக்கிறேன்! உன் உடன்பிறப்பு அழைக்கிறேன்!

சிண்டு முடிவோர் - காழ்ப்பு கக்குவோர் - கலக மூட்டுவோர் - கசப்பு ஏற்றிடத் துடிப்போர் - அனைவரும் உன் கால் தூசுக்குச் சமமாக உன்னால் எண்ணிடப்படுவர் என எனக்கு நன்கு தெரியும்!

வெற்றி வீரர்களை உன்னிடம் ஒப்படைத்திருக்கிறேன்! அவர்களும் நீயும் ஏந்தி வரும் வெற்றி மாலைகளுக்காகக் காத்திருக்கிறேன்!

அன்புள்ள,

மு. க.

31-10-1989

1629. ஒருக்கணமும் உறங்காது உன் பணி தொடர்க!

உடன்பிறப்பே,

நேற்றைய கடிதம் படித்திருப்பாய் - இது வரையில் தேர்தல் பணி தொடங்காமலிருந்தால் உடன் தொடங்கியிருப்பாய்!

நாடாளுமன்றத் தொகுதிகளில் கடமை எனும் கவசம் பூண்டு, கண்ணியமெனும் கேடயமேந்தி, கட்டுப்பாடு எனும் கட்கம் கொண்டு - ஜனநாயக அறப்போரில் வென்றிட அணிவகுத்து நிற்கும் கழக வீரர்களின் வரிசையில் வேட்பாளர்களாக நிற்கும் கழகத்தின் கண்மணிகளைப் பார்! தோழமைக் கட்சிகளின் நண்பர்களைப் பார்!

தமிழ்நாட்டின் தேவைகளுக்காக; அன்றும் - இன்றும் - என்றும் வாதாடக் கூடிய - போராடக் கூடிய பட்டாளம் தி.மு.கழகப் பட்டாளம் என்பதை நாடறியும்!

அண்ணாவின் மாநில சுயாட்சி முழக்கத்தைத் தொடர்ந்து ஒலித்துக் கொண்டேயிருந்த காரணத்தினால்தான் - இன்று தேசிய முன்னணியின் முழக்கமாகவே அது ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது அனைத்திந்திய அளவில்! பல்வேறு மாநிலங்களில்!

இந்தி ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்தும் சிப்பாய் தி.மு.க. என்பதினால்தான் நாடாளுமன்ற இரு அவைகளிலும் அந்த எக்காளம் கழகத்தினரால் எழுப்பப்பட்டதினால்தான் பாய்ச்சலுக்குத் தயாராக கிளம்பிய அந்த ஆதிக்கம், இன்று பயந்து பதுங்கிக் கிடக்கிறது!

இலங்கைத் தமிழ் இனத்துக்காக - அங்கு நடைபெற்ற படுகொலையைக் கண்டிப்பதற்காக - ஈழத் தமிழகத்துக்கு நிலையான அமைதியும் உரிமையும் வழங்குவதற்காகச் சிங்கமெனக் கர்ச்சித்தோர் - சங்கநாதம் முழங்கியோர் - நாடாளுமன்றத்திலும் மாநிலங்களவையிலும் நமது இளம் உடன்பிறப்புகளன்றோ!

அவர்கள்தானே இன்று தேர்தல் களத்தில் தமிழக மக்களின் அன்பான ஆதரவையும் பாசமிகு அரவணைப்பையும் நாடி நிற்கின்றனர்!

காவிரி வட்டத்து எண்ணெய் - நெய்வேலி நிலக்கரி - சேலத்து இரும்பு - சேது சமுத்திரத் திட்டம் - கங்கை காவேரி இணைப்பு - இந்தக் குரல்களை 1950 முதலே - அறிஞர் அண்ணா அவர்கள் எழுப்பியபோது ஏகடியம் புரிந்தோர், ஏளனம் செய்தோர் - இன்று எதிரணியில்! நாமோ அவற்றில் ஓரளவு வெற்றி கண்டு, தொடர்ந்து தமிழகத் தேவைகளை வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம்!

கவர்னர் ஆட்சியில் - கடந்த ஆண்டு சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றபோது - தமிழகத்துக்கு மத்திய அரசு வழங்கியது ஒரு லட்சத்து ஐயாயிரம் டன் அரிசி!

ஆனால் இப்போது - நாற்பதாயிரத்துக்கு மேல் நகராது என அடித்துக் கூறிவிட்டனர். நண்பர் பி.எச். பாண்டியன் உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கினால் மேலும் பத்தாயிரம் டன் கிடைக்கிறது நமக்கு! இப்படி அரிசியிலும் அரசியல் நடத்துகிறார்கள்! அரசு நடத்துகிறோம் என்பதால் இந்தக் கொடுமைக்கு அடங்கிப் போக வேண்டுமா என்ன?

நிர்வாகத்தில் மத்திய அரசுடன் மோதுதல் இல்லை என நான் அடிக்கடி கூறுகிறேன்; அதற்காக நியாயங்களைக்கூட மத்திய அரசு மறுப்பதா? இதனை அரசின் சார்பாக மட்டுமல்ல; நாடாளுமன்றத்தில் அழுத்தமாக, ஆணித்தரமாகக் கேட்டிட நம்மவர் பெரும்பாலோர் இருந்திடல்வேண்டாமோ? அதற்குத்தான் உன்னை இந்தத் தேர்தல் பணியில் உடனடி சுறுசுறுப்பு காட்டுமாறு கேட்டுக்கொள்கிறேன். நாட்டில் என்னவெல்லாமோ நடக்கிறது! நம்ப முடியாததெல்லாம் நடக்கிறது! மூக்கில் விரல் வைத்து வியப்புறும் அளவுக்குச் செய்திகள்!

வேலியே பயிரை மேய்கிறது! வில் வளைத்து விண்ணைக் கலக்குவேன் என்ற வீராதி வீரர் சிலரோ; வில்லாக வளைந்து ஒடிந்து வீழ்கிறார்கள் காலில்! மாநிலங்களின் சுயமரியாதைக்கு அறைகூவல் விடப்படுகிறது! மத்தியில் தாங்க முடியாத அளவுக்கு அதிகாரக் குவியல் நடத்திட முயற்சி நடைபெறுகிறது! தமிழகத்தின் குரல் வளையை நெரிக்க சூதுகள்! சூழ்ச்சிகள்! வலைகளாக விரிகின்றன!

திராவிட எனும் சொல்லில் ஒளிந்து கொண்டு பெரியார் அண்ணா இருவரையும் அவர்தம் கொள்கை கோட்பாடுகளையும் குழிதோண்டிப் புதைத்திட ஒரு கூட்டம்! அதனைச் சூழ்ந்திருப்போருக்கோ பணத்தில், பதவியில் நாட்டம்!

உண்மைத் திராவிட இயக்கமாம்; ஒளிமிகு தமிழகத்தைக் காணவும் - உரிமைமிகு இந்தியத் திருநாட்டைக் காணவும் - ஜனநாயக ரீதியில் சிந்திக்கும் நமது கழகத்திற்கும் நமது தோழமை அணிக்கும் கிடைக்கும் வெற்றியில்தான், எதிர்கால ஆபத்துகளைத் தடுத்து நாட்டைக் காப்பாற்றும் ஜீவசக்தியே அடங்கியிருக்கிறது என்பதை மறவாதே! எனவே ஒருக்கணமும் உறங்காதே! உடன் பணி தொடர்க; உடன்பிறப்பே!

அன்புள்ள,

மு. க.

01-11-1989

1630. வருகிறேன்; சந்திக்கிறேன்!

உடன்பிறப்பே,

உனைக் காண இன்று புறப்பட்டுவிட்டேன்! இடையில் 14 மற்றும் 15 இருநாட்கள்தான் சென்னையில்! இருபதாம் தேதி வரையில் இயன்ற வரையில் எல்லாத் தொகுதிகளிலும் உன் திருமுகம் காண்பேன்! பின்னர் இரு நாட்கள் சென்னைத் தொகுதிகளில்! உழைத்திடும் உனக்கு உற்சாகமூட்ட வருகிறேன்! உறக்கமின்றி, ஓய்வின்றி அல்லும்பகலும் எனது அன்பு உடன்பிறப்புகளுடன் உழைப்பில் பங்குகொள்ள வருகிறேன்!

தேர்தல் பணிகள் விறுவிறுப்படையத் தொடங்கிவிட்டன! நாம் ஏதோ தேசிய முன்னணியில் கொள்கைகளை விட்டுக் கொடுத்துவிட்டதைப் போல பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் நம்மீது அக்கறை மிக்கவராக - நம்மைவிட நமது கொள்கைகள்மீது ஆர்வமிக்கவராகக் காட்டிக்கொண்டு பேசியிருக்கிறார்! ஏமாறமாட்டோம் நாம்!

நமது கொள்கைகள், கோட்பாடுகள், திட்டங்கள் - அரசியல் அரங்கில் நாம் எடுத்து வைக்கும் முழக்கங்கள் அனைத்துமே இடம் பெற்றுள்ள தேர்தல் அறிக்கையைத்தான் தேசிய முன்னணி வெளியிட்டுள்ளது.

நமது கழகத் தேர்தல் அறிக்கையும் தேசிய முன்னணித் தேர்தல் அறிக்கையும் ஒன்றையொன்று ஒட்டிப் போவது! இதை முரண்பாடு என்கிறார் ராஜீவ்காந்தி!

அதே நேரம் தி.மு.க. வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையில் காணப்படும் மாநில அதிகாரம், மண்டல் கமிஷன் போன்ற எந்தக் கொள்கை கோட்பாடும் காங்கிரஸ் கட்சியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டவை அல்ல! மாறாக மத்திய மாநில உறவு

குறித்துப் பேசுவதோ; மத்தியில் அதிகாரக் குவியல் கூடாது என்று கூறுவதோ; கல்வி போன்ற மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டுமென்று அ.தி.மு.க. அறிக்கை கூறுவதோ - தேச விரோதம் என்று பிரதமரால் வர்ணிக்கப்படுகிறது.

இப்படி தேர்தல் அறிக்கைகள் ஒன்றையொன்று வெட்டிக் கொள்வதை உடன்பாடு என்கிறார்களா அந்தக் கூட்டணியினர்? தெளிவற்றோர் இன்னும் சிலர் இருக்கிறார்கள் என்ற துணிச்சல் அவர்களுக்கு!

மத்திய அரசின் அதிகாரத்தைப் பயன்படுத்தி, பணபலத்தை பயன்படுத்தி, தேர்தல் களத்தில் ஒரு கை பார்க்கலாம் என்ற நம்பிக்கையில், அவரும் அவரது கூட்டணியினரும் எதுவும் பேசுவர்! எதையும் செய்வர்!

இதோ; இன்று ஆறாம் தேதி நான் சென்னையை விட்டுப் புறப்படுவதற்கு முன்பு தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்திலே கண்ட காட்சி; அதிகாலையில்!

புத்தம் புதிய ஜீப்புகள் - எண்கள்கூட இல்லாத நிலையில் - நூற்றுக்கணக்கில் - எங்கிருந்து வந்துள்ளன? எங்கெங்கே அனுப்பப்பட இருக்கின்றன?

காங்கிரஸ் அணியின் வேட்பாளர்களுக்காக அவை பவனி வர இருக்கின்றன!

ஜீப்புகளே இத்தனை என்றால்; பணப் பெட்டிகள் எத்தனை எத்தனையோ? கோடிக்கணக்கில் குவிப்பர்!

கழக ஆட்சியைக் கலைப்பதற்கே இந்தத் தேர்தல் என அ.தி.மு.க.வினரும் காங்கிரசாரும் நாள்தோறும் அறிவிக்கின்றனர்!

* பணபலம் -

* பத்திரிகை பலம் -

* அதிகார துஷ்பிரயோகம் -

அனைத்தையும் எதிர்த்து வெற்றி வாகை சூட;

தம்பியுடையான் படைக்கஞ்சான்! இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?

என்ற அண்ணாவின் வீரமொழிதான் நமக்குப் பணம் - படை - பலம் எல்லாமே!

அம்மொழி அகத்தில் பதித்து அளப்பரிய வெற்றிதனை ஈட்டிடுவோம்!

வருகிறேன்! சந்திக்கிறேன்!

அன்புள்ள,

மு. க.

07-11-1989

1631. திருச்சியில் தொடங்கிடும் திருப்பு முனை!

உடன்பிறப்பே,

புத்தாண்டு, கிழக்கு முகம் காட்டிக் கிளர்ந்தெழுகிறது! புதிய உணர்வுடன், தெம்புடன் வாழ்த்தி வரவேற்கின்றோம்! வெற்றி தோல்வி இரண்டையும் சமநிலையில் கருதி - வெற்றி கண்டு வெறி கொள்ளாமலும், தோல்வியினால் துவண்டு வீழாமலும் கொள்கைப்பயணம் நடத்தும் நமது பாசறையாம் கழகம்; கடந்த ஆண்டில் இரு விளைவுகளையும் சந்தித்து எஃகுக் கோட்டையென நிமிர்ந்து நிற்கின்றது! சொன்னதைச் செய்வோம் செய்வதைச் சொல்வோம் என முழங்கித் தேர்தல் அறிக்கை தந்த கழகம்; தேர்தலுக்குப்பிறகு வழங்கிய வாக்குறுதிகளைப் படிப்படியாகக் கடமை உணர்வுடனும் வாய்மைத் திறனுடனும் நிறைவேற்றி வருகின்ற பாங்கினை நன்றியுடையோர் பாராட்டிப் போற்றுகின்றனர். சென்னையில் தொடங்கிய தேசிய முன்னணியின் மகத்தான விழா; அன்றைக்கு மாற்றாரால் எள்ளி நகையாடப்பட்டது! ஏகடியம் செய்யப்பட்டது! இன்றைக்கு இந்தியத் திருநாட்டை, தேசிய முன்னணி ஆள்கிறது! நினைத்தது நடக்காத காரணத்தால் கனவு கண்டு களைத்துப் போனவர்கள், வெறுப்பை மிதித்தவர் போல் குதிக்கின்றனர்! வெறுப்பின் உச்சிக்கே சென்று வெந்து புலம்புகின்றனர்!

பூகோளச் சித்திரத்தை உற்றுப் பார்க்கிறேன்! இராணுவ முகாம்களில் ஓய்வெடுத்துக் கொண்டு உல்லாசப் பொழுதுபோக்கிய சிப்பாய்கள் தோட்டா நிரப்பிய துப்பாக்கிகளுடன் உலகத்துப் பல நாடுகளின் தெருக்களில் அலைந்துகொண்டிருக்கிறார்கள்; இரத்தச் சகதியில் கால்களைப் பதித்தவாறு! இங்கே; நமக்கருகில் என்ன வாழ்கிறது? இலங்கைத் தீவில் ஈழத் தமிழகத்தில் என்னருந்தமிழன் சகோதர யுத்தத்தில் ஒருவனையொருவன் சாய்த்துக் கொண்டிருக்கிறான்.

எதற்கும் அரசியல் ரீதியான ஜனநாயக முறையில் தீர்வு காண வேண்டுமென்ற தத்துவத்தில் நம்பிக்கை கொண்ட இந்திய பூபாகத்தில் பஞ்சாப், காஷ்மீர், அசாம், ஆந்திரம் எனச் சில பகுதிகளில் வன்முறைப் போக்கு நின்றபாடில்லை! முற்றிலும் நின்றாலன்றோ நமக்கு முகிழ்த்திடும் புன்னகை?

ஒப்பிட்டுப் பார்க்கும்போது நமது தமிழகம் பரவாயில்லை என்று சொல்லத் தோன்றுகிறது? அமைதிக்குப் பஞ்சமில்லை இங்கு எனினும் முழுமையான மனநிறைவு எனக்கு ஏற்படவில்லை! ஏதாவது கலாம் விளையாதா? அமளி வெடிக்காதா? இப்படி ஏங்கித் தவிக்கும் எரிச்சல்காரர்கள் சிலரை, நான் அடையாளம் காட்டாமலே நீ அறிந்துகொள்ளும் ஆற்றல் படைத்துள்ளாய்!

அவர்கள் பேசுகிறார்கள் - கேள்விப்படுகிறேன்! ஆபாசத்தை மேடையில் பொழிகிறார்கள் - நான் ஆத்திரப்படவில்லை! அசிங்கத்தைக் கண்டால் விலகிச் செல்வது அச்சத்தால் அல்ல தம்பி; என்று அண்ணா அடிக்கடி சொன்னதை மறப்பவனல்ல நான்! இருந்தாலும் அளவு மீறுகிறதே; பொறுத்துக்கொள்வது எப்படி? எனப் பொறி பறக்கும் விழிகளால் நீ என்னைக் கேட்பது புரிகிறது! பொறுத்தது போதும் பொங்கியெழு! என வீர இளைஞன் மனோகரனுக்கு அவன் அன்னை எப்போது ஆணையிட்டாள் எனக் குறிப்பிட்டு உரையாடல் தீட்டியவன்தான் இந்த உன் உடன்பிறப்பு என்பதை நீ மறந்துவிடக் கூடாதல்லவா?

சோதனைகளில் புடம் போட்ட தங்கமாக ஒளிவிடுகிறது இந்தக் கழகம் - எமர்ஜென்சி நெருப்பில் எரிந்து போகாமல் இரும்புத் தூணாக எழுந்து நிற்கிறது இந்தக் கழகம் - தோல்விகளால் முகம் சுளிக்காமல் விழுப்புண்களைக் கண்டு மகிழ்ந்து நடக்கிறது இந்தக் கழகம் - எப்படி முடிகிறது இந்த இயக்கத்தால் என்று வியப்புப் பெருமூச்சு விடுவோர் விஷமம் செய்து பார்க்கின்றனர்! விஷம் கலக்க முடியுமா எனத் துடிக்கின்றனர்! நமக்குள்ளே கலகமூட்ட நாரதர் வேலை செய்து களைத்துப் போகின்றனர்! நாரதர் கலகம் நன்மையில் முடியும் என்று புராணங்கள் கூறும்! இந்த நயவஞ்சகரோ நம் கழகம் வீழ்ந்திடக் கலகம் செய்து திரிகின்றனர்!

நடந்துமுடிந்த ஆண்டுகளில் மட்டுமல்ல; இனி தவழ்ந்து வரும் புது ஆண்டுகளில்கூட அந்த நச்சுப்பல் நாகங்கள் நம்மைத்

தீண்டப் படமெடுக்கும்! எச்சரிக்கையுடன் இருக்கும் இந்தக் கழகம் என்பதை எதிர்வரும் காலத்திலும் மெய்ப்பிக்கத்தான் போகிறோம் நாம்!

எனினும் ஏதுமறியாப் பொதுமக்களில் சிலரையோ பலரையோ குழப்புகிற குல்லுகபட்டர்களின் குதர்க்கங்களை, பொய்களை, புனைந்துரைகளை விளக்கிக் காட்டி விழிப்பு உணர்ச்சி ஏற்படுத்தும் பொறுப்பு நமக்கு இருக்கிறது! கண்ணியத்துடன் அக்கடமை ஆற்றிட வேண்டும்! கருணாநிதிக்கும் பேராசிரியருக்கும் இடையே கசப்பு - காழ்ப்பு - எனக் கதைத்தனர்! எழுதினர்! அதனால் கழகத்தை அழித்திடலாம் எனக் கருதிக் கழுகுகளாகப் பறந்தனர்! இரு கண்களுக்கு இடையே கூட வேற்றுமை இருக்கலாம் - எனக்கும் பேராசிரியருக்கும் இந்த இயக்கத்தில் இம்மியளவு மனவேறுபாடும் இல்லையென்பதை அறிந்தும்கூடப் பிரிக்க எண்ணுகின்றனர்! பித்தம் பிடித்தோர்! பாவம் புத்தி பேதலித்தோர்!

அந்த முயற்சி பலிக்கவில்லையென்றதும், குடும்பத்துக்குள்ளே குடுமி முடிந்து பார்க்கலாமா என்று குள்ளநரிகள் ஊளை; குய்யோ முறையோ என்று! பொய்யும் புளுகுமே அவர்களின் ஆயுதம்!

மு.க. ஸ்டாலின் மந்திரி பதவி கேட்டானாம்; நான் முடியாது என்றேனாம்; அவன் என்மீது தாவிப் பாய்ந்து என்னைக் கொல்ல முயன்றானாம் - அவன் தாய் தடுத்து ஸ்டாலினின் தலையை நொறுக்கினாளாம் - இப்படியொரு பத்திரிகையில் பரபரப்பான செய்தி! அமைச்சர் பதவி கேட்டதால் அப்பனுக்கும் மகனுக்கும் தகராறு என்று குமுதம் இதழ் கூட எழுதிப் பிழைக்கிறது என்றால் எதிர் முகாமில் எரிச்சல் எவ்வளவு எல்லை கடந்து போய்விட்டது என்பதை தெளிவாகத் தெரிகிறது அல்லவா? என் மகள் கனிமொழிக்கு நடந்த திருமணம் பற்றிக்கூட எத்தனை விமர்சனங்கள்! நான் தரமான ஏடு என எண்ணியிருந்த ஏடுகளில்கூட!

இவ்வளவும் ஏன்? என்னைச் சிறுமைப்படுத்தினால் இந்த இயக்கத்தைச் சீரழித்து விடலாம் எனும் கெடு நினைப்புதான் காரணம்! அவ்வளவு அற்ப சொற்பமாக அய்யாவோ, அண்ணாவோ இந்த இயக்கத்தை வளர்க்கவில்லை! ஏன்; நாங்களும் கூட இந்தப் பாசறையைப் பகைப்புலம் அழித்து விடக்கூடிய அளவுக்கு

பலவீனமான கண்ணாடி மாளிகையாகக் கட்டி வைக்கவில்லை! இந்தக் கோட்டை, முற்றுகையிடும் பகையை மூச்சு முட்ட ஓடச் செய்யும் வலிமை வாய்ந்தது! மோதுகிறவர்களின் மூளை சிதறுமே தவிர; முகில் தாண்டிப் பறக்கும் நமது கொடி நிழலைக்கூட அவர்களால் நெருங்க முடியாது!

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுக்குப்பிறகுதான் கழகத்தின் செயற்குழு கூடியது! கழகச் செயல் வீரர்களின் கம்பீரம் குறையவில்லை! உறுதி வாய்ந்த உள்ளம் சோர்ந்திடவில்லை! களத்தில் நின்று தோற்றோர் வாடித்தான் வருவர் என எண்ணினேன் - ஆனால் அவர்கள் வெற்றி வாகை சூடி வருவோர் போலவே வந்தென்னைத் தழுவி வாழ்த்தினர்! இருநாட்களுக்கு முன்பு மாவட்டச் செயலாளர்கள் மற்றும் தலைமைக் கழகச் செயலாளர்கள் கொண்ட நிர்வாகக்குழு கூடியது! அங்கென்ன பேசினர், நமது கழகத்தின் தானைத் தளகர்த்தர்கள்!

ஆட்சி வரும் போகும் - ஆனால் நிலையாக இருக்க வேண்டியது அய்யா, அண்ணா கொள்கை கோட்பாடுகள்தான்! எனவே இயக்கத்தைக் காப்பாற்ற இன உணர்வைக் காப்பாற்ற என்ன வழி எனக் கேட்டனர்! அறுபது ஆண்டுகளுக்கு மேலாகக் கட்டிக் காத்த திராவிட இயக்க உணர்வுக்குச் சிலர் பள்ளம் தோண்டும் பாதகத்தை இனியும் அனுமதிப்பதோ என வினவினர்! விடை கிடைத்தது அவர்தம் கேள்விகளுக்கு! ஆம்; திருச்சியில் தொடங்குகிறது திருப்புமுனை! தி.மு.க. மாநில மாநாடாக!

பூக்கூட்டத்தில் தவழ்ந்து வரும் தென்றல் போல இந்தப் புத்தாண்டில் இது உனக்கு இனிய செய்தியல்லவா?

அன்புள்ள,

மு. க.

31-12-1989

1632. மார்க்சிஸ்டுக்கு மறுப்பல்ல - விளக்கம்!

உடன்பிறப்பே,

தமிழ்நாட்டில் நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. அணி, தோல்விக்கான காரணத்தை தோழர் நல்ல சிவன் அவர்களின் அறிக்கை வாயிலாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மாநிலக்குழு விளக்கியிருக்கிறது.

அந்த விளக்கத்தின் முடிவுரையாக; தி.மு.க., கம்யூனிஸ்டு கட்சி, ஜனதா தளம், பார்வர்டு பிளாக், இதர மதச் சார்பற்ற ஜனநாயக சக்திகளுடன் இணைந்து நின்று மார்க்சிஸ்ட் கட்சி தேசிய கடமைகளை தமிழகத்தில் வெற்றிகரமாக நிறைவேற்றும் எனக் குறிப்பிட்டிருக்கிறது.

இது வரவேற்கத்தக்க ஒன்று எனினும் நாடாளுமன்றத் தேர்தலில் அணியின் தோல்விக்கு தி.மு.க.தான் காரணம் என்று மார்க்சிஸ்ட் கட்சி தொடுத்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு பதில் அளிக்க வேண்டியது கழகத் தலைவர் என்கின்ற முறையில் என்னுடைய கடமையாகிறது.

தி.மு.க. அணியில் லத்தீப் அவர்களின் தலைமையிலான முஸ்லிம் லீக்கை மார்க்சிஸ்ட் கட்சியின் அறிக்கையில் குறிப்பிடவில்லை. குறிப்பிடாதது மட்டுமல்ல; தேர்தல் நேரத்தில் மார்க்சிஸ்ட் கட்சி மேடைகளில் முஸ்லிம் லீக்கைப் பற்றி தெரிவித்த கருத்துக்கள்; அதன் காரணமாக முஸ்லிம் லீக் சார்பில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள்; நமது அணிக்கிடையே எத்தகைய சங்கடத்தையும் வெற்றி வாய்ப்புக்கான சூழலைத் தடுத்திடும் நிலைமையையும் உருவாக்கியது என்பதை மறந்து விட இயலவில்லை.

தோழமைக் கட்சிகள் தங்களுக்குள்ள குறைகளை வெளிப்படையாக அறிக்கைகளாக்குவதை தி.மு.கழகம் என்றைக்குமே விரும்புவதுமில்லை - அந்த முறையைக்

கடைப்பிடித்ததுமில்லை! அந்த முறையினால் அடித்தளத் தொண்டர்களிடையே தேவையற்ற கசப்பு உணர்வுகள் ஏற்பட்டு, நாம் காண விரும்பும் கூட்டணியின் வலிவு சிதையும் என்பது அனுபவ வாயிலாக உணர்ந்த ஒன்று!

மார்க்சிஸ்ட் கட்சியின் விளக்கங்கள், விவாதமேடைக்கு வந்து விட்டதால் கழகமும், தனது நிலையை விளக்குவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது!

ஆரம்ப மாதங்களில் சட்டசபை எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகள், அரசியல் ரீதியாக தாங்கள் பழி வாங்கப்படுவதாக ஒரு எண்ணத்தை அ.தி.மு.க. அணிகளிடம் ஏற்படுத்தின.

இது மார்க்சிஸ்ட் கட்சி மாநிலக் குழுவின் விளக்கம்!

பணத்தைப் பறித்து திருப்பிக் கொடுக்காமல் ஒரு அரசு அதிகாரி மோசடி செய்தார். அந்தப் புகாரின் மீது அதிகாரி வீடு சோதனையிடப்பட்டது. அப்போது அங்கே எதிர்க்கட்சித் தலைவி எழுதிய ராஜினாமா கடித நகல்கள் போலீசாருக்குக் கிடைத்தன. அதே நாளில் எதிர்க்கட்சித் தலைவியின் ராஜினாமா கடிதம், அவரது கைப்படவே எழுதியது, சபாநாயகருக்குக் கிடைத்தது. அதை சபாநாயகர் பயன்படுத்தி ராஜினாமாவை ஏற்றுக் கொள்ளவில்லை. ராஜினாமா ஏற்கப்படவில்லை என்றுதான் சபாநாயகர் அறிவித்தார். அந்தப் பெருந்தன்மைக்கு நன்றி கூறுவதற்குப் பதிலாக பட்ஜெட் கூட்ட ஆரம்ப நாளில் முதலமைச்சரை பட்ஜெட்டை படிக்க விடாமல் எதிர்க்கட்சியினர் ரகளை! பட்ஜெட்டை பிடுங்கியதோடு முதலமைச்சர் தாக்கப்பட்டார்! அவரது மூக்குக் கண்ணாடி உடைக்கப்பட்டது! அதையொட்டி பேரவையில் பெரும் அமளி! இப்படியொரு அமளியைத் திட்டமிட்டு நடத்துமாறு அன்றைய டெல்லித் தலைநகரம் எதிர்க்கட்சித் தலைவிக்கு யோசனை கூறியது! பூச்செண்டு வழங்கியது! அப்போது எதிர்க்கட்சிச் சார்பில் கூறப்பட்ட பொய்யுரைகளை மறுத்து மார்க்சிஸ்ட் சட்டமன்ற உறுப்பினர் திருமதி பாப்பா உமாநாத் போன்றவர்கள் அளித்த பேட்டிகள், ஆற்றிய உரைகள் பல்வேறு ஏடுகளில் வெளிவந்துள்ளன!

இவ்வளவையும் மறந்துவிட்டு இன்றைய தினம் மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு, எதிர்க்கட்சித் தலைவியை தி.மு.க. அரசு;

பழி வாங்கியது என்பது போல அறிக்கை தந்திருப்பது கண்டு வியப்பும் வேதனையும் அடையாமல் இருக்க முடியுமா?

ராஜீவ் அரசு, திட்டமிட்டு சதி செய்து மத்திய தொகுப்பிலிருந்து கொடுக்கும் அரிசியைக் குறைத்த சூழ்ச்சியை முறியடிக்க உரிய நேரத்தில் உரிய விதத்தில் தி.மு.க. முன்வரவில்லை!

இதுவும் மார்க்சிஸ்ட் கட்சியினர் நம்மீது காணும் குறைபாடுகளில் ஒன்று!

தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் மட்டுமல்ல; சட்டசபையிலேயே ராஜீவ் அரசின் ஓரவஞ்சகப் போக்கினைத் தொடர்ந்து புள்ளி விபரங்களுடன் தி.மு.க. விளக்கியிருக்கிறது! ஆனால் மக்களின் ஒரு சாரார் என்ன சொன்னார்கள் என்றால், ராஜீவ் அரசுக்கு அடங்கி நடப்பதாக அடிமை முறிச்சீட்டு எழுதிக் கொடுத்துவிட்டு அரிசியைப் பெற்று வரலாமே என்றுதான்! அப்படியொரு நிலையைத் தி.மு.க. அரசு எடுக்கவேண்டுமென்று மார்க்சிஸ்டுகள் நிச்சயமாகக் கூற மாட்டார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். உரிமைக்குக் குரல் கொடுக்கத்தான் தி.மு.க.வுக்குத் தெரியுமே தவிர, என்றும் கெஞ்சிக் கையேந்தி மத்திய அரசுக்கு மண்டியிடும் பழக்கத்தைக் கழகம் கொண்டிருந்ததில்லை! வேண்டுமென்றே திட்டமிட்டுத் தமிழ் மக்களைப் பட்டினிபோட்டுத் தி.மு.க. அரசின் மீது பழி சுமத்தி வெற்றி பெற அரசியல் சூது நடத்திய ராஜீவ் அரசு; அதற்குரிய தண்டனையை வடபுலத்து வாக்காளப் பெருமக்கள் மூலம் பெற்றுக் கொண்டது!

உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம் போன்றவை நடத்திட சென்னை நகரப் போலீஸ் அனுமதிக்காததால் தொழிலாளர்கள் அதிருப்தியடைந்தனர் என்று இன்னொரு காரணத்தை மார்க்சிஸ்ட் கட்சி கூறியுள்ளது.

அதிகாரிகளையும், தொழிற்சங்கத் தலைவர்களையும் அழைத்துப் பேசி அத்தகைய தொழிலாளர் ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதங்களுக்குரிய இடங்களை எப்போதோ குறிப்பிட்டாகி விட்டது!

தொழிலாளர் நலம் பேணுவதிலே கூட கழக அரசு முனைப்போடு செயல்பட்டு வருகின்றது. மூடப்பட்டிருந்த ஒன்பது நூற்பு ஆலைகள் திறக்கப்பட்டுள்ளன. மேலும் ஆறு

ஆலைகளை அரசே எடுத்து நடத்துவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விவசாயத் தொழிலாளர்களுக்கும், பீடித் தொழிலாளர்களுக்கும் குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்து அறிவிக்கப்பட்டது. மூடப்பட்டிருந்த ஆலைத் தொழிலாளர்கள் 15000 பேருக்கு முதலிலே 250 ரூபாய் வீதம் நிவாரண நிதி தொழிலாளர் நல நிதியிலிருந்து, பின்னர் ஒருமுறை 200 ரூபாய் வீதம் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்தும் வழங்கப்பட்டது. அதைப் போலவே ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிலாளர்களுக்கு 200 ரூபாய் வீதம் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டது.

பஸ், சினிமா, மின்சார கட்டண உயர்வுகள் மக்களிடம் கடும் அதிருப்தியை உருவாக்கிவிட்டன என்று மார்க்சிஸ்ட் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

கஜானா காலி என்ற நிலையில் ஆட்சிக்கு வந்த கழகம், இந்தச் சிறிய உயர்வுகளைக் கூடச் செய்யாமல் எப்படித்தான் ஆட்சி நடத்துவதோ?

ஒரு யூனிட் மின்சாரம் தயாரிக்க ஆகும் செலவும் ஒரு ரூபாய்! அதற்கு மேலும் கூட!

ஆனால் தமிழகத்தில் 51 யூனிட்டிலிருந்து 101 யூனிட் வரை பயன்படுத்துகிறவர்களுக்கு மட்டும் 55 பைசாவிலிருந்து 65 பைசா என்ற அளவுக்கு பத்து பைசா மட்டுமே உயர்வு! 101 யூனிட்டுக்கு மேல் 70 பைசா வீதம் மின் கட்டணம்! முதல் 51 யூனிட்டுக்கு 55 பைசா கட்டணம் செலுத்தினால் போதுமானது! ஐந்து குதிரையோட்டத்துக்குக் கீழேயுள்ள பம்பு செட்டுகளுக்கு ஒரு எச்.பி.க்கு 75 ரூபாய் என்று இருந்ததை 50 ரூபாய் எனக் குறைத்து விவசாயிகளுக்கு நன்மை செய்தது இந்த அரசு! பிற மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் விவசாயிகளுக்குத் தாங்கள் செலுத்தும் கட்டணம் எவ்வளவு குறைவு என்று தெரியும்!

அடுத்த குற்றச்சாட்டு பஸ் கட்டணம் பற்றியது! மார்க்சிஸ்ட் அறிக்கையில் கூறப்பட்டிருப்பது!

முதலில் 50 காசு என்றிருந்ததை மாற்றாமல் 50 காசு என்றும் இரண்டாம் நிலைக்கு 60 காசு என்றிருந்ததை மாற்றாமல் 60 காசு என்றும் ஆக்கிவிட்டு, 70 காசு என்றிருந்ததை 75 காசு என்று உயர்த்தப்பட்டது. 35 சதவிகித மக்கள் எந்தவித பஸ்கட்டண

உயர்வுக்கும் ஆளாகவில்லை! 18 சதவிகிதம் பேர் ஐந்து பைசா உயர்வுக்கு மட்டுமே ஆட்பட்டனர். 80 காசு 90 காசு என்றும், 90 காசு ஒரு ரூபாய் என்றும் மாற்றப்பட்டதால் பெரும்பாலான மக்கள் பாதிக்கப்படவில்லை. ரயில் கட்டணத்தையும், மற்ற மாநிலங்களின் பஸ் கட்டணத்தையும், ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழ்நாட்டு பஸ் கட்டணம் குறைவேயாகும்.

மார்க்சிஸ்ட் ஆட்சி நடத்தும் கேரளாவில் திருவனந்தபுரத்தில் 10 கி.மீ. தூரத்துக்கு நடைமுறையிலே உள்ள கட்டணம் 1 ரூபாய் 10 காசு! அதே தூரத்துக்கு சென்னையில் பஸ் கட்டணம் ஒரு ரூபாய் மட்டும்தான்!

திருவனந்தபுரத்தில் அதிகப்படியான 42 கி.மீ. தொலைவுக் கட்டணம் ரூ. 4.50 ஆனால் சென்னையிலே அந்தத் தொலைவுக்கான கட்டணம் ரூ. 2.35தான்! இன்னும் சொல்லப் போனால் பேருந்துகளுக்கு கேரளாவில் ஒரு கிலோ மீட்டருக்கு துரித கட்டணம் 15 காசுகள். ஆனால் தமிழ்நாட்டில் துரிதக் கட்டணம் 10.50 காசுகள்தான்.

திரைப்படத்துறையின் பல்வேறு பிரிவினரின் கருத்தையறிந்துதான் தியேட்டர்கள் மூடப்படாமல் இருக்கவும், தொழில் நசித்துபோய் பல லட்சம் தொழிலாளர்கள் வேலையிழக்காமல் இருக்கவும், கறுப்புச் சந்தையில் பத்து ரூபாய் இருபது ரூபாய் என சினிமா டிக்கெட்டுகள் விற்கப்படும் நிலையில் - சினிமா கட்டணத்தை சிறிது உயர்த்தி, சினிமா வரியில் சீர்திருத்தம் செய்யப்பட்டது.

எனவே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இவற்றையெல்லாம் காரணங்களாகக் காட்டி தி.மு.க. அரசைக் குறை கூறுவது எந்த வகையில் பொருத்தமென்றே புரியவில்லை!

மத்திய அரசு ஊழியர்க்கு இணையான ஊதிய உயர்வு என்பதில் 80 சதவிகிதம் ஊழியர்களும், ஆசிரியர்களும் பயனடையவில்லையென்றும், வேலை நாட்களை ஆறு நாட்களாக உயர்த்தியதால் அரசு ஊழியர், ஆசிரியர்கள் அதிருப்தியுற்று வாக்களிக்கவில்லையென்றும் மார்க்சிஸ்ட் கட்சியின் அறிக்கை கூறுவதில் நியாயமோ, உண்மையோ இருப்பதாக எவரும் கூறிடார்!

89-90-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே மத்திய மாநில அரசு அலுவலர்களின் ஊதிய விகிதம் சமநிலையாக இருக்க

வேண்டுமென்பதை கொள்கை அளவிலே ஒப்புக் கொள்வதாக அறிவித்தோம்.

ஊதியக் குழுவின் அறிக்கை 16.5.89-இல் கிடைக்கப் பெற்றது. அறிக்கை கிடைக்கப் பெற்ற ஒரு சில கிழமைகளிலேயே அதன் பரிந்துரைகளை முழுமையாக ஏற்றுக்கொண்டு 1.6.88 முதலே முன்தேதியிட்டு அமல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

நிதி நெருக்கடி மிகுந்த நிலையிலும் 400 கோடி ரூபாய் அளவிற்கு முதற்கட்டமாக அரசு அலுவலர்களுக்கு ஊதிய உயர்வு தரப்பட்டது.

பின்னர் அதிலே சில குறைபாடுகள் தெரிவிக்கப்பட்டபோது அதனையும் ஏற்றுக்கொண்டு மேலும் 30 கோடி ரூபாய் அளவிற்கு உயர்வுகள் தரப்பட்டன.

இன்னும் சொல்லப்போனால் மத்திய அரசு அலுவலர்களைவிட அதிக ஊதியமே ஒரு சிலருக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும் ஊதியக்குழு தன் பரிந்துரைகளிலே ஒன்றாக - மத்திய அரசு பின்பற்றி வரும் திறனாய்வு முறைத் தடை (ஈ.பி.)யை தமிழக அரசும் பின்பற்ற வேண்டுமென்று பரிந்துரை செய்திருந்தது. ஆனால் முன்பே ரகசிய குறிப்பேட்டு முறை தேவையில்லை என்று செய்திருந்த கழக அரசு இப்போதும் இந்த திறனாய்வு முறைத் தடை தேவையில்லை என்று அறிவித்தது.

அரசு அலுவலர்களின் குடும்ப பாதுகாப்பு நிதி இருபதாயிரம் என்று இருந்தது, நாற்பதாயிரம் ரூபாய் என்று உயர்த்தப்பட்டது.

அதுமாத்திரமல்ல; 22.6.88 முதல் 22.7.88 வரை ஒரு மாத காலம் ஜாக்டீ சார்பில் பெரும் போராட்டம் நடைபெற்று, அதன் காரணமாக பல வழக்குகள் அரசின் சார்பிலே அந்தச் சங்கத்தினர் மீது போடப்பட்டிருந்தது.

22.3.89 அன்று பிறப்பித்த ஆணையின்படி ஜாக்டீ சங்கத்தினர் மீது போடப்பட்டிருந்த வழக்குகள் - ஒழுங்கு நடவடிக்கைகள் ரத்து செய்யப்பட்டன. அவர்கள் நடத்திய போராட்ட காலம் - தண்டனைக் காலம் அனைத்தும் விடுப்பாக ரத்து செய்யப்பட்டன.

அதைப் போலவே சிவ. இளங்கோ போன்றோர் தலைமையில் உள்ள மற்ற அரசு அலுவலர்கள் மீதும், தலைமைக் கழக

அலுவலர்கள் மீதும் கடந்த கால அரசு போட்டிருந்த அனைத்து வழக்குகளும் ரத்து செய்யப்பட்டன.

குறைந்தபட்ச அடிப்படை ஊதிய உயர்வினை 100 ரூபாயிலிருந்து 150 ரூபாயாக உயர்த்தப்பட்டு - அந்த அடிப்படையிலே மற்ற அகவிலைப்படி போன்றவைகளைச் சேர்க்கும்போது குறைந்தபட்சம் ஒருவர் 200 ரூபாய் அளவிற்கு பயன் பெற்றிருக்கிறார்.

நான்காவது ஊதியக்குழுவின்போது குறைந்த பட்ச ஊதிய உயர்வு என்பது 30 ரூபாய்தான். எனவே 80 சதவிகித அரசு அலுவலர்களும் ஆசிரியர்களும் பயனடையாத நிலை என்பது முற்றிலும் தவறான வாதம் ஆகும்.

ஊதியக்குழு நிர்ணயித்து, ஊதிய உயர்வு தரும்போது அதிக ஆண்டுகள் பணியாற்றியவர்களின் பயனை, புதிதாக பணிக்கு சேர்ந்தவர்களின் பயனோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது புதிதாக சேர்ந்தவர்களுக்கு அதிகப் பயனும், அதிக ஆண்டுகள் பணியாற்றியவர்களுக்கு சிறிது குறைவான பயனும் ஏற்படுவது எல்லா மாநிலங்களிலும், மத்திய அரசிலும் நடைபெறக் கூடிய செயல்தான். எனவே 80 சதவிகிதம் பேர் பயன் அடையவில்லை என்று கூறுவது சரியல்ல.

தமிழக அரசு அலுவலர்கள் விரும்பியது மத்திய அரசு அலுவலர்களுக்கு ஈடான ஊதியம்தான். அது முற்றிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அளிக்கப்பட்டுள்ளது.

இன்னும் சொல்லப்போனால் இளநிலை உதவியாளர்கள் உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால் - தமிழக அரசு கொடுத்த பழைய ஊதிய விகிதம் 610-1075. மத்திய அரசு ஊதியம் 950-1500. ஆனால் இப்போது தமிழக அரசு தந்துள்ள ஊதியம் 975-1500 ஆகும்.

எனக்குக் கிடைத்துள்ள விபரப்படி, மற்ற மாநிலங்களிலே எவ்வளவு என்று பார்த்தால் - ஆந்திரா 910, மகாராஷ்டிரா, குஜராத், அரியானா மாநிலங்களிலே 950, ராஜஸ்தான் 880, மத்தியப் பிரதேசம் 870. ஆனால் தமிழ்நாட்டில் 975 ரூபாய் தந்துள்ளோம்.

செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் என்று எடுத்துக்கொண்டால் மொத்தம் 1,72,612 பேர் இருக்கிறார்கள். அவர்களின் ஊதிய

விகிதம்... தமிழ்நாடு பழைய ஊதிய விகிதம் 610-1075. மத்திய அரசு ஊதிய விகிதம் 1200-2040. தமிழ்நாடு புதிய ஊதிய விகிதம் 1200-2040.

ஆக 610 ரூபாய் அடிப்படை ஊதியம் பெற்று வந்த ஆசிரியர்களுக்கு அடிப்படை ஊதியத்தை 1,200 ரூபாய் என்று மத்திய அரசு ஆசிரியர்களுக்கு இணையாக உயர்த்தியிருக்கிறோம்.

இவ்வளவு செய்த பிறகும் 80 சதவிகிதம் பேருக்கு பயன் இல்லை என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் கருதுகிறார்களா?

வேலை நாட்கள் ஆறு நாட்களாக ஆக்கப்பட்டது அரசு அலுவலர்களும் அதிருப்தியை ஏற்படுத்திவிட்டது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

மத்திய அரசு அலுவலர்களுக்கு சமமான ஊதியம் பெறும்போது - மத்திய அரசு அலுவலர்கள் உழைக்கின்ற அளவிற்கு மாநில அரசு அலுவலர்களும் உழைக்க வேண்டாமா?

மத்திய அரசு அலுவலர்கள் 8 மணி நேரம் நாள் ஒன்றுக்கு பணியாற்றும்போது மாநில அரசு அலுவலர்கள் 7 மணி நேரம் மட்டுமே பணியாற்றிய காரணத்தால் கிழமை ஒன்றுக்கு ஆறு நாட்கள் பணியாற்ற வேண்டுமென்பது ஆக்கப்பட்டது.

ராமஜென்ம பூமி பிரச்சினையில் கவனம் செலுத்தி, அந்த வகுப்புவாத பிரச்சாரத்தை எதிர்த்து முஸ்லிம்களின் வாக்குகளைப் பெற தி.மு.க. தவறிவிட்டது என்று மார்க்சிஸ்ட் கட்சி அறிக்கை குறிப்பிடுகிறது.

ராமஜென்ம பூமி பிரச்சினையை வைத்து தமிழகத்தில் இந்து முஸ்லிம் மோதுதலை உருவாக்கிட சில தீய சக்திகள் திட்டமிட்டு முயற்சித்ததைக் கழக அரசு எவ்வளவு திறமையுடன் சமாளித்தது என்பதை சட்டம் ஒழுங்கு அமைதியில் நாட்டமுடைய அனைவரும் அறிவர்!

தேர்தல் முடிவு குறித்துக் காரணங்களை ஆராய மார்க்சிஸ்ட் கட்சிக்கு முழு உரிமையும் உண்டு! அக்காரணங்கள், தி.மு.க. அரசின் தவறுகள் ஆகமாட்டா என்று விளக்கிடும் உரிமையும் நமக்கு உண்டு!

கேரளத்திலேகூட இருபது இடங்களில் இரண்டு இடங்களில்தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்த நாடாளுமன்றத் தேர்தலில் வென்றிருக்கிறது! அதற்குக் காரணம் கேரளத்து மார்க்சிஸ்ட் தலைமையிலான ஆட்சியின் குறைபாடுகள் எனக் கூற முடியுமா? முடியாது!

ராஜீவ் காந்தியினால்தான் ஆட்சி அமைக்க முடியும் - தேசிய முன்னணி, ஆட்சி அமைக்காது என்ற ஒரு கருத்து, தமிழகம் - ஆந்திரம் - கேரளம் - கர்நாடகம் ஆகிய தெற்கு மாநிலங்களில் வலுவாக இருந்ததே இந்த முடிவுக்கு முக்கியமான பெரிய காரணம் என்பதை மறந்துவிடக்கூடாது!

1977-லே கூட வடக்கே ஜனதா கட்சி பெரு பெற்றி பெற்று ஆட்சி அமைத்தபோது, தெற்கே இந்திரா காங்கிரஸ் பெரும்பான்மையான இடங்களைப் பெற்றது என்பதே வரலாறு!

குறைகளை யார் சுட்டிக் காட்டினாலும், திருத்திக் கொள்ள அரசு தயாராக இருக்கிறது என்பதை அடக்கத்துடன் கூறிக்கொள்கிறேன்! அதே நேரத்தில் தவறான தகவல்கள் தரப்படும் போது அதனை எடுத்துக்காட்டும் கடமையும் எனக்கு இருக்கிறதல்லவா? அதனால்தான் இந்தக் கடிதம்!

அன்புள்ள,

மு. க.

02-01-1990

1633. எது வேண்டும்? கிரீடமா? தலையா?

உடன்பிறப்பே,

அன்பில் அழைக்கிறார் என்று தலைப்பிட்டு 1956-ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற தி.மு.க. மாநில மாநாட்டுக்கு அறிஞர் அண்ணா அழைப்பு விடுத்தார். இன்று பிப்ரவரி 9, 10, 11 - வெள்ளி, சனி, ஞாயிறு கிழமைகளில் அதே திருச்சித் தலைநகரில் கழகத்தின் மாநில மாநாடு நடைபெற இருக்கிறது.

அன்று அண்ணா எழுதினார் தம்பிக்குக் கடிதத்தில்! அந்தக் கடிதம் இன்றைக்கும் எவ்வளவு பொருத்தமாக இருக்கிறதென்பதற்காக அதில் ஒரு பகுதி இதோ! -

முடியுமா? முடியும்! என்று எண்ணுவோரின் தொகையையும் வகையையும், அவர்தம் உறுதியையும் உற்சாகத்தையும், அவர்தம் உள்ளத்தில் பொங்கி, கண்வழி வழியும் பேரார்வத்தையும், காட்டுகிறேன் வாரீர், என அழைக்கிறார், அன்பில்! இலட்சக்கணக்கில் கூடப் போகிறார்கள் - இலட்சிய முழக்கம் கேட்கப் போகிறது!

சிங்களத் தீவிலிருந்தும், திருநெல்வேலிச் சீமையிலிருந்தும், சிங்காரச் சென்னையிலிருந்து பிற மாவட்டம் பலவற்றிலிருந்தும் அடலேறுகளும், அவர்கட்குக் காதல் தேனில் வீரத்தைக் குழைத்தளிக்கும் குமரிகளும், வீரரைப் பெற்றெடுத்த தாய்மார்களும், அவர்தம் இளமை வளத்தை எண்ணிக் களித்திடும் முதியோரும், வரலாறு அறிந்த மாணவர்களும், புதிய வரலாறு காணும் பாட்டாளித் தோழர்களும், அணி அணியாக வரப்போகிறார்கள், கடல் அலையை மிஞ்சிடும் களிப்பொலி எழுப்பியபடி, குடும்பம் குடும்பமாக வரப்போகிறார்கள் - குதூகலம் காணப் போகிறார்கள். குன்றெடுக்கும் நெடுந்தோளையும், குளிர்மதிப் பார்வையையும், இன்று கண்டோம் இனி வென்றோம், என்று எவரும் ஆர்வத்துடன் கூறிடத்தக்க வகையில் திரண்டு

வருகிறார்கள் திரு இடத்தவர்! காண வாரீர், கடமையை உணர வாரீர்! கருத்தளிக்கவும், காரியமாற்றவும், கலங்கா உள்ளம் படைத்தோரே! திரண்டு வாரீர்! தீரரும் வீரருமான திரு இடத்தினர் எத்துணை எழுச்சியுடன் அணிவகுத்து நிற்கின்றனர் என்பதை எவரும் அறியத்தக்க விதத்திலே வந்து சேருமின்! பெற்றேனே இந்த மக்களை, மாற்றான் எனை ஏச, கூசாது கேட்டுக் கிடந்தனரே குனிந்த தலையுடன் - என்னால் சீராட்டி வளர்க்கப்பட்ட இந்த மக்கள் என்று கூறிக்கொண்டிருந்த தாயகம்; இன்று ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சியையும் வீரத்தையும் கண்டு, கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, நான் பெற்ற செல்வங்களே! தீர்ந்ததே என் துக்கம். இனி என் தளை உடைபடும் என்ற நம்பிக்கை பிறந்ததடா என்று வாழ்த்தி வரவேற்கிறது! அன்னையின் பணிக்காக அருமந்த மக்காள், அனைவரும் வருக!! என்றெல்லாம் கூறி அழைக்கிறார் அன்பில்!

இப்போது நடக்க இருக்கும் மாநில மாநாட்டுக்காக அண்ணா அவர்கள் விடுத்திடும் அழைப்பு போலவே இருக்கிறதல்லவா இது!

அன்று 1956-ல் மாநாட்டுக்கு அழைத்த அன்பிலும் இருக்கிறார் - அவர் மகன் தம்பி பொய்யாமொழியும் இளைஞர் அணியின் நிர்வாகியாக; சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறான்!

இரண்டாவது தலைமுறையை மட்டுமல்ல; மூன்றாவது தலைமுறையையும் காணும் வாய்ப்பைப் பெற்று, அவர்கள் ஓடியாடி இந்த இயக்கத்தின் வலிவுக்காக உழைப்பது எண்ணி உற்சாகம் கரைபுரள என் பயணத்தில் சுறுசுறுப்புக் காட்டிக் கொண்டிருப்பவன் நான்! நம்பிக்கை கொண்டு உடன்பிறப்புகளாம் உம்மிடையே உலவிக் கொண்டிருப்பவன் நான்!

எதனால் உற்சாகம்? எதிலே நம்பிக்கை? ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந்திருக்கிறோம் என்பதால் உற்சாகமா? தொடர்ந்து தலைமுறை தலைமுறையாக நமது கழக அரசேதான் என்ற நம்பிக்கையா? அங்ஙனம் எண்ணுவதும், எதிர்பார்ப்பதும், மக்களாட்சி தத்துவத்தின் மாண்பு ஆகாது எனக் கருதுபவன் நான்!

ஜனநாயகம் ஒன்றே அரசியல் தத்துவத்தில் குறைவான குறைபாடுகளே உள்ள முறையென்பதை உணர்ந்தவன் என்பதால் அதில் நம்பிக்கை வைத்து, இந்த இயக்கத்தின் தலைமைப்

பொறுப்பை உன்போன்றோர் துணையுடன் ஏற்றுப்பணியாற்றிக் கொண்டிருக்கிறேன்!

ஜனநாயக முறை போற்றத்தக்கதுதான் - ஆனால் அது முழுக்க முழுக்க நமக்கேதான் பயன்பட்டாக வேண்டும் - நம்மை அரசில் அமர்த்திடவே அம்முறை பயன்பட வேண்டும் - என எண்ணிப் பதவியில் நிலைத்திருக்க, ஜனநாயக அடிப்படையிலான வெற்றிக்காக - கொள்கை, கோட்பாடு, குறிக்கோள் இவற்றில் வளைந்து கொடுக்கவும் நெளிந்து கிடக்கவும் முற்பட்டால் கிரீடம் மட்டும் போதும் தலை தேவையில்லை என்ற முட்டாள்தனத்தின் மொத்த உருவமாக ஆகிவிடும் ஒரு இயக்கம்!

தலை இருந்தால் கிரீடம் கிடைக்கும்போது சூட்டிக்கொள்ளலாம்! தலையை இழந்துவிட்டுக் கிரீடத்தைத் தேடிப் பயன் என்ன? தர்பார் இருந்தால் பத்துப் பேர் மரியாதை காட்டுவர்! தயவுக்குத் தவம் கிடப்பர்! இல்லையென்று கூறவில்லை! ஆனால் தன்மான உணர்வை ஒரு இயக்கமோ, அந்த இயக்கத்தின் வழிநடத்துதலுக்கு உள்ளான ஒரு சமுதாயமோ இழந்துவிட்டால், அந்தச் சமுதாயத்தின் சரித்திரப் பக்கங்கள், எதிர்காலம் காறி உமிழும் எச்சில் கொண்டன்றோ எழுதப்படும்!

ஆட்சி வரும், போகும் - அறுபது ஆண்டுகளுக்கு மேலான ஆயுள் படைத்த திராவிட இயக்கத்தைக் காப்பாற்றப் போகிறோமா இல்லையா? அய்யா, அண்ணா எழுப்பிய பகுத்தறிவு அரணை, சுயமரியாதைக் கோட்டையை, இன உணர்வு மாளிகையைப் பாதுகாக்கப் போகிறோமா இல்லையா? உதவாதினி ஒரு தாமதம் என விரைந்தெழுந்து வினை முடிக்க முனையாவிட்டால் எங்கிருந்தோ வந்த பகை மாயை திராவிட இயக்கத்தின் உணர்வுகளை உருத்தெரியாமல் அழித்துவிடும் - எச்சரிக்கை!

என கடந்த வாரம் நடந்த கழகத் தலைமையில் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் உரை நிகழ்த்தினேன்! உரையல்ல அது! நீண்ட காலமாக என் நெஞ்சில் உறைந்து கிடந்த ஆதங்கம், பனியாக உருகியது! ஆம், பழைய நம் பணியைத் தொடர வேண்டுமென்று! அதற்குத்தான் திருச்சியில் தொடங்குகிறது திருப்பு முனை! எனத் தலைப்பிட்டு அன்றோர் கடிதம் எழுதினேன்!

நமது கழகத்திற்கு கொள்கை, குறிக்கோள், சட்ட திட்டங்களுக்கென அச்சடித்த புத்தகமே ஒன்று உண்டு!

அதில் சட்டதிட்டங்களில் மட்டுமே அதிக கவனம் செலுத்தி, உறுப்பினர் சேர்ப்பது எப்படி? கிளைகள் அமைவது எவ்வாறு? ஒன்றியங்களுக்கும் மாவட்டக் கழகங்களுக்குமுள்ள உறவு என்ன? ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது எதற்காக; எக்காரணம் காட்டி? தலைவர் பணி என்ன? பொதுச் செயலாளர், பொருளாளர், துணைப் பொதுச் செயலாளர் கடமைகள் யாவை? என்பனவற்றை மட்டுமே அலசி ஆராய்ந்து கொண்டிராமல் -

முதல் பக்கத்திலேயே முத்தான எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ள கழகத்தின் கொள்கை விளக்கத்தை அடிக்கடி நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்! அதற்குத்தான் திருச்சி மாநாடு! நினைவுபடுத்திக் கொள்ளாதவருக்குத் தூண்டுகோலாக! நினைவுபடுத்திக் கொண்டு செயல்படும் உடன்பிறப்புகளுக்கு உற்சாக டானிக் ஆக!

அறிஞர் அண்ணா அறிவுறுத்திய கடமை, கண்ணியம், கட்டுப்பாடு அடிப்படையில், அரசியலில் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்து, ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்திடவும், பகுத்தறிவு அடிப்படையில் மறுமலர்ச்சிக்கான சீர்திருத்தப் பணி ஆற்றியும், பொருளாதாரத் துறையில் வறுமையை வென்று, சமதர்ம அடிப்படையில் எல்லோரும் நல்வாழ்வு பெற வழிவகை கண்டிடவும், பிறமொழி ஆதிக்கத்திற்கு இடம் கொடாமல் அந்தந்த மாநில மொழிகளை வளர்த்திடவும், அவைகளுக்கான உரிய இடத்தைப் பெற்றுத் தரவும், மத்திய அரசில் குவிந்து கிடக்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு மாநிலங்களில் சுயாட்சியும், மத்தியில் கூட்டாட்சியும் உருவாகிடவும் தொண்டாற்றுவது

இந்தக் கொள்கைக் குறிப்பை, வரி வரியாக விளக்கமளித்து, விரிவுரையாற்றி, மூத்த தலைமுறைக்கு நினைவுபடுத்தவும் - இளைய தலைமுறைக்கு எழுச்சியூட்டவும், திருச்சி மாநில மாநாடு - ஒரு திருப்புமுனையாக அமைய இருக்கிறது!

* அரசியலில் ஜனநாயகம்
* சமுதாயத்தில் ஆதிக்கமற்ற நிலை
* பகுத்தறிவு அடிப்படையில் மறுமலர்ச்சி
* சமதர்ம அடிப்படையில் எல்லார்க்கும் - நல்வாழ்வு

* பிறமொழி ஆதிக்கம் தவிர்த்தல்

* மாநில சுயாட்சி - மத்தியில் கூட்டாட்சி

பேச்சு மேடைகள், கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள், கவியரங்குகள், மாநாடுகள், ஏன்; ஆட்சி மன்றங்கள்கூட வெறும் லாவணிகளுக்குப் பிரதான இடம் தருவது மாறி, கொள்கைவழி நின்று கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளும் மணிமாடங்களாகத் திகழவேண்டும்! அதற்கான அழைப்பைத்தான் திருச்சிக்கு நான் விடுக்கிறேன், உனக்கும் உன்போன்ற உடன்பிறப்புகளுக்கும்!

கழகச் சட்டதிட்டப்படி மாநிலப் பொது மாநாட்டுக்குக் கழகத் தலைவர் தலைமை ஏற்கவேண்டும் - பொதுச் செயலாளர் திறப்பாளராக இருக்க வேண்டும் - அதன்படி நானும் பேராசிரியரும் அப்பணியினை திருச்சி மாநாட்டில் மேற்கொள்கிறோம்.

அதே சட்ட திட்டத்தின் பிரிவு 11-ன்படி மாநாடு நடைபெறும் மாவட்டத்தின் கழகச் செயலாளர் வரவேற்புக் குழுத் தலைவராகிறார். அதன்படி தம்பி செல்வராஜ் அந்தப் பொறுப்பேற்றுக் காரியமாற்றுகிறார். பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் மாநில மாநாட்டின் வரவேற்புக் குழுவினர். சட்டதிட்டம் பிரிவு 14-ன்படி மாநாட்டின் மிச்சத் தொகை முழுவதும் தலைமைக் கழகத்திற்கே சேரும். பிரிவு 15-ன்படி பொது மாநில மாநாட்டின் வரவு செலவுக் கணக்குகள் தணிக்கைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு, அடுத்து நடக்கும் பொதுக்குழுவில் வைக்கப்படும்.

என்ன இது; திடீரென வரவு செலவுக் கணக்கிற்கு வந்துவிட்டாய் எனக் கேட்கிறாயா? பழைய பொருளாளன் அல்லவா? அந்த நினைப்பு என்று எண்ணிடாதே! இப்போது நாம் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறோம் - அதனால்தான் வரவு செலவு கணக்கில் இவ்வளவு கவனம்!

யாரிடமும் நூறு இருநூறு ரூபாய் என்றுகூட மாநாட்டுக்காக எவரும் நன்கொடை வசூலித்தல் கூடாது!

அனுகூலம் பெறலாம் என்ற ஆசையில் அதிகாரிகள் எவரும் இதில் ஈடுபடவும் கூடாது! ஈடுபடுத்தவும் கூடாது!

நன்கொடை சீட்டுகள் தலைமைக் கழகத்திலேயே தயாராகின்றன! பத்து ரூபாய் நன்கொடை சீட்டுகள் மட்டுமே!

அவற்றை மாவட்டக் கழகங்கள், ஒன்றிய மற்றும் கிளை அமைப்புகள் மூலம் வழங்கி, மாநாட்டுக்கு நிதி திரட்டிட வேண்டும்!

பத்து ரூபாய் நன்கொடை சீட்டு பெற்றவர்கள், மாநாட்டுக்கு வர நுழைவு நன்கொடை சீட்டுகளை மாநாட்டுப் பந்தலில் பெற்றுக் கொள்ளலாம்!

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்திட வேண்டுமென்பதற்காக - மாநாட்டு வரவு செலவு எவ்வாறு அமைதல் வேண்டுமென சுட்டிக்காட்டினேன், அவ்வளவுதான்!

திருச்சி மாநாட்டுக்கு வந்திட, இப்போதே உற்றார், உறவினர், குடும்பத்தினர், நண்பர்களுடன் தயாராகுக!

கிரீடமும் தலையும்! இரண்டும் தேவையெனினும், இவற்றில் எது முதல் தேவை என்பதை உணர்த்தி உன்னைச் செயல்பட வைக்கும் மாநாடே; திருச்சி மாநில மாநாடு!

ஏற்கனவே எமர்ஜென்சியின்போது கிரீடத்தை அலட்சியப்படுத்தி தலையைக் காத்துக் கொண்ட வரலாற்றுக்குரியவர்கள் அல்லவா நாம்!

அன்புள்ள,

மு. க.

03-01-1990

1634. வெள்ளையும் கறுப்பும் - நிலையும் நினைப்பும்!

உடன்பிறப்பே,

அமெரிக்கா நோக்கி வரும் கப்பல்களில் படிக்கட்டுகளுக்கு பதிலாக வெள்ளை நிற வெறியர்கள் பயன்படுத்தியவை கறுப்பு நீக்ரோக்களின் உடல்கள்தான்! ஆம்; உயிரோடு கூடிய உடல்கள்தான்! செத்துப் போன உடல்களாக இருந்தால் அந்த அதிகாரிகளின் முரட்டுப் பூட்சுகள் மிதித்த காரணத்தால் வலி தெரியாமல் இருந்திருக்க முடியுமே! அய்யோ என்று நெளிந்தால் சவுக்கடி! அதுவும் ஒன்றா? இரண்டா? இந்தா, எண்ணிக்கொள் என்று எண்ணிக்கையில்லாமல்! மிருகங்களைப் போல அமெரிக்க நாட்டில் விலை கூறி விற்கப்பட்ட அடிமைகள்தான் நீக்ரோக்கள்!

இயந்திரங்கள்கூட ஓய்வு பெறும்; இவர்களோ ஓய்வின்றி உழைக்க வேண்டும்! இயந்திரங்களைப் பழுது பார்ப்பர்! இவர்கள் அயர்ந்தால் உடலில் இரும்புக் கம்பிகளால் உழுது பார்ப்பார் உலுத்தர்கள்! உழவு மாடுகளைப் போல ஆடவர்! எருமைக் கிடாரிகளைப் போல பெண்டிர்! அய்யோ; அதுவுமில்லை - அந்த மாடுகளுக்குக் கூட அன்புடன் தீனி போடுவது உண்டு! அதுகூட இல்லை; அந்தக் கறுப்புநிறப் பிறவிகளுக்கு! அம்மவோ; அந்த மனிதப் பிறவிகளுக்கு! ஆண்டவன் படைப்புகளுக்கு!?

உரிமைகள் மறுக்கப்பட்ட நடைப்பிணங்களாகத் திரிந்தனர், உயர்ந்து விண்ணை முட்டும் சிகாகோ, நியூயார்க் நகர கட்டிடங்கள் எழுந்து நின்றிடும் எழில் வீதிகளில் இந்திய நாட்டுக் கிராமத்துப் பன்றிகளைப் போல அந்த நீக்ரோ மக்கள்!

தொழுநோயாளிகளுக்குத் தரப்பட்ட மதிப்போ - காட்டப்பட்ட இரக்கமோகூட அவர்கள்பால் அந்த வெள்ளைநிற ஆதிக்கக்காரர்களுக்கு அறவே இருந்ததில்லை!

சுருங்கச் சொன்னால், வெள்ளைத் தோலில் கறுப்பு உள்ளங்கள்! கறுப்புத் தோலில் வெகுளி உள்ளங்கள்!

எத்தனை நாள் இருட்டுக்குள் கறுப்புக் கற்களாக இருந்து மிதிபட முடியும், அந்த இனம், தனது நிரந்தரக் கண்ணீரைத் துடைத்துக் கொள்ள நிணமும் சதையும் ரத்தமும் அர்ப்பணிக்க வேண்டியிருந்தது! எதிர்த்து நின்று எரிமலைப் பெருமூச்சு விட்டோரின் மூச்சு நிறுத்தப்பட்டது, மூர்க்கர்களால்! ஆதரவாகப் போரிட்ட லிங்கன்களை ஆதிக்கச் சதிகாரர்கள் ஆவி போக்கிக் களித்தனர்! கழிபேருவகைக் கூத்திட்டனர்! கர்ண கடூரமாகச் சிரித்தனர்!!

கறுப்புப் புழுக்கள், வெல்வெட்டுத் துணியில் ஊர்வதா? நெளிவதா? உலகுக்கு அடுக்குமா? அப்புழுக்கள் வதையுமிடம் சாக்கடையாகத்தானே இருத்தல் வேண்டும்! இவ்வாறு நியூயார்க் அமெரிக்கனின் குரல், நீக்ரோ மனிதனை விமர்சித்து எழுந்தது!

எத்தனை நாளைக்கு அடிமை நிலை? அடிக்கப்பட அடிக்கப்படப் பந்து எழும்புவதைப் போல அரைக்கப்பட அரைக்கப்பட சந்தனம், மணம் கமழ்வதைப் போல - அழுத்தப்பட்ட அந்த இனத்தினர், கண்கள் வழியே நெருப்புக் குழம்பைக் கக்கினர்!

ஆதிக்க சுகம் கண்ட எந்தவொரு வர்க்கமும், தனது கையிலிருக்கும் ஆயுதத்தைக் கீழே எறியுமா? கடைசி வரையில் தனது வர்க்கத்தின் ஏகாதிபத்தியம் நிலைக்க வேண்டுமென்றுதானே அடிபட்ட வேங்கை போல சீறிப் பாயும்! இங்கேயே, இந்த மண்ணிலேயே நாம் காணுகிறோமே; அத்தகைய மதோன்மத்தர்களை!

1959-ல் சென்னை மாநகராட்சியின் மேயராகக் கழகச் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஒரு அச்சகத் தொழிலாளி! அ.பொ. அரசு என்பது அவர் பெயர்! எதை மறந்தாலும் அந்த மேயர் தேர்தலை என்னால் மறக்க இயலாது! அந்த மாநகராட்சித் தேர்தலில் கழகம் வெற்றி பெற்றதற்காக கடற்கரையில் நடந்த வெற்றி விழாக் கூட்டத்தில் அன்று என் விரலில் அண்ணா அணிவித்த கணையாழி இன்றும் ஒளிவிட்டுக்கொண்டிருக்கிறது!

“என் மனைவிக்காகக்கூட நகைக் கடைக்குச் சென்று ஒரு நகை வாங்கி அறியாத நான்; சென்னை மாநகராட்சி வெற்றியைத்

தேடித் தந்த தம்பி கருணாநிதிக்காக பல கடைகளின் படியேறி இந்தக் கணையாழியை வாங்கினேன்!”

என்று அந்த விழாவில் அண்ணா உரையாற்றி மகிழ்ந்தார் என்றால்; முதன்முதலாகக் கழகம் பெற்ற மிகப் பெரும் வெற்றி அது என்பதால்தான்!

நாமாவது பதவிகளுக்கு வருவதாவது - என்று நம்பிக்கை இழந்திருந்த காலம்!

இதுகளுக்கு நகர மன்றம், சட்ட மன்றம், பாராளுமன்றம் இவையெல்லாம் ஒரு கேடா எனக் கோபுரத்துக் கலசங்களாகத் தம்மை எண்ணிக் கொண்டோர் நம்மைப் பார்த்துக் கேலி செய்த காலம்!

அந்தக் காலத்தை மாற்றியமைத்து, சாதாரணமானவர்களும், சாமானியர்களும், சாதியில் மிக உயர்ந்த இடத்தில் இல்லாதோரும் பதவிப் பொறுப்புகளுக்கு வர முடியுமெனக் காட்டுவதற்குத் திராவிட இயக்கம் ஏற்றுக்கொண்ட அடக்குமுறை, ஏச்சு, பேச்சு, இன்னல், இடையூறு ஏராளம்! ஏராளம்!

உடன்பிறப்பே, இதோ ஒரு குரல் அமெரிக்க நாட்டு நகரிலிருந்து கேட்கிறது; கொஞ்சம் உற்றுக்கேள்! ஏறத்தாழ நமது குரலைப் போலவே இருக்கும்!

ஜனவரி முதல் நாள்! புத்தாண்டு தினம்! நியூயார்க் நகரத்தில் பல்லாயிரவர் கூடிய கூட்டத்தில் ஒருவர் பேசுகிறார்! அன்றைக்குத்தான் அவர் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்! அதாவது இந்த ஆண்டு!

நான் மேயராகப் பொறுப்பு ஏற்கும் இந்த நாள், சாதாரண அதிகார மாற்றம் மட்டுமல்ல; நமது மக்களின் உரிமை வேட்கைப் பாதையில் மற்றொரு மைல் கல்லாகும்! கடந்த காலத்தில் நமது இனத்தின் நிலையைத் திரும்பிப் பார்க்கிறேன். அடிமைகளாகப் பிடிக்கப்பட்டு, கை கால்களில் விலங்கு பூட்டப்பட்டு, அடிமைக் கப்பல்களில் அமெரிக்காவுக்குக் கொண்டுவந்து சேர்க்கப்பட்டவர்கள் நாம்! அந்தக் கொத்தடிமை இனத்தில் ஒருவனான நான், இன்றைக்கு இந்தப் பெரிய நகரமான நியூயார்க்கிற்கு மேயராகியிருக்கிறேன் என்பதை நினைக்கும்போது புல்லரிக்கிறது.

இப்படிப் பேசியவர் பெயர் டேவிட்-டிங்கின்ஸ் - நீக்ரோ இனத்தவர்! நியூயார்க் பெருநகரின் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்! கியூலியானி என்ற வெள்ளையரை - பிரபலமான வக்கீலைத் தோற்கடித்தவர்!

வெற்றி பெற்ற நீக்ரோ மேயருக்கு மெய்சிலிர்க்கிறது - கடந்த காலத்தைத் திரும்பிப் பார்த்துக் குரல் தழுதழுக்கப் பேசுகிறார்; நான் அடிமைகளின் பரம்பரை என்று!

வெள்ளையர் சிலரும் அவருக்கு வாக்களித்து வெற்றிக்குத் துணைநின்றனர் என்கிறது செய்தி!

இருப்பினும், ஏனைய வெள்ளையர் எரிச்சல் கொண்டே எதிர்த்துப் பார்ப்பார்கள்! என்ன என்ன நடக்குமோ யார் கண்டார்கள்!

நமது இனத்தில் நான் மேயராகிவிட்டேன் என்கிறார் நியூயார்க்கில் ஒரு நீக்ரோ பெருமகன்!

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இங்கே அச்சகத் தொழிலாளியான நமது அ.பொ. அரசு மேயராகவும், குடிசையில் வாழ்ந்த சிவசங்கரன் துணை மேயராகவும் வாகை சூடியபோது திராவிட இயக்கம், தன்னைத் திரும்பிப் பார்த்துக் கொண்டு, கண்களில் ஒளிமழை பொழிய நின்றது!

நியூயார்க்கில் டேவிட்-டிங்கின்ஸ் மேயராக வென்று பேசிய பேச்சு, நமக்கு 1959-ஐ நினைவுபடுத்துகிறது!

அ.பொ. அரசை நினைவுபடுத்துகிறது! ஏன்; அதைத் தொடர்ந்து 67-ஆம் ஆண்டிலும் 71-ஆம் ஆண்டிலும் அமைந்த நமது அரசையும் நினைவுபடுத்துகிறது! இப்போது 89-ஆம் ஆண்டில் அமைந்துள்ள அரசையும் நினைவுபடுத்திடத் தவறவில்லை!

நியூயார்க் மேயர் டேவிட்-டிங்கின்ஸ் அவர்களின் நிலையும் நினைப்பும்தானே நமக்கும் என்கிறபோது எத்துணை பொருத்தம் என எண்ணிப் பெருமூச்செறிகிறோம்! பெருமிதம் கொள்கிறோம்!

செய்தியாக இதனைப் படித்தேன்; உன் சிந்தையைக் கிளறுமே என்பதற்காகக் கடிதமாகச் சித்தரித்தேன்.

அரிமா நோக்கு என்பார்களே; அதுபோல அறுபதாண்டுக் காலத்திற்கு மேற்பட்ட திராவிட இயக்க வரலாற்றை திரும்பிப்

பார்த்துவிட்டு, தீரர்களாம் தி.மு.கழகக் கண்மணிகள் ஒளிபடைத்த விழியினராய் நடை போட வேண்டுமென்பதற்காகத்தானே திருச்சியில் மாநிலப் பொது மாநாடு! அரசியல் மாநாடு மட்டுமல்லவே; சமுதாய, சமதர்ம மாநாடுமன்றோ இளைஞர் அணி சார்பாக முதல் நாள் நடைபெறுகிறது!

அன்புள்ள,

மு. க.

04-01-1990

1635. மக்கள் சக்தியை மையமாகக் கொள்வோம்!

உடன்பிறப்பே,

திருச்சி மாநாட்டுக்கான பணிகள் களைகட்டத் தொடங்கிவிட்டன. கழகத் தொண்டர் அணி மற்றும் இளைஞர் அணிச் செயலாளர்களான தம்பிகள் மிசா. கணேசன், மு.க.ஸ்டாலின் ஆகியோர் மாநில மாநாட்டு அணி வகுப்பு ஊர்வலத்துக்கும், மாநாட்டு அலுவல்கள், மற்றும் பாதுகாப்புகளைக் கவனிப்பதற்கும் மாநில முழுவதுமிருந்து செயல்மறவர்களாம் நமது தொண்டர் படையினர், இளைஞர் அணியினர் சிறந்த பயிற்சியுடன் கலந்து கொள்வதற்கான ஆலோசனைக் கூட்டங்களை சென்னையிலும் மற்ற மாவட்டத் தலைநகர்களிலும் ஏற்பாடு செய்துள்ளார்கள். அஃதேபோல் முதல் நாள் (பிப்ரவரி 9-ஆம் நாள்) வெள்ளிக்கிழமை நடைபெறும் மாபெரும் எழுச்சிமிகு ஊர்வல அணிவகுப்பு, மாஸ்கோ செஞ்சதுக்கத்தில் நடைபெறும் இராணுவ அணிவகுப்புபோலவும் - டில்லித் தலைநகரில் குடியரசுதினத்தில் நடைபெறும் பட்டாள வரிசையின் பாங்கினை நிகர்த்ததாகவும் - அமைந்திடல் வேண்டுமென இளைஞர் அணியினர், தொழிலாளர் அணியினர், மாணவ அணியினர், மகளிர் அணியினர் - முழு முயற்சியில் இறங்கியுள்ளனர்.

கடல் பொங்கி ஊருக்குள் நுழைந்ததுபோல திருச்சியிலும் சரி; வேறு பல நகரங்களிலும் சரி - நாம், நமது பேரணிகளை நடத்தியிருக்கிறோம். ஒரு முறை கடற்கரைக் கூட்டத்தில் அண்ணா சொன்னார்;

இராயபுரத்தில் தொடங்கிய நமது ஊர்வலம் மட்டும் ஐந்து ஐந்து பேர்களாக அல்லது பத்துப் பத்துப் பேர்களாக நின்று அணிவகுத்து வந்திருந்தால் கடற்கரைக்கும், இராயபுரத்திற்குமாக இந்த ஊர்வலம் அமைந்திருக்கும் என்று!

அண்ணா சொன்னதைப்போல ஒரு முறை செய்து பார்க்க வேண்டுமென்று எனக்கு நீண்ட காலமாக ஆசை! அந்த ஆசை கோவை இளைஞர் அணி ஊர்வலத்தில் ஓரளவு நிறைவேறியது! முழுமையாக நிறைவேற, திருச்சியைத்தான் எதிர்பார்த்திருக்கிறேன்!

அழகான அணிவகுப்பு - பாசமிகு உடன்பிறப்புகள், பட்டாள நடை நடந்து - தாம்பெற்ற பயிற்சியை பெருமிதம் கொள்கிற அளவுக்கு உணர்த்தினர் - இருபுறமும் அரண் எழுப்பியது போன்று லட்சோபலட்சம் மக்கள் ஒழுங்கு குலையாமல் ஊர்வலத்தில் பங்கேற்றனர் - அவர்களுக்கிடையே வகைப்படுத்தி வெட்டப்பட்ட கவின்மிகு கால்வாயில் சீராக விடப்பட்ட வெள்ளம்போல அணி அணியாக நமது கண்மணிகள் வந்தனர் - என்று கூறிக் களித்திட மட்டுமல்ல; நமது கழகத்தின் கட்டுப்பாடு எத்தகையது - அது எதிர்காலத்திலும் எப்படி அமைய வேண்டும் என்பதற்காகவும்கூட!

மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் தம்பி செல்வராஜ், மாவட்டப் பொருளாளரும், மாநாட்டுப் பொருளாளருமான தம்பி மலர்மன்னன், துணைச்செயலாளர்களில் ஒருவரான தம்பி சிவசுப்பிரமணியன் நிதிக்குழு உறுப்பினர்களில் ஒருவரான திருச்சி பாலகிருஷ்ணன், மாநாட்டு செயலாளர்களில் ஒருவரான அமைச்சரான நேரு, ஊர்வலக் குழு சார்பில் தம்பி பொய்யாமொழி, சேக் முகமது ஆகியோர் சென்னை வந்து என்னையும் பொதுச்செயலாளரையும் சந்தித்து, மாநாட்டுக்கான முன்னேற்பாடுகள் குறித்து கலந்து ஆலோசித்தனர்!

ஆளுங்கட்சியாக நாம் இருக்கிறபோது, நடத்துகிற மாநாடு என்பதால் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அதிகாரத்தை எந்த வகையிலும் துஷ்பிரயோகம் செய்யாமல்; நடுநிலையிலிருந்து நோக்குவோர் அனைவரும் பாராட்டத்தக்க வகையிலே மாநாடு நடத்தப்பட வேண்டுமென்பதிலே மிக அக்கறை கொண்டுள்ளேன்.

ஆடம்பர அலங்காரங்கள், ஆர்ப்பாட்டங்கள், அறவே கூடாது! எளிமை தேவை! எழுச்சி தேவை! இது மாநாட்டிலே மட்டுமல்ல, நமது அன்றாட நடவடிக்கைகளிலேகூட என்று பலமுறை கூறியுள்ளேன்!

வரவேற்பு வளைவுகளா? கொள்கை முழக்கிடும் வாகான பதாகைகளா? கொடிகளா? தோரணங்களா? சுவர்களில்

விளம்பரங்களா? அவற்றுக்கெல்லாம் ஆட்கள் வைத்துப் பணியாற்றுவதைக்காட்டிலும், அங்கெல்லாம் நமது கழக உடன்பிறப்புகளே; உடலுழைப்பு வழங்கித் தொண்டாற்றுவதைக் காண்பதில்தான் எனக்கு உற்சாகம் கரை புரளும்!

எனக்கேகூட அப்படியெல்லாம் தொண்டு செய்திட அளவிட முடியாத விருப்பம்! வாலிபப் பருவத்தில் திருவாரூர் சுவர்களில் விளம்பரச் சுவரொட்டிகளைப் பசை தடவி ஒட்டிய கரங்கள் தானே இந்தக் கரங்கள்!

எனவே, நாமே உழைத்து, நமது வியர்வையைச் சிந்தி, நமது மாநாட்டை மட்டுமல்ல; நமது கழக நிகழ்ச்சிகள் அனைத்தையும் நமது உழைப்பின் வெற்றிச் சின்னங்களாக ஆக்கிட வேண்டும்!

மாநாட்டுக்கான நுழைவு நன்கொடை சீட்டுகள் அச்சாகிக் கொண்டிருக்கின்றன! அவற்றில் பத்து ரூபாய்க்கான நன்கொடை சீட்டுகள், முன்கூட்டியே ஒவ்வொரு மாவட்டத்துக்கும் அனுப்பி வைக்கப்பட இருக்கின்றன! உதாரணத்திற்குச் சொல்கிறேன்; ஒரு மாவட்டம் - ஐம்பதாயிரம், பத்து ரூபாய் நன்கொடை சீட்டுகளை மாவட்ட முழுவதும் கிராமம் கிராமமாகச் சென்று யாரையும், எவரையும் வற்புறுத்தாமல் வழங்கி வசூல் செய்து தந்தால் அந்த ஒரு மாவட்டத்தின் வாயிலாகவே ஐந்து லட்ச ரூபாய் மாநாட்டுக்கு வந்து சேரும்!

ஐம்பதாயிரம் பேரை சந்தித்து உரையாடுகின்ற வாய்ப்பும், கழக அமைப்புகளின் நிர்வாகிகளாம் நமது அன்பு உடன்பிறப்புகளுக்குக் கிட்டும்!

எனவே மக்கள் சக்தியொன்றை மட்டும் மையமாகக் கொண்டு, அவர்களின் முழுப் பங்கு மாநாட்டுக்கு மாத்திரமின்றி - கழகத்தின் எதிர்கால இலட்சிய வெற்றிகளுக்கு வாய்த்திடும் வண்ணம் பணியாற்றிடுவோம்!

திருச்சி மாநாடு, அதற்கான திருப்புமுனையாக இருக்குமென நான் முன்பே குறிப்பிட்டிருக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

06-01-1990

1636. அரசியல் தேருக்கான அச்சாணிகள் அமைத்திட...!

உடன்பிறப்பே,

கடந்த ஒருவார காலமாகவே திருச்சிமாநில மாநாட்டுக்கான பணிகள் குறித்துத் தலைமைக் கழகத்தில் உள்ள அலுவலாளர்களுடனும், திருச்சியிலிருந்து ஆலோசனை கலந்திட வருகின்ற கழக முன்னணியினருடனும் காலை மாலை இருவேளைகளிலும் பேசிக் கொண்டிருக்கிறேன். நேற்று அன்பில் வந்திருந்தார். அவருடன் மாநாட்டுச் செயலாளர்கள் வந்திருந்தனர். மாநாட்டுக்கென திருச்சி மன்னார்புரத்தில் அமைய இருக்கின்ற அண்ணாநகர் எத்தனை சதுர அடிகள் பரப்பளவு கொண்டதாக இருக்கும் என்பதையும் - அதில் உருவாகப் போகிற எம்.ஆர். கிருஷ்ண மூர்த்தி பந்தலும் - அழகமுத்து அரங்கமும் எத்தனை சதுர அடிகள் கொண்டதாக இருக்க வேண்டும் என்பதையும் அன்பிலுடனும், செயலாளர் தம்பி நேருவுடனும் விவாதித்தேன். அரங்கம் எப்படி இருந்திட வேண்டும் - முகப்புப் பொலிவு பந்தலில் எங்ஙனம் விளங்கிட வேண்டும் - கழகத் தியாகிகளின் பெயரால் வரிசையாகத் திகழ இருக்கும் தோரண வாயில்கள் எளிமையும், எழிலும், எழுச்சியையும் கொண்டு எவ்வாறு கட்டப்பட வேண்டும் - என்பன போன்ற பல பணிகளைப் பற்றிப் பேசி முடித்தோம்.

பிப்ரவரி 9, 10, 11 - வெள்ளி, சனி, ஞாயிறு கிழமைகளில் மாநாடு - அதனையொட்டி முதல் நாள் வெள்ளிக்கிழமை மாலையில் மாபெரும் அணிவகுப்பு ஊர்வலம்! அன்று காலையில் கழகத்தின் பொதுக்குழு கூடுகிறது - அநேகமாக மாநாட்டுப் பந்தலிலேயே ஒரு பகுதியில் பொதுக் குழு கூடும். மாநாட்டில் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்கள் குறித்துப் பொதுக்குழு விவாதிக்கும், மாநில மாநாடல்லவா? அது மட்டுமல்ல, இந்தப் பொதுக்குழுவில் கழகத்தின் வரவு செலவுக் கணக்குகள் வைக்கப்பட்டு பொதுக்குழுவின் ஒப்புதலைப்பெற வேண்டும். எனவே தலைமைக் கழகத் தணிக்கைக்குழு உறுப்பினர்கள் விருத்தாசலம் செல்வராசு, தம்பிகள் ரகுமான்கான், கதிரவன்,

மா. சுப்பிரமணியன், எம்.வி. இராமு ஆகியோர் பல நாட்களாகக் கணக்குகளைத் தணிக்கை செய்து, நேற்று என்னிடமும் கழகப் பொருளாளர் சாதிக் அவர்களிடமும் அறிக்கையை அளித்து, அதனையொட்டிய கருத்துக்களையும் வழங்கி உள்ளனர்.

மாநாட்டில் நடைபெற வேண்டிய நாடகங்கள் குறித்து நானும் நமது கொள்கை விளக்க அணிச் செயலாளர் கந்தப்பனும் - தம்பி டி.என். கிருஷ்ணனும் - பேசினோம். மூன்று நாட்களும் மூன்று நாடக நிகழ்ச்சிகள், நமது கொள்கை விளக்க ஜோதிகளாக அமைந்திடல் வேண்டுமன்றோ? நண்பர் போலீஸ் கண்ணன் இயக்கப் பிரச்சார நாடகமொன்றைத் தயார் செய்திருப்பதாகக் கூறினார். மேலும் இரண்டு நாடகங்கள், அறிஞர் அண்ணா எழுதிய சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் - நான் எழுதிய மணி மகுடம் நடத்தலாம் என்று முடிவு! மாநாட்டுக்கு இடையே குறுகிய காலம்தான் இருக்கிறது! பழைய நாடகங்கள் எனினும் புதிதாக ஒத்திகை போன்றவை நடத்திட வேண்டுமல்லவா?

நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள், திரைப்படங்கள் வாயிலாகத்தான் நமது திராவிட இயக்கக் கொள்கைகளை வளர்த்தோம் என்பதைப் பலர் மறந்தேவிட்டனர்! ஏன், ஒரு அந்தக் கொள்கைகளையே மறந்துவிட்டனர் என்று கூடக் கூறலாம்!

சமுதாயப் புரட்சி என்ற அடிப்படையில் கட்டப்படும் அரசியல், பொருளாதார தத்துவங்களின் மாளிகைதான் வலிவு கொண்டதாக இருக்க முடியும் என்பது நமது திராவிட இயக்கத்தின் - ஆரம்பகாலந்தொட்டு முழக்கப்பட்டு வருகிற கொள்கை முழக்கமாகும்!

சாதி சாதி என்று பேசுகிறீர்களே, பாதிக்குதே பசி என்றுரைத்து வீதியிலே புரளும் வடக்கு மலைப்பரதேசிக்கு உங்கள் சாதி, சாதித்த நீதி என்ன? பேதியும் பீதியும் சேரிகளுக்கென்று ஒதுக்கியது உமது சாதியல்லவா! போதிமரத்துப் புத்தன் புலம்பியதும், ஆதி மகனாம் வள்ளுவன் அலறியதும் சாதி ஒழிய வேண்டுமென்றுதானே!

இப்படியொரு உரையாடல் - அன்றைக்கு நான் எழுதி, நடித்த தூக்குமேடை நாடகத்தில்!

சாலையோரத்தில் வேலையற்றதுகள்! வேலையற்றதுகளின் உள்ளத்திலே விபரீத எண்ணங்கள்! வேந்தே! அதுதான் காலக்குறி!

இது அறிஞர் அண்ணா அவர்களின் சொர்க்க வாசல் திரைப்படத்திலே!

சமுதாயம் திருந்தி முன்னேற சாதி பேதமற்ற சமத்துவ நிலை வேண்டுமென்பதையும் - பொருளாதார ஏற்றத்தாழ்வு அகன்று, எல்லார்க்கும் எல்லாமென ஆகிடும் சமதர்மக் குறிக்கோள் வென்றிட வேண்டுமென்பதையும், மேற்கண்ட இரு உரையாடல்களும் விளக்கின! எத்தனையோ இதயங்களில் பதிய வைத்தன! ஆனால் இன்று தமிழ்நாட்டின் விபரீத அரசியல் விபத்தில் அந்த இலட்சிய முரச ஒலிகள் எல்லாம் எங்கேயோ தொலை தூரத்தில் நமக்குத் தொடர்பில்லாத இடத்திலிருந்து கேட்பவைகளாக ஆகி விட்டன!

அந்த இலட்சியங்களுக்கு இந்த இயக்கத்தினர் மிக நெருக்கமானவர்கள் என்பதை நினைவூட்டவும் - நினைவூட்டியதை இளைய தலைமுறையின் நெஞ்சில் ஆழமாக நிலை நிறுத்தவும்தான் - இரண்டாம் நாள் மாநாடு, சமுதாய சமதர்ம மாநாடாக அதுவும் இளைஞர் அணி மாநாடாக நடைபெறுகிறது! ஆம், சமுதாயப்புரட்சிக்கான சங்கநாதம் ஒலிப்பர்! சமதர்ம பேரிகை கொட்டுவர்! பகுத்தறிவுப் பேரொலியெழுப்பிடுவர்! இவற்றுக்கென உழைத்திட்ட உலகைத் திருத்திய உத்தமர்களின் வரலாறுகளை எடுத்துரைப்பர்! அந்த ஆற்றல் மிகு தீரர்கள்! அறிவுசால் இளைஞர்கள்! எதிர்காலத்து சிற்பிகள்! இலட்சியத் திருவிளக்குகள்! பீடுநடைபோடுவர்! வருங்காலச் சமுதாயம் பற்றிய பெரும் நம்பிக்கையை நமக்கு வழங்குவர்!

இன்றைக்கே பாரேன், ஏடுகளில் இரண்டு செய்திகள்! மக்களின் அறிவை மழுங்கச் செய்து, மூடத்தனத்தின் முடைநாற்றத்தில் அவர்களை மூழ்கிட வைக்கும் செய்திகள்! இன்னமும் நடக்கின்றனவே நாட்டில்!

அண்ணாநகரைச் சேர்ந்த ஒரு பிரபல டாக்டர் - அவரை அணுகி ஒரு மாயாவி ஆவியுடன் பேசுவேன், ஆவியை வரவழைப்பேன் எனப்பயமுறுத்தி, ஐநூறு ரூபாய் அபகரித்துக் கொண்டு போயிருக்கிறான். பிறகு போலீசில் சிக்கியிருக்கிறான்.

ஆவியுடன் பேசுவேன் என்று ஒரு சூதன் சொன்னதை பிரபல டாக்டர் நம்பினார் - ஐநூறு ரூபாய் இழந்தார் - அவர் வாழுமிடமோ அண்ணா நகர்! அண்ணாவின் பெயருக்கே இழிவல்லவோ இது?

தாம்பரத்துக்கருகே இரும்புலியூரில் ஒரு வீட்டில் உள்ள சிவலிங்கம் சிலையிலிருந்து தண்ணீர் வடிந்து கொண்டிருப்பதாக ஒரு புரட்டுச் செய்தி! நிருபர்கள் சென்று ஆராய்ந்து பார்த்தனர்! பொய்ச்செய்தி எனப் புரிந்து கொண்டனர்! இருந்தாலும் இன்னமும் மக்களில் சிலர் இரும்புலியூர் சிவலிங்கத்தை நாடிச்சென்று கொண்டுதானிருக்கின்றனர்! இதுவும் பத்திரிகைகளில் வந்ததுதான்! பகுத்தறிவு எப்படிப் பாழாகிறது பார்த்தாயா?

என் செய்வது, உத்திரபிரதேசத்தில் தேவ்ரஹ பாபா என்று ஒரு மகான்! எப்போதும் நிர்வாணம்தான்! அந்தப் பிறந்தமேனிப் பெம்மானிடம் சென்று அவர் காலால் உதைபட்டு ஆசி பெற்றவர்கள் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி! பாராளுமன்ற முன்னாள் சபாநாயகர் பல்ராம் ஜாக்கர்! முன்னாள் உள்துறை அமைச்சர் பூட்டாசிங்! யாராயிருந்தாலும் அவர்கள் தலையில் காலால் உதைத்துத்தான் அந்த மகான் ஆசி வழங்குவார்! அவர் ஆசி பெற்றுத் தேர்தலில் நின்ற ராஜீவ்காந்தி, ஆட்சி இழந்தார்! பல்ராம் ஜாக்கரும், பூட்டாசிங்கும் தேர்தலில் வெற்றியையே இழந்தனர்!

இருந்தபோதிலும், இன்னமும் இந்த பகுத்தறிவுக்கு ஏலாத நம்பிக்கைகள் நாட்டில் கொடி போட்டுக் கொண்டுதானிருக்கின்றன!

இத்தாழ் நிலையை சுட்டிக்காட்டிட நாம் தவறினால், களையெடுக்காத கழனியாகும் நாடும் நமது சமுதாயமும்! சமுதாய மாற்றம் - சமதர்மப் பார்வை - இவையிரண்டும் அரசியல் தேருக்கான அச்சாணிகளாக இருந்திடல் வேண்டும்!

அந்த அரசியல்தான் ஆணிவேர் விட்ட ஆயிரம் விழுது ஆலமரமாக அழுத்தம் திருத்தமாக மன்னர்க்கிருக்க நிழலாக அல்ல, மக்களுக்கிருக்க நிழலாக விளங்க இயலும்!

அந்தத் திருப்பத்தைக் காணவே திருச்சி மாநாட்டுக்கு உன்னையும் உன்போன்ற உடன்பிறப்புகளையும் குடும்பம் குடும்பமாக வாரீர் என்று அழைக்கிறேன். நிச்சயம் வருவாயல்லவா?

அன்புள்ள,

மு. க.

08-01-1990

1637. ஈழத்தமிழர் பிரச்சினை - நமது அணுகு முறை!

உடன்பிறப்பே,

திருச்சி மாநில மாநாட்டுக்கான பத்து ரூபாய் நன்கொடைச் சீட்டுகளைப் பரவலாகப் பலரிடம் வழங்கி, நிதி திரட்டும் பணியை மாவட்ட அளவில் - ஒன்றியக் கழக அளவில் - கிளை அமைப்புகள் அளவில் - தொடங்கியிருப்பாய் என்று நம்புகிறேன். திருச்சியில்தான் மாநாடு நடைபெறுகிறது எனினும், தமிழகம் முழுதும் - ஏன்; புதுவை, கர்நாடகம், ஆந்திரம், கேரளம் ஆகிய மாநிலங்களிலும் - பம்பாய் ஆமதாபாத் போன்ற பகுதிகளிலும் - அந்தமானிலும் - அனைத்து நாடுகளிலும் தமிழர்கள் வாழும் எல்லா இடங்களிலும் மாநாட்டுக்கான ஆர்வமிக்க பணிகள், பயண ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக எனக்கு நாள்தோறும் எத்தனையோ உடன்பிறப்புகள் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

எது முக்கியமான அலுவல் என்று பிரித்தெடுக்க இயலாமல் ஒவ்வொன்றும் முக்கியமானதாகவே, என் பொது வாழ்க்கையில் போட்டி போட்டுக் கொண்டு - ஓய்வு என ஒன்றையே அறிய முடியாதவனாக என்னை ஆக்கியுள்ளன என்பதை நீ அறிவாய்!

இப்போது பாரேன்; திருச்சி மாநாட்டுக்கான கலந்துரையாடல்கள் - அவற்றையொட்டிய பணிகள் - உனக்கு நாள்தோறும் எழுதும் விளக்க மடல்கள் - ஒத்திப்போட முடியாமல் உடனுக்குடன் நிறைவேற்றிட வேண்டிய அரசுப் பணிகள் - குவிந்து போய்விடாமல் பார்த்து முடிக்க வேண்டிய கோப்புகள் - இத் திங்கள் 18ஆம் நாள் ஆளுநர் உரை, அதனைத் தொடர்ந்து சட்டமன்ற கூட்டத் தொடர் - பிப்ரவரி முதல் வாரத்தில் மத்திய திட்டக்குழுவுடன் பேசி, இந்த ஆண்டுக்கான மாநில திட்டத்தை வரையறுப்பதற்கான அதிகாரிகள் மட்டத்து விவாதங்கள் - இத்தனைக்குமிடையே ஈழத் தமிழர் பிரச்சினை - அதற்கென

மணிக்கணக்கில் செலவழிக்கப்படும் நேரம் - இப்படி எல்லாமே முக்கிய பிரச்சினைகள்தானே!

உன் முகத்தைப் பார்க்கிறேன் என்பதால் நெஞ்சில் ஏற்படும் சுகமும், எங்கோ ஒரு இடத்தில் தொலைவில் இருந்தாவது என்னை நினைத்துக் கொண்டிருக்கும் ஒரு உடன்பிறப்பு நீ இருக்கிறாய் என்பதால் இதயத்தில் விழுது விட்டிறங்கும் இனிய ஆறுதலும்தானே என்னை இத்தனை பணிகளிலும் அயர்வு நெருங்கிடா வண்ணம் இயக்கிக் கொண்டிருக்கின்றன!

ஈழத் தமிழர் பிரச்சினையில் நல்ல முடிவு ஏற்படுமா? என்று நீயும், உன்னைப் போலவே உலகின் பல பகுதிகளில் வாழும் தமிழர்களும் அடங்காத ஆவலுடன் எதிர்பார்க்கிறீர்கள்! நானும் கூடத்தான்! ஒரு நல்ல முடிவை எய்திட வேண்டுமென்பதற்காகவே போராளிக் குழுக்களின் தலைவர்கள், பிரதிநிதிகள் மற்றும் தமிழ ஈழத்தைச் சேர்ந்த முக்கியமான பிரமுகர்கள் அனைவருடனும் இடையிடையே பிரதமர் வி.பி. சிங் அவர்களிடமும் ஒரு மாத காலத்திற்கு மேலாக இடைவிடாது பேசிக் கொண்டிருக்கிறேன்.

1983 முதல் உச்ச கட்டத்திற்குச் சென்றுவிட்ட வேதனையான தொடர் நிகழ்ச்சியல்லவா அது! இலங்கையில் ஏற்பட்ட இனப்படுகொலையின் விளைவாக அன்று முதல் வந்த அகதிகள் - பதிவு செய்து கொண்டவர்கள், இன்னமும் பதிவு செய்து கொள்ளாதவர்கள் என்ற பழைய கணக்கின்படியே சுமார் ஒரு லட்சம் பேர் தமிழகத்தின் பல பகுதிகளில் பரவிக் கிடக்கிறார்கள். எதிர் காலத்திலும் அங்கே விரும்பத்தகாத விளைவுகளால் - குறிப்பாக சகோதர யுத்தத்தினால் - இன்னும் எத்தனை அகதிகளைத் தமிழகம் தாங்க வேண்டி நேரிடுமோ; எத்தனை பேர் அங்கு ரத்தம் சிந்த வேண்டுமோ; என எண்ணிப் பார்க்கவே அச்சமாக இருக்கிறது!

தமிழகத்தில் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், டெல்லிக்குச் சென்று பிரதமர் ராஜீவ்காந்தியை ஈழத் தமிழர் பிரச்சினைக்காகவே நான்கு முறை சந்தித்தேன். அந்த சந்திப்புகளின் விளைவாக நல்ல முடிவுகள் ஏற்படும் என்ற நம்பிக்கை அரும்புவிட்டபோது - தமிழகத்தில் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட அரசியல் காழ்ப்பு உணர்வுகளால்; கழக அரசின்

ஒத்துழைப்பையே ஈழத் தமிழர் பிரச்சினையில் ராஜீவ் அரசு ஏற்றுக் கொள்ள முடியாத நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

வேதனை என்னவென்றால், இங்குள்ள கட்சி அரசியலுக்கும் தேர்தல் உடன்பாட்டுக்கும் தரப்பட்ட முக்கியத்துவம், கட்சி அரசியலுக்கும் அப்பாற்பட்டு ஈழத் தமிழர் பிரச்சினையில் கழக அரசு, ராஜீவ் அரசுடன் பொது நோக்குடன் ஒத்துழைக்கவும் - அங்கேயொரு சகோதர யுத்தம் மூண்டிடாமல் தடுக்கவும் - நிலையான அமைதியைத் தமிழ் ஈழத்தில் கொண்டு வரவும் - நீட்டிய கரத்தை அலட்சியப்படுத்திட வைத்துவிட்டது!

தமிழ்நாட்டு அரசியலையும் - ஈழத் தமிழர் பிரச்சினையையும் - ஒன்றாக நோக்கிக் குழப்பியதால் ஏற்பட்ட விளைவு அது!

அரசியல் - தேர்தல் - கட்சி உறவுகள் - உடன்பாடுகள் - இவைகளையெல்லாம் பற்றிக் கவலை கொள்ளாமல், மத்திய மாநில அரசுகளின் கடமைகள் என்ற முறையிலே கழக அரசு ஆற்றுவதற்கு முன்வந்த நல்லெண்ணம் வாய்ந்த முயற்சிகள் ராஜீவ் காந்தி அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத ஒரு சூழ்நிலையை சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் திட்டமிட்டு உருவாக்கி மகிழ்ந்தனர். அந்த அரசியல்வாதிகளுக்கு அற்ப மகிழ்ச்சி! ஆனால் நமக்கு அருகாமையிலே ஒரு தீவில் வாழும் நமது இன மக்களின் எதிர்காலம் இன்னமும் கேள்விக் குறி!

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நடந்தவைகளை மறந்துவிட்டு இனி நடக்க வேண்டியவைகளை கவனிப்போம் என்ற முடிவுடன், ராஜீவ் காந்தி அவர்களுக்குக் கழக அரசின் சார்பில் நான் சில கருத்துக்களை முன்வைத்து இயன்ற செயல்பாடுகள் குறித்து ஆலோசனைகளைக் கூறினேன் என்றாலும்; ராஜீவ் காந்தியும் அவருடைய அரசும், அந்த அரசின் அதிகாரிகளும் இனி நடக்க வேண்டியவைகளில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக - முதலில் அவர்களால் நடத்தப்பட்ட தவறுகளுக்கு நியாயம் கற்பிப்பதிலேயே அதிக அக்கறை காட்டினர்.

இந்தியாவில் உள்ள தொலைக்காட்சியும், வானொலியும் - இலங்கைத் தமிழர்களுக்காக ராஜீவ்காந்தி அவர்களின் அரசு, ஒரு சொர்க்கலோகத்தையே சிருஷ்டித்துக் கொடுத்து அதற்கு வடகிழக்கு மாநிலம் எனப் பெயர் சூட்டியிருப்பதாகவே நாள்தோறும் பறைசாற்றிக்கொண்டிருந்தன.

ஆயுதம் தேடல் என்ற பெயரால் விடுதலைப் புலிகளையும் - அப்பாவித் தமிழர்களையும் அமைதிப் படையினர் தாக்கவும், கொன்று குவிக்கவுமான நிலை!

அதனைத் தொடர்ந்து போராளிக் குழுக்களுக்கிடையே சகோதர யுத்தம்!

இட்லர் தூண்டிய உலகப் போரில் கோயபல்ஸ் நடத்திய பிரச்சாரத்தையும் மிஞ்சுகிற வகையில் தொலைக்காட்சி, வானொலிகளில் பொய்ப் பிரச்சாரம்! அதிகாரபூர்வமான அண்டப்புளுகுச் செய்திகள்!

பிரபாகரன் கொல்லப்பட்டு, பிணம் வீசியெறிப்பட்டுவிட்டது என்றே செய்தி வெளியிடப்பட்டது!

வடகிழக்கு மாகாண சபைக்கு இலங்கை அரசு எந்த அதிகாரமும் கொடுக்கவில்லையென்று அந்த மாகாண முதலமைச்சர் வரதராசப் பெருமாளே கூறியபோது;

அதை மறுத்து; அங்கே மாநில சுயாட்சியே கொடுக்கப்பட்டுவிட்டது என்று இங்கே தமிழ்நாட்டுத் தலைவர்கள் சிலரைக் கொண்டு, தொலைக்காட்சியிலும் - வானொலியிலும் பேச வைக்கப்பட்டது!

1987 ஆகஸ்டு 2-ஆம் நாள் சென்னைக் கடற்கரை கூட்டத்தில்;

1983-ஆம் ஆண்டு தமிழர்கள் வைத்த மூன்றாம் இணைப்புக் கோரிக்கைகளைவிட அதிகமாகவே இப்போது வழங்கப்படுகிறது. இந்திய அரசின்கீழ் இருக்கும் மாநிலங்கள் போன்றே மாநில சுயாட்சி உரிமையும் அவர்களுக்கு உண்டு

என்று ராஜீவ்காந்தி; இந்திய இலங்கை ஒப்பந்தம் குறித்து சிலாகித்துப் பேசினார் அல்லவா அதையேதான் கடைசி வரையில் பேசிக்கொண்டிருந்தார்.

ஏன்? நாடாளுமன்றத்திலும், மாநிலங்களவையிலும் நமது கழக உறுப்பினர்கள் இலங்கை வடகிழக்கு மாநிலமான தமிழ்ப் பகுதிக்கு எந்த அதிகாரமும் வழங்கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டிப் பேசியபோது ராஜீவ்காந்தி பலமுறை அதனை மறுத்து;

"They have got more than what they wanted"

அவர்கள் கேட்டதைவிட அதிகம் பெற்றுள்ளார்கள்

என்று அழுத்தம் திருத்தமாகப் பதில் அளித்துள்ளார்.

ஆனால் இங்கு வந்து என்னைச் சந்தித்த வட கிழக்கு மாநில முதலமைச்சர் வரதராசப் பெருமாள் அவர் வாயாலேயே என்ன சொல்கிறார்?

மழை நீர் பாயும் குளங்கள் மட்டும்தான் மாநில அரசுக்குச் சொந்தம்! நதி நீர் பாயும் குளமானால் அது மத்திய அரசுக்குச் சொந்தம்

மாநில அரசுக்கு உரிமையான ஒரு சிறிய தெருவில், ஒரு தபால் நிலையம் வந்துவிட்டால் - அந்தத் தெரு தேசிய நெடுஞ்சாலையாக ஆகி, மத்திய அரசுக்குச் சொந்தமாகிவிடும்

பள்ளிக் கூடமும், பள்ளிக்கூட ஆசிரியர் நிர்வாகமும் மாநில அரசின் பொறுப்பு! ஆனால் அந்த ஆசிரியர்களை தேர்வு செய்யும் பொறுப்பு மத்திய அரசுக்கு மட்டுமே!

போலீஸ் நிர்வாகம்கூட மத்திய அரசின் பிடியில்தான்! மாநில அரசை மதித்து டி.ஐ.ஜி. அளவிலே உள்ள ஒரு அதிகாரி பதில் கூறுவார்; அவ்வளவுதான்!

வடகிழக்கு மாகாண கௌன்சில் என்றுதான் அதிகாரபூர்வமான பெயரே தவிர, அரசாங்கம் என்ற பெயர் கூட அதிகாரபூர்வமாக கிடையாது!

இதைத்தான், அவர்கள் கேட்டதற்கு மேலாகக் கிடைத்துவிட்டது

என்று முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள் கடைசி வரையில் நம்மிடம் கூறிக் கொண்டிருந்தார்.

எல்லாம் நல்லவிதமாக முடிந்துவிட்டது - இரண்டு வருடத்தில் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளை தீர்த்துவிட்டோம் - என்றுதானே டிசம்பர் இறுதிக்குள் அமைதிப் படை வாபசாகிவிடும் என்று ராஜீவ் காந்தி இலங்கை அரசுக்கு உறுதியும் அளித்துள்ளார்!

உடன்பிறப்பே, இப்பொழுது புரிகிறதா - சிக்கலை உருவாக்கியவர்கள் யார் என்பதும், அந்தச் சிக்கலை மறைத்தே இதுவரையில் பிரச்சாரம் செய்தவர்கள் யார் என்பதும்?

இந்த உண்மையை யாரும் மறுக்க முடியாது! காரணம்; அவர்களின் பேச்சுக்கள், அறிக்கைகள் அனைத்துமே ஏடுகளில் அச்சேறியவை! டெலிவிஷன், ரேடியோக்களில் ஒளிப்பதிவும், ஒலிப்பதிவும் ஆனவை!

எனவே, இரண்டு ஆண்டுக் காலத்திற்கு மேலாக - ஈழத்தில் வடகிழக்கு மாநிலத்திற்கு, ராஜீவ் அரசு பெற்றுத்தர இயலாத அதிகாரங்களை இரண்டொரு மாதங்களில் தேசிய முன்னணி அரசு பெற்றுத் தருவதென்பது மிக எளிதல்ல! எளிதாகவே இருப்பினும் அதற்கு முன்னோடியாக நிறைவேற வேண்டியது - அங்கு நடைபெறும் சகோதர யுத்தம் நிறுத்தப்பட வேண்டியதாகும்!

அதற்கு நல்லெண்ண சமிக்ஞைகள் தேவை! அமைதி தவழ வேண்டும் என்ற ஆர்வமுடன் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை தேவை! உண்மையான ஜனநாயக ரீதி அணுகுமுறை தேவை! இவற்றில் அடிப்படையில்தான் எனது முயற்சிகள் தொடருகின்றன!

அந்த முயற்சிகள் குறித்தும், அவற்றுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், இன்னும் எடுக்க வேண்டிய செயல்பாடுகள் குறித்தும் - கழகத்தின் தலைமை நிர்வாகக் குழு, செயற்குழு மட்டுமின்றி; பொதுக்குழுவிலும் கலந்து பேசுவோமல்லவா?

திருச்சி மாநில மாநாட்டையொட்டி நடைபெறும் பொதுக்குழுவில் விவாதிக்கப்படும் விஷயங்களில் இதுவும் ஒன்றாக இருக்கும் என்பதில் சந்தேகமென்ன? இப்படி எல்லா வகையிலும் முக்கியத்துவம் வாய்ந்த மாநாடுதான் - திருச்சி மாநில மாநாடு?

அதனால்தான் உன்னை நான் கடித வாயிலாகத் தொடர்ந்து அழைத்துக் கொண்டிருக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

12-01-1990

1638. கொள்கை மலைக்கோட்டை காண வருக!

உடன்பிறப்பே,

* புத்தர் வழங்கிய புத்தொளி!
* வள்ளுவர் கண்ட சமுதாயம்!
* மார்க்ஸ் - அன்றும், இன்றும்!
* மகளிர் முன்னேற்றம்!
* சமுதாயப் புரட்சியில் இளைஞர்களின் பங்கு!
* திராவிட இயக்க முன்னோடிகள்!
* மொழிப்போர் தியாகிகள்!
* விஞ்ஞான வளர்ச்சியும் - மூட நம்பிக்கைகளும்!
* உலகைக் குலுக்கிய புரட்சிகள்!
* சங்க காலத் தமிழகம்!
* திராவிட இயக்கமும் தொழிற்சங்கமும்!
* தமிழன் என்றோர் இனம் உண்டு;
  தனியே அவர்க்கோர் குணம் உண்டு!
* சுயமரியாதை இயக்கமும், மனித உரிமைகளும்!
* கழகமும் சமுதாய சீர்திருத்தமும்!
* 21-ஆம் நூற்றாண்டில் நாம்!
* மாநில சுயாட்சியும் மக்களாட்சி மாண்பும்!
* உலகைத் திருத்திய உத்தமர்கள்!

என்ன இது? அடுக்கிக்கொண்டே போகிறாய் எனக் கேட்கிறாயா?

நமது கழகத்தின் மாநாடுகள் என்றாலே பல்வேறு தலைப்புகளில் கழக முன்னணியினர் உரையாற்றுவர் என்பதும் - அவைகள், மாநாட்டில் கலந்துகொள்ளும் இலட்சக்கணக்கானோர் உள்ளத்தில் புதிய ஒளி பாய்ச்சிடும் என்பதும் - அவர்கள் பெற்ற புத்தொளி, ஊர்தோறும் பரவி, பகுத்தறிவு தழைக்கவும், அரசியல் விழிப்புணர்வு ஏற்படவும் பயன்படும் என்பதும் வரலாறு!

அந்த உன்னதமான வரலாற்றில் ஏற்பட்ட தேக்கத்தைப் போக்கித் திருப்புமுனை உருவாக்கிடத்தானே திருச்சியில் நமது மாநில மாநாடு பிப்ரவரி 9, 10, 11 ஆகிய நாட்களில்!

1956-ல் திருச்சியில் நடைபெற்ற மாநில மாநாட்டில் திராவிடத்தின் உலகத் தொடர்புகள் என்ற தலைப்பில் நான் பேச வேண்டும் என்று அண்ணா கட்டளையிட்டுவிட்டார். எத்தனை நாட்கள்? எத்தனை நூல்கள்? எத்தனை ஆதாரங்கள்? குறிப்பிட்ட பொருள்பற்றி ஒரு தலைப்பில் பேச வேண்டுமென்றால்; நான் மட்டுமல்ல - நம் கழக முன்னணியினர் அனைவருமே அந்தப் பேச்சுக்கான விபரங்களையும், ஆதாரங்களையும் சேகரிக்க அத்தனைநாட்கள் எடுத்துக் கொள்வோம்! அவ்வளவு படிப்போம்!

சிலபேர்; அப்போதும்கூட - தாங்கள் வழக்கமாகப் பேசுவதைப் பேசிவிட்டு, கொடுக்கப்பட்ட தலைப்பை, தொடக்கத்திலும் - இடையிலும் - இறுதியிலுமாக மூன்று முறை இணைத்துச் சொல்லிவிட்டு, முடிந்தது கடமை என அமர்ந்திடுவர்! ஆனால் அந்தப் பேச்சுக்கள் மாநாடுகளில் எடுபடாமலே போய்விடும்! இதயங்களில் ஏறாமலே அகன்றுவிடும்! ஒருசிலரே அப்படி! பெரும்பாலோர் அளிக்கப்பட்ட தலைப்புகளில் அரும்பெருங் கருத்துக்களை அள்ளிப் பொழிந்து, மாநாட்டின் பயனை மக்கள் பெற்றிடச் செய்வர்! ஓடையில் மலர்ந்த தாமரையென முகமலர்ச்சி காட்டி, உள்ளத்தால் பாராட்டி உவகை பெருக்கெடுத்திட மாநாட்டு மேடையிலே அமர்ந்திருப்பாரே அண்ணா; அந்தக் காட்சியை இப்போது மனக்கண்முன் நிறுத்திப் பார்க்கிறேன்!

திருச்சி மாநாட்டில் நமது முன்னணிக் கண்மணிகளும், இளைஞர் அணித் தம்பிகளும் முழங்கிடும் முரசங்களாக; நான் முதலில் குறிப்பிட்டுள்ள இந்தத் தலைப்புகள் அமையும்! மாநாட்டின் பல சிறப்புகளில் ஒரு பெரும் சிறப்பாக இளைஞர் அணியினர் ஏற்பாடு செய்யும் நமது இயக்க வரலாற்றுக் கண்காட்சி,

திகழ இருக்கிறது. கண்ணுக்கு மட்டுமா? கருத்துக்கும் விருந்தாக! கடமை தொடர மருந்தாக! அந்தக் காட்சி அமைந்திட இளைஞர் அணியினர் பணி தொடங்கிவிட்டனர்.

அணிவகுப்புப் பேரணிக்கெனத் தனி உடை அணிந்து, பட்டாள நடைபோட்டுப் பாங்காக வருவோர்; இளைஞர் அணியினர் மட்டுமல்ல - மகளிர் அணியினர், மாணவர் அணியினர், தொழிலாளர் அணியினர், தொண்டர் அணியினர்; படைபெருத்தலால் பார் சிறுத்தது எனப் பரணி பாடிடுவர்! பார்த்துக் களித்திடுவோம்! கலைக்குழுவினர் புதிய பாடல்கள் தயாரிப்பதில் கவனம் செலுத்துகின்றனர்! அண்ணா எழுதிய சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் நாடக ஒத்திகையும், நான் எழுதிய மணிமகுடம் நாடக ஒத்திகையும் நாள் தவறாமல் நடைபெற்று வருகின்றன!

அரிமா, நடந்து வந்த பாதையை திரும்பிப் பார்த்துவிட்டுப் பிறகு தொடர்ந்து நடக்குமாம்! அரிமா நோக்கு என்பர் அதனை! அரிமா எனில் சிங்கம் எனப் பொருள்!

சிங்கத்தை நரியடிக்கும் திறமில்லையென்றாலும்

பொங்குற்றே சிங்கம் இறந்ததென்றால் நரிமனம் பூரிக்காதோ?

என்று பன்னீர்செல்வம் விமான விபத்தில் மறைந்தபோது பாவேந்தர் பாரதிதாசன் கண்ணீர்க் கவிதை பாடினார்! பன்னீர்செல்வத்துக்கு மட்டுமல்ல; நம் பழம்பெரும் இயக்கமாம் திராவிட இயக்கமெனும் சிங்கத்துக்கும் பொருந்தக் கூடிய கவிதை வரிகள்தான் அவை!

சிங்கம், பிடரியைச் சிலிர்த்துக்கொண்டு
கர்ச்சனை புரிந்தவாறு கம்பீர நடை
போடுகிறது - என்பதை நாட்டுக்கு
உணர்த்தவும், நமக்கு நாமே கூட
எழுச்சி பெறவும்தான் திருச்சியிலே
மாநில மாநாடு!

பெரியார், அண்ணா, பாவேந்தர், அம்பேத்கர், மூவலூர் மூதாட்டி - ஆகியோரின் படத்திறப்பு விழாக்கள்!

தி.மு.க.வின் வைரத்தூண் - தென்னாற்காடு மாவட்ட தீரன் - எம்.ஆர்.கே. பெயரால் பந்தல்! சுயமரியாதைச் சுடர் - கொள்கைக்

குன்று - அழகமுத்து பெயரால் அரங்கம்! வீதியெங்கும் கழகத்தின் தியாகத்திரு விளக்குகளின் பெயரால் தோரண வாயில்கள்! அண்ணா நகரென உருவாகும் அழகுமிகு நகரில் மாநாடு!

திருச்சியின் தீரர்கள் உயர்த்திடும் கொடிகள்; திக்கெட்டிலுமிருந்து தமிழர்களை வாரீர்! வாரீர்! என அழைக்கத் தொடங்கிவிட்டன! உடன்பிறப்பே, குலக்கொடியுடன் - கொஞ்சிடும் மழலைகளுடன் - குடும்பத்துடன் - உற்றார் உறவு நண்பர் குழாமுடன் - கொள்கைமலைக் கோட்டையென நிமிர்ந்து நிற்கும் மாநில மாநாடு காண வருக! உன் வருகை நோக்கிக் காத்திருப்பேன்; வருக!

அன்புள்ள,

மு. க.

17-01-1990

1639. இந்த இனத்துக்காக! இந்த நாட்டுக்காக!

உடன்பிறப்பே,

திருச்சி மாநில மாநாடு குறித்து தொடர்ந்து உனக்குக் கடிதங்கள் எழுதிக் கொண்டேயிருந்தேன். அதற்கிடையே ஆளுநர் உரையும் அதுபற்றிய விவாதங்களும் சட்டப் பேரவையில்! அந்த உரையில் அடிப்படையில் அரசின் நிறைகுறைகளை எடுத்துக்கூறி இறுதி நாளில் பேசியிருக்க வேண்டிய பிரதான எதிர்க்கட்சிகளான அ.தி.மு.க. மற்றும் காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளாமல் வரலாறு படைத்தனர் எனினும் அந்தக் கட்சிகளின் உறுப்பினர்கள் எடுத்து வைத்த கருத்துக்களுக்கு விளக்கம் தரவேண்டியது மக்கள் பிரதிநிதியான எனது கடமை அல்லவா? எனவே அப்பணியில் மூழ்கியிருந்த எனக்குக் கடிதம் எழுத நேரமில்லை உனக்கு!

பேரவை நிகழ்ச்சிகள் முடிவுற்றபிறகு திருச்சி, காரைக்குடி, மதுரை என நிகழ்ச்சிகள் - உடல் நலிவு வேறு! பொது வாழ்வுக்கு வந்துவிட்டு சிறுசிறு நலிவுகளுக்காக ராஜ ஓய்வு எடுக்க முடியுமா என்ன?

நலிவு போக்கும் மருந்தாகவே அந்த மூன்று நாள் நிகழ்ச்சிகளும் அமைந்தன!

காரைக்குடியில் என் நண்பன் கவியரசு கண்ணதாசனுக்கு ஒரு மணிமண்டபம் நிர்மாணிக்கிற முயற்சிக்குத் தொடக்க விழா - எத்தனையோ கருத்து வேறுபாடுகள், கடுமையான விமர்சனங்கள் - இவையனைத்தையும் கடந்த நட்பு என்பது வெறும் இழையாக அல்ல; இணைப்பு அகலாத இரும்புச் சங்கிலியாக எங்கள் இருவரிடையே இருந்தது என்பதின் சின்னமாக - அந்தக் கவி நண்பனின் தமிழ் நெஞ்சத்து நினைவு மண்டபமாக அது திகழப்போகிறது என்பதில் எத்துணை குளிர்ச்சி என் இதயத்துக்கு!

இளைஞர் அணியின் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர நிர்வாகிகளின் கலந்துரையாடல் கூட்டம் மதுரையில்! நானும்

பேராசிரியரும் தாயும் தந்தையும் போல அந்தச் சிங்கச் செல்வங்களின் செயலாற்றும் திறன் கண்டு மகிழ்ந்தோம்! புதிய நம்பிக்கை பெற்றோம்!

திருச்சிக்குச் சென்றேன்; செயற்கை வைரத் தொழிற்சாலை வளர்ச்சிப் பணிகளைத் தொடங்கிட! எனினும்; அங்கே நமது இயக்கத்தின் இயற்கை வைரங்களைக் கண்டேன் - மாநில மாநாட்டுப் பணிகளில்!

ஏ, அப்பா எவ்வளவு பெரிய பந்தல்! இதுவரை எந்த மாநாடு, காணாத பந்தல்! திருச்சி மன்னார்புரத்தில் அண்ணா நகர் என்று ஒரு தற்காலிக நகரை, உருவாக்குகிறார்கள்! ஆனால் அது நிரந்தர நகர் போலவே எழில் மாடங்கள் கூடங்கள் எல்லாம் நிறைந்ததாய் விளங்குகிற மாட்சி கண்டேன்! கடமையாற்றுவதில் - கண்ணியம் போற்றுவதில் - கட்டுப்பாடு காப்பதில் நமது உடன்பிறப்புகள் என்றைக்குமே என் உள்ளத்தைக் கொள்ளை கொள்பவர்கள் அல்லவா?

அந்த மகிழ்ச்சியை வெளியிடத்தான் சென்னையில் பிரதமர் வி.பி.சிங் அவர்களின் மாபெரும் வரவேற்புக் கூட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு, உடனடியாக ஆந்திர மாநிலம் சென்று தெலுங்கு கங்கை திட்டம் குறித்து விவாதித்து நல்ல முடிவு கண்டுவிட்டு, புது டில்லிக்கு திட்டக் குழுவுடன் விவாதிக்க வந்துள்ள நான், உனக்குக் கடிதம் எழுதுகிறேன்.

நான் சென்னை வந்து சேரும்பொழுது நீ, திருச்சி பயணத்திற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருப்பாய்!

திருச்சியில் அலைமோத இருக்கும் அந்த மகா சமுத்திரத்தில் நான் எப்படி உன்னைக் காணாமல் இருந்துவிடுவேன்!

அந்தக் கடல் முழுதும் நீதானே எனக்கு!

எனக்கும் உனக்குமுள்ள இந்த உடலும் உயிரும்; உடன்பிறப்பே! இந்தக் கழகத்துக்காகத்தானே!

இந்த கழகம் இந்த இனத்துக்காக - இந்த நாட்டுக்காகத்தானே!

இந்த உணர்வுகள் சங்கமிக்கும் இடம் - திருச்சி! நாள் :- பிப்ரவரி 9, 10, 11.

அன்புள்ள,

மு. க.

06-02-1990

1640. அந்த நாம்தான் திருச்சியில் கூடுகிறோம்!

உடன்பிறப்பே,

சிறுத்தையுடன் அவன் போர் நடத்தியிருக்கிறான். அதன் பற்களும் நகங்களும் கிழித்த காயங்களின் தழும்புகள் பல உண்டு அவன் மேனியில்! அதனைத் தடவிப் பார்த்து அவன் அடிக்கடி புன்னகை புரிவதுண்டு! யானையுடன் மோதியதில் அதன் கூரிய தந்தம் அவன் விலாப்புறத்தில் நுழைந்து மீண்டதுண்டு - அந்தப் புண் ஆறிய பிறகு அதனைக் கண்ணாடியில் பார்த்துப் பார்த்து அவன் நாள்தோறும் பெருமிதம் கொள்பவன்! சிங்கம், தன் குட்டியுடன் விளையாடும் பாணியில் அவனைக் கட்டிப் பிடித்தும், எட்டித் தள்ளியும் சண்டை போட்டதுண்டு - அதனிடம் பட்ட காயங்களின் தழும்புகளைக்கூட அவன் பக்திப் பரவசத்துடன் பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போகிறவன்!

என் செய்வது; இன்றைக்கு அவன் காலம் - சாக்கடையில் புரண்டு உடல் முழுதும் சேறு பூசிக்கொண்டு வாயில் அசிங்கத்தை நிரப்பிக் கொண்டுள்ள பன்றி; அவனை சமருக்கு அழைக்கிறது! சவால் விடுகிறது! சே! சே! என முகம் சுளித்து அவன் ஒதுங்கிப் போவது கண்டு அதற்கு வீரம் பிறக்கிறது! பார்! பார்! ஆள் என்னைப் பார்த்து அஞ்சி நடுங்கிவிட்டான் என்று ஆர்ப்பாட்டம் நடத்துகிறது! சிங்கம், யானை, சிறுத்தை என மோதிப் பார்த்தவன் - அவற்றின் பல்லும் நகமும் தன்னுடலில் பதிந்திருப்பதைப் பெருமை எனக் கருதுபவன்; பன்றியின் அறைகூவல் கேட்டுப் பதுங்குவது ஏன்? சாக்கடைச் சகதியைக் கவசமாகப் பூண்டு, தெருவோரத்து அசுத்தங்களைச் சந்தனமாகப் பூசிக்கொண்டு - படை முழக்கம் செய்யும் அந்தப் பகை முகத்தைப் பார்க்கவே சகிக்கவில்லை அவனுக்கு! அதனால் ஒதுங்குகிறான்! அதனைப் பதுங்குகிறான் என்று கூறிப் பன்றியார் கைகொட்டிச் சிரித்திடல் அது விசித்திரமான வேடிக்கைதானே! உடன்பிறப்பே, நமது கழகத்துக்குப் பெருமைமிகு தலைவர்களின் எதிர்ப்பு

இருந்ததுண்டு - கொள்கை ரீதியாக அவர்களை எதிர்த்திடவும், பண்பாட்டு ரீதியாக அவர்களுடன் பழகிடவுமான வாய்ப்பினைப் பெற்றது இந்தக் கழகம்! மேடைகள் வாயிலாக ஏடுகள் வாயிலாக அவர்களுக்கும் நமக்கும் இலட்சியப் போராட்டங்கள் எத்தனை எத்தனையோ! ஆனாலும் அந்தப் போராட்டங்களையும் கடந்து, அவர்களின் தியாகம், நாட்டுப் பற்று, தமிழ் ஆற்றல், புலமை, அனுபவம், பண்பு, இவற்றை மதித்து, அவர்களால் தாக்குண்டதை ஒரு தகுதியாகக் கூடக் கருதி வளர்ந்ததுதான் இந்தக் கழகம்!

ஐம்பத்தி இரண்டு ஆண்டுக்கால எனது பொது வாழ்வில் வளர்ந்து, வாழ்ந்து, மறைந்த தலைவர்கள் எவ்வளவோ பேர்! அவர்களில் பலர் இன்னமும் என் நெஞ்சில் நிறைந்த தலைவர்களாகவே திகழ்கின்றனர்! அன்னையைப் போலவே அரவணைத்து என்னை வளர்த்த தலைவர் அண்ணாவையும், தந்தையைப் போல் - கடிந்தும், கண்டித்தும், கனிவு காட்டியும் வளர்த்த தலைவர் அய்யாவையும் என் சிந்தை அணு ஒவ்வொன்றிலும் கணப்பொழுதும் அகலாது அமர்த்திக் களிப்பவன் நான்! எதிர் எதிராக நின்று வாதம் செய்யும் வாய்ப்பு எத்தனையோ தலைவர்களிடம் - தமிழறிஞர்களிடம் எனக்குக் கிட்டியதுண்டு! நெரித்த புருவம் - உருட்டும் விழிகள் - மிரட்டும் குரல் - இந்தக் கோலத்துடனும் இருதரப்பினர் மோதியதுண்டு! அதில் பட்ட காயங்கள் அனைத்தும் கதலியின் ருசியாய், கரும்பின் சுவையாய், இப்போதும் இனிப்பதுண்டு! காரணம்; விரோதிகளாயினும் அவர்கள் வேழங்கள்! வேங்கைகள்! அந்த விரோதம் கருத்தளவில்தான்! கழுத்தளவு நிரம்பிய காழ்ப்புணர்ச்சியால் அல்ல! ஒரு கால கட்டம்; அவர்கள் நம்மைப் புரிந்து கொண்டு அவர்களால் நமது மேனியில் விளைந்த தழும்புகளுக்கு அவர்களின் விரல்களாலேயே ஒத்தடம் கொடுத்ததும் உண்டு! அதை நாம் பேரின்பமாகக் கருதிப் புளகாங்கிதமுற்றதும் உண்டு! பூசல், புகைச்சல், போர் - அனைத்தையும் கடந்து, அவர்களால் நமக்குக் கிடைத்த தியாக உணர்வு, உழைக்கும் பாங்கு, தமிழ் மொழிப்பற்று, அடக்கமுடைமை, அஞ்சாமை, அறிவாற்றல் அனுபவம் - ஆகிய இவற்றை எண்ணிப் பார்த்தால், பூசலும் புகைச்சலும் புதையுண்ட எருவாகி, இவையன்றோ பூங்கொடிகளாகப் பூத்துக் குலுங்குகின்றன! முள்ளால் கையைக் குத்தினாலும் ரோஜா,

அழகிய மலரைத் தருவது போல் - சிப்பி விரலைக் கீறினாலும் செழுமிய முத்தினைத் தருவது போல் - பெரியோர் பலரிடமிருந்து அரிய செல்வங்களை நாம் பெற்றுள்ளோம்! ஆம்; அறிவுச் செல்வம் - அனுபவச் செல்வம் - தியாகச் செல்வம் - அருந்தமிழ் ஆற்றல் செல்வம்!

மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு தம்பீ! என அண்ணா கூறியது - மா ம ம என்ற வெறும் அடுக்குச்சொல் கோர்வைக்காக அல்லவே! அதில் உள்ள பொருள் ஆழமானது! மிக ஆழமானது! அண்ணாவின் இந்த வாசகத்தை கடந்த காலத்திலும் சரி, நிகழ்காலத்திலும் சரி மனத்திற் பதித்து காரியமாற்றுகிறவர்கள், கண்ணியம் போற்றுகிறவர்கள் கழகத்தாராகிய நாம்! அந்த நாம்தான் திருச்சியில் கூடுகிறோம்! சிறுத்தை, சிங்கம், யானை போன்ற மாமனிதர்களுடன் பகைத்தும் - பழகியும் - இருநிலையிலும் பண்பாடு காத்திட்ட நாம்தான் திருச்சியில் கூடுகிறோம்! இந்தக் கடிதத்தை திருச்சிக்குப் பயணப்பட்டுக்கொண்டே நான் எழுதுகிறேன்! நீயும் பயணப்பட்டுக்கொண்டே இதனைப் படிக்கிறாய்! என் இதயமே! உடன்பிறப்பே! சந்திப்போம் திருச்சியில்!

அன்புள்ள,

மு. க.

08-02-1990

1641. சமுதாய மறுமலர்ச்சி காண...!

(திருச்சியில் தி.மு.க. இளைஞர் அணி சமதர்ம சமுதாய மாநில மாநாடு நடைபெறும் இந்நாளில் -

தலைவர் கலைஞர் அவர்கள் 12.4.1976ல் முரசொலியில் எழுதிய கடிதம் - மீண்டும் வெளியிட்டு மகிழ்கிறோம்)

உடன்பிறப்பே,

அதிசயச் செய்திகள், அற்புதங்களைப் பற்றிய கட்டுரைகள், மீண்டும் பத்திரிகைகளில் வெளிவரத் தொடங்கியுள்ளன.

ஆறு மாதத்திற்கு ஒரு முறையாவது இப்படிப்பட்ட மூட நம்பிக்கைக் கதைகளை ஏடுகளின் வாயிலாகப் பரப்பிடாவிட்டால் இங்குள்ள சனாதனிகளுக்குத் தூக்கமே வருவதில்லை.

அவரவர்களுக்குரிய கடவுள் நம்பிக்கை, மத நம்பிக்கை இவைகளைப் பற்றி அவர் தம் மனம் புண்படும்படியாக விமர்சிக்கக் கூடாது என்பதுதான் நமது கருத்து. எனினும், அந்தக் கடவுளின் பெயரால் ஆயிரக்கணக்கான கதைகளையும், மதத்தின் பெயரால் மக்களை அடிமைப்படுத்துகிற செய்திகளையும் பரப்புவது ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல!

அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ள கடவுள் தன்மை - மதத்தின் மாண்பு இவைகளுக்கே கூட இழிவு கற்பிக்கும் வகையில் ஏற்கனவே எழுதப்பட்டுள்ள நம்பமுடியாத கதைகள் ஏராளம் இருக்கும்போது இன்னும் ஏன், அந்த முயற்சியில் ஈடுபட்டு, புதிய புதிய அவதார புருடர்களை அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று புரியவில்லை.

சமுதாயத்தில் ஒழுங்கும், கட்டுப்பாடும் நிலைத்திட கடவுளைக்கூறி, அவருக்குப் பயந்து நடக்கவேண்டும் என்று அச்சுறுத்தி, அதனையொட்டிய விதிமுறைகளை

வரையறுத்திருப்பதே கடவுள், மதம் பற்றிய நம்பிக்கையை வலியுறுத்துவதின் நோக்கம் என ஆத்திகர் வாதிடுவர்.

அப்படிப் பயமுறுத்தி மக்களை, கடவுள் மதக் கொள்கைகளுக்குக் கீழ்ப்படிய வைக்காமலே சிறந்த அறிவுரைகளின் மூலமும், சமுதாய ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் நிலை நாட்ட முடியும் என்பது நாத்திகர்களின் வாதமாகும்.

இரண்டுக்கும் நடுநிலையாக நின்று ஒன்றே குலம், ஒன்றே தெய்வம் எனும் கொள்கை வகுத்துக் கொண்டு - மதப் போட்டி, கடவுள் போட்டி, புராணக் கதைப் போட்டி ஆகியவற்றைத் தவிர்த்துக் கொண்டு - அதே நேரத்தில் சமுதாயம் தனக்காக வகுத்துக் கொள்கிற ஒழுங்கு, கட்டுப்பாடு போற்றி வாழ்ந்திட வேண்டும் என்ற கருத்தும் வலியுறுத்தப் பெற்று வருகிறது.

கடவுள் உண்டா? இல்லையா? என்ற சர்ச்சையில் இறங்கி, பட்டிமன்றம் நிகழ்த்திடும் எண்ணம் எனக்கில்லை. கடவுளை நாம் ஏற்றுக்கொள்கிறோமா என்பது பிரச்சினை அல்ல! கடவுள் என ஒருவர் இருந்தால் அவர் நம்மை ஏற்றுக் கொள்கிற அளவுக்கு நாம் நடந்து கொள்கிறோமா? என்பதுதான் பிரச்சினை என்று பலமுறையும் நான் விளக்கியிருக்கிறேன். ஏழையின் சிரிப்பில் இறைவன் இருக்கின்றான் என்பதே நமது அண்ணா அடிக்கடி எடுத்துக் கூறிய வாசகமாகும்.

பல உருவங்கள் இருப்பினும் ஆண்டவன் ஒருவன்தான் என்று ஆத்திகரும் ஒப்புகின்றனர். அதற்கான விளக்கங்கள், உவமைகள் இவைகளை வழங்குகிறார்கள். அத்துடன் நிறுத்தாமல் ஒரு நாளைக்கு ஒரு அவதார புருடரை ஊருக்குக் காட்டுகிறார்களே, ஏன்?

மெய்வழிச் சாலையின் மாய்மாலங்கள் அம்பலமாகிக் கொண்டிருக்கின்றன. கொட்டை எழுத்துக்களில் ஏடுகளில் செய்திகள் வருகின்றன. தோண்டி எடுக்கப்படும் தங்கம் - தோண்டப்படும் பணிகள், அனைத்தும் புகைப்படங்களாக வெளியிடப்படுகின்றன. இதே ஏடுகள்தான் முப்பதாண்டுக் காலத்துக்கு மேலாக இந்த மெய்வழிச்சாலை பற்றிய அற்புதங்களைப் பக்கம் பக்கமாக வெளியிட்டு, மக்களை மடமையில் ஆழ்த்தின.

ஒன்றா? இரண்டா? ஜலபாபா! சாயிபாபா! எத்தனை கதைகள்! அற்புத சித்து வேலைகள்!

பரங்கிப் பூ பாம்புத் தலைபோல் பூத்திருக்கும்! அதற்குப் பெரிய விளம்பரம்! ஆதிசேடனே அருள்புரிய வந்திருக்கிறான், வாரீர்! வாரீர்! என்று அழைப்பு, உண்டியல் உதயம்.

பத்து நாட்களில் பரபரப்பு அடங்கும். இடைக் காலத்தில் பத்திரிகை விற்பனை இரட்டிப்பாகும். திடீர்ப் பிள்ளையார் திடுமெனக் கிளம்பும்! சிலுவைக் குழந்தை சீசன் சில நாட்கள்! கர்நாடகத்தில் ஒரு குழந்தையின் காதில் தேன் வடிகிறது - அந்தச் செய்தியும் பத்திரிகை விற்பனைக்காகவே!

இன்றைக்குச் சில ஏடுகளைப் புரட்டினேன். முற்பிறவியை அறிய முயற்சி என்று கட்டுரையொன்று. இன்னொரு இதழில் ஒரு பரபரப்பான செய்தி!

பெங்களூரில் ஐந்து வயது சிறுமியாம்! உயர் குடும்பத்தில் பிறந்த பெண்ணாம்! போன ஜென்மத்தில் நகர சுத்தித் தொழிலாளியாக இருந்ததாகக் கூறுகிறதாம் அந்தப் பெண் குழந்தை!

இப்படி இந்தியா முழுவதும் தங்கள் முன் ஜென்மத்தைப் பற்றிக் கூறுகிறவர்கள் சுமார் பதினாறு பேர் இருக்கிறார்களாம். அவர்களில் ஒருத்தி 19ஆம் நூற்றாண்டில் பேசப்பட்ட வங்காள மொழியைப் பேசுகிறாளாம். அவளுக்கு வயது நாற்பதாகிறதாம்! இவ்வாறு செய்திகள்!

தகப்பனைப்போல், தாயைப்போல், பாட்டனைப்போல், பாட்டியைப்போல் இருக்கிறது குழந்தை என்கிறோம். இரத்தத் தொடர்பினையொட்டி இவ்வாறு கூறுகிறோம். முகமும், அங்க அசைவுகளும், தங்கள் குடும்பத்துப் பரம்பரையை உணர்த்துவதாகக் குழந்தைகளுக்கு அமைவது உண்டு.

முன்ஜென்மம் - அடுத்த ஜென்மம் - முற்பிறவி, மறு பிறவி இவைகள் எல்லாம் நரகம், சொர்க்கம் என்பதைப்போல மனிதனைப் பயமுறுத்திக் கட்டுப்படுத்துவதற்காகச் செய்யப்பட்டுள்ள கற்பனைகளே தவிர வேறல்ல.

அய்யோ! பாவம் செய்கிறோமே. நரகத்துக்குப் போகவேண்டுமே? என்றோ, அல்லது அடுத்த பிறவியில் நாய், நரி,

கழுதைகளாகப் பிறக்கவேண்டுமென்று பயந்தோ ஒரு மனிதன் பாவம் செய்யாமல் இருந்துவிடுகிறானா! இல்லை! இல்லவே இல்லை!

பாவத்தையும் செய்துவிட்டு, பாவ விமோசனத்துக்காகப் பல ஏற்பாடுகளையும் செய்து வைத்துக்கொள்கிறான்.

அதைவிடச் சுருக்கமாகச் சொன்னால் பாவம் செய்வதற்காகவே பாவந்தீர்க்கும் முறைகளையும் முன்கூட்டியே தயார்படுத்தி வைத்துக் கொண்டிருக்கிறான்.

இறந்து போகிற மனிதன் அடுத்த பிறவி எடுத்துவிடுகிறான் என்றால், ஆண்டுதோறும் அவனுக்கு திதி - திவசம் என்று கொண்டாடிப் புரோகிதருக்குத் தான தருமங்கள் செய்வானேன்?

இங்கே கொடுக்கிற தட்சணை, மேலேயிருக்கிற பிதுர்க்களுக்குப் போவது உண்மையானால், மறுபிறவி என்பது எப்படி உண்மையாக இருக்க முடியும்?

பேச, பார்க்க, சுவாசிக்க, சிந்திக்க, நடக்க இப்படி எல்லா சக்திகளும் பொருந்திய ஆவி மனிதன் ஒருவன் இருப்பதைப் போலவும், அவன், தனக்கிடப்பட்ட ஆணையின்படி - குறிப்பிட்ட உயிரினங்களாக உருவமெடுக்கிறான் என்பதைப் போலவும் - இந்த விஞ்ஞான யுகத்திலும் விளம்பரம் செய்து கொண்டிருப்பது மனித சமுதாயத்துக்கு நல்லதல்ல!

ஆவியோடு பேசலாம் என்று ஏமாற்றுவது - முற்பிறவியைச் சொல்லுகிறாள் என்று கதை கட்டுவது - அற்புத ஜாலங்கள் - சித்து வேலைகள் - அவதார மகிமைகள் - மந்திர மாயங்கள் - இப்படி எத்திப் பிழைப்பது, இவைகளுக்கெல்லாம் முடிவுகட்ட கடுமையான சட்டங்கள் பிறப்பிக்கப்படாவிட்டால், மேலும் பல மெய்வழிச் சாலைகள் ஏற்படுவதைத் தடுத்து நிறுத்த இயலாது.

கறந்தபால் முலைபுகா கடைந்த வெண்ணெய் மோர்புகா

துடைந்துபோன சங்கின் ஓசை உயிர்களும் உடற்புகா

விரிந்த பூ உதிர்ந்த காயும் மீண்டும் போய் மரம்புகா

இறந்தவர் பிறப்பதில்லை இல்லை இல்லை இல்லையே!

என்று அந்தக் காலத்திலேயே சிவவாக்கியர் அழுத்தம் திருத்தமாகப் பாடியுள்ளதை, உடன்பிறப்பே நீ மட்டும்

நினைவில் வைத்துக்கொண்டால் போதாது, மற்றவர்களுக்கும் நினைவுபடுத்திட வேண்டும்.

சமுதாயக் கட்டுப்பாட்டையும், ஒழுங்கையும், நேர்மையையும், நெறிமுறையையும் மூட நம்பிக்கைகளால் நிலை நிறுத்த முடியாது. அறிவுத் தெளிவின் வாயிலாகவும், அரசின் முறையான சட்டங்களின் மூலமாகவும்தான் சமுதாய மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்க முடியும்.

அன்புள்ள,

மு. க.

10-02-1990

1642. வாழ்க! இந்த விபீஷணர்கள்!

உடன்பிறப்பே,

"Several AIADMK leaders on Friday, deplored the alleged anti-Brahmin feelings of the DMK which came to the fore during the Tiruchi conference."

திருச்சி தி.மு.க. மாநில மாநாட்டில் பிராமண எதிர்ப்பு உணர்வு முன்னிலைப் படுத்தப்பட்டதாக பல அ.தி.மு.க. தலைவர்கள் வெள்ளிக்கிழமை அன்று வன்மையாகக் கண்டித்தார்கள்,

இவ்வாறு சென்னை பிப்ரவரி 17 இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏடு செய்தி வெளியிட்டிருக்கின்றது. செய்தி வெளியிட்டது மாத்திரமல்ல, எக்ஸ்பிரஸ் போன்ற பத்திரிகைகள் திருச்சி மாநாடு பற்றி கட்டுரைகள், கடிதங்கள் வெளியிட்டு அந்த மாநாட்டினை ஒரு பிராமண எதிர்ப்பு மாநாடு போல வர்ணித்துள்ளன. அவர்களுடைய கருத்துக்கு வலிவூட்டும் வகையில் அ.தி.மு.க. தலைவர்கள் பலர் தங்கள் வேதனையைத் தெரிவித்துக் கொண்டதாகவும் செய்தி வெளி வந்துள்ளது.

திருச்சி மாநாட்டில் நான் ஆற்றிய நிறைவுரை முரசொலியிலும் மற்றும் பல ஏடுகளிலும் வெளிவந்துள்ளது. மாநாட்டில் நான் பேசியதை பத்திரிகைகளில் வெளிவந்தவாறு அப்படியே நினைவூட்டுகிறேன்.

நாம் யாருக்கோ விரோதிகள்; ஒரு சாரார், ஒரு பிரிவினருக்கு விரோதிகள் என்கின்ற ஒரு தவறான பிரச்சாரம் இன்றைக்கு நாட்டிலே செய்யப்படுகிறது. நான் உங்களுக்கு ஒன்றை விளக்க விரும்புகிறேன்.

89-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் தமிழக சட்டப் பேரவைக்கு தேர்தல் நடைபெற்றபோது யார் நம்மை விரோதியாக பாவித்து, ஜாதியின் பெயரால், வகுப்பின் பெயரால், பத்திரிகையிலே அறிக்கைகள் விடுத்து தி.மு.கழகத்திற்கு குறிப்பாக திராவிடர் இயக்கங்களுக்கே வாக்களிக்காதீர்கள். காங்கிரசிற்கு

வாக்களியுங்கள் என்று அறிக்கை விட்டவர்கள் என்பதற்கு இதோ ஒரு ஆதாரம்.

இது தினமலர் பத்திரிகையில் ஜனவரி மாதம் 1989-ஆம் ஆண்டு வெளிவந்த அறிக்கை. அந்த அறிக்கையின் தலைப்பு என்ன தெரியுமா? பிராமண சமூக வாக்காளர்களுக்கு ஒரு வேண்டுகோள்! என்பதுதான். என்ன வேண்டுகோள்? திராவிட இயக்கங்களுக்கு வாக்களிக்காதீர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களிக்காதீர்கள் என்று பிராமணர் சமூக வாக்காளர்களுக்கு வேண்டுகோள். அதில் அவர்கள் தெரிவித்திருப்பது இன்று நடைபெறும் தமிழக சட்டமன்றத் தேர்தல், தமிழகத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கக்கூடியது என்பது அனைவரும் அறிந்ததே. இத்தேர்தலில் வாக்காளர்களாகிய உங்கள் ஆதரவைக் கோரி பல்வேறு கட்சிகள், கூட்டணிகள் பலவித வாக்குறுதிகளைக் கூறி அணுகி வருகின்றனர். இவற்றில் எதற்கு வாக்களிப்பது? என நன்கு சிந்தித்து சரியான முடிவெடுப்பது நம் கடமை ஆகும்.

இட ஒதுக்கீடு என்ற பெயரால் (இங்கேதான் விஷயத்திற்கு வருகிறார்கள்) இட ஒதுக்கீடு என்ற பெயரால் கல்வி நிறுவனங்களிலும், அரசு வேலைகளிலும் நமக்கு முற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்ற முத்திரையைக் குத்தி அனுமதி மறுக்கப்பட்டு நமது சந்ததியின் எதிர்காலம் பாழடிக்கப்பட்டுவிட்டது. இவர்களது முன்னாள் முதலமைச்சர் ஒருவர் (என்னைச் சொல்கிறார்கள்) - இதை நான் செய்தேன் என்று சட்டமன்றத்தில் ஆணவத்தோடு மார் தட்டிக் கொண்டார். மற்றொரு முதலமைச்சரோ (எம்.ஜி.ஆரைச் சொல்கிறார்கள்), முற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட 50 சதவிகித இட ஒதுக்கீட்டை 32 ஆக குறைக்கும் கைங்கர்யத்தைச் செய்தார். இது போதாது என்று நம்மை அடியோடு அழிக்கும் மண்டல் குழு பரிந்துரைகளை அமலாக்கச் செய்து மத்திய அரசு மற்றும் அதன் சார்பு நிறுவனங்களில் நமக்கு இருந்து வரும் வேலை வாய்ப்பையும் ஒழித்துக்கட்ட முனைந்து வருகிறார்கள். இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி நமது அவலங்களுக்கு முடிவு கட்ட அநீதிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க ஊழல்கள் ஒழிய, தமிழகம் மீண்டும் தேசிய நீரோட்டத்தில் இணைந்திட, தர்மத்தின் பெயரால், நீதியின் பெயரால், நியாயத்தின் பெயரால் உங்கள் பொன்னான வாக்குகளை காங்கிரஸ் கட்சிக்கு முத்திரையிட வேண்டுமாய் பிராமண சமூகத்தினரும் அதேபோல நாட்டம்

கொண்ட அனைவரையும் பணிவன்போடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்

என், காசிராமன், வி.எஸ். ராமசுப்பிரமணியம், ஜெ.என். சங்கர நாராயணன், புலவர் கீரன், நெப்பத்தூர் பாலு ஐயர், சிவசங்கரி, டெல்லி கணேஷ், ஜெய்சங்கர், கல்லுப்பட்டி சீனிவாசன், ஜி. ராமச்சந்திர அய்யர் தஞ்சை, ஜி. பரமேஸ்வரன் மதுரை -

என்று இப்படி 89-ஆம் ஆண்டு பிராமண சமூகத்தின் பெயரால் வாக்காளர்களுக்கு வேண்டுகோள் விடுத்து திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களிக்காதீர்கள் என்று ஒரு ஜாதி உணர்வை தமிழகத்திலே ஏற்படுத்தியது திராவிட முன்னேற்றக் கழகத்தாரா? திராவிட இயக்கத்தவர்களா? அல்லது இப்படிப்பட்ட பிரிவுகளைச் சார்ந்தவர்களா? என்பதை தயவு செய்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதில் குறிப்பாக சொல்கிறார்கள், இவர்களுக்கு வாக்களித்தால் மண்டல் குழு பரிந்துரைகளை அமலாக்கம் செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுப்பார்கள் என்று சொல்கிறார்கள். ராஜீவ் காந்தி டில்லியில் இருந்தால் நடவடிக்கை எடுத்திருக்க மாட்டார். சட்டமன்றத் தேர்தலிலே நாம் வெற்றி பெற்றோம். நாடாளுமன்றத் தேர்தலிலே தேசிய முன்னணி வெற்றி பெற்றிருக்கிறது. அதனால் மண்டல் கமிஷனுடைய அறிக்கையை அமலாக்க - நடைமுறைப்படுத்த துணைப் பிரதமர் தேவிலால் தலைமையில் ஒரு குழு அமைக்கப் பட்டிருக்கிறது.

ஏன் மண்டல் குழு?

ஜனதா ஆட்சியின் காலத்தில் கிட்டத்தட்ட பத்து ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட குழு மண்டல் குழு. அந்த மண்டல் குழுவின் பரிந்துரைகள் அறிக்கையாய்த் தரப்பட்டு, அது பத்து ஆண்டுக் காலமாக கிடப்பிலே போடப்பட்டு, இன்றைக்கு தேசிய முன்னணி அரசு அந்த மண்டல் குழுவின் அறிக்கையை பரிசீலித்து நடவடிக்கை எடுக்க குழுவை அமைத்திருக்கிறது.

உங்களுக்கு ஒன்றை மாத்திரம் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மத்திய அமைச்சர் மாறன் குறிப்பிட்டதைப்போல் நம்முடைய மாநில அரசில் இட ஒதுக்கீட்டை கல்வித்துறையில்,

வேலை வாய்ப்புத் துறையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு - மிகவும் பின்தங்கியவர்களுக்கு - பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்ற வகையிலே ஒதுக்கி சமூக நீதி காப்பாற்றுகிறோம்.

ஆனால் மத்திய அரசின் நிறுவனங்களிலும், மத்திய அரசின் சார்புடைய நிறுவனங்களிலும் அந்த சமூக நீதி கடைப்பிடிக்கப்படவில்லை. அதற்காகத்தான் மண்டல் குழு அறிக்கையின் அந்த பரிந்துரையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் கேட்கிறது.

நான், இந்த மண்டல் குழு அறிக்கை தரப்பட்ட நேரத்தில் மத்தியில் எந்த அளவிற்கு பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு ஓரிரு உதாரணங்கள் சொல்வேன்.

பெரிய அதிகாரிகள் - அங்கே டில்லியில் இருப்பவர்கள் - மத்திய அரசில் பணியாற்றுகிற பெரிய அதிகாரிகள் 1,74,043. அதில் தாழ்த்தப்பட்டவர்கள் 9891 பேர். பிற்படுத்தப்பட்டவர்கள் 8169 பேர். ஏனைய முன்னேறிய வகுப்பைச் சார்ந்தவர்கள் 1,55,983 பேர்.

இந்த சமூக அநீதி களையப்பட வேண்டும் என்பதற்காகத்தான் மண்டல் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நாம் கேட்டுக் கொள்கிறோம்.

அதிலே இரண்டாவது - Class II பிரிவு அதிகாரிகளில் மொத்தப் பணியாளர்கள் 9,12,925. அதில் தாழ்த்தப்பட்டோர் 1,65,982 பேர். பிற்படுத்தப்பட்டவர்கள் 97,063 பேர், முன்னேறிய ஜாதியைச் சார்ந்தவர்கள் 6,49,880 பேர்.

Class III பிரிவு மற்றும் Class IV பிரிவு இருக்கிறதல்லவா - கடைசி பிரிவு இருக்கிறதல்லவா? அதைச் சார்ந்த ஊழியர்கள் 4,84,646 பேர். அதில் தாழ்த்தப்பட்டவர்கள் 1,18,282 பேர். பிற்படுத்தப்பட்டவர்கள் 91,575 பேர். இதில் கொஞ்சம் பிற்படுத்தப்பட்டவர்கள் அதிகம். காரணம் அது கடைசி கடைநிலை ஊழியர்கள்.

எனவே, இந்தியா முழுமையும் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் மேலும் சீராக செம்மையான வாய்ப்பைப் பெறவும், ஒதுக்கப்பட்டுக் கிடக்கின்ற பிற்படுத்தப்பட்ட மக்கள் தங்களுடைய உரிமையை கோரிப்பெறவும் மண்டல் கமிஷன் அறிக்கை நடைமுறைக்கு

வரவேண்டும் என்று தி.மு.கழகம் இந்த மாநாட்டிலும் குரல் கொடுத்திருக்கிறது.

உடன்பிறப்பே!

இதுதான் நான் திருச்சி மாநாட்டில் பேசியது. பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகவும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும் இட ஒதுக்கீட்டை வலியுறுத்துவதும் மண்டல் கமிஷன் பரிந்துரையை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று விரும்புவதும் அ.தி.மு.க. தலைவர்களுக்கு பிராமண துவேஷமாக தெரிகிறது.

1989 சட்டமன்றத் தேர்தலின்போது பிராமண சமூகத்தினர் பத்திரிகைகளில் தந்த விளம்பரங்களில் தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய இரண்டு கட்சிகளுக்கும் பிராமணர்கள் ஓட்டும் போடக்கூடாது என்றுதான் அறிவித்திருக்கின்றார்கள். அதனை நான் சுட்டிக்காட்டி சாதியின் பெயரால் விரோத உணர்வை தூண்டிவிட்டது யார் என்று வினா எழுப்பியதின் மூலம் அப்படிப்பட்ட உணர்வுகளை தூண்டி விடக்கூடாது என்ற எண்ணத்தைத்தான் அழுத்தந்திருத்தமாக குறிப்பிட்டிருக்கிறேன்.

ஆனால் விபீஷண ஆழ்வார்கள், அது புரிந்திருந்தும் விஷத்தைக் கக்கி நம்மீது ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினருக்கு வேண்டாத வெறுப்பை விளைவித்து அதனை அறுவடை செய்யலாம் என்று திட்டம் தீட்டி வேதனையை வெளிப்படுத்துவதாக பத்திரிகைக்காரர்களுக்கு முன்னால் முதலைக்கண்ணீர் வடித்திருக்கிறார்கள்.

நடுநிலையோடு சிந்திக்கின்ற யாரும் திருச்சி மாநாட்டில் நான் ஆற்றிய உரையைப் படித்துப் பார்த்தால் வெறுப்பு உணர்வுகளுக்கு விதை தூவுபவர்கள் யார் என்பது தெளிவாகப் புரியும். ஆனால் பாவம், இவர்கள் பெரியாரும், அண்ணாவும், பாவேந்தரும், திரு.வி.க.வும் பாராட்டிய தமிழ்க்கடல் மறைமலை அடிகளாரின் பெயரை தார்கொண்டு அழிப்பவர்களுக்கு கைகுலுக்கிக் கொண்டு திரிபவர்கள் அல்லவா? இவர்களிடம் தமிழ் உணர்வை - தன்மான உணர்வை எதிர்பார்ப்பது நமது தவறுதானே தவிர அவர்கள் தவறல்ல. பரவாயில்லை! வாழ்க இந்த விபீஷணர்கள்!

அன்புள்ள,

மு. க.

18-02-1990

1643. வெற்றிக்கனி வழங்கிட உழைப்பீர்!

உடன்பிறப்பே,

இந்தக் கடிதம் உன் கரத்தில் தவழும்போது, புதுவை பொதுக்கூட்டத்தில் புதுவை மாநில சட்டமன்றத் தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கையை நான் வெளியிட்ட செய்தியும் உனக்குக் கிடைக்கும். ஆமாம் உடன்பிறப்பே - புதுவை மாநிலத் தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையை புதுவையில் வெளியிட்டு உரையாற்றிடும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. ஒரு கட்சியினர் புதுவைக்கான தேர்தல் அறிக்கையை சென்னையிலே வெளியிட்டதாகச் செய்தி படித்திருப்பாய்! நல்லவேளை; புதுவை மக்களை சென்னைக்கு வரச்சொல்லி - அவர்களிடம் தேர்தல் வாக்குறுதிகளை வழங்காமல் விட்டார்கள்! தேர்தல் அறிக்கை வெளியிடவே தேர்தல் நடைபெறும் மாநிலத்துக்குச் சென்றிட விரும்பாதவர்கள், அந்த மாநிலத்து மக்களை தேர்தல் முடிந்த பிறகு எப்படி மதிப்பார்கள் என்பதை அந்த மாநில மக்கள்தான் யோசித்துப் பார்க்க வேண்டும். என் செய்வது? அண்ணா நினைவு நாளில் அண்ணா சதுக்கத்திற்குச் செல்வதையே மறந்து விடுகிறவர்கள் அல்லவா; அண்ணா பெயரை வைத்துக்கொண்டு கட்சி நடத்துகிறார்கள்!

அது போகட்டும்; புதுவையில் நமது உடன்பிறப்புகளை சந்தித்துவிட்டுப் பழனித் தொகுதியில் உன்னைக் காண வருகிறேன்.

திருச்சியில் மூன்று நாட்கள் மாநில மாநாட்டுப் பேரணியிலும், மாநாட்டுப் பந்தலிலும் ஆசைதீர நாம் சந்தித்தோம் - மகிழ்ந்தோம் - கழகப் பணிகளை வகுத்தோம் - இருந்தாலும் பாரேன்; பத்து நாட்கள் கூட முடியவில்லை - அதற்குள் பரபரக்கிறது இதயம் - உன்னைப் பார்க்க வேண்டுமென்று!

வாய்ப்புக்களும் நமக்கு வாகாகத்தான் அமைகின்றன!

பாண்டிச்சேரியில் மாநில சட்டமன்றத் தேர்தல்! பழனியில் நாடாளுமன்றத் தேர்தல்!

ஒளி படைத்த கண்ணினாய் வா! வா! வா! என்று முண்டாசு கவிஞன் பாரதி அழைத்தானே - அப்படி அழைக்கிறேன் புதுவையில் உன்னை!

கிளம்பிற்றுக் காண் தமிழச் சிங்கக் கூட்டம்! என்று கிழக்கு வானச் சூரியன்போல எழுந்து நின்று குரல் கொடுத்தானே - பாவேந்தன்; அந்தச் சிங்கக் கூட்டத்தைப் புதுவையில் காண்கிறேன்!

பழம் நீ! என்றனர் சிவனும், சக்தியும் முருகனைப் பார்த்து எனப் புராணம் கூறும் பழனியில் பழம் இதோ! என வெற்றிக்கனி வழங்கிடக் கழகத்தின் போர் வாட்களாம் புறநானூற்றுச் செம்மல்கள் அண்ணா வழியில் அயராதுழைத்திடும் செய்திகேட்டுச் சிந்தை குளிர்கிறேன்.

சொல்வதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம் - எனும் நமது கழகத்தின் தேர்தல் வாக்குறுதி எத்துணை வாய்மையுடன் நிறைவேற்றப்பட்டு வருகிறது என்பதனை தி.மு.கழக ஆட்சியின் சாதனைகளையும், டெல்லியில் தேசிய முன்னணி ஆட்சியின் சாதனைகளையும் எடுத்துக்காட்டி மக்களை அணுகிடுவோம்! மகத்தான வெற்றி பெற்றிடுவோம்!

வருகிறேன்!

சந்திக்கிறேன்!

அன்புள்ள,

மு. க.

19-02-1990

1644. அவர்களை அடையாளம் காட்டுவோம்!

உடன்பிறப்பே,

ஒரு காங்கிரஸ் நண்பரின் அறிக்கை பார்த்தேன். மறைமலை நகர் என்ற பெயரை மாற்றிவிட்டு காமராசர் பெயரை வைக்க வேண்டுமென்று கிளம்பியுள்ள தமிழ்த் துரோகக் கூச்சலுக்கு தமிழ் உணர்வுள்ளவர் என்று நான் இன்னமும் நம்பியிருக்கிற அந்தக் காங்கிரஸ் நண்பர் எப்படித்தான் துணை போகிறாரோ எனக்குத் தெரியவில்லை!

கட்சிக் கட்டுப்பாடு! நான் என்ன செய்வது? என்று அவர் என்னை வேதனையுடன் பார்ப்பது எனக்குப் புரிகிறது! 1938-ல் இந்தியைக் கட்டாயமாகத் திணித்திட காங்கிரஸ் அமைச்சரவை முனைந்தபோது தமிழ் உணர்வின் எழுச்சியினால் அந்தக் கட்சியை விட்டே வெளியேறி இந்தி எதிர்ப்பு இயக்கப் போர்த்தளபதியாகக் கிளர்ந்தெழுந்த நாவலர் சோமசுந்தர பாரதியாரையும், மாவீரர் என்.வி. நடராசன் அவர்களையும் எண்ணிப் பார்க்கிறேன்! தாய்த் தமிழுக்கே - அந்தத் தமிழ் வளர்த்த பெருந்தகை மறைமலையடிகளுக்கே ஒரு களங்கம் விளைத்திடும் செயல் புரிந்திடுகின்றனர் காங்கிரசார் என்கிறபோது, ஒரு காலத்தில் தமிழுணர்வில் திளைத்த அந்தத் தடந்தோள் தோழருக்கு இனியுமா கட்சிக் கட்டுப்பாடு?

மறைமலை ஒரு பெரும் அறிவுச் சுடர் தமிழ் நிலவு, சைவவான், தென்னாடு பன்னெடுங்காலம் தன்னை மறந்து உறங்கியது, அவ்வுறக்கம் போக்கிய பெருமை மறைமலை அடிகளுக்கு உண்டு. அவர்தம் தமிழ்ப்புலமையும், வட மொழிப்புலமையும், ஆங்கிலப் புலமையும், ஆராய்ச்சியும், பேச்சும், எழுத்தும் தொண்டும் மறைமலை அடிகளால் விழிப்புற்றது என்று மண்ணும் முழங்கும், மரமும் முழங்கும்.

3.4.1949 என நாளிட்ட அணிந்துரையொன்றில் தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்கள் மறைமலை அடிகளாரைப் பற்றி எழுதியுள்ளதில் ஒருபகுதி இது!

அந்த மறைமலையாம் தமிழ் மாணிக்க மலையின் மாசறு பெயரைத்தான் மதோன்மத்தர்கள் சிலர் தார்கொண்டு அழித்தனர். தடிகொண்டு தாக்கினர். அந்தக் காரியத்தை எமது காங்கிரஸ் கட்சியில் காமராசர் சிலையை நேரு பெருமான் வந்து திறந்து வைத்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வியந்து போனேன். உண்மையை இவர் கூடவா திரித்துக் கூறுவது? நியாயந்தானா இது?

சென்னையில் காமராசர் சிலையை அமைத்ததும் - அந்தச் சிலையை பிரதமர் நேருவை அழைத்துத் திறப்பு விழா நடத்தியதும் சென்னை மாநகராட்சி மன்றம்! அதாவது 9.10.1961-ல்!

அப்போது சென்னை மாநகராட்சி மன்றம் தி.மு.கழகத்தின் வசமல்லவா இருந்தது! தி.மு.க. மேயர் அல்லவா அந்தச் சிலை திறப்பு நிகழ்ச்சிக்கென பெருமுயற்சி எடுத்துக்கொண்டவர்!

அதற்குப்பின்னால் ஒரு கதையே உண்டே! நடந்த கதை! தி.மு.க. மேயரும் உறுப்பினர்களும் வந்து அண்ணாவைச் சந்தித்து அண்ணா சிலை வைக்க வேண்டுமென்று விருப்பத்தைத் தெரிவித்தனர். என் சிலை வேண்டாம்! முதலமைச்சர் காமராசர் சிலை அமைத்து அதனைப் பிரதமர் பண்டித நேருவை அழைத்துத் திறந்திடுங்கள்! என்று தெரிவித்தவராயிற்றே அண்ணா!

சென்னையில் தி.மு.க. மாநகராட்சி மன்றம் காமராசரின் சிலை வைத்ததோடு தி.மு.கழகம் அவரை மறந்து விடவில்லையே!

ஆயிரம் அரசியல் வேறுபாடுகள் இருப்பினும் - அவற்றைக் கடந்த அரசியல் பண்பாட்டுடன் தி.மு.க. ஆட்சி நடந்து கொண்டதே!

காமராசருக்கு உடன்பிறந்த சகோதரன் கூட செய்ய முடியாத கடமையை முதலமைச்சர் கருணாநிதி அவர்கள், காமராசர் மறைந்தபோது செய்தார்.

-என்று எதிர்க்கட்சித் தலைவர் ராஜாராம் நாயுடு அவர்கள் பாராட்டிப் பேசியது இன்னமும் சட்டமன்ற மேலவைக் குறிப்பேட்டில் இடம் பெற்றிருக்கிறதே!

அரசியல் வேறுபாடுகளை மனத்திற்கொண்டு அதற்கேற்ப நடந்திருந்தால் -

காமராசருக்கு கிண்டியில் காந்தி மண்டபத்திற்கு அருகே நினைவு மண்டபம் - கடற்கரை சாலைக்கு காமராசர் பெயர் - விருதுநகரில் காமராசர் பிறந்த வீடு நினைவு இல்லம் - சென்னையில் வாழ்ந்த வீடு நினைவு இல்லம் - காமராசர் பல்கலைக் கழகம் - காமராஜர் மாவட்டம் - காமராசர் விமான நிலையம் - என இத்தனை நினைவுச் சுடர்கள் அந்தத் தியாகச் சுடருக்காக திராவிட இயக்க ஆட்சிகளில் எழுந்திருக்குமா?

சென்னை விமான நிலையத்துக்கு காமராசர் பெயர் சூட்டும் முயற்சி இப்போது!

கடந்த நான்கைந்து மாதங்களுக்கு முன்பே, சிதம்பரனார் மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்துக்குக் காமராசரின் அன்னை சிவகாமி அம்மையாரின் பெயரை சூட்டியவனல்லவா இந்தக் கருணாநிதி!

சென்னை ஸ்டான்லி குழந்தைகள் மருத்துவப் பிரிவு கட்டிடத்துக்கு பண்டித நேருவின் பெயரை அண்மையில்தான் சூட்டினேன்.

ஈரோடு விருந்தினர் மாளிகைக்கு ஆச்சார்ய நரேந்திர தேவ் பெயர் இந்த ஆட்சியில்தான் சூட்டப்பட்டது.

மதுரை அருப்புக்கோட்டை மேம்பாலத்துக்கு காங்கிரஸ் தியாகி என்.எம்.ஆர். சுப்பராமன் பெயரை நான்தான் சில மாதங்களுக்கு முன்பு சூட்டினேன்.

கன்யாகுமரி பேருந்து நிலையத்துக்கு கவிமணி தேசிய விநாயகம் பிள்ளையின் பெயர் சூட்டப்பட்டதும் இந்த ஆட்சியில்தான்!

வ.ஆ. அம்பேத்கார் மாவட்டத்தில் வேலூர் பேருந்து நிலையத்துக்கு அண்மையில் சூட்டப்பெற்ற பெயர் காங்கிரஸ் தியாகி ஜனாப் உபயதுல்லா பேருந்து நிலையம் என்பதாகும்!

கத்திப்பாராவிலிருந்து அண்ணா நகர் செல்லும் சாலைக்கு சமீபத்தில்தான் பண்டித ஜவஹர்லால் நேரு சாலை எனப் பெயரிடப்பட்டது.

திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டிடத்திற்கு சுதந்திரப்போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவா மாளிகை என்று கடந்த சில தினங்களுக்கு முன் நான்தான் பெயர் சூட்டினேன்.

காமராசர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திற்கு முன்னாள் முதலமைச்சரான குமாரசாமி ராஜா அவர்களின் பெயரால் குமாரசாமி ராஜா நகரம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலைக்கு உத்தமர் காந்தி சாலை என்று கடந்த ஆண்டு செப்டம்பர் திங்களில்தான் பெயரிடப்பட்டது.

நாமக்கல்லார் நூற்றாண்டு விழாவையொட்டி சென்னை தலைமைச் செயலக பத்து மாடிக் கட்டிடத்துக்கு நாமக்கல் கவிஞர் மாளிகை எனப் பெயர் வைக்கப்பட்டது சில மாதங்களுக்கு முன்பு!

தமிழ்ப்பற்றை, இன உணர்வை, நாட்டுப்பற்றை, தியாகத்தை மதிக்கும் வகையில் கட்சிக் கண்ணோட்டமின்றி சூட்டப்பட்ட திருப்பெயர்கள்தான் இவைகள்!

இத்தனையும் மக்கள் மறந்து விடுவார்கள் என நினைத்து தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் நியமனத் தலைமை, மறைமலை நகரில் மாநாடு நடத்தினோம் - அப்போது காமராசர் பெயர் வைத்தோம் - பிறகு நாங்களே அதனை மறைமலை நகர் ரயில்வே ஸ்டேஷன் என்று குறிப்பிட்டு மத்திய அரசுக்குக் கடிதம் எழுதினோம் - இப்போது திடீரென்று நினைத்துக்கொண்டு காமராசர் பெயரைப் பயன்படுத்தி தி.மு.க. ஆட்சியை எதிர்த்துப் போராட்டம் நடத்தப் போகிறோம் என்று அறிக்கைமேல் அறிக்கையாக விட்டுக் கொண்டிருக்கிறது!

அண்ணா பிறந்த செங்கை மாவட்டத்துக்குத்தான் அந்தப் பெயர் பொருத்தமென்று செங்கை அண்ணா மாவட்டம் எனப் பெயர் சூட்டிவிட்டு, திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் என மதுரை மாவட்டத்தின் ஒரு பகுதிக்கு பெயர் மாற்றினோம்! திண்டுக்கல் பகுதி, காயிதே மில்லத் அவர்கள் சம்பந்தம் செய்து கொண்ட இடம்! அவர் பிறந்த மாவட்டத்துக்கு வேறு பெயர் கடந்த ஆட்சியில் வைக்கப்பட்டு விட்டதால் திண்டுக்கல் மாவட்டத்துக்கு அவர் பெயரை வைத்தோம்! இரண்டு நாளைக்கு முன்பு மதுரை மாலை ஏடு ஒன்றில் காங்கிரஸ் தேர்தல் விளம்பரமொன்று

பார்த்தேன். காயிதே மில்லத் என்ற பெயரை மறைத்துவிட்டு அந்த மாவட்டத்தை அண்ணா மாவட்டமெனக் குறிப்பிட்டுள்ளனர்.

காயிதே மில்லத் என்றால் காங்கிரசாருக்கு அவ்வளவு கசப்பு! காழ்ப்பு!

அதேபோல் தமிழ்க்கடல் மறைமலை அடிகளார் மீது அத்துணை வெறுப்பு! அதனால் அந்த சின்னஞ்சிறு புகைவண்டி நிலையக் கட்டிடத்தின் பெயருக்குக்கூட மறுப்பு!

உடன்பிறப்பே! நீயும் நானும் மட்டுமல்ல, தமிழ் ரத்தம் உடலில் ஓடுகிற ஒவ்வொருவரும் காங்கிரசில் உள்ள தமிழ் விரோதிகளை - காங்கிரஸ் கட்சியின் தற்காலிக தலைமையின் தமிழினப் பகைமைப் போக்கை - உணர்ந்துகொள்ள அவர்களது செயலே ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்து விட்டது.

நடுநிலையுடன் சிந்திக்கக் கூடியவரும் விடுதலை இயக்க தியாகியுமான பழுத்த காங்கிரஸ்வாதி கிருஷ்ணசாமி பாரதியார்கூட தமிழ்நாடு காங்கிரசின் தற்காலிக தலைமையின் தகாப் போக்கை, மறைமலை அடிகளார்க்கு மாசு கற்பிக்கும் மோசடியைக் கண்டித்து அறிக்கை விடுத்துள்ளார் என்பதைப் பார்க்கும்போது, அகம் மகிழ்கிறோம் நாம்!

அரசியல் ஆதாயத்துக்காகப் பெருந்தலைவர் காமராசரின் பெயருக்கு அபகீர்த்தி விளைவிக்க முனைவோரின் கூற்றுக்காக அனுதாபம் தெரிவிப்போம்!

அவர்களைத் தமிழ்நாட்டுக்கு அடையாளம் காட்ட இந்த ஒரு போராட்டமே போதும்!

அதே சமயம், மறைமலை அடிகளார் உருவாக்கிய தமிழ் உணர்வை நாடு முழுதும் பரப்பிடும் பணியையும் தொடர்ந்திட இதுவும் ஒரு நல்வாய்ப்பெனக் கொள்வோம்!

அன்புள்ள,

மு. க.

23-02-1990

1645. கழகத்தின் எஃகுத் தூண் செ. கந்தப்பன்!

உடன்பிறப்பே,

கனியிடை ஏறிய சுளையின் சுவை போல் கடித வாயிலாக நமக்குள் விளைந்த நட்பும் உறவும் நலிவுறாப்பாச உணர்வும் இடையில் சில காலம் தேக்கமுற்று; மீண்டும் பெருவெள்ளமெனப் பெருகிடும் என எண்ணியிருந்தபோது; கண்ணீர் கொண்டு உனக்குக் கடிதம் எழுதும் நிலைமை எனக்கு ஏற்படுமென்று நான் எதிர்பார்க்கவே இல்லை!

இடையில் உருவான அகழியின் மீது எத்தனையோ பிரச்சினைகளைப் பாலமாக உருவாக்கி இணைப்புக் கடிதம் எழுதலாமென்றிருந்த என் கரத்தைத் தட்டிவிட்டு, என் சிந்தையைச் செயலற்றதாக்கி விட்டார் நமது கந்தப்பன்!

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்ற செய்தி கூடத் தெரிவிக்கப்படவில்லை மரணத்துடன் போராடுகிறார் என்ற தொலைபேசிச் செய்தி மட்டுமே வந்தது - பிற்பகல் மூன்று மணிக்கு சோற்றில் கைவைத்த நான், உதறிவிட்டு உடனே மருத்துவமனைக்குப் பறந்தேன்!

அய்யோ என் செய்வேன் - அதற்குள் அந்தக் கழகத் தளபதியின் உயிர் பறந்து விட்டதே!

சில நாட்களுக்கு முன்புதான் அதே பொது மருத்துவமனையில் இலவச இருதய அறுவை சிகிச்சைப் பிரிவுக்கான தொடக்க விழா நடைபெற்றது! எதிரே முன்வரிசையில் கந்தப்பன் அமர்ந்து பேச்சுக்களையும் நிகழ்ச்சிகளையும் கரவொலி செய்து பாராட்டிக் கொண்டிருந்தார்! எனினும் என் நெஞ்சில் ஒரு சுமை! காரணம் கந்தப்பன் முகத்தில் பழைய ஒளி இல்லை! இனம் தெரியாத ஒரு சோர்வே தெரிந்தது.

விழா முடிந்ததும், மேடையிலிருந்து இறங்கி - கந்தப்பன் அமர்ந்திருந்த இடம் சென்று, ஏன் ஒரு மாதிரி இருக்கிறீர்கள்? என்று கேட்டேன். அவர் அதை மறுத்து என்னிடம் உவகை பொங்கப் பேசி, வழியனுப்பி வைத்தார்!

அதற்குள் அவரை வழியனுப்பி வைக்கும் பணியை எனக்கு அளித்திடுவார் என நான் நினைக்கவே இல்லை!

1962 திருச்செங்கோடு பாராளுமன்ற இடைத் தேர்தலில் கந்தப்பன்தான் நிற்க வேண்டும் அதற்கு நீதான் அவரை தயார் படுத்தவேண்டும் என்று அண்ணா எனக்கு ஆணையிட்டார்.

கந்தப்பனை, கடற்கரை மணலில் மூன்று நாட்கள் உட்கார வைத்து அவரைத் தேர்தலில் நிற்கச் செய்ய நான் எடுத்த முயற்சி வெற்றி பெற்றது! இறுதியாக நிற்பதற்கு ஒப்புக் கொண்டார்.

கல்லூரிப் பேராசிரியர் கந்தப்பன் திருச்செங்கோடு இடைத்தேர்தல் தி.மு.க. வேட்பாளரானார்!

அவர் நிற்பதற்கு அத்துணை முயற்சி எடுத்த நானும் - எனக்கு ஆணையிட்ட அண்ணாவும் - மற்றும் நமது பேராசிரியர் போன்ற கழகத் தலைவர்களும் அதே சமயம் விலைவாசி உயர்வுக் கண்டனப் போரில் ஈடுபட்டு சிறைகளில் அடைபட்டிருந்தோம்.

பணபலம், படைபலம், அதிகார பலம், அந்தஸ்து பலம் இவற்றை எதிர்த்து கந்தப்பன் டெபாசிட் வாங்குவாரா? என்று மாற்றார் முகாமிலிருந்து கேலியும் கிண்டலும் பிறந்தன!

கடுமையான போட்டியில் கந்தப்பன் வென்றுவிட்டார் மிகக் குறுகிய வித்தியாச வாக்குகளில் என்ற செய்தி காராக்கிரகத்தில் பூட்டப்பட்டிருந்த எங்களுக்கு நள்ளிரவில் தெரிவிக்கப்பட்டது!

அந்த இனிய செய்தி கேட்டு சிறைக் கோட்டத்தில் இருந்த நாங்கள் துள்ளிக் குதித்து கந்தப்பன் வாழ்க! கழகம் வாழ்க! என்று முழங்கினோம்; விடிய! விடிய!!

இன்று அழுது புலம்புகிறோம்; அந்த வெற்றிச் சிங்கம் கந்தப்பன்; சாவில் வீழ்ந்துவிட்டது கண்டு

ஆழ்ந்த அரசியல் ஞானமும்,
அப்பழுக்கற்ற கொள்கை உறுதியும்,
கழகம் காப்பதில் கடமை உணர்வும்,

என்னை அண்ணே! என்று அழைக்கும் போது ஒரு வற்றாத பாசமும் - கந்தப்பனை நமது கழகத்துக்கு அடையாளம் காட்டும் அழியாத சான்றுகளாகும்!

உடன்பிறப்பே, ஒவ்வொரு நாள் மாலையிலும் அண்ணா அறிவாலயத்தில் என்னுடன் அமர்ந்து தொலைக்காட்சிச் செய்தி பார்த்து, விமர்சிக்கும் கந்தப்பன் - இன்றைக்கு நீயும் நானும் பார்க்கும் தொலைக்காட்சிக்குச் செய்தியாகி விட்டார்!

அதைப் பார்த்து என் சிந்தை அணு ஒவ்வொன்றும் செந்தழலில் இட்ட மெழுகுத் துண்டங்களாகின்றன!

பெரும் இழப்பு! கழகத்தின் எஃகுத் தூண் கந்தப்பன் மறைவு நமக்கு மிகப் பெரும் இழப்பு!

உடன்பிறப்பே; நீதான் எனக்கு ஆறுதல் சொல்ல வேண்டும்!

அன்புள்ள,

மு. க.

12-05-1990

1646. யார் இவர்கள்? யார் இவர்கள்?

உடன்பிறப்பே,

மலிவு விலையில் மது என்று அரசாங்கமே தயாரித்து விற்பதா?

மலிவு விலையில் மது என்று அரசாங்கமே தயாரித்து, அதனை அரசாங்கமே ஏலம் விட்டு விநியோகம் செய்வதா?

இப்படியொரு குரல், அ.தி.மு.க. - காங்கிரஸ் கட்சிக்காரர்களால் எழுப்பப்படுகிறது என்பதை அறிவாய்! ஏடுகளிலும் அதற்கு நல்ல விளம்பரம்!

உண்மையிலேயே ஒரு சிலர் அல்லது ஒரு சில அமைப்புகள்; மதுவினால் விளையும் தீமைகளை உணர்ந்து - இந்தியாவில் எங்குமே மதுபானம் இருக்கக்கூடாது என்ற தூய எண்ணமுடன் மதுவிலக்குக் கொள்கையில் தீவிரம் காட்டுகிறார்கள் - அது எனக்கும் உனக்கும் தெரியும் ஆனால் அரசியல் காரணங்களை அடிப்படையாக வைத்து சிலர்; தங்களை காந்தியடிகளாகக் கருதிக்கொண்டு மதுவிலக்குக் கொடி தூக்குவதுதான் வேடிக்கையாக இருக்கிறது! விலா நோகச் சிரிப்பையும் வரவழைக்கிறது!

மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்துவதில் தோல்வி ஏற்பட்டது என்பதே எங்கள் எண்ணம். மகாவீரர், வள்ளுவர், நாயன்மார்கள், ஆழ்வார்கள், பட்டினத்தார், ராமலிங்க அடிகள், காந்தி, காமராஜர், அண்ணா அனைவரும் முயன்று பார்த்தார்கள். முடியவில்லை. எனவே மதுக்கடைகளை மீண்டும் திறக்க சட்டதிருத்தம் கொண்டு வருகிறோம்

என்று 1981-ல் பேரவையில் அறிவித்து ஐந்து ஆண்டுகள் கடைகளைத் திறந்து வைத்த எம்.ஜி.ஆர். அரசின் நிதியமைச்சர் நாவலர் அவர்கள் கூட இன்று நம்மை நையாண்டி செய்கிறார்.

சமுதாயத்தில் சிலர் மது அருந்திப் பழக்கப்பட்டு விட்டதால், மது கிடைக்காதவர்களுக்கு கள்ளச்சாராயம் - கள்ளக் கள் - சமுதாய விரோதிகளிடமிருந்து கிடைக்கிறது. அவர்கள் அதை விற்றுப் பணம் சம்பாதிக்கிறார்கள். இந்த நிலையில் சமுதாயத்தையும், மக்கள் உடல் நிலையையும் காப்பாற்ற - சாக்கடைத் தண்ணீருக்குப் பதிலாக, குளத்து நீரைக் கொடுப்பதுபோல் அரசு கொடுக்கும் மதுவைக் கொடுக்க முன்வருகிறோம்

இப்படிப் பேசியவர் யார் தெரியுமா? அ.தி.மு.க. அமைச்சர் எஸ்.டி. சோமசுந்தரம்! எங்கே? சட்டசபையில்! எப்போது? 31.8.1981-ல்! இவர், இப்போது மதுவிலக்கு கீதத்தை ஏயப்பா; எட்டு கட்டை சுருதியில் அல்லவோ பாடுகிறார்!

நாடாளுமன்றத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களே மதுவிலக்குக்கொள்கை வெற்றிபெறவில்லை என்பதையும் - மத்திய அரசு அளவிலே சட்டமாகக் கொண்டுவர இயலாதென்பதையும் - சுட்டிக்காட்டியிருப்பதை நான் சட்டப் பேரவையில் ஆதாரங்களுடன் விளக்கியிருக்கிறேன்.

இவ்வளவுக்கும் பிறகு இந்திரா காங்கிரசாரும், அ.தி.மு.க.வினரும் மதுவிலக்கு கோஷம் போடுவதின் ரகசியம் என்ன என்று சிந்திக்கத்தான் வேண்டியிருக்கிறது!

கள்ளச் சாராய வியாபாரிகள்; இவர்கள் நடத்துகிற கண்டன ஊர்வலங்களைப் பார்த்து களிபேருவகை கொள்கிறார்களாம்! இவர்களது கண்டனப் பேச்சுக்களை வெகுவாக ரசித்துப் பாராட்டுகிறார்களாம்!

எப்படியாவது எந்தக் கட்சிப் புண்ணியத்திலாவது மலிவு விலை மது வராமல் இருந்துவிட்டால் - அந்த வியாபாரிகளுக்கு வியாபாரம் பாதிக்கப்படாமல் இருக்குமல்லவா? அதனால்தான் அவர்களின் அமோகமான ஆதரவு; மறைமுகமாக இவர்களுக்கு வழங்கப்படுகிறதாம்!

மலிவு விலை மதுவை கடந்த காலத்தில் தனியார் தயாரித்தனர்!

இப்போது அரசே தயாரிக்கிறது என்பதால் - தனியார்கள் போர்க்கொடி தைத்து இவர்கள் கைகளில் கொடுக்கிறார்களாம்!

மலிவு விலை மது வந்தால்; தங்கள் பிழைப்பில் மண் விழுமே என்று கவலைப்படும் கள்ளச் சாராய மன்னர்கள், அதைத் தடுத்து நிறுத்த இவர்கள் பயன்படுகிறவரையில் பயன்படட்டும் என்று சுவரொட்டி செலவுகளையும், ஊர்வலம் மற்றும் மேடைச் செலவுகளையும் ஏற்றுக் கொள்கிறார்களாம்!

தூய நினைவுடன் மதுவிலக்கு சட்டம் இந்திய நாடு முழுமையும் அமலாக வேண்டும் எனப் பேசுவோர் நமது மரியாதைக்குரியவர்கள்!

ஆனால்!

இவர்கள்!

யார் என்பதைப் பொதுமக்களே தீர்மானிக்கட்டும்!

அன்புள்ள,

மு. க.

16-05-1990

1647. கழகம் காக்கும் காவல் தெய்வமே!

உடன்பிறப்பே,

எத்தனை ஏடுகளில் என் பிறந்த நாள் குறித்து நான் அறிக்கைகள் விடுத்தாலும், விளம்பரங்கள் வழங்கினாலும், உடன்பிறப்பே! என உன்னை விளித்து நான் எழுதும் கடிதம் ஒன்றே உன்னையும் என்னையும் களிப்பில் ஆழ்த்தும் என்பதை உணராதவனல்ல நான்!

இன்று உன் முகம் காணுகிறேன்! அகம் குளிர்கிறேன்!

1924-ஆம் ஆண்டு அஞ்சுகம் முத்துவேலர் என்னை பெற்றெடுத்த ஆண்டு! ஆயினும் நான், என் பிறந்த ஆண்டாகக் கருதுவது - என் கரங்களில், புலி, வில், கயல் பொறித்த தமிழ்க் கொடி தாங்கி 1938-ஆம் ஆண்டு இந்தி ஆதிக்க எதிர்ப்புப் பவனி நடத்திய அந்த ஆண்டினைத்தானே!

பெரியார்க்குப் பிள்ளையாய் - பேரறிஞர் அண்ணாவுக்குத் தம்பியாய் - உன் போன்றோர்க்கு உடன்பிறப்பாய் என்னை பிறக்கச் செய்த மகத்தான ஆண்டன்றோ அது!

குலப் பெருமை - குடும்பப் பெருமை - கோமான் சீமான் வீட்டுப் பிள்ளை என்ற கௌரவம் - இவையேதுமில்லா எனக்கு எல்லாமே நீதான்!

பலமுறை அடக்குமுறைக் கணைகள் என்னைத் தைத்த போதெல்லாம் அவற்றைத் தாங்கிய கேடயம் நீதானே!

சிறைக்கோட்டம் என்னை விழுங்கிய ஒவ்வொரு முறையும் என் நெஞ்சத் துணிவாக எனக்கு வாய்த்ததே உன் திருமுகம்தானே!

எமர்ஜென்சி சோதனைத் தீயில் என்னைக் கருக்க நினைத்தோர் தோற்றோடிட அணையுடைத்த வெள்ளமெனப் பெருக்கெடுத்ததும் என் உயிரே! உடன்பிறப்பே! நீதானே!

இவன் யார்? இவனுக்கென்ன இந்த உயர்வு? என இழிமொழி - பழிமொழி - வாரியிறைத்து வயிறு எரிந்திடும் வஞ்சகம் பொடிப் பொடியாக போர் வாள் சுழற்றிக் கழகப் பாடி வீடு காத்திடும் கண் துஞ்சாக் காவலும் நீதானே!

எவர் எவர் வந்து வாழ்த்தினால் என்ன? அவரெல்லாம் என் அன்புக்கு நன்றிக்கு உரியோர்! மறுக்கவில்லை நான்!

ஆனால் உடன்பிறப்பே! உனைக் காணும்பொழுது மட்டும்தானே என் இதயத் துடிப்புகள் யாழ்மீட்டும் போது எழும் இசையை எழுப்புகின்றன!

உன்னைக் கண்டால்தானே என் சுவாசப் பைகளில் பிராணக் காற்றே நுழைவேன் என்கிறது!

வா, உடன்பிறப்பே! நீ என்னை வாழ்த்துகிறாய் - நான் உன்னை வணங்குகிறேன்; காரணம் - இந்தக் கழகம் காக்கும் காவல் தெய்வம் நீ!

அன்புள்ள,

மு. க.

03-06-1990

1648. காஞ்சி விஜயமும் - கடுமொழியும்! - 1

உடன்பிறப்பே,

ஆறு கோடி ரூபாய் மாநில அரசின் செலவில் பனிரெண்டு தடவை தமிழ்நாட்டில் சட்டசபைத் தேர்தல் பிரச்சாரத்துக்காக கவர்னர் ஆட்சின்போது ஓராண்டுக் காலத்திற்குள் சுற்றுப்பயணம் செய்த பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள்; இப்போது காஞ்சிப் பெரியவரின் பிறந்த நாள் விழாவுக்கு வாழ்த்துரைக்க முன்னாள் பிரதமராகவும் இந்நாள் எதிர்க்கட்சித் தலைவராகவும் காஞ்சி விஜயம் மேற்கொண்டு - காஞ்சியில் பத்திரிகையாளர்களைச் சந்தித்து உரையாடித் திரும்பியிருக்கிறார்.

எதிர்க்கட்சித் தலைவராகி விட்டோமே என்று கவலைப்படாமல் - சரியாகவோ தவறாகவோ அந்தப் பொறுப்பிலும் செயலாற்றுவது தனது கடமையெனக் கொண்ட ராஜீவ் அவர்கள் திகழ்வது பாராட்டுதற்குரிய ஒன்று என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை!

ஆனால் ஒன்று - இன்னமும் அவரை விட்டு இரண்டாம் உலகப்போரில் மாண்டு மறைந்த கோயபல்ஸ் என்ற அண்டப்புளுகனின் ஆவி விலகி விடவில்லையே என்பதுதான் கவலைக்குரியதாக உள்ளது. அப்படியென்ன காஞ்சியில் ராஜீவ் காந்தி பொய்களை உதிர்த்து விட்டார் என்று கேட்கத் தோன்றும்!

நம்நாடு இன்று பல நெருக்குதல்களுக்கு ஆளாகியுள்ளது, நாடு விடுதலை பெற்ற பிறகு இதுபோன்ற நிலை இப்போதுதான் ஏற்பட்டுள்ளது. காஞ்சிப் பெரியவர்தான் இன்றைய சூழ்நிலையில் நாட்டுக்கு வழி காட்ட வேண்டும்

பெரியவரை வாழ்த்தும் விழாவில் ராஜீவ் காந்தி ஆற்றிய உரையின் ஒரு முக்கிய பகுதி இது!

நம் நாடு இன்று பல நெருக்குதல்களுக்கு ஆளாகியுள்ளது,

இதனை யாரும் மறுப்பதற்கில்லை! ஆனால்; ஆற்றில் அடித்துச் செல்லப்படும் ஒரு நரி; உலகம் போச்சு! உலகம் போச்சு! என்று கதறியதாகவும் - கரையில் நின்றிருந்த ஒருவன் அதைக் காப்பாற்றி உலகம் எங்கே போச்சு? என்று கேட்டபோது; நான் மூழ்கிப் போயிருந்தால் என்னைப் பொறுத்தவரையில் உலகம் போய்விடுமல்லவா? என்று பதில் அளித்ததாமே - அந்தக் கதைதான் ராஜீவின் பேச்சைப் படிக்கும்போது நமக்கு நினைவுக்கு வருகிறது!

அவர் பிரதமராக இல்லாததால் நம்நாடு இன்று பல நெருக்குதல்களுக்கு ஆளாகியிருக்கிறது என்பதுதானே அவரது உள்ளார்ந்த வேதனை! அதனால்தான் நாடு விடுதலை பெற்ற பிறகு இதுபோன்ற நிலை இப்போதுதான் ஏற்பட்டிருக்கிறது என்று விடுதலை பெறுவதற்கு முன்பிருந்தே வாழ்ந்து கொண்டிருக்கும் முதியோர்கள் இந்தியாவில் இன்னமும் இருப்பதை மறந்துவிட்டுப் பெரும்பொய்யைக் கூறியிருக்கிறார் காஞ்சி விழாவில்!

நாடு விடுதலை பெற்ற பிறகுதான் சீன ஆக்கிரமிப்பு நடைபெற்று, பாதுகாப்பு அமைச்சர் கிருஷ்ணமேனன் பந்தாடப்பட்டு - இந்தியா தனது பகுதியில் சிலவற்றை இழந்து விட்டு நிற்கிறது என்பதை வரலாறு உணர்த்திக் கொண்டுதானிருக்கிறது! மத்தியில் காங்கிரசின் ஆட்சின்போது நடைபெற்ற நிகழ்ச்சிதான் அது!

நாடு விடுதலை பெற்ற பிறகு - காங்கிரஸ் ஆட்சி மத்தியில் இருந்தபோதுதான் காஷ்மீரில் பாகிஸ்தான் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டு, பாகிஸ்தானின் கொடிகள் ஏற்றப்பட்டன என்பதை ஏனோ ராஜீவ் காந்தி மறந்து விடுகிறார்!

நாடு விடுதலை பெற்ற பிறகு - காங்கிரஸ் ஆட்சி மத்தியில் இருந்த போதுதான் பஞ்சாபில் அமிர்தசரஸ் பொற்கோவிலுக்குள் இராணுவம் நுழைந்து ஆயிரக்கணக்கானவர்களைக் கொன்று குவித்த சம்பவம் நடைபெற்றது - அதன்தொடர்ச்சியாக இன்னமும் நாள்தோறும் பத்துக்கு குறையாத கொலைகள் பஞ்சாபின் அன்றாட நிகழ்ச்சிகள் ஆகிவிட்டிருக்கின்றன என்பதை ராஜீவ் காந்தி தனக்கு வசதியாக ஏனோ மறந்து விடுகிறார்?

அன்னை இந்திரா அநியாயமாகக் கொல்லப்பட்டார் - ஆனால் அதே நாளில் டெல்லித் தலைநகரில் ஆயிரக்கணக்கில்

சீக்கியர்கள் குழந்தை குட்டிகளோடு பிணமாக்கப்பட்டதும்; அவர்களில் பலர் உயிரோடு தீயிட்டுக் கருக்கப்பட்டதும் -அந்த நிகழ்ச்சியை - அந்தக் கொடுமையை ராஜீவ் காந்தி அவர்கள் நியாயப்படுத்திப் பேசியதும்; நாடு விடுதலை பெற்ற பிறகுதானே! அதுவும் காங்கிரஸ் கையில் மத்திய ஆட்சி இருந்த கால கட்டத்தில்தானே!

நாடு விடுதலை பெற்ற பிறகுதானே நாட்டு விடுதலைக்காகப் போராடி ஐந்தாண்டுகள், பத்தாண்டுகள் சிறையில் கிடந்த ஜெயப்பிரகாஷ் நாராயண், மொரார்ஜி தேசாய் போன்ற தலைவர்களையும், தேசம் முழுவதும் லட்சக்கணக்கானவர்களையும் எமர்ஜென்சி என்ற பெயரால் மிசாக் கைதிகளாக்கிச் சீரழித்தது! சிறையில் பெண்களை அம்மணமாக்கி அலங்கோலப்படுத்தியது! சிறுநீர் பெய்து மணற்சோற்றில் கலந்துகொடுத்து சாப்பிடச் சொன்னது! இதெல்லாம் நாடு விடுதலை பெற்ற பிறகு காங்கிரஸ் ஆட்சியில் நடந்தவைகள்தான் என்பதை ராஜீவ் காந்தி எத்துணை சுலபமாக ஒதுக்கித் தள்ளிவிட்டார் பார்த்தாயா?

நம் நாடு இன்று பல நெருக்குதல்களுக்கு ஆளாகியுள்ளது என்கிறார்! அவர், தன்னை மட்டும் நினைத்துச் சொல்கிறார் எனினும் பஞ்சாப் படுகொலைகள் தொடர்வது - காஷ்மீர் கலவரம் - பாகிஸ்தான் மிரட்டல் - என்பன போன்ற நிலைகளை நாமனைவரும் எண்ணிப் பார்த்து வேதனைப்படவே செய்கிறோம்.

ஆனால் நாடு விடுதலைபெற்ற பிறகு இந்த நிலை இப்போதுதான் ஏற்பட்டுள்ளது என்று ராஜீவ் காந்தி கூறுவது முழுக்க முழுக்க அரசியல் ஆதாயத்துக்காக அவர் அளக்காமலே கொட்டும் அண்டப் புளுகும் ஆகாசப் புளுகும் அல்லவா?

அலகாபாத் நீதிமன்ற தீர்ப்புக்குத் தலை வணங்காமல் - அரசியல் சட்டத்தையே மிதித்துக்கொண்டு; அடிப்படை உரிமைகளைச் சிதைத்தும் சீரழித்தும் - தனது பதவி பறி போகாமலிருக்கத் தேவைப்படும் சட்டங்களையெல்லாம் நிறைவேற்றிக் கொண்டு; எமர்ஜென்சியை எதிர்த்தவர்களுக்கு முன்னால் எமனுருக் கொண்டு நின்றது மத்தியில் இருந்த காங்கிரஸ் ஆட்சிதானே! அப்போது ராஜீவ் அவர்கள் அரசியலின் பக்கமே

தலை காட்டாமல் இருந்த காரணத்தால்; நாடு விடுதலையடைந்த பிறகுதான் அது நடந்தது என்பதை அறியாமல் பேசிவிட்டாரா?

அவ்வளவு ஏன் - அமேதி தொகுதியில் இதே ராஜீவ் காந்தி அவர்கள் பிரதமராக இருந்துகொண்டு தேர்தலில் போட்டியிட்டபோது; வாக்குச் சாவடிகள் கைப்பற்றப்பட்டு - வாக்காளர்கள் ரத்த வெள்ளத்தில் மிதக்க நேரிட்டு - கொலைகள் விழுந்து - ஜனநாயகத்தின் கழுத்து நெரிக்கப்பட்டதே; அதுவும் நாடு விடுதலை பெற்ற பிறகுதானே! மத்தியில் காங்கிரஸ் ஆட்சின்போதுதானே!

இவைகள் எல்லாம் காஞ்சிப் பெரியவரின் காதுக்கு எட்டாத செய்திகள் என்று ராஜீவ் நம்புகிறாரா என்ன!

உடன்பிறப்பே, மக்கள் கடந்த கால நிகழ்வுகளை எளிதில் மறந்து விடுவார்கள் என்ற ஒரு நம்பிக்கையில் ராஜீவ் காந்தி நமது நாடு குறித்துப் பேசியிருக்கிறார். நமது நாட்டுடன் விடவில்லை அவர்! இலங்கை குறித்தும் பேசியுள்ளார் காஞ்சியில் பத்திரிகையாளர்களிடத்தில்! அத்துடன் நிறுத்தவில்லை; இங்கே தமிழ்நாடே தீப்பற்றி எரிவது போலவும் அதனை அணைத்திட வந்த ஆபத்பாந்தவரைப் போலவும் அவர் காஞ்சியில் நமது கழக அரசையும் கழகத்தையும் கடுமையாக விமர்சித்துள்ளார், அதுபற்றி நாளை கடிதத்தில்!

அன்புள்ள,

மு. க.

09-06-1990

1649. காஞ்சி விஜயமும் - கடுமொழியும்! - 2

உடன்பிறப்பே,

நேற்றைய கடிதத்தில் ஆடு நனைகிறது என்று அமேதி அழுகிறது என்பது குறித்து எழுதியிருந்தேன். காஞ்சியில் ராஜீவ் காந்தி அளித்த பேட்டியில் தி.மு.க. அரசை டிஸ்மிஸ் செய்ய வேண்டும் என்கிற அளவுக்கு உச்ச கட்டத்திற்கே போயிருக்கிறார். கழக ஆட்சியை டிஸ்மிஸ் செய்திடுக என்று அவரது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் டெல்லியில் எழுப்பிடும் கோஷங்களுக்கும், இங்கே அவரது சேனாவீரர்கள் சிலர் கொடுக்கும் குரல்களுக்கும் அவர்தான் பிரதானகர்த்தராக இருக்கிறார் என்பதற்கு காஞ்சியில் அவர் தந்துள்ள பேட்டியே சான்றாக விளங்குகிறது.

இதுவரை இல்லாதபடி நவீனமான ஆயுதங்கள் தமிழகத்தில் தலைதூக்கியுள்ளன. குறிப்பாகக் கடலோர மாவட்டங்களில் விடுதலைப் புலிகளின் நடமாட்டமும், ரகசிய நடவடிக்கைகளும் தீவிரமாகி இருப்பதாக எனக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. ஆயுதங்கள் குவிப்பு என்பது அராஜக அபாயத்தின் முக்கிய கட்டம். அதுதான் இப்போது எட்டப்பட்டுள்ளது. தி.மு.க. அரசு இதில் எந்த தடுப்பு நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறது. தேசிய முன்னணி அரசும், இந்த நிலைமையைப் பார்த்துக்கொண்டு சும்மா இருப்பது துரதிருஷ்டவசமானது.

இப்படி ராஜீவ் காந்தி அவர்கள் - கண்ணீர் வடித்துக் கைக்குட்டைஎடுத்து, அதனைத் துடைத்து, நிருபர்களின் மத்தியில் பிழிந்து காட்டியபோது ஒரு நிருபர் கேட்டிருக்கிறார் -

அப்படியானால் தி.மு.க. ஆட்சியை டிஸ்மிஸ் செய்ய வேண்டுமென்கிறீர்களா?

அதற்கு ராஜீவ் காந்தி அவர்கள், அதில் முடிவு எடுக்க வேண்டியது பிரதமரின் பொறுப்பு என்று பதில் அளித்திருக்கிறார்.

அமைதியாக நடைபெறுகிற மாநில ஆட்சிகளை கலைப்பது என்றால் ராஜீவ் காந்தியின் கட்சிக்கு அந்தக் காலத்திலிருந்து அல்வாத் துண்டு சாப்பிடுவது மாதிரி அல்லவா? அதனால் தி.மு.க. ஆட்சியை கலைக்க வேண்டும் என்று குரல் கொடுப்பதற்குக் காஞ்சிப் பெரியவரின் பிறந்த நாள் விழாவைப் பயன்படுத்திக் கொண்டு ஓடோடி வந்திருக்கின்றார் தமிழ்நாட்டுக்கு!

இதுவரையில்லாத நவீனமான ஆயுதங்கள் இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு வருகின்றன என்கிற ராஜீவின் குற்றச்சாட்டு உண்மை என்பதற்கு சில மாதங்களுக்கு முன்பு உச்சிப்புளியருகே தக்காவலசு என்ற இடத்தில் கடற்கரையோரத்தில் சுமார் நாலு கோடி ரூபாய் மதிப்புள்ள ஆயுதங்கள் புதைக்கப்பட்டிருந்ததை தமிழகப் போலீசார் கண்டுபிடித்துக் கைப்பற்றினார்கள் - ஏ.கே. 47 - ராக்கெட் லாஞ்சர் - மின்னலைக் கருவிகள் - ஆறு மாதங்களுக்குத் தேவையான தோட்டாக்கள் - பயங்கர வெடிகுண்டுகள் - அந்தப் புதை குழியில் இருந்தன.

ஆனால் இவைகள் ராஜீவ் காந்தியினால் குற்றம் சாட்டப்படுகிற விடுதலைப் புலிகளுடையதல்ல என்பதும் - இ.என்.டி.எல்.எப் என்று முத்திரையுடன் காணப்பட்ட அடையாளங்களைக் கொண்டது என்பதும் அப்போதே அறிவிக்கப்பட்ட உண்மையாகும்.

தமிழ்நாட்டில இதுபோன்ற நடவடிக்கைகள், விடுதலைப் புலிகளால் மட்டுமே நடத்தப்படுகின்றன

என்று கூறுகிற ராஜீவ் காந்தியும், அவரது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இலங்கையைச் சேர்ந்த எந்த எந்த தமிழ்ப் போராளிக் குழுக்களை டெல்லியில் ரகசிய இடங்களில் சந்திக்கிறார்கள் என்பதும் - தமிழக அரசுக்குத் தொல்லை தருவதற்காக அவர்களுடன் எப்படித் திட்டங்களைத் தீட்டுகிறார்கள் என்பதும் நமக்குத் தெரியாத ரகசியங்கள் அல்ல! தெரிந்துதான் இருக்கிறது!

எந்தப் போராளிக் குழுவினராயினும், அவர்கள் ஆயுதங்கள் வைத்துக் கொண்டிருக்கவோ - அல்லது வன்முறையில் ஈடுபடவோ, தமிழ்நாடு அரசு அனுமதிக்காது

எனத் திட்டவட்டமாக சட்டப் பேரவையில் அறிவித்ததுடன் - மத்திய அரசுடன் தொடர்புகொண்டு, கடற்கரைக் காவல் மற்றும்

கப்பல் படையின் உதவியும் கோரப்பட்டு, ஏ.கே.47 போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தும் பயிற்சியையும் நமது காவலர் பெற வேண்டு மென்பதற்காக பயிற்சியாளர்களை அனுப்பி வைக்கக் கேட்டு, மத்திய அரசும் அதற்காவன செய்துள்ள நிலையில் - தி.மு.க. அரசு எந்தத் தடுப்பு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறுவது பொறுப்பற்ற பேச்சு அல்லவா? இந்தப் பேச்சுக்கு ஒரு பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவர் - இந்தியத் திருநாட்டின் முன்னாள் பிரதமர் - மீண்டும் பிரதமராக வரவேண்டுமென்று விரும்புகிறவர் - சொந்தக்காரராகலாமா?

எதையும் பேசுவது - எடுத்தேன், கவிழ்த்தேன் என ஏசுவது - பொய்மாலை தொடுப்பது - இட்டுக் கட்டிப் புளுகுவது - இத்தகைய குணாதிசயம் கொண்டவர்கள் சந்து முனை சிந்து பாடிகள் என்று அண்ணா அவர்கள் கூறுவதுண்டு! பாரதத்தின் பிரதமராக இருந்தவர் அந்தப் பட்டியலில் தன்னை இணைத்துக் கொள்ளலாமா?

ராஜீவ் காந்தி பிரதமராக இருந்தபோதுதானே தமிழ்நாட்டில் கடந்த கால ஆட்சியில் விடுதலைப் புலிகள் ஆயுதம் வாங்குவதற்காக ஒரே நாளில் ஒருவர் பெயருக்கு மூன்று கோடி ரூபாயும் இன்னொருவர் பெயருக்கு ஒரு கோடி ரூபாயும் செக்காக தரப்பட்டது அரசின் மூலமாக!

அப்படி ஊக்கப்படுத்தப்பட்ட விடுதலைப் புலிகள், தங்களின் கொத்தடிமைகளாக இருக்க சம்மதிக்கவில்லை என்றதும் இதே ராஜீவ் காந்தி அவர்கள் டெல்லியில் நடந்த விருந்து ஒன்றில் பிரபாகரன் தலை தனது காலடியில் வந்து விழ வேண்டுமென்று கூச்சலிடவில்லையா? (After all two thousand boys) கேவலம் இரண்டாயிரம் பையன்கள் என்னையும், என் இராணுவத்தையும் என்ன செய்துவிட முடியுமென்று கொக்கரிக்கவில்லையா?

பஞ்சாப்பானாலும், காஷ்மீரானாலும், இலங்கையில் தமிழ் ஈழமானாலும் எல்லாவற்றிலுமே அரை வேக்காடு அரசியல் நடத்தித்தானே இந்த நிலைகளை உருவாக்கிவிட்டு, இன்று இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமா? என்பது போல - வேதாந்தம் பேசும் வேங்கையாக வேடம் கட்டி ஆடுகிறார்!

இலங்கையில் நாம் படாத பாடுபட்டு தமிழ் மாநிலம் அமைத்து, தேர்தல் நடத்தி, தமிழர் ஆட்சியை ஏற்படுத்தினோம், இன்று எல்லாமே பாழாகிவிட்டது

இதுவும் காஞ்சியில் ராஜீவ் காந்தி நிருபர்களிடம் பெருமூச்சு விட்டவாறு வெளியிட்ட அங்கலாய்ப்புத்தான்!

1. தமிழ் மாநிலம் அமைத்தது

2. தேர்தல் நடத்தியது

3. தமிழர் ஆட்சி உருவாக்கியது

இவை அனைத்தும் உலகத்திற்கு ராஜீவ் அவர்களால் உரைக்கப்பட்ட உண்மைக்கு மாறான தகவல்கள்!

* அமைக்கப்பட்ட தமிழ் மாநிலத்துக்கு எந்த அதிகாரமும் இல்லை.
* தமிழ் மாநிலம் எனப்படும் பகுதியிலுள்ள தெரு ஒன்றில் ஒரு தபால் பெட்டியை கொண்டு வைத்து விட்டால் அந்தத் தெரு மத்திய அரசுக்குச் சொந்தமாகி விடும்.
* மழை பெய்து நீர் நிறையும் குட்டைகள் மட்டுமே மாநிலத்துக்கு சொந்தம் - அதே குட்டையில் ஆற்று நீர் வந்து தேங்கினால் அது மத்திய அரசுக்குச் சொந்தம்.
* சுருக்கமாகச் சொன்னால் எங்களுக்கு அரசாங்கம் என்ற பெயரே கூடக் கிடையாது.

உடன்பிறப்பே, நட்சத்திரக் குறியிட்ட இந்தத் தகவல்களைச் சொன்னவர் வேறு யாருமல்ல - இ.பி.ஆர்.எல்.எப். தலைவரும் - வடகிழக்கு மாநில முதல்வர் என அழைக்கப்பட்டவரும், ராஜீவின் அன்புக்குரியவருமான திரு. வரதராசப் பெருமாள் அவர்கள்தான்!

இந்த உலகறிந்த உண்மையை உரலுக்குள் போட்டு மூடிவிட்டு - காஞ்சிக்கு வந்த ராஜீவ் காந்தி, ஈழத் தமிழர்களுக்கு எல்லா உரிமைகளும் வாங்கிக் கொடுத்ததைப் போலவும் அதனை தேசிய முன்னணி அரசு கெடுத்து விட்டதைப் போலவும் நன்றாக நடித்துக் காட்டியிருக்கிறார்!

தி.க. - தி.மு.க. உறவினால் தமிழகத்தில் அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ராஜீவ் காந்தி பேட்டியளித்துள்ளார் காஞ்சியில்!

அவருக்குத் தெரியாது - அவர் அப்போது அரசியல் பக்கமே தலைவைத்துப் படுக்கவில்லை - பச்சைத் தமிழர் காமராசர் பக்கம் நின்று தந்தை பெரியார் அவர்கள் தலைமையில் திராவிடர் கழகம் காமராசரின் வெற்றிக்குப் பாடுபட்ட வரலாறெல்லாம்!

தி.க.வுடன் தி.மு.க. உறவு கொண்டுள்ளதே? என்று இந்திரா காந்தி அவர்களை அலகாபாத்தில் 1980 தேர்தலின்போது கேட்டபோது - அவர்கள் இப்போது பிரிவினை கேட்கும் கட்சியல்ல - என்று இந்திரா காந்தி அவர்கள் பதில் அளித்தது ராஜீவுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை!

இந்திய ராணுவ வீரர்கள் சுமார் இரண்டாயிரம் பேரையும் - ஈழத் தமிழர்கள் ஐயாயிரம் பேரையும் - பலி கொடுத்து - இந்திய இலங்கை ஒப்பந்தம் என்கின்ற குறைபாடுடைய அந்த உடன்பாட்டைக்கூட நிறைவேற்ற முடியாமல், இந்திய ராணுவம் திரும்புவதற்கான இறுதித் தேதியையும் குறித்து விட்டு பிரதமர் பதவியிலிருந்து இறங்கிய ராஜீவ் காந்தி வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்கிற மாதிரி பேசுவது முறையுமல்ல! அழகுமல்ல! முன்னாள் பிரதமர் என்ற கௌரவத்திற்கு உகந்ததுமல்ல!

அன்புள்ள,

மு. க.

10-06-1990

1650. தங்க மாலையும் - தங்காத மாலையும்!

உடன்பிறப்பே,

மயிலாடுதுறை, கும்பகோணம், சுந்தரப்பெருமாள் கோயில் என நிகழ்ச்சிகளை வகுத்துக் கொண்டு - புகைவண்டியில் பயணம் மேற்கொண்டேன். சில நேரங்களில் இரவு பனிரெண்டு மணிக்கு மேல் விழித்துக்கொண்டால் ஏதாவது நல்ல புத்தகங்கள் படிக்கத் தோன்றும். அந்தப் பயணத்துக்கென நான் பெட்டியில் வைத்து எடுத்துச் சென்றிருந்த அண்ணாவின் கடிதங்கள் என்ற தொகுப்பு நூல்களின் மீது என் கவனம் திரும்பியது. 1961-ஆம் ஆண்டு அவர் தம்பிக்கு எழுதிய கடிதத்தில் ஒரு பகுதியை திரும்பத் திரும்ப படித்தேன். பிறகு உறங்கி விட்டேன். விடியற்காலை மூன்றரை மணிக்கு மயிலாடுதுறை நிலையத்தில் இறங்கி, ஓய்வு விடுதிக்குச் சென்ற பிறகும் கூட அந்தப் பகுதியை மீண்டுமொருமுறை படித்துவிட்டுத்தான் உறக்கத்திற்கு என்னை ஒப்படைத்தேன்.

அண்ணா தம்பிக்கு எழுதிய கடிதத்தில் அப்படியென்ன உன்னை கவர்ந்த பகுதி? என்று நீ கேட்பாய்! தெரியும்!

அண்ணாவின் கடிதம் ஒவ்வொன்றுமே அடிக்கரும்பு! கொம்புத்தேன்! அதில் ஏதோ ஒரு பகுதி மட்டுமே என்னைக் கவர்ந்தது என்று கூறுவது தவறுதான்! ஆனால் சில நேரங்களில் சில கருத்துக்கள், நடப்புகளுக்கும் பொருத்தமாக அமைந்து - நமக்கு இருள் போக்கும் வெளிச்சமாகத் துணை நிற்க முன்வரும்போது - நமது தேவையை முன்னிட்டு அதனைத் தேனிலும் சுவைமிக்கதாக - கரும்பினும் ருசி மிக்கதாகக் கொள்வோமல்லவா; அந்நிலை என் நெஞ்சில் குடிகொண்டிருந்ததால் அண்ணாவின் கடிதத்தில் அந்தப் பகுதி குறிப்பிடத்தக்கதாய் அமைந்து விட்டது.

அது என்ன பகுதி என்று அறிந்துகொள்ள துடிக்கும் உன் ஆவலுக்கு அணை போட விரும்பவில்லை நான் இதோ; அண்ணா எழுதியுள்ள அந்தப் பகுதி—

திராவிட முன்னேற்றக் கழகத்தை நாம் துவக்கியபோது ஆற்காட்டு இராமசாமியார் தமது அறிவுத் திறனை எடுத்துக்காட்ட, ஆங்கில நாளேடுகளில் உலா வந்து கொண்டிருந்தார்! வணிகக் கோமான்கள் பொருள் ஈட்டினர்; பிரபுக்களாயினர்! மேதைகள் நூற்கள் எழுதினர், பாராட்டுப் பெற்றனர். தேர்தல் தந்திரமறிந்தோர், கூடு விட்டு கூடு பாய்ந்தனர்! பதவிகளைப் பெற்று மகிழ்ந்தனர்! இசைவாணர்கள், காங்கிரஸ் நாமாவளி பாடி புகழ் தேடினர். நாடக மேடைகள் நம்மை நள்ளிரவில் நையாண்டி செய்யும் மாற்றார் கைக்கருவிகளாக இருந்தன. படக் காட்சிகள் பரலோக விளக்கமளித்துக் கொண்டிருந்தன. புலவர்கள் நமது சிற்றறிவு பற்றி எடுத்துரைத்து ஏளனம் செய்திடத் தமது பேரறிவைப் பயன்படுத்தி வந்தனர். தம்பி! அன்று கொட்டும் மழையில் வெட்டவெளியில் கூடினோமே, கழகம் துவக்க, அந்த நாளையும், அதுபோது, நமக்கு இருந்த வசதிக்குறைவுகளையும் இன்று நமது கழகம் பெற்றுள்ள ஏற்றத்துடன் ஒப்பிட்டும் பார்; உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளும்! பத்திரிகை உலகம், நம்மை பரிகாசப் பொருளாகக் கருதிற்று; நாம் கவலைப்படவுமில்லை, செயலாற்றாமல் இருந்து விடவுமில்லை. இன்று, நம்மைத் தாக்குவதாலேயே விற்பனையைப் பெருக்கிக் கொள்ள முடியும் என்ற வித்தையைக் கையாண்டு வரும் பத்திரிகையாளர்கள் பல! நாட்டிலே பெரிய இதழ்கள், பெயர்பெற்ற இதழ்கள் இருட்டடிப்புச் செய்தபோது, என்ன செய்தோம்? நாட்டு மக்களுடன் இடைவிடாத்தொடர்பு கொண்டு இத்தகைய வளர்ச்சி பெற்றோம், மங்கிப் போய்விட்டதோ மறைந்து போய்விட்டதோ என்று பலரும் எண்ணி, இனி என்றென்றும் சென்றது மீளாது எனச் செப்பினர் - எனினும், அந்தத் திராவிட இன உணர்வை நமது கழகம் கொழுந்து விட்டெரியும் நிலைக்குக்கொண்டு வந்து வைத்திருக்கிறது. பட்டுப்போன நிலையிலிருந்த மரம் துளிர் விடுகிறது! படர்ந்து போக இருந்த விளக்கு மீண்டும் ஒளிவிடுகிறது! தம்பி; ஒரு அமைப்பினைக் கட்டும்போது உள்ள கஷ்டத்தை விட அதனைக் காத்திடும்போது ஏற்படும் கஷ்டம் மிக அதிகம்! தூசு போகக் கண்ணாடிப் பலகையினைத் துடைத்திடத்தான் வேண்டும்; ஆனால் பக்குவமாக! எங்கெங்கு அழுக்கேறிவிட்டிருக்கிறது என்பதைக் கண்டறிந்து, அதனைப் போக்கிடத்தக்க விதத்தில், துடைத்திட வேண்டும் - ஆர்வத்துடன்! ஆனால் ஆர்வத்துடன் பக்குவமும் சேர்ந்திட வேண்டும் - இல்லையேல், துடைக்கும்போதே, கண்ணாடி பாளம் பாளமாகக்

கீழே வீழ்ந்துவிடும், பாழ்பட்டுப் போகும். எனவேதான் தம்பி; உன் சொல்லும் செயலும், போக்கும், நோக்கும், கழகத்தை நடத்திச் செல்பவன் என்ற பொறுப்பினைச் சுமந்து கொண்டிருக்கும் என் போன்றோருக்கும் நல்வழி காட்டத்தக்கதாக அமையட்டும். எந்த ஒரு கட்சியும் அதன் மேல்மட்டத்திலே அமர்த்தப்பட்டவர்களின் இயல்பு, திறமை, உழைப்பு இவைகளை மட்டும் பொறுத்தது இல்லை. அவர்களை அமர்த்தும் உரிமையும் ஆற்றலும் பெற்றுள்ள பல லட்சம் உறுப்பினர்களின் திறமை, தன்மை ஆகியவற்றைப் பொறுத்து இருக்கிறது. கலசத்தின் மினுமினுப்பு, காலக் கரம் பட்டுப் பட்டு மங்கிப் போகக் கூடும்; நட்டமில்லை, அடித்தளம் வலிவுடன் இருந்தால்! அந்த நம்பிக்கைதான் இந்த இயக்கத்துக்கு உயிர் ஊட்டம் தருகிறது.

உடன்பிறப்பே; படித்தாயா, அந்தப் பகுதியை! பால் பரிந்தூட்டும் தாயைப்போல் அறிவுரையை வேண்டுகோளாக்கி, அசைக்க முடியாத நம்பிக்கையை ஆணிவேரிட்டுத் தழைக்கச் செய்து ஆல் போல் விழுது விட்டெழச் செய்தார் நம் அண்ணா இந்தக் கழகத்தை; எனும் பேருண்மைக்குச் சான்றாக விளங்கும் பகுதியன்றோ இது! இதனைத்தான் பலமுறை திரும்பத் திரும்பப் படித்தேன், மகிழ்ந்தேன்! நெகிழ்ந்தேன்!

புகைவண்டி, மயிலாடுதுறை நிலையத்தில் நின்றது. கழகத்தின் அடித்தளம் வலிவுடன் இருக்கிறது என்பதைக் காட்சியாக்கிக் காட்டும் வண்ணம் தஞ்சைத் தரணியின் தன்மான தளகர்த்தர் மன்னை தலைமையில் உன் போன்ற உடன்பிறப்புகள் விடியற்காலை மூன்று மணி முதலே காத்திருந்து என்னைக் கட்டித் தழுவினர். களிபேருவகை கொண்டனர். கண்கள் பனித்திட வாழ்த்து குவித்தனர். அந்த அன்பு நதியில் நனைந்த காரணத்தினால்தான் ஓய்வு விடுதிக்குச் சென்ற பிறகும் உறங்குவதற்கு முன்பு அண்ணாவின் கடிதத்தை மீண்டும் ஒருமுறை படித்தேன்.

ஓய்வு விடுதியின் பெயர் என்ன தெரியுமா? காவேரி இல்லம்!

இருபதாண்டுக் காலத்திற்கு முன்பு காவிரிப் பிரச்சினைக்குத் தீர்வு காண நடுவர் தீர்ப்பு கோரிப் பேரவையில் தீர்மானமே நிறைவேற்றி - மத்திய அரசின் மந்தப் போக்கினால் கிடப்பிலே கிடந்த அந்தக் கோரிக்கை; மீண்டும் நமது கழக ஆட்சிக் காலத்தில்

நிறைவேறி, நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்டுள்ள நிகழ்வை எண்ணி மகிழ்ந்தது மட்டுமல்ல; மயிலாடுதுறை, குடந்தை திருமண நிகழ்ச்சிகளில் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியபோது மணவிழாப் பந்தலில் கூடியிருந்தோர் காட்டிய ஆர்வம் கண்டு பூரித்துப் போனேன்.

மாலையில் முதல் நிகழ்ச்சியாக பொதுப்பணி அமைச்சர் தம்பி துரைமுருகன் தலைமையில் புறவழிச்சாலை திறப்பு விழா - சுமார் 1500 பேருக்கு நலிந்தோர் நல்வாழ்வுத் திட்ட உதவி வழங்குதல் - பல்லாயிரவர் திரண்டிருந்தனர்.

குடந்தை நகரத்தைக் கொள்கை வீரர்களின் கூடாரமென அடையாளம் காட்டும் கொடிக்காடு! தோரணங்கள்! பதாகைகள்! தஞ்சைக்கே உரிய ஓலைக் கூந்தல் கோலம்! எல்லாம் தம்பி மணியின் யோசனை; தம்பி துரையின் மேற்பார்வையில் நகரத்தார், ஒன்றியத்தார், இளைஞர் அணியினர் தந்த உழைப்பு! இதைத்தானே உயிரூட்டம் தரும் இயக்கத்தின் அடித்தளம் என்றார் அண்ணா! படித்ததை நினைத்துக்கொண்டேன்.

டெல்லியில் நடைபெறும் உள்ளாட்சித்துறை மற்றும் வருவாய்த் துறை கூட்டத்திற்காக நாஞ்சிலாருடன் மணி சேர்ந்து செல்வதற்காக; மதியமே காரில் புறப்பட்டு விட்டார், சென்னை அடைந்து விமானம் ஏறிட!

தஞ்சை மாவட்டக் கழக பொதுக்கூட்டமென்றனர் - ஆனால் மாநாட்டையே கூட்டி விட்டனர், மன்னையின் தலைமையில்! குடந்தையில் இப்படியொரு மகத்தான கூட்டத்தை, எனது ஐம்பது ஆண்டு கடந்த பொது வாழ்வில் கண்டதில்லை!

பல திசைகளிலும் மக்கள்! அவர்கள் அனைவரையும் காண ஆலோலம் பாடும் வள்ளிக்குப் போட்டது போல் ஒரு பரண்! ஆமாம் அவ்வளவு உயரமான மேடை இல்லையேல் அந்த மக்கள் சமுத்திரத்தை நானும் - என்னை அந்த மக்கள் சமுத்திரமும் பார்த்திருக்க முடியாது!

அன்னையின் நெஞ்சமுடன் மன்னை வாழ்த்தினார் என்னை; இராசராசன் விருது பெற்றமைக்காக!

தம்பி பாலு எம்.பி., தம்பி எல். கணேசன், தம்பி துரைமுருகன், புலவரும் கவிஞருமான கோவை இளஞ்சேரன், தம்பிகள்

பொன்முடி, நேரு, மூன்று கல்யாணங்கள், துரை, உபயதுல்லா, இராமலிங்கம், இராசமாணிக்கம் ஆகியோர் கலந்துகொண்டு பாராட்டினர்.

குறித்த நேரத்தில் நான் பேச எழுந்தேன்! நான் இன்னும் வாழ்த்தவில்லையே; இதோ வந்துவிட்டேன் வாழ்த்திட என வானம் முழங்கியது! மழைக்கரங்களால் தழுவி வாழ்த்தியது! நான் வானத்தையும் மழையையும் வாழ்த்தினேன்!

இயக்கத்தின் அடித்தளமாம் அமைப்புகளின் நிர்வாகிகள்; அவர்களே ஆளுக்கு இவ்வளவு என நிதி வழங்கி - சுமார் ஐம்பதாயிரம் ரூபாய் செலவில் செய்யப்பட்ட தங்கக் காசு மாலை ஒன்றை, மன்னை எனக்கு அணிவித்தார்; அதைவிட என்னைப் புல்லரிக்கச் செய்தது - பூரிப்பு கொள்ளச் செய்தது - புளகாங்கிதமுறச் செய்தது - அந்த மேடையில் அவர் என் கன்னத்தில் அளித்த முத்தம்தான்!

தங்கமாலை - கட்சிக்காரர்கள் கைப்பணம் போட்டுக் கொடுத்தது - நீயே வைத்துக்கொள்ள வேண்டுமெனக் கட்டளையிட்டனர்.

எதிர்க்கட்சித் தலைவனாக இருந்தபோது கட்சிச் சார்பாக முன்பு அன்பில் முன்னின்று அணிவித்தபோதும், மதுரையில் பழனிவேல்ராசனும், பொன். முத்துராமலிங்கமும் முன்னின்று அணிவித்தபோதும், கோவையில் கண்ணப்பன் முன்னின்று வழங்கியபோதும், காமராஜர் மாவட்டத்தில் தங்கபாண்டியன் முன்னின்று வழங்கியபோதும், அந்த அறுபது பவுன் தங்க மாலைகள் ஒவ்வொன்றையும் கட்சி நிதிக்கே அளித்துவிட்டேன். சென்னையில் முன்பு தம்பி சீதாபதி என் எடைக்கு இருமடங்கு எடை வெள்ளி கொடுத்தபோதும் கட்சிக்கே வழங்கப்பட்டது. பேராசிரியர் முன்னின்று நடத்திய எனது மணி விழாவின்போது அளித்த மூன்று லட்ச ரூபாய் நிதியும் கட்சிக்கே திரும்பத் தரப்பட்டது! கடந்த ஆண்டு அரசு விழா ஒன்றில் வேலூரில் கழக உடன்பிறப்புகள் வழங்கிய இரண்டு லட்ச ரூபாய் மதிப்புள்ள தங்கச் செங்கோலையும் முதலமைச்சர் நிவாரண நிதிக்கு தந்து விட்டேன்! வழங்கியவர்களுக்கு வருத்தம்தான் - அதற்காக என் வழக்கத்தை விட முடியுமா?

குடந்தை கூட்டத்திலும் அப்படித்தான் அறிவிக்க இருந்தேன்! எழுந்து பேசத் தொடங்கி, பீடிகை முடிவதற்குள் மன்னைக்குச் சாதகமாக மழை வந்து விட்டதே; அதனால் முடியவில்லை!

எனவே சென்னைக்கு வந்தவுடன் மன்னையிடமும் மற்றுமுள்ள கழக மாமணிகளிடமும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, அந்தத் தங்க மாலையை கழக அறக்கட்டளைக்கு- அண்ணா அறிவாலய நிதிக்குத் தந்து விடுகிறேன்!

அண்ணா எழுதியுள்ளதுபோல்; உயிரூட்டம் தருகிற உறுதியான அமைப்புகளும், உறுப்பினர்களும் கொண்ட இந்த இயக்கமே - அழகுற, அழுத்தமாகச் செயல்பட்ட தங்க மாலையாகத் திகழ வேண்டும் - அந்த மாலையின் தங்கக் காசுகள் போல நெருக்கமாக ஒன்றி இணைந்திருக்க வேண்டும் - அதுவே எனக்கு அணிவிக்கப்படும் தங்க மாலை! பிற அனைத்தும் என்னிடம் தங்காத மாலைகள்தான்! என் தாயனைய கழகத்தின் கழுத்தில் போய்ச் சேரவேண்டிய மாலைகள்தான்!

அன்புள்ள,

மு. க.

12-06-1990

1651. அண்ணா வழியில் அமைந்த பயணத்தில்!

உடன்பிறப்பே,

இந்த இதழ் கல்கியில் முதல்வரின் பிறந்த நாள் என்று தலைப்பிட்டு ஒரு தலையங்கம் எழுதப்பட்டுள்ளது. அதில் சில பகுதிகளை இங்கே குறிப்பிடுகிறேன்.

முதல்வரின் பிறந்த நாள் என்பது நம்மைப் பொறுத்த மட்டில் அவரது ஆட்சியின் குறை நிறைகளை மதிப்பிடக் கிடைத்த ஒரு சந்தர்ப்பம். அப்படிப் பார்க்கும்போது, நமது கவனத்தை முதலில் கவர்வது முதல்வரின் சுறுசுறுப்பு. கோட்டையில் கோப்புகளைத் துரத்தியபடியே தமிழகமெங்கும் சுற்றுப்பயணம் செய்கிறார். மாநாடுகளிலும் பொதுக் கூட்டங்களிலும் கலை விழாக்களிலும் திருமண விழாக்களிலும் பங்கேற்றபடியே முரசொலிக்கும் எழுதுகிறார். இத்தனை பரபரப்பான பணிகளுக்கிடையில் கல்கியுடன் ஒரு பேனாப் போர் நடத்தவும் நேரம் ஒதுக்குகிறார்! பதினாறு வயதினர்கூட இந்த அறுபத்தேழு வயது இளைஞரிடம் தோற்றுப்போக வேண்டியதுதான்!

தமிழகத்தின் தொழில் வளப் பெருக்கத்துக்கு மெய்யான ஈடுபாட்டுடன் திட்டங்கள் வகுத்துச் செயல்படுத்தி வருகிறார். புதிய தொழிலகங்களுக்கு விற்பனை வரிச்சலுகை, மிகவும் பிற்படுத்தப்பட்ட வட்டங்கள் என்று முப்பது வட்டங்களைத் தேர்ந்தெடுத்து, தொழில் தொடங்க சிறப்புச் சலுகைகள் என்றெல்லாம் நூதன உத்திகளைக் கையாள்கிறார். கூட்டுத் துறையிலும் மத்திய அரசு தொழிலகங்களிலும் முதலீடுகள் அதிகரிக்க வழி வகுத்திருக்கிறார். இவையெல்லாம் மெய்யாலும் பயன்தர, மின் உற்பத்தி அதிகரிக்க வேண்டும் என உணர்ந்து அதிலும் கவனம் செலுத்தி வருகிறார்.

பிற்படுத்தப்பட்டோர் நலனில் தமிழக முதல்வர் காட்டும் அக்கறை அளப்பரியது. ஏற்கனவே பட்டதாரிகள் இல்லாத குடும்பத்திலிருந்து வரும் மாணவர்களுக்கு கூடுதல் மார்க் போடுவது என்பது நல்ல யோசனை என்றாலும் இந்தச் சலுகை துஷ்பிரயோகம் ஆகாதிருக்கச் சலுகை பெறுபவர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையையும் அரசு ஏற்க வேண்டும்.

காவிரி நதி நீர்ப் பிரச்சினைக்கு நடுவர் குழு அமைத்தது கருணாநிதிக்குப் பிறந்த நாள் பரிசு போல விளங்கினாலும், இதற்காக உச்ச நீதிமன்றம் சென்று வாதாடிய தஞ்சை விவசாயிகளுக்கே நமது முதல் நன்றி உரித்தாகிறது...

என்றெல்லாம் எழுதியுள்ள கல்கி ஏடு தலையங்கத்தின் இறுதிப் பகுதியில் முக்கியமான அறிவுரையையும் எனக்கு வழங்கியுள்ளது. இதுபோன்ற விமர்சனங்களை விருப்பு வெறுப்பின்றி ஆழ்ந்து சிந்திக்கும் இயல்புடையவன் என்ற காரணத்தால் கல்கி எழுதியுள்ள அந்த இறுதிப் பகுதியையும் குறிப்பிட விரும்புகிறேன்.

சில தவறான போக்குகளைத் திருத்திக்கொண்டும், சில பின்னடைவுகளுக்கு இடம் தராதிருக்கக் கட்சிக்காரர்களிடம் ஓரளவு கண்டிப்புக் காட்டியும், எந்தச் சாராரிடமும் துவேஷம் பாராட்டாமலும் கலைஞர் நடந்து கொண்டால், அடுத்த பிறந்த நாளுக்கு முன்னதாக அவர் செல்வாக்கு மேலும் உயர்ந்து, பெரும்பான்மை மக்களின் ஆதரவு தி.மு.க.வுக்குக் கிடைக்க வாய்ப்புண்டு.

உடன்பிறப்பே,

தவறான போக்குகள் இருந்தால் அதனை எதிர்க்கட்சிகளோ, பத்திரிகைகளோ சுட்டிக் காட்டும்போது திருத்திக் கொள்ள வேண்டியது ஆளும் பொறுப்பில் இருக்கின்ற காரணத்தால் மாத்திரமல்ல, அந்தப் பொறுப்பில் இல்லாவிட்டாலும் ஒரு சமுதாயத் தொண்டன் என்ற முறையில் திருத்திக்கொள்ளக் கடமை படைத்தவன்தான் நான்.

எந்தச் சாராரிடமும் நான் என்றைக்கும் துவேஷம் பாராட்டியதில்லை. அதனை என்னுடைய நடவடிக்கைகள் மூலமும் இந்த அரசில் முக்கிய பொறுப்புக்களில் யார் யார்

அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை கவனிப்பதின் மூலமும் அனைவரும் தெரிந்து கொள்ளலாம். எனினும் துவேஷம் பாராட்டுவது போன்ற சந்தேகம்கூட யாருக்கும் ஏற்படாமல் நடந்து கொள்ள வேண்டியது ஒரு அரசின் பொறுப்பு என்பதை நான் உணருகிறேன்.

இன்று கல்கி எழுதுகிறது நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றி! இதனையே நமது அண்ணா அவர்கள் 1960-ஆம் ஆண்டு தம்பிக்கு எழுதிய கடிதத்தில் அவருக்கு உரிய மொழி வளத்துடன், அன்புடன், பண்புடன், பாசத்துடன் இந்தக் கழகம் என்றென்றும் வலிவு மிக்கதாகவும் பொலிவுமிக்கதாகவும் மாற்றாரின் அன்பிற்கும் கூட பாத்திரமானதாகவும் இருக்க வேண்டும் என்ற உணர்வோடு நமக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

அண்ணாவின் அந்தக் கருத்தை மீண்டும் உனக்கு இந்தக் கடிதத்தில் இணைத்துத் தருகிறேன். படித்துப் பார்! இதோ அண்ணாவின் கடிதம் -

தம்பி,

திராவிட முன்னேற்றக் கழகம், ஈடுபடும் எந்தக் காரியத்தையும், எடுத்துக்காட்டும் எந்தப் பிரச்சினையையும், மேற்கொள்ளும் எந்த நடவடிக்கையையும் நாடு இன்று கூர்ந்து பார்த்து, இதற்கென்ன பொருள்? இது எதைக் காட்டுகிறது? இதற்கு என்ன நோக்கம்? இது எதன் விளைவு என்றெல்லாம், ஆராய்ந்திடவும், உரையாடிடவும் காண்கிறோம்.

எங்கோ, எதுவோ, நடந்தது - என்ற முறையில் அல்ல, ஏன், இது, இவ்வண்ணம், இதுபோல, நடைபெற்றது? என்று நமது ஒவ்வொரு நடவடிக்கையையும், அலசிப் பார்த்திட இன்று, எல்லா அரசியல் கட்சிகளுமே முயற்சிக்கின்றன. அலசிப் பார்த்து உண்மையை, அந்தக் கட்சிகள் கண்டறிந்து விட்டன என்று கூறுவதற்கு இல்லை! ஆனால் முயற்சியிலே மட்டும், மும்முரமாக ஈடுபடுகின்றன.

இது, நமது கழகம், இன்று பெற்றுள்ள வளர்ச்சிக்கு மிகச் சிறந்த சான்று.

தம்பி! நாம் கவனிக்கப்பட்டு வருகிறோம் - நமது நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் கவனிக்கப்பட்டு வருகின்றன

- என்பதுதான் பொருள். அதிலே தொக்கி நிற்பது, சுவைதரும் மற்றோர் உண்மை. எவரும் அலட்சியப்படுத்த முடியாத நிலையில் இன்று நம் கழகம் இருக்கிறது. அனைவரும் கூர்ந்து கவனிக்கிறார்கள் - திகிலுடன் சிலர், திடுக்கிட்டுப்போன நிலையில் சிலர், அருவருப்புடன் சிலர், பொறாமையுடன் வேறு சிலர் - அவரவர், தத்தமது நிலைக்கு ஏற்ற நினைப்புடன் - ஆனால், எவரும் கூர்ந்து கவனிக்கிறார்கள்.

அடவியில் சென்று கொண்டிருக்கிறான் ஒருவன் - கதிரவன் களைத்துப் போய், இளைத்துப்போய், மறையும் நேரம் - கால் கடுக்க நடக்கிறான் - சற்றுத் தொலைவில், மரம் அடர்ந்த இடத்தில், சிறு பொறி காண்கிறான் - உற்றுப் பார்க்கிறான், பொறி பெரிதாகக் காண்கிறான். நடையை நிறுத்திக் கொள்கிறான் - தீப்பந்தங்கள் போலத் தெரிகின்றன - அசைவற்று நிற்கிறான் - புலியின் கண்களே, அது போலத் தெரிகின்றன, என்று எண்ணுகிறான் - திகிலன்றோ அவன் நெஞ்சில் தீயெனப் புகும்.

மாலைவேளை! ஆற்றோரச் சோலை! அழகு தமிழ்ப்பாடலை இசைத்தபடி, நடக்கிறான், ஒரு இளைஞன்! யார்? என்றா கேட்கிறாய்? என்ன தம்பி! நேரம், இடம் கூறினேனே இதற்கு மேலுமா விளக்கம் வேண்டும்? சொல்லிவிடட்டுமா அதனையும் - கெண்டை விழியாளைக் கண்டு, அவள் தனக்குச் செண்டு தந்து, பின்னர் இன்பம் மொண்டு உண்டிடச் செல்லும் காதலன், போதுமா! - சரி அவன் செல்கையில், குக்கூ! குக்கூ! என்ற ஒலி செவியில் வீழ்கிறது. என்ன செய்வான்? முகமலர்ச்சியுடன், தருக்களைக் கூர்ந்து கவனிக்கிறான். எங்கு ஒளிந்து கொண்டு இன்னிசை எழுப்புகிறது, குயில் என்று கண்டறிய திகிலுணர்ச்சியா, அவனுக்கு தித்திப்பு உணர்ச்சி!

அஃதேபோல, அவரவர் தத்தமது நிலைமைக்கு ஏற்ப, எதிர்ப்படுவனவற்றை கூர்ந்து கவனிப்பர்.

வழியே கிடக்கும் எருக்கஞ்செடியினையும், எலும்புத் துண்டுகளையும், சோளக் கொல்லைப் பொம்மைகளையும், வயல் வளைவாழ் எலிகளையும், கத்திக் கத்திச் செத்த தவளைகளையும், கால் உதையுண்டு சிதறிய ஓட்டாஞ் சல்லிகளையுமா கூர்ந்து கவனிப்பார்கள். உலகம் என்ன அவ்வளவு விவரமறியாதவர்களின்

இருப்பிடமாகவா உள்ளது! இல்லை, தம்பி! நிச்சயம் இல்லை! எதைக் கூர்ந்து கவனித்தாக வேண்டும் என்பது, மிக நன்றாக உலகுக்குத் தெரிகிறது - அதிலும் அரசியல் உலகு இருக்கிறதே, அதற்கு இந்தத் துறையில் தனியானதோர் திறமை, மிக வேகமாக வளர்ந்து விட்டிருக்கிறது.

அத்தகைய அரசியல் உலகம் நமது கழகத்தின் ஒவ்வொரு அசைவையும், நமது பேச்சின், அசையைக்கூட, மிக உன்னிப்பாக கவனித்து வருகிறது. காரணம் தேடுகிறது, பொருளை ஆராய்கிறது, இயன்றால் எவ்வழியில் அதனைப் பயன்படுத்தி, நம்மை வீழ்த்தலாம், என்ற நினைப்புடன்,

நெடுந் தொலைவிலிருந்து வர இருக்கும் எதிர்ப்படை கண்ணுக்கு தெரியுமுன்பே, தூசி கிளம்பிடக் கண்டதும், படை வருகிறது என்பதைக் கண்டறிய முடிகிறதல்லவா? மண் காற்று அடிக்கிறது - அதனைப் போய் இத்துணைக் கூர்மையாக கவனிக்க வேண்டுமா என்று கருதுபவன், அந்தத் துறையிலே ஓர் மதியிலியன்றோ!

அதுபோலத்தான் நமது ஒவ்வொரு நடவடிக்கையும், மாற்றாரின் கண்களிலே நடவடிக்கை உருவாகு முன்பே தூசி அளவாக இருக்கும்போதே தெரிந்து விடுகிறது.

எனவே, தம்பி! நாமும் நமது நடவடிக்கைகள், திருப்பங்கள், முடிவுகள், முயற்சிகள், முகாம் அமைப்புகள் என்பவைகளை, எதிரிகள் கூர்ந்து கவனித்த வண்ணம் இருக்கிறார்கள் என்பதை அறிந்து, அதற்கேற்ப, நமது செயல்முறைகளைக்கூட செம்மையானவையாக மட்டுமல்ல, ஆற்றல் மிக்கவையாக மட்டுமல்ல, எவரும் பாராட்டத் தக்கவையாக மட்டுமல்ல, எதிரிகள் கண்டு, இதற்கு இதுவா பொருள்? யாமறியாமற் போனோமே? இதற்கா இந்த நடவடிக்கை, எமக்கு முதலில் விளங்காமற் போய்விட்டதே? இவ்விதமாகவா முடிவு செய்தனர், இது திடீர் நடவடிக்கையாகவன்றோ இருக்கிறது? என்று எண்ணித் திணறத்தக்க விதமாகக் கூடுமானவரையில் அமைத்தல் வேண்டும். ஆனால், இது இயற்கையானதாகவும் பலனளிக்கத்தக்கதாகவும், வளர்ச்சியைக் காட்டுவதாகவும் இருத்தலும் வேண்டும்.

உடன்பிறப்பே,

அண்ணா வகுத்தளித்த இந்த வழியில் நமது புனிதப் பயணம் நடைபெறுகிறது. பின்பற்ற இயலாதோரை நான் சிரமப்படுத்த விரும்பவில்லை.

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்

கெடுப்பா ரிலானுங் கெடும்."

என்ற குறளை மறவாமல் இருக்கும் நாம் குறை நிறைகளை யார் சுட்டிக் காட்டினாலும் அதனை ஆய்ந்து தெளிந்து பயணத்தைத் தொடருவோம்!

அன்புள்ள,

மு. க.

17-06-1990

1652. ஆயுதக் கலாச்சாரத்தின் ஆதி பகவர் யார்?

உடன்பிறப்பே,

கடந்த காலத்தில் நடைபெற்ற ஒரு தவறு; சுட்டிக் காட்டப்படுவதால் இப்போது நடைபெற்றுவிட்ட ஒரு தவறுக்கு அது பரிகாரமாகிவிடாது என்பதை உணர்ந்தவன் நான்.

இருந்தபோதிலும் சில கடந்தகால நிகழ்ச்சிகளை இன்றுள்ள எதிர்க்கட்சியினர் சிலர் மறந்துவிட்டிருந்தால் நினைவுபடுத்துவதற்காக இந்தக் கடிதம் எழுத வேண்டிய நிலைமை எனக்கு ஏற்பட்டது.

இலங்கைத் தமிழர் பிரச்சினையைப் பொறுத்த வரையில் நமது முழுமுதல் நோக்கம் - மூலநோக்கம் அங்குள்ள தமிழர்களுக்கு நிரந்தரமானதும் நிம்மதியானதுமான வாழ்வு அமைய வேண்டும் என்பதேயாகும். அதற்கு மிக முக்கியமாக போராளிக் குழுக்கள் ஒற்றுமையுடன் இயங்க வேண்டுமென்றும், ஒருவரோடொருவர் மோதுதலைத் தவிர்க்க வேண்டுமென்றும், தொடக்க காலத்திலிருந்து தொடர்ந்து எழுதியும் பேசியும் வருகிறேன்.

ஆனால் அவர்களுக்குள் ஒற்றுமை உருவாகாமல் இங்குள்ள சில சக்திகள்; அதிகார ரீதியாகவும் - அரசியல் ரீதியாகவும் மிகக் கவனமாக சூழ்ச்சி வலை பின்னி; அந்த முயற்சியில் பெருமளவு வெற்றியும் பெற்றுவிட்டன.

நம்மைப் பொறுத்தவரையில் டெலோ இயக்கத் தலைவர் சபாரத்தினம் கொல்லப்பட்ட போதும் சகோதர யுத்தத்தின் கொடுமையை எண்ணிக் கண்ணீர் உகுத்தோம். பிளாட் இயக்கத் தலைவர் முகுந்தன் என்ற உமாமகேசுவரன் கொல்லப்பட்டதாக செய்தி வந்தபோதும், அமைதியே உருவான அமிர்தலிங்கம் கொலையுண்டபோதும் வேதனையால் துவண்டு போனோம். இப்போது ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் பத்மநாபாவின் கொலைச்

செய்தியும் நம்மைத் துடிக்கச் செய்திருக்கிறது. காரணம்; அவர்கள் பல குழுக்களாக இருப்பினும் நாம் அவர்களைத் தமிழர்கள் என்ற ஒரே நோக்கில்தான் பார்க்கிறோம்.

எனக்குத் தெரியும்; சபாரத்தினம் கொல்லப்பட்ட செய்தி கேட்டவுடன் கொண்டு வா பாயசம்! என்று கூறி அதனை வயிறு புடைக்கக் குடித்து கும்மாளம் போட்ட கோஷ்டி எதுவென்று! கூட்டணியாகவன்றோ கொண்டாடினர் அப்போது!

அவர்கள் இன்று பத்மநாபாவுக்காக வடிக்கும் கண்ணீர்; எத்துணை போலியானது என்பதும் - எந்த அளவுக்கு அரசியல்தனமானது என்பதும் - அவர்களது மனசாட்சிக்கே தெரியும்!

ஆட்சியில் இருந்துகொண்டே ஈழத்தில் வடகிழக்கு மாநிலத்தை சுதந்திர நாடாக பிரகடனம் செய்தது ஈ.பி.ஆர். எல்.எப். இயக்கம் என்பதையும் அதனை வரித்து கட்டிக்கொண்டு ஆதரித்து உருகிடுவோர்; நம்மை பிரிவினைவாதிகளுக்கு ஆதரவு தருவதாக வீணாகக் குற்றம் சாட்டுவதையும் அவர்களது மனசாட்சி அவர்களுக்குக் குத்திக்காட்டாமல் இருக்காது!

பிரபாகரனாகட்டும், சபாரத்தினமாகட்டும், முகுந்தனாகட்டும், பாலகுமாராகட்டும், பத்மநாபாவாகட்டும் - வரதராசப் பெருமாள் ஆகட்டும்; இவர்கள் அனைவருமே என்னுடன் பல ஆண்டுகாலம் பழகியவர்கள். என்னை அன்புடன் அண்ணன் என அழைக்கத் தவறாத தம்பிகள்!

இலங்கைச் சூழலில் அவர்களால் தவிர்க்க முடியாத அளவுக்கு ஏற்றுக்கொண்ட முறை - ஆயுதப் போர்முறை என ஆகி; அந்த முறை அவர்களுக்குள்ளேயே பழிகளையும்; பலிகளையும் குவிக்கிற அளவுக்குப் போய்விட்டது என்பது தமிழ் இனத்திற்கேயுரிய தனிப்பட்ட சாபம் என்பதைத் தவிர வேறென்ன கூற முடியும்?

விரும்பத்தகாத - வெறுக்கத்தக்க - வேதனையான - விபரீதமான - அந்த சகோதர யுத்தம்; தமிழ் ஈழத்தில் மட்டுமன்றி; இப்போது தமிழ்நாட்டு மண்ணிலும் நடைபெற்றிருப்பது; வன்மையாகக் கண்டிக்கத்தக்கது! சட்டம், ஒழுங்கு, அமைதி காத்திடும் பொறுப்பில் உள்ள ஒரு அரசு இதுபோன்ற நிகழ்வுகளை அனுமதிக்காது! இதனைத் திட்டவட்டமாகத் தெரிவித்து

தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளபோதிலும்; தி.மு.க. அரசுதான் ஆயுதக் கலாச்சாரத்தைத் தமிழ்நாட்டில் நுழையவிட்டதாகக் குற்றம் சாட்டி அ.தி.மு.க.வும், காங்கிரசும் அமைப்பு ரீதியாகக் கூடி தீர்மானம் நிறைவேற்றி; எனவே கருணாநிதி ராஜினாமா செய்ய வேண்டுமென வற்புறுத்தி அறிக்கை வெளியிட்டுள்ளன.

முதலில் இத்தகையோர் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும்; எப்பாடுபட்டாவது பதவியில் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டுமென்ற நப்பாசை கொண்டவனல்ல நான்! கல்லாத ஒருவனைக் கற்றோய் என்றோ; பொல்லாத ஒருவனை நல்லோய் என்றோ - புகழ்ந்து பாடி கால் கை பிடித்து பதவியில் ஒரு பாசியாகவாவது படர்ந்து கொண்டிருக்க வேண்டுமென்ற இயல்புடையவனல்ல நான்!

ஆனால் உடன்பிறப்பே! உனக்குப் பயன்படும் என்பதற்காக சில வினாக்களை அவர்கள் இருக்கும் திசை நோக்கி எழுப்புகிறேன்; நீ நாட்டு மக்களிடம் நிலைமை விளக்கம் தருவதற்கு இந்த வினாக்கள் மெத்தவும் உபயோகமானதாக இருக்கக் கூடியவை!

பயிற்சி முகாம் (Training Camp) என்றால் என்ன?

நூறு அல்லது இருநூறுக்கு மேற்பட்ட போராளிகள் ஒவ்வொரு முகாமிலும் இடம் பெற்று, இராணுவ உடையணிந்து, ஆயுதங்களை ஏந்தி யுத்தப் பயிற்சி பெற்றார்களே; தமிழ்நாட்டில் முப்பது இடங்களில் - 1984 முதல் 1987 வரையில்; அதற்குப் பெயர்தான் பயிற்சி முகாம்கள்! அந்த முகாம்கள் தற்போது தமிழ்நாட்டில் இல்லையென்றும், எங்காவது இருந்து அதனை யார் அடையாளம் காட்டினாலும் உடனே நடவடிக்கை எடுக்க அரசு தயார் என்றும் சட்டப்பேரவையிலேயே நான் கூறியது உண்டா இல்லையா?

போராளிகளுக்கு பயிற்சி முகாம்கள் இல்லாவிட்டாலும் - 1983 முதல் அவர்கள் ஒவ்வொரு குழுவுக்கும் தமிழகத்தில் பல இடங்களில் அலுவலகங்கள் (Office) இருக்கின்றன என்பதை இருக்கும் இடங்களின் பெயர்கள் உட்பட அறிவித்தது உண்டா இல்லையா?

ஆயுதக் கலாச்சாரத்தை வளர்த்தது தி.மு.க. அரசு என்று குற்றம் சாட்டுகிறவர்களைக் கேட்கிறேன்; 1984ஆம் ஆண்டு

விடுதலைப்புலிகள் ஆயுதம் வாங்குவதற்காக ஒரே நாளில் நாலு கோடி ரூபாய் (4,00,00,000) அரசாங்கக் காசோலை மூலம் அளித்தது தி.மு.க. ஆட்சியிலா? பிறகு எந்த ஆட்சியில்?

பாண்டி பசாரில் ஒரு பங்காளி யுத்தம் - மினி பாரத யுத்தம் - கொடியேற்று விழா நடைபெற்றதே; அப்போது ஆட்சியில் இருந்தது மாநிலத்திலும் மத்தியிலும் எந்தக் கட்சி?

சூளைமேட்டில் ஒருவருக்கொருவர் சுட்டுக் கொண்டார்களே; அப்போது மத்திய அரசில் எந்த ஆட்சி? மாநிலத்தில் எந்த ஆட்சி?

இதோ நினைவுக்கு ஒரு செய்தி! 1984 ஆகஸ்டு இரண்டாம் நாள் - "BOMB BLAST IN CITY AIRPORT" என்று ஆங்கில ஏடுகளிலும் - தமிழ் ஏடுகளிலும் சென்னை விமான நிலையத்தில் குண்டுவெடிப்பு என்று வந்த செய்தியைத்தான் குறிப்பிடுகிறேன். அன்று ஏடுகளில் வெளிவந்த புகைப்படத்தையும் இத்துடன் இணைத்திருக்கிறேன். அந்த குண்டு வெடிப்பில் பல பயணிகளின் உடல்கள் சிதறின! Airport blast toll mounts to 32 - விமான நிலை வெடிகுண்டு காரணமாக பலியானவர்கள் 32 பேர்! அப்போது மத்திய அரசில் வி.பி. சிங் அவர்கள் பிரதமராக இருந்தாரா? மாநில அரசில் கருணாநிதி முதல்வராக இருந்தாரா? வேறு யார் அங்கேயும் இங்கேயும் ஆட்சியில்?

ஆயுதக் கலாச்சாரத்திற்கு வழிவகுத்த அந்த ஆதிபகவர்களைப் பார்த்து அப்போது நான்; ராஜினாமா செய்யுங்கள் என்று உரைத்தேனா? அல்லது தி.மு. கழகம்; அந்த விமான நிலைய வெடிகுண்டு சம்பவத்தில் மாண்டுபோன 32 அப்பாவிப் பயணிகளுக்காக - அதிகாரிகளுக்காக - கண்டனப் பேரணி, கண்டனக் கூட்டம் நடத்தி மத்தியிலே பிரதமரும் - மாநிலத்தில் முதல்வரும் ராஜினாமா செய்ய வேண்டுமென்று போராட்டத்தில் குதித்ததா?

உடன்பிறப்பே; நமக்கும் இன்றுள்ள சில எதிர்க்கட்சிகளுக்கு மிடையே உள்ள அரசியல் பண்பாட்டு வேறுபாட்டுக்கு ஒரு எடுத்துக்காட்டாக; விமான நிலைய வெடிகுண்டு வீச்சு குறித்து 1984 ஆகஸ்டு 5 -ஆம் நாள் முரசொலியில் மீனம்பாக்கம் மீண்டும் நிகழாதிருக்க! என தலைப்பிட்டு நான் எழுதிய கடிதத்தில் சில பகுதிகள் வருமாறு:-

யார் வைத்த கொள்ளியோ; வீடு பற்றி எரிந்தது என்னும் முதுமொழிக்கொப்ப - எந்த வஞ்ச நெஞ்சத்தினர் ஒன்று கூடிச் செய்த சதியோ தெரியவில்லை; சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் சுடுகாடாகக் காட்சியளிக்கக்கூடிய கொடுமை நிகழ்ந்து விட்டது.

அதிகாரிகளும், அலுவலர்களும் இந்தியப் பயணிகள், இலங்கைப் பயணிகள் மற்றும் வெளிநாட்டுப் பயணிகள் உள்ளிட்டோர், இதுவரை வந்துள்ள கணக்குப்படி நாற்பது பேர் பிணமாயினர்.

எரிமலைக் குமுறலிலோ - பூகம்ப அதிர்ச்சியிலோ கூட ஓடிப்போய்த் தப்பலாம் என்ற முயற்சியில் சிலர் ஈடுபட முடியுமென்பர்! அய்யோ! அதற்கும்கூட இடமின்றி, உயிரோடு உலவிக் கொண்டிருந்த மனிதர்கள் தூள்தூளாகச் சிதறிக் கைவேறு, கால்வேறு, தலைவேறு, முண்டம் வேறு என நிலை குலைந்து மடிந்து போயிருக்கிறார்கள்.

நோக்கம் எதுவானாலும் - எந்தக் குற்றமும் அறியாத உயிர்களைப் பலி கொள்ளுகிற இந்தப் பயங்கரவாத முறையை இதயமுள்ளோர் எவரும் ஏற்றிடமாட்டார்!

மாண்டோர் குடும்பங்களுக்கு இரங்கலைத் தெரிவிப்பதோடு - காயமுற்றோர் விரைவில் குணம் பெற்றிட வேண்டுமென்ற விழைவையும் வெளிப்படுத்துகிறேன்.

வெடிகுண்டு, விமானக் கடத்தல் போன்ற எத்தனையோ சம்பவங்கள் விமான நிலையங்களில் நடைபெற்றுங்கூட - இன்னமும் இதுபோன்ற சதிச் செயல்களை முன்கூட்டியே தடுத்து நிறுத்தி உயிர்களைப் பாதுகாக்கும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அக்கறை காட்டாத நிலையே மீனம்பாக்கம் விமான நிலையத்து வெடிகுண்டு நிகழ்ச்சிக்கு காரணம் என்பதைக் கூறாமல் இருக்க முடியாது.

மீனம்பாக்கங்கள் மீண்டும் நிகழாமல் இருக்க - விமான நிலையங்கள் மற்றும் போக்குவரத்து நிலையங்கள் முழுமையாக பாதுகாப்புடன் விளங்கிட அரசு ஆவன செய்ய உடனடியாக முன்வர வேண்டும்

உடன்பிறப்பே! இந்தக் கடிதத்தில் எங்காவது ஓரிடத்திலாவது விமான நிலைய வெடிகுண்டு வீச்சுக்குப் பொறுப்பேற்று மத்தியில்

இந்திரா காந்தியோ, மாநிலத்தில் எம்.ஜி.ஆரோ பதவி விலக வேண்டுமென்று வாசகம் இருக்கிறதா?

ஆனால் இன்று! ஏ, அப்பா எத்தனை சுடுசரங்கள்! கொடுங்கணைகள்! அன்று கொழுக்கட்டை வைத்து அடைக்கப்பட்டிருந்த வாய்கள் எல்லாம் இன்று; வேதாரண்யம் கோயில் கதவு திறந்ததுபோல அல்லவா தானாகத் திறந்து கொண்டு அலறுகின்றன; ஆயுதக் கலாச்சாரத்தை வளர்த்தது தி.மு.க. அரசு என்று!

உடன்பிறப்பே! மீண்டும் கூறுகிறேன். கடந்த காலத்தில் நடைபெற்ற ஒரு தவறு சுட்டிக்காட்டப்படுவதால் இப்போது நடைபெற்றுவிட்ட ஒரு தவறுக்கு அது பரிகாரமாகிவிடாது என்பதை உணர்ந்தவன் நான்!

இருந்தபோதிலும்; ஆயுதக் கலாச்சாரத்தை தமிழ்நாட்டில் - வளர்த்துவிட்ட அரசுகள் எவை என்பதை; மறந்துவிட்ட மக்களுக்கு நினைவூட்ட வேண்டுமல்லவா; அதற்காகவே இந்தக் கடிதம்.

ஒரிசாவில் அகதி முகாமில் இருந்தவர், டெல்லி வழியாக சென்னை வரப் போகிறேன் என்று காவல் துறைக்கோ, அரசுக்கோ தகவல் தெரிவிக்காத நிலையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் ஏன் செய்யவில்லை என்று எதிர்க்கட்சியினர் சிலர் கேட்பது அரசியலுக்காகவே தவிர, அணுவளவு நியாய உணர்வு அதில் இருக்கிறதா?

வினாக்களின் பட்டியலில் இணைய வேண்டியதில் இதுவும் ஒன்று!

அன்புள்ள,

மு. க.

22-06-1990

1653. வாய் நீளம் காட்டுவதா வல்லரசு?!!!

உடன்பிறப்பே,

நமது பார்வர்டு பிளாக் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் வல்லரசு இருக்கிறாரே; சுத்த தெரியாத பிள்ளையாக இருக்கிறார்! கருணாநிதியை முதல்வர் பதவியிலிருந்து ராஜினாமா செய் என்று சொல்ல காங்கிரஸ், அ.தி.மு.க. கூட்டணிக் கட்சிகளுக்கு என்ன தகுதி இருக்கிறது! என்று மிகுந்த ஆவேசமாகக் கேட்டிருக்கிறார்.

ஈழப் போராளிகள் ஆயுதம் வாங்க ஒரே நாளில் இரண்டு காசோலைகள் மூலம் அரசின் சார்பில் நாலு கோடி ரூபாய் கொடுத்தவர்கள் - சென்னை விமான நிலையத்தில் குண்டு வைத்து, அது வெடித்த போது அயல்நாட்டு, உள்நாட்டு பயணிகள், விமான நிலைய அதிகாரிகள், சிப்பந்திகள் உட்பட நாற்பது பேர் உடல்கள் நொறுங்கிச் சிதறி துண்டு துண்டுகளாக ஆனதற்குக் காரணமான நிகழ்ச்சி 1984ல் நடந்தபோது அதைக் கண்டு கொள்ளாமலே விட்டு விட்டவர்கள் - தியாகராய நகர் துப்பாக்கிச் சண்டை, சூளைமேடு கொலை, ஒரத்தநாடு வட்டார கொலை - எல்லாமே ஈழப் போராளிகளுக்கிடையே நடைபெற்ற போது மேலேயும் கீழேயும் ஆட்சியில் இருந்தவர்கள் - காங்கிரசாரும் அ.தி.மு.க.வினரும் என்கிறபோது; என்னையும் கழக ஆட்சியையும் ராஜினாமா செய்யச் சொல்லவோ - அல்லது கலைக்கச் சொல்லவோ - அவர்களுக்கு இல்லாத உரிமை வேறு யாருக்கு இருக்கிறது!

இதுகூடத் தெரியாமல் தம்பி வல்லரசு அவர்கள்; காங்கிரஸ் அ.தி.மு.க கூட்டணிக் கட்சிகளுக்கு என்ன தகுதியிருக்கிறது என்று கேட்கிறாரே; கேட்கலாமா?

1980ல் பஞ்சாபில் காங்கிரசுக்கு ஆதரவாக பிந்தரன்வாலே இருந்தபோது - அவரை மகாவீரர், மேதை, இளையஞானி என்று புகழ்ந்து டெல்லியில் பல்லக்கு ஊர்வலம் நடத்தியவர்கள் காங்கிரஸ்காரர்கள்! பிறகு அவர் காங்கிரசுக்கு எதிரியாக மாறியதும்;

அவரையும் அவரது கூட்டாளிகளையும் - ஆயிரக்கணக்கான சீக்கியர்களையும் அமிர்தசரஸ் பொற்கோயிலுக்குள் வைத்து இரண்டாவது ஜாலியன்வாலாபாக்கை முதலாவதை விட முன்னூறு மடங்கு பெரிய அளவில் நடத்திச் சுட்டு வீழ்த்திப் பிணமலை குவித்ததும் காங்கிரஸ் ஆட்சியில்தான்!

அதனையொட்டி அன்னை இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்ட கொடுமை நிகழ்ந்தபோது மத்தியில் இருந்த காங்கிரஸ் கட்சியின் பிற அமைச்சர்கள் யாரும் ராஜினாமா செய்து விடவில்லை! ஆட்சியும் கலைக்கப்படவில்லை!

இந்திரா காந்தி கொலை செய்யப்பட்ட அன்று டெல்லியில் இருந்த அப்பாவி சீக்கியர்கள் ஆடவர், பெண்டிர், குழந்தைகள் என ஆயிரக்கணக்கானோர் சுடப்பட்டும், வெட்டப்பட்டும், பெட்ரோல் ஊற்றிக் கொளுத்தப்பட்டும் பிணங்களாகச் சுருண்டிட -காங்கிரஸ்காரர்கள் நடத்திய அராஜக வெறியாட்டத்தை நியாயப்படுத்தி; ஆலமரம் விழுந்தால்- விழுதுகளும் கிளைகளும் விழுவது இயற்கையே! என்று அருள்மொழி பேசியவர்தான் ராஜீவ்காந்தி!

அந்த ஒப்பற்ற உத்தமரின் தலைமையின் கீழ் இயங்கும் தமிழ்நாட்டு காங்கிரஸ் தலைவர்களுக்கும் அவர்தம் கூட்டணி கட்சியினருக்கும் என்னை ராஜினாமா செய்யச் சொல்லும் உரிமை இல்லாமல் வேறு யாருக்கு இருக்க முடியும்?

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி பஞ்சாபில் இருந்தால்; இப்படித்தான் நாள்தோறும் கொலைகள் விழுமென்று கூறி - ஆட்சியைக் கலைத்துவிட்டு - சித்தார்த்த சங்கர் ரே அவர்களை பஞ்சாப் கவர்னராக நியமித்து ஆட்சி நடத்தியபோது நாள்தோறும் விழுந்த கொலைகளின் மொத்தக் கூட்டல் தொகை - 3821 தான்!

உடன்பிறப்பே, 3821 கொலைகளுக்கு ராஜினாமா செய்யாத - அல்லது ராஜினாமா செய்யச் சொல்லாத - காங்கிரசும் அதன் கூட்டணியினரும் தமிழகத்தில் போராளிகள் மோதலில் நடைபெற்ற போட்டி யுத்தத்தில் 15 பேர் கொல்லப்பட்டதாக என்னை ராஜினாமா செய்யச் சொல்லத் தகுதி படைத்தவர்கள்தானே!

3821 என்பதை விட 15 என்ற எண்ணிக்கை பெரியது என்ற உண்மை கூட தெரியாமல் நமது வல்லரசு அவர்கள்; காங்கிரசாரையும் அவரது கூட்டாளிகளையும் பார்த்து

கருணாநிதியை ராஜினாமா செய்யச் சொல்ல உங்களுக்கு என்ன தகுதி இருக்கிறது! என்று கேட்பது தெரியாத்தனம்தானே!

பாரதத்தின் தந்தை உத்தமர் காந்தியடிகள் தலைநகரிலேயே ஆர்.எஸ்.எஸ். வெறியர்களால் சுட்டுக் கொல்லப்பட்டபோது சென்னை தியாகராய நகரில் கல்கண்டு வழங்கிய ஆர்.எஸ்.எஸ்.காரர் - காங்கிரசிலும், அ.தி.மு.க.விலும் எம்.எல்.ஏ. பதவி பெற்றுத் திகழ்ந்தார் என்பது வல்லரசுக்குத் தெரியாது என நினைக்கிறேன்! அந்தப் பாரதத் தந்தையையே தலைநகரில் பாதுகாப்பின்றிப் பறிகொடுத்தபோது பண்டித நேரு பதவியிலிருந்து ராஜினாமா செய்யவில்லையே என்று நமது தமிழ்நாட்டு காங்கிரஸ் தலைவர்களையும் அவர்களது கூட்டணிக் கட்சியினரையும் கேட்டால் - பத்மநாபாவை விட பாரதத் தந்தை காந்தி என்ன அவ்வளவு பெரியவரா? என்று கேட்டாலும் கேட்பார்கள்! அப்படிக் கேட்கக் கூடியவர்கள் என்பதால்தானே காந்தி கொல்லப்பட்ட போது கற்கண்டு வழங்கியவரைத் தங்கள் கட்சிகளின் எம்.எல். ஏவாக்கி மகிழ்ந்தார்கள்!

அந்த திடீர் பிள்ளையார்! கதையெல்லாம் வல்லரசுக்குத் தெரியாத காரணத்தால்தானோ என்னவோ; அவர்களின் தகுதி(?) யைக் குறைத்து மதிப்பிட்டுக் கூறிவிட்டார்!

குயில்களைப் பழிக்கும் தகுதி, கோட்டான்களுக்கும் - மயில்களைப் பழிக்கும் தகுதி, மந்திகளுக்கும் உண்டு என்பதை அறியாமல் வாய் நீளம் காட்டிவிட்ட வல்லரசு அவர்களை; அவைகள் மன்னித்து விடுமாக!

அன்புள்ள,

மு. க.

28-06-1990

1654. கண்ணீரைக் கவசமாக்கும் நாள்!

உடன்பிறப்பே,

தண்ணீரில் மிதக்கும் படகுகளில் கண்ணீரில் மிதக்கும் தமிழ்க் குடும்பங்கள்; நமது கடலோரம் வந்து குவிந்து கொண்டேயிருக்கின்றன!

என்றைக்கோ சுமுகமாக முடிந்திருக்க வேண்டிய பிரச்சினை; இன்றைக்கும் அப்பாவித் தமிழர்களின் குருதியைக் குடித்துக் கொண்டிருக்கிறது இலங்கையில்!

தந்தை செல்வா அவர்களின் காலத்திலேயே; ஆம் - ஜனநாயக நெறியில், அறவழியில், ஈழத் தமிழ் மக்கள் கோரிய உரிமைகள் சிங்கள அரசினரால் அலட்சியப்படுத்தப் படாமல் அளிக்கப்பட்டிருக்குமேயானால் - இப்போது தொடர்ந்து ஒரு ஏழாண்டுக் காலமாக (1983 முதல்) ஈழத்துத் தமிழ் மக்கள் பிஞ்சுகளாக, அரும்புகளாக, பூக்களாக, காய்களாக, பழங்களாக உதிர்ந்து அழிந்து கொண்டிருக்கும் நிலை உருவாகாமலே போயிருக்கும்!

தமிழன் என்றாலே அவனைத் தாக்கிக் கொன்று குவிக்கிற அளவுக்குச் சிங்கள வெறி தலை தூக்கிய காரணத்தால் சிறைக்குள்ளிருந்த குட்டிமணி, தங்கதுரை, ஜெகன் போன்ற ஐம்பதுக்கு மேற்பட்டோரை சித்ரவதை செய்து அழித்தொழித்த நிகழ்ச்சியே இனப் படுகொலையின் பிள்ளையார் சுழியாக அமைந்தது! அதைத் தொடர்ந்து உயிரிழந்தோர் எத்தனை ஆயிரம் பேர்! வெட்டுண்டு இரு துண்டான தமிழர் உடல்கள் எத்தனை! எத்தனை! சுட்டுத்தள்ளப்பட்ட தமிழ் இளைஞர், முதியோர், அப்பப்பா; கணக்கில்தான் அடங்குமோ?

கற்பு பறிக்கப்பட்டு தமிழச்சி நடுத்தெருவில் நிர்வாணப் பிணமாக வீசியெறியப் பட்டாள்!

தமிழனின் மாமிசம் விற்பனையாகும் கடைகள் அந்தத் தீவில் தோன்றின!

மணந்தவனை மரத்தில் பிணைத்துவிட்டு அவன் மனைவியை அவன் கண்ணுக்கு நேராகவே மானபங்கப்படுத்தினர்! மழலைகள் பந்தாடப்பட்டன!

நாடாண்ட இனம் நாசத்தின் விளிம்புக்கே தள்ளப்பட்டது!

பொறுத்தது போதும்; பொங்கி எழுக! என கிளம்பிற்றுக்காண் அங்கே தமிழச் சிங்கக் கூட்டம்!

நாம் ஏற்காத முறை எனினும்; அவர்கள் அங்கே ஏந்தித்தான் தீரவேண்டும் ஆயுதம் - என்ற தவிர்க்க இயலா நிலை எழுந்தது!

ஆயுதம் ஏந்தினர்! ஆற்றல் ஏந்தினர்! அஞ்சா நெஞ்சம் ஏந்தினர்! ஆனால் ஒன்றைத்தான் அந்தப் போராளிகள் ஏந்திட மறந்தனர்! அதுதான் அவர்களுக்குள் ஒற்றுமையை!

அதற்காக?

ஓர் இனத்தின் அழிவையே சகித்துக்கொள்ள முடியுமா?

மரக்கிளையில் ஒரு குருவிக்கூடு! மஞ்சளும், சிகப்பும், பச்சையும், நீலமுமாக பஞ்சவர்ணக் குஞ்சுகள்! ஆசையுடன் ஒன்றைத் தூக்கிப் பார்க்க கையை மெதுவாக வைக்கிறோம்! ஒரு குஞ்சுக் குருவி; கையில் கொத்தி விடுகிறது - கொத்திய இடத்தில் குபீர் என இரத்தமும் வருகிறது! அதைத் துடைப்பதற்குள் ஒரு நிகழ்ச்சி, மரக்கிளையில் ஊர்ந்து வருகிறது ஒரு மலைப்பாம்பு! அது அந்தக் கூட்டை நெருங்கி வாயைத் திறந்தால் தாய்ப் பறவை உள்ளிட்ட எல்லாக் குஞ்சுகளும் கூட்டோடு அந்தப் பாம்பின் வயிற்றுக்குள் போக நேரிடும்! அப்போது நாம் என்ன செய்வோம்? குஞ்சு கொத்தி குருதி வழிகிறதே என்ற கோபத்திலா இருப்போம்? இருதயமுள்ளோர் அப்படி இருக்க முடியாதே! இருக்க மாட்டார்களே! பாம்பை விரட்டிவிட்டு அந்தப் பறவைக் குஞ்சுகளைப் பாதுகாக்கத்தானே முனைவோம்!

தமிழ் ஈழப் பிரச்சினையில் நமது அணுகுமுறை இதுதான்!

தமிழனாகப் பிறந்துவிட்ட குற்றத்தாலோ என்னவோ; குலை நடுங்குகிறது - அங்கு இன்றும் நடக்கும் கொடுமைகளைக் கேட்டு!

இந்திய நாட்டுக்கு நாம் சொந்தக்காரர் என்பதால்; பல்லாயிரக்கணக்கான அகதிகளை இங்கு அனுப்பும் நிலையைத் தோற்றுவிப்பதின் மூலம் இலங்கை அரசு, நமது நாட்டின் மீது புதுவிதமான ஆக்கிரமிப்பை நடத்துகிறது என நாம் கருதிச் செயல்பட வேண்டியிருக்கிறது!

அனைத்தும் கடந்து பரந்த நோக்கில் பார்த்தால் கூட மனிதாபிமான அடிப்படையில் அக்கறை காட்டவேண்டிய அவசியத்துக்குரிய பிரச்சினை!

நமக்குள்ள இந்த உணர்வை இலங்கையின் பாதுகாப்புத்துறை துணை அமைச்சர் நையாண்டி செய்து பேசுகிறார்! கருணாநிதி ஆட்சியில் தமிழ்நாட்டில் இலங்கைப் பிரஜைகளுக்கு பாதுகாப்பில்லை என்று அறிவிக்கிறார்! சொந்த நாட்டுப் பிரஜைகளை விமானப்படை குண்டு வீச்சுக்களால் குவியல் குவியலாக - கொத்துக் கொத்தாக - கொன்றிடும் செயலைப் பொழுது போக்காக எண்ணிடும் கொழும்பு நகர கோலோச்சிகள்; என்னை கேலி புரிகின்றனர்! என் மீது கடுஞ்சொல் வீசுகின்றனர்!

குருவி கொத்தியதால் கோபம் கொண்டு அந்தப் பறவைக் கூட்டையே பாம்பின் வயிற்றுக்குப் படையல் போட சம்மதிக்க வேண்டுமாம் நான்!

உடன்பிறப்பே! 1956 தி.மு.க. பொதுக்குழுவில் இலங்கை தமிழர் பாதுகாப்புக்கும் அவர்தம் உரிமைக்கும் தீர்மானத்தை முன் மொழிந்ததும் வழி மொழிந்ததும் நானும், பூவளூர் பொன்னம்பலனாரும் என்ற சரித்திரம் சாகாமல் வாழ்ந்து கொண்டிருக்கும்போது - இன்று வாழ வேண்டிய தமிழ் ஈழ மக்கள் நாளும் சாவதை எப்படித் தாங்கிக் கொண்டிருக்க முடியும்!

எனக்கு மட்டுமல்ல; மனித நேயத்தில் அக்கறையுடையோர் - தமிழ் உணர்வுடையோர் - இந்திய நாட்டு நலனை நாடுவோர் - அனைவர்க்குமே; இந்தப் பிரச்சினையில் பொறுப்பு உண்டு!

அதனால்தான் கட்சிமாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு - தானாடாவிடினும் தன் தசையாடும் என்ற பந்தபாச உணர்வோடு; இலங்கை ராணுவத்தின் தாக்குதலால் - அல்லற்பட்டு வீழ்ந்தும், அகதிகளாகத் தமிழ்நாட்டுக்கு விரட்டப்படும் வேதனை வெள்ளத்தில் ஆழ்ந்துள்ள ஈழத்தமிழ் மக்களுக்காக நமது கண்ணில்

பெருகிடும் கண்ணீரை இமைகொண்டு மூடியிருக்கிறோம்! அது கன்னங்களில் வழிந்தோட கண்களைத் திறப்போம்! கடைகளை மூடுவோம்! ஒருநாள் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோம்!

ஜூலை 20

வேதனையை வெளிப்படுத்தும் நாள்! ஈழத் தமிழர்களைப் பாதுகாப்பதற்காக; கண்ணீரைக் கவசமாக்கும் நாள்!

அன்புள்ள,

மு. க.

15-07-1990

1655. அனைத்துக் கட்சிகளும் ஓரணியில்!

உடன்பிறப்பே,

பாதிக்கப்பட்டு பயந்தோடி நமது பச்சிளம் குழந்தைகளுடன் அகதிகளாகத் தமிழகத்திற்கு வந்து சேர்ந்துள்ள குடும்பத்தினரை; அவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள முகாம்களுக்குச் சென்று நமது அமைச்சர்களும், அதிகாரிகளும் சந்திக்கிற போது அவர்கள் சொல்லும் செய்திகள் கேட்டுக் கல்லும் கரையும்!

நொந்த உள்ளத்துடன் வந்துள்ளவர்களை பந்தபாசத்துடன் உபசரிக்கவும், உதவிகள் வழங்கிடவும் கடமைப்பட்டவர்கள் நாம்!

எனினும் ஏற்கனவே மதமாச்சரியங்களால் பஞ்சாபும், காஷ்மீரும் பற்றி எரிந்து கொண்டிருக்கும்பொழுது - இந்தியாவின் தென்கோடி முனையிலும் வன்முறை தலையெடுக்க; இலங்கைத் தமிழ்ப் போராளிகள் எவரும் காரணமாயிருப்பதை எள்முனையளவும் ஏற்றுக்கொள்ள முடியாது! இந்த உறுதியைச் செயல்படுத்திட மாநில அரசின் சார்பில் மத்திய அரசின் துணையோடு பல்வேறு கண்டிப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன! அந்த நடவடிக்கைகளுக்குத் தமிழ் மக்களின் மனப்பூர்வமான ஆக்கமும் ஊக்கமும் தொய்வின்றித் தொடர்ந்திட வேண்டும்!

அமைதியில் ஆழ்ந்த நம்பிக்கையும் அக்கறையும் கொண்ட தமிழகத்தில் மதத்தின் பெயரால் இருதரப்பிலும் ஒரு சிலர்; தமது பேச்சால் எழுத்தால் நடவடிக்கைகளால் கலவரங்களைத் தூண்டிவிட முனைவதையும் - சாதியின் பெயரால் வன்முறைச் சதிவலை பின்னிடுவதையும், மூளும் தீயில் சுயநலக் குளிர்காய்ந்திட திட்டமிட்டு செயல்படுவதையும் - தேசத்தின் பாதுகாப்பிலும் சமுதாய நலனிலும் அக்கறையுள்ள ஓர் அரசு, அதற்குரிய சட்டங்களைக் கையில் வைத்துக்கொண்டு வேடிக்கை பார்த்திருக்க முடியாது!

இதனை ஓர் எச்சரிக்கையாகக் கொண்டு வன்முறையாளர் எவராயினும்; எந்த நோக்கத்திற்காக இருப்பினும் - தயவு தாட்சண்யமின்றித் தண்டிக்கப்படுவர் என்பதை உணர்ந்து, தமிழக அமைதிக்கு இதயமார்ந்த ஒத்துழைப்பை வழங்கிட முன் வரவேண்டும்! இந்த வேண்டுகோளை அலட்சியப்படுத்திவிட்டு; பின்னர் வருந்துவதிலோ கோபிப்பதிலோ பலனில்லை!

இப்படிப் பல பிரச்சினைகளை உறுதியோடு சந்திக்க வேண்டிய கட்டத்திலேதான் தமிழ் ஈழத்தில் இலங்கை அரசின் இராணுவத் தாக்குதலால் சீரழிந்து சிதறிக் கொண்டிருக்கும் அப்பாவித் தமிழ் மக்களுக்காக; இங்குள்ள நாம் அனைவரும் ஓரணியில் நிற்கிறோம் - ஜூலை 20ஆம் நாளன்று!

கடையடைப்பு, பொது வேலை நிறுத்தம், புகைவண்டி, பேருந்து, விமானம் எதுவுமே அசைய மாட்டா அன்று காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையில்!

அத்தியாவசிய பணிகள், தேவைகள் தவிர அனைத்துமே நிறுத்தம்!

தி.மு.கழக நிர்வாகக் குழு விடுத்த வேண்டுகோளையொட்டி, நான் விடுத்த பணிவன்பான அழைப்பை ஏற்று; அநேகமாகத் தமிழகத்தில் எல்லாக் கட்சித் தலைவர்களுமே அவர்களது கட்சி சார்பில் ஜூலை 20ஆம் நாளன்று பொது வேலை நிறுத்தத்தில் எவ்விதத் தயக்கமும் இன்றி ஈடுபடுவதாக அறிவித்துள்ளனர். சில கட்சியினர்; தங்கள் கருத்துக்களையும், இணைத்துள்ளனர் எனினும் - இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் மீது இராணுவத்தினர் நடத்தும் தாக்குதலையும், தமிழகத்திற்கு அகதிகள் வந்து குவிவதையும் - மனித நேய உணர்வுடன் கண்டித்தும், கண்ணீர் உகுத்தும் தங்களின் வேதனையை வெளிப்படுத்துவதில் ஓரணியாகத்தான் நிற்கின்றனர்!

எனவே இது தி.மு.க. நடத்தும் பொது வேலை நிறுத்தம் என்பதைவிட; தமிழகத்திலுள்ள அனைத்துக் கட்சிகளும் நடத்திடும் பொதுவேலை நிறுத்தம் என்பதே பொருத்தமானதாகும்!

திருகோணமலையில் கோனேஸ்வரர் கோயில் எனும் இந்துக்களின் புனித ஆலயத்தினுள்ளேதான் இலங்கை ராணுவத்தின் ஒரு பகுதி முகாமிட்டிருக்கிறது! ஆலயத்திற்குள்

ஆயுதமேந்திகளா? என்று அமிர்தசரஸ் பொற்கோயிலில் பிந்தரன்வாலே கூட்டத்தினர் தங்கியிருந்தபோது இந்திய நாடு முழுவதும் கேள்வி எழுந்தது!

ஆனால் இன்று இலங்கையிலே கோனேஸ்வரர் கோயில் இராணுவ முகாமாக விளங்குகிறது!

அங்கிருந்து புறப்படும் படையினர்; விடுதலைப் புலிகளுடன் போர் என்ற பெயரால் அப்பாவித் தமிழ் மக்களை வேட்டையாடுகின்றனர்! அவர்களோ விழிநீர் வழிந்திட வாழும் வழி தெரியாது; மாண்டோர் போக மீண்டோர் - தமிழகம் நாடி ஓடி வருகின்றனர்! வந்து கொண்டேயிருக்கின்றனர்!

அரசியல் தீர்வு ஒன்றுதான் அங்கு அமைதியை நிலைநாட்ட முடியும் என்பதைக் களத்தில் நிற்கும் இருசாரரும் உணர்ந்து செயல்பட உடனடி முயற்சிகளை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென தி.மு.கழக நிர்வாகக் குழு வலியுறுத்திச் சுட்டிக் காட்டியிருப்பதை எல்லாக்கட்சிகளுமே தங்கள் கருத்தாகக் கொண்டுள்ளன என்பதில் அய்யமில்லை!

அந்தக் கருத்து செயல்படுத்தப்படவும் - தமிழ் ஈழத்து அவலம் மிக விரைவில் நிறுத்தப்படவும் - நமது உணர்வின் வெளிப்பாடாக அமைவதே ஜூலை 20ஆம் நாள் பொது வேலை நிறுத்தம்!

அமைதி வேண்டி நடைபெறும்
பொது வேலை நிறுத்தம்!
எனவே அமைதிக்கு துளியும்
பங்கமின்றி நடைபெற
அனைவரும் துணை நிற்போம்!

உணர்வின் அடிப்படையில் ஒத்துழைப்பு தர முன்வந்துள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும், அமைப்புகளுக்கும், தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் - ஏன்? புதுவை மாநில மக்களுக்கும்கூட - எனது நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்!

அன்புள்ள,

மு. க.

19-07-1990

1656. ஒழித்திட நினைப்போர் உணர்வதற்கு!

உடன்பிறப்பே,

மிக மிக மிகச் சாதாரண - பிற்படுத்தப்பட்ட சமுதாயத்துப் பிறவியான இவன்; நாடாளுவதா? அதை நம்மனோர் பார்த்துக் கொண்டிருப்பதா? ஒழித்துக்கட்ட வேண்டாமோ? மலை எலியெனவும் மராட்டியத்துப் புலியெனவும் மாண்புமிகு மாவீரன் எனவும் போற்றப்பட்ட சத்ரபதி சிவாஜியையே அவன் நாடாளும் வகுப்பில் பிறக்காத காரணத்தால் மண்டியிடச் செய்த மகிமை கொண்ட சரித்திரத்தைக் கையில் வைத்துக் கொண்டுள்ள நாம் அந்த உண்மை வரலாற்றை ஊருக்கு சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் அல்லது சந்திரமோகன் என்ற நாடகத்தில் விளக்கிய அந்த அண்ணாதுரையின் தம்பி என்ற ஆணவம் அல்லவோ இந்தக் கருணாநிதிக்குத் துளிர்விட்டுப் போயிருக்கிறது! என்ற நினைப்பில் இங்குள்ளோர் இட்டுக்கட்டும் பொய்க் கூற்றுகளும் - ஜோடித்து ஆடவிடும் வன்முறைப் பிரச்சாரங்களும் - தமிழகத்தில் சட்டம் ஒழுங்கே ஜீவன் இழந்து விட்டது என்பது போன்ற மாய்மாலக் கூத்துக்களும் - இவனோர் துரும்பு; நாமோ இரும்பு; எட்டப்பர் சிலர் உளர் இவனைத் தாக்கிட; அவர்தாம் நமக்குக் கரும்பு - என்பன போன்ற ஆவலாதி ஆலாபனங்களும்; சுழன்றடிக்கும் சூறாவளியென உருவெடுத்திடினும்; அண்ணன் தந்த அகல் விளக்கைக் கையிலேந்தி, அய்யா தந்த துணிவுடன் அந்தகார இருள் விலக்கி, உன்போன்ற உடன்பிறப்புகளின் ஒத்துழைப்புடனும் - என்பால் அன்பும், அனுதாபமும், பந்தமும், பரிவும் கொண்ட என் அன்புத் தமிழ் மக்களின் அரவணைப்புடனும் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலான போராட்டம் நிறைந்த பொது வாழ்க்கையை நடத்திவிட்டு - மேலும் தொடர்ந்து கொண்டிருக்கிறேன்!

இவனெல்லாம் இருப்பதே பாவம் என எண்ணுவோர்; இவனெல்லாம் ஆட்சியில் இருப்பதை மட்டும் ஏற்பரோ? அவ்வளவு பைத்தியமா அவர்களுக்கு!

* தொய்வுற்ற தொழில் வளம் சிறப்புறச் செயல்பாடுகள்!
* குனிந்து கிடந்த நிர்வாகம் நிமிர்ந்து நிற்கிறது!
* மகளிர் நல்வாழ்வுக்கு அடுக்கடுக்கான திட்டங்கள், சட்டங்கள்!
* எங்கிருந்து முறையீடு கிளம்பினாலும் உடனடியாக அதனை கவனிக்கும் அக்கறையுடன் அரசுப் பணிகள்!
* கண்ணியமான பரிபாலனம் நடைபெற கண்டிப்பான ஆணைகள்! கடுமையான நடவடிக்கைகள்!
* மாணவர்க்குப் பல்வேறு சலுகைகள்!
* அரசு அலுவலர், ஆசிரியர், தொழிலாளர் கோரிக்கை நிறைவேற்றம்!
* ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும் எண்ணற்ற பணிகள்!
* கிராமங்களைச் செழிப்புறச் செய்யும் வளர்ச்சித் திட்டங்கள்!
* விவசாயிகள் நலனில் தனி அக்கறை!
* ஆதி திராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் சிறுபான்மை மக்கள் நலனில் நாட்டம்!
* மதப்போர் - சாதிப்போர் தூண்டி விடுவோர் மீது உரிய நடவடிக்கை!
* அமைதியில் ஆர்வம்!
* அடக்கமான போக்கு!
* இந்திய ஒருமைப்பாட்டிற்கான உரிய நடவடிக்கை!

* மாநில உரிமைகளை என்றுமே விட்டுக் கொடுக்காத உரிமைக்குரல்!

நல்லரசுக்குரிய இலக்கணத்திலிருந்து இம்மியும் சிதறாத இந்த அரசினை மூக்கால்கொத்தி முறித்துத் தள்ளிவிடலாமென சில மரங்கொத்திப் பறவைகள் சிறகடிக்கும் காட்சியை வர்ணிக்கவும், வாய்பிளந்து வரவேற்கவும், அண்ணா மொழியில் சொல்ல வேண்டுமானால் சில நடுங்கா நாக்கழகர்கள் நரகல் நடையழகர்கள் - சந்து முனை சிந்து பாடிகள் வரிந்து கட்டிக் கொண்டு கிளம்பியுள்ளனர்.

அவர்கள் ஊதியணைக்க முயன்றிடும்; என் கை அகல் விளக்கு - அண்ணாவின் லட்சியம் என்ற உச்சி முகட்டில் வைக்கப்பட வேண்டிய தமிழனின் தன்மான ஜோதியன்றோ!

எனவேதான் குருதிநிறக் கண்ணுடன் புழுதி வாரித் தூற்றுவோர் - எதிர்ப்போர், இகழ்வோர், ஏகடியம் செய்வோர், ஏளனம் பேசித் திரிவோர் எத்துணை ஆற்றலுடன் தாக்கிடச் சூழ்ந்துவரினும்; என் நெஞ்சம் அவர்களை எண்ணிக் கலங்காமல் - ஈழத்திலிருந்து வந்துள்ள நம் தமிழ் அகதிகளை நோக்கி நடந்தது! அங்குதான் கலங்கியது!

அமைச்சர்கள் பலர் தமிழகத்தில் ஆங்காங்கு வந்து சேர்ந்துள்ள ஈழத்துத் தமிழ்க் குலத்தைக் கண்டு ஆறுதல் கூறினர் - அதிகாரிகளுடன் கலந்து பேசி, அவர் தம் தேவைக்கேற்ப ஆவன செய்துள்ளனர் எனினும் - அந்த சொந்தச் சோதரர்களைக் காண நானும் சென்றேன்!

கண்டேன் கண்ணீர்த் துளிகளை! கையிலேந்திய மழலைகளுடன் என் சகோதரிகள்! வீடு, வாசல், நிலபுலன்களை விட்டு குடும்பம் குடும்பமாக முதியோர், இளையோர், மகளிர், மற்றும் பிஞ்சுகள், பூக்கள், அரும்புகள்!

ஆண்டாண்டுகாலமாக வாழ்ந்த மண்ணில் வாழ முடியாமல் வெட்டுண்டனர் பலர்! வெடிகுண்டுக்கு இரையாயினர் பலர்! வேட்டையாடப்பட்டனர் மகளிர்! இந்த அவலக் குரலே; நான் சென்ற அகதி முகாம்கள் மூன்றிலும் கேட்ட குரல்!

அந்த சோகத்திலும் - அந்தகார இருளைக் கிழித்துக் கொண்டு தெறிக்கும் மின்னல் ஒளிக்கீற்று போல; என்னைக் கண்டவுடன்

புன்னகை! ஓ! அந்தப் பாசம்! தானாடாவிடினும் தன் தசையாடும் எனப்படும் பந்தபாசம்! ரத்தபாசம்!

திருப்பி அனுப்பிவிடு இவர்களை! என்று இலங்கை அமைச்சர் ரஞ்சன் என்பார்; அங்குள்ள பாராளுமன்றத்தில் அழைப்பு விடுத்திருக்கிறார்! ஆம்; வெடிகுண்டு வீச்சுக்குத் தப்பிவந்து விட்டார்களே என்ற கவலையில் அவர் எழுப்பிய கனத்த குரல் அது!

என்செய்வது; எல்லாக் கொடுமைகளுக்கும் ஒரு முடிவு உண்டு என்பதை உலகின் பல்வேறு நாடுகளின் வரலாறுகள் உரத்த தொனியில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன!

அது கேளாக் காதினரின் செவிப்பறை கிழிக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை என்ற நம்பிக்கையோடு கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறேன்.

அகதி முகாம்களைப் பார்வையிட்டபோது; அங்குள்ள தமிழ் அன்னையரை, உடன்பிறப்புகளை, பெரியோரை, பிள்ளைகளைக் கண்டபோது எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் முரசொலியின் வார இதழில் எழுதியதுதான் நினைவுக்கு வந்தது.

தமிழினமே! கிரேக்க ரோமானிய நாடுகள், உன் நாட்டுப் பொருளுக்காக வாய்பிளந்து கிடந்தனவே! நீ இப்போது ஒரு பிடி சோற்றுக்கும் ஒரு முழத்துணிக்கும் வாய்பிளந்து கிடக்கிறாயே! அன்று எழுதியதை இன்றும் அசைபோட்டுப் பார்க்கிறேன்!

இந்த உணர்வு எனக்கும் உனக்கும் இருப்பதால்தான் உடன்பிறப்பே; நம்மை நமது இயக்கத்தை நமது ஆட்சியை விழுங்கிட,

வட்டமிடும் கழுகுகள்

வஞ்சக ஓநாய்கள்

வளைத்திடும் மலைப்பாம்புகள்

வாய் பிளந்து நிற்கின்றன! அவற்றுக்குச் சிவப்புக் கம்பளம் விரிக்கின்றன சிறுநரிகள்!

கவலையில்லை!

வீழ்வது நாமாக இருப்பினும்

வாழ்வது தமிழாக இருக்கட்டும்

*

நான் வாழ்ந்தாலும் வீழ்ந்தாலும்

அது உங்களுக்காகத்தான்!

*

இந்த உறுதிமிக்க வரிகள், நம் உள்ளத்தில் நீர் மீது எழுத்துக்களாக அல்ல; கல்மேல் செதுக்கிய வாசகமாக ஒளிவிடுபவை என்பதை நம்மை ஒழிக்க நினைப்போர் உணர்ந்து கொள்வது நல்லது!

அன்புள்ள,

மு. க.

23-07-1990

1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜெ.ஜெ டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

வெளியீடு 2022